உ
சிவமயம்

கம்பனும் சிவனும்

★

''தமிழ்க்கடல்''
''சிவமணி''
''சிவம் பெருக்கும் சீலர்''
ராய. சொ.
இயக்குநர், தமிழ் ஆராய்ச்சித்துறை
அழகப்பா கல்லூரி
காரைக்குடி.

அழகப்பா கல்லூரி வெளியீடு
1966

உ
சிவமயம்

கம்பனும் சிவனும்

★

''தமிழ்க்கடல்''
''சிவமணி''
''சிவம் பெருக்கும் சீலர்''
ராய. சொ.
இயக்குநர், தமிழ் ஆராய்ச்சித்துறை
அழகப்பா கல்லூரி
காரைக்குடி.

அழகப்பா கல்லூரி வெளியீடு
1966

விலை ரூபாய் ஐந்து.

திருமகள் அச்சகம், காரைக்குடி.

உ

சிவமயம்


வள்ளல் அழகப்பனுர்க்கு உரிமை

பாரிஎனும் உயர்ந்தகொடைப் பழந்தமிழ்வேள்,
அந்நாளில், படைத்த எல்லாம்
வாரிஅளித்து, இசைபெற்ற வரலாற்றைப்
பாவல்லோர் வழுத்தக் கேட்டோம்;
மாரிஎனும் அவன்கொடையை நாம்கண்ணுல்
கண்டதுண்டோ? வள்ளல் போற்றும்
கூர்அறிஞன் அழகப்பன் கொடுத்தபொருள்
கோடியைக்கண் குளிரக் கண்டோம்.

பம்புபுகழ் இராமபிரான் காதைதனில்,
பாவேந்தர் கோமான் எங்கள்
கம்பர்பிரான், சிவபெருமான் சீர்பாடும்
கவிமுழுதும் கணக்கிட்டு ஆய்ந்து,
கம்பன்வளர் காரைநகர் கவின்ஏறக்
கலைக்கோயில் கண்ட வள்ளல்
எம்பெருமை அழகப்பற்கு இராய. சொ.
இந்நூலை உரிமை செய்தேன்.



வள்ளல் அழகப்பர்



திரு. க. வெ. சித. வெ. வேங்கடாசலஞ் செட்டியார்

அறநிலையச் செயலர்



தமிழ்க்கடல் சிவமணி

ராய. சொ.

பொருள் அடக்கம்

தொடர் எண்	பொருள்	பக்கம்
1	நன்றியுரை	௫
2	பதிப்புரை	௬
3	முகவுரை	௧௫
4	கம்பனும் சிவனும்	3
5	நூல்	13
6	சிவனைக்குறித்த சொல்தொடர் அகராதி	353
7	சிவ சம்பந்தமான சொல்தொடர் அகராதி	361
8	பாட்டு முதற்குறிப்பு அகராதி	362

உள்ளுறை

தொடர் எண்	மொழி	பாடல் தொகை	பக்கம்
1	கவி	168	13
2	வீடணன்	35	137
3	இராவணன்	31	163
4	இராமன்	19	189
5	விசுவாமித்திரன்	17	209
6	அனுமன்	15	225
7	இந்திரசித்தன்	13	239
8	சூர்ப்பணகை	12	251
9	வசிட்டன்	7	265
10	சீதை	6	273
11	சதானந்தர்	5	283
12	பரசுராமன்	5	286
13	சுக்கிரீவன்	5	289
14	தயரதன்	4	296
15	இலக்குவன்	4	298
16	சடாயு	4	301
17	சாம்பன்	3	309
18	மகோதரன்	3	311
19	அதிகாயன்	3	313
20	அரக்கர்	3	314
21	மண்டோதரி	3	319

உள்ளுறை (தொடர்ச்சி)

தொடர் எண்	மொழி			பாடல் தொகை	பக்கம்
22	மாரீசன்	....	....	2	327
23	வாலி	....	....	2	328
24	இலங்கை மாதேவி	...	...	2	330
25	அக்ககுமரன்	...	...	2	331
26	சாரன்	....	...	2	332
27	கும்பகன்னன்	...	...	2	334
28	மாலியவான்	...	...	2	335
29	வானரப் படைத் தலைவர்		...	2	336
30	மாதலி	....	...	2	337
31	நீலமாலை	...	...	1	343
32	பரதன்	...	...	1	343
33	கவந்தன்	...	...	1	344
34	சவரி	...	...	1	345
35	அங்கதன்	...	...	1	345
36	தாரை	...	...	1	346
37	சம்பாதி	...	...	1	347
38	துன்முகன்	...	...	1	347
39	சேனைத்தலைவன்	...	...	1	348
40	புகைநிறக் கண்ணன்	...	...	1	349
41	அகம்பன்	...	...	1	349
42	பிரமன்	...	...	1	350
			ஆக	395	

சிவமயம்

நன்றி உரை

வள்ளல் அழகப்பனுர் தாம் கண்ட அழகப்பா கல்லூரியில் தமிழ் ஆராய்ச்சித்துறைப் பகுதி ஒன்றை நிறுவி நல்ல தமிழ் நூல்களைத் தமிழ் நாட்டிற்கு அளிக்க விரும்பினுர். அப் பணியில் ஈடுபடுமாறு என்னை அழைத்தார். அப்பொழுது நான் அமராவதிபுதூரில் வாழ்ந்துவந்த காலம். எனினும் அதனை மேற்கொள்ள இசைந்தேன். அன்று திருவருள் கூட்டவில்லை. எதற்கும் ஒரு நேரம் உண்டல்லவா?

அழகப்பனுர் கோடி கொடுத்துத் தோற்றுவித்த கல்வி அற நிலையங்களைப் பெருஞ்சிறப்புடன் நடாத்திவரும், என் அரிய நண்பர் க. வெ. சித. வெ. வேங்கடாசலனுர், வள்ளல் எண்ணிய அதனைச் செயலுக்குக் கொணர விரும்பினுர். அவ்விருப்பத்தை வெளியிடும் முன்னரேயே என்னைக் கல்லூரி வட்டத்தில் கொண்டுவந்து வைத்துக் கொண்டார். இங்கிருப்பதால் இத்தொண்டில் ஈடுபடல் எனக்கு எளிதாயிற்று. திருவருள் கூட்டியது. ஆராய்ச்சிப் பகுதி தொடங்கப்பெற்றது. அதன் பயன் இன்று மலர்கின்றது. இதற்கு மூல காரணராக இருந்த வள்ளலுக்கு நன்றி. அவர் தொட்ட அறத்தைத் திறம்பட நடத்தும் செயலருக்கு நன்றி. அழகப்பர் அற நிலையச் செயற்குழுவினருக்கு நன்றி.

கல்லூரியின் சார்பில் முதன் முதல் வெளிவரும் நூல் இந்தக் "கம்பனும் சிவனும்." கம்பன் சிவனைப்பற்றி எங்கெங்கு எப்படியெல்லாம் தான் செய்த பேரிலக்கியத்தில் பேசியிருக்கின்றுன் என்பதை ஆய்வதே இந்நூல். விளக்கத்தைக் "கம்பனும் சிவனும்" என்ற இந்நூலின் முதற்கட்டுரையில் காணலாம்.

இந்த நல்ல பணியை இயற்கை வளம் கொழிக்கும் தேவாரத் தலமாகிய திருக்குற்றுலத் திருப்பதியில் அன்பர் வேங்கடாசலனுரும், நானும், நண்பர்கள்பலரும் சாரல் நுகர்ந்து

கொண்டிருந்த ஞான்று, 15—7—1964இல் தொடங்கினேம். இரண்டு ஆண்டுகளில் முற்றுப் பெற்று இன்று இந்நூல் வெளிவருகின்றது.

இதைத் தொடர்ந்து "வில்லியும் சிவனும்" என்னும் ஓர் ஆய்வு நூல் வெளிவர இருக்கின்றது. ஆய்வு முடிந்து நூல் உருப் பெற்று விட்டது. அச்சில் இருக்கின்றது. இன்னும் சில திங்களில் வெளிவரும்.

சிவனைக் கம்பன் பாராட்டுகின்ற பாடல்கள் அன்று முதல் ஆயிரம் ஆண்டுகளாக இராம காதை நூலில் இருந்தாலும், இன்றும் அது ஏதோ ஒரு புதுமை போல் தோன்றுகிறது. இத்தொண்டில் என்னை ஈடுபடுத்திய நல்வினைக்கு நன்றி.

இந்நூல் சென்ற ஆண்டிலேயே வெளிவந்திருக்கும்; அன்பர் வேங்கடாசலனாருடன் தொடர்ந்து 1965 ஆண்டு முழு தும் நான் மேற்கொண்ட திருத்தலப்பயணம் காரணமாகத் தாமதித்து விட்டது. 28—1—1965இல் பயணம் தொடங்கி 19—3—1966இல் முடித்திருக்கிறேம். ஓர் ஆண்டு, ஒரு திங்கள், இருபத்திரண்டு நாட்களில் 456 தெய்வத்தலங்களுக்குச் சென்று வந்திருக்கிறேம். "திருத்தலப் பயணம்" என்னும் நூல் ஒன்று, அக்டோபரில் நடைபெற இருக்கும் வேங்கடாசலனாரின் மணி விழாவில் வெளிவர இருக்கின்றது என்பதைக் களிப்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு என் அரிய நண்பர் மதுரை தியாகராயர் கலைக் கல்லூரி முதல்வர், டாக்டர் அ. சிதம்பரநாதனார் முன்னுரை தந்து உதவியுள்ளார். உண்மையாகவே, முகவுரை எழுத வேண்டிய முறைப்படி, நூலை முழுதும் ஆய்ந்து, இடங்கள் தோறும் உள்ள சிறப்புக்களை எடுத்துக் காட்டி, எழுதியுள்ளார். என்னைப்பற்றி அவர் கூறும் சிறப்புரைகள் என்மீது கொண்ட அன்பினால். நூலைப் போற்றி நூன்முகம் அளித்த அன்பர் சிதம்பரநாதனாருக்கு நன்றி.

இந்நூல் தோற்றத்திற்கு எனக்குத் துணை நின்ற அன்பர் பலர். அழகப்பா கல்லூரியின் முதல்வர், நல்ல தமிழ் அறிவு உடையவர், என்பால் பேரன்பு கொண்டவர், டாக்டர்

வ. சுப. மாணிக்கனுர் இந்நூல் வெளியீட்டிற்குப் பெரும் துணை புரிந்தார். அழகப்பா கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், என் இனிய நண்பர் சாரங்கபாணியும், தமிழ்த்துறையில் அவருடன் பணி செய்யும் ஆசிரியர் பலரும் இத்தொண்டில் ஈடுபட்டனர். கல்லூரியின் சார்பில் உடன் இருந்து பணி செய்தார் புலவர் மு. இராமசாமி. இவ்வனைவருக்கும் என் நன்றி.

சிறப்பாக இந்நூல் தோன்றியதற்கு நான் நன்றி செலுத்த வேண்டிய ஒருவர் உண்டு. அவர்தான், என் ஆருயிர் நண்பர்; என் தமிழ்த் தொண்டு, தெய்வத்தொண்டு எல்லாவற்றிலும் மோகம் கொண்டு பங்கு பெறுபவர்; என்னுடன் இணைபிரியாது இருப்பவர்; அழகப்பா பொறி இயல் கல்லூரியில் பொறுப்பான பணி ஏற்றிருக்கும் பதுமநாபன். கல்லூரி வேலை நேரம் தவிர ஏனைய நேரங்களில் இராப் பகலாக என்னுடன் அவர் சேர்ந்து ஒத்துழைத்ததன் பயனே இந்நூல் என்று கூறுதல் மிகையாகாது. எனவே அவருக்கு நன்றி செலுத்துதல் வேண்டுமல்லவா?

இந்த நூலை மிகச் சிறப்பாக, அழகு தவழ அச்சிட்டுத் தந்த காரைக்குடித் திருமகள் அச்சகத்தினரான, என்னிடம் பெருமதிப்புக் கொண்ட அபிசீனியா நாச்சியப்பனுருக்கும், அவர் மைந்தன் பழநியப்பனுக்கும் நன்றி.

சிவனைப் பற்றி இத்தகைய ஒரு ஆய்வு நூல் கொணர இடமளித்த கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கும், இப்பணியை என்னைச் செய்யத்தூண்டி, கம்பன் பெயரோடு தன் பெயரையும் சேர்த்துக் கொள்ளச் செய்த,

"முழுமுதல் கண்ணுதல் முருகன்தாதை" ஆகிய சிவனுக்கும் நன்றி.

அழகப்பாபுரம்
30-8-1966

ராய. சொ.

பதிப்புரை

டாக்டர் வ. சுப. மாணிக்கம், முதல்வர்,
அழகப்பா கல்லூரி.

அழகப்பா கல்லூரித் தமிழ் ஆராய்ச்சித்துறையின் இயக்குநர் 'தமிழ்க்கடல்'ராய. சொ. எழுதிய 'கம்பனும் சிவனும்' என்னும் அரிய நூலை அழகப்பா கல்லூரியின் பதிப்பாகத் தமிழ் மக்கட்கு வழங்குவதில் பேருவகை எய்துகின்றேன்.

வள்ளல் அழகப்பர் கொடையெண்ணம் போலத் தமிழெண்ணம் கொண்டவர். ஆற்றொழுக்காக ஆங்கிலத்தில் பேசுமாறு போலத் தமிழிலும் பேச விழைந்தவர். ஆங்கில இலக்கியத்தில் பெருந்துறை போய அவர்க்குத் தமிழ் இலக்கியத்தின் சிறப்புக்களையும் அறியும் அவா இருந்தது. தம் கொடைநீரைத் தமிழ்ப் பயிருக்கும் இறைத்தார். தமிழ்க் கலைக் களஞ்சிய வெளியீட்டிற்குப் பதினுயிர ரூபாய் வழங்கிய கொடையும், திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சித் தமிழ் நிலையம் தோன்றுதற்கு ஓர் இலட்ச ரூபாய் அளித்த கொடையும் நாம் அறிந்தனவே. ஆதலின் தாம் படைத்த அழகப்பா கல்லூரியிலும் தமிழுக்கு ஒரு நிலையம் வேண்டும் என்று அவர் தமிழ் நெஞ்சம் எண்ணியது இயல்பேயாகும்.

தமிழ்க்கடல் ராய. சொ. சங்கச் சான்றோர் அனைய பெருமிதம் உடையவர். சங்கப் புலவர்கள் போல வள்ளல்களைப் பாராட்டும் பெற்றியும், செல்வர்களை வள்ளற்படுத்தும் நோக்கமும் உடையவர். தமிழன்னையின் அருளால் ராய. சொ.வும் அழகப்பரும் நீடிய நண்பர் ஆயினர். தமிழ்க்கடலார் தமிழின் ஆழ அகலங்களை வள்ளலுக்கு எடுத்துக் காட்டினர். கொடை புலமையை வியந்தது; புலமை கொடையை வியந்தது. இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினர் என்ற அளவிற்கு நட்பு வளரலாயிற்று. ராய. சொ.வைத் தம் தமிழ்க் குருவாகக் கொண்டார் வள்ளல். இங்கு ஒரு தமிழ் ஆராய்ச்சி நிலையம் காணவும் அதற்கு ராய. சொ.வைத் தலைவராகக் காணவும் எண்ணினர். இவ்வெண்ணத்தை 1957இல் வெளியிடவும்

செய்தார். அவ்வாண்டில் வள்ளல் இறைவனடி சேர்ந்தமையின் எண்ணம் செயலுரு எய்தவில்லை. எனினும் நல்லெண்ணங் களுக்குக் காலக் கோள் இல்லையன்றோ?

அறநிலையச் செயலர் திரு. க. வெ. சித. வெ. வேங்கடாசலஞ் செட்டியார் அவர்கள் அழகப்பரின் இனிய பெரிய நண்பர் ஆவர். வள்ளலின் வாழ்க்கை முழுதும் அகலாது அணுகிப் பழகியவர். வள்ளல் தன் இறுதிக் காலத்து, "நண்ப! என் அறங்கள் நின் அடைக்கலம்" என்று சொல்லிய வாய்மொழியை எண்ணி, அவர் செய்த அறங்களை யும் செய்ய எண்ணியிருந்த அறங்களையும் காத்துப் போற்றி வளர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டு ஒழுகுபவர் வேங்கடாசலனார். மேலும் வேங்கடாசலனார் புலவர்களைப் பொன் வழங்கிப் போற்றிய அண்ணாமலை யரசரின் மருகர் அல்லவா? வள்ளலின் தமிழ் நிலைய எண்ணத்தை உருவாக்கும் காலம் **1964**இல் வந்தது. அழகப்பர் கொடையெல்லைக்குள் தமிழ்க்கடலை வரவழைத்த பெருமை வேங்கடமலையார்க்கு உரியது. இந்நிலைய அமைப்பை அழகப்பர் கல்வி நிலையக் குழுவினர் வரவேற்றனர். அசோக அறநிலையக் குழுவினர் நிதி யுதவ முன் வந்தனர். இது இங்குத் தமிழ் ஆராய்ச்சி நிலையம் பிறந்த வரலாறு. இந்நூல் கல்லூரியின் முதற்பதிப்பாதலின் சிறிது விரிவாகவே நிலையம் பிறந்த வரலாற்றை எழுதி யுள்ளேன்.

தமிழ்க்கடல் தந்த முதல் முத்து "கம்பனும் சிவனும்" என்பது. இராமாயணக் காப்பியத்துச் சிவனைப் பற்றிய பாடல்கள் பல உண்டு என்னும் அளவிற்கே பலர் அறிவர். எவ்வளவு பாடல்கள், அவை யார் யார் வாய்ப் பாடல்கள், சிவனைக் குறித்த சொல்லாட்சிகள் எத்தகையன, அவற்றின் அருமைப்பாடுகள் எவ்வண்ணத்தன என்ற கூறுகளை ஒருங்கு அறிந்தாரும் அறிவிக்க முயன்றாரும் இதுகாறும் இலர். ராய. சொ. அவர்கள் தமிழ்க்கடலும் சிவமணியும் ஆதலின் கம்பன் காப்பியக் கடலிடைச் சிவமணி களைக் கண்டு எடுத்துக் காட்ட முன்வந்தார். இத்துறையில் இப் பதிப்பு தமிழாராய்வார்க்கு ஒரு புதிய பாதை என்று கூற

விழைகின்றேன். ஒரு பெருமரத்து ஆங்காங்கு இலை மறையக் கிடந்த பழங்களை ஒருவர் பறித்துத் தொகுத்துக் குவித்துக் காட்டுங்கால் உண்டாகும் மகிழ்ச்சியை இப் பதிப்பில் பெறுகின்றோம். தேவாரமணியோ திருவாசகத் தேனோ என்று கருதும் அளவிற்கு இராமாயணப் பாடல்களில் சிவச்சுவை ஊறி நிற்கின்றது. சிவனின் முழுமுதல் தன்மையைப் புலப் படுத்துவதில் கம்பர் நால்வருக்குப் பின்னிட்டவர் இல்லை என்பதனைச் சிவனைக் குறித்த சொற்றொடர் அகராதி சான்று பகரும். "'பித்தா பிறைசூடி' என்றார் சுந்தர மூர்த்திகள். 'பிட்டு நேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பெரும் பித்தனே' என்றார் மணிவாசகப் பெருமான். எனினும் சிவன் வெறும் பித்தன் அல்லன்; 'அறிவு முற்றிய பித்தன்' என்று சிறப்பித்துச் சொல்கின்றார் கவிச் சக்கரவர்த்தி" என்று ராய. சொ. அவர்கள் கம்பரின் ஏற்ற நடையை ஒப்புமை காட்டி நிறுவுவர். விழிதரு நெற்றியான், வெண்மதிப் பாதியான், நீறணிந்த கடவுள், அணங்கார் பாகன், ஆலம் பார்த்து உண்டவன், இமையா முக்கண் இறைவன் என வரும் சிவத் தொடர்கள் எவ்வளவு சுருக்கமும் தெளிவும் சுவையும் உடையன. இவ்வளவு சைவ நூல்களினும் காண ஒல்லுமோ? காப்பியம் பாடவல்ல கம்பனார் சிவனைப் பாடும் போது ஏனையோர் முன்னிற்க முடியுமா?

தொகுத்தல் வகுத்தல் விரித்தல் என நூல்முறையைப் பாகுபடுத்துவர் தொல்காப்பியர். அம்முறை தழுவியது இப் பதிப்பு. இராம காதையில் சிவனைக் குறித்த எல்லாப் பாடல்களையும் தொகையாக இந்நூலில் காணலாம். அப் பாடல்களைப் பாத்திரங்களின் மொழியாக வகைப்படுத்தி யதையும் காணலாம். அதன் மேலும் பொழிப்பு, விளக்கம் என்ற முறையில் விரிவையும் காணலாம். பொழிப்பு எழுதி யதன் நோக்கம் யாவரும் பொருள் விளங்கிப் படிக்கத் துணை செய்ய வேண்டும் என்பது. விளக்கம் எழுதியதன் நோக்கம் அறிஞர்க்கு விருந்தாக வேண்டும் என்பது.

ராய. சொ.வின் தனிப் பேறு நினைவாற்றல், கற்றது மறவாமை. மறப்பெனும் பகைவன் இப் புலவரைப் பற்ற மறந்தனன். ஆதலின் தக்க மேற்கோள்கள் இவர்கள் தம்

உரையில் எளிதாக வந்து விழுகின்றன. 'பேரன் நாடு உற்றுயோ' (பாடல் 203) என்ற இடத்து, பேரன் என்பதற்குப் பாட்டன் என்பது பொருள். இப் பொருள் இச் சொல்லுக்கு உண்டு என்பதற்கு மேற்கோள் வேண்டும் அல்லவா? "உங்கள் பேரனுர்தம் தேசுடை எழுத்தே யாகில்" எனப் பெரிய புராணத்து வந்திருப்பதைச் சான்று காட்டுவர் ஆசிரியர். இலக்கிய மூலையில் ஒதுங்கிக் கிடக்கும் அரிய ஆட்சிகளையும் காணவல்ல அறிவு வன்மையும், காட்ட வல்ல நினைவு வன்மையும் உடையவர் தமிழ்க்கடலார் என்பதற்கு வேறு மேற்கோள் வேண்டியதில்லை. "நாண் இனிது ஏற்றினுன்" (பாடல் 384) என்ற இடத்து, ஏற்றினுன் - ஏற்ற முயன்முன் எனப் பொருள் கொள்ள வேண்டும் என்று சமர்த்தாக உரை எழுதியுள்ளார். ஏன்? "எடுத்தது கண்டனர் இற்றது கேட்டனர்" என்ற கம்பரின் கருத்துக்கு முரணுகக் கூடாது என்று. முன்னும் பின்னும் நூலாசிரியன் பாடல்களை நினைவில் வைத்துப் பொருள் எழுத வேண்டும் என்று இவ் வுரையால் அறிகின்ருேம். நினைவாற்றல் உடையார் தாமே அங்ஙனம் எழுத இயலும்?

ராய. சொ. அவர்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றவர். நாடு மறவா நல்லன்பர். இவ் வுணர்ச்சி அவரையும் அறியாமலே உரையிடைப் புலனுகின்றது. 350 ஆவது பாடலின் உரையைப் படித்துப் பாருங்கள். இந்திய மண்ணில் இலக்குவன் கட்டிய குடிசையிலேயே இலங்கையில் சீதை இருப்பதாகக் கவிச்சக்கரவர்த்தி கூறுவது சாலச் சிறப்புடைத்து என்று எழுதியுள்ளார். நாட்டுணர்ச்சியோடு எழுதிய இந் நடை சாலச் சிறப்புடைத்து என்று நாம் வரவேற்கின்ருேம்.

டாக்டர். அ. சிதம்பரநாதனுர் தம் மதிப்புரையில் இந் நூலின் பல நலங்களை எடுத்துக்காட்டியுள்ளனர். என் உரை பதிப்புரையே யாதலின் சிறப்புகளைச் சில குறிப்புக்கள் காட்டிய அளவில் முடித்துக் கொள்கின்றேன். தமிழ்க்கடல் ராய. சொ. அவர்கள் ஆராய்ச்சி நிலையத்தின் சிறப்பு இயக்குநராக இருந்து மேலும் பல நூல்களை வெளியிடுவதற்குப் பல்லாண்டு வாழ்க என்று வழுத்துகின்றேன்.

வ. சுப. மாணிக்கம்

முகவுரை

டாக்டர் அ. சிதம்பரநாதன், எம். ஏ., பி. எச்டி., எம். எல். சி.,
முதல்வர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

"கம்பனும் சிவனும்" என்னும் தலைப்பில் வெளிவரும் சிறந்த ஆராய்ச்சி நூலினைப் படித்து மிகவும் மகிழ்ச்சி எய்தினேன். இந்நூலாசிரியர் தமிழ்க்கடல் ராய. சொக்கலிங்கம் அவர்கள் தம்முடைய நுண்மாண் நுழைபுலத்தால் பெரியதோர் ஆராய்ச்சி செய்து தமிழகத்திற்கு இந்நூல் வடிவில் அளித்துள்ளார்கள். அழகப்பர் கல்லூரித் தமிழ் ஆராய்ச்சித் துறைக்குத் தம்முடைய புத்தகங்கள் எல்லாவற்றையும் வண்மையான் வழங்கிவிட்ட அவர்கள், அத்துறையின் இயக்குநராகவிருந்து பணியாற்றி வருவது அழகப்பர் கல்லூரிக்கு அவர் தந்துள்ள சிறப்பு. பலவகைகளில் எடுத்துக்காட்டாக விளங்கும் இவ்வாராய்ச்சிப் பனுவலைச் சிறப்பாக ஆராய்ச்சி மாணவர்களும், பொதுவாக ஏனையோரும் பயன்படுத்தி மகிழ்வர் எனக்கருதுகிறேன்.

'கம்பனும் சிவனும்" என்னும் தலைப்பில் அமைந்துள்ள நூல் நுவலுவது இது என்பதன் சுருக்கமான விளக்கம் முதல் 10 பக்கங்களில் தரப்பட்டுள்ளது. கம்பன் சிவனைப்பற்றிக் கூறியுள்ள இடங்கள் 395 என்று கூறி, கவிஞர் மொழியாகவே வந்துள்ள இடங்கள் இன்ன என முதலில் எடுத்துக்காட்டியுள்ளார். அவ்விடங்கள் 168. பால காண்டம் நகரப்படலத்தில் மூவரைப்பற்றிச் சொல்லும் ஓரிடத்தில் முதன்மை சிவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். முப்பெருங் கடவுளரும் வியக்கும் பெருமையுடையது அயோத்திமா நகரம் என்று சொல்லுமிடத்தில்,

"உமைக்குஒரு பாகத்து ஒருவனும், இருவர்க்கு
ஒருதனிக் கொழுநனும், மலர்மேல்
கமைப்பெரும் செல்வக் கடவுளும் உவமை
கண்டிலர்; ... "

என்று கம்பன் கூறியுள்ளான் என்பதை எடுத்துக்காட்டியுள்ளார். சிவன் செஞ்சடைக் கடவுள் என்றும், ஈசன் என்றும் போற்றப்பட்டிருக்கும் இடங்கள் பலவற்றை ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். ஈறிலான் கயிலேயே இயைந்த குன்றுகள் எல்லாம் என்று கூறப்பட்டுள்ள இடத்தில் சிவன் "ஈறிலான்" என இயம்பப்பட்டதை எடுத்துக்காட்டி, "ஈறிலாதவன் ஈசன் ஒருவனே" என்ற தேவாரப் பகுதியோடு ஒப்புமை சுட்டிக் காட்டிச் சொல்வது இவரது நூல்நுட்பத்தைக் காட்டுகிறது.

சிவனுடைய வில் "வெள்ளம் அணைத்தவன் வில்" எனக் கம்பராமாயணத்திற் பேசப்பட்டுள்ளது. வெள்ளம் அணைத்தவன் வில் என்பதன் விளக்கமாக இந்நூலாசிரியர் கங்கைப் பேராற்றைத் தன் சடையில் அடக்கிக்கொண்ட பிறவா யாக்கைப் பெரியோனின் வில் என எழுதியிருப்பதில் நூலாசிரியர் தமக்குச் சிவனிடத்திலுள்ள பற்றுப் புலனுகின்றது. சிவன் என்று சொல்ல வேண்டியவிடத்தில் நூலாசிரியர் தம் வாக்கினுல் "பிறவா யாக்கைப் பெரியோன்" எனக் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் கம்பராமாயணத்திலிருந்து 395 பாடல்கள் சிவனைப் பற்றிக் கூறுவனவாக எடுத்து இப்புத்தகத்துள் அமைத்திருக்கிருர் என்ருலும், கம்பராமாயணத்தைப் படிப்பதால் ஏற்படும் மகிழ்ச்சியிற் பெரிய அளவு இவருடைய பொழிப்புரையாலும், விளக்கவுரையாலும் ஒருவர் அடைதல் கூடும். "வள்ளல் மணத்தை மகிழ்ந்தனன் என்ருல்" என வரும் பாட்டில் "வள்ளல்" என்னும் சொல் இராமனையே குறிக்கும் என்றும், சனகன் என்று கூறுவது அத்துணைச் சிறப்புடையதன்று என்றும் இவர் எழுதியிருப்பது போன்ற இடங்கள் பலவுண்டு. ஒக்க - ஒருசேர ; போதுதி — வருவாயாக, என யாவர்க்கும் விளங்கும்படி ஆங்காங்கு இவர் எழுதியுள்ள சிறுசிறு விளக்கங்களும் கம்பனை அறிந்துகொள்ளுவதற்குப் பயன்படுபவையாம்.

"பரசுடைக் கடவுள், நேமிப்
பண்ணவன் பதுமத்து அண்ணல்
அரசுடைத் தேவி மாரை
இன்றியே அமைவது உண்டோ?"

என்ற கம்பராமாயணப் பகுதிகொண்டு, சிவன் பரசுடைக் கடவுள் எனப் போற்றப்பட்டிருப்பதை எடுத்துக்காட்ட வரும் நூலாசிரியர் "அரசுடைத் தேவிமார்" என்பதற்குத் தனி விளக்கம் தந்துள்ளார். கணவன்மாரை ஆட்சி செய்யும் மனைவிகள் ஆதலின் "அரசுடைத் தேவிமார்" என்ருர் என இவர் எழுதியுள்ளது காணத்தக்கது. இதன் சான்ருக நூலாசிரியர் மகாகவி பாரதியாரின் பாடலையும் எடுத்துக் காட்டியுள்ளார். (பக்கம் 204 காண்க.)

சிவபெருமான் தேவதேவன் என்றும், வெள்ளிக்கயிலைப் பொருப்பு ஈசன் என்றும், இறைவன் என்றும், கண்டத்திடைக் கறையுடைக் கடவுள் என்றும், முழுமுதல், கண்ணுதல், முருகன் தாதை என்றும், முப்புரம் சுட முடுகும் ஈசன் என்றும், கயிலை ஈசன் என்றும், கண்ணுதற் பெருங்கடவுள் என்றும், மூவா முதல் ஈசன் என்றும், மூவுலகின் கோவாகிய கொற்றவன் என்றும் கூறப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டியுள்ளார். மூவா முதல் ஈசன் என்னும் தொடர் திருமாலுக்குப் பொருந்தாது என்பதற்குரிய விள்க்கமும் தந்துள்ளார். (பக்கம் 106 காண்க.)

கம்பனே சிவனே மணிமிடற்று இறைவன் என்றும், கறைமிடற்று இறைவன் என்றும், இமையா முக்கண் இறைவன் என்றும், கங்கை சூடிய ஈசன் என்றும் கூறியுள்ள வற்றைத் தொடர்படுத்தி இதுவரையில் ஆராய்ந்து எவரும் வெளியிட்டாரில்லை. அவ்வாறு வெளியிடும் தனிப் பெருமை திரு ராய. சொக்கலிங்கம் அவர்களுக்கே உரியதாயிற்று.

அகத்தியப் படலத்தில் "தழல்புரைச் சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்" என வருவதைப் பலர் அறிவர். தமிழின் பெருமையைப் பற்றி அறிய முற்பட்டுள்ள பலர் கம்பராமாயணத்தின் இப்பகுதியை அறிவர். எனினும், கம்பன் சிவனைப் பற்றிப் பெருமைப்படத் தானே பேசியிருக்கும் மொழிகளை வரிசைப்படுத்தி ஆராய முற்பட்டார் அல்லர். யாவரும் அவ்வாறு ஆராயத் தலைப்பட்டுவிடின் திரு. ராய. சொ. எவ்வாறு தமிழ்க்கடலும், சிவமணியும் ஆவது?

வீடணன் சிவனைப்பற்றிப் பேசியுள்ள இடங்கள் 35 என எடுத்துக்காட்டி அவற்றுள் 'கற்றைஅம்சடைக் கடவுள்' என வருவது ஓரிடம் எனக் காட்டியுள்ளார். அவ்வாறே இராவணன் சிவனைப்பற்றிப் பேசியுள்ள இடங்கள் 31 என எடுத்துக்காட்டி "ஈசன்" என அவன் சிவனை எடுத்து ஓதிய இடங்களையும் இந்நூலகத்தே பொறித்து வைத்துள்ளார்.

இராமன் சிவனைப்பற்றிப் பேசிய இடங்கள் 19 என எடுத்துக்காட்டி அவ்விடங்களுள் 'கடவுள்' என்றும் 'ஈசன்' என்றும் சிவனைப் பற்றிக் கூறியவிடங்கள் இன்ன இன்ன என நயமொடு எடுத்துக்காட்டியுள்ளார். சீதாப்பிராட்டி சிவனைப்பற்றி 6 இடங்களில் கூறுவதாக எடுத்துக்காட்டும் நூலாசிரியர், சீதை இராவணனை நோக்கி "இப்பெருஞ் செல்வம் நின்கண் ஈந்த பேரீசன்" எனக் கழன்றுரைத்த இடத்தைச் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார்.

விசுவாமித்திரன், அனுமன், இந்திரசித்தன், சூர்ப்பணகை, சுக்கிரீவன், முதலானவர்கள் சிவனைப்பற்றி உரைத்த இடங்களை எல்லாம் துருவியெடுத்து ஆராய்ந்து இந் நூலாசிரியர் காட்டியுள்ளார்.

இந்நூலுக்கு அணிகலனாகச் சிவனைக் குறிக்கும் சொற்றொடர் அகராதி ஒன்று தரப்பட்டுள்ளது. சிவனொடு தொடர்புடைய சொற்றொடர்களுக்குப் பாடல் எண் காட்டும் அட்டவணை ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் ஆராய்ச்சி செய்யலுறுவார்க்கு நல்ல வழிகாட்டிகளாக உள்ளன.

"கம்பனும் சிவனும்" என்ற இந்நூலினுள் கம்பனைக் காணலாம்; சிவனைக்காணலாம்; கம்பனையுஞ் சிவனையும் சேர்த்துக் காணலாம்; தொடர்பு படுத்திக் காட்டும் தமிழ்க் கடலின் மதிநுட்பத்தையும், நூல்நுட்பத்தையும் ஒருங்கு காணலாம். இஃது ஓர் அருமையான இலக்கிய விருந்து. நுகர வாரீர் தமிழ் மக்களே என அழைக்கின்றேன்.

அ. சிதம்பரநாதன்
1—8—66.

கம்பனும் சிவனும்

உ

சிவமயம்

கம்பனும் சிவனும்

'கம்பனும் சிவனும்' என்பது இந்நூலின் பெயர். கம்பன், தான் பாடிய இராம காதையில் சிவனைப்பற்றி எங்கெங்கு, யார் யார் வாயிலாக, எந்தெந்த வகையில் இயம்புகின்றான் என்பதை விரிவாக ஆராய்வதே இந்நூலின் கருத்து. கம்பன் ஒரு சிறந்த வைணவன் என்றும், அவன் பாடிய இராமகாதை ஒரு தனி வைணவக் கதை என்றும், அக்கதை சைவத்திற்குப் புறம்பானது என்றும் தொன்றுதொட்டு ஒரு கருத்து நிலவி வருகின்றது. அக்கருத்துச் சரியாகாது என்பதைத் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டுவதே இந்நூல்.

கம்பன் பிறப்பினுல் சைவன் என்று அவன் பெயர் காட்டுகின்றது. காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமான் பெயர் கம்பன். ஏகம்பம் என்பது காஞ்சியின் பெயர். ஏகம்பன், கம்பன் என மருவி வந்தது. சுந்தரமூர்த்திகள் தேவாரத்தில் காஞ்சிக் கடவுளைக் கம்பன் என்றே பாடுவார்:-

"ஆலம் தான்உகந்து அமுதுசெய் தானை,
ஆதி யை,அம ரர்தொழுது ஏத்தும்
சீலம் தான்பெரி தும்உடை யானை,
சிந்திப் பார்அவர் சிந்தையு ளானை,
ஏல வார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே."

அப்பர் அடிகளும்,

"செம்பொன்னை நன்பவளம் திகழும் முத்தை,
செழுமணியை, தொழுமவர்தம் சித்தத் தானை,
வம்புஅவிழும் மலர்க்கணைவேள் உலக்க நோக்கி
மகிழ்ந்தானை, மதில்கச்சி மன்னு கின்ற
கம்பனை,எம் கயிலாய மலையான் தன்னை,
கழுகிணெடு காகுத்தன் கருதி ஏத்தும்
நம்பனை,எம் பெருமானை, நாதன் தன்னை,
நாரையூர் நன்னகரில் கண்டேன் நானே."

என அருளுவார்.

இதுபோன்றே ஞானசம்பந்தப் பெருமானும்,

" இலங்கை அரசைத்
துலங்க ஊன்றும்
நலங்கொள் கம்பன்
இலங்கு சரணே."

என்று, கச்சிக்கடவுளைக் 'கம்பன்' என்றே பேசுவார்.

மேலும் நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் காஞ்சியம்பதியில் வீற்றிருந்தருளும் பெருமானை வணங்கச் சென்றதைக் கூறவந்த சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் காஞ்சிக் கடவுளைக் 'கம்பர்' என்றே குறிக்கின்றார். அப்பாடல்கள் வருமாறு:

" எதிர்கொண்டு இறைஞ்சும் சீர்அடியார்
தம்மை இறைஞ்சி எழுந்தருளி
மதில்கொண்டு அணிந்த காஞ்சிநகர்
மறுகுள் போந்து, வானநதி
குதிகொண்டு இழிந்த சடைக்கம்பர்
செம்பொற் கோயில் குறுகினார்,
அதிர்கொண்டு அலைநேர் மணிமிடற்றார்
ஆண்ட திருநா வுக்கரசர்."

(பெரிய புராணம்-திருநாவுக்கரசுசுவாமிகள் புராணம் - 321)

" செம்பொன்மலைக் கொடிதழுவக்
குழைந்தருளும் திருமேனிக்
கம்பரைவந்து எதிர்வணங்கும்
கவுணியர்தம் காவலனார்
பம்புதுளிக் கண்ணருவி
பாய்ந்துமயிர்ப் புளகம்வரத்
தம்பெருகு மனக்காதல்
தள்ள,நில மிசைத்தாழ்ந்தார்."

(பெரிய புராணம்-திருஞானசம்பந்தசுவாமிகள் புராணம்-994)

எனவே, அப்பெயர் கம்பனுக்கு இடப்பெற்றதாகக் கொள்ளலாம்.

கம்பனை ஆதரித்த சடையன் பிறப்பால் சைவன் என்றே தெரிகின்றது. சடையன் என்பது சிவன் பெயரே. 'சடையன், சடையப்பன்' என்று தேவார, திருவாசகங்கள் முழங்கும். எனவே வள்ளல் சடையப்பன் பெற்றது சிவபெருமான் பெயரே. தவிர,

கம்பனுக்கு ஒரு மைந்தன் இருந்ததாக வரலாறு கூறுகின்றது. அவன் பெயர் அம்பிகாபதி என்று அறிகின்றோம். அம்பிகாபதி என்பது சிவன்பெயர் என்பதில் ஐயம் இல்லை. இன்னோரன்ன கம்பனுடைய தொடர்புடைய பெயர்களைப் பார்க்குங்கால் கம்பன் பிறப்பில் சைவன் என்றே கொள்ள வேண்டியதாகிறது.

அவன் பாடிய இராமகாதை, சிலர் எண்ணுவது போல் சைவத்திற்குப் புறம்பானது அன்று. சைவத்தையும், வைணவத்தையும் சிறிதும் வேறுபாடு இன்றிப் பேசும் சமரச ஞானி கம்பன். கல்வியிற் பெரிய கம்பன், சிறந்த காதை ஒன்றைத் தோற்றுவிக்க விரும்பினான். அதற்கு ஏற்ற கதைத்தலைவன் இராமன் ஒருவனே என உணர்ந்தான். அந்த இராமனை, முன்னைப் புலவர்கள் கண்ட இராமனை விட எத்துணையோ மடங்கு உயர்த்திக் காண்கின்றான் கம்பன். தன்னுடைய இராமன் திருமாலின் அவதாரம் மட்டுமல்லன்; மும்மூர்த்திகளும் ஒரு சேரப் பிறந்தருளியவன் என்று, தான் கண்ட பாத்திரங்களுள் தன்னொப்பில்லாப் பாத்திரமான அனுமன் வாயிலாகப் பாராட்டி மகிழ்வான் கம்பன். சிவனையும் திருமாலையும் ஒப்ப நோக்கி மதிக்கும் கம்பன், அவர்களினும் சிறந்தவனாகத் தம் கதைத் தலைவன் இராமனைப் பாராட்டுவதை ஆங்கு ஆங்குக் காணலாம். இது கதைத்தலைவன் மாட்டு, கவிச் சக்கரவர்த்தி கொண்ட எல்லையற்ற அன்பைக் காட்டுகின்றது.

திருமாலைப் பற்றிக் கம்பன் நிறையப் பேசுகின்றான். அவற்றை இங்கு எடுத்துக்கொள்ளவில்லை.. சிவனைப்பற்றியும் ஏராளமாகக் கூறி இருக்கிறான் என்பதைக் காட்ட எழுந்த நூல்இது. ஆதலின் அவ் ஆராய்ச்சியே இங்கு பேசப்பெறும்.

கம்பன், தான்செய்த இராமகாதையில் 395 இடங்களில் சிவனைப் பற்றிப் பேசி இருக்கின்றான். பற்பல சிறந்த பாத்திரங்களின் வாயிலாகச் சிவன்புகழ் பேசப்பெறுகின்றது; கவிமொழியாக 168 இடங்களில் வருகின்றன; உவமை வாயிலாகவும் உரைக்கப்பெறுகின்றது. "ஊழி முதல்வன்" என்றும், "முழுமுதற்கடவுள்" என்றும் சிவபெருமான் செப்பப்பெறுகின்றான். அவ்விரிவை நூலினுள் ஆங்காங்குக் கண்டுகொள்க.

கவிச் சக்கரவர்த்தி கம்பன், காவியம் ஒன்று செய்யக் கருதினுன். புத்தம் புதிதாக ஒரு கதையை உருவாக்க அவனுக்குத் தெரியும். எனினும் நாட்டில் புகழொடு விளங்கிய இராமகாதையில் உள்ளத்தைப் பறிகொடுத்தான். இராமன்காதை மிகப் பழையதுதான். என்ருலும் முன்னைப் பழம்பொருட்கும் முன்னுமாய், பின்னைப் புதுமைக்கும் புதியதாய் விளங்கும் இராமகாதைக்கு வேறு ஏதும் ஈடாகாது என்று எண்ணி, அதனை வடிக்கத் தொடங்கினுன். அக்காதையைத் தனக்கு அளித்த மூல காரணமாகிய முனிவனைக் கம்பன் வாய்கொண்ட மட்டும் போற்றி மகிழ்வான்.

"வாங்கரும் பாதம் நான்கும்
வகுத்த,வான் மீகி என்பான்,
தீங்கவி செவிகள் ஆரத்
தேவரும் பருகச் செய்தான்;
ஆங்குஅவன் புகழ்ந்த நாட்டை,
அன்புஎனும் நறவம் மாந்தி,
மூங்கையான் பேசல் உற்ருன்,
என்ன,யான் மொழியல் உற்றேன்."

என்று தன்னடக்கமாகக் கூறிக்கொள்வான் கவிச்சக்கரவர்த்தி.

ஆதி கவியைக் கம்பன் எவ்வளவு மதிக்கின்ருன் என்பது இப் பாடலால் விளங்கும். "வான்மீகி முனிவன், அமரரும் அருந்துமாறு கவி செய்தான்; அது தித்திக்கும் கவி; அக்கவியைச் செவியால் பருகினர் தேவர்; அம்முனிபுங்கவன் பாராட்டிய நாட்டை நான் கூறுவது ஊமை பேசுவது போன்றது; அன்பு என்னும் மதுவை உண்டு மயங்கிய காரணத்தால், நான் இதில் புகுகின்றேன்" என்று கம்பன் கூறுகின்ருன்.

மேலும், "நொய்தின் நொய்ய சொல் நூற்கலுற்றேன் ... மாக்கதை செய்த செய்தவன் சொல் நின்ற தேயத்தே" எனவும், "தேவபாடையில் இக்கதை செய்தவர்" என்றும், "பொய்யில் கேள்விப் புலமையினேர் புகல் தெய்வமாக்கவி" என்றும் வான்மீகி முனிவனைச் சிறப்பித்துக் கூறுவான் கம்பன். நிற்க, அயோத்தி நகரத்தின் சிறப்புக் கூறுங்கால்,

"செவ்விய மதுரம் சேர்ந்தநற் பொருளில்
சீரிய கூரிய தீம்சொல்,
வவ்விய கவிஞர் அனைவரும், வடநூல்
முனிவரும் புகழ்ந்தது; வரம்பில்,

எவ்வுல கத்தோர் யாவரும் தவம்செய்து
ஏறுவான் ஆதரிக் கின்ற
அவ்வுல கத்தோர் இழிவதற்கு அருத்தி
புரிகின்றது அயோத்திமா நகரம்."

என்று இறுமாந்து இயம்புவான் கம்பன்.

அயோத்தி மாநகரம் எத்தகையது? செம்மையான, இனிமை செறிந்த, நற்பொருள் உணர்ந்த கவிஞர், சிறப்புடைய, கூர்மையான, இனிக்கும் சொற்களைக் கவர்ந்த கவிஞர், எல்லோராலும் புகழப்பெற்றது. அக்கவிஞராவார் வான்மீகி உள்ளிட்டார்.

"எல்லையற்ற புகழுடைய எல்லா உலகத்தவரும், இருந்தவம் செய்து அடைய எண்ணும் தேவநாட்டைச் சேர்ந்தவரும், வந்து பிறப்பதற்கு விரும்பும் சிறப்புப் பெற்றது அயோத்திமா நகரம்" என்று கூறுவதின் கருத்து என்ன?

இமையா நாட்டம் பெற்ற தேவலோகத்து உறையும், தேவர்கள் தேவனே அயோத்தி நகரத்தில் பிறக்க விரும்பினுன் அல்லவா?

"மூலமும் நடுவும் ஈறும்
இல்லதோர் மும்மைத் தாய
காலமும் கணக்கும் நீத்த
காரணன், கைவில் ஏந்தி,
சூலமும், திகிரி சங்கும்,
கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப்
பொருப்பும்விட்டு அயோத்தி வந்தான்."

என்ற அரிய பாடலை ஈண்டுச் சிந்திக்க.

காவியத்தலைவர்களுக்குள்ளே இராமனுக்கு இணையான ஒருவன் இலன் என்றும், காவியத் தலைவியர்க்குள்ளே சீதைக்கு இணையான ஒருத்தி இலள் என்றும் உணர்ந்த காரணத்தினுலேயே கம்பன் இராம காதையைப் பாடத் தலைப்பட்டான். அவ்விருவரையும் கடவுளின் பிறப்பு என்றே கம்பன் கொள்வான்.

“அறம்தலை நிறுத்தி, வேதம்
அருள்சுரந்து அறைந்த நீதித்
திறம்தெரிந்து, உலகம் பூணச்
செந்நெறிச் செலுத்தி, தீயோர்

இறந்துக நூறி, தக்கோர்
இடர்துடைத்து ஏக, ஈண்டுப்
பிறந்தனன்; தன்பொன் பாதம்
ஏத்துவார் பிறப்பு அறுப்பான்.”

என்று அனுமன் வாயிலாகக் கம்பன் கூறுவான்.

‘தன் பொன்னுர் திருவடிகளை ஏத்துகின்றவர்களின் பிறப்பை அறுக்கும் பொருட்டு, கடவுள் இராமனுகப் பிறந்தான்’ என்பது பாட்டின் கருத்து.

இறக்கும் தறுவாயில் தம்பி சுக்கிரீவனைப் பார்த்து வாலி பகர்வான்:

“மறைகளும், முனிவர் யாரும்,
மலர்மிசை அயனும், மற்றைத்

துறைகளின் முடிவும், சொல்லும்
துணிபொருள், துணிவில் தூக்கி,

அறைகழல் இராம ஞகி
அறநெறி நிறுத்த வந்தது;

இறைஒரு சங்கை இன்றி
எண்ணுதி எண்ணம் மிக்கோய்!”

மேலும் உயிர்விடும் போது மைந்தன் அங்கதனை அழைத்துப் பின் வருமாறு வாலி பேசுவான்:

“பாலமை தவிர்நீ! என்சொல்
பற்றுதி ஆயின், தன்னின்,

மேல்ஒரு பொருளும் இல்லா
மெய்ப்பொருள், வில்லும் தாங்கி,

கால்தரை தோய நின்று
கட்புலக்கு உற்றது, அம்மா!
மால்தரும் பிறவி நோய்க்கு
மருந்துஎன வணங்கு மைந்த."

இன்னோரன்னவற்றால் பரம்பொருளே இராமனாகவந்தது என்று கம்பன் கருதுகின்றான் என்பது தேற்றம்.

திருமாலே இராமனாக வந்தான் என்று பற்பல இடத்துக் கூறுவான்.

"கொல்ஆழி நீத்துஅங்குஓர் குனிவயிரச்
சிலை,தடக்கை கொண்ட கொண்டல்,
எல்ஆழித் தேர்இரவி இளங்கரத்தால்
அடிவருடி அனந்தல் தீர்ப்ப,
அல்ஆழிக் கரைகண்டான், ஆயிரவாய்
மணிவிளக்கம் அழலும் சேக்கைத்
தொல்ஆழித் துயிலாதே துயர்ஆழி
நெடுங்கடலுள் துயில்கின் றானே."

"ஒருபகல் உலகுஎலாம்
உதரத்து உள்பொதிந்து
அருமறைக்கு உணர்வரும்
அவனை, அஞ்சனக்
கருமுகிற் கொழுந்துஎழில்
காட்டும் சோதியைத்
திருவுறப் பயந்தனள்
திறங்கொள் கோசலை."

என்ற இரண்டு பாடலும் கவிக்கூற்று.

"எங்கள்செய் தவத்தினின்
இராமன்என வந்தான்,
சங்கிநெடு சக்கரம்உ
-டைத்தனி முதல்பேர்
அங்கண்அரசு ஆதலின்அவ்
அல்லிமலர் புல்லும்
மங்கைஇவள் ஆம்"என
வசிட்டன்மகிழ் உற்றான்.

என்ற பாடலில் இராமன் திருமாலின் பிறப்பு என்றும், சீதை திருமகளின் பிறப்பு எனவும், வசிட்டன் எண்ணுகின்றான்.

"மையறு மலரின் நீங்கி
யான்செய்மா தவத்தின் வந்து,
செய்யவள் இருந்தாள் என்று
செழுமணிக் கொடிகள் என்னும்
கைகளை நீட்டி, அந்தக்
கடிநகர், கமலச் செங்கண்
ஐயனை ஒல்லை வாஎன்று
அழைப்பது போன்றது அம்மா!"

"மாதவனை முற்கொள
வணங்கிநெடு மன்னன்
பாதமலர் கைதொழுது
கண்கள்பனி சோரும்
தாதைஅருகு இட்டதவி -
-சில்தனி இருந்தாள்
போதினை வெறுத்துஅரசர்
பொன்மனை புகுந்தாள்."

என்ற இரண்டு பாடல்களிலும் சீதை திருமகளின் பிறப்பு என்று கவிக்கூற்றாகக் கம்பன் கூறுவான்.

கவிமொழி

ഛായരേഖ

கவி மொழி

கம்பன் சிவனைப்பற்றிக் கூறிய 395 இடங்களில் கவிமொழியாக வருபவை 168 இடங்கள். பாத்திரங்களின் வாயிலாகப் பகர்வதைவிட, கவி, தன் வாய்மொழியாகச் சொல்வதற்கு வன்மை அதிகம் உண்டு. ஈசன் என்ற பெயரால் கவிமொழியாகச் சிவபெருமானைக் கூறும் இடங்கள் பதினேழு. 'ஈறு இலான் கயிலை' என்று ஓர் இடத்துக் கம்பன் கூறுவான். இது 'ஈறிலாதவன் ஈசன் ஒருவனே' என்ற அப்பர் தேவாரத்தை நினைப்பூட்டுகின்றது.

உமைக்குக் கூறுஅளித்த அம்மைஅப்பன் வடிவத்தை ஒன்பது இடங்களில் கூறி மகிழ்வான். நஞ்சு உண்ட வரலாற்றை ஆறு இடங்களில் நவில்வான். "நண்ணுதல் அருங்கடல் நஞ்சம் நுங்கிய கண்ணுதல்" என்று சொல்லும்போது எவரும் அணித்தே நெருங்க முடியாத விடத்தை உண்ட சிவன் பெருமையை அறிகின்றேம். நெற்றிக்கண் பற்றிக் கவிக் கூற்றாக வருபவை பதின்மூன்று. "முழுமுதல், கண்ணுதல், முருகன்தாதை" என்று தொடங்கும் பாடலில் சிவபிரானின் முழுமுதல் கடவுள் தன்மையை அறுதியிட்டுப் பேசுகின்றான் கவிச் சக்கரவர்த்தி.

இனி, உலகம் முழுதும் அழியும் ஊழிக்காலத்தில் தனித்து நிற்கும் ஒரு தனிக் கடவுளைப்பற்றி அடியார்பலரும் கூறுவர். தேவார திருவாசகங்கள் அக்கடவுள் சிவபிரானே என்று கூறும். திவ்வியப் பிரபந்தம் அக்கடவுள் திருமாலே என்று செப்பும். "ஊழிமுதல்வனாய் நின்ற ஒருவனை, ஏழை பங்காளனையே பாடேலோர் எம்பாவாய்" என்று மணிவாசகர் வழுத்துவார். 'ஊழி முதல்வன் உருவம் போல் மெய்கறுத்து' என்று ஆண்டாள் அருளுவர். ஈண்டுக் கம்பன் கவிக்கூற்றாக 'ஊழி முதல்வன் சிவனே' என ஒன்பது இடங்களில் கூறுவான்.

1. "ஊழிக்கடை முடிவில் தனி உமைகேள்வன்"

2. "ஊழி நெருப்பின் உருத்தன்"

3. "ஊழியின் இறுதிக் காலத்து உருத்திரமூர்த்தி"

4. "உகக்கடை உலகம்யாவும் உணங்குற ஒருதன் நாட்டம், சிகைக் கொழுங்கனலை வீசும் செயல்"

5. "ஊழியின் உருத்திரன்"

6. "மண்ணும், வானமும், மற்றையபிறவும் தன்வாய்ப் பெய்து, உண்ணும் காலத்து அவ்உருத்திரன்"

7. "உடைபுலித்தடக்கை அண்ணல் உயிரெலாம் ஒருங்க உண்ணும், கடையுறும் காலம்"

8. "சூலமும், மழுவும் தாங்கித் தோள் இருநான்கும் தோன்ற,மூலம் வந்து உலகை உண்ணும் உருத்திர மூர்த்தி"

9. "பேய்மொய்த்து நரிகள் ஈண்டி, பெரும் பிணம் பிறங்கித் தோன்றும், ஈமத்துள் தமியன் நின்ற கறைமிடற்று இறைவன்."

வேள்விப்படலத்தில் அரக்கர்க்கு அஞ்சிய மாதவர் இராமனைச் சரண் புகுந்ததைக் கடலில் தோன்றிய நஞ்சுக்கு நடுங்கி அமரர்கள் சிவனை அடைந்தது போல, "நஞ்சுஅட எழுதலும், நடுங்கி, நாள் மதிச் செஞ்சடைக் கடவுளை அடையும் தேவர் போல்" என்று இயம்புவது இறைவர் அனைவரிலும் சிவனே ஏற்றம் உடையான் என்று கொள்ளத் தகும்.

"மூவாமுதல் ஈசனும்" என்று சிவனைப் பற்றிக் கூறுவது சிவனின் முழுமுதல் தன்மையை வலியுறுத்துவதாகும். 'மூவா முதல்' என்னும் சொற்றொடர், "சமுத்திரத்தின் நஞ்சுண்டும் சாவா, மூவாச்சிங்கமே!" என்ற அப்பர் தேவாரத்தை நினைப்பூட்டுகின்றது.

கும்பகன்னன் வதைப்படலத்தில், 'கண்ணுதல் பெருங்கடவுள்' என்று சிவபெருமானைக் கூறி மகிழ்வான் கம்பன். இச் சொல் தொடரைப் பின்னே திருவிளையாடற் புராண ஆசிரியர், பரஞ்சோதி முனிவர், "கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோடு அமர்ந்து" என்று சிறப்பித்து இன்புறுகின்றார்.

" மான்மறிக்கரத்து வள்ளல் " என்று ஓர்இடத்துக் கூறிமகிழ்வான் கவிச் சக்கரவர்த்தி. ஆதவன் தோற்றத்தைக் கூறுங்கால், " உதயகிரி எனும் கடவுள் நுதல்கிழித்த விழியேபோல் உதயம் செய்தான் " என்று இயம்புவது எண்ணி எண்ணி இன்புறத்தக்கது.

"எண்ணரிய மறையினொடு கின்னரர்கள்
இசைபாட, உலகம் ஏத்த

விண்ணவரும், முனிவரரும் வேதியரும்
கரம்குவிப்ப, வேலை என்னும்

மண்ணும்மணி முழவுஅதிர வான்அரங்கில்
நடம்புரி,வாள் இரவி ஆன

கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரிந்தால்
எனவிரிந்த கதிர்கள் எல்லாம்"

என்ற பாடலில் சூரியனுக்கும் சிவனுக்கும் சொல்லும் உவமை மிக்க அழகுடைத்து.

இராவணன் சிவபூசை செய்தான் என்பதை, "ஈசனை இமையாமுக்கண் இறைவனை இருமைக்கு ஏற்ற பூசனை முறையிற்செய்து" என்று ஓர் இடத்தும், " பூசனைத் தொழில் புரிந்து,தான் முறைமையிற் போற்றும் ஈசனைத் தொழுது " என்று பிறிது ஓர் இடத்தும் கவி மொழியாகக் கூறுவான்.

உ
சிவமயம்

நீறு அணிந்த கடவுள்

1 நீறு அணிந்த
கடவுள் நிறத்தவான்,

ஆறு அணிந்துசென்று
ஆர்கலி மேய்ந்து,அகில்

சேறு அணிந்த
முலைத்திரு மங்கைதன்

வீறு அணிந்தவன்
மேனியின் மீண்டவே.

பொழிப்பு: திருநீறு பூசிய கடவுளாகிய சிவபெருமானின் வண்ணத்தையுடைய மேகம், வானவெளியை அலங்கரித்துச் சென்று, கடலின் நீரைக்குடித்து, அகிற்குழம்பை அணிந்துகொண்ட தனங்களை உடைய திருமகளைப் பெருமிதமாக மார்பில் அணிந்த திருமாலின் திருமேனியின் நிறத்தைப் பெற்றுத்திரும்பியது.

விளக்கம்: மேகம் நீறுஅணிந்த சிவபிரானின் வெண்மேனிபெற்றுச் சென்று, கடலைக்குடித்து, மழை பொழியத் திரும்புங்கால், திருமாலின் "பச்சைமாமலை போல்" மேனிபெற்று மீண்டது. சிவபெருமானுக்குச் சொல்லப்பெற்ற நிறம் செம்மையாதலின் மேகத்தின் வெண்மையை உணர்த்த "நீறணிந்த கடவுள்" என்றார். கடல் பருகி, மழைபொழியும் மேகத்தைப்பற்றி, "முன்னிக்கடலைச் சுருக்கி" என்ற திருவாசகத்தில் மணிவாசகப் பெருமானும், "ஆழிமழைக்கண்ணா" என்ற திருப்பாவையில் ஆண்டாள் அம்மையாரும், "கருவிமாமழை" என்னும் நைடதப் பாடலில் அதிவீரராமபாண்டியனாரும் கூறும் கருத்து இதனை ஒத்தது.

இதனை,

நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும்; தடிந்து,எழிலி
தான்நல்கா தாகி விடின்.

என்னும் திருக்குறளில் புலவர் பெருமான் வலியுறுத்துவர். நீறுஅணிந்த கடவுள் என்ற இப்பாடலின் எடுப்பு கம்பீரமாக அமைந்திருக்கிறது.

(பாலகாண்டம். ஆற்றுப்படலம். மேகம் கடல் குடித்து மழைபொழிதல்)

உமைக்குஒரு பாகத்து ஒருவன்

2 உமைக்குஒரு பாகத்து ஒருவனும், இருவர்க்கு
ஒருதனிக் கொழுநனும், மலர்மேல்
கமைப்பெரும் செல்வக் கடவுளும் உவமை
கண்டிலர்; அங்குஅது காண்பான்
அமைப்பரும் காதல் அதுபிடித்து உந்த
அந்தரம் சந்திரா தித்தர்
இமைப்பிலர் திரிவர்; அதுஅலால் இதனுக்கு
இயம்பலாம் ஏதுமற்று யாதோ.

பொழிப்பு: உமையவட்கு உடம்பில் ஒருகூறு அளித்த சிவபெருமானும், திருமகள், நிலமகள் என்ற இருமகளிர்க்கும் ஈடற்ற ஒரு கணவனாகிய திருமாலும், பூமேல் உறையும் பொறுமையையே பெரிய செல்வமாக உடைய பிரமனும் (அயோத்தி நகரத்துக்கு) ஒப்பாக ஒரு நகரம் கண்டிலர். அந்நகரத்தைக்காணும் பொருட்டு, தடுக்க முடியாத ஆசைபிடித்துத்தள்ள வானவெளியில் சூரிய சந்திரர் கண்மூடாமல் திரிவாராயினர். அதைத்தவிர இந்நகரத்தைச் சிறப்பித்துச் சொல்ல வேறு காரணம் வேண்டுமோ?

விளக்கம்: முப்பெரும் கடவுளருமே வியக்கும் பெருமை கொண்டது அயோத்திநகரம். திங்களும், ஞாயிறும் உலாவும் இயற்கைக் காட்சியை இவ்வாறு அலங்கரிப்பார் கவிச் சக்கரவர்த்தி.

இப்பாடல் "உமைக்கு ஒரு பாகத்து ஒருவன்" என்று தொடங்குவதில் தனிச்சிறப்பு அமைந்திருக்கிறது.

(பால. நகரப் படலம். அயோத்தி நகரின் மேன்மை)

மதில் ஈசனை ஒக்கும்

3 மேவஅரும் உணர்வு முடிவுஇலா மையினுல்
வேதமும் ஒக்கும்; விண் புகலால்
தேவரும் ஒக்கும்; முனிவரும் ஒக்கும்
திண்பொறி அடக்கிய செயலால்;

காவலின் கலைஊர் கன்னியை ஒக்கும் ;
சூலத்தால் காளியை ஒக்கும்;
யாவரும் தன்னை எய்துதற்கு அரிய
தன்மையால் ஈசனை ஒக்கும்.

பொழிப்பு: அறிதற்கரிய அறிவினால் முடிவுகாண முடியாமையால் மறையை ஒக்கும்; வானத்தை ஊடுருவிச் செல்லலால் அமரரை ஒவ்வும்; வலிய பொறிகளை அடக்கிக்கொண்ட செய்கையால் முனிவரை நிகர்க்கும்; காத்தல் செயலால் கலைமானை ஊர்தியாக உடைய துர்க்கா தேவியைப் பொருவும்; சூலாயுதத்தைத் தரித்தலால் காளியைப் போலும்; எவரும் தன்னை அடைவதற்கு அரிய பெருமையால் சிவபெருமானை மானும்.

விளக்கம்: இப்பாடல் அயோத்திமதிலின் சிறப்புக்கூறுவது. மதில், மறைகளைப் போல் பரந்தபல நுண்பொருள்களை உள்ளடக்கி இருத்தலால் வேதத்தை ஒக்கும்; வானளாவி ஓங்கியிருத்தலால் அங்குள்ள தேவரை ஒக்கும்; இயந்திரப் பொறிகளைப் பெற்றிருப்பதால் பொறியடக்கிய மெய்ஞ்ஞானிகளை ஒக்கும்; ஊருக்குக் காவலாக அமைதலால் காப்புத் தெய்வத்தை ஒக்கும். மதில் மேல் சூலத்தை நட்டிருப்பதால் காளியை ஒத்தது. எவரும் எளிதில் அடையமுடியாத பெருமையால் மதில் ஈசனை ஒத்தது.

ஈசன் என்ற சொல் பொதுவாக இருப்பினும் சிறப்பாக அது சிவபெருமானையே உணர்த்துதலைக் காண்கின்றோம்.

**நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்;
ஆறு கோடி நாராயணர் அங்ஙனே;
ஏறு கங்கை மணல்எண்ணில் இந்திரர்;
ஈறு இலாதவன் ஈசன் ஒருவனே.**

என்று அப்பர் சுவாமிகள் கூறுவது நிற்க, சிவபெருமானைக் குறிக்க ஈசன் என்ற சொல்லை 44இடங்களில் கம்பன் பெய்திருக்கின்றான். "சோகத்தாள் ஆயநங்கை" என்ற பாடலில் சிவன், திருமால் இருவருமே பேசப்பெறுகின்றனர். அப்பாடலில் சிவன் ஈசன் என்றும், திருமால் மாயன் எனவும் கூறப்பெற்றிருத்தல் சிந்திக்கத்தக்கது. "ஈறிலான் கயிலை" என்று கம்பன்இயம்புங்கால் "ஈறிலாதவன் ஈசன் ஒருவனே" என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கு, கம்பன் நினைவுக்கு வந்திருத்தல் வேண்டும்.

(பால. நகரப்படலம். அயோத்திமதிளின் மாட்சி)

தவள் மதி புனை அரன்

4 சவுளமொடு உபநயனம்
விதிமுறை தருகுற்று,
இ, அளவது எனஒரு
கரைபிறிது இலவா
உவள்அரு மறையினொடு
ஒழிவுஅறு கலையும்,
தவள்மதி புனைஅரன்
நிகர்முனி தரவே.

பொழிப்பு: வெண்மையான திங்களைச்சூடிய சிவபெருமானை நிகர்த்த வசிட்ட முனிவன், சவுளத்தொடு உபநயனத்தையும், முறைப்படி செய்வித்து, இவ்அளவினது என்று சொல்ல முடியாதபடி எல்லையற்ற அழிவில்லாத மறைகளையும், கேடற்ற ஏனைய சாத்திரங்களையும் சொல்லிக் கொடுக்க.

விளக்கம்: சௌளம்: குடுமிவைக்கும் சடங்கு. உபநயனம்: பூணூல் போடுதல். தவள்மதி புனைஅரன் நிகர் முனி என்பதை முதலில் எடுத்துப் பொருள் கொள்ளவேண்டும். தயரதன் மக்கள் நால்வருக்கும் வசிட்ட முனிவன் கலைகளைக் கற்றுக்கொடுத்தான்.

(பால. திரு அவதாரப்படலம். கல்வி கற்றல்)

செஞ்சடைக் கடவுள்

5 நஞ்சுஅட எழுதலும்
நடுங்கி, நாள்மதிச்
செஞ்சடைக் கடவுளை
அடையும் தேவர்போல்,
வஞ்சனை அரக்கரை
வெருவி மாதவர்,
"அஞ்சன வண்ண! நின்
அபயம்யாம்" என்றார்.

பொழிப்பு : கடலில் தோன்றிய நஞ்சு கொல்லவருதலும் நடுக்கம் அடைந்து, பிறைச் சந்திரனை அணிந்த சிவந்த சடையையுடைய சிவபெருமானிடம் அடைக்கலம் புகுந்த அமரர்களைப் போல, வஞ்சனை வல்ல அரக்கர்கட்கு அஞ்சி, சிறந்த தவம் செய்யும் முனிவர்கள் இராமனை அணுகி, " மைவண்ணனே ! நாங்கள் உனக்கு அடைக்கலம் " என்று இயம்பினர்.

விளக்கம் : அட : கொல்ல. நாள்மதி : முதலில் தோன்றும் திங்கள். வெருவி : அஞ்சி.

(பால. வேள்விப்படலம். மாதவர் இராமனிடம் அபயம் புகுதல்)

செங்கண் ஏற்றவன்

6 அங்கு நின்றுஎழுந்து அயன்முதல்
மூவரும் அனையார்,
செங்கண் ஏற்றவன் செறிசடைப்
பழுவத்தில் நிறைதேன்
பொங்கு கொன்றை ஈர்த்து ஒழுகலால்,
பொன்னியைப் பொருவும்
கங்கை என்னும் அக் கரைபொரு
திருநதி கண்டார்.

பொழிப்பு : அவ்விடத்தினின்றும் புறப்பட்டு, பிரமன் முதலிய மும்மூர்த்திகளையும் ஒத்த மூவரும், சிவந்த கண்ணை உடைய இடபத்தை வாகனமாகவும், கொடியாகவும் கொண்ட, சிவபிரானுடைய அடர்ந்த சடைக்காட்டில் உள்ள பொங்கிவரும் கொன்றைப்பூவின் தேனை இழுத்து வருதலால், காவிரியை ஒக்கும், கங்கை என்னும் அந்த இருகரையும் மோதுகின்ற அழகிய ஆற்றைக்கண்டார்கள்.

விளக்கம் : பிரமன் முதலியோரை ஒத்தமூவர் : விசுவாமித்திரர், இராமர், இலக்குவர். செறிதல்: அடர்ந்திருத்தல். பழுவம்: காடு. ஈர்த்தல்: இழுத்தல். பொன்னி : காவிரி. கொன்றைப்பூ பொன்னிற முடையது. பொன்னி என்ற பெயர் பெற்று, இருகரையும் பொன்னைக் கொழிக்கின்றது காவிரி. கங்கையும், கொன்றையும் சிவபெருமான் சடையில் இருத்தலால் அங்கிருந்து புறப்படும் கங்கை பொன்னிறக் கொன்றையை இழுத்து வருகின்றது. எனவே காவிரி கங்கையை நிகர்க்கும் என்பது கருத்து.

(பால. அகலிகைப்படலம். மூவரும் கங்கையைக்காண்டல்)

ஈசன் கண்ணில் நெருப்பு உரு அனங்கன்

7 வெஞ்சுடர் உருவிற்று என்னும்
மேனியர்; வேண்டிற்று ஈயும்
நெஞ்சினர்; ஈசன் கண்ணில்
நெருப்புஉரு அனங்கன் அன்னார்;

செஞ்சிலைக் கரத்தர்; மாதர்
புலவிகள் திருத்திச் சேந்த
குஞ்சியர் சூழ நின்ற
மைந்தர்தம் குழாங்கள் கண்டார்.

பொழிப்பு: வெம்மையுள்ள ஞாயிறு உருவுஎடுத்து வந்தது போன்ற உடம்பையுடையவர்; வேண்டுவார் வேண்டுவதே ஈயும் உள்ளத்தினர்; சிவபெருமானின் நெற்றிக்கண்ணின் நெருப்பினுல் தாக்குண்டு எரிந்துவிடாத மன்மதனை ஒத்தவர்; சிவந்த வில்லேந்திய கையை உடையவர்; மகளிரின் ஊடல்தீர்த்து அதனுல் சிவந்த முடியை உடையவர்; இவ்வாறு சூழநின்ற இளைஞர்கள் கூட்டத்தைக் கண்டார்கள்.

விளக்கம்: ஈசன் கண்ணின் நெருப்பு உரு அனங்கன்: கடவுள் கண்பட்டு, சாம்பராவதற்கு முன்னே இருந்த கட்டழகுடைய மன்மதன்.

நின்மலனுர் வெண்ணீற்று நெற்றிக்கண் காணுத
மன்மதன்காண் என்னும் வடிவினுன்.

என்ருர் பிறரும். மாதர்புலவிகள் திருத்திச் சேந்த குஞ்சியர்: ஊடற்காலத்து, பிணக்குத்தீர்த்துக் காதலியரைக் கலக்கும் பொருட்டு, மைந்தர்கள் அவர்கள் அடிகளிலே தமது முடிபொருந்த வீழ்ந்து வணங்கலால் அவர்கள் அடிகளில் தீற்றப்பெற்ற செம்பஞ்சுக் குழம்பு பட்டு, அதனுல் சிவந்த முடிஉடையவர். குஞ்சி: ஆண்மயிர்.

(பால. மிதிலைக்காட்சிப்படலம். இராமன் முதலியோர் மிதிலைமக்களைக் காண்டல்)

கடவுள் நுதல் கிழித்த விழி

8 ததையும்மலர்த் தார்அண்ணல் இவ்வண்ணம்
மயல்உழந்து, தளரும் ஏல்வை,
சிதையும்மனத்து இடருடைய செங்கமலம்
முகம்மலர, செய்ய வெய்யோன்,
புதைஇருளின் எழுகின்ற புகர்முகயா-
-னையின்உரிவைப் போர்வை போர்த்த
உதையகிரி எனும்கடவுள் நுதல்கிழித்த
விழியேபோல் உதயம் செய்தான்.

பொழிப்பு: அடர்த்தியான பூக்களால் தொடுக்கப்பெற்ற மாலையை அணிந்த அண்ணலாகிய இராமபிரான் இவ்விதமாக மயக்கத்தால் வருந்தித்தளர்ந்த பொழுதில், நாயகனைப் பிரிந்தமையால் நிலைகுலைந்த நெஞ்சத்தில் துயர் பொருந்திய செந்தாமரையாகிய காதலியின் வதனம் மலர, சிவந்த சூரியன், மூடிய இருளினின்றும் புறப்படுகின்ற புள்ளிகள் பொருந்திய முகத்தோடு கூடிய யானையின் தோலாகிய போர்வையைப் போர்த்திக் கொண்ட, உதயமலை என்னும் சிவபெருமான் நெற்றியினின்றும் பிளந்து தோன்றிய நெருப்புக் கண்போல் தோன்றினன்.

விளக்கம்: தாமரை ஆதவனைக் கண்டு மலர்தலால் சூரியனைத் தலைவனாகவும், தாமரையைத் தலைவியாகவும் அலங்கரிப்பது இலக்கிய மரபு. காலை ஆதவனுதலின் செய்ய வெய்யோன் என்றார். புகர்: புள்ளி. உரிவை: தோல். இருள்மலையினின்றும் தோன்றும் இரவி, கரியநிறமுடைய யானைத்தோலால் உடல் முழுதும் மூடப்பெற்ற சிவபெருமானின் நெற்றிக் கண் போன்று தோன்றியது.

(பால. மிதிலைக்காட்சிப்படலம், ஆதவன் தோற்றம்)

கண்ணுதல் வானவன்

9 எண்ணரிய மறையினொடு கின்னரர்கள்
இசைபாட, உலகம் ஏத்த
விண்ணவரும், முனிவரரும், வேதியரும்,
கரம்குவிப்ப, வேலை என்னும்

மண்ணும்மணி முழவு அதிர, வான்அரங்கில்
நடம்புரிவான் இரவி ஆன
கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரிந்தால்
எனவிரிந்த கதிர்கள் எல்லாம்.

பொழிப்பு : மதிப்பிடுவதற்கு அரிய மறைகளோடு கின்னரர்களும் தோத்திரம் செய்து புகழ்பாட, உலகிலுள்ள உயர்ந்தோர் அனைவரும் போற்ற, அமரர்களும், முனிபுங்கவர்களும், மறைபயின்றவர்களும் கைகூப்பித்தொழ, கடல் என்று சொல்லத்தக்க கழுவுதல் அமைந்த மத்தளம் ஒலிக்க, வானமாகிய நடன அரங்கில் நடனமாடுகின்ற ஒளி பெற்ற ஞாயிறு என்னும் நெற்றிக்கண் படைத்த கடவுளாகிய சிவ பெருமானின் தங்கநிறமான சடைகள் விரிந்தாற் போல விரிந்தன ஆதவனின் ஒளிப் பிழம்புகள்.

விளக்கம் : உலகம் என்பது உயர்ந்தோர் மேற்று ஆதலின் ஈண்டு உலகோரைச் சுட்டியது. வேலை: கடல். மண்ணுதல்: கழுவுதல். மணி: அழகு. இப்பாடல் ஆதவனுக்கும் சிவனுக்கும் உவமை. சூரியன் புறப்படுங்கால் விண்ணவரும், முனிவரரும், வேதியரும் வணங்குவர் அவர்கள் சிவபெருமானை எப்பொழுதும் வணங்கும் இயல்பினர். கதிர்களை விரித்துத் தோன்றும் கதிரவன் செஞ்சடை விரித்து ஆடும் சிவபெருமானைப் போல் காட்சியளிக்கின்றான்.

(பால. மிதிலைக் காட்சிப்படலம். ஆதவனுக்கும் சிவனுக்கும் ஒப்பு)

வெள்ளம் அணைத்தவன் வில்

10 'வள்ளல் மணத்தை
மகிழ்ந்தனன் என்றால்,
"கொள்"என முன்பு
கொடுப்பதை அல்லால்,
வெள்ளம் அணைத்தவன்
வில்லை எடுத்து,இப்
பிள்ளைமுன் இட்டது
பேதைமை' என்பார்.

பொழிப்பு : இராமபிரான் சீதையை மணக்க விரும்புகின்ருன் என்று சொன்னல் "ஏற்றுக்கொள்" என விரைந்து கொடுப்பதைத்தவிர, கங்கைப் பேராற்றைத் தன்சடையில் அடக்கிக்கொண்ட பிறவா யாக்கைப் பெரியோனின் வில்லைத்தூக்கி இப்பிள்ளைக்கு முன்னே பணயமாக வைத்தது அறியாமை என்று சொல்லுவர்.

விளக்கம் : இது ஊர்ப்பெண்கள் பேசும் பேச்சு. இராமன் விரும்பினல் சீதையைக் கொடுக்கவேண்டியதுதானே. அதனை உணராமல் மிதிலை மன்னன் இப்பருத்த வில்லைக் குறுக்கேபோடுவது அறியாமை அல்லவா? இங்கே "வள்ளல்" இராமனையேகுறிக்கும். சனகன் என்று கூறுவது அவ்வளவு சிறப்புடைத்தன்று.

(பால. கார்முகப்படலம். மிதிலை மாதர்பேச்சு)

கண்நுதல் பொருந்த வருவேழம்

11 மண்உற விழுந்து,நெடு
வான்உற எழுந்து,
கண்ணுதல் பொருந்தவரு
கண்ணனின் வரும்,கார்
உண்நிற நறும்பொடியை
வீசி,ஒரு பாகம்
வெண்நிற நறும்பொடி
புனைந்தமத வேழம்.

பொழிப்பு : மண்ணில் பொருந்த விழுந்து, நீண்ட வானைமுட்டி எழுந்து, தன் கருமை நிறத்தை உள்ளே வைத்து மூடிய நல்ல புழுதியை ஒரு பக்கத்தில் துடைத்துவிட்டு, மற்ருெரு பகுதியில் வெள்ளை நிறமான புழுதியோடு கூடிய மத யானையானது, சிவபெருமானை உடம்பின் ஒரு பகுதியிலேயுடைய திருமாலைப் போல் வாரா நிற்கும்.

விளக்கம் : மண்உறவிழுந்து, நெடுவான் உறஎழுந்து, கார் உள்நிற நறும் பொடியை ஒருபாகம் வீசி, வெள்நிற நறும் பொடி புனைந்த மதவேழம், கண்ணுதல் பொருந்தவரும் கண்ணனின் வரும் என, கொண்டு கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும். புழுதியில் படிந்த மதயானை தன் உடம்பில் ஒரு பக்கத்தைத் துதிக்கையால் துடைத்துவிட்டு, மற்ருெரு பக்கத்தில் படிந்த புழுதியோடு வருகின்றது. அக்காட்சி ஒருபுறம் சிவனும், மற்றைப்புறம் மாலும் சேர்ந்த "சங்கர நாராயண" வடிவத்தை

ஒத்திருக்கிறது. வெண்புழுதி படிந்த பகுதி வெண்ணீறு பூசிய சிவனையும் புழுதிதுடைக்கப்பெற்ற யானையின் இயற்கை நிறமான கருமைப் பகுதி திருமாலையும் காட்டா நிற்கின்றது. சிவனும் திருமாலும் கலந்த வடிவத்தைக் காட்டும் திருமங்கையாழ்வாரின் பின்வரும் பாசுரத்தை மனத்தில் கொண்டே இப்பாடலைக் கவிச்சக்கரவர்த்தி செய்திருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது.

பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப்
பிரமனைத்தன் உந்தியிலே தோற்று வித்து,
கறைதங்கு வேல்தடங்கண் திருவை மார்பில்
கலந்தவன்தாள் அணைகிற்பீர்! கழுநீர் கூடித்
துறைதங்கு கமலத்துத் துயின்று. கைதைத்
தோடாரும் பொதிசோற்றுச் சுண்ணம்நண்ணி,
சிறைவண்டு களிபாடும் வயல்சூழ் காழிச்
சீராம விண்ணகரே சேர்மின் நீரே.

(பால. வரைக்காட்சிப்படலம். மலையானையின் தோற்றம்)

மலைமகள் கொழுநன்

12 நிலமகட்கு அணிகள் என்ன
நிரைகதிர் முத்தம் சிந்தி,
மலைமகள் கொழுநன் சென்னி
வந்துஇழி கங்கை மான,
அலகுஇல்பொன் அலம்பி ஓடி,
ஆரம்சேர் அருவி மாலை,
உலகு அளந் தவன்தன் மார்பில்
உத்தரீ யத்தை ஒத்த.

பொழிப்பு: பூமகளுக்கு அலங்காரம் என்று சொல்லும்படி ஒழுங்காக ஒளியோடு கூடிய முத்துக்களை வாரி இறைத்து, மலையரையன் பொற்பாவை நாயகனாகிய சிவபெருமானின் முடியினின்றும் வந்து வீழ்கின்ற கங்கையை ஒப்ப, கணக்கற்ற பொன்னைக் கொழித்து, பெருகி வருகின்ற முத்துக்களுடன் சேர்ந்த மலையருவியின் வரிசை, உலகளந்த திருமாலின் மார்பில் அணிந்த மேலாடையை ஒத்த.

விளக்கம்: அருவி வெண்ணிறமாக வீழ்வதால் உத்தரீயத்தை நிகர்க்கும் என்றார்.

(பால. வரைக்காட்சிப்படலம் மலையருவியின் அழகு)

கங்கைவார் சடையோன்

13 அங்கு அவர் பண்ணை நல்நீர்
ஆடுவான் அமைந்த தோற்றம்,
கங்கைவார் சடையோன் அன்ன
மாமுனி கனல மேல்நாள்,
மங்கையர் கூட்டத் தோடும்
வானவர்க்கு இறைவன் செல்வம்,
பொங்குமா கடலில் செல்லும்
தோற்றமே போன்றது அன்றே.

பொழிப்பு: அவ்விடத்து ஆடவரும், பெண்டிரும் நல்லநீர் நிலையில் விளையாட்டுக்கு அமைந்த காட்சியானது, கங்கையைநீண்ட சடையிலே தரித்த சிவபெருமானை நிகர்த்த சிறந்த துருவாச முனிவன் அந்நாளில் கோபிக்க, அமரர்களுக்குத் தலைவனாகிய இந்திரனின் செல்வம் தேவமகளிர் கூட்டத்தோடு அலைகள் பொங்குகின்ற திருப்பாற்கடலில் புகுந்த காட்சியை ஒத்தது.

விளக்கம்: பண்ணை: விளையாட்டு. "மன்றலம் தோழிமாருள் வனத்திடைப் பண்ணைஆட" என்பது சிந்தாமணி. கங்கைவார் சடையோன் என்ற சொற்றொடர் 'கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்' என்ற அப்பர் தேவாரத்தை நினைப்பூட்டுகிறது. கனல: கோபிக்க. துருவாசர் சினத்தால் இந்திரன் தன் செல்வத்தோடும், அரமகளிரோடும் பாற்கடலில் வீழ்ந்த கதை இங்கு சொல்லப்படுகின்றது.

(பால. நீர் விளையாட்டுப் படலம். மகளிரும், மைந்தரும் நீர்நிலைகளில் புகுதல்)

ஈறுஇலான் கயிலை

14 ஆறுஎலாம் கங்கையே
ஆய; ஆழிதாம்
கூறுபாற் கடலையே
ஒத்த; குன்றுஎலாம்

ஈறுஇலான் கயிலையே
இயைந்த; என்இனி
வேறுநாம் புகல்வது
நிலவின் வீக்கமே.

பொழிப்பு: உலகிலுள்ள ஆறுகள் அனைத்தும் கங்கையாகவே ஆகிவிட்டன; கடல்கள் முழுதும் புகழ்ந்து ஓதப்பட்ட பாற்கடலையே போன்றன; மலைகளெல்லாம் முடிவில்லாதோனாகிய சிவபெருமானின் கயிலைமலையை நிகர்த்தன; இனி நிலவின் பெருக்கத்தைப் பற்றிச் சொல்ல வேறு என்ன இருக்கிறது?

விளக்கம்: நிலவின் வெண்மையால் ஆறுகள் அனைத்தும், கடல்கள் முழுதும், மலைகள் எல்லாம், ஒரே வெண்மையாகக் காட்சி தருவது வெண்ணீர் கொண்ட கங்கை நதியையும், வெண்மை நிறம் கொண்ட பாற்கடலையும், கயிலையாகிய வெள்ளிமலையையும் ஒத்துத்தோன்றுகின்றன. சிவபெருமானை "ஈறிலான்" என்று பெருமிதமாக இயம்பிமகிழ்வது சிந்திக்கத்தக்கது. "ஈறிலாதவன் ஈசன்ஒருவனே" என்ற தேவாரம் இங்கு கம்பன் மனத்தில் தோன்றியிருத்தல் வேண்டும்.

(பால. உண்டாட்டுப்படலம்: நிலவின் பெருக்கம்)

தழலையே அனையவன்

15 இன்னவாறு, இருவரும்
இனியவாறு ஏகஅத்
துன்னுமா நகரின்நின்று
எதிர்வரத் துன்னினான்;
தன்னையே அனையவன்,
தழலையே அனையவன்
பொன்னின்வார் சிலைஇறப்
புயம் நிமிர்த்து அருளினான்.

பொழிப்பு: இவ்விதமாக இரண்டு மன்னர்களும் இனியமுறையில் செல்ல அந்த மக்கள் நெருங்கிய சிறந்த மிதிலையினின்றும் தன் தந்தையாகிய தயரதனை எதிர்கொண்டு அழைத்துவர நெருங்கினான், தன்னையே ஒத்தவனும், நெருப்பையே நிகர்த்த சிவபெருமானின் பொன் மலையாகிய மேருவை ஒத்த நீண்டவில் ஒடியுமாறு தோள் நிமிர்த்து அருளியவனும் ஆன இராமபிரான்.

விளக்கம்: துன்னுதல்: நெருங்குதல். இராமன் தன்னையே அனையவன் என்பதை, "தன் துணை ஒருவரும் தன்னின் வேறிலான்", "கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவன்" என்பன ஆதிச்சொற்றொடர்களால் வேறு இடங்களில் கூறுவர். இற: ஒடிய. "எடுத்தது கண்டனர்; இற்றது கேட்டார்" என்றார் வில்ஒடித்த இடத்தில்.

(பால. எதிர்கொள்படலம். இராமன் தயரதனை எதிர்கொள்ளல்)

கற்றைவார் சடையினன்

16 கற்றைவார் சடையினன்
 கைக்கொளும் தனுஇற,
கொற்றநீள் புயம்நிமிர்த்து
 அருளும் அக் குரிசில்,பின்
பெற்றதா யரையும் அப்
 பெற்றியின் தொழுதுஎழுந்து,
உற்றபோது, அவர்மனத்து
 உவகை,யார் உரைசெய்வார்.

பொழிப்பு: அடர்ந்த நீண்ட சடையையுடைய சிவபெருமான் கைக்கொள்ளும் வில் ஒடியுமாறு நீண்ட வெற்றித் தோள்களை உயர்த்தி அருளிநிற்கும் அந்தப் பெருமையிற் சிறந்த இராமபிரான், பிறகு பெற்ற தாயர் மூவரையும், தந்தையை வணங்கிய முறைப்படியே வணங்கி எழுந்து, அவர் பக்கலில் அடைந்தபோது, அத்தாய்மார்களின் உள்ளத்துத் தோன்றிய மகிழ்ச்சியை யாரே எடுத்து இயம்பவல்லார்?

விளக்கம்: இராமன் தந்தையை வணங்கிய பின் அவ்வண்ணமே முறைப்படி தாயரையும் வணங்கினான். "வெள்ளமணைத்தவன் வில்லை" ஒடித்த மைந்தனின் தோளாற்றல்கண்டு தாயர் உவகை பூத்தார். "கற்றைவார் சடையினன்" என்ற சொற்றொடரை "கற்றைவார் சடையான் நெற்றிக் கண்ணினைச் சிறிதே காட்ட" என்ற பாடலில் பரஞ்சோதி முனிவர் கையாளுகின்றார்.

(பால. எதிர்கொள் படலம். இராமன் தாயரை வணங்கல்)

சடிலத்தான் சிலே இறுத்த வீரன்

17 வெள்ளத்தின் சடிலத் தான்தன்
வெஞ்சிலே இறுத்த வீரன்,
தள்ளத்தன் ஆவி சோர,
தனிப்பெரும் பெண்மை தன்னே
அள்ளிக்கொண்டு அகன்ற காளே
அல்லன்கொல்? ஆம்கொல்? என்பாள்
உள்ளத்தின் ஊசலாடும்
குழைநிழல் உமிழ இட்டார்.

பொழிப்பு: கங்கையை ஏற்ற சடையையுடைய சிவபெருமானின் வன்மை வாய்ந்த வில்லே ஒடித்த வீரன் தன்உயிர் தள்ளாடி, சோர, தன் ஒப்பற்ற பெரிய பெண்மைக் குணத்தை வாரிக்கொண்டு சென்ற காளே போன்றவன் அல்லனே? அவனேதானே? என நினேவாளது மனத்தைப் போல ஊசலாடுகின்ற குழைகளே ஒளியைக் கக்குமாறு காதில் தொங்க விட்டார்கள்.

விளக்கம்: மிதிலேயில் கண்டவுடன் உள்ளத்தை ஒருவன் அள்ளிக் கொண்டுவிட்டான் ஆதலின் வில் ஒடித்தவன் அவனே அல்லனே என ஊசலாடிய சீதையின் உள்ளத்தைப் போன்றது குழை என்று கூறுவார். சடிலம்: சடை. குழை: காதணி.

(பால. கோலம் காண்படலம்: சீதையை அணிசெய்தல்)

கணிச்சி வானவன்

18 கார்விடக் களன்உடைக்
கணிச்சி, வானவன்,
வார்சடைப் புடையின்,ஓர்
மதிமி லேச்ச,தான்

சூர்சுடர்க் குலம்எலாம்
சூடி னென்ன,
வீரபட் டத்தொடு
திலகம் மின்னவே;

பொழிப்பு: கரிய நஞ்சைக் கழுத்திலே வைத்துக்கொண்ட மழுஏந்திய பெருமான் தன் நீண்ட சடையின் ஓர் புறத்தே பிறைத்திங்களைச் சூடி விளங்க, இராமபிரானாகிய தான் தெய்வத்தன்மைபொருந்திய நாள், கோள், மீன் ஆகிய ஒளிக்கூட்டங்களை எல்லாம் ஒருங்கு அணிந்தவனைப் போல, வீரபட்டமும், நெற்றியில் திலதமும் ஒளிவிட்டு விளங்க.

விளக்கம்: திங்களைச் சூடிய சிவபெருமான் விளக்கத்தினும், இராமன் பேரொளி பெற்றுத் தோன்றினமையால், விண்ணகத்தில் தோன்றிய உடுக் கூட்டங்கள் எல்லாவற்றையும் சூடியவன் போலத் தோன்றினன் என்பது கருத்து. வீரபட்டம்: வீரர்கள் நெற்றியில் அணியும் மணிகளால் ஆன ஓர் அணி. சூர்: தெய்வத்தன்மை.

(பால. கடிமணப்படலம்: இராமன் வீரபட்டம் சூடல்)

இளம் சந்திர மௌலி

19 இந்திரன் சசியொடும்
எய்தி னன்;இளம்
சந்திர மௌலியும்
தைய லாளொடும்

வந்தனன்; மலர்அயன்
வாக்கி னளுடன்
அந்தரம் புகுந்தனன்;
அழகு காணவே.

பொழிப்பு : தேவேந்திரன். இந்திராணியோடும் எய்தினன்; இளந்திங்களைச் சடையில் சூடிய சிவபெருமான் உமையவளுடன் வந்து சேர்ந்தான்; தாமரையில் உறையும் பிரமன் நாமகளுடன் புகுந்தான்; வானவெளியிலே, திருமணக் கோலத்தைக் காண்பதற்காக.

விளக்கம் : சசி: இந்திராணி. இந்திரனும், சிவனும், பிரமனும் இராமன் சீதை திருமண அழகு காண மனைவிமார்களுடன் வந்தனர். 'சந்திர மௌலியும் தையலாளுடன் அருட்கருணைதாஎய திருவுள்ளம் உடையதவவல்லியுடன்' வந்தனன் என்பது, 'வான்' ஆறுவந்தடைந்தார் மதிநாறும் சடைதாழ' என்ற சேக்கிழார் பாடலை நினைவுறுத்துகின்றது.

(பால. கடிமணப்படலம். மணம் காண அமரர் வரல்)

ஊழிக்கடை முடிவில்தனி உமை கேள்வன்

20 பாழிப்புயம் உயர்திக்கிடை
அடைய,புடை படர்அச்-
-சூழிச்சடை முடிவிண்தொட,
அயல்வெண்மதி தோற்ற,
ஆழிப்புனல், எரி,கால்,நிலம்,
ஆகாயமும், அழியும்
ஊழிக்கடை முடிவில்,தனி
உமை கேள்வனை ஒப்பான்.

பொழிப்பு: வலிய தோள்கள் உயர்ந்த திக்குகளை எட்ட, பக்கங்களில் பரவிச் சென்ற அந்தச் சடைமுடியின் உச்சி, வானத்தைத் தீண்ட, வெண்மையான சந்திரன் அணித்தே தோன்ற, கடல்நீரும், நெருப்பும், காற்றும், மண்ணும், விண்ணும் அழிந்து ஒழியக் கூடிய ஊழிக்காலத்தின் இறுதியில் தனித்து நிற்கும் உமையாள் கொழுநனாகிய சிவபெருமானை நிகர்ப்பான்.

விளக்கம்: பாழி: வன்மை. சூழி: உச்சி. எரி: தீ. கால்: காற்று. ஊழிக்காலம்: கடல் பொங்கி உலகம்எல்லாம் நிலைகுலைந்து அழியும் நாள். அந்நாளில் சிவபெருமான் ஒருவனே அழியாது தனித்து நிற்பான் என்பது கருத்து' 'ஊழிமுதல்வனாய் நின்ற ஒருவனை' என்பது திருவாசகம்.

(பால. பரசுராமப்படலம். பரசுராமனின் சீற்றத் தோற்றம்)

பிஞ்ஞகன் பெருவில்

21 மற்றுஅ வன்சொன்ன வாசகம்
கேட்டலும், மகனைப்
பெற்ற அன்றினும் பிஞ்ஞகன்
பிடித்தஅப் பெருவில்
இற்ற அன்றினும், எறிமழு
வாளவன், இழுக்கம்
உற்ற அன்றினும், பெரியதுஓர்
உவகையன் ஆனான்.

பொழிப்பு: அந்த வசிட்ட முனிவன் சொன்ன மொழியைக் கேட்டவுடன், இராமனை மகனாகப்பெற்ற அன்று முகிழ்த்த மகிழ்ச்சியை விடவும், சிவபெருமான் பிடித்த அப்பெரிய வில்லை இராமன் ஒடித்த அன்று உண்டான களிப்பைக் காட்டிலும், வீசுகின்ற மழுஎன்னும் படையையுடைய பரசுராமன், தன் மகனுக்குத் தோற்ற அன்று கண்ட மகிழ்ச்சியைக் காட்டிலும் பெரிய ஒப்பற்ற உவகையுடையவனானான். (தயரதன்.)

விளக்கம்: மற்று: அசை. இராமனின் சிறப்பை இயம்பி அவனுக்கு முடிசூட்டவேண்டும் என்று வசிட்டன் சொன்னவுடன், மகனைப் பெற்ற மகிழ்ச்சியினும், சிவன் வில்லை ஒடித்த சிறப்பைக்கேட்ட மகிழ்ச்சியினும், ஊழித்தீ போல் கொதித்துவந்த பரசுராமன் மகனுக்குத் தோற்றதைக் கண்ட மகிழ்ச்சியினும் பெருமகிழ்ச்சி எய்தினான் தயரதன். "ஈன்றபொழுதிற் பெரிது உவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்", "ஈன்றஞான்றினும் பெரிது உவந்தனளே" என்ற அறவுரைகள் ஈண்டுச் சிந்திக்கத்தக்கன.

(அயோத்தி. மந்திரப்படலம் - தயரதன் மகிழ்ச்சி)

வனிதை ஓர் கூறினன்

22 துனிஅறு செம்மணித்
தூணம், நீறுதோய்
வனிதைஓர் கூறினன்
வடிவு காட்டின;

புனை துகில் உறைதொறும்
பொதிந்து தோன்றின ;
பனிபொதி கதிர்எனப்
பவளத் தூண்களே.

பொழிப்பு: அழகு செய்யப்பெற்ற, வெண்நிற உறைகளால் மூடப்பட்ட, குற்றமற்ற சிவப்பு மணிகளால் ஆகிய தூண்கள், மாதோர் பாகனாகிய சிவபிரானின் வெண்ணீறணிந்த மேனியைக் காட்டின; அங்ஙனமே வெள் உறைகளால் மூடப்பெற்ற பவளத்தூண்கள் பனியால் மூடப்பெற்ற ஆதவன் வடிவுகாட்டின.

விளக்கம்: புனைதுகில் உறை தொறும் பொதிந்து என்பதை முதலாவதாக எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் அச்சொற்றொடர் இடை நிலை விளக்காய்ச் செம்மணித்தூணுக்கும்,, பவளத்தூணுக்கும் பொருந்தி நிற்கின்றது. பவளத்தைவிடச் சிவப்பு ஒளிமிக்கது. கதிரவனை விடச் சிவன் ஒளிமிக்கு உடையான் என்பதைக் காட்டக் கதிரவனுக்குப் பவளமும், சிவனுக்குச் செம்மணியும் உவமை கூறப்பெற்றன. "மற்றவர் அறியா மாணிக்க மலையை" என்றார் திருவிசைப்பா ஆசிரியர்.

(அயோத்தி. மந்தரை சூழ்ச்சிப்படலம் - அலங்கரித்ததூண்கள்)

தேவ தேவர் வில் ஒடித்த சேவகன்

23 மூவர் ஆய்,முதல் ஆகி, மூலம்அது
ஆகி, ஞாலமும் ஆகும்அத்
தேவ தேவர் பிடித்த போர்வில்
ஒடித்த சேவகன், சேண்நிலம்
காவல் மாமுடி சூடு பேர்எழில்
காண லாம்எனும் ஆசைகூர்
பாவை மார்முகம் என்ன, முன்னம்
மலர்ந்த ; பங்கய ராசியே.

பொழிப்பு: அரன், அரி, அயன் என்னும் மூவராகி, அம்மூவருள்ளும் முதல்வனாகி, அம்முதல்வனுக்கும் மூலப் பொருளாகி, உயிர்கள் அனைத்தும் உறைகின்ற உலகமும் ஆய அந்தத் தேவதேவனாகிய சிவபெருமான் தாங்கிய போர்வில்லை ஒடித்த வீரனாகிய இராமபிரான், பரந்தநிலத்தைக் காப்பதற்குச் செய்கின்ற சிறந்த, முடிசூடும் பேரழகைக் காணலாம் என்ற ஆசைமிக்க மங்கைமார் வதனம் போல, முன்னே மலர்ந்து தோன்றின; தாமரை மலர்களின் ஈட்டம்.

விளக்கம் : "முதலாகி, மூலம் அது ஆகி, ஞாலமும் ஆகும் அத்தேவதேவர்" என்ற சொற்ருெடர் அப்படியே சிவனைக் குறிக்கும். காலைச் சூரியன் தோன்றியவுடன் மலர்ந்த தாமரைகள் "ஆசைகூர் பாவைமார் முகம் என்ன"த் தோன்றின.

(அயோத்தி. கைகேயி சூழ்வினைப் படலம்: புலர் பொழுதில் தாமரை மலர்தல்)

முற்ரு மதியம் மிலைந்தான்

24 நல்தா தையும்நீ! தனிநா-
-யகன்நீ ! வயிற்றில்
பெற்ருயும் நீயே! பிறர்இல்லை ;
பிறர்க்கு நல்கக்
கற்ருய்! இது காணுதி இன்றுஎனக்
கைம்ம றித்தான் ;
முற்ரு மதியம் மிலைந்தான்
முனிந்தானை அன்னுன்.

பொழிப்பு : இளம் திங்கள் சூடிய உருத்திர மூர்த்தி சினந்தாற் போன்று கோபித்து எழுந்த இலக்குவன், (இராமனைப் பார்த்து) பிறருக்குக் கொடுக்கக் கற்றவனே! இன்று நான் சொல்லுகின்ற இதைக் காண்பாயாக! எனக்கு நல்ல தந்தையும் நீ; இணையற்ற தெய்வமும் நீ; என்னை வயிற்றில் சுமந்து பெற்ற அன்னையும்நீயே; வேறு யாரும் இல்லை எனக் கையை அசைத்தான்.

விளக்கம் : "தன் உடை உரிமைச் செல்வம் தம்பிக்குத் தகவின் நல்கிய"வனுதலின், 'பிறர்க்கு நல்கக் கற்ருய்' என்றும், தயரதனை நல்ல தாதை என்று கருதினுனல்லன் ஆதலின், 'நல்தாதையும்நீ' எனவும் தன்னை வயிறுவாய்த்துப் பெற்றவள் கைகேயி என்பதை மறுக்க 'வயிற்றில், பெற்ருயும் நீ' என்றும் இலக்குவன் இராமனைப் பார்த்துப் பேசுவதோடு; பிறர் இல்லை என்றும் அறுதியிடுகின்ருன்.

(அயோத்தி. நகர் நீங்கு படலம் : இலக்குவன் சீற்றம்)

பொன்மான் உரியான்

25 அன்னுன்தனே ஐயனும், ஆதியொடு
அந்தம் என்று
தன்னுலும் அளப்பஅரும் தானும்,தன்
பாங்கர் நின்ற
பொன்மான் உரியானும், தழீஇனனப்
புல்லி, பின்னே
சொல்மாண்புடை அன்னே சுமித்திரை
கோயில் புக்கான்.

பொழிப்பு : முதல், முடிவு என்று தன்னுலேயே தன் சிறப்பை அளந்து காணமுடியாத, திருமாலாகிய தானும், பொன்மான் உரியானுகிய சிவனும் தழுவியதைப் போல, ஐயனுகிய இராமன் பக்கலிலே நின்ற இலக்குவனுகிய அன்னுனே அணைத்துப் பின்னர் சொல்மாட்சி உடைய தாயாகிய சுமித்திரையின் மாளிகையுள் புகுந்தான்.

விளக்கம் : அன்னுன்: இலக்குவன். ஐயன்: இராமன். பாங்கர்: பக்கம். பொன்மான்உரியான்: சிவபெருமான். திருமாலும் சிவனும் தழீஇய வடிவம் சங்கரநாராயண வடிவம்.

"பொன்திகழு மேனிப் புரிசடைஅம் புண்ணியனும்,
நின்றுஉலகம் தாய நெடுமாலும்—என்றும்
இருவர்அங்கத் தால்திரிவ ரேலும், ஒருவன்
ஒருவன்அங்கத்து என்றும் உளன்"

என்று அருளினுர் பொய்கையாழ்வார்.

(அயோத்தி. நகர் நீங்கு படலம்: இராம இலக்குவர் சுமித்திரை கோயில் புகல்)

திங்கள் சூடிய செல்வன்

26 வெங்கண் நாகக்
கரத்தினன், வெண்நிறக்
கங்கை வார்சடைக்
கற்றையன், கற்புடை

மங்கை காண நின்று
ஆடுகின் றான்,வகிர்த்
திங்கள் சூடிய
செல்வனின் தோன்றினான்.

பொழிப்பு: கொடுமையான கண்கள் கொண்ட யானையின் துதிக்கை போலும் கைகளையுடையவனும், வெண்ணிறமுடைய கங்கை ஒழுகும், சடைத் தொகுதியுடையவனும், கற்புடை மங்கை சீதை காணுமாறு நின்று நீராடுகிறவனுமாகிய இராமபிரான், துண்டப்பிறை அணிந்த செல்வனாகிய சிவபெருமான் போல் தோன்றினான்.

விளக்கம்: இப்பாடல் சிவனுக்கும் இராமனுக்கும் உவமை உரைக்கின்றது. சிவன் கொடிய கண்களையுடைய பாம்பு அணிந்த கையையுடையவன். வெண்ணிறமான கங்கையை நீண்ட சடைத் தொகுதியிலே வைத்திருப்பவன் சிவன். இங்கே கற்புடைய மங்கை சிவகாமி. உமையவள் காண நடனம் ஆடுகின்றான் சிவன். சீதை காண நீராடுகின்றான் இராமன். நாகம்: 1. யானை. நாகம்: 2. பாம்பு. கரம்: கை. ஆடுதல்: 1 நடனம் ஆடுதல். ஆடுதல்: 2 நீராடுதல். வகிர்த்திங்கள்: பிறைச்சந்திரன். 'கரிக்கரம் பொருகைத்தலத்து' என இராமன் கையை யானைக்கைக்கு இணையாகப் பிறிதோரிடத்தும் கூறுவார்.

(அயோத்தி. கங்கைப் படலம்: இராமன் கங்கை ஆடிய தோற்றம்)

தேவ தேவன்

27 தேவ தேவன்
செறிசடைக் கற்றையுள்
கோவை மாலை
எருக்கொடு கொன்றையின்
பூவும் நாறலள்;
பூங்குழல் கற்றையின்
நாவி நாள்மலர்
கங்கையும் நாறினாள்.

பொழிப்பு: கங்கா தேவியும், தேவதேவனாகிய சிவபெருமானுடைய அடர்த்தியான சடைத் தொகுதியுள் அலங்கரித்துக் கொண்ட, கோவையான மாலையில் பொருந்திய எருக்கம் மலரும், கொன்றைப்பூவும் தருகின்ற நறுமணம் வீசினாள் அல்லள்; (சீதாதேவியின்) அழகிய கூந்தல் தொகுதியின் கத்தூரி நல் மணமும், அன்றலர்ந்த பரிமளமுமே கமழ்ந்தாள்.

விளக்கம்: கங்கை சிவபெருமான் சடையினின்றும் பெருகி வருதலால், அவர் அணிந்த எருக்கு, கொன்றை முதலியவற்றின் மணம் கமழ்ந்தாள் முன்பு. இன்று சீதை தன்னுள் நீராடப் பெற்றமையால் அவள் கூந்தலில் அணிந்த கத்தூரிக்குழம்பு, மலர் ஆகியவற்றின் மணம் கமழ்கின்றாள்.

(அயோத்தி. கங்கைப்படலம். கங்கை, சீதை கூந்தலின் நறுமணம் நாறுதல்)

உலகினை அழிக்கும் ஈசன்

28 ஈசன்இவ் உலகினை
அழிக்கும் நாள்எழும்
ஓசையின் நிமிர்ந்துளது,
ஒல்லென் பேர்ஒலி,

காசையின் கரியவற்
காண மூண்டுஎழும்
ஆசையின் நிமிர்ந்ததுஅவ்
அனிக ராசியே.

பொழிப்பு: உருத்திரமூர்த்தி இந்த உலகை ஒழிக்கின்ற காலத்துத் தோன்றும் ஓசையை விட படை எழுச்சியின் 'ஒல்' என்ற பெரிய ஓசையானது ஓங்கி இருந்தது; காயாம் பூவை ஒத்த கருநிறமுடைய இராமனைக் காணவேண்டும் என்று மூண்டு தோன்றும் ஆசையை விட அந்தச் சேனையின் கூட்டம் பெருகி ஓங்கியது.

விளக்கம்: உலகு அழியும் ஊழிக்காலத்துப் பேரொலி தோன்றும். அதனினும் மேம்பட்ட ஒலியினைச் சேனைக்கடல் எழுப்பியது. காசை: காயாமரம். கரிய நிறத்துக்குக் காயாம்பூ. ஒப்பு. கரியவன்: இராமன். அனிகம்: தானை இராசி: கூட்டம்.

(அயோத்தி. ஆறுசெல்படலம். சேனையின் எழுச்சி)

சிவன் சேர் வெள்ளிக் குன்று

29 நன்றெனப் புளிஞர் வேந்தன்
நண்ணினன் தமரை, நாவாய்
சென்றுநீர் தருதிர்' என்ன,
வந்தன ; சிவன்சேர் வெள்ளிக்
குன்றென, குனிக்கும் அம்பொன்
குவடுஎன, குபேரன் மானம்
ஒன்றென, நாணிப் பல்வேறு
உருவுகொண் டனைய ஆன.

பொழிப்பு: வேட்டுவர் மன்னனான குகன், தன் உறவினரை நெருங்கி 'நன்று, நீவிர் சென்று நாவாய் கொணர்மின்' என்று கூற, சிவபெருமான் உறைகின்ற வெள்ளி மலையும், அப்பெருமான் வளைத்த அழகிய தங்க மலையும், குபேரனுடைய புட்பகவிமானமும் தனித்தனியாக ஒவ்வொன்று என்று சொல்லப்படுதற்கு வெட்கிப் பலவேறு உருவு கொண்டன போன்ற நாவாய்கள் பல வந்தன.

விளக்கம்: சிவன் என்பதைக் குனிக்கும் அம்பொன்குவடு என்பதனோடும் கூட்டுக. மானம்: விமானம் என்பதன் முதல் குறை. புளிஞர் வேந்தன்: வேட்டுவ மன்னன். தமர்: உறவினர். நாவாய்: படகு. குவடு: சிகரம். இங்கு மலையை உணர்த்திற்று. வெள்ளிமலையும், மேருமலையும், குபேரன் விமானமும் இதுவரை ஒவ்வொன்றாக இருந்தன; இப்போது அவற்றை ஒத்த, பல படகுகளின் தோற்றத்தால் அவை பல ஆயின.

(அயோத்தி, குகப்படலம். குகன்கட்டளையால் நாவாய்கள் பலவருதல்)

இந்து மோலி அன்னான்

30 வந்த மாதவத்
தோனைஅம் மைந்தனும்
'தந்தை யாம்'எனத்
தாழ்ந்து வணங்கினான் ;

இந்து மோலிஅன்-
-னுனும் இரங்கினுன்,
அந்தம் இல்நலத்து
ஆசிகள் கூறினுன்.

பொழிப்பு : (தன்னை எதிர்கொண்டு) வந்த சிறந்த தவம் உடைய பரத்துவாசமுனிவனை அந்த மைந்தனுகிய பரதனும், இவன் தந்தையே என்று எண்ணிக் கீழே விழ்ந்து வணங்கினுன். திங்களைச் சடையில் தரித்த சிவபெருமானை ஒத்த அந்தப் பரத்துவாச முனிவனும் அன்பு காட்டியவனுய் முடிவில்லாத நலன் தரத்தக்க வாழ்த்துரை வழங்கினுன்.

விளக்கம் : சடைமுடிதரித்தல், தவஒழுக்கம், காமனைக் காய்தல் முதலியவற்றுல் பரத்துவாச முனிவன் சிவனை ஒக்கின்றுன்.

(அயோத்தி. திருவடி சூட்டு படலம். பரத்துவாசன் வாழ்த்து)

வெள்ளி மலை அண்ணல்

31 செம்மா மலராள்
நிகர்தே வியொடும்
மும்மா மதவெண்
நிறமுன் உயர்தாள்
வெம்மா மிசையான்,
விரிவெள் ளிவிளங்கு
அம்மா மலைஅண் -
- ணலையே அனையான்.

பொழிப்பு : சிவந்த பெரிய தாமரை மலரில் இருக்கும் திருமகளை நிகர்த்த இந்திராணியுடன், மிகுந்த மூன்று மதம் பொழியும் வெண்மையான நிறம் உடைய உயர்ந்துள்ள முன்னங்கால்கள் கொண்ட வெம்மை மிக்க ஐராவதம் என்ற யானையின் மீது தோன்றுகின்ற தேவேந்திரன், ஒளிவிட்டு விளங்கித் தோன்றுகின்ற அந்த வெள்ளி மலையில் விற்றிருக்கும் சிவபெருமானை ஒப்பான்.

விளக்கம் : வெள்ளை நிறம் உடைய யானையின்மேல் சசி தேவியோடு விற்றிருக்கின்ற இந்திரன், வெள்ளி மலையில் அம்பிகையோடு கூடியிருக்கின்ற சிவபெருமான் போல் தோற்றம் அளிக்கின்றுன்.

(ஆரணிய. சரபங்கன் பிறப்பு நீங்குபடலம். சரபங்கனை அழைக்க வந்த இந்திரன் பெருமை)

முசுஅரவு சூடும் முதல் ஈசன்

32 முசுஅரவு சூடுமுத
லோன்உரையின் 'மூவா
மாசுஇல்தவ! ஏகு'என
வடாதுதிசை மேல்நாள்
நீசம்உற, வானின்நெடு
மாமலயம் நேரா,
ஈசன்நிக ராய்உலகு
சீர்பெற இருந்தான்.

பொழிப்பு: மொய்க்கின்ற பாம்புகளை அணிந்த முதற் கடவுளாகிய சிவபெருமான், 'மூவாமை உடைய குற்றம் அற்ற தவமுனிவ! ஏகு' என இயம்பியவாறு வடக்குத்திசை அந்த நாளில் தாழ்வு அடைய,வான் உறநீண்ட பெரிய பொதியமலை (இமயமலையை) ஒப்ப, சிவபிரானுக்கு நிகராகப் பொதிகையில் உலகு சிறப்புப்பெற இருந்தான் (அகத்தியன்)

விளக்கம்: முசுதல்: மொய்த்தல். நீசம் உற: தாழ்ச்சி அடைய. இமயமலையில் சிவபெருமான் பார்வதியை மணந்த காலத்து, எல்லோரும் மணக்கோலம் காண அங்கு கூடிவிட்ட காரணத்தால், தென்திசை வெறிச்சென்று மேல் நோக்கி எழுந்துவிட அதைச் சமநிலைப்படுத்தச் சிவபெருமான் அகத்தியனைப் பொதிகைமலைக்கு அனுப்பினுன் என்பதும், அகத்தியன் பொதிகையில் அமர்ந்து தென்னுட்டைச் சிறப்பித்தான் என்பதும் புராணவரலாறு. அகத்தியன் தவ ஒழுக்கத்தாலும் தமிழ் தந்தமையாலும், சிவனுக்கு நிகராகச் சிறப்பிக்கப் பெறுகின்ருன்.

(ஆரணிய. அகத்தியப் படலம். அகத்தியன் பெருமை)

சுடர்க் கடவுள் தந்த தமிழ்

33 உழக்கும்மறை நாலினும்,
உயர்ந்துஉலகம் ஓதும்
வழக்கினும், மதிக்கவியி-
-னும்,மரபின் நாடி,

நிழல்பொலி கணிச்சிமணி
நெற்றிஉமிழ் செங்கண்,
தழல்புரை சுடர்க்கடவுள்
தந்ததமிழ், தந்தான்.

பொழிப்பு: வருந்திப் பயிலத்தக்க வேதங்கள் நான்கினையும், சிறந்து உலகம் பேசுகின்ற வழக்கினையும், அறிவுதரும் கவியினையும் முறையாக ஆய்ந்து, ஒளி வீசும் மழு ஆயுதத்தையும், அழகிய நெற்றியில் தோன்றும் சிவந்த நெருப்பைக்கக்கும் கண்ணையும் உடைய தீயை ஒத்த செம்மேனி கொண்ட சிவபெருமான் தோற்றுவித்த தமிழை, உலகுக்கு அளித்தான். (அகத்தியன்)

விளக்கம்: அகத்தியன் வருந்திப் படிக்கத்தக்க மறைநான்கையும் கற்றுத்தேர்ந்தான்; அதில் உயர்ந்தான். தமிழ் உலக வழக்கையும், மதி நுட்பம் உடையார் கவியையும் முறைப்பட ஆய்ந்து, சிவபெருமான் தந்த தமிழை வளப்படுத்தினுன் . கணிச்சி: மழு.

(ஆரணிய. அகத்தியப்படலம். அகத்தியன்பெருமை)

துண்ட மதி வைத்தவன்

34 'தண்டகவ னத்துஉறைதி'
என்றுஉரைத ரக்கொண்டு
உண்டுவரவு, இத்திசை
எனப்பெரிது உவந்தேன்;
எண்தகு குணத்தினே!
எனக்கொடுஉயர் சென்னித்
துண்டமதி வைத்தவனை
ஒத்தமுனி சொல்லும்.

பொழிப்பு: உயர்ந்த தலையில் இளந்திங்களை அணிந்த சிவ பெருமானை ஒத்த அகத்திய முனிவன், எண்ணத்தக்க குணங்களை உடையவனே! தண்டகவனம் என்னும் காட்டில் நீ தங்கியிருக்கின்ருய் என்று சொல்லக்கேட்டு, அறிந்து கொண்டு இப்பக்கம் நின்வருகை உண்டாகலாம் என எண்ணி, மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்: என (இராமனைப் பார்த்து) ச் சொல்லுவான்.

விளக்கம்: எண்தகுகுணம்: மதிக்கத்தக்க குணம். அகத்தியன் சிவபெருமானை நிகர்த்தவன். 'ஈசன் நிகராய் உலகு சீர்பெற இருந்தான்' எனப் பிறிதோர் இடத்தும் பேசுவார்.

(ஆரணிய. அகத்தியப்படலம். அகத்தியன் இராமனைவரவேற்றல்)

முப்புரம் எரித்த தனி மொய்க்கணை

35 இப்புவனம் முற்றும்ஒரு
தட்டின்இடை இட்டால்,
ஒப்புவரவு இற்றென,
உரைப்பரிய வாளும்,
வெப்புஉருவு பெற்றஅரன்,
மேருவரை வில்லா,
முப்புரம் எரித்ததனி
மொய்க்கணையும், நல்கா.

பொழிப்பு: இவ்வுலகம் முழுதையும் ஒரு தராசுத்தட்டில் வைத்து, மற்றொருதட்டில் இவ்வாளை இட்டால் உலகம் முழுதும் இவ்வாளுக்குச் சமமாகவரும் தகுதி இன்று எனச் சொல்லத்தக்க வாளாயுதத்தையும், வெம்மை உடைய எரிபோல் மேனிப்பிரான், மேருமலையை வில்லாகக் கொண்டு, முப்புரங்களை எரித்த ஒப்பற்ற வலிமை வாய்ந்த அம்பையும் கொடுத்து.

விளக்கம்: இப்பாடல் குளகமாகப் பின்தொடர்ந்து செல்கின்றது. ஈடில்லாத வாளையும், விரிசடைக்கடவுள் திரிபுரத்தை எரித்த மொய்க் கணையையும் அகத்தியன் இராமனுக்கு நல்கினான். மொய்: வலிமை.

(ஆரணிய. அகத்தியப்படலம்.
இராமனுக்கு அகத்தியன் படைக்கலம் வழங்கல்)

விடைச் சங்கரன்

36 'அங்குஅ ரக்கர்
அவிந்துஒழிந் தார்'எனப்
பொங்குஅ ரத்தம்
விழிவழிப் போந்துஉக,

வெங்க ரப்பெய-
-ரோன்வெகுண் டான்;விடைச்
சங்க ரற்கும்
தடுப்பரும் தன்மையான்.

பொழிப்பு : காளையை வாகனமாகப் பெற்ற அழிப்புக் கடவுளாலும் தடுக்கமுடியாத தன்மை உடையானாகிய கொடிய கரன் என்னும் பெயர் கொண்டவன், 'அவ்விடத்து அரக்கர்கள் மாண்டு ஒழிந்தனர்' எனக் கேட்டு, கண்களினின்றும் இரத்தம் பொங்கி, வெளியே சிந்தக் கோபித்தான்.

விளக்கம் : அங்கே என்பது இராமன் இருந்த இடத்தைச் சுட்டுகின்றது. விழிவழி : கண்களின் வழியே. போந்து : வெளிப்பட்டு. உக : சிந்த. வெம் : கொடிய. விடை : காளை. சங்கரன் : அழிக்கும் கடவுள். அழிக்கும் கடவுளாலேயே தடுத்தற்கு அரிய தன்மையான் என்பது கரனின் பேராற்றலைக் காட்டுகின்றது.

(ஆரணிய. கரன்வதைப்படலம். கரனின் கடும் சினம்)

நாகத் தனி ஒரு வில்லி

37 'நாகத்தனி ஒருவில்லியை,
நளிர்முப்புரர், முன்நாள்,
மாகத்திடை வளைவுற்றனர்
என'வள்ளலை, மதியார்,
ஆகத்துஎழு கனல்கண்வழி
உகஉற்றுஎதிர் அழன்றார்;
மேகத்தினை நிகர்வில்லியை
வளைத்தார்செரு விளைத்தார்.

பொழிப்பு : மேருமலையாகிய ஒப்பற்ற ஒருவில்லை உடைய சிவபெருமானை, அடர்ந்த முப்புரத்துள்ளார், அந்த நாளில், வான வெளியிலே வளைத்துக்கொண்டதைப் போல, வள்ளலாகிய இராமனை மதியாமல், மேகத்தை நிகர்த்த வில்லாளியாகிய அவ்விராமனை, உள்ளத்தே எழுந்த கோப நெருப்பு, கண்வழி கனல நெருங்கி, எதிர்த்து, நின்று சினந்து, வளைத்துக்கொண்டு போர்புரிந்தார். (படைத்தலைவர்.)

விளக்கம் : நாகம்: மலை. ஈண்டு மேரு. நளிர்தல்: அடர்தல். மாகம் : வானம். மேகம் வில்லுக்கும் இராமனுக்கும் பொருந்தும்.

(ஆரணிய. கரன்வதைப்படலம். படைத்தலைவர் இராமனை வளைத்தல்)

முக்கணன்

38 அத்தலைத் தானையன்
அளவில் ஆற்றலன்,
முத்தலைக் குரிசில்,பொன்-
-முடியன்; முக்கணன்
கைத்தலைச் சூலமே
அனைய காட்சியான்;
வைத்தலைப் பகழியால்
மழைசெய் வில்லினன்.

பொழிப்பு : அந்தச் சிறந்த சேனையை உடையவன் (யாரெனில்) எல்லையற்ற வலிமை உடையவனும், பொன்னாலாகிய மகுடத்தை அணிந்தவனும், கூர்மையான நுனியை உடைய அம்புக்கூட்டங்களை மழைபோல் பொழிகின்ற வில்லை உடையவனும் மூன்று கண்படைத்த சிவபெருமானின் கையில் உள்ள சூலாயுதத்தையே ஒத்த தோற்றத்தோடு கூடியவனும் ஆன மூன்று தலைகளையுடைய திரிசிரா என்னும் வீரன் ஆவான்.

விளக்கம் : அ: சுட்டு. தானை : சேனை. வை: கூர்மை. தலை: நுனி. பகழி: அம்பு. திரிசிரா என்பவன் மூன்று தலையை உடையவன்.

(ஆரணிய. கரன்வதைப்படலம். திரிசிராவின் ஆற்றல்)

கறுத்த மணி கண்டர் கடவுள் சிலை

39 செறுத்துஇறுதி யில்புவனி
தீயஎழு தீயின்
மறத்தின்வயி ரத்துஒருவன்
வந்துஅணுகும் முந்தை,

கறுத்தமணி கண்டர்கட-
வுட்சிலை கரத்தால்

இறுத்தவனும், வெங்கணை
தெரிந்தனன். எதிர்ந்தான்.

பொழிப்பு : ஊழிக்காலத்தில், கோபித்து உலகம் அழியத் தோன்றும் தீயைப்போல, வீரத்துடனும், கோபத்துடனும் (கரன்) தனியனாய் வந்து, தன்னை நெருங்கும் முன்னே, கறுத்த எழிற் கண்டத்தை உடைய சிவபெருமானுக்குரிய தெய்வத் தன்மைபொருந்திய வில்லைக்கையால் ஒடித்தவனாகிய இராமபிரான் கொல்லும் அம்புகளை ஆராய்ந்து எடுத்துக்கொண்டு எதிர்ப்பட்டான்.

விளக்கம் : செறுத்து : கோபித்து. இறுதி : ஊழிக்காலம். புவனி : உலகம். தீய : அழிய. மறம்: வீரம். வயிரம் : வெகுளி. ஒருவன்; ஈண்டுக் கரன். முந்தை : முன்னே. வெம்கணை: கொடிய அம்பு. தெரிதல்: ஆராய்ந்து எடுத்தல். ஊழித்தீ கரனுக்கு உவமை. கரன் தன்னை அணுகும் முன்னே போர்க்கோலம் பூண்டு இராமன் எதிர்ந்தான்.

(ஆரணிய. கரன்வதைப் படலம். கரனும் இராமனும் எதிர்ப்படல்)

புலியின் அதள் உடையான்

40 புலியின்அதள் உடையானும், பொன்னுடை
புனைந்தானும், பூவி னானும்

நலியும்வலத் தார்அல்லர்; தேவரின்இங்கு
யாவர்இனி நாட்ட வல்லார்?

மெலியும்இடை, தடிக்கும்முலை, வேய்இளந்தோள்
சேயரிக்கண், வென்றி மாதர்,

வலியநெடும் புலவியினும் வணங்காத
மகுடநிரை வயங்க மன்னோ.

பொழிப்பு : புலித்தோலை உடையாகக் கொண்ட சிவபெருமானும், பொன்னுடை உடுத்திய திருமாலும், பூவின் உறையும் பிரமனும் (ஆகிய மும்மூர்த்திகளும்) (இராவணனை) வருத்தும் வலியுடையார் அல்லர்; (எனவே) ஒழிந்த தேவரில் எவர் அவனை வெல்ல வல்லார்? (அத்தகைய இராவணன்) மெலிந்த இடையையும் பருத்த தனங்களையும் மூங்கில் போன்ற இளந்தோள்களையும், செவ்விய ரேகைகள் படர்ந்த கண்களையும் உடைய வெற்றி கொள்ளும் மாதர்களின் வன்மை வாய்ந்த நீண்ட ஊடற்காலத்தும் வணங்காத முடிவரிசை விளங்க (வீற்றிருந்தான்)

விளக்கம்: அதள்: தோல். வேய்: மூங்கில். புலவி: ஊடல். நிரை: வரிசை. வயங்க: விளங்க. மன், ஓ: அசை. இப்பாடல் குளகம். பல பாடல்களுக்குப் பின்னே முடிகின்றது. இராவணன் வணங்காமுடியோன் என்பதை இப்பாடல் புலப்படுத்துகின்றது. ஊடல் நாளினும் வணங்கமாட்டான் என்பது இங்குக் கூறப்படுகின்றது. 'வணங்குதல் மகளிர் ஊடல் நாளினும் உளதோ' என்ற இரணியன் கூற்று இதனோடு ஒக்கும்.

[ஆரணிய. மாரீசன் வதைப் படலம். இராவணன் கம்பீரத் தோற்றம்]

சந்திர மெளலிபால் தங்குமே

41 'இந்திரன் மேலதோ?
உலகம் ஈன்றபேர்
அந்தணன் மேலதோ?
ஆழி யானதோ?
சந்திர மெளலிபால்
தங்கு மேகொலோ?
அந்தரம் இது'என,
அழல்கின் றார்சிலர்.

பொழிப்பு: இத்தீமை, 'இந்திரனிடத்துச் சேர்வதோ? உலகத்தைப் பெற்ற, பெரியோனான பிரமனிடத்துப் பொருந்துவதோ? சக்கரம் ஏந்திய திருமால் இடத்ததோ? திங்கள் அணிந்த சடையை உடைய சிவன் பாலதோ?' என, சிலர் (அரக்கர்) கொதிக்கின்றாராயினர்.

விளக்கம்: அந்தரம்: தீமை. அழல்தல்: நெருப்பைக் கக்குதல். சூர்ப்பணகை மூக்கும் காதும் போக்க வல்லார் இந்தத் தேவர்களைத் தவிர, பிறர் இல்லை என்பது கருத்து.

(ஆரணிய. மாரீசன்வதைப்படலம். இலங்கைமாந்தர் சீற்றம்)

நெருப்பினுன் பொருப்பினுன்

42 'போர்இலான் புரந்தரன்,
ஏவல் பூண்டனன்;
ஆர்உலாம் நேமியான்,
ஆற்றல் தோற்றுப்போய்

நீரினுன்; நெருப்பினுன்,
பொருப்பி னுன்;இனி
ஆர்கொலாம் ஈது’என,
அறைகின் ருர்சிலர்.

பொழிப்பு: ‘இந்திரன் போரை நிறுத்தியவனுய் [இராவணன் கூறும்] பணி செய்வானுயினன். கூர்மையான சக்கரத்தைக் கையில் தாங்கிய திருமால் (இராவணனுக்கு) வலி இழந்து நீரில் மறைந்து கொண்டான்; தீஏந்திய கையை உடையசிவன் (இராவணனுக்கு அஞ்சி) மலையிடைப்புக்கு ஒளித்துக் கொண்டான்; இனி இது செய்தவர்கள் யாராக இருக்கலாம்?’ என இயம்பினர் சிலர்.

விளக்கம்: புரந்தரன்: இந்திரன்.

நீறு பூசியும் நேமியும் நீங்கினுர்
மாறுகுன்ருெடு வேலை மறைந்துளார்.

என்ற பாடல் பகுதி இதனேடு ஒப்பது.

(ஆரணிய. மாரீசன் வதைப்படலம். இலங்கை மக்கள் கூற்று)

அரன் கயிலை கொண்ட திறல் ஐயன்

43 ‘அங்கையின் அரன்கயிலை
கொண்டதிறல் ஐயன்
தங்கைநிலை இங்குஇதுகொல்?’
என்று,தளர் கின்ருர்;
கொங்கைஇணை செங்கையின்
மலைந்து,குலை கோதை
மங்கையர்கள் நங்கைஅடி
வந்துவிழு கின்ருர்.

பொழிப்பு: அழகு குலைந்த கூந்தலை உடைய சில அரக்கியர்கள், உள்ளங்கையில் சிவபெருமான் கயிலை மலையைத் தூக்கிக்கொண்ட ஆற்றல் வாய்ந்த தலைவன் இராவணனுடைய தங்கையின் நிலைமை இங்கே இத்திறமோ’ என்று சோர்கின்றவர்களாய், இரண்டு தனங்களின் மீதும் சிவந்த கைகளால் அடித்துக்கொண்டு சூர்ப்பணகையின் கால்களில் வந்து வீழ்வாராயினர்.

விளக்கம்: அங்கை: உள்ளங்கை. திறல்: ஆற்றல். ஐயன்: இராவணன். தங்கை, நங்கை இரண்டும் சூர்ப்பணகை.

(ஆரணிய. மாரீசன் வதைப்படலம். சூர்ப்பணகையின் அடியில் மங்கையர் வீழ்தல்)

அரனையும் வெற்றி கொண்ட காமன்

44 கரனையும் மறந்தான்; தங்கை
மூக்கினைக் கடிந்தும் நின்றான்
உரனையும் மறந்தான்; உற்ற
பழியையும் மறந்தான்; வெற்றி
அரனையும் கொண்ட காமன்
அம்பினால், முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான்; கேட்ட
மங்கையை மறந்தி லாதான்.

பொழிப்பு : சிவபெருமானையும் வெற்றி கொண்ட மன்மதனுடைய வாளிகளால் தாக்கப்பட்டு, (சூர்ப்பணகை) சொல்லக் கேட்டு அறிந்த சீதையை மறவாது, உள்ளத்தே வைத்த இராவணன், கரன் இறந்ததனையும் மறந்துவிட்டான்; தன் தங்கை சூர்ப்பணகையின் மூக்கை அறுத்தும் தன் தோள் நோக்கி நின்ற வீரன் ஆற்றலையும் மறந்தான்; அதனால் தனக்கு வந்தடைந்த வசையையும் மறந்தான்; தான் முன்பு பெற்ற பெருமையையும் மறந்தான்.

விளக்கம் : கடிந்து: போக்கி. உரன்: வலி. வரன்: பெருமை. தங்கை கூறக்கேட்டதும் சீதை மீது எழுந்த காமத்தால் கரன் உயிர் பறிக்கப் பெற்றதையும், தங்கை மூக்கு முதலிய போக்கப் பெற்றதையும் அது செய்தும் இன்னும் நிற்கும் வீரன் ஆற்றலையும், அதனால் தனக்கு நேர்ந்த பழியையும் இன்ன எல்லாவற்றையும் மறந்தான் இராவணன்; கேட்ட மங்கையை மட்டும் மறந்தான் அல்லன்.

(ஆரணிய. மாரீசன் வதைப் படலம். இராவணனின் காமவெறி)

வெள்ளிக் கயிலைப் பொருப்பு ஈசன்

45 எல்லிட்ட வெள்ளிக் கயிலைப்பொருப்பு,
ஈச னோடும்
மல்லிட்ட தோளால் எடுத்தான்சிலை
வாயின் வாங்கி,

வில்லிட்டு உயர்ந்த நெடுமேகம்
எனப்பொ லிந்தான்;
சொல்லிட்டுஅவன் தோள்வலி, யார்உளர்,
சொல்ல வல்லார்?

பொழிப்பு: ஒளி உடைய வெள்ளிமயமான கயிலாய மலையை, அதில் அமர்ந்து உறையும் சிவபெருமானோடும், வலிமை பொருந்திய தோள்களால் அள்ளி எடுத்த இராவணனுடைய வில்லை, (சடாயு) தன் வாயில் பறித்துக்கொண்டு, இந்திர வில்லைத் தோற்றுவித்து வானத்திலே உயர்ந்து நின்ற நீண்ட புயலைப் போல விளங்கினான். சொற்களால் அளந்து அச்சடாயுவின் தோளாற்றலைச் சொல்லவல்லவர் யாரே உளர்?

விளக்கம்: இராவணன் வில்லை வாயில் வாங்கி நின்ற சடாயுவின் தோற்றம் இங்குக் கூறப்பெற்றது. சடாயுவின் உடல் வலியைச் சொற்களால் அளந்து எவரானும் உரைக்க இயலாது என்க. எல்: ஒளி. பொருப்பு: மலை. மல்: வலிமை.

(ஆரணிய. சடாயு உயிர் நீத்த படலம். சடாயுவின் ஆற்றல்)

தழல் வண்ணன் தடக்கை வில்

46 மீளாநிறத்து ஆயிரம் கண்ணவன்
விண்ணின் ஓட,
வாளால்ஒறுத் தான்சிலை, வாயிடை
நின்றும் வாங்கி,
தாளால் இறுத்தான்; தழல்வண்ணன்
தடக்கை வில்லைத்
தோளால் இறுத்தான் துணைத்தாதைதன்
அன்பின் தோழன்.

பொழிப்பு: நெருப்பு மேனியனாகிய சிவபெருமான் கையிலிருந்த பெரிய வில்லைத் தன் தோளாற்றலால் ஒடித்த இராமபிரானுக்குத் துணையாக வந்த, தந்தையின் (தயரதனின்) அன்பிற்குரிய தோழனாகிய சடாயு, புறம் காட்டாத மார்பை உடைய இந்திரன் வானத்திலே அஞ்சி ஓட, படைகளால் வருத்தினவனான இராவணனின் வில்லை, வாயினின்றும் எடுத்து, கால்களால் ஒடித்துப் போட்டான்.

விளக்கம்: முன்னே வாயில் கவ்வி நின்ருன் ஆதலின், இப்பாடலில் 'வாயிடை நின்றும் வாங்கி' என்ருர். மீளுதல்: புறம் தந்து போதல். நிறம்: மார்பு. ஆயிரம் கண்ணவன்: இந்திரன். தாள்: கால்.

(ஆரணிய. சடாயு உயிர் நீத்த படலம். இராவணன்
வில்லைச் சடாயு ஒடித்தல்)

ஆலம் மிடற்ருன் புரம்சுட்ட அம்பு

47 ஞாலம் படுப்பான், தனதுஆற்றலுக்கு
ஏற்ற நல்வில்
மூலம் ஒடிப்புண் டதுகண்டு,
முனிந்த நெஞ்சன்,
ஆலம் மிடற்ருன் புரம்அட்டதுஒர்
அம்பு போலும்
சூலம் எடுத்தான்; எறிந்தான்;மறம்
தோற்றி லாதான்.

பொழிப்பு: உலகத்துக்கு அழிவு செய்யத்தக்கவனுகிய இராவணன், தன்னுடைய வலிமைக்கு ஏற்ற நல்ல வில்லானது அடியோடு ஒடிக்கப் பட்டது கண்டு, சினந்த நெஞ்சினனுகி, வீரத்திற்கு அஞ்சாதவனுய், நஞ்சைக் கழுத்தில் வைத்த சிவபிரான் முப்புரத்தை அழித்த ஒப்பற்ற கணையைப் போன்ற சூலத்தைத் தூக்கினுன்; சடாயுவின் மேல் வீசினுன்.

விளக்கம்: படுத்தல்: அழித்தல். மூலம்: அடியோடு. ஆலம்: நஞ்சு. மிடறு: கழுத்து. புரம்: ஊர். மறம்: வீரம்.

(ஆரணிய. சடாயு உயிர் நீத்த படலம். சடாயுவின்மீது இராவணன்
சூலம் எறிதல்)

வெள்ளி ஓங்கல்

48 துள்ளி ஓங்குசெந் தாமரை
நயனங்கள் சொரிய,
தள்ளி, ஓங்கிய அமலன்,தன்
தனிஉயிர்த் தந்தை

வள்ளி யோன்திரு மேனியில்,
தழல்நிற வண்ணன்
வெள்ளி ஓங்கலில், அஞ்சன
மலேஎன வீழ்ந்தான்.

பொழிப்பு: (பிறர் உயர்ச்சியை)தள்ளி ஓங்கி நிமிர்ந்த இராமபிரான், உயர்ந்த செந்தாமரைப் பூப் போலும் தன் கண்கள் நீர்த்திவலேகளேக் கொட்ட, தன் ஒப்பற்ற உயிரனேய தந்தையாகிய வள்ளல் ஆம் (சடாயு) திருஉடல் மீது, நெருப்புப் போன்ற நிறமுடைய சிவபெருமானின் வெள்ளிமலே மேல், மை மலே வீழ்ந்தது போல் வீழ்ந்தான்.

விளக்கம்: துளி என்பது துள்ளி என நின்றது. துளி : நீர்த்துளி. 'பூ எனப்படுவது பொறிவாழ் பூ' ஆதலின் 'ஓங்கு செந்தாமரை' என்ருர். நயனங்கள் : கண்கள். தள்ளி என்பதற்கு, பிறர் சிறப்பைத் தள்ளி என்க. அமலன் : குற்றமற்றவன். சடாயு உயிரையும் ஈந்தான் ஆதலின் "வள்ளியோன்" என்ருர். சடாயு வெண்ணிறமுடையவன் ஆதலின் அவனே 'வெள்ளி ஓங்கல்' என்ருர். ஓங்கல் : மலே. அஞ்சனம் : மை. அஞ்சனமலே : கருநிறமுடைய இராமன். தழல்நிறவண்ணன் வெள்ளி ஓங்கல் என்றமையால் சடாயுவின் உடம்பில் உகுகுருதி சிவனின் தீவண்ணத்தைக் காட்டுகிறது. இரத்தம் படிந்த சடாயுவின் வெண்மையான மலே போன்ற உடலின் மீது மைமலே போல் இராமன் வீழ்ந்தான் என்று கொள்க.

(ஆரணிய. சடாயு உயிர் நீத்த படலம் : சடாயுவின் உடல் மேல் இராமன் வீழ்தல்)

ஊழி நெருப்பின் உருத்தன்

49 ஆழி வறக்க
முகக்க அமைந்த
மூழை எனப்பொலி
மொய்பில வாயாள்;
கூழை புறத்து
விரிந்ததுஒர் கொட்பால்,
ஊழி நெருப்பின்
உருத்தனே ஒப்பாள்;

பொழிப்பு : கடலும் வற்றிப் போம்படி மொண்டு கொள்வதற்குப் பொருந்திய அகப்பை என்று சொல்லத்தக்க வலிய குகைபோன்ற வாயை உடையவள்; கூந்தல் வெளியே விரிந்து அலையும் தன்மையால் ஊழிக் காலத்துத் தீயைஒத்த உருத்திர மூர்த்தியை நிகர்ப்பாள். (அயோமுகி)

விளக்கம் : செம்பட்டை மயிர்விரியத் தோன்றும் அயோமுகி என்பாள் ஊழிக் காலத்து உருத்திரனுக்கு உவமை உரைக்கப் பெறுகின்ருள். ஆழி : கடல். வறக்க : வற்ற. முகக்க : மொள்ள. முழை: அகப்பை. மொய்: வலிமை. பிலம்: குகை. கூழை: கூந்தல். கொட்பு: அலேதல்.

(ஆரணிய. அயோமுகிப்படலம்: அயோமுகியின் தன்மை)

ஓங்கல் உரிக்குள் உருத்திரன்

50 ஆங்கு அவள் மார்பொடு
கையின் அடங்கிப்
பூங்கழல் வார்சிலே
மீளி பொலிந்தான்;
வீங்கிய வெஞ்சின
வீழ்மத வெம்போர்
ஓங்கல் உரிக்குள்
உருத்திரன் ஒத்தான்.

பொழிப்பு : அப்பொழுது அவ் அயோமுகியின் மார்பும், கைகளும் ஆகிய உறுப்புக்களுள் அடங்கித்தோன்றிய அழகிய வீரக்கழல் அணிந்த நீண்ட வில்லே உடைய வீரனுகிய இலக்குவன், பெருகிய கடுங்கோபத்தை உடைய மதம்பொழியும் கொடும் போர் வல்ல மலே போன்ற யானையினே உரித்துப் போர்த்த போர்வையினுள் விளங்கும் உருத்திரமூர்த்தியை ஒப்ப விளங்கினுன்.

விளக்கம் : அயோமுகி என்பாளால் கவரப்பெற்று, அவள் அங்கங்களுள் அடங்கித் தோன்றிய இலக்குவன், கருநிறமுடைய யானேத் தோல் போர்த்த சிவபெருமானே நிகர்க்கின்ருன். இலக்குவன் சிவனேப் போல் செம்மேனி உடையவன். அயோமுகி கருநிறமுடையாள். பூ : அழகு. வார் : நீண்ட. மீளி : வீரன். வீங்குதல் : பெருகுதல். ஓங்கல் : மலே. வீழ்மத வெம்போர் ஓங்கல் என்றமையால் ஈண்டு யானேயை உணர்த்திற்று. உரி : தோல்.

(ஆரணிய. அயோமுகிப் படலம் : அயோமுகி உடலுள் இலக்குவன் தோற்றம்)

தாழ் சடைக் கடவுள்

51 அவ்இடத்து, அவர்மறுகி
அஞ்சி,நெஞ்சு அழிஅமைதி,
வெவ்விடத் தினைமறுகு
தேவர்,தா னவர்,வெருவல்
தவ்விட, தனிஅருளு,
தாழ்சடைக் கடவுள்என,
'இவ்இடத்து இனிதுஇருமின்
அஞ்சல்'என்று, இடைஉதவி.

பொழிப்பு: அம்மலையில் அவ்வானரர்கள் கலங்கி, பயந்து, மனந் தளர்ந்த சமயத்தில், கொடிய நஞ்சைக் கண்டு திகைப்படைந்த அமரர்களும், அசுரர்களும் அச்சம் ஒழிய, ஒப்பற்ற அருள் சுரந்து அந் நஞ்சை உண்டு அருளிய தாழ்ந்த சடையினையுடைய சிவபெருமானைப் போல, (அநுமன்) 'இவ்விடத்தில் இனிமையாக நீங்கள் இருங்கள்; அஞ்ச வேண்டாம்' என்று இடையே தேறுதல் கூறி.

விளக்கம்: இப்பாடல் குளகம். கடலைக் கடைந்தார்கள்; முதலில் நஞ்சு வந்தது; தேவர்களும், அசுரர்களும் அஞ்சி ஓடினார்கள்; நஞ்சை உண்டு அவர்களது அச்சத்தைத் தவிர்த்தார் சிவபெருமான். அவரைப் போல் தக்கசமயத்தில் வானரர்களின் பயத்தைநீக்கினான் அநுமன் என்க.

(கிட்கிந்தை. அநுமப் படலம்: அநுமன் வானரர் அச்சம் தவிர்த்தல்)

ஆலம் உண்டவனின் நடம்புரிவான்

52 மேலவன், திருமகற்கு,
உரைசெய்தான், 'விரைசெய்தார்
வாலிஎன்ற அளவுஇலா
வலியினான் உயிர்தெறக்
காலன்வந் தனன்;இடர்க்
கடல்கடந் தனம்'எனு,
ஆலம்உண் டவனின்நின்று
அருநடம் புரிகுவான்.

பொழிப்பு: மேலே செல்லுகின்றவனுகிய கதிரவன் திருமகனுகிய சுக்கிரீவனுக்கு, "மணம் பொருந்திய மாலையை அணிந்த வாலி என்னும் பெயரையுடைய, எல்லையற்ற ஆற்றல் உடையவனின் உயிரை அழிப்பதற்கு யமன் வந்துவிட்டான்; இனி நாம் துயர்க் கடலைக் கடந்து விட்டோம்" என்று சொல்லி, நஞ்சு உண்ட சிவபெருமானைப் போல நின்று ஆனந்தக்கூத்து ஆடுவானுயினுன். (அநுமன்)

விளக்கம்: இராமபிரான் வரவை அறிந்து வந்த மாருதி, சுக்கிரீவனிடம் மகிழ்ச்சிப் பெருக்கோடு பேசுவதுடன் நில்லாமல் ஆடத் தொடங்கிவிட்டான். வாலியின் உயிர் வாங்க வந்த காலன் இராமனுவான். மேலவன்: சூரியன். சூரியன் மகன் சுக்கிரீவன். விரை: மணம். தெற: அழிக்க. இடர்: துன்பம்.

(கிட்கிந்தை. நட்புக் கோள் படலம்: இராமன் நல்வரவை அநுமன் அறிவித்தல்)

நஞ்சம் நுங்கிய கண்ணுதல்

53 நண்ணுதல் அருங்கடல்
நஞ்சம் நுங்கிய
கண்ணுதல் கண்டத்தின்
காளம் ஆம்என
விண்ணகம் இருண்டது;
வெயிலின் வெங்கதிர்
தண்ணிய மெலிந்தன;
தழைத்த, மேகமே.

பொழிப்பு: நெருங்குதற்கு அரிய கடல் விடத்தை விழுங்கிய நெற்றிக் கண் பெற்ற சிவபெருமானுடைய கழுத்தின் கருமையைப் போல, வானவெளியானது இருள் அடைந்தது; சூரியனது வெம்மை மிக்க கிரணங்கள் குளிர்ச்சியுடையனவாய் மெலிந்து தோற்றம் அளித்தன; செழித்த மேகங்களால்.

விளக்கம்: மேகத்தின் பொலிவால் வானம் இருண்டது. வெய்யோனும்குளிர்ந்தனன் என்பது கருத்து. எவரும் அருகிற் செல்லமுடியாத நஞ்சு ஆதலின், 'நண்ணுதல் அருங்கடல் நஞ்சம்' என்ருர். கண்டம்: கழுத்து. காளம்: கருமை.

(கிட்கிந்தை. கார்காலப் படலம்: இருண்ட வானத்தின் வருணனை)

பரஞ்சுடர்ப் பண்ணவன்

54 பரஞ்சுடர்ப் பண்ணவன்,
பண்டு, விண்தொடர்
புரம்சுட விடுசரம்
புரையும் மின்னினம்;
அரம்சுடப் பொறிநிமிர்
அயிலின், ஆடவர்
உரம்சுட உளைந்தனர்,
பிரிந்து ளோர்எலாம்.

பொழிப்பு : மேலான ஒளிமிக்க தேவனாகிய சிவபெருமான், அந்த நாளில், வானில் பறந்து திரியும் இயல்பு வாய்ந்த முப்புரத்தை எரிக்கும் பொருட்டு எய்த அம்பை ஒக்கும் மின்னல் கூட்டம்; அரத்தினால்அராவப் பட்டு ஒளிவிடுகின்ற வேலைப் போல, மைந்தர்கள் நெஞ்சை (பிரிவுத் துயர்) சுட, அதனால் வருந்தினர் (தலைவியை) பிரிந்தவர்கள் எல்லாம்.

விளக்கம் : முப்புரம் என்பது விண்ணில் பறந்து திரியும் மூன்று ஊர். புரையும்: ஒக்கும். இனம்: கூட்டம். அரம் : அராவும் கருவி. அயில் : வேல். உளைதல் : வருந்துதல். கார்காலத்தின் மின்னல் கூட்டம் திரிபுரம் எரித்த அம்பின் ஒளியைக் காட்டும். கார்காலத்தில் தலைவியைப் பிரிந்த தலைவர்களின் உள்ளத்தை அம் மின்னல் குழு வேல் போல் தாக்க, அதனால் அன்னார் வருந்தினர் என்க.

(கிட்கிந்தை. கார்காலப் படலம் : மின்னலின் செயல்)

கண்ணுதலானுக்கும் கதுவாச் சேனை

55 எண்ணின், நான்முகர் எழுபதி
னுயிரர்க்கு இயலா;
உண்ணின், அண்டங்கள் ஓர்பிடி
உண்ணவும் உதவா;
கண்ணின் நோக்குறின், கண்ணுத-
-லானுக்கும் கதுவா;
மண்ணின் மேல்வந்த வானரச்
சேனையின் வரம்பே!

பொழிப்பு: *நிலத்தின் மீது வந்த வானரப் படையின் எல்லையைக் கணக்கிட முற்பட்டால், நான்கு முகம் படைத்த எழுபதினுயிரம் பிரமர்களாலும் முடியாது; அச் சேனைகள் உண்ணத் தொடங்கினுல், அண்டங்கள் அனைத்தும் ஓர் பிடி அளவில் உண்ணக்கூடப் போதா; அச் சேனையைக் கண்ணினுல் பார்க்கத் தொடங்கினுல், நெற்றிக் கண் பெற்ற சிவபெருமான் கண் செல்லும் அளவினுள்ளும் அமையாது.*

விளக்கம் : *வானரச் சேனையின் பெருக்கம் நன்கு எடுத்துக்கூறப் பெற்றிருக்கிறது. இயலா, உதவா, கதுவா ஓர் பொருளன.*

(கிட்கிந்தை தானை காண் படலம் : வானரப் படையின் வரம்பு)

இறைவன் மாமௌலி

56 *சிந்துரா கத்தொடும்*
திரள்மணிச் சுடர்செறிந்து
அந்திவா னத்தின்நின்று
அவிர்தலான், அரவினேடு
இந்துயாறு எய்தலான்,
இறைவன்மா மௌலிபோல்,
விந்தநா கத்தின்மாடு
எய்தினுர், வெய்தினுல்.

பொழிப்பு: *சிந்தூரம் என்னும் செம்பொடியோடு நெருங்கி இருக்கின்ற மாணிக்கங்களின் ஒளி மிகுந்து, அந்தி வானத்தைப் போல் தோன்றுதலாலும், பாம்பும் திங்களும் ஆறுகளும் பொருந்தி இருத்தலாலும் சிவபெருமானின் சடையைப் போல் விளங்குகின்ற விந்திய மலையின் பக்கத்தில் விரைந்து சேர்ந்தார்கள். (வானரர்கள்)*

விளக்கம் : *இப்பாடல் விந்தியமலைக்கும் சிவபெருமானுக்கும் சிலேடையாக அமைகின்றது. மலையில் செம்பொடியும், மாணிக்கங்களும், பாம்புகளும், நீர் அருவிகளும் இருப்பதும் திங்கள் தவழ்தலும் இயல்பு. சிவபெருமான் சடையில் செந்நிறமும், பாம்பும், மதியும், கங்கையும் இருத்தலால் சிவன் மௌலிக்கு விந்தியம் ஒப்பாயிற்று. சிந்துராகம் : சிந்துரச் செம்பொடி. அவிர்தல் : விளங்குதல். மாமௌலி : சிறந்த சடை முடி. விந்தநாகம் : விந்தியமலை. மாடு : பக்கம். வெய்து : விரைவு.*

(கிட்கிந்தை. பிலம்புக்கு நீங்கு படலம் : வானரர் விந்தியமலையை அடைதல்)

கயிலையில் இருந்த தேவு

57 வெயில்இயல் குன்றம் கீண்டு
வெடித்தலும், நடுக்கம் எய்தி,
மயில்இயல் தேவி மார்கள்
தழீஇக்கொளப் பொலிந்த வானோர்,
அயில்எயிற்று அரக்கன் அள்ளத்
திரிந்தநாள், அணங்கு புல்லக்
கயிலையில் இருந்த தேவை,
தனித்தனிக் கடுத்தல் செய்தார்.

பொழிப்பு: ஒளி பொருந்திய மகேந்திர மலை பிளவுபட்டு ஒடிந்தவுடன் அச்சம் அடைந்து, மயில் போன்ற சாயலையுடைய மனைவியர்கள் அணைத்துக்கொள்ள விளங்கித் தோன்றும் தேவர்கள், கூரிய பற்களை உடைய அரக்கனாகிய இராவணன் தூக்க நிலைகுலைந்த காலத்து, தெய்வ மகளாகிய உமையவள் தழுவ, கயிலை மலையில் இருந்த சிவபெருமானை, ஒவ்வொருவரும் ஒத்துக் காட்சி அளித்தார்கள்.

விளக்கம்: மகேந்திர மலையினின்றும் அனுமன் கடலைத் தாண்டினான். அவன் அடி ஊன்றிய அழுத்தத்தினால் அம் மலை வெடித்தது. அப் பேரோசை கேட்டு, நடுக்கம் எய்திய தேவமாதர்கள் அச்சம் எய்தி, கணவன்மார்களைத் தழுவினர். அன்னார் ஒவ்வொருவரும் அணங்கு புல்லிய சிவபெருமானை ஒத்துத் தோன்றினர். வெயில்: ஒளி. கீண்டு: பிளந்து. அயில்: கூர்மை.

(சுந்தர. கடல் தாவு படலம்: மகேந்திர மலையின் பிளவால் அமரர் அச்சம்)

கண்ணுதல் ஒழியச்செல்லும் கயிலையங்கிரி

58 விண்ணவர் ஏத்த, வேத
முனிவரர் வியந்து வாழ்த்த,
மண்ணவர் இறைஞ்ச, செல்லும்
மாருதி மறம்உட் கூர,

'அண்ணல்வாள் அரக்கன் தன்னை
அமுக்குவென் இன்னும்' என்று,
கண்ணுதல் ஒழியச் செல்லும்
கைலைஅம் கிரியும் ஒத்தான்.

பொழிப்பு: வானவர்கள் வணங்கவும், மறைகள் வல்ல இருடிகள் வியப்பெய்தி வாழ்த்தெடுக்கவும், நிலவுலகத்துள்ளவரெல்லாம் கைகூப்பித் தொழவும், வான வெளியில் செல்லும் மாருதியாகிய அனுமன், பகைமை உள்ளத்தே மிகுதலால், 'பெருமை பொருந்திய (சிவன் தடக்கை) வாள் கொண்ட அரக்கனாகிய இராவணனை மற்றும் ஒரு முறை அழுத்துவேன்' என்று, நெற்றிக்கண் படைத்த சிவபெருமானை விட்டுவிட்டுத் தனியாகச் செல்லும் கைலை மலையையும் ஒத்தான்.

விளக்கம்: மறம்: பகை. அண்ணல்: சிவன். அண்ணல்வாள்: அவன் கொடுத்த வாள்.

'தோள்ஆண்மை கருதிவரை எடுத்த தூர்த்தன்,
தோள்வலியும் தாள்வலியும் தொலைவித்து ஆங்கே
நாளோடு வாள்கொடுத்த நம்பன்'

என்பார் அப்பர் அடிகள். அனுமன் வெண்ணிறமானவன். அவன் பேருரு எடுத்துச் சென்ற நிலை வெள்ளி மலையை நிகர்த்திருந்தது. முன்னே இம் மலை இராவணனை அமுக்கிய போது சிவன் மலை மீது இருந்தான். அப்போது சிவன்அருளால் அவன் தப்பித்துக்கொண்டான் ஆதலின், சிவனை விட்டுவிட்டு இலங்கைக்கே சென்று இராவணனை அமுக்க வெள்ளி மலை தனித்துப் புறப்பட்டதை ஒத்திருந்தது அனுமன் சென்ற காட்சி.

(சுந்தர. கடல் தாவு படலம்: பேருரு எடுத்த அனுமனின் தோற்றம்)

கண்டத்திடைக் கறையுடைக் கடவுள்

59 துண்டப் பிறைத்துணை
எனச்சுடர் எயிற்றுள்;
கண்டத் திடைக்கறை
யுடைக்கடவுள், கைம்மா

முண்டத்து உரித்தஉரி-
-யாள்;முளரி வந்தான்
அண்டத் தினுக்குஉறை
அமைத்தனைய வாயாள்

பொழிப்பு : பிளந்த திங்களை ஒத்த ஒளிவிடுகின்ற இரண்டு கோரப் பற்களை உடையவளும், கழுத்திலே நஞ்சை உடைய சிவபெருமான் போல யானையினது உடலினின்றும் உரித்த தோலைப் போர்த்துக் கொண்டிருப்ப வளும், தாமரையில் தோன்றியவனுகிய பிரமன் படைத்த உலக உருண்டைக்கு அமைத்த உறை போன்ற வாயை உடையவளும் ஆவாள். (அங்காரதாரை)

விளக்கம் : துண்டப் பிறை : கோரப் பல்லுக்கு உவமை. எயிறு : பல். கைம்மா : யானை. முண்டம் : தலையற்ற உடல். உரி : தோல். முளரி : தாமரை. முளரி வந்தான் : திருமாலின் உந்திக் கமலத்தில் தோன்றிய பிரமன். அண்டம் : உருண்டை வடிவான உலகம்.

(சுந்தர. கடல் தாவு படலம் : அங்காரதாரையின் தோற்றம்)

அகன் கயிலையில் தொலைவிலோன்

60 ஆர்த்தார்கள் வானவர்கள்;
தானவர் அழுங்கா
வேர்த்தார்; விரிஞ்சனும்
வியந்துமலர் வெள்ளம்
தூர்த்தான்; அகன்கயிலை-
-யில்தொலைவி லோனும்
பார்த்தான்; முனித்தலைவர்
ஆசிகள் பகர்ந்தார்.

பொழிப்பு : அமரர்கள் ஆரவாரம் செய்தார்கள் ; அசுரர்கள் மனம் வருந்தி வேர்த்தார்கள் ; பிரமதேவன் வியப்பு அடைந்து மலர் மாரி பொழிந்தான் ; அகன்ற கயிலை மலையில் வாழும் அழிவில்லாதவனுகிய சிவபெருமானும் கண்டான் ; முனித் தலைவர்கள் வாழ்த்துரை வழங்கினர்.

விளக்கம்: அங்காரதாரை என்பாளின் வாயுள் புகுந்து வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளிவந்த அனுமன் செயல் கண்டதும் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் இப் பாடலில் கூறப்பெறுகின்றன. அழுங்கா: வருந்தி. விரிஞ்சன்: பிரமன். ஆசிகள்: வாழ்த்துரைகள்.

(சுந்தர. கடல் தாவு படலம்: அனுமன் வெற்றிக்கு ஆரவாரம்)

எயில் உடைக் கணிச்சிவானவன்

61 கரித்தமூன்று எயிலுடைக்
கணிச்சி வானவன்,
எரித்தலை அந்தணர்
இழைத்த யானையை,
உரித்தபேர் உரிவையால்
உலகுக்கு ஓர்உறை
புரித்தனன் ஆம்எனப்
பொலியும் பொற்பதே.

பொழிப்பு: மூன்று மதில்களை உடைய முப்புரத்தை எரித்த மழு ஏந்திய வானவனாகிய சிவபெருமான், வேள்வித்தீயில் இருடிகள் தோற்றுவித்து அனுப்பிய யானையை, உரித்து எடுத்த பெரிய தோலைக்கொண்டு உலகுக்கே ஓர் உறை செய்துவிட்டான் என்று சொல்லுமாறு விளங்கித் தோன்றும் காட்சியுடையது (இருள்)

விளக்கம்: கரித்த: கரியாக்கிய. எயில்: கோட்டை மதில். எரித்தலை: தீயினிடத்து. 'புரிந்தனன்' என்பது எதுகை நயம் நோக்கி 'புரித்தனன்' என வலித்தல் விகாரம் பெற்றது. புரிந்தனன்: செய்தனன்.

(சுந்தர. ஊர் தேடு படலம்: பரவிய இருளின் பொலிவு)

முக்கண் நோக்கினன்

62 முக்கண் நோக்கினன் முதல்மகன்,
அறுவகை முகனும்,
திக்கு நோக்கிய புயங்களும்,
சிலகரந் தனையான்,

ஒக்க, நோக்கியர் குழாத்திடை
உறங்குகின் றானைப்
புக்கு நோக்கினன்; புகைபுகா
வாயிலும் புகுவான்.

பொழிப்பு: மூன்று கண்கள் பெற்ற சிவபெருமானின் மூத்த மகனாகிய விநாயகனும், ஆறுவகையான முகங்கள் கொண்ட முருகனும், திக்குகளை அளாவிய தோள்களும் வேறு சில அங்கங்களும் மறையப் பெற்று ஒருசேரப் பிறந்தவனைப் போன்ற, தன்னை ஒத்த நோக்கு உடைய மகளிர் கூட்டத்தினிடையே உறங்குகின்ற இந்திரசித்தனை (அவன் மாளிகையினுள்ளே) புகுந்து, பார்த்தான், புகை நுழைய முடியாத இடத்தும் புகத்தக்கவனான அனுமன்.

விளக்கம்: நோக்கு: அழகு, பார்வை, கருத்து முதலிய எல்லாவற்றிற்கும் பொருந்தும். இந்திரசித்தன், விநாயகக் கடவுளும், முருகக் கடவுளும் ஓர் உருவம் கொண்டு பிறந்தவன் என்பது கருத்து. கந்தன் ஐந்து முகங்களும், பத்துக் கைகளும் கரந்து பிறந்தான். கணபதி துதிக்கையோடு கூடிய யானைத்தலையையும், பெருவயிற்றையும் மறைத்துப் பிறந்தான். 'புயங்கள்' முருகனையும், 'சில', விநாயகனையும் சுட்டுவதாகக் கொள்ள வேண்டும். இப்பாட்டலுக்கு இப்பொருள் கொள்ளாமல் வேறு எவ்வகையில் கொண்டாலும் பொருத்தமாக அமையவில்லை. முதல்மகன் என்பதை அறுமுகனுக்கே ஏற்றி, முதன்மையான மகன் எனப்பொருள் கொண்டாலும், 'புயங்களும் சில கரந்தனையான்' என்ற சொற்றொடருக்குப் பத்துத் தோள்களை மறைத்தவன் எனப்பொருள் கொள்வது பொருத்தம் இன்று. பன்னிரண்டில் இரண்டு பலவாகவும் பத்துச் சிலவாகவும் இருக்க முடியுமா? அன்றி, 'சில கரந்தனையான்' என்பதற்கு, சில ஆகும்படி மறையப் பெற்று வந்தான் என்று இயம்புவது சிறிதும் பொருத்தம் இன்மை அறிக.

வீரத்திற்கு எடுத்துக்காட்டாக, குமரனைச் சொல்லுதல் பொருந்துமே அன்றி விநாயகனைப் பேசுவது பொருத்தம் இல்லை எனக் கூறலாமோ எனின், விநாயகன் வீரம் காட்டி அசுரர்களை அழித்த செய்தியை விநாயக புராணத்தில் காணும் போது அவ்வாறு கூறுமாறு இல்லை.

அடுத்த பாடல் அனுமன் கூற்று. 'இந்திர சித்தனைக் கணிச்சியான் மகனோ' என்று பேசுகின்றான் அனுமன். சிவபெருமான் மகன் என்று சொல்லும் போது முருகனை மட்டுமல்லாமல் கணபதியையும் கொள்வதில் தவறு இல்லையல்லவா?

(சுந்தர. ஊர் தேடு படலம். அனுமன் இந்திரசித்தனைக் காண்டல்)

குழந்தை வெண்மதிக்குடுமியன்

63 குழந்தை வெண்மதிக் குடுமியன்
நெடுவரை குலுக்கிய குலத்தோளைக்
கழிந்து புக்கு,இடை கரந்தன,
அனங்கன்வெங் கடுங்கணை பலபாய,
உழந்த வெஞ்சமத்து உயர்திசை
யானையின் ஒளிமருப்பு உற்றுஇற்ற
பழந்த ழும்பினுக்கு இடைஇடை-
-யே,சில பசும்புண்கள் அசும்புஊற.

பொழிப்பு : வெள்ளிய பிள்ளைத்திங்கள் சூடிய முடியை உடைய சிவபெருமானின் பெரிய கைலை மலையைக் குலுங்கச் செய்த கூட்டமான (இருபது) தோள்களை ஊடுருவிச் சென்று, அந்தத் தோள்களின் ஊடே மறைந்துகொண்டனவான, காமனின் கொடிய அம்புகள் பல பாய்தலினாலே, வருந்திச் செய்த கடும் போரிலே உயர்ந்த திக்கு யானைகளின் ஒளிவிடும் தந்தங்கள் பாய்ந்து ஒடிந்த பழைய வடுக்களுக்கு நடுநடுவே, சில புதுப் புண்கள் உண்டாகி இரத்தம் கொட்டிக்கொண்டிருக்க, (இராவணனைக் கண்டனன் அனுமன் என, பின்னே முடியும்)

விளக்கம் : குடுமி : முடி. நெடுவரை : கைலைமலை. குலுக்கிய : அசைந்து ஆடச் செய்த. குலம் : கூட்டம். கரத்தல் : மறைதல். அனங்கன் : மன்மதன். உற்று இற்ற : பொருந்தி ஒடிந்த. பசுமை : புதுமை. வெள்ளி மலையை அள்ளி எடுத்த இருபது தோள்களை உடைய இராவணனது ஆற்றல் மிக்க உடம்பில், முன்னே திக்கு யானைகளோடு போர் செய்யுங்கால் அவற்றின் தந்தங்கள் பாய்ந்து ஒடிந்த பழைய தழும்புகள் இருந்தன ; அவ்வடுக்களின் இடைஇடையே மதனன் கொடுங் கணை பாய்தலால் தோன்றிய புதுப் புண்களில் குருதி வடிகின்றது என்பது கருத்து.

(சுந்தர. ஊர் தேடு படலம் : அனுமன் இராவணனைக் கண்ட நிலை)

மழுவாள் வாய்மை துடைத்த மார்பான்

64 தழுவா நின்ற கருங்கடல்மீது,
உதய கிரியில் சுடர்தயங்க
எழுவான் என்ன, மின்இமைக்கும்
ஆரம் புரளும் இயல்புஇற்றுஆய்

முழுவா னவராய் உலகம்ஒரு
மூன்றும் காக்கும் முதல்தேவர்
மழு,வாள் நேமி, குலிசத்தின்
வாய்மை துடைத்த மார்பானை,

பொழிப்பு: நிலத்தைத் தழுவிக்கிடக்கின்ற கருங்கடல் மீது தோன்றும் மலையில் கிரணங்கள் விரியப்புறப்படும் ஆதவனைப் போல மின்னலைக்கக்குகின்ற மணிமாலை புரளுகின்ற தன்மையோடு கூடியவனுன, தலைமை அமரராய் மூன்று உலகங்களையும் பாதுகாக்கின்ற சிவபிரான் திருமால், இந்திரன் ஆகிய மூவருடைய மழுப்படை, ஒளி உள்ள சக்கரப்படை, வச்சிரப்படை ஆகியவற்றின் வலிமையை அழித்த மார்பை உடையவனை, (இராவணனை) [முடிவுபின்]

விளக்கம்: ஆரம்: அரதனமாலை. மழு: சிவனுக்குரியது. நேமி திருமாலுக்குரியது. குலிசம்: இந்திரனுக்குரியது. இம் மூன்றும் சொல்லப்படுதலால் இங்கு முதல் தேவர் என்று கூறப்பட்ட மூவர் சிவன், மால், இந்திரன் ஆகிய மூவரே ஆவர். பிரமனுக்குப் போர் வன்மை இன்மையின் அவன்விடப்பட்டான் என்க வாள் நேமிக்கு அடையாயிற்று. வாள்: ஒளி என்னும் பொருளது. குலிசம்: வச்சிரம். வாய்மை: வலிமை. இராவணனது கரிய பெரிய உடலுக்குக் கருங்கடலும் அவன் பரந்த மார்புக்கு உதய கிரியும் அம்மார்பில் புரளும் மாலைக்குச் சூரியனும் உவமம் எனக் கொள்க.

(சுந்தர. ஊர் தேடு படலம். இராவணனின் கம்பீரத்தோற்றம்)

ஆலம் பார்த்து உண்டவன்

65 ஆலம்பார்த்து உண்டவன்போல்
ஆற்றல்அமைந்து உளர்எனினும்,
சீலம்பார்க் குரியோர்கள்,
எண்ணுது செய்பவோ?

மூலம்பார்க் குறின்,உலகை
முற்றுவிக்கும் முறைத்துஎனினும்,
காலம்பார்த்து, இறைவேலை
கடவாத கடல்ஒத்தான்.

பொழிப்பு: நஞ்சை அதன் கொடுமையை அறிந்தே உண்ட சிவபெருமான் போல் வலிமை உடையவர்களானாலும், ஒழுக்க முறைமை பார்த்து நடக்க உரியவர்கள், ஆராயாமல் எதுவும் செய்வார்களா? (மாட்டார் என்பது கருத்து) முதற் காரணத்தை ஆய்ந்து பார்த்தால் உலகம் முழுவதையும் அழிக்கும் திறன் தனக்கு உண்டு எனினும், ஊழிக் காலத்தை எதிர் நோக்கி, (அதுகாறும்) சிறிதும் கரை கடவாமல் அடங்கி நிற்கும் கடலை ஒத்தான். (அனுமன்)

விளக்கம்: அனுமன் இராவணனைக் கொல்ல நினைந்து, அது இப்போது செய்யத் தக்கது அன்று என முடிவுகட்டினமையை இப் பாடல் கூறுகின்றது. உலகை அழிக்கும் ஆற்றல் கடலுக்கு இருக்குமாப் போல இராவணனைக் கொல்லும் ஆற்றல் அனுமனுக்கு உண்டு என்பதை இவ்வுவமை காட்டுகின்றது. பார்த்து உண்டல்: தெரிந்தே அருந்துதல். காலம்: உலகை அழிக்கும் ஊழிக் காலம். இறை: சிறிது. வேலை: கரை.

(சுந்தர. ஊர் தேடு படலம். அனுமனின் அடக்கம்)

கங்கைத் திருமுடிச் செங்கணான்

66 தேங்கு கங்கைத்
திருமுடிச் செங்கணான்,
வாங்கு கோல
வடவரை வார்சிலை,
ஏங்கு மாத்திரத்து,
இற்றுஇரண் டாய்விழ,
வீங்கு தோளை
நினைந்து, மெலிந்துளாள்.

பொழிப்பு: கங்கை தங்கிய அழகிய முடியையும் செவ்விய கண்ணையும் உடைய சிவபிரான், வளைத்த அழகிய வடக்குத்திக்கில் உள்ள மேரு என்னும் நீண்ட மலையாகிய வில்லை, (இவன் வளைப்பானா? மாட்டானா? என்று சீதை) வருந்திய பொழுது, அந்த வில் ஒடிந்து இரண்டு துண்டாய் விழும்படி செய்த (இராமனுடைய) பூரித்த தோள்களை எண்ணி, மெலிவு எய்துகின்றாள். (சீதை)

விளக்கம் : செங்கண்: சிவபெருமான் நெற்றிக் கண்ணைக் குறிக்கும். வாங்குதல்: வளைத்தல். கோலம்: அழகு. வார்: நீண்ட. ஏங்குதலை, சனகனுக்கு ஏற்ருமல், சீதைக்கு ஏற்றுதலே சிறப்பு. இற்று: ஒடிந்து.

(சுந்தர. காட்சிப் படலம். சீதை வீங்கு தோளை நினைந்து மெலிதல்)

ஈசற்கும் ஈடு அழியான்

67 ஈசற்கு ஆயினும்
ஈடுஅழி வுற்று,இறை
வாசிப் பாடுஅழி
யாத மனத்தினுன்,
ஆசைப் பாடும்அந்
நாணும் அடர்த்திட,
கூசிக் கூசி
இவைஇவை கூறினுன்.

பொழிப்பு : சிவபெருமானிடத்தும், ஆற்றல் இழந்து, சிறிதும் பெருமிதம் நீங்காத மனத்தையுடையவனுகிய இராவணன், ஆசையும், (அவ்வாசை நிறை வேருமையால் தோன்றிய) வெட்கமும் வருத்தக் கூசிக் கூசி இப்படி இப்படி இயம்பினுன்.

விளக்கம் : 'ஈசற் கூயினும்' என்பதில் உள்ள 'உம்' உயர்வு குறிப்பது. ஈடு : வலிமை. இறை : சிறிது. வாசிப்பாடு : பெருமிதம். ஆசைப்பாடு: சீதையின் மீது கொண்ட ஆசை. கூசிக் கூசி: மீமிசை. பெரிதும் கூசி என்பது பொருள். இவை இவை என்பதைப் பின் பாடல்களில் காணலாம்.

(சுந்தர. காட்சிப் படலம். இராவணன் சீதையை இரத்தல்)

ஊழியின் இறுதிக்காலத்து ஒருவன்

68 தாழ்இரும் பொழில்கள் எல்லாம்
துடைத்துஒரு தமியன் நின்ருன்,
ஏழிஞேடு ஏழு நாடும்
அளந்தவன் எனலும் ஆனுன் ;

ஆழியின் நடுவண் நின்ற
அருவரைக்கு அரசும் ஒத்தான்;
ஊழியின் இறுதிக் காலத்து
உருத்திர மூர்த்தி ஒத்தான்.

பொழிப்பு: தழைத்த பெரிய சோலை முழுவதையும் அழித்து ஈடில்லாமல் தன்னந்தனியனாய் நின்ற அனுமன், ஈரேழு பதினான்கு உலகங்களையும் அளந்து நின்ற திருமாலும் ஆனான்; கடலின் மத்தியிலே தோன்றிய அரிய மலைகளுக்கெல்லாம் அரசு என்று சொல்லத்தக்க மந்திர மலையும் போன்றான்; கடை ஊழிக்காலத்திலே (ஒருவனாய் நிற்கும்) உருத்திர மூர்த்தியையும் ஒத்தான்.

விளக்கம்: பேருருக்கொண்டதால் ஓங்கி உலகளந்த உத்தமனையும், பொழிலைச் சுழற்றி அலைத்தலால் மந்தரமலையையும், முழுவதையும் அழித்து விட்டுத் தான் தனியனாக நிற்றலால் உருத்திர மூர்த்தியையும் அனுமன் ஒத்தான் என்க. தாழ்இரும்: தழைத்த பெரிய. ஆழி: கடல்.

(சுந்தர. பொழில் இறுத்த படலம். அனுமனின் பெருமிதத் தோற்றம்)

ஈசன் வில் இறும் ஒலி

69 அருவரை முழையில் முட்டும்
அசனியின் இடிப்பும், ஆழி
வெருவரு முழக்கும், ஈசன்
வில்இறும் ஒலியும், என்ன,
குருமணி மகுட கோடி
முடித்தலை குலுங்கும் வண்ணம்,
இருபது செவியி னூடும்
நுழைந்தது,அவ் எழுந்த ஓசை.

பொழிப்பு: பெரிய மலையின் குகையில் இடிக்கின்ற இடி முழக்கமும், உலகை அச்சத்துக்கு உள்ளாக்குகின்ற அழிவுக்காலத்துக் கடல் ஒலியும், சிவன் வில்லை இராமன் ஒடித்த போது தோன்றிய ஓசையும் போல, ஒளி மிக்க மணிகள் அழுத்திய கிரீடங்களை வரிசையாக உடைய மயிர்முடியோடு கூடிய (இராவணனுடைய) பத்துத்தலைகளும் ஆட்டம் காணும்படி, (அவனுடைய) இருபது காதுகளுள்ளும் புகுந்தது (பொழில் இறுத்தலால்) எழுந்த அந்த ஒலி.

விளக்கம்: முழை: குகை. அசனி: இடி. வெருவருதல்: அஞ்சுதல். கோடி: வரிசை. குரு: ஒளி.

(சுந்தர. கிங்கரர் வதைப்படலம். அனுமனின் ஆரவார ஓசையை இராவணன் கேட்டல்)

விண்தோய் கயிலை மலை

70 வயிர்ஒலி, வளைஒலி, வன்கார்
மழைஒலி முரசுஒலி, மண்பால்
உயிர்உலை வுறநிமி ரும்போர்
உறும்ஒலி செவியின் உணர்ந்தான்;
வெயில்விரி கதிரவ னும்போய்
வெருவிட, வெளியிடை, விண்தோய்
கயிலையின் மலை,என நின்ருன்,
அனையவர் வருதொழில் கண்டான்.

பொழிப்பு: வெயிலை விரிக்கின்ற ஆதவனும் நீங்கி அஞ்சுமாறு, வான வெளியிலே நிற்கின்ற வானளாவிய கயிலை மலையைப் போல (பேருருவம் கொண்டு) நின்றவனுகிய அனுமன், ஊதும் கொம்பின் ஓசையும், சங்கின் ஒலியும், வலிய கார் காலத்து மேக முழக்கம் போன்ற பேரிகையின் ஓசையும் ஆகிய நிலத்து உள்ள உயிர் அனைத்தும் நடுங்கத்தக்க மிக்க போர்ப் பேரொலியை செவிவாயின் உணர்ந்தவனுய், அப்போர்அரக்கர் வருவதைக் கண்ணுல் கண்டான்.

விளக்கம்: வயிர்: கொம்பு. வளை: சங்கு. உலைவுஉற: நடுக்கம்கொள்ள.

(சுந்த்ர. கிங்கரர் வதைப்படலம். அனுமன் கிங்கரரைக் காணுதல்)

உறுத்த உருத்திரன்

71 கறுத்துஎழு நிறத்தினர்,
எயிற்றினர், கயிற்ருர்,
செறுத்துஎரி விழிப்பவர்,
சிகைக்கழு வலத்தார்,

மறுத்துஎழு மறலிகள்
இவர்என அதிர்ந்தார்,
உறுத்து,உருத் திரன்எனத்
தனித்தனி உதைத்தான்.

பொழிப்பு: கறுத்துத் தோன்றுகின்ற நிறத்தை உடையவர்களும், கோரப்பற்கள் உடையவர்களும், பாசக்கயிற்றைப் படையாக உடையவர்களும், சினத்தோடு கூடிய நெருப்புப் போல் விழிப்பவர்களும், கூர்மையான நுனியையுடைய 'கழு' என்ற வெற்றிப்படை பெற்றவரும், மாறுபட்டுத் தோன்றுகின்ற எமன்கள் என்று சொல்லுமாறு பெருமுழக்கம் செய்பவர்களுமாகிய அரக்க வீரர்களைத் தண்டித்து, 'உருத்திரன்' என்று சொல்லுமாறு ஒவ்வொருவரையும் தனித்தனியே காலால் உதைத்து அழித்தான். (அனுமன்)

விளக்கம்: உருத்திரன் மார்க்கண்டேயர் பொருட்டு, ஒரு எமனை உதைத்து அழித்தான். அனுமன் அவ்உருத்திர மூர்த்தி ஒப்பத் தோன்றி அரக்கர்களாகிய பல எமன்களை உதைத்து அழித்தான் என்க. கயிறு: பாசப்படை. சிகைக்கழு: கூரிய நுனியுடைய கழு என்னும் படை.

(சுந்தர. சம்புமாலி வதைப்படலம். அனுமன் அரக்கரை உதைத்து அழித்தான்)

ஈசன் வன் தனிச்சூலம்

72 வாச வன்வயக் குலிசமும்,
வருணன்வன் கயிறும்,
ஏசுஇல் தென்திசைக் கிழவன்தன்
எரிமுனை எழுவும்,
ஈசன் வன்தனிச் சூலமும்,
என்றுஇவை ஒன்றும்
ஊசி போழ்வதுஓர் வடுச்செயா,
நெடும்புயம் உடையார்.

பொழிப்பு: தேவேந்திரனின் வெற்றி வாய்ந்த வச்சிரப் படையும் வருணதேவனுடைய வலிய பாசப்படையும், குற்றமற்ற தெற்குத்திக்குக்கு அதிபனாகிய எமனுடைய நெருப்பை முனையில் கொண்ட தண்டாயுதமும்,

சிவபெருமானின் வன்மை வாய்ந்த ஒப்பற்ற சூலப்படையும், என்று சொல்லத்தக்க இவைகளில் எதுவும் ஊசிகுத்துவது போன்ற ஒரு தழும்பையேனும் உண்டாக்க முடியாத நீண்ட தோள்களை உடையாராகிய (படைத்தலைவர்கள்.)

விளக்கம் : இத்தனை தெய்வப் படைகளும் பாய்ந்தாலும் ஊசித் தழும்பைக்கூட உண்டாக்க முடியாத அவ்வளவு வச்சிர உடல் உடையவர்கள் பஞ்ச சேனாதிபதிகள் என்க.

(சுந்தர. பஞ்ச சேனாதிபதிகள் வதைப் படலம். படைத் தலைவர் வன்மை கூறியவாறு)

முழுமுதல் கண்ணுதல் முருகன் தாதை

73 முழுமுதல், கண்ணுதல்,
முருகன் தாதைகைம்
மழுஎனப் பொலிந்துஒளிர்
வயிர வான்தனி
எழுவினின், பொலங்கழல்
அரக்கர் ஈண்டிய
குழுவினை, களம்படக்
கொன்று நீக்கினான்.

பொழிப்பு : முழுமுதல்வனும், நெற்றிக்கண் பெற்றவனும், முருகக் கடவுளின் தந்தையும் ஆகிய சிவபெருமானது கையில் கொண்ட மழுப் படை போல விளங்கித் தோன்றும், உறுதியான, உயர்ந்த, ஒப்பற்ற (இரும்புத்) தூணினால், அழகிய வீரச் சிலம்பு அணிந்த அரக்கர் கூட்டத்தைப் போர்க் களத்திலே இறந்து ஒழியுமாறு, கொன்று குவித்தான். (அனுமன்)

விளக்கம் : அனுமன் கைக்கொண்ட எழுவுக்கு, சிவபெருமானின் மழு உவமை கூறப்பெற்றது. அந்த எழுவுக்கு, 'வயிர வான் தனி' என மூன்று சிறப்பு அடைகள் கொடுக்கப்பெற்றன. முழுமுதல்,கண்ணுதல், முருகன் தாதை என்ற சொற்றொடர் சிவபெருமானின் சிறப்பை மிக அழகு படுத்திக் காட்டுகின்றது.

(சுந்தர. பஞ்ச சேனாதிபதிகள் வதைப் படலம். அனுமன் எழுவின் பெருமை)

பொருப்பு வாங்கிய பரஞ்சுடர்

74 அரம்சுடர் வேல்தனது
இளவல் அற்றசொல்
உரம்சுட, எரிஉயிர்த்து
ஒருவன் ஓங்கினுன்,
புரம்சுட வரிசிலேப்
பொருப்பு வாங்கிய
பரம்சுடர் ஒருவனேப்
பொருவும் பான்மையான்.

பொழிப்பு: ஒப்பற்றவனுகிய இந்திரசித்தன், அராவப்பெற்று ஒளிவிடுகின்ற வேல் படையை உடைய தன் தம்பி (அக்கன்) இறந்தான் என்ற சொல், தன்னுடைய உள்ளத்தை எரித்தலால், நெருப்பைக் கக்கிக் கொண்டு எழுந்தான். (அந்த இந்திரசித்தன்) முப்புரத்தை எரிக்க மேரு மலேயை வரிவில்லாக வளேத்த மேலான ஒளிவடிவம் பெற்ற ஒப்பற்ற சிவபெருமானே ஒக்கின்ற தன்மையன் ஆனுன்.

விளக்கம்: சுடர்: ஒளி. இளவல்: பின் பிறந்தோன். உரம்: உள்ளம். ஒருவன்: ஒப்பற்றவன். ஈண்டு இந்திரசித்தன். வரிசிலே: கட்டமைந்த வில். பரம்சுடர்: மேம்பட்ட ஒளி. பரம்சுடர் ஒருவன்: சிவபெருமான். "சோதியே! சுடரே!" என்பது திருவாசகம். பொருவுதல்: ஒத்தல்.

(சுந்தர. பாசப் படலம். இந்திரசித்தன் போருக்கு எழுதல்)

முப்புரம்சுட முடுகும் ஈசன்

75 ஈண்டு,இவை நிகழ்வுழி,
இரவி தேர்எனத்
தூண்டுறு தேரின்மேல்
தோன்றும் தோன்றலே,
மூண்டுமுப் புரம்சுட
முடுகும் ஈசனின்,
ஆண்தகை வணகழல்
அனுமன் நோக்கினுன்.

பொழிப்பு : இவ்விடத்து, இச்செயல்கள் நிகழும்போது, கதிரவனின் தேர் என்று சொல்லத் தக்க விரைந்து வருகின்ற தேரின் மீது தோன்றுகின்ற இந்திரசித்தனை, சினம் கொண்டு திரிபுரத்தை எரிப்பதற்கு விரைகின்ற சிவனைப் போல ஆண்மை படைத்த வீரக்கழல் கட்டிய மாருதி பார்த்தான்.

விளக்கம் : இந்திரசித்தன் தேர் விரைந்து வருதலால் இரவிதேர் என்றார். அனுமன் ஈசனுக்கு உவமை.

(சுந்தர. பாசப் படலம். அனுமன் இந்திரசித்தனைக் கண்டான்)

கயிலையின் கணிச்சி வானவன்

76 'கயிலையின் ஒருதனிக்
கணிச்சி வானவன்,
மயில்இயல் சிதைதன்
கற்பின் மாட்சியால்,
எயிலுடைத் திருநகர்ச்
சிதைப்ப எய்தினன்,
அயில்எயிற்று ஒருகுரங்கு-
-ஆய்'என் பார்பலர்.

பொழிப்பு : கயிலை மலையில் வீற்றிருக்கின்ற, ஒப்பற்ற மழு ஆயுதம் தாங்கிய, தனித் தேவனாகிய சிவபெருமான், மயில் போலும் சாயல் உடையவளாகிய மிதிலைச் செல்வியின் கற்பின் மேம்பாடு காரணமாக, கூரிய பற்களை உடைய ஒரு குரங்கின் வடிவம் பெற்று, காவல் கோட்டையை உடைய அழகிய இலங்கை நகரை அழிக்க வந்தான் என்று கூறுவார் பலர்.

விளக்கம் : வானவன், மாட்சியால், குரங்காய் சிதைப்ப எய்தினன் என முடிக்க. அனுமன் தெய்வக் குரங்கு என்பது கருத்து.

(சுந்தர. பிணிவீட்டு படலம். அனுமனைக்கண்டு அரக்கர் பலர் கருதியது)

தள்இல் முக்கணன் கணிச்சி

77 புள்உ யர்த்தவன் திகிரியும்,
புரந்தரன் அயிலும்,
தள்இல் முக்கணன் கணிச்சியும்,
தாக்கிய தழும்பும்,
கள்உ யிர்க்கும்மென் குழலியர்
முகிழ்விரல் கதிர்வாள்
வள்உ கிர்ப்பெருங் குறிகளும்
புயங்களில் வயங்க-

பொழிப்பு : கருடக்கொடி உடைய திருமாலின் சக்கரமும், இந்திரனின் வச்சிரமும், தவறுமல் பகை கடியும், மூன்று கண்ணுடைய சிவபெருமானின் மழுப்படையும், மோதிய சுவடுகளும் தேனைக் கொட்டுகின்ற மெல்லிய கூந்தலை உடைய பெண்களின் அரும்பை ஒத்த விரல்களில் உள்ள, ஒளியை உடைய, வாள் போன்ற கூரிய நகங்கள் படுதலால் தோன்றிய பெரிய வடுக்களும், (இராவணன்) தோள்களில் விளங்கித் தோன்ற.

விளக்கம் : இராவணனின் தோள்களில் திருமாலின் ஆழியும், இந்திரன் அயிலும், முக்கணன் மழுவும் தாக்கிய தழும்புடன் மகளிர் நகக் குறி வடுக்களும் வயங்குகின்றன. நகக் குறி வடுக்களைப் போலவே போர்ப் படை விழுப்புண் தழும்பையும் இன்பமாக ஏற்றான் இராவணன் என்று கருதலாம். முக்கணன் தள்இல் கணிச்சி என மாற்றுக. கள் : தேன். முகிழ் : மொட்டு. கதிர் : ஒளி. வள் : கூர்மை. உகிர் : நகம்.

(சுந்தர. பிணிவீட்டு படலம். இராவணன் பெருமை)

முப்புரம் முருங்கச் சுட்டவன்

78 மற்றுஇனிப் பலஎன்? வேலை
வடஅனல், புவிஅ ளாய
கற்றைவெங் கனலி, மற்றைக்
காயத்தீ, முனிவர் காக்கும்

முற்றுறு மும்மைச் செந்தீ,
முப்புரம் முருங்கச் சுட்ட
கொற்றவன் நெற்றிக் கண்ணின்
வன்னியும், குளிர்ந்த அன்றே.

பொழிப்பு: இனி வேறு பல கூறவேண்டுவது என்ன இருக்கிறது? கடலில் தோன்றும் வடவைத்தீயும், நிலத்தில் தோன்றிய கூட்டமான கொடிய நெருப்பும், வானத்தில் உண்டாகும் மற்றை எரியும், இருடிகள் செய்கின்ற மூவகையான முழுத்தன்மை பெற்ற வேள்விக் கனலும், மூன்று ஊர்களும் அழியுமாறு எரித்த வெற்றி வாய்ந்தவனது நெற்றிக்கண்ணின் நெருப்பும், குளிர்ச்சி அடைந்தன. (சீதையின் ஆணைப்படி)

விளக்கம்: வடவை அனல்: கடலில் உள்ள நெருப்பு. கற்றை: கூட்டம். கனலி: நெருப்பு. காயம்: வானம். முருங்க: அழிய. வன்னி: தீ.

(சுந்தர. பிணிவீட்டு படலம். எல்லாத் தீயும் அவிந்தது)

சுடு தொழில் தொல்லையோன்

79 துன்னலர் புரத்தை முற்றும்
சுடுதொழில் தொல்லை யோனும்,
பன்னின பொருளும், நாண,
'பாதகர் இருக்கை பற்ற,
மன்னனை வாழ்த்திப் பின்னை
வயங்குஎரி மடுப்பன்' என்று,
பொன்னகர் மீதே, தன்போர்
வாலினைப் போக விட்டான்.

பொழிப்பு: எதிரிகளது முப்புரத்தை முழுதும் சுட்டு அழித்த பழையோனாகிய சிவபெருமானும், அப் பிரானுக்கு அப் புரம் எரிக்குங்கால் துணையாக வந்தன என்று சொல்லப்படுகின்ற பொருள்களும் வெட்கப் படும்படி, 'பாவிகளாகிய அரக்கர்களது இலங்கை நகர் பற்றிஎரியு மாறு, இராமபிரானை வாழ்த்தி, பிறகு விளங்குகின்ற தீயை வைப்பேன்' என்று கூறி, அழகிய இலங்கை நகரின் மீது தன்னுடைய, போர் செய்யும் வாலினைச் செலுத்தினுன். (அனுமன்)

விளக்கம்: துன்னலர்: பகைவர்கள். தொல்லையோன்: முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளாகிய சிவன். பன்னுதல்: சொல்லுதல். பாதகர்: அரக்கர். மன்னன்: இராமபிரான். ஒரு துணைக் கருவியும் இன்றி, இலங்கையில் அனுமன் இட்ட நெருப்பைக் கண்டு, பல துணைக் கருவிகளைக்கொண்டு திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும் நாணினன்; அவனுக்கு உதவிய கருவிகளும் நாணின என்க. புரம் எரிக்குங்கால் சிவன்கொண்ட துணைப் பொருள்களாவன:- மேருமலை வில், திருமால் அம்பு, வாசுகி நாண்.

(சுந்தர. பிணிவீட்டு படலம். அனுமன் வாலை நீட்டினன்)

துப்பு உறழ் மேனி அண்ணல்

80 அப்புஉறழ் வேலை காறும்
அலங்குபேர் இலங்கை தன்னை,
எப்புறத்து அளவும் தீய
ஒருகணத்து எரித்த கோட்பால்,
துப்புஉறழ் மேனி அண்ணல்,
மேருவில் குழைய, தோளால்
முப்புரத்து எய்த கோலே
ஒத்தது;அம் மூரிப் போர்வால்.

பொழிப்பு: நீர் மிக்க கடலை எல்லையாகக்கொண்டு விளங்குகின்ற பெரிய இலங்கை நகரத்தை, எல்லாப் பாகத்தின் எல்லை அளவும் கரிந்து போகும்படி, ஒரு கணத்திலே எரித்த திறத்தால், பவளம்போன்ற உடம்பை உடைய பெருமை பொருந்திய சிவபெருமான், மேருவாகிய வில்லை வளைத்து, தோள்வலிமைகொண்டு, முப்புரத்தின் மேல்விட்ட கணையை ஒத்திருந்தது (அனுமனின்) அந்த வலிமிக்க போர்வல்ல வாலானது.

விளக்கம்: திரிபுரம் எரித்தபோது சிவபெருமான் செலுத்திய திருமாலாகிய அம்பை நிகர்த்தது அனுமனின் வால்என்க. அப்பு: நீர். உறழ்: மிக்க. வேலை: கடல். கோட்பாடு: திறம். துப்பு உறழ்: பவளம் போன்ற. குழைய: வளைய. கோல்: அம்பு.

(சுந்தர. பிணிவீட்டு படலம். அனுமன் வாலின் திறம்)

உகக்கடை உலகம் யாவும் ஒழிப்போன்

81 உகக்கடை, உலகம் யாவும்
உணங்குற, ஒருதன் நாட்டம்
சிகைக்கொழுங் கனலை வீசும்
செயல்,முனம் பயில்வான் போல,
மிகைத்துஎழு தீயர் ஆயோர்
விரிநகர் வீயப் போர்வால்,
தகைத்தல்இல் நோன்மை சாலும்
தனிவீரன் சேணில் உய்த்தான்

பொழிப்பு: உக முடிவில் உலகங்கள் யாவும் அழியும்படி, ஒப்பற்ற தன் நெற்றிக்கண்ணினின்றும் தீப்பொறிகளை உடைய பெருநெருப்பை வீசுகின்ற செய்கையை, முன்னமேயே பழகுவான் போன்று, தடுக்க முடியாத வலிமைமிக்க தனி வீரனாகிய அனுமன், செருக்குற்று எழுந்த கொடிய அரக்கர்களது பரந்த ஊரான இலங்கை நகரம் அழியுமாறு, போர்த்திறம் அமைந்த தனது வாலை நெடுந்தூரம் செலுத்தினான்.

விளக்கம்: உகக்கடை: உலக முடிவு. உணங்குற: அழிய. சிகை: தீப்பொறி. வீய: அழிய. தகைத்தல் இல்நோன்மை: தடுத்தற்கரிய ஆற்றல். சேண்: நீண்டதூரம்.

(சுந்தர. பிணிவீட்டு படலம். வாலில்பற்றிய தீயை இலங்கை முழுதும் செலுத்தல்)

ஆலம் உண்டவன் ஊட்ட உண்டான்

82 நீல்நிற நிருதர், யாண்டும்
நெய்பொழி வேள்வி நீக்க,
பால்வரு பசியன், அன்பால்
மாருதி வாலைப் பற்றி,
ஆலம்உண் டவன்நன்று ஊட்ட,
உலகுஎலாம் அழிவின் உண்ணும்
காலமே என்ன மன்னோ,
கனலியும் கடிதின் உண்டான்.

பொழிப்பு : கருநிறம் வாய்ந்த அரக்கர்கள், எல்லாவிடத்தும் நெய் பொழிந்து செய்யும் வேள்விகளைத் தடுத்தலால், தன் வயிற்றில் பசியைக் கொண்டவனாகிய தீக் கடவுள், அன்பு காரணமாகத் தன் துணைவனான காற்றுக் கடவுளின் மைந்தனாகிய அனுமனின் வாலைப் பிடித்துக்கொண்டு, நஞ்சு உண்டவனாகிய சிவபிரான் நன்றாக உண்பிக்க, உலகங்கள் எல்லாவற்றையும் அழியுமாறு உண்ணுகின்ற ஊழிக்காலமே என்று கருதி விரைவின் உண்ணலானான்.

விளக்கம் : கனலி உண்டான் என முடிக்க. கனலி : நெருப்பு.

(சுந்தர. பிணிவிட்டு படலம். இலங்கையை எரி உண்ணல்)

முத்தலை எஃகினான்

83 முத்தலை எஃகி னாற்கும்
முடிப்பஅருங் கருமம் முற்றி,
வித்தகத் தூதன் மீண்டது
இறுதியாய் விளைந்த தன்மை,
அத்தலை அறிந்த எல்லாம்
அறைந்தனம்; ஆழி யான்மாட்டு
இத்தலை நிகழ்ந்த எல்லாம்
இயம்புவான் எடுத்துக் கொண்டாம்.

பொழிப்பு : மூன்று தலையை உடைய சூலத்தைத் தாங்கிய சிவபெருமானாலும் செய்ய முடியாத காரியங்களை எல்லாம் செய்து முடித்து மீண்ட மேம்பட்ட தூதனாகிய அனுமன் மீண்டது வரை அங்கு நடந்த எல்லாவற்றையும் அறிந்தபடி சொன்னோம். இனி, ஆழியானாகிய இராமனிடத்து இங்கு நிகழ்ந்த எல்லாவற்றையும் சொல்லத் தொடங்குகின்றோம்.

விளக்கம் : வித்தகம் : சதுரப்பாடு. அத்தலை : அவ்விடத்து. இத்தலை : இவ்விடத்து. ஆழியான் : சக்கரப் படையை உடையவன்; பாற்கடலில் அறிதுயில் கொள்வோனும் ஆம்.

(சுந்தர. திருவடி தொழுத படலம். இராமன் செய்கை கூறத் தொடங்குகின்றார்)

விடையில் தோன்றும் விமலன்

84 கருடனில் விடையில் தோன்றும்
இருவரும் கடுப்ப, காலின்
அருள்தரு குமரன் தோள்மேல்,
அங்கதன் அலங்கல் தோள்மேல்,
பொருள்தரும் வீரர் போத,
பொங்குஒளி விசும்பில் தங்கும்
தெருள்தரு புலவர் வாழ்த்திச்
சிந்தினர், தெய்வப் பொற்பூ.

பொழிப்பு : கருடன் மீதும், விடையின் மேலும்ஏறி வருகின்றதிருமால், சிவன் என்ற இருவரையும் ஒப்ப, காற்றுக் கடவுள் கருணையால் பெற்ற மைந்தனாகிய அனுமன் தோள் மேலும், அங்கதனது மாலை அணிந்த தோள் மீதும், வேண்டிய பொருள்களை ஈயும் இராமன் இலக்குவன் என்ற இரண்டு வீரர்களும் வர, (அப்பொழுது) மிக்க ஒளியை உடைய விண்ணில் வாழும், தெளிவைத் தருகின்ற அறிவுடைத் தேவர்கள் வாழ்த்துக்கூறி, கடவுள் தன்மை வாய்ந்த பொன்மயமான பூக்களை வாரி இறைத்தார்கள்.

விளக்கம் : அனுமன் தோளில் இராமனும், அங்கதன் தோளில் இலக்குவனும் இவர்ந்துவந்தனர். அக்காட்சி கருடன் மீது திருமாலும், விடையின் மீது சிவனும் பவனி வருவதை ஒத்தது என்க. கருமேனி இராமன் திருமாலையும், செம்மேனி இளவல் சிவனையும் நிகர்த்தனர். இதனைக்கண்டு அறிவுமிக்க தேவர்கள் இறும்பூதுஎய்தி, வாழ்த்திப் பூமாரி பொழிந்தனர். கடுப்ப : ஒப்ப. கால்: காற்று. போத : வர. தெருள் : தெளிவு. புலவர் : அறிஞர்.

(சுந்தர. திருவடி தொழுத படலம். புலவர் பூமாரி பொழிந்தனர்.)

ஓங்கு முக்கணன்

85 வாங்கி வெஞ்சிலை, வாளிபெய்
புட்டிலும் மலைபோல்
வீங்கு தோள்வலம் வீக்கினன்,
கோதையை விரலால்

தாங்கி நாணினைத் தாக்கினன்;
தாக்கிய தமரம்,
ஓங்கு முக்கணுன் தேவியைத்
தீர்த்துளது ஊடல்.

பொழிப்பு: (இராமபிரான் இலக்குவனிடம்) கொடிய வில்லைப் பெற்று, அம்புகள் அடங்கிய அம்பருத்தூணியை, மலை போல் பருத்த, தன் வலத் தோளிலே கட்டியவனாய், உடும்புத் தோலால் ஆய உறையை விரலில் அணிந்து, வில் நாணைத் தெறித்தான்; அந்தத் தெறித்த ஓசை, உயர்ந்தவனாகிய முக்கண் உடைய சிவபெருமான் தேவியாகிய உமையவளின் ஊடலைத் தீர்த்துவிட்டது.

விளக்கம்: வில் இலக்குவன் கையில் இருந்தமையால் அது பெற்றது வாங்கி என்று சொல்லப்பெற்றது. வாளி பெய்புட்டில்: அம்பருத் தூணி. விக்குதல்: கட்டுதல். கோதை: உடும்புத் தோலால் ஆய உறை. தமரம்: ஓசை. கைலையில் சிவபிரானோடு ஊடல் உற்றிருந்த உமையவள் இராமன் எழுப்பிய நாண் ஒலி கேட்டு அஞ்சி இறைவனைப் புல்லிவிட்டாள் ஆதலின் ஊடல் தீர்ந்தது என்க.

(யுத்த. வருணனை வழி வேண்டு படலம். இராமனின் வில் நாண் ஒலி.)

தேவன் சென்னி நங்கை பதைத்தாள்

86 அண்டமூ லத்துக்கு அப்பால்
ஆழியும் கொதித்தது; ஏழு
தெண்திரைக் கடலின் செய்கை
செப்பிஎன்? தேவன் சென்னிப்
பண்டைநாள் இருந்த கங்கை
நங்கையும் பதைத்தாள்; பார்ப்பான்
குண்டிகை இருந்த நீரும்
குளுகுளு கொதித்தது அன்றே.

பொழிப்பு: (இராமன் தொடுத்த அம்பினுல்) அண்டத்தின் அடிக்கு அப்புறம் உள்ள கடலும் கொதித்துவிட்டது. ஏழாக உள்ள தெளிந்த நீரைக்கொண்ட கடலின் செயலேச் சொல்லி என்ன பயன்? சிவ பெருமானின் முடியிலே அந்த நாள்தொட்டு இருந்துவரும் கங்கை என்னும் மாதும் துடித்துவிட்டாள்; பிரமதேவனது கமண்டலத்தில் இருந்த நீரும் ' குளு குளு ' என்ற ஓசையுடன் கொதித்துவிட்டது.

விளக்கம்: அன்றே: தேற்றம். நீருக்குத் தலேவனுன வருணன் மீது அம்புபட்டதால் நீரின் தொடர்பு கொண்ட இவ்வுலகுக்கு அப்பாற் பட்ட கடலும், கங்கை நீரும், பிரமன் கமண்டல நீரும்கூடக் கொதித்து விட்டன என்க.

குளுகுளு: ஒலிக்குறிப்பு.

(யுத்த. வருணனே வழி வேண்டுபடலம். எல்லாம் கொதித்து விட்டன.)

சங்கரற்கும் வலி சாய்விலர்

87 வெங்க ரத்தர்,அயில்
வாளினர், வில்லோர்,
சங்க ரற்கும்வலி
சாய்வுஇல் வலத்தோர்,
அங்குஅ ரக்கர்சத
கோடி அமைந்தோர்,
பொங்குஅ ரத்தவிழி
யோர்புடை சூழ.

பொழிப்பு: கொடிய கைகளே உடையவரும், கூர்மிக்க வாளேக் கொண்டவரும், வில்லே ஏந்தியவரும் சிவபிரானுக்கும் ஆற்றல் குறையாத வலியுடையவரும், நூறு கோடி என்று சொல்லத்தக்க எண்ணிக்கையாள ரும், இரத்தம் பொங்குகின்ற கண்களே உடையோரும் ஆகிய, காவலாக அமைந்த அரக்கர்கள் அவ்விடத்துப் பக்கத்திலே சூழ்ந்துவர.

விளக்கம்: அயில்: கூர்மை. வலி: வெற்றி. சதம்: நூறு.

(யுத்த. இராவணன் வானரத்தானே காண்படலம். கோபுரத்தின் மேல் இராவணன் நின்ற நிலே)

ஆலவிடம் அன்றுவர நின்ற சிவன் அன்னுன்

88 காலஇருள் சிந்துகதி-
-ரோன்மதலே கண்ணுற்று,
ஏலஎதிர் சென்றுஅடல்
இராவணனே எய்தி,
நீலமலே முன்கயிலே
நின்றதுஎன, நின்ருன்;
ஆலவிடம் அன்றுவர
நின்றசிவன் அன்னுன்.

பொழிப்பு: காலத்துத் தோன்றிய இருளே ஒழிக்கின்ற கதிரவனின் மைந்தனுன சுக்கிரீவன் (இராவணனேக்)கண்டு, பொருந்துமாறு அவன் எதிரே போய் ஆற்றல் வாய்ந்த அந்த இராவணனே அணுகி, நீலமலேக்கு முன்னே கயிலே மலே நின்றதைப் போல நின்ருன்; ஆலகாலவிடம் அன்று வந்தபோது (அவ்விடத்தின் முன்னே அஞ்சாது) நின்ற சிவபெருமானே (அந்தச் சுக்கிரீவன்) ஒத்தான்.

விளக்கம்: கருநிறம் உள்ள இராவணனுக்கு நீலமலே உவமை. அவன் நிறத்துக்கு மட்டும் அன்றி குணத்துக்கும் ஆலவிடம் ஒப்பு. சுக்கிரீவன் வெண்மை நிறம் உடையான் ஆதலின் வெள்ளிமலேயையும், வெண்ணீறு அணிந்த சிவனேயும் ஒத்தான் என்க.

(யுத்த. மகுட பங்கப் படலம். இராவணன் எதிரில்
சுக்கிரீவன் நின்ற நிலே)

எரித்தவனே ஒத்தவன்

89 திரித்தவன் உரத்தின்உகிர்
செற்றும்வகை குத்தி,
பெருத்துஉயர் தடக்கைகொடு
அடுத்துஇடை பிடித்து,
கருத்துஅழி வுறத்,திரி
திறத்துஎயில் கணத்துஅன்று
எரித்தவனே ஒத்தவன்
எடுத்துஅகழி இட்டான்.

பொழிப்பு : திரியும் திறம்பெற்ற, முப்புரங்களை அந்த நாள் கணத்தில் எரித்தவனுகிய சிவபெருமானை ஒத்த சுக்கிரீவன், (தன்னைச்) சுழற்றியவனுன இராவணனுடைய மார்பில் நகம் படியுமாறு குத்தி, பெருத்து உயர்ந்த விசாலமான தன் கைகளைக்கொண்டு, அணுகி (இராவணனுடைய) இடையைப் பிடித்து, அவ்விராவணன் கருத்து அழிய அவனை எடுத்து அகழியிலே போட்டான்.

விளக்கம் : 'திரிதிறத்து எயில்' என்பதை முதலில் எடுத்துக் கொள்ளவேண்டும். நகரும் தன்மை வாய்ந்த கோட்டை என்பது பொருள். எயில், இங்கு எயில் சூழ்ந்த ஊரை உணர்த்துகின்றது. உரம் : மார்பு. உகிர் : நகம். அகழி : கிடங்கு. இவ்அகழி இராவணனின் அரண்மனையைச் சுற்றிலும் உள்ளதாதல் வேண்டும்.

(யுத்த. மகுட பங்கப் படலம். இராவண சுக்கிரீவப் போர்)

ஊழியின் உருத்திரன்

90 ஊழியின் உருத்திரன்
உருவு கொண்டு,தான்
ஏழ்உயர் உலகமும்
எரிக்கின் ருன்என,
வாழிய வரிசிலைத்
தம்பி மாப்படைக்
கூழையின் நெற்றிநின்-
-ருனைக் கூடினுன்.

பொழிப்பு : ஊழிக் காலத்தில் உருத்திர மூர்த்தியின் வடிவத்தைக் கொண்டு தான், ஏழாக உள்ள உயர்ந்த உலகங்களை எல்லாம் எரிக்கின்றவன் என்று சொல்லுமாறு, பெரிய சேனையின் பின்னணியின் முகப்பிலே நின்றவனுகிய, உலகம் வாழ்வதற்குக் கட்டமைந்த வில்லைத் தாங்கிய தம்பி இலக்குவனை (இராமன்) சேர்ந்தான்.

விளக்கம் : மாப்படை : பெரிய சேனை. கூழை : பின்னணி. நெற்றி : முகப்பு.

(யுத்த. முதல் போர்புரி படலம். போர்க்களத்து இராமன்
இலக்குவனை அடைதல்)

அள்ளி எடுத்த வெள்ளி அங்கிரி

91 உள்ளி, வெம்பிணத்து உதிரநீர்
வெள்ளத்தின் ஓடி,
அள்ளி அம்கைகள் இருபதும்
பற்றிப்பண்டு அரன்மா
வெள்ளி அம்கிரி எடுத்தது
வெள்கினுன் என்ன,
எள்இல் பொன்மலே எடுக்கலுற்-
-ருன்என எடுத்தான்.

பொழிப்பு: (இலக்குவனுடைய உடலேத் தூக்கிச் செல்ல) நினைத்து, கொடிய பிணங்களின் குருதிக்கடலின் நடுவே ஓடி, தனது இருபது அழகிய கைகளாலும் (இலக்குவன் உடலே) கவ்விப்பிடித்து, முன்பு அரன் இருந்த சிறந்த அழகிய வெள்ளிமலேயை எடுத்ததற்கு நாணினவனுகி, குற்றமற்ற பொன்மலேயைத் தூக்குவான் போல எடுக்க முற்பட்டான். (இராவணன்.)

விளக்கம்: இலக்குவன் பொன் நிறமுடையான் ஆதலின் பொன் மலேக்கு உவமை கூறப்பெற்ருன். பொன்மலே இருக்க வெள்ளி மலேயைத் தூக்கியது குறைவு என்று கருதி இராவணன், முன் வெள்ளி மலே எடுத்ததற்கு வெள்கினுன் என்க. உள்ளி: நினேத்து. அங்கைகள் இருபதும் அள்ளிப் பற்றி என மாற்றுக. அள்ளிப்பற்றி: இறுகப்பிடித்து.

(யுத்த. முதல் போர்புரி படலம். இராவணன் இலக்குவனே எடுக்க முயலுதல்)

கயிலே ஈசன்

92 ஆசி சொல்லினர் அருந்தவர்;
அறம்எனும் தெய்வம்
காசுஇல் நல்நெடுங் கரம்எடுத்து
ஆடிட, கயிலே
ஈசன், நான்முகன், என்றுஇவர்
முதலிய இமையோர்
பூசல் காணிய வந்தனர்,
அந்தரம் புகுந்தார்.

பொழிப்பு : அரிய தவமுனிவர்கள் வாழ்த்து வழங்கினர்; அறம் என்ற கடவுள் குற்றமற்ற நல்ல நீண்ட கையைத் தூக்கி ஆனந்தக் கூத்து ஆட, கயிலை வாழ் சிவபெருமானும், பிரமதேவனும் என்ற இவர்களை முதலாகக் கொண்ட அமரர்கள், போரைக் காணும் பொருட்டு, வந்து வானவெளியில் நுழைந்தார்கள்.

விளக்கம் : ஆசி: வாழ்த்து. காசு: குற்றம். பூசல்: போர். காணிய: காணும் பொருட்டு.

(யுத்த. முதல் போர்புரி படலம். இராம இராவணப் போருக்கு மேலோர் மகிழ்ச்சி)

உண்ணும் காலத்து உருத்திரன்

93 அண்ணல், அஞ்சன வண்ணனும்,
அமர்குறித்து அமைந்தான்,
எண்ண அரும்பெரும் தனிவலிச்
சிலையைநாண் எறிந்தான்;
மண்ணும், வானமும், மற்றைய
பிறவும்தன் வாய்ப்பெய்து,
உண்ணும் காலத்துஅவ் உருத்திரன்
ஆர்ப்புஒத்தது, ஓதை.

பொழிப்பு : பெருமையிற் சிறந்தோனாகிய மை நிறமுடைய இராமன், போர் செய்யப் பொருந்தியவனாகி, கணக்கிட முடியாத அரிய, பெருமை பெற்ற, ஒப்பற்ற, ஆற்றல் வாய்ந்த வில்லை நாண் ஏற்றி ஓசையை எழுப்பினான். அந்த ஓசை, மண்ணுலகத்தையும், விண்ணுலகத்தையும், மற்றைய எல்லாவற்றையும் தன் வாயிலே அடக்கி உண்ணுகின்ற முடிவுக்காலத்து எழும் அந்த உருத்திரமூர்த்தியின் ஆரவாரத்தை ஒத்துத் தோன்றியது.

விளக்கம் : ஆர்ப்பு : ஆரவாரம். ஓதை : ஓசை.
(யுத்த. முதல் போர்புரி படலம். இராமன் வில் நாண் ஒலியை எழுப்பியது)

குலையாத் தேவதேவன்

94 ஆவி சென்றிலர், நின்றிலர்,
அரக்கரோடு இயக்கர்,
நாஉ லர்ந்தனர், கலங்கினர்,
விலங்கினர், நடுங்கி;

கோவை நின்றபேர் அண்டமும்
குலைந்தன; குலையாத்
தேவ தேவனும், விரிஞ்சனும்
சிரதலம் குலைந்தார்.

பொழிப்பு : (நாண் ஒலியைக் கேட்ட அச்சத்தால்) உயிர் போகா விடினும், ஓர் இடத்து நில்லாமல், நாஉலர்ந்து, நடுக்கம் எய்தி, கலங்கினராகி விலகினர் அரக்கரும், இயக்கரும்; வரிசையாக நின்ற பெரிய உருண்டைவடிவுள்ள உலகங்களும் நிலைகுலைந்தன; அசையாத சிவனும், பிரமனும் தலை ஆட்டம் கண்டனர்.

விளக்கம் . கோவை : வரிசை. அண்டம் : உருண்டை வடிவான உலகம். தேவதேவன் : சிவன். விரிஞ்சன் : பிரமன்.

(யுத்த. முதல் போர்புரி படலம். நாண் ஒலியினால் தோன்றிய நடுக்கம்)

சங்கரன் கொடுத்த வாள்

95 வாரணம் பொருத மார்பும்,
வரையினை எடுத்த தோளும்,
நாரத முனிவற்கு ஏற்ப
நயம்பட உரைத்த நாவும்,
தார்அணி மவுலி பத்தும்,
சங்கரன் கொடுத்த வாளும்,
வீரமும், களத்தே போட்டு
வெறுங்கையே மீண்டு போனான்.

பொழிப்பு : யானையோடு போர்செய்த மார்பையும், வெள்ளி மலையை அள்ளி எடுத்த தோள்களையும், நாரத முனிவனும் ஏற்றுக்கொள்ளுமாறு இனிமையாகப்பாடிய நாவையும், மாலைகள் அணிந்த பத்துமகுடங்களையும், சிவபெருமான் நல்கிய வாளாயுதத்தையும், வீரத்தையும் போர்க்களத்தே போட்டு விட்டு, வெறுங்கையுடனே திரும்பிப் போனான். (இராவணன்)

விளக்கம் : வாரணம் : யானை. நாரத முனிவன் இசைவல்லான் ஆதலின் அவனும் பாராட்ட இசையோடு சாம வேதம் பாடிய 'நா' என்க. உடம்பில் உள்ள மார்பையும், தோள்களையும், நாவையும் கொண்டுதான் இராவணன் திரும்பினான் எனினும், அவைகளின் ஆற்றல்களைப் போர்க் களத்திலே போட்டுவிட்டான் என்று கொள்க.

(யுத்த. கும்பகன்னன் வதைப்படலம். முதல் நாள் இராவணன் திரும்புதல்)

பொருப்பினன்

96 மூவகை உலகும் உட்க,
முரண்திசைப் பணைக்கை யானை
தாவரும் திசையின் நின்று
சலித்திட, கதிரும் உட்க
பூவுளான், புணரி மேலான்,
பொருப்பினன், முதல்வர் ஆய
யாவரும் துணுக்குற்று ஏங்க,
எளிதினின் எழுந்தான் வீரன்.

பொழிப்பு: மூன்று வகை உலகங்களும் அஞ்சவும், வலிய பருத்த துதிக்கையை உடைய திக்கு யானைகள் தத்தமக்குரிய இடங்களினின்று பெயர்ந்திடவும், சூரியனும் நடுங்கவும், அயன், அரி, அரன் முதலிய யாவரும் அஞ்சி ஏங்கவும் எளிமையாக எழுந்தான் வீரனாகிய கும்பகன்னன்.

விளக்கம்: கும்பகன்னன் பருத்த உடலைப் பெற்றவனாய் இருந்தும், அதற்கு ஏற்ற ஆற்றல் பெற்றிருந்தமையால், அருமைப் பாடு இன்றி உடலைத் தூக்கிக் கொண்டு எளிதின் எழுந்தான் என்க. உட்க: அஞ்ச. முரண்: வலிமை. பணை: பருத்த. சலித்தல்: நிலைபெயர்தல். பூவுளான்: தாமரை மலரில் உறையும் பிரமன். புணரிமேலான்: கடல் மேல் பள்ளி கொள்ளும் திருமால். பொருப்பினன்: மலையின் மீது அமரும் சிவன்.

(யுத்த. கும்பகன்னன் வதைப்படலம். கும்பகன்னன் துயில் எழுதல்)

இடபம் உந்தும் கடவுள்

97 விடம்எழுந்தது
போல்நெடு விண்ணினைத்
தொடஉயர்ந்தவன்
மார்பிடைச் சுற்றினன்,
இடபம் உந்தும்
எழில்இரு நான்குதோள்,
கடவுள் ஈந்த
கவசமும் கட்டினன்.

பொழிப்பு : விடமானது எழுந்து நின்றதைப் போல வானைத் தொடுமளவுக்கு உயர்ந்து நின்றவனாகிய கும்பகன்னனுடைய மார்பிலே, விடையைச் செலுத்தும் அழகிய எட்டுத் தோள் கொண்ட சிவபெருமான் அளித்த கவசத்தைச் சுற்றிவந்து கட்டினான். (இராவணன்)

விளக்கம் : விடம் கும்பகன்னனின் நிறத்துக்கு உவமை. தான் இருந்த இடத்திலிருந்து கட்ட முடியாதபடி சுற்றளவு உடையவன் கும்பகன்னன் ஆதலால், கவசத்தை இராவணன் சுற்றிவந்து கட்ட வேண்டுவதாயிற்று.

(யுத்த. கும்பகன்னன் வதைப்படலம். கும்பகன்னனைப் போர்க் கோலம் செய்தல்)

அறிவு முற்றிய பித்தன்

98 சித்திர வனமுலைச்
சீதை செவ்வியால்
முத்தனார், மிதிலைஊர்
அறிவு முற்றிய
பித்தன்வெஞ் சிலையினை
இறுத்த பேரொலி
ஒத்தது; சூலம்அன்று
இற்ற ஓசையே.

பொழிப்பு : தொய்யில் எழுதிய அழகிய முலைகளை உடைய சீதையின் பண்போடு கூடிய அழகு காரணமாக, வீடுபேறு அளிக்கவல்ல கடவுளின் பிறப்பாகிய இராமபிரான், மிதிலை நகரத்தில், அறிவு முதிர்ந்த பித்தனாகிய சிவபெருமானின் கொடியவில்லை ஒடித்தபோது உண்டான பேரோசையை, (அனுமனானவன் கும்பகன்னன்விட்ட) சூலப்படையை அன்று ஒடித்த போது தோன்றிய ஓசை ஒத்திருந்தது.

விளக்கம் : சித்திரம் : தொய்யில் எழுதுதல். தொய்யிலாவது மன்மதன் வில், அம்பு முதலியவற்றை, சந்தனக்குழம்பால் மகளிர் மார்பில் வரைதல். முத்தன் : இராமன். பித்தன் : சிவன். **"பித்தா பிறை சூடி"** என்றார் சுந்தரமூர்த்திகள். **"பிட்டு நேர்பட மண் சுமந்த பெருந்துறைப் பெரும் பித்தனே"** என்றார் மணிவாசகப் பெருமான். எனினும், சிவன் வெறும் பித்தன் அல்லன்; 'அறிவு முற்றிய பித்தன்' என்று சிறப்பித்துச் சொல்கின்றார் கவிச்சக்கரவர்த்தி.

(யுத்த. கும்பகன்னன் வதைப்படலம். கும்பகன்னன் வீசிய சூலத்தை அனுமன் ஒடித்தல்)

அறிவு அரும் அரன்

99 அனைய குன்றுஎனும் அசனியை
யாவர்க்கும் அறிவுஅரும் அரன்மேனி
புனையும் நல்நெடு நீறுஎன
நூறிய புரவலன், போர்வென்றி
நினையும் மாத்திரத்து, ஒருகைநின்று
ஒருகையின் நிமிர்கின்ற நெடுவேலை,
தினையின் மாத்திரைத் துணிபட,
வரன்முறை சிந்தினன், சரம்சிந்தி.

பொழிப்பு: அந்த மலை என்று பெயர் பெற்ற இடியை, எவராலும் அறிய முடியாத தன்மையுடைய சிவபிரான் உடம்பில் அணியும் நல்ல சிறந்த நீறுபோலப் பொடியாக்கிய இராமபிரான், போரின் வெற்றியை எண்ணிக்கொண்டிருந்த சமயத்தில் (கும்பகன்னன்) இடக் கையினின்றும் வலக்கையில் வாங்கி விடுத்த சூலப்படையை, நொடிப்பொழுதில் ஒடிந்து வீழுமாறு முறைப்படி அம்புகளைப் பொழிந்து அழித்தான். (இராமபிரான்)

விளக்கம்: அசனி: இடி. நூறிய: அழித்த. புரவலன்: இராமன். தினையின் மாத்திரை: மிகச் சிறிய காலஅளவு. சரம்: அம்பு. கும்பகன்னன் முன்னே மலையை எறியுங்கால் இடக்கையில் வைத்திருந்த சூலத்தை இப்போது வலக்கையில் மாற்றிக்கொண்டமையால் 'ஒருகை நின்று ஒரு கையின்' என்று கூறப்பட்டது.

(யுத்த. கும்பகன்னன் வதைப்படலம். கும்பகன்னன் படைகளை இராமன் அழித்தல்)

கண்ணுதல் பெருங்கடவுள்

100 அண்ணல் வில்கொடுங் கால்விசைத்து
உதைந்தன, அலைகடல் வறளாக
உண்ண கிற்பன; உருமையும்
சுடுவன; மேருவை உருவிப்போய்
விண்ண கத்தையும் கடப்பன;
பிழைப்பிலா மெய்யன; மேல்சேர்ந்த
கண்ணு தல்பெருங் கடவுள்தன்
கவசத்தைக் கடந்தில கதிர்வாளி.

பொழிப்பு: பெருமையிற் சிறந்த இராமபிரான் (கோதண்டம் என்னும்) வில்லின் வளைந்த காலினின்றும் விசையாகச் செலுத்தப் பட்டனவாகிய ஒளியைக் கக்கும் அம்புகள், அலைகடலையும் வற்றும்படி பருக வல்லன; இடியையும் எரிக்கும் ஆற்றல் உடையன; மேருமலையையும் ஊடுருவிச் சென்று வானுலகத்தையும் கடந்து போவன; தவறுமல் பயன் விளைவிப்பன; (எனினும்) அவ் அம்புகள், கும்பகன்னன் மீது பொருந்தி இருக்கின்ற, நெற்றிக்கண்பெற்ற பெரிய கடவுளாகிய சிவபெருமான் அளித்த கவசத்தைத் துளைக்க மாட்டாதன ஆயின.

விளக்கம்: அண்ணல்: இராமன். வறளாக: வற்றும்படி. உருமு: இடி. 'கண்ணுதல் பெருங்கடவுள்' என்ற சொற்றொடரைப் பரஞ்சோதி முனிவர் **'கண்ணுதல் பெருங்கடவுளும் கழகமோடு அமர்ந்து'** என்ற பாடலில் அருமையாகக் கையாள்கின்றார்.

(யுத்த. கும்பகன்னன் வதைப்படலம். சிவன் தந்த, கவசத்தின் சிறப்பு)

ஆலாலம் உண்டவன்

101 வாலால்வர வளைக்கும்,நெடு
மலைப்பாம்புஎன; வளையா,
மேல்ஆளொடு, மிடையும்முழு
மலைமேல்செல, வீசும்;
ஆலாலம்உண் டவனேஎன,
அகல்வாயின்இட்டு அதுக்கும்;
தோல்ஆயிரம் இமைப்போதினின்
அரிஏறுஎனத் தொலைக்கும்;

பொழிப்பு: (அனுமன்) தன் வாலினுல் நீண்டதூரம் வரையும், பெரிய மலைப் பாம்புபோல ஆயிரம் யானைகளை வளைத்துக்கொள்வான்; அப்படி வளைத்து, அந்த யானைகளின் மேலுள்ள பாகர்களுடன் அவை களை நெருங்கிய பெரிய மலைகளின் மீது வீசுவான்; ஆலகால விடத்தை உண்ட சிவன் இவனே என்று சொல்லுமாறு தன் அகன்ற வாயிலே அவ் யானைகளை இட்டு அதுக்கித் தள்ளுவான்; கணப்பொழுதில் ஆயிரம் யானைகளை ஆண் சிங்கத்தை ஒப்பத் தொலைப்பான்.

விளக்கம்: தோல். யானை. அரிஏறு: ஆண் சிங்கம்.
(யுத்த. அதிகாயன் வதைப் படலம். அனுமன் யானைக்கூட்டங்களை அழித்தல்)

ஈசற்கும் இயலாது

102 அத்தொழில் கண்ட வானோர்
ஆவலம் கொட்டி ஆர்த்தார் ;
'இத்தொழில் இவனுக்கு அல்லால்,
ஈசற்கும் இயலாது' என்பார் ;
குத்துஒழித்து அவன்கை வாள்தன்
கூர்உகிர்த் தடக்கை கொண்டான்,
ஒத்துஇரு கூருய் விழ
வீசி,வான் உலைய ஆர்த்தான்.

பொழிப்பு : (அங்கதனின்) அந்தச் செயலைக் கண்ட அமரர்கள் கைகொட்டி ஆரவாரம் செய்தார்கள்; "இந்தச் செயல் இவனைத்தவிர உருத்திரமூர்த்திக்கும் செய்யமுடியாது" என்று சொல்வார்கள்; அங்கதன் அந்த (நராந்தகனைக்)குத்துதலை நிறுத்திக்கொண்டு, அவன் கையிலிருந்த வாளாயுதத்தைத் தன்னுடைய கூர்மையான நகங்கள் கொண்ட பெரிய கையில் பற்றிக்கொண்டவனுய் அவன் உடல் சரியாக இரு பகுதியாக வீழுமாறு அந்த வாளால் வீசி வானவரும் அஞ்சுமாறு ஆரவாரம் செய்தான்.

விளக்கம் : ஆவலம் கொட்டி ஆர்த்தல் : கைகொட்டி ஆரவாரம் செய்தல்.

(யுத்த. அதிகாயன் வதைப்படலம். அங்கதன் நராந்தனைக் கொல்லுதல்)

தார்கொன்றையினுன்

103 'ஆர்கொன் றவர்?'என்றது மே,அதி-
-காயன் என்னும்
பேர்கொன் றவன்வென்றி இலக்குவன் ;
பின்பு நின்றுர்
ஊர்கொன் றவனல்,பிற ரால்என,
உற்ற எல்லாம்,
தார்கொன் றையினுன்கிரி, சாய்த்தவன்
தான்உ ரைத்தான்.

பொழிப்பு : (அதிகாயன் முதலியோரைக்) கொன்றவர் யார் என்று (இந்திரசித்தன்) கேட்டவுடனே, கொன்றை மாலையை அணிந்த சிவபெருமானின் மலையைச் சாய்த்தவனாகிய இராவணன், 'அதிகாயன் என்னும் பெயரைக் கொண்டவனை வெற்றி வீரனான இலக்குவன் கொன்றான் ; மற்றையோர் இலங்கையை எரித்த அனுமனாலும், பிறராலும் கொல்லப்பட்டனர்' என நடந்த எல்லாவற்றையும் சொன்னான்.

விளக்கம் : ஊர்கொன்றவன் : இலங்கையை எரிஊட்டிய அனுமன்.

(யுத்த. நாகபாசப்படலம். இந்திரசித்தனுக்கு இராவணன் கூறியது)

மழுவாளன் விடை

104 பொன்சென்று அறியா உவணத்தனிப்
புள்ளி னுக்கும்,
மின்சென்று அறியா மழுவாளன்
விடைக்கும், மேல்நாள்,
பின்சென்றது அல்லால், பெருகும்சிறப்பு
உற்ற போதும்,
முன்சென்று அறியாதது, மூன்றுஉல-
-கத்தி னுள்ளும்.

பொழிப்பு : (இந்திரசித்தனின் தேர்) பொன்னும் சமமாகச் செல்லுதலை அறியாத (நிறத்தை உடைய) (திருமாலின் ஊர்தியாகிய) கருடன் என்னும் ஒப்பற்ற பறவைக்கும், மின்னலும் அணுக முடியாத மழு என்ற படை ஏந்திய சிவபெருமான் ஊர்தியான காளைக்கும் அந்த நாளில் பின்னே சென்றது அல்லாமல், அவ்வூர்திகள் பெரிய சிறப்பைப்பெற்ற காலத்திலும் மூன்று உலகத்திலும் முன்னே சென்று அறியாதது.

விளக்கம் : இந்திரசித்தனது தேரானது, திருமாலும் சிவனும் போர் செய்த போதெல்லாம் அவர்கள் ஓட, அவர்களுடைய ஊர்திகளின் பின்னே சென்று அறியுமே அல்லாது ஒருநாளும் முன்னே சென்று அறியாதது, என்றமையால் இந்திரசித்தன் இதுகாறும் தோற்றான் அல்லன் என்க.

'' முக்கணன் முதலினோரை உலகொரு மூன்றினோடும்
புக்கபோர் எல்லாம்வென்று நின்ற என்புதல்வன் ''

என மண்டோதரியும்,

"நீறு பூசியும், நேமியும் நீங்கினர்,
மாறு குன்ெருடு வேலே மறைந்துளார்,
ஊறு நீங்கின ராய்,உவ ணத்திேனுேடு
ஏறும் ஏறி உலாவுவர்"

என இராவணனும் இந்திரசித்தன் இறந்தபோது புலம்பியது ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. அவ்விரண்டும் தாய் தந்தையர் கூற்று. இது கவிக் கூற்று ஆதலின் இன்னும் சிறப்புப் பெறுகிறது.

(யுத்த. நாகபாசப் படலம். இந்திரசித்தன் தேரின் பெருமை)

உலகை உண்ணும் உருத்திர மூர்த்தி

105 சூலமும் மழுவும் தாங்கித்
தோள்இரு நான்கும் தோன்ற,
மூலம்வந்து உலகை உண்ணும்
உருத்திர மூர்த்தி என்ன,
நீலன்,நின் றுழியே நின்ருன்;
நிரந்தரம், கணங்க ளோடும்,
காலன்என்று ஒருவன், யாண்டும்
பிரிந்திலன் பாசக் கையான்.

பொழிப்பு: சூலப் படையையும், மழுப் படையையும் கைகளில் ஏந்திக்கொண்டு, எட்டுத் தோள்களும் விளங்க, முதற் கடவுளாகிய, உலகத்தை எல்லாம் ஒருசேர அழிக்கின்ற ஊழிக்காலத்து உருத்திரனேப் போலவும், நிரந்தரமாகத் தன் கூட்டத்தோடு எமன் என்ற ஒருவன் எங்கும் பிரிந்துசெல்ல முடியாதவனுய் பாசக்கயிற்றைக் கையில் ஏந்தி நின்றவனேப் போலவும் (பகைவர்களே அழித்துவிட்டு) நின்ற இடத்தி லேயே நின்ருன், நீலன்.

விளக்கம்: நீலன் உலகத்தை அழிக்கும் ஊழிக்காலத்து உருத் திரனேயும், உயிர்களேக் கவரும் காலனேயும் ஒத்தான் என்க.

(யுத்த. நாகபாசப்படலம். நீலனின் போராற்றல்)

உருத்திரனும் உடல் கூச வீசினுன்

106 ஆசை எங்கணும்
அம்புஉக, வெம்புபோர்
ஓசை விம்ம,
உருத்திர னும்உடல்

கூச ஆயிர
கோடி கொலேக்கணே
வீசி, விண்ணே
வெளிஇலது ஆக்கினுன்.

பொழிப்பு: (இந்திரசித்தன்) திக்கு முழுதும் அம்புகள் சிந்த, கொடும் பேரொலி பெருக, உருத்திரமூர்த்தியும் உடல் நடுங்க, பலகோடி கொல்லும் அம்புகளே எறிந்து, வானவெளியில் இடம் இல்லாதபடி செய்தான்.

விளக்கம்: ஆசை: திக்கு. உக: சிந்த. விம்ம: பெருக. இந்திரசித்தன் சிந்திய அம்புக்கூட்டத்தால் விண்ணில் வெற்றிடம் இல்லேயாயிற்று.

(யுத்த. நாகபாசப்படலம். இந்திரசித்தன் அம்பின் பெருக்கம்)

மணிநீர்க் கங்கை தாங்கினுன்

107 வாங்கினுன்; மலரின் மேலான்,
வானக மணிநீர்க் கங்கை
தாங்கினுன், உலகம் தாங்கும்
சக்கரத் தவன்,என் ருலும்
வீங்கு,வான் தோளே வீக்கி
வீழ்த்துஅலால், மீள்கி லாத,
ஓங்கு,வாள் அரவின் நாமத்து
ஒருதனிப் படையை உன்னி.

பொழிப்பு: (இந்திரசித்தன்) மலரின் மேல் உறையும் பிரமனும், விண்ணிடத்துள்ள அழகிய நீர்க் கங்கையைத் தாங்கிய சிவனும், உலகத்தைக் காக்கின்ற சக்கரப்படைகொண்ட திருமாலும், என்ற இவர்களேக் கூட, பருத்த சிறந்த தோள்களேக் கட்டித் தள்ளின் அல்லாது திரும்பாத, ஒளிவிடும் கொடுமையான பாம்பின் பெயர்கொண்ட ஒப்பற்ற ஓர் படையை நினேந்து தேர்ந்தெடுத்தான்.

விளக்கம்: உன்னிவாங்கினுன் என முடிக்க. இச்செய்யுள் பூட்டுவில் பொருள் கோள். அரவின் நாமத்து ஒரு தனிப்படை-நாகபாசம் என்க.

(யுத்த. நாகபாசப்படலம். இந்திரசித்தன் நாகபாசத்தைத் தொடுக்க எடுத்தல்)

உடைபுலித் தடக்கை அண்ணல்

108 படைஉறு பிணத்தின் பம்மல்
பருப்பதம் துவன்றி, பல்வேறு
இடைஉறு குருதி வெள்ளத்து,
எறிகடல், எழுநீர் பொங்கி,
உடைபுலித் தடக்கை அண்ணல்
உயிர்எலாம் ஒருங்க உண்ணும்
கடைஉறு காலத்து, ஆழி
உலகுஅன்ன களத்தைக் கண்டான்.

பொழிப்பு: படைகள் தைத்த பிணங்களின் கூட்டம் மலைபோல் நிறைந்து, பலவிதமான, இடை இடையே தோன்றும் இரத்தவெள்ளத்திலே, பொங்கி எழும் அலை வீசுகின்ற கடலால், புலித்தோலை உடுத்திய பெரிய கையை உடைய சிவபிரான் உயிர்கள் அனைத்தையும் ஒருசேர உண்ணும் இறுதிக்காலத்துத் தோன்றும் கடலினால் கொள்ளப்பட்ட உலகம் போன்ற போர்க்களத்தை (இராமபிரான்) கண்டான்.

விளக்கம்: 'எழுநீர் பொங்கி' என்ற சொற்றொடரை, இடைநிலை விளக்காக, குருதி வெள்ளத்து எறி கடலுக்கும், கடை உறு காலத்து ஆழிக்கும் கொள்ளலாம். பம்மல்: கூட்டம். பருப்பதம்: மலை. துவன்றி: நெருங்கி. களம்: போர்க்களம்.

(யுத்த. நாகபாசப் படலம். இராமன் களத்தைக் காண்டல்)

ஈசன் வேல்

109 பழிப்புஅறு மேனி யாள்பால்
சிந்தனை படர, கண்கள்
விழிப்புஇலன், மேனி சால
வெதும்பினன், ஈசன் வேலும்,
குழிப்புஅரிது ஆய மார்பை,
மன்மதன் கொற்ற வாளி
கிழிப்புற, உயிர்ப்பு வீங்கிக்
கிடந்தவாள் அரக்கன் கேட்டான்.

பொழிப்பு: பழிப்புக்கு இடம் இல்லாத உடம்போடு கூடியவளாகிய சீதையினிடத்து எண்ணம்பாய, அதனாலே கண்களைத் திறந்து வேறொன்றையும் பாராதவனாகி, தன் உடல் பெரிதும் கொதிப்படையப்பெற்று, சிவபெருமானின் வேலாயுதமும் துளைத்தற்கு அரிய மார்பைக் காமனுடைய வெற்றி அம்புகள்கிழித்து ஊடுருவிச்செல்ல, பெருமூச்சு வாங்கிக்கொண்டு கிடந்த, வாள் தாங்கிய அரக்கனும் இராவணன் (வானரரின் வெற்றி ஆரவாரத்தைக்) கேட்டான்.

விளக்கம்: ''பழிப்பறுமேனியாள்'' என்ற சொற்றொடர், ஆற்றல் வாய்ந்த மாற்றான் சிறையில் இருப்பினும் சீதையின் உடல் மாசுபடவில்லை என்பதைக் காட்டுகின்றது. கண்கள் விழிப்பிலன் என்பது சீதையைத் தவிர, வேறொன்றைக்காணும் கண்ணிலன் ஆனான் இராவணன் என்று காட்டுகின்றது.

(யுத்த. நாகபாசப் படலம். வானரர் ஆரவாரத்தை இராவணன் கேட்டல்)

ஏழைபங்கத்தன்

110 சங்கத்தின் முழக்கம் கேட்ட
கவிப்பெருந் தானை, யானை
சிங்கத்தின் முழக்கம் கேட்டது
ஒத்தது, விரிந்து சிந்தி
'எங்குஉற்ற' என்னு வண்ணம்
இரிந்தது;ஈது அன்றி ஏழை-
-பங்கத்தன் மலைவில் அன்ன
சிலைஒலி பரப்பி ஆர்த்தான்.

பொழிப்பு (இந்திரசித்தனின்) சங்கின் பேரொலியைக் கேட்ட பெரிய குரக்குச் சேனை, சிங்க முழக்கத்தைக் கேட்ட யானையை ஒத்ததாகி, பரந்து, சிதறி 'எங்குச் சென்றது' என்று அறியமுடியாதவாறு நிலைகுலைந்து ஓடியது; இது அல்லாமல் அம்பிகையைப் பக்கத்திலே உடைய சிவபெருமானின் வில்லாகிய மேரு மலையை ஒத்த, தன் வில்லின் ஒலியைப் பரப்பித் தானும் ஆரவாரம் செய்தான். (இத்திரசித்தன்)

விளக்கம்: கவி: குரங்கு. விரிந்து: பரவி. சிந்தி: சிதறி. இரிந்தது: நிலைகுலைந்து ஓடிற்று. ஏழை: உமையவள்.

(யுத்த. பிரமாத்திரப் படலம். இந்திரசித்தன் ஆரவாரத்தால் குரக்குச் சேனை இரிந்தோடுதல்)

உமைக்கு ஒரு பாகன்

111 இமைப்பதன் முன்னம் வந்த
இராக்கத வெள்ளம் தன்னைக்
குமைத்தொழில் புரிந்த வீரர்,
தனுத்தொழில் குறித்துஎன்று எம்மால்
அமைப்பதுஎன்? பிறிதுஒன்று உண்டோ?
மேருஎன்று அமைந்த வில்லால்
உமைக்குஒரு பாகன், எய்த
புரங்களின் ஒருங்கு வீழ்ந்த.

பொழிப்பு: கண்மூடித் திறப்பதற்கு முன்னமே, எதிர்ப்பட்டு வந்த கடல் போன்ற அரக்கர் சேனையை அழிக்கும் தொழில்செய்த இராம இலக்குவ ராகிய வீரர்களின் வில்லாற்றல் குறித்து, நாம் சொல்லக்கூடியது என்ன இருக்கிறது. மேருமலை என அமைந்த வில்லினால், உமையவளுக்கு உடம் பில் ஒரு பகுதியை அளித்த சிவபெருமான் எய்து அழித்த முப்புரங்களைப் போல முழுமையும் அழிந்தன, என்று சொல்வதைத் தவிர வேறு ஒன்று உண்டோ? (இல்லை என்பது தேற்றம்)

விளக்கம்: குமைத்தல்: அழித்தல்.

(யுத்த. பிரமாத்திரப் படலம். இராம இலக்குவர் வில்லாற்றலை வியந்தது.)

சுடலை ஆடும் அண்ணல்

112 அருளுடைக் குரிசில் வாளி,
அந்தரம் எங்கும் தாம்ஆய்,
தெருளுறத் தொடர்ந்து வீசிச்
செல்வன, தேவர் காண
இருளிடைச் சுடலை ஆடும்
எண்புயத்து அண்ணல் வண்ணச்
சுருளுடைச் சடையின் கற்றைச்
சுற்றுஎனச் சுடர்வ கண்டான்.

பொழிப்பு: கருணைஉடைய, ஆணில் சிறந்தோனாகிய இலக்குவன் விட்ட அம்புகள், வானவெளி எங்கும், தாமே ஆகி, தெளிவாக அடுக்கடுக்காக வீசப்பட்டுச் செல்பவை, அமரர்கள் காணுமாறு இருள் நடுவிலே சுடலையிலே நடமாடும் எண்தோள் அண்ணலாகிய சிவபெருமானின் அழகிய சுருண்ட சடைக்கூட்டத்தின் சுற்றைப் போல ஒளிவிட்டு மின்னுவ கண்டான். (அனுமன்)

விளக்கம்: குரிசில்: ஆணிற்சிறந்தான். வாளி: அம்பு. அந்தரம் விண். தெருள்: தெளிவு. 'இருளிடைச் சுடலை ஆடும் எண்புயத்து அண்ணல்' என்பது 'நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன்' என்ற திருவாசகத்தை நினைவு படுத்துகிறது.

(யுத்த. பிரமாத்திரப் படலம். இலக்குவன் அம்புமாரியை அனுமன் காண்டல்)

பொன்மலை வில்லினான்

113 'அன்னது புரிவென்' என்று
ஆயிரம் நாமத்து அண்ணல்-
தன்னையே வணங்கி வாழ்த்தி,
சரங்களைத் தெரிந்து வாங்கி,
பொன்மலை வில்லி னான்தன்
படைக்கலம் பொருந்தப் பற்றி,
மின்எயிற்று அரக்கர் தம்மேல்
வீசினான் வில்லின் செல்வன்.

பொழிப்பு: வில்தொழிலைத் தனக்குரிய சிறப்புச் செல்வமாகப்பெற்ற இலக்குவன், 'அதுசெய்வென்' என்று சொல்லி, ஆயிரம் பெயருக்கு உரியவனாகிய அண்ணல் இராமபிரானை வணங்கி வாழ்த்தி, அம்புகளைத் தேர்ந்தெடுத்து, பொன்மயமான மேருமலையை வில்லாகக்கொண்ட சிவபெருமானின் வாளியைப் பொருந்துமாறு கொண்டு, ஒளி பொருந்திய பற்களை உடைய அரக்கர் மீது எறிந்தான்.

விளக்கம்: சரம்: அம்பு. தெரிதல்: ஆராய்தல். சிவன் படைக்கலம்: பாசுபதம் என்ற அம்பு. எயிறு: பல். வில்லின்செல்வன்: இலக்குவன்.

(யுத்த. பிரமாத்திரப் படலம். இலக்குவன் சிவன்படை ஏவுதல்)

முக்கணுன் படை

114 முக்கணுன் படையை மூட்டி
விடுதலும், மூங்கில் காட்டில்
புக்கது - ஓர் ஊழித் தீயின்,
புறத்தின்ஓர் உருவும் போகாது
அக்கணத்து எரிந்து வீழ்ந்தது,
அரக்கர்தம் சேனே ஆழி;
திக்குஎலாம் இருளும் தீர்ந்த;
தேவரும் இடுக்கண் தீர்ந்தார்.

பொழிப்பு: மூன்று கண்பெற்ற சிவபெருமான் படையை (இலக்குவன்) மூட்டிவிட்ட உடனே, மூங்கில் காட்டிலே பற்றிக்கொண்ட ஒப்பற்ற ஊழித் தீயைப் போல, வெளியிலே ஓர் வடிவமும் சென்றுவிடாமல், அப்பொழுதே எரிந்து வீழ்ந்தது அரக்கர் சேனேயாகிய கடல்; திக்கு முழுதும் இருள் நீங்கின; அமரர்கள் துயரம் தீர்ந்தனர்.

விளக்கம்: மூங்கில் காட்டில் தீப்பற்றிஞல் அதற்குள் அகப்பட்ட பொருள் ஒன்றும் எஞ்சாது அழிந்துவிடும்; அரக்கர் சேனே அது போல முழுதும் அழிந்துவிட்டது என்க.

(யுத்த. பிரமாத்திரப் படலம். சிவன் படையின் சிறப்பு.)

கொன்றை அலங்கலான்

115 இலங்கையர் கோனே எய்தி,
எய்தியது உரைத்தார்; "நீவிர்
விலங்கினிர் போலும்; வெள்ளம்
நூற்றைஓர் வில்லின், வேழக்
குலங்களினேடும் கொல்லக்
கூடுமோ" என்ன, "கொன்றை
அலங்கலான் படையின்" என்ருர்.
"அன்னதேல் ஆகும்" என்ருன்.

பொழிப்பு : இலங்கை மன்னனுன இராவணனை அடைந்து, (செய்தி அறிவிப்போர்) நடந்ததைச் சொன்னுர் ; 'நீங்கள் அஞ்சி வந்துவிட்டீர் போலும்; யானைக் கூட்டங்களினேடு ஒருசேர நூறு வெள்ளம் சேனையை ஓர் வில்லினுலே கொல்ல ஒண்ணுமோ' என்று (இராவணன்) கேட்க, 'கொன்றை மாலை அணிந்த சிவபிரான் படையினுல்' என்று வந்தவர் கூறினுர் ; 'அப்படியானுல் நடந்திருக்கலாம்' என்று இயம்பினுன் இராவணன்.

விளக்கம் : வில்லின் : வில்லினுல். வேழக்குலம் : யானைக்கூட்டம். கொன்றை அலங்கலான் : சிவபிரான். அலங்கல் : மாலை. 'அன்னதேல் ஆகும்' என்று இலங்கையர்கோன் இயம்புவதால் இராவணன் சிவன் படையின் சிறப்பை நன்கு உணர்ந்திருந்தான் என்க.

(யுத்த. பிரமாத்திரப் படலம். அறிவிப்போர் உரையும் இராவணன் மறுமொழியும்)

முக்கணனும் நகை நீங்கினுன்

116 முகையின் நாள்மலர்க் கிழவற்கும்,
முக்கணன் தனக்கும்,
நகையும் நீங்கிய ; திருமுகம்
கருணையின் நலிந்த ;
தொகையுள் நின்றவர்க்கு உற்றது
சொல்லிஎன் ? தொடர்ந்த
பகையும், பார்க்கின்ற பாவமும்,
கலுழ்ந்தன, பரிவால்.

பொழிப்பு : அன்று அலரத்தக்க தாமரைக்கு உரியவனுகிய பிரமற்கும், முக்கண் மூர்த்தியாகிய சிவபிரானுக்கும், சிரிப்பு நீங்கி விட்டன; திருமுக மண்டலம் அருள் காரணமாக வாட்டம் அடைந்து விட்டன; (எனவே) அவர்கள் இனத்தைச் சேர்ந்த அமரர்க்கு உற்ற துயரத்தைச் சொல்லி என்பயன்? தொடர்ந்த பகையும், அத்துன்பத்தைப் பார்க்கின்ற பாவத்திற்கு உரிய கடவுளும் துன்பத்தால் கண்ணீர் சொரிந்தன.

விளக்கம் : கலுழ்தல் : நீர்கொட்டுதல். பரிவு : துயரம்.

(யுத்த. பிரமாத்திரப் படலம். இராமன் துயர்கண்டு அமரர் வருந்துதல்)

மழ விடையோன் பங்கின்உறையும் குயில்

117 மங்கை அழலும், வான் நாட்டு
மயில்கள் அழுதார் ; மழவிடையோன்
பங்கின் உறையும் குயில்அழுதாள் ;
பதுமத்து இருந்த மாதுஅழுதாள் ;
கங்கை அழுதாள் ; நாமடந்தை
அழுதாள் ; கமலத் தடங்கண்ணன்
தங்கை அழுதாள் ; இரங்காத
அரக்கி மாரும் தளர்ந்துஅழுதார்.

பொழிப்பு: மங்கையாகிய சீதை அழுத உடன் (அவள் துயருக்கு ஆற்ருது) வான் நாட்டுப் பெண்களாகிய மயிலனைய சாயல்கொண்ட அனைவரும் அழுதனர் ; இளங் காளையை உடையவனுகிய சிவபெருமான் உடம்பின் ஒருபுறம் உறையும் குயில் போன்ற உமையவள் அழுதாள் ; செந்தாமரையில் உறைபவளாகிய இலக்குமி அழுதாள் ; சிவன் சடையில் இருக்கும் கங்கை அழுதாள் ; பிரமன் நாவில் வாழும் கலைமகள் அழுதாள் ; தாமரை போன்ற பெரிய கண்களை உடைய திருமாலின் தங்கையாகிய துர்க்கை அழுதாள் ; இரக்கம் காட்டாத அரக்கர் குலப் பெண்களும் வருந்தி அழுதார்கள்.

விளக்கம் : மங்கை : சீதை. மழவிடையோன் பங்கில் உறையும் குயில் முன்னே கூறப்பெற்றதால், கமலத் தடங்கண்ணன் தங்கை, பங்கில் உறையாத துர்க்கை என்க.

(யுத்த. சீதை களங்காண் படலம். சீதையின் துன்பங்கண்டு மாதர் அனைவரும் அழுதல்)

முக்கண் புனிதன்

118 வானநாட்டு உறைகின்ருர், 'வயக்கலுழன்
வல்விசையால், மாயன் வைகும்
தானநாட்டு எழுகின்ருன்' என்றுஉரைத்தார்,
சிலர்;சிலர்கள், 'விரிஞ்சன் தான்,தன்

ஏனை நாட்டு எழுகின்ருன்' என்றுஉரைத்தார் ;
சிலர்சிலர்கள் , 'ஈசன் அல்லால் ,
போனநாட் டிடைபோக வல்லனே?
இவன்முக்கண் புனிதன் என்ருர்.

பொழிப்பு : அமர நாட்டு வாழ்க்கை உடையாரில் சிலர், 'வெற்றியில் வல்ல கருடன், மிக விரைந்து, திருமால் வாழும் இடமான வைகுந்த நாட்டிற்குச் செல்கின்ருன்' என்று செப்பினர் ; வேறு சிலர்கள், 'பிரம தேவனுனவன் தன் நாட்டுக்கு வேருன பிற நாட்டிற்குப் போகின்ருன்' என்று இயம்பினர் ; இன்னும் சிலச்சிலர்கள், 'சிவபெருமானைத் தவிர வேறு யாரும் மிக்க தொலைவில் உள்ள நாட்டுக்குப் போக முடியுமா? எனவே (அனுமன்) இவன் மூன்று கண்படைத்த தூய்மையான சிவபெருமானே' என்று சொல்லினர்.

விளக்கம் : வயக்கலுழன் : வெற்றிக் கருடன். வல்விசை : மிக்க விரைவு. தானம் : இடம். முதல் சிலரை 'வானநாட்டு உறைகின்ருரோடும்', அடுத்த சிலர்களை 'என்று உரைத்தார்' என்பதனேடும், சிலர் சிலர்களை 'என்ருர்' என்பதுடனும் இணைத்துப் பொருள் கோடல் வேண்டும்.

(யுத்த. மருத்துமலைப் படலம். அனுமன் செலவை அமரர் காண்டல்)

உமையொரு பாகன் வைகும் கயிலை

119 இமையமால் வரையை உற்ருன் ;
அங்குஉள இமைப்பி லோரும் ,
கமையுடை முனிவர் , மற்றும்
அறன்நெறி கலந்தோர் , எல்லாம் ,
'அமைக,நின் கருமம்!' என்று
வாழ்த்தினர் ; அதனுக்கு அப்பால் ,
உமையொரு பாகன் வைகும்
கயிலைகண்டு , உவகை உற்ருன்.

பொழிப்பு: அனுமன் பெரிய இமைய மலையை அடைந்தான்; அம் மலையிலுள்ள இமையா நாட்டம்பெற்ற அமரர்களும், பொறுமை கொண்ட இருடிகளும், அறநெறி நிற்கும் மற்றையோரும், 'நீ கைக்கொண்ட காரியம் நிறைவேறுக' என்று வாழ்த்தினர்; (பின்னர், அனுமன்) இமையமால் வரைக்கு அப்பாலுள்ள, உமையைப் பக்கத்திலே கொண்டு சிவபிரான் உறைகின்ற கயிலை மலையைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தான்.

விளக்கம்: கமை: பொறுமை. அமைதல்: பொருந்துதல். கருமம்: காரியம். 'அப்பால் உமையொரு பாகன்' என்பது 'அப்பாலைக்கு அப்பாலை' என்ற திருவாசகத்தையும், 'அப்பாலைக்கு அப்பாலான்' என்ற தேவாரத்தையும் நினைப்பூட்டுகிறது.

(யுத்த. மருத்துமலைப் படலம். அனுமன் அமரர் வாழ்த்துப்பெற்று (அப்பால் உள்ள கயிலையைக் கண்டுகளித்தல்)

பரமனும் விசும்பில் பார்த்தான்

120 வடகுண திசையில் தோன்றும்,
மழுவலான் ஆண்டு வைகும்
தடவரை அதனை நோக்கி,
தாமரைச் செங்கை கூப்பி,
படர்குவான் தன்னை, அன்ன
பரமனும் பரிவில் பார்த்து,
தடமுலை உமைக்குக் காட்டி,
'வாயுவின் தனயன்' என்றான்.

பொழிப்பு: வடகிழக்குத் திக்கில் காட்சி அளிக்கும், மழுப்படையை உடைய சிவபெருமான் அங்குத் தங்கிஇருக்கும் பெரிய மலையைப் பார்த்து, தாமரை போன்ற செவ்விய கைகளைக் குவித்து வருகின்றவனாகிய அனுமனை, அம்மலை உறையும் பரமனாகிய ஈசன், அன்போடு கண்டு, பெருமுலை நாயகியாகிய உமைக்குச் சுட்டிக்காட்டி, 'இவன் காற்றின் மைந்தன்' என்று இயம்பினான்.

விளக்கம்: படர்குதல்: வருதல். அன்னபரமன்: மழுவலானாகிய பரமன். பரிவு: அன்பு.

(யுத்த. மருத்துமலைப் படலம். அனுமன் கயிலையைத் தொழுதலும், அனுமனை ஈசன் உமைக்குக் காட்டலும்)

எண்தோள் ஒருவன்

121 ஆயதன் வடகிழ்ப் பாகத்து,
ஆயிரம் அருக்கர் ஆன்ற
காய்கதிர் பரப்பி, ஐந்து
கதிர்முகக் கமலம் காட்டி,
தூயபேர் உலகம் மூன்றும்
தூவிய மலரின் சூழ்ந்த
சேயிழை பாகத்து, எண்தோள்
ஒருவனை, வணக்கம் செய்தான்.

பொழிப்பு: (அனுமன்) அந்த மலையின் வடகீழ்ப் பகுதியில், ஆயிரம் ஆதவரின் நிறைந்த, இருள்கடிகின்ற ஒளியைப் பரப்பி, ஐந்து ஒளிமுகத் தாமரை மலர்ந்து, புனிதமான பெரிய மூன்று உலகத்தவரும் தூவிவழிபட்ட பூக்களால் சூழப்பெற்றிருக்கின்ற, செம்பொன் அணிபூண்ட அம்பிகையைப் பக்கத்தில் கொண்ட எட்டுத் தோள்களை உடைய ஒப்பற்ற சிவபெருமானைக் கும்பிட்டான்.

விளக்கம்: அருக்கர்: சூரியர். ஆன்ற: நிறைந்த. காய்கதிர்: இருளைக் கடிந்த ஒளி. இப்பாடல் சிவபிரான் தோற்றத்தை நன்கு சித்த ரித்துக்காட்டுகிறது.

(யுத்த. மருத்துமலைப் படலம். அனுமன் சிவனைக் கும்பிடல்)

பொன் மௌலி வானவன்

122 வன்னிநாட் டியபொன் மௌலி
வானவன், மலரின் மேலான்,
கன்னிநாள் திருவைச் சேரும்
கண்ணனும், ஆளும் காணி,
சென்னிநாள் தெரியல் வீரன்,
தியாகமா விநோதன் தெய்வப்
பொன்னிநாட்டு உவமை வைப்பை,
புலன்கொள நோக்கிப் போனான்.

பொழிப்பு: தீயை எடுத்துக்காட்டுகின்ற பொன்நிறமான சடையை உடைய சிவபெருமானும், பூவின் மேல் உறையும் பிரமதேவனும், செவ்வி மாருத கன்னிப் பருவமுள்ள திருமகளை அடைந்த திருமாலும், ஆளுகின்ற இடங்களாகிய, அன்றலர்ந்த மலர்களை அணிந்த வீரனும் தியாகமா விநோதன் என்ற பெயர்கொண்ட சோழனின், கடவுள் தன்மை வாய்ந்த காவிரி நாட்டுக்கு ஒப்பு என்று சொல்லத்தக்க நிலங்களைக் கண்ணாக் கண்டு சென்றான் (அனுமன்.)

விளக்கம்: தியாகமா விநோதன் என்ற சோழ மன்னன் கம்பன் காலத்தவன் என்று கருதப்பெறுகின்றான். காவிரி பாயும் சோழ நாட்டுக்குச் சிவ லோகமும், சத்திய லோகமும், வைகுண்டமும் ஒப்பு எனக் கூறுவது கவிச்சக்கரவர்த்தியின் நாட்டுப் பற்றைக் காட்டுகின்றது. வன்னி: நெருப்பு. மௌலி: சடை. காணி: நிலம். சென்னி: சோழன். பொன்னி: காவிரி. புலன்: (ஈண்டுக்) கண்.

(யுத்த. மருத்துமலைப் படலம். சோழநாட்டை ஒத்த மேல் மூன்று உலகத்தையும் அனுமன் கண்டுகளித்தான்)

தாணுவின் தோற்றத்தான்

123 ஆணி,இவ் உலகுக்கு, ஆன
ஆழியான், புறத்தின் ஆர்த்த
தூணியும் கொடுத்து, மற்றும்
உறுதிகள் பலவும் சொல்லி,
தாணுவின் தோற்றத் தானைத்
தழுவினன்; தழுவ லோடும்,
சேண்உயர் விசும்பில் தேவர்,
'தீர்ந்ததுஎம் சிறுமை' என்றார்.

பொழிப்பு: இவ்வுலகத்துக்கு அச்சாணி போன்றவனாகிய இராமன், தான் முதுகிலே கட்டியிருந்த அம்பறாத்தூணியை (இலக்குவனுக்கு) கொடுத்து, மேலும் பல உறுதிகள் கூறி, சிவன் போன்ற தோற்றம் உடைய வனாய இலக்குவனைத் தழுவிக்கொண்டான்; (அப்படி இராமன் இலக்கு வனைத்) தழுவிய உடன், மிக உயர்ந்த விண்ணில் உள்ள அமரர்கள், 'எங்கள் சிறுமை நீங்கிவிட்டது' என்று இயம்பினர்.

விளக்கம்: ஆணி: தேரைச் செலுத்துகின்ற அச்சாணி. ஆழியான்: இராமன். புறம்: முதுகு. ஆர்த்த: கட்டிய. தாணு: சிவன். இலக்குவன் செந்நிறம் உடையான் ஆதலின் தாணுவின் தோற்றத்தானை என்றார். சேணுயர்: மிமிசை. அதாவது ஒரு பொருள் குறிக்கும் இரு சொல்.

(யுத்த. நிகும்பலை யாகப் படலம். இராமன் இலக்குவனைத் தழுவுதல்)

திங்களின் மோலி அண்ணல்

124 மங்கலம் தேவர் கூற,
வானவ மகளிர் வாழ்த்தி,
பங்கம்இல் ஆசி கூறி,
பலாண்டுஇசை பரவ, பாகத்
திங்களின் மோலி அண்ணல்
திரிபுரம் தீக்கச் சீறிப்
பொங்கினன் என்ன, தோன்றிப்
பொலிந்தனன் - போர்மேல் போவான்.

பொழிப்பு: அமரர்கள் மங்கலம் வழுத்தவும், வானமாதர்கள் வாழ்த்தெடுத்து, குற்றமற்ற நன்மொழி பகர்ந்து பல்லாண்டு பாடிப் பரவவும், பிறைத் திங்களைச் சடையில் சூடிய சிவபெருமான் முப்புரத்தை அழிக்கச் சீறிஎழுந்தனன் என்று சொல்லுமாப் போல, விளங்கித் தோன்றினான், போர்குறித்துச் செல்பவனாகிய இலக்குவன்.

விளக்கம்: பாகத்திங்கள்: பிறைச் சந்திரன்.

(யுத்த. நிகும்பலையாகப் படலம். இலக்குவனின் போர்க்கோலப் பொலிவு)

மூவாமுதல் ஈசன்

125 தேவாசுர ரும்,திசை நான்முகனும்,
மூவாமுதல் ஈசனும், மூவுலகின்
கோஆகிய கொற்றவ னும்,முதலோர்
மேவாதவர் இல்லை, விசும்புஉறைவோர்.

பொழிப்பு: அமரர்களும், அசுரர்களும், நான்கு திக்குகளிலும் நான்கு முகங்களை உடைய பிரமனும், மூப்பு அடையாத முதற்கடவுளாகிய சிவபெருமானும், மூன்று உலகங்கட்கும் தலைவனாகிய திருமாலும் முதலிய வானில் உறைவோரில் (இலக்குவன் போர்காண) வாராதவர் எவரும் இலர்.

விளக்கம்: மூவாமுதல் ஈசன், திருமால் என்றும், மூவுலகின் கோ ஆகிய கொற்றவன் இந்திரன் என்றும் கொள்ளுதல் பொருத்தம் இன்மை அறிக. பிரமன், சிவன், திருமால் ஆகிய மூவரைக் கொள்தலே சிறப்பு. இந்திரனைத் தேவர்களுக்குள் அடக்கிவிடலாம். இந்திரனை மூவுலகுக்கும் தலைவன் என்று இயம்புவது பொருந்தாது என்க.

(யுத்த. நிகும்பலையாகப்படலம். வான நாடர்கள் இலக்குவன் போர் காண வருதல்)

கயிலையான்

126 ஊதினான் சங்கம்; வானத்து
ஒண்தொடி மகளிர் ஒண்கண்
மோதினார்; 'கணத்தின் முன்னே
முழுவதும் முருக்கி முற்றக்
காதினான்' என்ன வானோர்
கலங்கினார்; கயிலை யானும்,
போதினான் தானும், 'இன்று
புகுந்தது பெரும்போர்' என்றார்.

பொழிப்பு: (இந்திரசித்தன்) போர்ச் சங்கை ஊதினான்; (அம்முழக்கம் கேட்டு) விண்ணுலகத்தில் உள்ள ஒள்ளிய வளையலை அணிந்த பெண்கள் எல்லாம், ஒளிமிக்க கண்களில் மோதிக் கொண்டார்கள்; 'கணப்பொழுதிலே, எல்லாவற்றையும் ஒருசேர அழித்து ஒழித்துவிட்டான்' என்றுஅமரர்கள் கலக்கம் கொண்டனர்; கயிலையானாகிய சிவபெருமானும், பூவில் வாழ் பிரமதேவனும் 'இன்று பெரும் போர் மூண்டது' என்று கூறினர்.

விளக்கம்: காதுதல்: பொருதுதல்.

(யுத்த. நிகும்பலையாகப்படலம். இந்திரசித்தன் சங்கநாதம்)

விடைமேலவன் சிரிப்பு

127 நீர்ஒத்தன ; நெருப்புஒத்தன ;
பொருப்புஒத்தன ; நிமிரும்
கார்ஒத்தன ; உருமுஒத்தன ;
கடல்ஒத்தன ; கதிரோன்
தேர்ஒத்தன ; விடைமேலவன்
சிரிப்புஒத்தன ; உலகின்
வேர்ஒத்தன ; செருஒத்துஇகல்
அரக்கன்விடு விசிகம்.

பொழிப்பு : போரிலே ஒத்து வலிய அரக்கனாகிய இந்திரசித்தன் விடுகின்ற அம்புகள், நீரை ஒத்தன ; தீயை ஒத்தன ; மலையை ஒத்தன ; நிமிர்ந்து எழுகின்ற மேகத்தை ஒத்தன ; இடியை ஒத்தன ; கடலை ஒத்தன ; ஆதவனின் தேரை ஒத்தன; விடையை ஊரும் சிவபெருமானின் சிரிப்பை ஒத்தன; உலகத்தின் மூலத்தை ஒத்தன.

விளக்கம் : மேற் குறித்த பொருள் ஒவ்வொன்றையும் சில சில அம்புகள் ஒத்தன என்பது கருத்து. உருமு: இடி. வேர்: மூலம். செரு: போர். இகல்: வலி. விசிகம்: அம்பு.

(யுத்த. நிகும்பலையாகப்படலம். இந்திரசித்தன் அம்புகளின் சிறப்பு)

விடைமேல் வருவிமலன்

128 பதைத்தான்,உடல் நிலைத்தான்,சில
பகுவாய்அயில் பகழி
விதைத்தான்;அவன் விலக்காதமுன்,
விடைமேல்வரு விமலன்,
மதத்தால்எதிர் வருகாலனை,
ஒருகால்உற மருமத்து
உதைத்தாலென, தனித்தலைக்கணை
அவன்மார்பினில் உதைத்தான்.

பொழிப்பு : (இந்திரசித்தன் அம்புகளால்) பதைத்தவனுகிய இலக்குவன், உடல் நிலைத்தானுகி சில பிளந்த வாய்களை உடைய கூர்மையான அம்புகளை (இந்திரசித்தன் மீது) தூவினுன்; அந்த இந்திரசித்தன் அவற்றை விலக்குதற்கு முன்னே, விடை மேல் வருகின்ற விமலனுகிய சிவபெருமான், கொழுப்பால் தன் எதிரில் வந்த காலனை ஒரு காலால் பொருந்த மார்பிலே உதைத்ததைப் போல, ஒப்பற்ற ஒரு அம்பை இந்திரசித்தன் மார்பிலே செலுத்திஞன்.

விளக்கம் : பகு : பிளந்த. அயில் : கூர்மை. பகழி : அம்பு. மருமம் : மார்பு. தனித்த : ஒப்பற்ற. கணை: அம்பு.

(யுத்த. நிகும்பலை யாகப்படலம். இலக்குவன் இந்திரசித்தன் மார்பில் அம்பு எய்தல்.)

மழுவாளி

129 வானின்தலை நிலைநின்றவர்
மழுவாளியும், மலரோன் -
தானும்,முனி வரரும்பிற
தவத்தோர்களும், அறத்தோர்
கோனும்,பிற பிறதேவர்கள்
குழுவும்மனம் குலைந்தார்,
'ஊனம்இனி இலதுஆகுக,
இளங்கோக்கு'என உரைத்தார்.

பொழிப்பு : வானுலகத்தில் வாழ்கின்றவர்களான சிவபெருமானும், பிரமதேவனும், முனிவரரும், தவத்தோராய மற்றையோரும், அறத்தோர் தலைவனுகிய இந்திரனும், மற்ற மற்ற தேவர் கூட்டமும் மனம் நடுங்கினவராய், 'இளைய பெருமாளுக்கு இனிக் கேடில்லாதிருப்பதாக' என்று இயம்பினர்.

விளக்கம் : தலை : இடம்.

(யுத்த. நிகும்பலை யாகப்படலம். இந்திரசித்தன் போர்த்திறம் கண்ட தேவர்கள் நடுக்கம்)

கண் ஆர் நுதல் பெருமான்

130 விண்ணோர்அது கண்டார்,'வய
வீரர்க்குஇனி மேன்மேல்
ஒண்ணாதன உளவோ?'என
மனந்தேறினர், உவந்தார்;
கண்ஆர்நுதல் பெருமான்,'இவர்க்கு
அரிதோ?'எனக் கடைபார்த்து,
'எண்ணாதுஇவை பகர்ந்தீர்! பொருள்
கேளீர்'என இசைத்தான்.

பொழிப்பு: தேவர்கள் (இலக்குவன் அம்பின் ஆற்றலாகிய) அதனைப் பார்த்தார்கள்; (இராம இலக்குவராகிய) 'வெற்றி வீரர்கட்கு இனி மேலும் மேலும் ஆகாத காரியங்கள் உளவோ' என்று மனந்தெளிந்தவராய் மகிழ்ந்தார்கள்; நெற்றியில் கண்படைத்த சிவபெருமான், (அத் தேவர்களைப் பார்த்து) 'கடைசி வரையும் எண்ணிப் பாராமல் இவர்க்கு, அரிதோ? என்று இவ்வாறு கூறினீர்; உண்மைப் பொருளைக் கேளுங்கள்' என்று சொல்லி (மேலே சொல்லத்) தொடங்கினான்.

விளக்கம்: வயம்: வெற்றி. ஒண்ணாதன: முடியாதன. கண்ணார் நுதல்: நெற்றியில் பொருந்திய கண். 'கண்ணார் நுதலோய்' என்பது திருவாசகம். கடைபார்த்து: இறுதிவரையும் எண்ணிப் பார்த்து. தொடர்ந்து நான்கு பாடல்கள் சிவபெருமான் தேவர்கட்குக் கூறுவன.

(யுத்த. நிகும்பலை யாகப்படலம். சிவபெருமான் தேவர்களுக்கு உண்மைப் பொருள் கூறுதல்)

செஞ்சடை முதலோன்

131 'நெடும்பாற்கடல் கிடந்தாரும்,பண்டு
இவர்நீர்குறை நேர
விடும்பாக்கியம் உடையார்களைக்
குலத்தோடுஅற வீட்டி,
இடும்பாக்கியத்து அறம்காப்பதற்கு
இசைந்தார்'என, இதுஎலாம்,
அடும்புஆக்கிய தொடைச்செஞ்சடை
முதலோன்பணித்து அமைந்தான்.

பொழிப்பு : நீண்ட பாற்கடலிலே பள்ளி கொண்டவரும், முன்னர், நீவிர் குறை இரப்ப, பாக்கியத்தை இழப்பவர்களான அரக்கர்களைக் குலத்தோடு முழுதும் அழித்து, பாக்கியத்தோடு கூடிய அறத்தைக் காப்பதற்கு ஏற்றுக் கொண்டவரும் இவர் ஆவார்' என இவ் வெல்லாவற்றையும், தளிர்களால் ஆக்கப்பெற்ற மாலையை அணிந்த, சிவந்த சடையை உடைய முதற்கடவுளாகிய சிவபெருமான் அருளி அமர்ந்தான்.

விளக்கம் : வீட்டி : அழித்து. 'இவர்' என்பதை இசைந்தார் என்பதோடு இயைக்க. அடும்பு : தளிர். தொடை : மாலை. இது சிவன் சொல்லிய கடைசிப்பாட்டு.

(யுத்த. நிகும்பலையாகப்படலம். தேவர்களுக்கு இவ்வாறு சிவன் கூறினன்)

மழுவாளியும் புகழ்ந்தார்

132 ஏத்துஆடினர், இமையோர்களும் ;
கவியின்குலம் எல்லாம்,

கூத்துஆடினர் ; அரமங்கையர்
குனித்துஆடினர் ; தவத்தோர்,

'காத்தாய்உலகு அனைத்தும்'எனக்
களித்துஆடினர் ; கமலம்

பூத்தானும்,அம் மழுவாளியும்,
முழுவாய்கொடு புகழ்ந்தார்.

பொழிப்பு : தேவர்களும், (இலக்குவனை) போற்றி ஆடினர்; குரங்குக் கூட்டத்தினர் எல்லாம் மகிழ்ச்சிக் கூத்து ஆடினர்; அமரமாதர்கள் வளைந்து வளைந்து ஆடினர்: தவம்தலை நின்றவர், 'உலகம் முழுதையும் காப்பாற்றினவனே' என்ச் சாற்றிக் களிப்புக் கொண்டு ஆடினர் ; கமலத்தில் பிறந்த பிரமனும் அந்த மழுப்படையோனய சிவனும் வாய் கொள்ளாமல் பாராட்டினர்.

விளக்கம்: முழுவாய்கொடு புகழ்தல்: முடிந்தமட்டும் பாராட்டுதல்.

(யுத்த. நிகும்பலை யாகப்படலம். இலக்குவனை மாயோன்படை தாக்காமைகண்டு, தேவர்கள் மகிழ்தல்)

ஆலம் உண்ட முக்கணுன் சூலம்

133 அக்கணை அசனி என்ன,
அனல்என்ன, ஆலம் உண்ட
முக்கணுன் சூலம் என்ன,
முடுக்கிய முடிவை நோக்கி,
'இக்கணத்து இற்முன், இற்முன்'
என்கின்ற இமையோர் காண,
கைக்கணை ஒன்முல், வள்ளல்
அக்கணை கண்டம் கண்டான்.

பொழிப்பு : அந்த அம்பானது, இடி என்று சொல்லும்படியாகவும் நெருப்பு என்று கூறுமாறும், விடத்தை உண்ட, மூன்று கண்பெற்ற சிவ பிரானின் சூலம் என்று சொல்லத்தக்கவாறும் விரைந்து சென்று முடிந்த நிலையைப் பார்த்து, 'இப்பொழுதே (வீடணன்) அழிந்தான் அழிந்தான்' என்று பதறிக் கூறிய தேவர்கள் காணுமாறு, வள்ளலாகிய இலக்குவன், தன் கைக்கணை ஒன்முல் இந்திரசித்தன் ஏவிய அக் கணையைத் துண்டமாக ஆக்கினுன்.

விளக்கம் : அசனி: இடி. முடுகுதல்: விரைதல். 'இற்முன் இற்முன்' என்பது அமரர்களின் பதறிய நிலையைக் காட்டுகிறது. கண்டம்: துண்டம்.

(யுத்த. நிகும்பலையாகப் படலம். வீடணன் மேல் இந்திரசித்தன் விட்ட அம்பை இலக்குவன் துண்டித்தல்)

ஈசன் அளித்தன கொண்டு இந்திரசித்தன்

134 படைக்கல விஞ்சை மற்றும்
படைத்தன பலவும், தன்பால்
அடைக்கலம் என்ன ஈசன்
அளித்தன தேர்மேல் ஆக்கி,
கொடைத்தொழில் வேட்டோர்க்கு எல்லாம்
கொடுத்தனன்; கொடியோன் தன்னைக்
கடைக்கணுல் நோக்கி நோக்கி,
இருகண்நீர் கலுழப் போனுன்.

பொழிப்பு: போர்க் கருவி, விஞ்சையிலே தான் படைத்துக்கொண்ட பல போர்ப் படைகளையும், தன்னிடத்து அடைக்கலம் என்று சொல்லுமாறு சிவபெருமான் கொடுத்த படைகளையும் தேர் மேல் ஏற்றி, விரும்பியவர்க்கெல்லாம் கொடுக்கும் தொழிலைக் கொடுத்துமுடித்து, கொடியோனுகிய இராவணனை ('இனிப் பார்ப்போமா!' என்ற ஏக்கத்தோடு) கடைக்கண்ணுல் பார்த்துப் பார்த்து இரண்டு கண்களும் நீரைப் பொழியச் சென்முன் (இந்திரசித்தன் தன் போர்க்களத்துக்கு)

விளக்கம்: இராவணனைக் கொடியோன் என்றது கவி வாய்மொழி. இது கடைசிப்பிரிவு ஆதலின் தந்தையை இனிக் காண்போமா என்ற ஏக்கத்தால் கடைக்கண்ணுல் நோக்கிநோக்கிப் போனுன் இந்திரசித்தன் என்க.

(யுத்த. இந்திரசித்து வதைப்படலம். இந்திரசித்தன் இறுதிப் போருக்குச்செல்லுதல்)

நெற்றியின் நெருப்புக் கண்ணுன்

135 நேமியும், குலிச வேலும்,
நெற்றியின் நெருப்புக் கண்ணுன்
நாமவேல் தானும் மற்றை
நான்முகன் படையும், நாண,
தீமுகம் கதுவ ஓடிச்
சென்று,அவன் சிரத்தைத் தள்ளி,
பூமழை வானுேர் சிந்த,
பொலிந்தது;அப் பகழிப் புத்தேள்.

பொழிப்பு: இலக்குவன் விட்ட அந்தக் கடவுட் கணையானது, திருமால் சக்கரப் படையும் தேவர்கோன் வச்சிரப் படையும், நெற்றியிலே நெருப்புக் கண்ணை உடைய சிவபிரானின் அச்சத்தைத் தரும் முத்தலைவேற் படையும், மற்றும் பிரமதேவன் படையும் வெட்குமாறு, தீப்பொறி பறக்க ஓடிச் சென்று, அந்த இந்திரசித்தன் தலையை உடலின் நின்றும் துண்டித்துக் கீழே தள்ளி, அமரர் பூமாரி பொழியப் பொலிவுபெற்று நின்றது.

விளக்கம்: குலிச வேல்: இந்திரன் வச்சிரம். நாமம்: அச்சம். தீமுகம் கதுவ: நுனியிலே நெருப்புத் தோன்ற. புத்தேள்: கடவுள். இலக்குவன் விட்ட அம்பு இந்திரசித்தனைத் தலை வேறு உடல் வேறு ஆக்கியது என்க. 'இந்திரசித்தன் இரண்டு துண்டாக எடுத்த வில் யாருடை வில்' என்று இறுமாப்போடு வினவுவார் பாரதியார்.

(யுத்த. இந்திரசித்தன் வதைப் படலம். இலக்குவன் அம்பு இந்திரசித்தனைக் கோறல்.

மான் மறிக் கரத்து வள்ளல்

136 வரம்தரு முதல்வன் மற்றை
மான்மறிக் கரத்து வள்ளல்,
புரந்தரன், முதல்வர் ஆய
நான்மறைப் புலவர், பாரில்
நிரந்தரம் தோன்றி நின்ருர்,
அருளினுல் நிறைந்த நெஞ்சர்;
கரந்திலர், அவரை, யாக்கை
கண்டன, குரங்கும் கண்ணுல்.

பொழிப்பு: வரத்தைக் கொடுக்கின்ற முதல்வனுகிய திருமாலும், (அல்லது வரத்தைக் கொடுக்கின்ற முதல்வனுகிய பிரமனும்) மான் குட்டியைக் கையில் ஏந்திய வள்ளலாகிய சிவபெருமானும், இந்திரனை முதல்வனுகக் கொண்ட நான்கு வேதங்களும் வல்லதேவர்களும் பூவுலகத்தில் நிரந்தரமாக வந்து, கருணை நிறைந்த நெஞ்சினராகி நின்றனர்; தங்கள் இயல்பான உடம்பை மறைத்துக்கொள்ளாமல் பூமியில் நின்ற அவரை, அவ்வவர் உடம்போடு குரங்குகளும் கண்ணுல் க்ண்டன.

விளக்கம்: 'வரந்தருமுதல்வன்' என்ற சொற்ருெடர் திருமால், பிரமன், சிவன் ஆகிய மூவர்க்குமே பொருந்துவன. இங்கு 'மான்மறிக் கரத்து வள்ளல்' தனித்து இருப்பதால் மற்றைய இருவருக்கும் அது பொருந்தும். புரந்தரன் முதல்வராய நான்மறைப் புலவரில் பிரமனை அடக்குதல் பொருந்தாது. மறி: குட்டி. கரத்தல்: மறைத்தல்.

(யுத்த. இந்திரசித்தன் வதைப் படலம். கடவுளர்கள் நிலத்தில் தோன்றுதல்)

நிலவைச் செஞ்சடை வைத்தவன்

137 'இலவத் தீவினின் உறைபவர்,
இவர்கள்;பண்டு இமையாப்
புலவர்க்கு இந்திரன் பொன்னகர்
அழிதரப் பொருதார்;

நிலவைச் செஞ்சடை வைத்தவன்
வரம்தர நிமிர்ந்தார்;
உலவைக் காடுறு தீஎன
வெகுளிபெற்று உடையார்.

பொழிப்பு: இவர்கள், இலவம் என்ற தீவிலே வாழ்கின்றவர்கள்; முன்னர் மூடாத கண்கள் கொண்ட அமரர்க்கு அரசனுகிய இந்திரனது தங்கமயமான அமராவதி நகரம் அழியுமாறு போர் செய்தவர்; சிவந்த சடையிலே திங்கள் சூடிய சிவபெருமான் வரந்தர, அதனுலே உயர்ந்தவர்; காற்ருேடு கூடிய காட்டுத் தீயைப் போல் சினம் பெற்றவர்கள்.

விளக்கம்: பண்டு: முன்பு. இமையாப்புலவர்: தேவர். பொருதல்: போர் செய்தல். உலவை: காற்று. காட்டுத்தீ கடுமையாக இருக்கும். அதனினும் காற்ருேடு கூடிய காட்டுத்தீ மேலும் கடுமையாக இருக்கும். இங்கே வெகுளியின் பெருக்கம் உரைக்கப்பெற்றது. படைகளிற் சிலர் இத்தகையர் என்க.

(யுத்த. படைக்காட்சிப் படலம். இராவணனுக்குப் படைகள் பற்றி அறிவித்தல்)

கண்ணுதல்

138 'காளி யைப்பண்டு கண்ணுதல்
காட்டிய காலே,
மூள முற்றிய சினக்கொடுந்
தீயிடை முளேத்தோர்;
கூளி கட்குநல் உடன்பிறந்-
-தார்;பெருங் குழுவாய்
வாள்இ மைக்கவும், வாள்எயிறு
இமைக்கவும், வருவார்.

பொழிப்பு: அந்த நாளில், நெற்றிக் கண்ணுடைய சிவபெருமான் காளியை (நடனத்தில் வென்று) காட்டிய பொழுது (அக்காளியின்) மூண்டு முதிர்ந்த கோபக் கொடும்நெருப்பிலே தோன்றியவர்கள்; பேய்கட்கு நல்ல உடன்பிறப்புப் போன்றவர்; பெரிய கூட்டமாகத் தங்கள் கைகளில் வைத்திருக்கும் வாள்கள் ஒளிவிடவும், ஒளிபொருந்திய தங்கள் பற்கள் ஒளிகக்கவும் வருகின்ற இவர்கள்.

விளக்கம்: 'காட்டிய' என்பது வெற்றிகொண்ட என்னும் பொருளது. கூளி: பேய். குழு: கூட்டம். இவர்கள் படையின் சில பகுதியினர்.

(யுத்த. படைக்காட்சிப் படலம். இராவணனுக்குச் சில படை வீரரைக் காட்டுதல்)

உலகெலாம் தீக்கும் ஐம்முகன்

139 'சீற்றம் ஆகிய ஐம்முகன்
உலகுஎலாம் தீப்பான்,
ஏற்ற மாநுதல் விழியிடைத்
தோன்றினர், இவரால்;
கூற்றம் ஆகிய கொம்பின்ஐம்
பாலிடைக் கொடுமைக்கு
ஏற்றம் ஆகப்பண்டு உதித்துளோர்
என்பவர், இவரால்.'

பொழிப்பு: சினம் கொண்ட ஐந்து முகங்கள் உடைய சிவபெருமான் உலகம் முழுதையும் சுடும் பொருட்டுப் பொருந்திய சிறந்த நெற்றிக் கண்ணிடத்துத் தோன்றியவர் இவராவார்; எமன் என்று சொல்லத்தக்க, கூந்தலை உடைய கொம்பு போன்ற பெண்களிடத்துக் கொடுமைக்குச் சிகரமாக முன்னர்த் தோன்றினவர் என்று சொல்லத்தக்கவர் இவராவார்.

விளக்கம்: இப்பாடல் இரண்டு முடிவு கொண்டது. இரண்டு கூட்டத்தாரைப் பற்றிப் பேசப்பெறுகின்றது. கொடுமைக்கு ஏற்றமாக உள்ளோரை ஈன்ற தாயர், கூற்றம் போன்றவர் என்க. 'கொம்பின் ஐம்பாலிடை' என்பதை 'ஐம்பால் கொம்பிடை' என மாற்றுக. சீற்றம்: சினம். ஐம்முகன்: சிவன். தீப்பான்: தீப்பற்றி எரியச் செய்யும் பொருட்டு. கூற்றம்: எமன். கொம்பு: பெண். ஐம்பால்: கூந்தல்.

(யுத்த. படைக் காட்சிப் படலம். சில படை வீரரை இராவணனுக்குக் காட்டல்)

காலன் மார்புழைச் சிவன் கழல்

140 காலன் மார்புழைச் சிவன்கழல்
படஅன்று கான்ற
வேலை யேஅன்ன குருதியில்
தோன்றிய வீரர்,

சூலம் ஏந்திமுன் நின்றவர்;
இந்நின்ற தொகையார்,
ஆல காலத்தின் அமிழ்தின்,முன்
பிறந்தபோர் அரக்கர்.

பொழிப்பு: சூலத்தைக் கையில் ஏந்தி முன்னே நின்றவராகிய இவர், எமனுடைய மார்பிலே சிவபெருமானுடைய திருவடி பட, அப்பொழுது கக்கிய கடலைப் போன்ற இரத்தத்தில் பிறந்த வீரராவார்; இங்கே நிற்கின்ற கூட்டத்தார், கடலில் தோன்றிய பெருநஞ்சுக்கும், அமிழ்தத்துக்கும் முன்பாகப் பிறந்த போர் அரக்கராவார்.

விளக்கம்: மார்புழை: மார்பினிடத்து. கான்ற: கக்கிய. வேலை: கடல். குருதி: இரத்தம். இவ்வுவமைகள் எல்லாம் கொடுமையின் பெருக்கத்தைக் காட்டக் கூறப்பெற்றன என்க.

(யுத்த. படைக்காட்சிப்படலம். இராவணனுக்குப் படை அணிகளின் பகுதியைக் காட்டியது.)

காலன் மால் சிவன் குமரன்

141 சூலம் வாங்கிடின், சுடர்மழு
ஏந்திடின், சுடர்வாள்
கோல வெஞ்சிலை பிடித்திடின்,
கொற்றவேல் கொள்ளின்,
சால வான்தண்டு தரித்திடின்,
சக்கரம் தாங்கின்,
காலன், மால்,சிவன், குமரன்என்று
இவரையும் கடப்பார்.

பொழிப்பு: (வீரர்கள்) சூலப்படையைக் கையிற் கொண்டாலும், ஒளி உள்ள மழுப்படையைத் தாங்கினாலும், சுடர் விடுகின்ற வாள் படையையும், அழகிய கொடிய வில்லையும் கையில் பிடித்தாலும், வெற்றி வேல் படையைக் கைக்கொண்டாலும் பெரிய சிறந்த தண்டத்தைத் தாங்கினாலும், சக்கரப் படையை ஏந்தினாலும், எமன், திருமால், சிவன், முருகன் என்ற இவர் அனைவரையும் வெல்வார்.

விளக்கம்: வாங்குதல், ஏந்துதல், பிடித்தல், கொள்ளல், தரித்தல், தாங்குதல் ஆகிய அனைத்தும் கைக்கொள்ளுதல் என்னும் ஒரு பொருளன. சூலம் எமனுக்கும், மழு சிவனுக்கும், வாள், சிலை, தண்டு, சக்கரம் மாலுக்கும், வேல் முருகனுக்கும் உரிய படைகள். திருமாலின் ஐம் படைகளுள் போர்த்தொழிலில் போகாத சங்கு ஒழிந்த நான்கும் இங்குக் கூறப் பெற்றன.

(யுத்த. மூலபலவதைப் படலம். மூலபலப் படையின் சிறப்பு.)

நஞ்சு அடை கண்டன்

142 நடுங்கி, நஞ்சுஅடை கண்டனை
வானவர், 'நம்ப!
ஒடுங்கி யாம்கரந்து உறைவிடம்
அறிகிலம்; உயிரைப்
பிடுங்கி உண்குவர்; யார்இவர்
பெருமைபண்டு அறிந்தார்?
முடிந்தது, எம்வலி' என்றனர்,
ஓடுவான் முயல்வார்.

பொழிப்பு: தேவர்கள், நஞ்சு பொருந்திய கழுத்தை உடையவனான சிவபெருமானை, நடுங்கி அடைந்து, 'நம்பனே! நாங்கள் மறைந்து ஒடுங்கி வாழும் உறைவிடம் ஏது என்று தெரிகின்றிலேம்; இவர்கள் உயிரைப் பறித்துத் தின்றுவிடுவர்; இவர் பெருமையை முன்னே அறிந்தவர் யாவர்? எங்கள் ஆற்றல் (இன்று) முடிந்துவிட்டது' என்று சொல்லி ஓடுதற்கு முயல்வாராயினர்.

விளக்கம்: முன்னே கடலில் எழுந்த நஞ்சு கொல்லாது காப்பாற்றியவனாதலின் சிவனைத் தேவர்கள் அடைந்தனர் என்க. 'நஞ்சு அட எழுதலும் நடுங்கி நாள் மதிச் செஞ்சடைக் கடவுளை அடையும் தேவர்' எனப் பிறிதோர் இடத்துக் கூறியிருத்தலும் காண்க.

(யுத்த. மூலபல வதைப் படலம். அமரர்கள் சிவபிரானிடம் முறையிடல்)

மணிமிடற்று இறைவன்

143 என்றுஇ றைஞ்சலும், மணிமிடற்று
இறைவனும், 'இனிநீர்
ஒன்றும் அஞ்சலிர்; வஞ்சனை
அரக்கரை ஒருங்கே
கொன்று நீக்கும்,அக் கொற்றவன்;
இக்குலம் எல்லாம்
பொன்று விப்பதுஓர் விதி,தந்த
தாம்'எனப் புகன்றான்.

பொழிப்பு: என்று சொல்லி அமரர்கள் வணங்கலும், நீல கண்டனுகிய சிவனும், (அத்தேவர்களை நோக்கி) 'இனி நீங்கள் ஒன்றற்கும் அஞ்சற்க: வஞ்சனை வல்ல அரக்கர் கூட்டத்தை ஒரு சேரக் கொன்று குவிப்பான் அக்கொற்றவன்; (இராமன்) இந்த அரக்கர் குழுவை எல்லாம் அழிக்கத்தக்கதாகிய ஒப்பற்ற ஊழானது, (இவ்விராமனை) இங்குச் கொண்டு வந்தது, என்று இயம்பினன்.

விளக்கம்: 'மணி' ஈண்டு நீலமணி. மிடறு: கழுத்து. விதி: ஊழ்.

(யுத்த. மூலபல வதைப்படலம்: அமரர் அச்சத்தை அரன் அகற்றல்)

முக்கணனை வணங்கினர்

144 அக்கணையை அக்கணம் அறுத்தனர்
செறுத்து,இகல் அரக்கர் அடைய,
புக்குஅணையல் உற்றனர், மறைத்தனர்
புயற்குஅதிகம் வாளி பொழிவார்,
திக்குஅணை வகுத்தனர் எனச்செல
நெருக்கினர், செருக்கின் மிகையால்;
முக்கணனை உற்றுஅடி வணங்கிஇமை-
-யோர்இவை மொழிந்த னர்களால்.

பொழிப்பு: வன்மை வாய்ந்த அரக்கர்கள் அனைவரும் ஒருங்கே சென்று சினம்கொண்டு (இராமபிரான் விடுத்த) அந்த அம்புகளை அக்கணமே அறுத்தனராகி, மேகத்துக்கும் அதிகமான அம்புகளைச் சொரிபவர்களாய் (இராமனை) மறைத்தனராகி, அகங்காரம் மிக்கு, திக்குக்கு ஒரு அணை வகுத்தாற்போல நெருக்கினார்கள்; (அவ்வமயம்) வானவர்கள் முக்கண் மூர்த்தியாகிய சிவனை அடைந்து, அவன் திருவடியை வணங்கி இவ்வாறு சொல்லினர்.

விளக்கம்: அக்கணை: இராமன் விடுத்த கணை. அக்கணம்: அப்பொழுது. செறுத்தல்: கோபித்தல். இகல்: வலிமை. அடையப்புக்கு: ஒரு சேரச்சென்று. புயல்: மேகம். செருக்கு: கர்வம்.

(யுத்த. மூலபல வதைப் படலம். அமரர் சிவபெருமானைச் சரண்புகுதல்)

பரமன்

145 என்றுபர மன்பகர, நான்முகனும்,
அன்னபொரு ளேஇ சைதலும்,
நின்றுநிலை ஆறினர்கள், வானவரும்;
மானவனும் நேமி எனல்ஆம்
துன்றுநெடு வாளிமழை, மாரியினும்
மேலன துரந்து, விரைவின்
கொன்று,குல மால்வரைகள் மானுதலை
மாமலை குவித்த னன்அரோ.

பொழிப்பு: என்று சிவபெருமான் சொல்ல, பிரமதேவனும் அதனையே உடன்பட, அமரர்களும் நிலை நின்று அமைதி பெற்றார்கள்; மானவனாகிய இராமபிரான் சக்கரப்படை என்று சொல்லத்தக்க நெருங்கிய நீண்ட அம்புக் கூட்டங்களைப் புயலைவிட அதிகமாகச் செலுத்தி விரைந்து (அரக்கர்களை) கொன்று, பெரிய குலமலைகள் போன்ற தலைமாமலைகளைக் குவித்தனன்.

விளக்கம்: அரக்கர் கூட்டத்தை அழித்து, மலைபோன்ற அவர் தலைகளை மலைகளாகக் குவித்தனன் என்க.

(யுத்த. மூலபல வதைப்படலம். இராமன் அரக்கர் தலைகளை மலைபோல் குவித்தல்)

சிவன்

146 சிவனும், அயனும்,எழு
திகிரி அமரர்பதி
அவனும், அமரர்குலம்
எவரும், முனிவரொடு
கவனம் உறுகரணம்
இடுவர் ; கழுதுஇனமும்,
நமனும், வரிசிலையும்,
அறனும் நடன்நவில.

பொழிப்பு : பேய்க்கூட்டங்களும், எமனும், கட்டப்பெற்ற (இராமனின்) வில்லும், அறக் கடவுளும் ஆனந்தக் கூத்து ஆட, சிவனும், பிரமனும், போர் மேல் எழும் சக்கரப் படையை உடைய திருமாலும், அமரர் கூட்டத்துள்ள எல்லோரும், முனிவரர்களும் விரைந்து குட்டிக் கரணம் போடுவாராயினர்.

விளக்கம் : இராமனின் போர்த்திறம் கண்டு அறக்கடவுள் கூத்தாடிற்று. பேய்க் கூட்டங்கள் தமக்குக் கிடைக்கும் உணவுகருதிக் கூத்தாடின; எமன் நிறைந்த உயிர்களின் வருகை கருதி மகிழ்ந்தனன். சிவன், அயன், மால் முதலிய கடவுளர்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் குட்டிக்கரணம் அடித்தனர் என்க. கவனம் : விரைவு. கழுது : பேய். நமன்: எமன்.

(யுத்த. மூலபல வதைப் படலம். கடவுளர்களும் கரணம் போட்டனர்)

புரம் சுடும் ஒருவன்

147 மூன்றுகண் அமைந்தன,
ஐம்மு கத்தன,
ஆன்றமெய் தழலன,
புனலும் ஆடுவ,
வான்தொட நிமிர்வன,
வாளி மாமழை,
தோன்றின, புரம்சுடும்
ஒருவன் தோற்றத்த.

பொழிப்பு : மூன்று கண் பொருந்தியனவும், ஐந்து முகங்களைப் பெற்றனவும், சிறந்த உடல்கள் நெருப்பைப் போன்றனவும், நீராடுவனவும், விண்ணை நெருங்குமாறு வளர்வனவும் ஆகத் தோன்றிய பெரிய அம்புக் கூட்டங்கள், முப்புரத்தைச் சுடும் ஒப்பற்றவனாகிய சிவபிரான் தோற்றத் தனவாகக் காட்சி அளித்தன.

விளக்கம் : மூன்று கண்ணும், ஐந்து முகமும், தழல் வண்ணமும், கங்கை தாங்குதலும், வான்தொட நிமிர்தலும் சிவன் வடிவத்தைக் காட்டுவன. இது அழகிய முற்று உவமை.

(யுத்த. மூலபல வதைப்படலம். சிவனை நிகர்த்த அம்புகள்)

கண்ணுதல் பரமன்

148 கண்ணுதல் பரமன் தானும்,
நான்முகக் கடவுள் தானும்,
'எண்ணுதும், தொடர எய்த
கோல்'என எண்ண லுற்றார்;
பண்ணையால் பகுக்க மாட்டார்;
தனித்தனிப் பார்க்க லுற்றார்;
'ஒண்ணுமோ, கணிக்க?' என்பார்,
உவகையின் உயர்ந்த தோளார்.

பொழிப்பு : நெற்றிக்கண் படைத்த கடவுளாகிய சிவபெருமானும், நான்முகக்கடவுளாகிய பிரமனும், (இராமபிரான்) எய்த அம்புகளை எண்ணுவோம் தொடர்ச்சியாக எனத்தனித்தனியாக அம்புகளைப் பார்த்து எண்ணத்தொடங்கினவர்களாய், பெருக்கத்தின் காரணத்தால் எண்ண முடியாமல், மகிழ்ச்சியினாலே தோள் பூரித்து 'எண்ணிக்கையில் அடங்காது' என்று கூறுவாராயினர்.

விளக்கம் : கோல் : அம்பு. பண்ணை : பெருக்கம். ஒண்ணுமோ : முடியுமா. கணிக்க : கணக்கிட.

(யுத்த. மூல பல வதைப் படலம். சிவன் முதலியோராலும் கணக்கிட முடியாத அம்புக்கூட்டம்.)

ஈமத்துக் கறை மிடற்று இறைவன்

149 தீமொய்த்த அனைய செங்கண்
அரக்கரை முழுதும் சிந்தி,
பூமொய்த்த கரத்தர் ஆகி
விண்ணவர் போற்ற நின்றான்,
பேய்மொய்த்து நரிகள் ஈண்டி,
பெரும்பிணம் பிறங்கித் தோன்றும்
ஈமத்துள் தமியன் நின்ற
கறைமிடற்று இறைவன் ஒத்தான்.

பொழிப்பு : நெருப்பு நிறைந்ததை ஒத்த, சிவந்த கண்களை உடைய அரக்கர்களை முற்றும் அழித்துவிட்டு, பூக்கள் மலிந்த கைகளை உடையவர்களாகி, அமரர்கள் வணங்க நின்ற இராமபிரான், பேய்கள் மொய்க்க, நரிகள் நெருங்க, மிக்க பிணங்கள் விளங்கித் தோன்றும் சுடுகாட்டினுள் தன்னந்தனியனாய் நின்ற, நஞ்சு தங்கிய கழுத்தை உடைய சிவபிரானை நிகர்த்தான்.

விளக்கம் : அரக்கரை முழுதும் அழித்து, தன்னந்தனியனாய் நின்ற இராமபிரான், சுடுகாட்டில் நட்டம் பயின்றாடும் நாதனாகிய சிவபிரானை ஒத்தான் என்க.

(யுத்த. மூல பல வதைப் படலம். இராமனுக்கும் சிவனுக்கும் ஒப்பு)

இமையா முக்கண் இறைவன்

150 ஈசனை, இமையா முக்கண்
இறைவனை, இருமைக்கு ஏற்ற
பூசனை முறையின் செய்து,
திருமறை புகன்ற தானம்
வீசினன் இயற்றி, மற்றும்
வேட்டன வேட்டோர்க்கு எல்லாம்
ஆசுஅற நல்கி, ஒல்காப்
போர்த்தொழிற்கு அமைவது ஆனான்.

பொழிப்பு : ஈசனுகிய, முடாத மூன்றுகண் படைத்த இறைவன் சிவ பெருமானை, இம்மை மறுமை இருமைக்கும் பொருந்திய பூசையை முறைப் படி செய்து, திருமறைகளில் சொல்லப் பெற்றபடி, இடம் பார்த்து வீசி நல்கிப் பின்னும் வேண்டுவார்க்கெல்லாம் வேண்டியபடி, குற்றம் இன்றிக் கொடுத்து, தளராத போர்த் தொழிலுக்குப் பொருந்தியவனுனன். (இராவணன்)

விளக்கம் : இராவணன் சிவ பூசை செய்து, எல்லோர்க்கும் ஈந்து போர்க்கோலம் பூண்டான் என்க. தானம் : இடம். வேட்டன : விரும்பி யன. ஆசு : குற்றம். ஒல்காப் போர் : தளராத போர்.

(யுத்த. இராவணன் தேர் ஏறு படலம். இராவணனின் சிவபூசை)

கண்ணுதல் கணிச்சி

151 கண்ணன் நேமியும், கண்ணுதல்
கணிச்சியும், கமலத்து
அண்ணல் குண்டிகைக் கலசமும்,
அழியினும், அழியாத்
திண்மை சான்றது ; தேவரும்
உணர்வுஅருஞ் செய்கை
உண்மை ஆம்எனப் பெரியது,
வென்றியின் உறையுள்.

பொழிப்பு : திருமாலின் சக்கரப் படையும், சிவபிரான் மழுப் படை யும், தாமரை வாழும் பெருமையிற் சிறந்தோனுகிய பிரம தேவனின் கமண்டலமும் அழிந்தாலும், அழியாத வலிமை மிக்கது ; அமரர்களும் அறிதற்கு அரிய வேலைப்பாட்டுடன் கூடிய உண்மையைப் போல் பெரியது; வெற்றிக்கு இருப்பிடமாக உள்ளது ; (இராவணன் தேர்.)

விளக்கம் : குண்டிகைக் கலசம் : பிரமன் கையில் வைத்திருக்கும் நீர்ப் பாத்திரம். திண்மை : வலிமை. உறையுள் : இருப்பிடம்.

(யுத்த. இராவணன் தேர் ஏறு படலம். இராவணனின் தேர்ச் சிறப்பு)

அரன் இசைத்தான்

152 மூண்டசெரு இன்றுஅளவில்
முற்றும்;இனி, வெற்றி
ஆண்தகையது; உண்மை;இனி
அச்சம்அகல் உற்றீர்,
பூண்டமணி ஆழிவய
மா நிமிர் பொலம்தேர்
ஈண்டவிடு வீர்,அமரர்!'
என்றுஅரன் இசைத்தான்.

பொழிப்பு: 'தேவர்களே! வந்த போர் இன்றோடு முற்றுப்பெறும்; இனி, வெற்றி (இராமனாகிய) ஆண்தகையுடையது; இஃது உண்மை; இனி, அச்சத்தை அகற்றினவர்களாய், மணிகள் கட்டிய, சக்கரங்கள் பொருந்திய, வெற்றிக் குதிரைகள் நிமிர்ந்து செல்லத்தக்க அழகிய தேரை, (இராமனுக்கு) பொருந்த அனுப்புங்கள்' என்று சிவபெருமான் இயம்பினான்.

விளக்கம்: போர் காண வந்த அமரர்களைப் பார்த்து, சிவபிரான் கூறினான் என்க.

(யுத்த. இராமன் தேர் ஏறு படலம். இராமனுக்குச் சிவன் தேர் அனுப்பச் சொல்லுதல்)

எவன் அவ் ஈசன்

153 துவனி வில்லின்
பொருட்டுஒரு தொல்லைநாள்
'எவன்அவ் ஈசன்?' என் -
- பார்பொர ஏற்று,எதிர்
புவனம் மூன்றும்
பொலங்கழ லால்தொடும்
அவனும், அச்சிவ -
- னும்எனல் ஆயினர்.

பொழிப்பு : முன் ஒரு நாள் ஓசையை எழுப்புகின்ற வில்லின் காரணமாக, "எவன் அந்த ஈசன் ?" என்பதை அறியும் பொருட்டு, போரை மேற்கொண்டு எதிர்ப்பட்ட மூன்று உலகத்தையும் அழகிய திருவடியால் அளந்த அந்தத் திருமாலும், திருவடியால் தொட்ட அந்தச் சிவனும் என்று சொல்லுமாறு ஆனுர்கள். (இராமனும் இராவணனும்)

விளக்கம் : துவனி : ஒலி. பொர : போர் செய்ய. புவனம் : உலகம். பொலன்கழல் : அழகிய திருவடி. முன்னெருநாள் சிவனும், திருமாலும் ஓர் வில்லின் பொருட்டுப் பொருதனர் என்பது பழங்கதை.
(யுத்த. இராவணன் வதைப் படலம் - இராமனும் இராவணனும் பொருதல்)

சங்கரன்

154 கண்ட சங்கரன்
நான்முகன் கைத்தலம்
விண்டுஅ சங்க,தொல்
அண்டம் வெடித்திட,
அண்ட சங்கத்து
அமரர்தம் ஆர்ப்புஎலாம்
உண்ட சங்கம்
இராவணன் ஊதினுன்.

பொழிப்பு : போரைப் பார்த்துக் கொண்டிருந்த சிவன், பிரமன் ஆகியவரின் கைகள் ஆடி அசையவும், பழைய அண்டங்கள் வெடிபடவும், மேல் உலகத் தொகுதியிலுள்ள தேவர்களது ஆரவாரத்தையெல்லாம் பருகிய சங்கத்தை இராவணன் முழக்கினுன்.

விளக்கம் : அசங்க: அசைய. அண்ட சங்கம்: மேல்உலகத்தொகுதி.
(யுத்த. இராவணன் வதைப்படலம்: இராவணனின் சங்க முழக்கம்)

ஆனையின் உரி போர்த்தவன்

155 விண்போர்த்தன; திசைபோர்த்தன;
மலைபோர்த்தன; விசைஓர்
கண்போர்த்தன; கடல்போர்த்தன;
படிபோர்த்தன; கலையோர்

எண்போர்த்தன; எரிபோர்த்தன;
இருள்போர்த்தன; 'என்னே,
திண்போர்த்தொழில்!' என்றுஆனையின்
உரிபோர்த்தவன் திகைத்தான்.

பொழிப்பு: (இராவணன் எய்த அம்புகள்) வானுலகத்தை மூடின; திக்குகளை மறைத்தன; மலைகளெல்லாம் தெரியாது செய்து விட்டன; விரைவாக அறியும் தன்மை வாய்ந்தோரின் கண்களையும் மூடிவிட்டன; கடலை மறைத்து விட்டன; உலகமே தெரியாது செய்து விட்டன; கலைஞர்களின் எண்ணங்களையும் மூடிவிட்டன; நெருப்பை மூடின; இருளையும் மறைத்தன; "இவனது வலிய போர்த் தொழிலின் திறம்தான் என்னே!" என ஆனையின் தோலைப் போர்த்தவனாகிய சிவபெருமானும் திகைப்பினை அடைந்தான்.

விளக்கம்: படி: உலகம். எரி: நெருப்பு. உரி: தோல்.

(யுத்த. இராவணன் வதைப்படலம்: இராவணன் அம்புகளின் ஆற்றல்.)

கண்ணுதல் ஒருவன்

156 கண்ணுதல் ஒருவனது
அடுபடை கருதிப்
பண்ணவன் விடுதலும்,
அதுநனி பருக;
எண்ணுறு கனவினெடு
உணர்வுஎன, இமையில்,
துண்ணெனும் நிலையினின்
எறிபடை தொலைய.

பொழிப்பு: நெற்றிக் கண் படைத்தஒப்பற்றவனான சிவபெருமானின் கொல்லும் படையைத் தேர்ந்து இராமன் விடுதலும், அந்தச் சிவன்படை (இராவணன் விட்ட படையை) நன்கு உண்ண, எண்ணத்தக்க கனவை மறைக்கும் நனவைப் போல இமைப் போதில் துண் என்ற நிலையில் அரக்கன் எறிந்த படை தொலைந்து அழிய.

விளக்கம். அடுபடை: கொல்லும் கருவி. பண்ணவன்: இராமன். நனி: நன்ருக. உணர்வு தோன்றுதலும் கனவு மறைதல் போல இராமன் எய்த சிவன் அம்பிஞல் இராவணன் வாளி அழிந்தது என்க.

(யுத்த. இராவணன் வதைப்படலம்: இராமன் சிவன் படையை ஏவல்.)

போற்றும் ஈசனைத் தொழுதான்

157 பூச னைத்தொழில் புரிந்துதான்
முறைமையின் போற்றும்
ஈச னைத்தொழுது, இருடியும்
சந்தமும் எண்ணி,
ஆசை பத்தினும் அந்தரப்
பரப்பினும் அடங்கா
வீசி, மேற்செல வில்விசைத்
தொடைகொண்டு விட்டான்.

பொழிப்பு: (அம்புக்கு) வழிபாடு செய்து, தான் முறையாகப் போற்றும் சிவபெருமானை வணங்கி, அவ்அம்புக்குரிய இருடியையும், அதற்குரிய மந்திரத்தையும் நினைந்து, பத்துத்திக்கினும், வான வெளியினும் அடங்காமல் மேற்செல்லுமாறு, வில்லை விசையாக இழுத்து அம்பை வீசித் தொடுத்துச் செலுத்தினன்.

விளக்கம்: அம்பு விடும் போது அம்பைப் பூசைசெய்து, அதற்குரிய தேவதையையும், மந்திரத்தையும் சொல்லி, தான்வழிபடும் கடவுளை வணங்கி இராவணன் அம்புவிட்டான் என்க.

(யுத்த. இராவணன் வதைப்படலம்: இராவணன் மாயைப்படை விடுதல்)

ஈசனின் பெற்றவரம்

158 ஆயி ரம்பெரு வெள்ளம்என்று
அறிஞரே அறைந்த
காய்சி னப்பெருங் கடற்படை
களப்பட்ட எல்லாம்,

ஈச னின்பெற்ற வரத்தினுல்
எய்திய என்ன,
தேசம் முற்றவும் செறிந்தன,
திசைகளும் திகைக்க.

பொழிப்பு : பெரிய ஆயிரம் வெள்ளம் என்ன அறிஞர்களே சொல்லிய கடுங்கோபம் கொண்ட பெரிய போர்க்களத்திலே இறந்து ஒழிந்த கடல் போன்ற படைகளெல்லாம், சிவபெருமானிடம் பெற்ற வரத்தினுல் பிழைத்துத் திரும்பத்தோன்றியது என்று சொல்லுமாறு திக்குகளெல்லாம் திகைப்படைய நாடுமுழுதும் நெருங்கிவிட்டன.

விளக்கம் : கடற்படை : கடல் போன்ற படை. களம் : போர்க் களம். ஈசனின் : சிவபெருமானிடம். செறிதல் : நெருங்குதல்.

(யுத்த. இராவணன் வதைப் படலம். இறந்த சேனைகள் எழுதல்)

நீலம் கொண்ட ஆர் கண்டன்

159 நீலம் கொண்டஆர் கண்டனும்,
நேமிப் படையோனும்,
மூலம் கொண்டார், கண்டகர்
ஆவி முடிவிப்பான்,
காலம் கொண்டார்; கண்டன
முன்னே கழிவிப்பான்,
சூலம் கொண்டான், அண்டரை
எல்லாம் தொழில்கொண்டான்.

பொழிப்பு : நீல நிறம்கொண்டு பொருந்திய கழுத்தையுடைய சிவபெருமானும், சக்கரம் ஏந்திய திருமாலும், திருமாலினது கொப்புளில் தோன்றிய பிரமனும், உலகத்துக்கு அழிவு தேடும் அரக்கர்களது உயிரைக் குடிப்பதற்கு இதுவே தருணம் என்று எண்ணிக்கொண்டிருந்தார். அப்பொழுது, தேவர்களை யெல்லாம் ஏவல் கொண்டவனுகிய இராவணன், எதிரில் காணப்படும் பொருள்களை யெல்லாம் அழித்து ஒழிக்கக் கருதிச் சூலப் படையைக் கையில் கொண்டான்.

விளக்கம் : ஆர் : பொருந்திய. மூலம் : திருமாலின் உந்திக்கமலம். கண்டகர் : அழிவு செய்யும் அரக்கர். அண்டர் : தேவர். தொழில் கொண்டான் : பணியாளனுக ஏற்றவன்.

(யுத்த. இராவணன் வதைப்படலம். இராவணன் சூலம் எடுத்தல்)

அரன் அணி அடல் அரா

160 எவ்வகை உரகமும்
இரியல் போயின,
நொவ்வியல் உற்றென;
நொடிப்பது என்இனி?
அவ்வயின் அரன்அணி
அடல்அ ராவுமே
கவ்வையின் உழந்தன,
சிறையின் காற்றினே.

பொழிப்பு: (இராமன் விட்ட) கருடப் படையினுல், கருடனின் இறகுகளின் காற்றுப்பட்டு, அப்பொழுது சிவபிரான் அணிந்திருந்த பாம்புகள் எல்லாம் துன்புற்று வருந்தின. (அங்ஙனமாக) எல்லாவகை யான பாம்புகளும் நிலைதவறி நோதல் அடைந்தன, என்று கூறுவதில் பயன் என்ன?

விளக்கம்: உரகம்: பாம்பு. இரியல்: நிலைகெடுதல். நொவ்வியல்: நோதல். நொடித்தல்: சொல்லுதல். அவ்வயின்: அப்பொழுது. அடல்: வலிமை. கவ்வை: துன்பம். காற்றினே: காற்றினுல். சிவன் அணிந்த பாம்புகளே திணறும்போது ஏனைய பாம்புகளைப் பற்றிப் பேச என்ன இருக்கிறது என்க.

(யுத்த. இராவணன் வதைப் படலம்: இராமன் விட்ட
கருடப் படையின் சிறப்பு)

முக்கணுன் தடவரை எடுத்தோன்

161 ஒக்கநின்று எதிர்அமர்
உடற்றும் காலையில்,
முக்கணுன் தடவரை
எடுத்த மொய்ம்பற்கு
நெக்கன, விஞ்சைகள்
நிலையின் தீர்ந்தன;
மிக்கன, இராமற்கு
வலியும் வீரமும்.

பொழிப்பு : எதிர்நின்று ஒக்கப் போர் செய்யுங்கால், மூன்று கண்படைத்த சிவபெருமானின் பெரிய மலையை எடுத்த, வலிமை வாய்ந்த இராவணனுக்கு அவன் கற்ற வில்வித்தைகள் எல்லாம் நினைவுக் குறைவால் மறந்தன ஆகி, நிலையில் நீங்கின. இராமபிரானுக்கு ஆற்றலும், வீரமும் மேம்பட்டன.

விளக்கம் : தடவரை: பெரியமலை. மொய்ம்பன்: ஆற்றல் வாய்ந்த இராவணன். நெக்கன : நெகிழ்ச்சியடைந்தன. விஞ்சை : வித்தை. நிலையில் தீர்தல்: நிற்கும் நிலையினின்றும் நீங்குதல்.

(யுத்த. இராவணன் வதைப்படலம்: இராவணன் குறைவும்
இராமன் நிறைவும்)

சிவன் கரத்து வாங்கினான்

162 மாமரத்து ஆர்கையால்,
வருந்து வானோர்
தோமரத் தால்உயிர்
தொலைப்பத் தூண்டினன்;
தாம்அரத் தால்பொராத்
தகைகொள் வாட்படை,
காமரத் தால்,சிவன்
கரத்து வாங்கினான்.

பொழிப்பு : அரத்தால் அராவப்படாத தகுதி வாய்ந்த, (இயல்பாகவே கூர்மை கொண்ட) காமரம் என்னும் பண்ணைப்பாடி சிவன் கையினின்றும் பெற்றுக்கொண்ட, வாள்படையை வாங்கினானாகிய இராவணன், பெரிய மரம் போன்ற தடக்கையால் வருந்திக்கொண்டிருக்கிற (மாதலியை) ஒப்பற்ற தோமரம் என்னும் படையால் உயிரைக் குடிக்க ஏவினான்.

விளக்கம் : மாமரம் : பெரியமரம். வருந்துவான் : தேர்ப்பாகனாகிய மாதலி.

(யுத்த. இராவணன் வதைப் படலம் : மாதலிமேல் இராவணன்
தோமரம் விடுதல்)

புரம் சுடு படை

163 புரம்சு டப்பண்டு
அமைத்தது, பொன்பணை
மரம்து ளைத்தது,
வாலியை மாய்த்துளது,
அரம்சு டச்சுடர்
நெஞ்சன் அரக்கர்கோன்
உரம்சு டச்சுட-
-ரோன்மகன் உந்தினன்.

பொழிப்பு: முப்புரத்தைச் சுட்டு எரிப்பதற்கு முன்னே எடுத்துக் கொண்டதும். அழகிய கிளைகள் கொண்ட மராமரத்தைத் துளைத்ததும், வாலியைக் கொன்றதுமான அந்த அம்பை, அரம் தாக்க அஞ்சாது ஒளிவிடும் நெஞ்சனாகிய இராவணனுடைய மார்பைச் சுடுமாறு, சூரியன் மரபின் தோன்றலாகிய இராமன் செலுத்தினன்.

விளக்கம்: பொன்: அழகிய. பணை: கிளைகள். உரம்: மார்பு. சுடரோன்: ஆதவன். ஆதவன் இராமன் குலத்துக்கு முதல்வன்.

(யுத்த. இராவணன் வதைப் படலம். இராமன் அயன் படையை விடுதல்)

கங்கை சூடு ஈசன்

164 வாச நாள்மல
ரோன்சொல, மான்முகன்,
காசும் மாநிதி
யும்,கொடு, கங்கைசூடு
ஈச னேமுத
லோர்வியந்து ஏத்திடத்
தேசு லாமணி
மண்டபம் செய்தனன்.

பொழிப்பு : மணம் உள்ள, அன்று பூத்த மலரில் உள்ள பிரமன் சொல்ல, மான் முகத்தை உடையவனுகிய மயன் என்னும் தச்சன், அரதனங்களையும், சிறந்த பொன்னையும் கொண்டு, கங்கை சூடிய சிவ பிரான் முதலிய கடவுளர் வியந்து பாராட்டுமாறு ஒளிவிளங்குகின்ற மணி மண்டபம் செய்து முடித்தான்.

விளக்கம் : காசு : நவரத்தினம். மாநிதி : சிறந்த செல்வம். தேசு : ஒளி. மணிமண்டபம் : அரதனங்கள் பதிக்கப்பெற்ற மாளிகை.

(யுத்த. மீட்சிப் படலம்: பிரமன் கூறியபடி மயன் மண்டபம் அமைத்தல்)

ஏறுஅமர் கடவுள்

165 என்னும் மாத்திரத்து, ஏறுஅமர்
கடவுளும் இசைத்தான் ;
'உன்னை நீஒன்றும் உணர்ந்திலை
போலுமால் உரவோய்!
முன்னை ஆதிஆம் மூர்த்திநீ ;
மூவகை உலகின்
அன்னை சீதைஆம் மாதுநின்
மார்பின்வந்து அமைந்தாள்.'

பொழிப்பு : என்று சொன்ன அளவில், விடை ஏறும் கடவுளாகிய சிவபெருமானும் சொல்லுவான்: 'வலிமை மிக்கவனே! உன் தன்மையை நீ சிறிதும் அறிந்திலை போலும்; முன்னைய முதலாகிய மூர்த்தி நீஆவாய்; மூன்றுவகையான உலகங்கட்கும் தாயாகிய சீதையாம் தேவி உன் மார்பிலே வந்து பொருந்தியவளாகிய திருமகளே ஆவாள்.'

விளக்கம் : இப்பாடல் இராமனைப் பார்த்துச் சிவன் கூறுவது. சிவன் வாய்மொழி அடுத்த பாட்டிலும் தொடர்கின்றது.

(யுத்த. மீட்சிப் படலம். சிவன் இராமனுக்கு உண்மையை உணர்த்தல்)

மழுவலான்

166 ' துறக்கும் தன்மையள் அல்லளால்,
தொல்லைஎவ் உலகும்
பிறக்கும் பொன்வயிற்று அன்னை;இப்
பெய்வளை பிழைக்கின்,
இறக்கும் பல்உயிர்; இறைவ!நீ
இவள்திறத்து இகழ்ச்சி
மறக்கும் தன்மையது' என்றனன்;
மழுவலான் வழுத்தி.

பொழிப்பு: 'ஒதுக்கும் தகுதியை உடையாள் இவள் அல்லள்; பழைய எல்லா உலகத்தையும் ஈன்று எடுத்த அழகிய வயிற்றை உடைய அன்னையாவாள் (இச் சீதை;) இந்த வளையலை அணிந்த சீதையை நீ கைவிட்டால் உலகில் உள்ள பல உயிர்களும் இறந்துபடும்; தலைவனே! இவள் மீது நீ எண்ணும் இகழ்ச்சி மறக்கும் தகையது' என்று மழுவலானாகிய சிவன் வழுத்திக் கூறினன்.

விளக்கம்: துறத்தல்: நீக்குதல். பொன்: அழகு. பெய்வளை: வளையலை அணிந்தவள். பிழைத்தல்: கைவிடல். மழுவலான்: சிவன். மேற்பாட்டும் இதுவும் ஒரு தொடர்.

(யுத்த. மீட்சிப் படலம்: சிவன் சீதையின் சிறப்பை இராமனுக்கு உணர்த்தல்)

வரம் தரும் முதல்

167 வரம்த ரும்முதல் மழுவலான்
முனிவரர், வானோர்,
புரந்த ராதிமற்று ஏனையோர்
தனித்தனி புகழ்ந்துஆங்கு,
' அரந்தை வெம்பிறப்பு அறுக்கும்நா-
-யக! நினது அருளால்
குரங்குஇ னம்பெறுக!' என்றனர்,
உள்ளமும் குளிர்ப்பார்.

பொழிப்பு: வரம் கொடுக்கும் முதல்வனாகிய பிரமனும், மழுவலானாகிய சிவனும், இருடிகளும், தேவர்களும், இந்திரன் முதலிய ஏனையோரும், தனித்தனியே பாராட்டி (இராமனைப் பார்த்து) 'துன்பத்தைத் தருகின்ற கொடிய பிறப்பை ஒழிக்கின்ற தலைவனே! உன் கருணையால் குரங்குக் கூட்டங்கள் உயிர்பெற்றுஎழுக' என்று உள்ளமும் குளிர்ச்சிபெற்றவராகிக் கூறினர்.

விளக்கம்: அரந்தை: துன்பம். வெம் பிறப்பு: கொடிய பிறவி. பெறுக: உயிர் பெறுக.

(யுத்த. மீட்சிப்படலம். குரங்குகள் உயிர்பெற வரம் அளித்தல்)

நெற்றி விழியினன்

168 'நாளைநீ மவுலி சூட
நன்மைசால் பெருமை நல்நாள்;
காளை!நீ அதனுக்கு ஏற்ற
கடன்மைமீது இயற்றுக!' என்று
வேளையே காயும் நெற்றி
விழியினன், மேவு மென்பூப்
பூளையே சூடுவானைப் பொருவுமா
முனிவன் போனான்.

பொழிப்பு: (வசிட்டன் இராமனைப் பார்த்து) 'காளை போன்றவனே! நீ மகுடம் சூட, பொருந்தும் நன்மை மிக்க சிறந்த நல்ல நாள் நாளையே ஆகும்; நீ அதற்கு ஏற்ற காரியங்களை எல்லாம் நன்கு செய்வாயாக என்று நெற்றிக்கண் பெற்ற, மெல்லிய பூளைப் பூவை அணிந்த சிவபெருமானை ஒத்த வசிட்டன் சொல்லிச் சென்றான்.

விளக்கம்: மௌலி: கிரீடம். 'காளை' ஈண்டு விளி. வேள்: மன்மதன். காய்தல்: அழித்தல். பூளை: சிவபெருமான் தலையில் சூடும் பூக்களில் ஒன்று. முனிவன்: வசிட்டன்.

(யுத்த. திருமுடி சூட்டு படலம்: வசிட்டன் இராமனிடம் சொல்லுதல்)

2 வீடணன் மொழி

2 வீடணன் மொழி

சிவனைப்பற்றிப் பாத்திரங்களின் வாயிலாகக் கூறுவதில் வீடணன் மொழியே எண்ணிக்கையில் மேல் ஓங்கிநிற்கிறது. வீடணன் வாயிலாகச் சிவன் முப்பத்தைந்து இடங்களில் பேசப் பெறுகின்ருன்.

"கற்றைஅம்சடைக் கடவுள்"
"ஐம்முகன்"
"முக்கண் தேவன்"
"தவன் நுணங்கியரும், வேதத் தலைவரும் உணரும்
தன்மைச் சிவன்"
"ஆலம் உண்டவன்"
"அழியாத சூலத்து அந்தணன்"
"பிறைசூடும் பிஞ்ஞகன்"

முதலியன சிவனைப்பற்றி வீடணன் கூறும் சிறப்புச் சொற்ருெடர்கள்.

இராவணன் மலை எடுத்த நிகழ்ச்சியைக் கூறும் போது, 'மேல் உயர் கயிலை' என்றும், "எள்இல் ஐம்பெரும் பூதமும் யாவையும் உடைய புள்ளிமான் உரி ஆடையன், உமையொடும் பொருந்தும் வெள்ளி அம் பெருங்கிரி" என்றும் கயிலையின் சிறப்பை வீடணன் கூறி மகிழ்கின்ருன்.

தன்னை இராமபிரான் ஏற்றுக் கொண்ட பெருமிதத்தை எண்ணி, இறும்பூதோடு வீடணன் கூறும் உரை, பொன் ஏட்டில் நவமணிகளில் பதிக்கத்தக்கது.

"பஞ்சுஎனச் சிவக்கும் மென்கால்
தேவியைப் பிரித்த பாவி
வஞ்சனுக்கு இளைய என்னை
வருகஎன்று அருள்செய் தானே?
தஞ்செனக் கருதி னுனே?
தாழ்சடைக் கடவுள் உண்ட
நஞ்சுஎனச் சிறந்தேன் அன்ருே?
நாயகன் அருளின், நாயேன்.

'குழம்பு தீட்டுதற்குப் பஞ்சு கொண்டு வா' என்று சொன்னவுடனேயே சிவந்து விடும் மென்மை வாய்ந்த திருவடிகளையுடையதேவியாம், சீதையைப் பிரித்த பாவியாகிய வஞ்சக இராவணனுக்குப் பின் பிறந்த என்னையும், ஏற்றுக் கொண்டானு இராமபிரான்? எனக்கும் அடைக்கலம் அருளினுனு? நான் நஞ்சு அனையவன் தான்; ஆனுல் நஞ்சுக் குரிய கொடுமை நீங்கப்பெற்று, தாழ்சடைக் கடவுளாகிய சிவபெருமான் உண்ட நஞ்சு எப்படிச் சிறந்து விளங்குகின்றதோ, அவ்வாறு நஞ்சாகிய நானும் சிறந்து விட்டேன், நாயகன் அருள்செய்த காரணத்தால்" என்று பேசுகிருன். "சிவபிரான் உண்டதால் நஞ்சு சிறந்தது, இராமபிரான் ஆண்டதால் நான் சிறந்தேன்" என்று நினைந்து உருகுவான் வீடணன்.

முத்தலை எஃகன்

169 'முத்தலை எஃகன், மற்றை
முராந்தகன், முனிவன் முன்னு

அத்தலை நம்மை நோனு
அமரர்க்கும், நகையிற் றுமால்;

எத்தலை உலகும் காக்கும்
வேந்தன்நீ, வேற்றோர் ஏவ,

இத்தலை எய்தி னானைக்
கொல்லுதல் இழுக்கம்; இன்னும். 1

பொழிப்பு: (வீடணன் இராவணனைப் பார்த்து) 'இடம் அகன்ற எல்லா உலகத்தையும் பாதுகாக்கும் மன்னனாகிய நீ, வேற்றோரால் அனுப்பப்பட்டு இங்கு வந்து அடைந்த இவனை (அனுமனைக்) கொல்லுதல் குற்றமாகும்; மேலும், மூன்றுதலைகளை உடைய சூலத்தைக் கையில் ஏந்திய சிவன், ஏனைத் திருமால், பிரமன், ஆகியவரை முதலாக உடைய ஆண்டு உள்ள, (நமது ஆக்கம் கண்டு) பொறாத தேவர்கட்கும் சிரிப்பிற் கிடமாகும்.

விளக்கம்: எஃகு: படை. முராந்தகன்: முரன் என்ற அசுரனைக் காலனாக வந்து முடித்தவனாகிய திருமால். முனிவன்: பிரமன். முன்னு: முதலாக, 2, 3, 4வது வரிகளில் உள்ள 'தலை' இடம் என்னும் பொருளது. நோனு: பொறாத.

(சுந்தர. பிணிவீட்டு படலம்: அனுமனைக் கொல்லல் தகாது என
வீடணன் தடுத்துரைத்தல்)

மேல் உயர் கயிலை

170 'மேல்உயர் கயிலையை
எடுத்த மேலைநாள்,

நாலுதோள் நந்திதான்
நவின்ற சாபத்தால்,

கூலவான் குரங்கிஞல்
குறுகும், கோள்அது,
வாலிபால் கண்டனம்;
வரம்பில் ஆற்றலாய்!' 2

பொழிப்பு: (இராவணனைப் பார்த்து வீடணன் விளம்புவான்) 'எல்லையற்ற ஆற்றல் உடையவனே! மேலே உயர்ந்து ஓங்கிய கயிலை மலையை நீ பெயர்த்த அந்த நாளில், நான்கு தோள்களை உடைய நந்தியானவன் சொல்லிய சாபத்திஞல், வாலை உடைய பெரிய குரங்குகளிஞல் உனக்குக் கேடுவரும் என்றதை, வாலி உன்னை வென்றமையால் கண்டோம்.'

விளக்கம்: கூலம்: வால். வான்: பெரிய. குறுகும்: அடையும். கோள்: கேடு. வீடணன் வாலின் வெற்றியை எடுத்துக்காட்டி, குரங்கினத்தின் சாபத்தை நினைவூட்டுகின்ருன் என்க.

(யுத்த. இராவணன் மந்திரப் படலம். வீடணன் இராவணனுக்குக் கூறல்)

ஈசனின் பெறு படைக்கலம்

171 'கோசிகப் பெயருடைக் குலமுனித்
தலைவன்,"அக் குளிர்ம லர்ப்பேர்
ஆசனத் தவனெடுஎவ் உலகமும்
தருவென்"என்று அமையல் உற்ருன்,
ஈசனின் பெறுபடைக் கலம்,இமைப்பு
அளவில்எவ் உலகில் யாவும்
நாசம்உற் றிடநடப் பனகொடுத்-
-தனபிடித் துடையர் நம்ப!' 3

பொழிப்பு: தலைவனே! அந்த, குளிர்ச்சி பொருந்திய தாமரைப் பூவாகிய பெரிய இருக்கையிலே இருக்கின்ற பிரமனேடு ஒப்ப, 'எல்லா உலகத்தையும் படைப்பேன்' என்று பொருந்திய, கோசிகன் என்னும் பெயரை உடைய, சிறந்த முனிகளுக்குத் தலைவனுனவன், சிவபெருமானிடத்துப் பெற்ற படைக்கலங்களை எல்லாம், கண்மூடித்திறக்கும் முன்னே, எல்லா உலகில் உள்ள எல்லாப் பொருளும், அழிந்து விடுமாறு செய்யத்தக்கவற்றைக் கொடுக்க அதைக் கைக்கொண்டவர்கள். (இராம இலக்குவர்)

விளக்கம் : கோசிகன்: விசுவாமித்திரன். நம்ப: தலைவனே.

(யுத்த. இராவணன் மந்திரப்படலம். விசுவாமித்திரன் கொடுத்த சிவன் படையின் சிறப்புப் பற்றி இராவணனிடம் வீடணன் விளம்பல்)

முப்புரம் நெருப்புற எய்த அம்பு

172 ‘ எறுழ்வலிப் பொருஇல்தோள் அவுணரோடு
அமரர்பண்டு இகல்செய் காலத்து
உறுதிறல் கலுழன்மேல் ஒருவன் நின்று
அமர்செய்தான் உடைய வில்லும்,
தெறுசினத் தவர்கள்முப் புரம்நெருப்
புற,உருத்து எய்த அம்பும்,
குறுமுனிப் பெயரினுன், நிறைதவர்க்கு
இறை,தரக் கொண்டு நின்றார்.’ 4

பொழிப்பு : மிக்க வலிமை பெற்ற ஒப்பற்ற தோள்கள் கொண்ட அவுணர்களோடு, அமரர் முன்நாள் போர் செய்த காலத்து, பெருவலி யுடைய கருடன் மீது, தன்னந்தனியனாய் நின்று போர் செய்த திருமாலின் வில்லையும், அழிக்கும் கோபம் கொண்டவர்களுடைய முப்புரம் நெருப்புப் பிடித்து எரிய, கோபித்துச் சிவபிரான் செலுத்திய அம்பையும் குறுகிய வடிவம் உள்ள முனிவன் என்று பெயர் பெற்ற, நிறைந்த தவமுடையார்க் கெல்லாம் தலைவனாகிய அகத்தியன் கொடுக்க, பெற்று நின்றார். (இராம இலக்குவர்)

விளக்கம் : எறுழ்வலி : பேராற்றல். உறுதிறலும் அதுவே. கலுழன் : கருடன். தெறுசினம் : எதிரிகளை அழிக்கின்ற கோபம். திருமால் வில்லையும், சிவன் அம்பையும் இராம இலக்குவர்க்கு அகத்தியன் அருளினான் என்க.

(யுத்த. இராவணன் மந்திரப் படலம். அகத்தியன் கொடுத்த படையின் சிறப்பை இராவணனுக்கு வீடணன் இயம்புதல்)

காதும் கண்ணுதல்

173 ‘வேதம் கண்ணிய பொருள்எலாம்
விரிஞ்சனே ஈந்தான் ;
போதம் கண்ணிய வரம்எலாம்
தரக்கொண்டு போந்தான் ;
காதும் கண்ணுதல். மால்,அயன்,
கடைமுறை காணுப்
பூதம் கண்ணிய வலிஎலாம்
ஒருதனி பொறுத்தான்.’ 5

பொழிப்பு : (இரணியனுக்கு) வேதங்களில் சொல்லப் பெற்ற பொருள்களை எல்லாம், பிரமனே கற்பித்தான்; (அவ் இரணியன்) அறிவினால் குறித்த வரங்களை எல்லாம் (அப்பிரமன்) கொடுக்க, கொண்டுவந்தான்; அழிக்கும் கடவுளாகிய சிவனும், திருமாலும், பிரமனும் முடிவுகாண முடியாத ஐம்பெரும் பூதங்களில் பொருந்திய ஆற்றல் அனைத்தும் ஒரு சேரத் தாங்கப் பெற்றவனுனன்.

விளக்கம் : விரிஞ்சன் : பிரமன். போதம் : அறிவு. கண்ணிய : சொல்லிய. காதுதல்: அழித்தல். பூதம் கண்ணிய: பூதங்களினிடத்துப் பொருந்திய.

(யுத்த. இரணியன் வதைப்படலம். மும்மூர்த்திகளினும் இரணியன் மிக்கோன் என வீடணன் கூறல்)

கற்றை அம்சடைக் கடவுள்

174 ‘எற்றை நாளினும் உளன்எனும்
இறைவனும், அயனும்,
கற்றை அம்சடைக் கடவுளும்,
காத்து,அளித்து, அழிக்கும்
ஒற்றை அண்டத்தின் அளவினோ ?
அதன்புறத்து உலவா
மற்றை அண்டத்தும் தன்பெய-
-ரேசொல வாழ்ந்தான்.’ 6

பொழிப்பு: எந்த நாளினும் இருக்கின்றான் என்று சொல்லத் தக்க திருமாலும், பிரமனும், கூட்டமாகிய அழகிய சடையைக்கொண்ட கடவுளாகிய சிவனும் காத்து, படைத்து, அழிக்கும் இந்த ஓர் அண்ட கோளத்தில் மட்டுமா? இதற்கு அப்பால் உள்ள அளவிடமுடியாத மற்றை அண்ட கோளங்களிலும் தன் பெயரையே சொல்லி ஏத்த வாழ்ந்திருந்தான். (இரணியன்)

விளக்கம்: 'அளித்து' இங்கு 'படைத்து' என்னும் பொருளது. திருமால், பிரமன், சிவன் என்பதற்கு ஏற்ப முறையே காத்து, படைத்து. அழித்து எனக் கொள்க. 'மும் மூர்த்திகளின் ஆக்கல், அளித்தல், அழித்தல் என்பதற்கு உட்பட்டது இவ்வண்டம் மட்டும்தான்' என்பது சிந்தனைக்குரியது.

(யுத்த. இரணியன் வதைப் படலம். இரணியன் பெயரை எல்லா அண்டமும் சொல்லியது)

ஐம்முகன்

175 'மருக்கொள் தாமரை நான்முகன்
ஐம்முகன், முதலோர்
குருக்க ளோடுகற்று ஓதுவது,
அவன்பெருங் கொற்றம்;
சுருக்கில் நான்மறை தொன்றுதொட்டு
உரைதொறும் தோன்றாது
இருக்கும் தெய்வமும் இரணிய-
-னே! நம! என்னும். 7

பொழிப்பு: மணங்கொண்ட தாமரையில் தோன்றிய பிரமதேவனும் ஐந்து முகங்களை உடைய சிவனும் முதலானோர் ஆசிரியரிடத்துப் படித்து அறிந்து பேசுவது, அவ்விரணியனது பெரிய வெற்றியையே ஆம்; சுருக்கமாகச் சொல்வோமானால், நான்கு வேதங்களும், 'பழைய காலந் தொட்டு, சொற்களில் எல்லாம் வெளிப்படாது மறைந்திருக்கும் கடவுளும் இரணியனே அவனுக்கு வணக்கம்' என்று சொல்லும்.

விளக்கம்: மரு: மணம். நான் முகன்: பிரமன். ஐம்முகன்: சிவன். கொற்றம்: வெற்றி.

(யுத்த. இரணியன் வதைப் படலம். 'மறைகளும் இரணியனே! நம!என்னும்', என வீடணன் விளம்பினான்.)

மான் இடன்

176 'தேவர் ஆயினர் ஏவரும்,
சேணிடைத் திரியும்
யாவ ரேயும்மற்று எண்ணுதற்கு
அரியராய் இயன்ற,
கோவை மால்,அயன் மான்இடன்
யாவரும் கொல்ல,
ஆவி தீர்கிலன்; ஆற்றலும்
தீர்கிலன்- அனையான்.' 8

பொழிப்பு : அந்த இரணியன், தேவரானவர் எல்லோரும், வானத்தில் திரியும் யாவரும், மற்றும் நினைக்க முடியாத பெருமைவாய்ந்தவராகிய, தொடர்ச்சியாகக் கூறப்பெற்ற திருமால், பிரமன், சிவன் ஆகியோரும் அழிக்க உயிர் நீங்க மாட்டான்; ஆற்றலும் அடங்க மாட்டான்.

விளக்கம்: மான் இடன் : சிவன். மானைஇடக்கையிலே ஏற்றவன் என்க. ஆவி : உயிர். அனையான் : அந்த இரணியன்.

(யுத்த. இரணியன் வதைப் படலம். 'மூவராலும், யாவராலும் அழிக்க ஒண்ணுதவன் இரணியன்' என்றான் வீடணன்.)

முக்கண் தேவன்

177 ' "முக்கண் தேவனும், நான்முகத்து
ஒருவனும், முதலா,
மக்கள் காறும்,இம் மந்திரம்
மறந்தவர் இறந்தார்;
புக்குக் காட்டுவது அரிது;இது
பொதுவுறக் கண்டார்,
ஒக்க நோக்கினர்; அல்லவர்
இதன்நிலை உணரார்.'' 9

பொழிப்பு : மூன்று கண் பெற்ற தேவனுகிய சிவனும், நான்முகத்து ஒருவனுகிய பிரமனும் முதலாக உலகத்துஉள்ள மக்கள் ஈருக (நாராயணுய எனும்) இம்மந்திரத்தை மறந்தவர் இறந்தவரேயாவார்; இம்மந்திரத்தை உள் நுழைந்து விளக்கிக் காட்டுவது அருமையாகும்; இதனை நடுநிலை பொருந்தப் பார்க்கும் தன்மை உள்ள ஞானிகள், இதன் பெருமையை அறிவார்; ஏனையோர் இதன் சிறப்பை உணரமாட்டார்.

விளக்கம் : நாராயண நாமத்தைத் தேவர்களும், மனிதர்களும் மறந்தால் இறந்தவரே யாவார். அதன் சிறப்பை அறிந்தவர் அறிஞர்கள். அல்லர்தார் அல்லாதார் என்க.

(யுத்த. இரணியன் வதைப் படலம். நாராயண நாமத்தின் சிறப்பை, பிரகலாதன் கூறியபடி, வீடணன் இராவணனுக்குக் கூறல்)

சிவன் என்று எய்திஞர் பதம் இழந்தனர்

178 '"செய்த மாதவம் உடைமையின்,
அரி,அயன் சிவன்என்று
எய்தி ஞர்பதம் இழந்தனர்;
யான்தவம் இயற்றி,
பொய்இல் நாயகம் பூண்டபின்,
இனிஅது புரிதல்
நொய்யது ஆகும்என்று, ஆரும்என்
காவலின் நுழைந்தார்."' 10

பொழிப்பு : 'முன்பு செய்த சிறந்த தவம் உடைமையினுலே திருமால், பிரமன், சிவன் என்ற பதவிகளை அடைந்தவர்கள், நான் அவரினும் பெருந்தவம்இயற்றி, பொய்யில்லாத தலைமைப்பேறு அடைந்த பின், இனி அம் மூவர்க்கும் உரிய படைப்பு, அளிப்பு, அழிப்புத் தொழில்புரிவது, எளிமையைத் தருவதாகும் என, தங்கள் பதவிகளை இழந்தனராகி அம் மூவரும் என் ஆட்சிக்குள் அடங்கினர்' (என இரணியன் இயம்பினன்)

விளக்கம் : பொய்யில் நாயகம் : பொய்யாத தலைமைப் பதவி. நொய்யது ; எளிமை உடையது. ஈண்டுப் பொருந்தாது என்னும் பொருளது.

(யுத்த. இரணியன் வதைப்படலம். இரணியன் அகங்காரப் பேச்சை இராவணனுக்கு வீடணன் விளம்பல்)

திருநான் மறையின் நெறியே திரிவார்

179 "வருநான் முகன்,ஐம்-
-முகன்,வா னவர்கோன்,
திருநான் மறையின்
நெறியே திரிவார்,
பெருநாள் தெரிகின்-
-றிலர்;பே தைமையேன்
ஒருநாள், உனஎங்-
-ஙனம்உள் ளுவெனே,?" 11

பொழிப்பு: உன் கொப்பூழில் தோன்றிய நான்முகனுகிய பிரமனும் ஐம் முகனுகிய சிவனும், தேவர்களுக்கு இறைவனும் ஆகிய சிறந்த நான்கு மறைகளில் சொல்லப்பட்டபடியே நடக்கும் அவரும் எத்துணையோ நாட்களாக (உன்சிறப்பை) அறிந்தாரல்லர். (அங்ஙனமாக) அறியாமை யுடைய யான் ஒரு நாளில் உன் பெருமையை எவ்வாறு நினைப்பேன்?

விளக்கம்: நெறி: வழி. பெருநாள்: மிகப்பலநாள். பேதைமை: அறியாமை. உள்ளுதல்: நினைத்தல்.

(யுத்த. இரணியன் வதைப்படலம்: பிரகலாதன் வாய் மொழியை வீடணன் உரைத்தல்)

முக்கணுன் எண்கணுன்

180 'முக்கணுன், எண்க ணுனும்,
முளரிஆ யிரங்க ணுனும்,
திக்குஅணும் தேவ ரோடு
முனிவரும், பிறரும், தேடிப்
புக்கநாடு அறிகு ருமல்
திரிகின்ருர், புகுந்து மொய்த்தார்;
"எக்கணுல் காண்டும், எந்தை
உருவம்"என்று இரங்கி நின்ருர்.' 12

பொழிப்பு : சென்ற நாடு எது என்று தேடி அறிய முடியாமல் (இரணியனுக்கு அஞ்சி) ஓடி உழல்கின்ருராகிய மூன்று கண்கள் படைத்த சிவனும், எட்டுக் கண்கள் பெற்ற பிரமனும், தாமரை மலர் போன்ற ஆயிரம் கண்கள் படைத்த இந்திரனும், திக்குகளில் தங்கிய தேவர்களும், இருடிகளும், ஏனையோரும் அவ்இரணியன் மாண்டவுடன் அங்கு நெருங் கிக் கூடினர். (அன்னுர்) எந்தக் கண்ணுல் எந்தை வடிவத்தைக் (நரசிங்க உருவத்தை) காண்போம் என்று இரக்கமுற்று நின்ருர்கள்.

விளக்கம் : முளரி : தாமரை. திக்குஅணும் : திக்குகளில் பொருந் திய. நரசிங்க வடிவம் எளிதிற் காணவொண்ணுதபடி அச்சுறுத்தி நின்றது என்க.

(யுத்த. இரணியன் வதைப் படலம். அமரர்கள் நரசிங்கத்தைக் காணக்கூடுதல்)

வன் தாள் மழுவோன்

181 'என்றுஆங்கு இயம்பி,
இமையாத எண்கணனும்,
வன்தாள் மழுவோனும்,
யாரும் வணங்கினராய்
நின்ருர், இருமருங்கும்;
நேமிப் பெருமானும்
ஒன்ருத சீற்றத்தை
உள்ளே ஒடுக்கினுன்.' 13

பொழிப்பு : என்று சொல்லி மூடாத எட்டுக் கண்கொண்ட பிரமனும் வலியதாளையுடைய மழுப்படையைப்பெற்ற சிவனும், பிறரும் தொழுதவராய் இருபக்கத்திலும் நின்ருர்கள். சக்கரத்தைத் தாங்கிய நரசிங்கப் பெருமா ணுகிய திருமாலும் குறையாத கோபத்தை உள்ளே ஒடுக்கிக்கொண்டான்.

விளக்கம் : வன்தாள்மழு : வலிய பாதத்தையுடைய மழுப்படை. "வன்தாள்சிலை" என்பார் மற்ருேரிடத்து.

(யுத்த. இரணியன் வதைப் படலம். நரசிங்கம் சீற்றத்தை ஒடுக்குதல்)

தாழ் சடைக் கடவுள் உண்ட நஞ்சு

182 '"பஞ்சு"எனச் சிவக்கும் மென்கால்
தேவியைப் பிரித்த பாவி
வஞ்சனுக்கு இளைய என்னை,
"வருக"என்று அருள்செய் தானோ?
தஞ்சுஎனக் கருதி னானோ?
தாழ்சடைக் கடவுள் உண்ட
நஞ்சுஎனச் சிறந்தேன் அன்றோ?
நாயகன் அருளின் நாயேன்?' 14

பொழிப்பு : "ஊட்டுதற்குச் செம்பஞ்சுக்குழம்பு கொண்டு வா" எனச் சொன்னவுடனேயே சிவக்கும் மெல்லிய திருவடியை உடைய தேவியாகிய சீதையைப் பிரித்த பாவியாம் வஞ்சகன் இராவணனுக்குத் தம்பியாகப் பிறந்த என்னை, "வருக!" என்று (இராமபிரான்) அருளினானா? (என்னையும்) அடைக்கலமாக ஏற்க (அப் பெருமான்) எண்ணினானா? இராமபிரானின் கருணையினால் நாயை ஒத்தவனாகிய நான், தாழ்ந்த சடையை யுடைய சிவபெருமான் உட்கொண்ட நஞ்சைப் போல், சிறப்புப்பெற்று விட்டேன் அல்லவா?

விளக்கம் : மகளிர் திருவடிக்குச் செம்பஞ்சுக் குழம்பு ஊட்டுதல் மரபு. ஊட்டும் போது அது பொறாமல் திருவடி சிவக்கும் என்பர். ஆனால் சீதையின் திருவடி "பஞ்சு" என்று சொன்னவுடனேயே சிவக்கும் என்க. தஞ்சு: அடைக்கலம். நஞ்சு கொடியது; எனினும் அந்த நஞ்சு சிவபிரான் உண்டபின் சிறப்புப் பெற்று விட்டது போல, கொடியவனாகிய நான் இராமபிரான் ஆட்கொண்ட பிறகு உயர்ந்து விட்டேன் என்பான் வீடணன்.

(யுத்த. வீடணன் அடைக்கலப் படலம். வீடணனின் மகிழ்ச்சிப் பெருக்கு)

விடை வரு பாகன்

183 'வடதிசை வயங்குஒளி
வாயில் வைகுவோர்,
இடைஇலர், எண்-இரு
கோடி என்பரால்;

கடையுக முடிவினில்
காலன் என்பதுஎன்?
விடைவரு பாகனைப்
பொருவும் மேன்மையார்.' 15

பொழிப்பு: வடக்குத் திக்கிலே ஒளியோடு விளங்குகின்ற வாயிலிலே (காவலராகத் தங்கி இருப்பவர்) பின்வாங்கியறியாத பதினறு கோடி எண்ணிக்கையினர் ஆவர். உலகம் அழியும் ஊழிக்காலத்து எமன் என்று அவர்களைச் சொல்வது எப்படி? (அந்த யமனையும் அழிக்கவல்ல) விடையைச் செலுத்துகின்ற சிவபெருமானையே ஒத்த பெருமையுடையார் அவர்.

விளக்கம்: வயங்கு: விளங்குகின்ற. இடைதல்: பின்வாங்குதல். பாகன்: செலுத்துகின்றவன். பொருவுதல்: ஒத்தல்.

(யுத்த. இலங்கைகேள்விப் படலம்: வாயில் காப்போர் ஆற்றலை வீடணன் கூறல்)

வாள் சிவன் கொடுக்க வாங்கிய தோளவன்

184 'இலங்கையின் அரண்இது;
படையின் எண்இது;
வலங்கையில் வாள்சிவன்
கொடுக்க வாங்கிய
அலங்கல்அம் தோளவன்
துணைவர், அந்தம்இல்
வலங்களும் வரங்களும்,
தவத்தின் வாய்த்தவர்.' 16

பொழிப்பு: இலங்கை நகரத்தின் அரண் இத்தன்மைத்து; படைகளின் கணக்கு இவ்வளவினது; சிவபிரான் கொடுக்க வாள் வாங்கிக் கொண்ட வெற்றிக் கையை உடைய மாலை அணிந்த அழகிய தோள்கள் கொண்ட இராவணனின் தோழர்களாகிய இவர்கள், முடிவில்லாத வெற்றிகளும் வரங்களும் தவத்தினுல் வாய்க்கப் பெற்றவராவர்.

விளக்கம்: அரண்: பாதுகாப்பு. வலம்: வெற்றி. அலங்கல்: மாலை. அம்: அழகு. அந்தம்: முடிவு.

(யுத்த. இலங்கை கேள்விப்படலம். இராவணனின் தோழர்கள் சிறப்பை வீடணன் உரைத்தல்)

முச்சிரத்து அயில் தலைவன்

185 'உச்சி ரத்துஎரி கதிர்என
உருத்துஎரி முகத்தன்,
நச்சி ரப்படை நால்-இரு
கோடிக்கு நாதன்,
முச்சி ரத்துஅயில் தலைவற்கும்
வெலற்குஅரு மொய்ம்பன்,
வச்சி ரத்துஎயிற் றவன்,உளன்
கூற்றுவன் மாற்றான். 17

பொழிப்பு : தலையின் மேற்பக்கத்தில் ஒளி விடுகின்ற சூரியனைப் போலக் கோபித்து எரிகின்ற முகத்தை உடையவனும், மிக்க உயர்ந்த எட்டுக் கோடி படைகட்குத் தலைவனும், மூன்று தலையை உடைய சூலப்படை ஏந்திய சிவபெருமானாலும் வெல்ல முடியாத வலிமை வாய்ந்தவனும், காலனுக்கு எதிரியாக உள்ளவனும் ஆகிய வச்சிரம் போன்ற பல்லை உடையவன் ஒருவன் அப்படைத்தலைவருள் உளன்.

விளக்கம் : உச்சிரம்: தலையின் மேற்புறம். 'ந,' உயர்வு குறிக்கும் சொல். மொய்ம்பு: வலிமை.

(யுத்த. இலங்கை கேள்விப் படலம். படைத்தலைவனின் சிறப்பை வீடணன் உரைத்தல்)

முக்கணன் வரத்தொடும் உயர்ந்தான்

186 'இனைய தன்மையர் வலிஇவை;
இராவணன் என்னும்
அனைய வன்திறம் யான்அறி
அளவுஎலாம் அறைவென்;
தனையன், நான்முகன் தகைமகன்
சிறுவற்கு; தவத்தால்,
முனைவர் கோன்வரம் முக்கணன்
வரத்தொடும் உயர்ந்தான்.' 18

பொழிப்பு : இத்தகைய நீர்மையை உடையார் ஆற்றல் இவ்வாறுக; இராவணன் என்ற அவன் வலியை யான் அறிந்த அளவில் சொல்லு கின்றேன்; அவன் பிரமனின் தகுதி சான்ற மகனான புலத்தியனின் சிறுவனாகிய விசுரவ முனிவனுக்கு மைந்தன்; அவன் செய்த தவத்தால், பிரம தேவனது வரத்தோடு கூட சிவன் வரமும் பெற்றுச் சிறந்தான்.

விளக்கம் : நான் முகன், தகை மகன் சிறுவற்கு என மாற்றுக. நான்முகன் : பிரமன். தகைமகன் : புலத்தியன். சிறுவன் : விசுரவ முனிவன். தனயன்: இராவணன். 'பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி' என இராவணன் தங்கையாகிய சூர்ப்பணகை இராமனிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளுவது இங்குச் சிந்திக்கத்தக்கது.

(யுத்த. இலங்கை கேள்விப்படலம். இராவணன் திறத்தை விடணன் கூறத் தொடங்குதல்)

புள்ளி மான் உரி ஆடையன்

187 'எள்இல் ஐம்பெரும் பூதமும்
யாவையும் உடைய
புள்ளி மான்உரி ஆடையன்,
உமையொடும் பொருந்தும்
வெள்ளி அம்பெருங் கிரியினை,
வேரொடும் வாங்கி,
அள்ளி, விண்தொட எடுத்தனன்,
உலகுஎலாம் அனுங்க.' 19

பொழிப்பு : எள்ளுதல் இல்லாத ஐம்பெரும் பூதங்களையும், ஏனைப் பொருள்களையும் தன்னுடையனவாக உடையவனும், புள்ளிமானின் தோலை உடையாகத் தரித்தவனும் ஆகிய சிவபெருமான் உமையவளோடு அமர்ந்திருக்கின்ற, அழகிய, பெரிய வெள்ளி மலையை, வேருடன் அள்ளிப் பிடுங்கி, வானத்தைத் தொடுமாறு உலகெலாம் வருந்த, தூக்கினான் (இராவணன்.)

விளக்கம் : எள்ளில்: இகழ்ச்சி இல்லாத. உரி: தோல். கிரி: மலை. அனுங்க: வருந்த.

(யுத்த. இலங்கை கேள்விப்படலம். வெள்ளிமலையை அள்ளி எடுத்த இராவணன் ஆற்றலை வீடணன் விளம்பல்)

சங்கரற்கு அழி முப்புரத்தவர்

188 'எம்கு லத்தவர், எண்பதி-
ஞயிரர், இறைவர்,
கிங்க ரப்பெயர்க் கிரிஅன்ன
தோற்றத்தர், கிளர்ந்தார்,
வெங்க ரத்தினும், காலினும்,
வாலினும் வீக்க,
சங்க ரற்குஅழி முப்புரத்
தவரெனச் சமைந்தார்.' 20

பொழிப்பு: எங்கள் குலத்திலே பிறந்தவரும், எண்பதினுயிரம் எண்ணிக்கை கொண்ட தலைவர்களும், கிங்கரர் என்ற பெயரைக் கொண்ட மலை அனைய தோற்றங் கொண்டவர்களுமாகிய, கிளர்ந்து எழுந்த வீரர், (அனுமனுடைய) கொடிய கைகளினுலும் கால்களினுலும், வாலினுலும் தாக்கப்பெற்று, சிவபெருமானிடம் அழிந்து ஒழிந்த முப்புரத்து அசுரர்களைப் போல ஆனுர்கள்.

விளக்கம்: கிரி: மலை. சங்கரன்: சிவன். சிவன் முப்புரத்தாரை அழித்தது போல் அனுமன் கிங்கரரை அழித்தனன் என்க.

(யுத்த. இலங்கை கேள்விப்படலம். அனுமன் திறத்தை வீடணன் போற்றுதல்)

விடைவலோற்கும் முடியுமோ?

189 'பாரகம் சுமந்த பாம்பின்
பணுமணி பறிக்க வேண்டின்,
வார்கழல் காலி ஞலே
கல்லவல் லவனே முன்னு,
தார்கெழு மௌலி பத்தின்
தனிமணி வலிதின் தந்த
வீரதை, விடைவ லோற்கும்
முடியுமோ? வேறும் உண்டோ? 21

பொழிப்பு : உலகத்தைத் தாங்கும் பாம்பினுடைய பருத்த மணிகளைப் பிடுங்க விரும்பினுலும், நீண்ட வீரக்கழல் அணிந்த தன் காலினுலே அகழ்ந்து எடுக்கும் ஆற்றல் உள்ளவனுன இராவணனை நெருங்கி, மாலை அணிந்த பத்து மகுடத்தினும் உள்ள ஒப்பற்ற அரதனங்களை யெல்லாம் வன்மையிற் கவர்ந்து வந்த (சுக்கிரீவனின்) வீரச் செயல், விடைவல்லோனுகிய சிவனுலும் ஆகக் கூடியதா? இதைவிட வீரச் செயல் வேறு ஏதேனும் உண்டோ?

விளக்கம் : முன்னு : அடைந்து. தார் : மாலை. வீரதை : வீரத்தை.

(யுத்த. மகுடபங்கப் படலம். சுக்கிரீவனை வீடணன் பாராட்டுதல்)

கருமணி கண்டத்தான்

190 கருமணி கண்டத் தான்தன்
சென்னியில் கறைவெண் திங்கள்'
பருமணி வண்ணன் மார்பின்
செம்மணி பறித்திட் டாலும்,
தருமணி இமைக்கும் தோளாய்!
தசமுகன் முடியில் தைத்த
திருமணி பறித்துத் தந்த
வென்றியே சீரிது அன்றே. 22

பொழிப்பு : (வீடணன் சுக்கிரீவனைப் பார்த்து) 'பறித்துக்கொணர்ந்த மணிகள் விளங்குகின்ற தோளாற்றல் வாய்ந்தவனே! நீல மணி போன்ற கழுத்தை உடைய சிவபிரானின் தலையிலிருக்கும் களங்கம் உடைய வெள்ளிய திங்களைப் பிடுங்கினுலும், பெரிய மணிவண்ணனுகிய திருமாலின் மார்பில் பொருந்திய செவ்விய கௌத்துவ மணியைப் பறித்தாலும் (அவற்றை விட) பத்து முகம் பெற்றவனுன இராவணன் முடியில் அழுத்திய அழகிய மணிகளைப் பறித்துவந்த வெற்றியே சிறந்ததாகும்' (என்று கூறினுன்)

விளக்கம் : கருமணி : நீலமணி. பறித்திட்டாலும், திங்கள் செம்மணி இரண்டிலும் கூட்டுக.

(யுத்த. மகுடபங்கப் படலம். வீடணன் சுக்கிரீவனை விளித்துச் சிறப்பித்தல்)

வயிரவாள் சிவன்வயின் வாங்கிக்கொண்டான்

191 'தொடிமணி இமைக்கும் தோளாய்!
சொல்இதின் வேறும் உண்டோ?
வடிமணி வயிர வெவ்வாள்
சிவன்வயின் வாங்கிக் கொண்டான்,
முடிமணி பறித்திட் டாயோ?
இவன்இனி முடிக்கும் வென்றிக்கு
அடிமணி இட்டாய் அன்றே?
அரிக்குலத்து அரச!' என்றான். 23

பொழிப்பு: பூண்ட வளைகளில் மணிகள் விளங்குகின்ற தோளை உடையவனே! வானரக் குலத்துக்கு அரசனே! வடிகட்டி எடுக்கப்பெற்ற மணிகள் அழுத்திய பிடிகள் உடைய உறுதியான கொடிய வாளை, சிவ பெருமானிடம் பெற்றுக்கொண்ட இராவணனுடைய முடிகளில் அழுத்திய மணிகளைப் பறித்தாயா? (இல்லை). இந்த இராமன், இராவணனை முடித்து அடைய இருக்கும் வெற்றிக்கு அடிகோலும் மணிகளையே இட்டாயல்லவா? இதைவிட உனக்குப் புகழ் வேறு இல்லை.

விளக்கம்: இராவணன் முடிமணி பறித்தாயல்லை! அடிமணி இட்டாய்! சொல் இதின் வேறும் உண்டோ? என இயைக்க. தொடி: தோள் அணி. வடிமணி: ஆய்ந்த மணி. சிவன் வயின்: சிவனிடம். இவன் இராமன். அரி: குரங்கு.

(யுத்த. மகுடபங்கப் படலம். சுக்கிரீவனை வீடணன் பெரிதும் புகழ்தல்)

வேதத் தலைவரும் உணரும் சிவன்

192 'தவன்நுணங் கியரும் வேதத்
தலைவரும் உணரும் தன்மைச்
சிவன்உணர்ந்து, அலரின் மேலைத்
திசைமுகன் உணரும் தேவன்
அவன்உணர்ந்து எழுந்த காலத்து
அசுரர்கள் படுவர் எல்லாம்;
இவன்உணர்ந்து எழுந்த காலத்து
இமையவர் படுவர் எந்தாய்.' 24

பொழிப்பு : எந்தையே! நுணுக்கமான தவத்தில் வல்லவரும் மறைகள் அறிந்த தலைவர்களும், அறியத்தக்க நீர்மை வாய்ந்த சிவனால் உணரப் பெறுபவனும், பூமேல் வாழும் பிரமனால் உணரப் பெறுபவனும் ஆகிய அந்தத் தேவன் (பாற் கடல் பள்ளி நீங்கி) உணர்ந்து எழுந்த காலத்து, அசுரர்கள் எல்லாம் இறப்பர். இந்தக் கும்பகன்னன் துயில் விட்டு எழுந்த காலத்து, தேவர்கள் இறப்பார்கள்.

விளக்கம் : திருமால் துயில் உணர்தலில் அசுரர்கள் படுவர்; கும்பகன்னன் துயில் உணர்தலில் சுரர்கள் படுவர் என்க.

(யுத்த. கும்பகன்னன் வதைப்படலம். வீடணன், கும்பகன்னன் சிறப்பை இராமனுக்கு உரைத்தல்)

ஆலம் உண்டவன்

193 'சூலம் உண்டு,அது சூர்உளோர்
காலம் உண்டது; கைக்கொள்வான்;
ஆலம் உண்டவன் ஆழிவாய்
ஞாலம் உண்டவ! நல்கினான்.' 25

பொழிப்பு : ஞாலத்தை உண்ட திருமாலாகிய இராமபிரானே! சூலப் படை ஒன்று உண்டு; சூரர்களது வாழ்நாள்களைக் குடித்தது அது. அதனை இந்தக் கும்பகன்னன் கையில் கொண்டவனாவான். அப்படையை ஆழிவாய் ஆலம் உண்டவனான சிவன் இவனுக்கு நல்கினான்.

விளக்கம் : காலம் : வாழ்நாள். ஆலம் : நஞ்சு. ஆழிவாய் : கடலில் தோன்றிய. ஞாலம் : உலகம். நல்குதல் : கொடுத்தல்.

(யுத்த. கும்பகன்னன் வதைப் படலம். அவன் சூலத்தின் பெருமையை வீடணன் பேசுதல்.)

நரகில் வீழ்வது அறிஞரும் இயற்றுவாரோ?

194 'கண்ணுதல், தீமை செய்ய,
கமலத்து முளைத்த தாதை
அண்ணல்தன் தலையின் ஒன்றை
அறுக்கஅன்று அமைந்தான் அன்றே?

புண்ணுறு புலவு வேலோய்!
பழியொடும் பொருந்தி, பின்னை,
எண்ணுறு நரகின் வீழ்வது
அறிஞரும் இயற்று வாரோ? 26

பொழிப்பு: புண்பட்ட புலால் கமழும் வேலை உடையவனே! நெற்றிக் கண் பெற்ற சிவபெருமான், கெடுதல் செய்ததால், தாமரையில் தோன்றிய உலகத்துக்குத் தாதையாகிய பெருமையில் சிறந்த பிரமனின் தலையில் ஒன்றைக் கொய்ய அன்று முனைந்தான் அல்லவா? பழிபடும் செயலைச் செய்து அதன் காரணமாகப் பின்னர், எண்ணிக்கை கொண்ட நரகத்தில் வீழும் செயல்களை அறிஞர்கள் செய்வார்களா?

விளக்கம்: இது, கும்பகன்னனைப் பார்த்து வீடணன் கூறுவது. தீமை செய்த பிரமனைக்கூட ஒறுத்தான் சிவன், என்பதை எடுத்துக்காட்டி 'அண்ணனாகிய இராவணனுக்காக, பழிபடும் செயல்களுக்கு உடன்பட்டு, பின்னை நரகில் புகும் காரியத்தைச் செய்ய வேண்டாம்' என் வீடணன் கூறினன் என்க.

(யுத்த. கும்பகன்னன் வதைப் படலம். கும்பகன்னனுக்கு வீடணன் கூறும் அறவுரை)

கயிலைக்கிரி கண்ணுதலோடு எடுத்தவன்

195 'கடம்ஏய் கயிலைக்கிரி கண்ணுதலோடு
இடம்ஏல எடுத்தவ னே;இவனை,
திடமே,உல கில்பல தேவரொடும்
வடமேரு எடுக்க வளர்த்தனனால்.' 27

பொழிப்பு: காடுகள் பொருந்திய கயிலைமலையைச் சிவபிரானுடனே இடம் பெயர்த்து எடுத்தவனாகிய இராவணனே, பல தேவர்களோடும் வட மேருமலையை எடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, இவனைத் (அதிகாயனை) திடமாக உலகில் வளர்க்கலானான்.

விளக்கம்: கடம்: காடு. ஏய்: பொருந்திய. ஒரு தேவனைக் கொண்ட கயிலையை எடுத்த இராவணன் பல தேவர்களைக் கொண்ட மேருவை எடுக்க மகன் அதிகாயனை வளர்த்தான் என்க.

(யுத்த. அதிகாயன் வதைப் படலம். அதிகாயன் சிறப்பை வீடணன் இயம்பல்)

இமையா ஆலங்கொள் மிடற்றவன்

196 காலங்கள் கணக்குஇற, கண்இமையா
ஆலம்கொள் மிடற்றவன், ஆர்அழல்வாய்
வேல்அங்குஎறி யக்கொடு, 'விட்டதுநீ
சூலம்கொல்?' எனப்பகர் சொல்உடையான். 28

பொழிப்பு: அளவற்ற காலங்கள் கண்மூடுதல் இல்லாத, நஞ்சைக் கொண்ட கண்டத்தை உடைய சிவபெருமான், நிறைந்த நெருப்பைக் கக்கும் வேலை, இவன் மீது எறிய, அவ்வேலைக் கையில் பற்றிக்கொண்டு சிவனிடம் வந்து 'நீ விட்டது இந்தச் சூலம்தானோ?' என்று பேசும் சொல்லுடையான் (அதிகாயன்.)

விளக்கம்: கணக்கு இற: எல்லை அற்ற. ஆலம்: நஞ்சு.

(யுத்த. அதிகாயன் வதைப் படலம். அதிகாயன் சிவனையும் ஒருகை பார்த்தவன் என்று வீடணன் சொல்லல்)

கண்ணுதல்பால் பெற்றான்

197 'கற்றான்மறை நூலொடு கண்ணுதல்பால்;
முற்றாதன தேவர் முரண்படைதாம்,
மற்றுஆரும் வழங்க வலார்இலவும்,
பெற்றான்;நெடிது ஆண்மை பிறந்துடையான்.' 29

பொழிப்பு: (அதிகாயன்) சிவபிரானிடத்து மறைநூலொடு (வில் தொழில்) கற்றான்; தேவர்கள் பழகாதனவும், பிறஎவரும் தொடுக்க வல்லார் இலவாகவும் உள்ள வலிய படைகளை இவன் பெற்றான்; அதனால் பெரிய ஆண்மையை இவன் படைத்துடையனானான்.

விளக்கம்: முரண்படை: வலிய படை. 'தாம்' அசை. வழங்க, தொடுக்க.

(யுத்த. அதிகாயன் வதைப்படலம். அதிகாயன் படைச் சிறப்பை வீடணன் விளம்பல்)

ஈசன் வேண்டினன் பெற்றது

198 'ஆழிஅம் செல்வ! பண்டுஇவ்
அகலிடம் அளித்த அண்ணல்
வேள்வியில் படைத்தது; ஈசன்
வேண்டினன் பெற்று, வெற்றி
தாழ்வுஅறு சிந்தை யோற்குத்
தவத்தினுல் அளித்தது; ஆணை!
ஊழியின் நிமிர்ந்த காலத்து
உருமினது; ஊற்றம் ஈதால்.' 30

பொழிப்பு: சக்கரப் படையை உடைய அழகிய செல்வனே! (இந்த நாகபாசம்) முன்னே, இவ்வுலகத்தைப் படைத்த அண்ணலாகிய பிரம தேவன் தான் செய்த ஓர் வேள்வியில் தோற்றுவித்தது; சிவபிரான் பிரமனிடம் விரும்பிப் பெற்று, வெற்றியை உடைய தாழ்வு அற்ற மனம் கொண்ட இந்திர சித்தனுக்கு, அவன் செய்த தவத்துக்காகக் கொடுத்தது; இஃது உண்மை! ஊழியின் முடிவுக் காலத்தில் தோன்றும் இடியைப் போன்றது; இதன் வன்மை இத்தகைத்து.

விளக்கம்: ஆழி: சக்கரம். அகல் இடம்: பரந்த உலகம். ஈசன்: சிவன். சிந்தையோன்: இந்திரசித்தன். ஆணை: உண்மை. உருமு: இடி. ஊற்றம்: வலிமை.

(யுத்த. நாகபாசப் படலம். நாகபாசத்தின் வரலாற்றை இராமனுக்கு வீடணன் உரைத்தல்)

சூலியும் வெருக்கொளத் தோன்றினன்

199 சாலிவண் கதிர்நிகர்
புரவித் தானையான்;
மூலவெங் கொடுமையின்
தவத்தின் முற்றினன்;
சூலியும் வெருக்கொளத்
தேரில் தோன்றுவான்;
மாலி,என்று அடிமுறை
வணங்கிக் கூறினன். 31

பொழிப்பு: வளம் பொருந்திய சம்பாப் பயிரின் கதிரை ஒத்த, குதிரைப் படையை உடையவன்; கொடிய ஆதியான கொடுமை கொண்ட தவத்திலே நிரம்பியவன்; சூலத்தைக் கையில் கொண்ட சிவனும் அஞ்சுமாறு தேரில் தோன்றுபவன்; இவன் மாலி என்ற பேரினை உடையவன் என (இராமபிரானின்) திருவடியை முறைப்படி வணங்கி (வீடணன்) சொன்னான்.

விளக்கம்: சாலி: செந்நெல். வண்: வளப்பம். புரவி: குதிரை. சூலி: சிவன். வெருக்கொள: அஞ்ச;

(யுத்த. படைத்தலைவர் வதைப்படலம். வீடணன் மாலியைப் பற்றி விளம்பல்)

சூலத்து அந்தணன்

200 'ஆர்அழி யாத, சூலத்து
அந்தணன், அருளின் ஈந்த
தேர்அழி யாத போதும்,
சிலைகரத்து இருந்த போதும்,
போர்அழி யான்,இவ் வெய்யோன்
புகழ்அழி யாத பொன்-தோள்
வீர!இது ஆணை' என்றான்
வீடணன், விளைவது ஓர்வான்.' 32

பொழிப்பு: புகழ் நீங்காத அழகிய தோளாற்றல் நிறைந்த வீரனே! சூலப் படை கொண்ட அழகிய தண்ணளியையுடைய சிவபெருமான், கருணையால் ஈந்த, அழியாத ஆரம் கொண்ட தேர் சிதையாதபோதும், வில் கையில் இருக்கின்ற போதும் இக்கொடியோன் (இந்திரசித்தன்) போரில் அழியமாட்டான். "இஃது உறுதி", என்று விளைவதை உணர்பவனாகிய வீடணன் விளம்பினான்.

விளக்கம்: ஆர்: சக்கரத்தின் நடுவே இணைக்கும் குறுக்குச் சட்டம் ஆணை: உறுதி.

(யுத்த. இந்திரசித்து வதைப் படலம். இந்திரசித்தன் தேர் வலியையும், வில் வலியையும் வீடணன் விளம்பல்)

விடம் ஈசன் தன்னை விழுங்கினும் ஆற்று

201 'அவ்வடு அன்று இந்த
அண்டத்தும் புறத்தும் ஆன்ற
தெவ்அடு படைகள் அஞ்சாது
இவன்வயின் செல்லின், தேவ
வெவ்விடம் ஈசன் தன்னை
விழுங்கினும், பறவை வேந்தை
அவ்விட நாகம் எல்லாம்
அணுகினும் அணுகல் ஆற்று.' 33

பொழிப்பு: தேவனே! அந்த (திக்கு யானைகளின் தந்தம் பாய்ந்த திறல் தோன்றிய தழும்பைத் தவிர, இந்த உலகத்தும், இதற்கு அப்பாற் பட்ட இடத்தும் உள்ள சிறந்த பகைவரை அழிக்கும் படைக்கலங்கள் எல்லாம் இவனிடம் செல்லுமானால், கொடிய நஞ்சு சிவபிரானை விழுங்கி விட்டாலும், கருடனை அந்தவிடம் கொண்ட பாம்புகள் எல்லாம் (அச்சு றுத்த) நெருங்கினாலும் (சென்ற படைக்கலங்கள் இராவணன் மீது தழும்பை உண்டாக்குமாறு) நெருங்குவதற்கு, வல்லமை யுடையவை ஆகா.

விளக்கம்: தெவ்: பகைஞர். வயின்: இடத்து. தேவன்: இராமன். பறவை வேந்து: கருடன். சிவன் உண்ட நஞ்சு சிவனையே விழுங்கும் வல்லமை பெற்றாலும், கருடனைக் கண்டால் நடுங்கும் பாம்புகள், கருட னுக்கு ஊறு செய்யும் ஆற்றல் அடைந்தாலும், இராவணன் மார்பை வடுச்செய்ய எந்தப் படையாலும் ஆகாது என்க.

(யுத்த. இராவணன் வதைப் படலம். இராவணன் சிறப்பை வீடணன் விளம்பல்)

வடிமழுவாள் படையோன் ஈந்த வரங்கள்

202 மன்றல்மா மலரோனும், வடிமழுவாள்
படையோனும், வரங்கள் ஈந்த
ஒன்றுஅலா தனஉடைய முடியோடும்
பொடிஆகி உதிர்ந்து போன;
அன்றுதான் உணர்ந்திலையே, ஆனாலும்
அவர்நாட்டை அணுகா நின்ற
இன்றுதான் உணர்ந்தனையே, இராமனார்
யாவருக்கும் இறைவன் ஆதல்.?' 34

பொழிப்பு : மணம் கொண்ட சிறந்த தாமரை மலரில் வாழும் பிரமனும், கூரிய ஒளியுள்ள மழுப்படையையுடைய சிவனும், கொடுத்த வரங்கள் எல்லாம், பத்து முடியோடு பொடிப் பொடியாக உதிர்ந்து போயின ; நீ சீதையை எடுத்து வந்த (அன்று) இராமன் பெருமையை அறிந்தாய் இல்லை, ஆனாலும் அவர்க்குரிய விண்ணுட்டை அடைந்த இன்றுவது, அந்த இராமனுர் எல்லோருக்கும் தலைவர் ஆதலை அறிந்து கொண்டாயா ?

விளக்கம் : மன்றல் : மணம். வடி : கூர்மை. வாள் : ஒளி. வரங்கள் முடியோடும் பொடியாயின என்க. ஒருவனுக்கு ஒரு தலைதான் உலகியற்கை; இராவணன் பத்துத் தலையுடையான் ஆதலின் " ஒன்று அலாதன முடி " என்று சொல்லப்பெற்றது.

(யுத்த. இராவணன் வதைப் படலம். முடிகளோடு வரங்களும்
பொடியாயின என வீடணன் அரற்றல்)

பிறை சூடும் பிஞ்ஞகன் புரம்

203 'வீர நாடு உற்றுயோ? விரிஞ்சனும்
யாவருக்கும் மேலாம் முன்பன்
பேரன் நாடு உற்றுயோ? பிறைசூடும்
பிஞ்ஞகன்தன் புரம்பெற் ருயோ?
ஆர்,அணு! உன்உயிரை, அஞ்சாதே
கொண்டுஅகன்றுர், அதுஎலாம் நிற்க,
மாரனுர் வலிஆட்டம் தவிர்ந்தாரோ?
குளிர்ந்தானே, மதியம் என்பான்?' 35

பொழிப்பு : "வீரர்கள் சேரும் நாட்டை அடைந்தாயா ? விரிஞ்சன் என்ற எல்லோருக்கும் மேலாக முற்பட்ட பிரமனுகிய பிதாமகனது நாட்டைச் சேர்ந்தாயா? இளம்திங்கள் சூடிய பிஞ்ஞகனுகிய சிவபெருமான் நாட்டை அனுகினையா ? அண்ணு ! உன் உயிரைப் பயமின்றிக் கொண்டு சென்றவர் ஆர் ? சந்திரன் என்பான் குளிர்ந்துவிட்டானு ?

விளக்கம் : பிதாமகனை (அதாவது பாட்டனை) பேரன் என்று கூறுதலைப் பெரிய புராணத்தில், சுந்தர மூர்த்திகள் பாட்டனுரைக் குறிப்பிடுமிடத்து, ''ஐயா ! மற்றுஉங்கள் பேரனுர்தம் தேசுடை எழுத்தே ஆகில் தெளியப் பார்த்து அறிமின்!'' என்ற வரிகள் வலியுறுத்தா நிற்கும். இராவணனுக்குப் பிரமன் பிதாமகன் என்க. பிஞ்ஞகன் : தலை அலங்காரம் உடையவன். அண்ணு என்ற சொல் அணு என்று இடைகுறைந்து நின்றது.

(யுத்த. இராவணன் வதைப் படலம். வீடணன் புலம்பல்)

3 இராவணன் மொழி

3. இராவணன் மொழி

விடணனுக்கு அடுத்தபடியாகச் சிவனைப்பற்றிப் பேசுபவன் இராவணன். 31 இடங்களில் சிவனைப்பற்றி இராவணன் கூறுவான்.

"ஓதவிடம் உண்டவன்"
"கங்கை சடை வைத்தவன்"
"ஈசன்"
"விழிதரும் நெற்றியான்"
"நாரி பாகத்தன்"
"அரங்கில் ஆடுவார்"
"நீல கண்டன்"
"பித்தனாகிய ஈசன்"
"கங்கையும் பிறையும் சூடும் கண்ணுதல்"
"முப்புரம் முருங்கச் சுட்ட மூரிவெஞ் சிலையான்"

என்பன, சிவனைப்பற்றி இராவணன் கூறும் சிறப்புச் சொற்றொடர்கள்.

சிவனை இராவணன் பெரிதும் மதித்தான் என்பதை அவன் கூறும் பல இடங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இராவணன் சிவபூசை செய்தான் என்று கவிச்சக்கரவர்த்தி கூறியதைக் கவிக்கூற்றில் எடுத்துக் காட்டினேன்.

"அரங்கில் ஆடுவார்க்கு அன்புபூண்டு
உடைவரம் அறியேன்;
இரங்கி யான்நிற்ப, என்வலி
அவன்வயின் எய்த,
வரங்கொள் வாலிபால் தோற்றனென்;
மற்றும் வேறுள்ள
குரங்குஎ லாம்எனை வெல்லும்என்று
எங்ஙனம் கோடி?"

என, வீடணன் உரையை மறுத்து இராவணன், 'அரங்கில் ஆடுவார்' என்று சிவபெருமான் கூத்தாடும் சிறப்பை வாய்குளிரப் பாராட்டுவான். 'சிவபெருமானிடம் வரம் பெற்றிருந்த காரணத்தால் அல்லவா வாலிபால் யான் தோற்றேன்' என்று அவன் இரங்கிக் கூறுவது சிந்திக்கத்தக்கது.

"அரன் கொலாம்? அரிகொலாம்? மற்று அயன் கொலாம்?" "கங்கையும் பிறையும் சூடும் கண்ணுதல், கரத்து நேமி சங்கமும் தரித்தமால்," "மூள அமை திங்கள் சூடும் முக்கணன் முதல்வராக" என்பன போன்ற சொற்றொடர்கள் சிவனின் முதன்மையை எடுத்துக் காட்டுவன ஆகும்.

"முப்புரம் முருங்கச் சுட்ட மூரிவெஞ் சிலையும், வீரன் அற்புத வில்லுக்கு ஆற்ருது" என, இராமன் வில்லை இராவணன் பாராட்டும் போதும், முப்புரம் அழித்த சிவன் வில்லின் ஆற்றலையே எடுத்துக்காட்டுகின்ருன்:

மைந்தன் இந்திரசித்தன் இறந்தபோது,

"கரந்தை சூடியும், பாற்கடல் கள்வனும்
நிரந்த ரம்பகை நீங்கின ரோஎனும்"

என இந்திரசித்தன் ஆற்றலை எண்ணி வியந்து கூறுவான் இராவணன். இங்கும் சிவனை முதலில் வைத்தான். (கரந்தைசூடி: சிவன்) சிவனும், திருமாலுமே இந்திரசித்தனுக்குப் பகைவர்கள் என்று இந்திரசித்தின் பெருமையைப் பேசுவான் இராவணன். மேலும் சொல்லுவான்.

"நீறு பூசியும், நேமியும் நீங்கினர்,
மாறு குன்ருெடு வேலை மறைந்துளார்,
ஊறு நீங்கின ராய்உவ ணத்திருெடு
ஏறும் ஏறி உலாவுவர் என்னுமால்."

நீறுபூசி: சிவன். நேமி: திருமால். இங்கும் சிவனை முதலில் வைத்தான். 'சிவனும், திருமாலும் உனக்கு அஞ்சித் தத்தம் இடங்களை விட்டு, மலையினும், கடலினும் ஒளிந்துகொண்டார்கள். நீ போய்விட்டாய்; இனி அவ்விருவரும் துன்பம் அற்றவராய், காளையிலும், கருடனிலும் ஏறிக் கொண்டு வந்துவிடுவார்களே!' என இரங்குவான் இராவணன்.

இறுதியில் இராமபிரான் பெருவலியைக் கண்டு உணர்ந்த இராவணன் பேசும் பாட்டுப் பின்னே வருகின்றது.

"சிவனோ அல்லன்; நான்முகன்
அல்லன்; திருமாலாம்
அவனோ அல்லன்; மெய்வரம்
எல்லாம் அடுகின்ருன்;
தவனோ என்னின், செய்து
முடிக்கும் தரன்அல்லன்;
இவனோ தான்அவ் வேத
முதல்கா ரணன்" என்ருன்.

இப்பாடலிலும் சிவனை முதலில் வைத்தான். 'இராமன் சிவனுமல்லன்; பிரமனுமல்லன்; திருமாலும் அல்லன்; இவனே தான் வேதமுதற்காரணன்' என்று கூறுங்கால் மூவரினும் மேம்பட்டவன் இராமன் என்ற தன் கொள்கையைக் கம்பன், பகைஞர்களில் தலைசிறந்தவனுகிய இராவணன் வாயிலாகவும் நிலைநாட்டுகின்ருன்.

ஓதவிடம் உண்டவன்

204 மூளும்உளது ஆயபழி
என்வயின் முடித்தோர்
ஆளும்உளவாம்; அவரது
ஆர்உயிரும் உண்டாம்;
வாளும்உளது; ஓதவிடம்
உண்டவன் வழங்கும்
நாளும்உள; தோளும்உள;
நானும்உளென் அன்றோ? 1

பொழிப்பு : மேலும் மேலும் கிளைத்து எழுகின்ற பழியை என்னிடத்து வைத்து முடித்துக் கொண்டவர்களான அந்த ஆட்கள் இன்னும் இருக்கின்றனராம்; அவர்களுடைய அருமையான உயிர்கள் இன்னும் உடம்பில் இருக்கின்றனவாம்; கடலில் எழுந்த கடுநஞ்சை உண்ட சிவன் தந்த வாளும், நாளும் என்னிடம் இருக்கின்றன; தோள்கள் இருபதும் இருக்கின்றன; நானும் இருக்கின்றேன் அல்லவா?

விளக்கம் : என்வயின் : என் மீது. 'ஓதவிடம் உண்டவன் வழங்கும்' என்ற சொற்றொடர் முன்னே உள்ள வாளுக்கும் பின்னே உள்ள நாளுக்கும் இடைநிலை விளக்காக அமைந்துள்ளது. இராவணனுக்கு நாளும் வாளும் சிவன் வழங்கினன் என்க.

"தோளாண்மை கருதிவரை எடுத்த தூர்த்தன்
தோள்வலியும் தாள்வலியும் தொலைவித்து, ஆங்கே
நாளோடு வாள்கொடுத்த நம்பன் தன்னை
நாரையூர் நன்னகரில் கண்டேன் நானே"

என்பர் அப்பர் அடிகள்.

(ஆரணிய மாரீசன் வதைப் படலம். இராவணன் தன்னைப் பெரிதும் நொந்துகொள்ளுதல்)

கடுவை மிடற்றில் வைத்த தக்கோன்

205 தாதுஉண் சடிலத் தலைவைத்தது
தண்த ரங்கம்
மோதும் கடலிற்கு இடைமுந்து
பிறந்த போதே,
ஓதும் கடுவைத் தான்மிடற்றின்
ஒளித்த தக்கோன்
ஈதும் கடுஆம், எனஎண்ணிய
எண்ணம் அன்றே.? 2

பொழிப்பு: குளிர்ச்சியான அலை வீசும் கடலுக்கு நடுவே முன்னே தோன்றிய போதே, கொடுமையானது என்று சொல்லப்படும் நஞ்சைத் தன் கழுத்தில் ஒளித்து வைத்துக்கொண்ட சிவபிரான், பிறந்த போதே (இந்தத் திங்களையும்) மகரந்தப் பொடிகளைக் கொண்ட தன் சடையில் வைத்துக்கொண்டது 'இந்தப் பிறையும் நஞ்சாம்' என்று கருதிய எண்ணத்தினுல் அல்லவா?

விளக்கம்: 'ஈது' என்பது திங்களைச் சுட்டுகின்றது. 'முந்து. பிறந்த போதே' என்பதை 'ஓதும் கடு' 'ஈதும் கடு' என்ற இரண்ட னேடும் கூட்டுக. பாற்கடல் கடைந்த போது அமுதம் கிடைப்பதற்கு முன் நஞ்சும், திங்களும் தோன்றின. நஞ்சை ஏற்றுக்கொண்ட சிவபிரான் திங்களையும் தாங்கிக்கொண்டது 'திங்களும் நஞ்சு போல் கொல்லும் இயல்பினது' என்று கருதிப் போலும் என விரக தாபத்தால் இராவணன் நினைக்கின்ருன்.

(ஆரணிய. மாரீசன் வதைப் படலம். இராவணன் திங்களைப் பழித்தல்)

விடம் உண்ட ஒருத்தன்

206 விள்ளாது செறிந்துஇடை மேல்உற
வீங்கி எங்கும்
நள்ளாஇருள் வந்து,அகல் ஞாலம்
விழுங்க லோடும்

எள்ளாஉலகு யாவையும் யாவரும்
வீயும் என்பது
உள்ளாது, உமிழ்ந்தான், விடம்உண்ட
ஒருத்தன், என்ருன். 3

பொழிப்பு : 'பிளவுபடாமல் நெருங்கி, நிலத்திற்கும், விண்ணிற்கும் ஒருசேர வளர்ந்து, யாவராலும் நச்சப்படாத இருள் வந்து பரந்த உலகத்தை விழுங்கிய அளவில், 'முன்னே நஞ்சை உண்ட ஒப்பற்ற சிவ பெருமான், இகழத்தகாத உலகம் முழுதும், அவ்வுலகத்துள்ள அனைவரும் அழிதலை எண்ணுமல், (அந் நஞ்சை) உமிழ்ந்துவிட்டான்' என்று இயம்பினுன் (இராவணன்.)

விளக்கம் : விள்ளுதல் : பிளத்தல். செறிதல் : நெருங்குதல். இடை நில உலகம். மேல் : வானுலகம். உள்ளுதல் : நினைத்தல். 'சிவன் உண்டு உமிழ்ந்த நஞ்சே இருளாக ஆயது' என்று இராவணன் இயம்புகின்ருன்.

(ஆரணிய. மாரீசன் வதைப் படலம். இராவணன் இருளைப் பழித்தல்)

ஒருவன் வலியால் விழுங்கும் ஆலம்

207 வேலைத்தலை வந்துஒரு வன்வலி-
-யால்வி ழுங்கும்
ஆலத்தின் அடங்குவது அன்றிது;
அறிந்து உணர்ந்தேன்;
ஞாலத்தொடு விண்முதல் யாவையும்
நாவில் நக்கும்
காலக்கனல் கார்விடம் உண்டு
கறுத்தது அன்றே. 4

பொழிப்பு : கடலிடைத் தோன்றிய, ஒப்பற்ற சிவபிரான் ஆற்றலால் உட்கொண்ட நஞ்சைப் போல அடங்கும் தன்மை உடையது அன்று, இவ்விருள் ; (இது எது என்பதை) நன்கு அறிந்துகொண்டேன் ; மண்ணுல கோடு வானுலகும் சேர எல்லாவற்றையும் நாவினுல் நக்கி, எரிக்கும் ஊழித்தீயானது, கரிய நஞ்சைப் பருகி, கறுத்ததே இது.

விளக்கம் : வேலைத்தலை : கடலினிடத்து. 'அன்று, ஏ', அசை.

(ஆரணிய. மாரீசன் வதைப் படலம் இராவணன் இருளின் கொடுமையை உணர்தல்)

கங்கை சடை வைத்தவன்

208 ‘ கங்கைசடை வைத்தவ -
- ஞெடும்கயிலை வெற்புஒர்
அங்கையின் எடுத்தன து
ஆடுஎழில் மணித்தோள்,
இங்குஒர்மனி - - தற்குஎளிய
என்றனெ ’ எனத்தன்
வெங்கண்எரி - - யப்புருவம்
மீதுற விடைத்தான். 5

பொழிப்பு : ‘ கங்கையைச் சடையிலே தாங்கிக்கொண்ட சிவபெருமானேடு கயிலை மலையை ஒரே உள்ளங்கையினுல் தூக்கிய என்னுடைய வெற்றி வாய்ந்த அழகிய மணி அணி பூண்ட தோள்கள், இங்கு ஒரு மானுடனுக்கு எளிமையாயின எனக் கூறினெ ’ என்று சொல்லி, தன்னுடைய கொடுமையான கண்கள் நெருப்பைக் கக்க, புருவங்கள் நெற்றி மீது ஏற, சினம்கொண்டான் (இராவணன்.)

விளக்கம் : அங்கை ; உள்ளங்கை. விடைத்தல் : கோபம் கொள்ளுதல்.

(ஆரணிய. மாரிசன் வதைப் படலம். இராவணனின் பெருமிதப் பேச்சு)

ஈசன் மலையை ஊசிவேரொடும் பறித்தோன்

209 ஈசன்ஆண்டு இருந்தபேர்
இலங்கு மால்வரை
ஊசிவே ரொடும்பறித்து
எடுக்கும் ஊற்றத்தான் ;
ஆசைகள் சுமந்தபேர்
ஆற்றல் யானைகள்
பூசல்செய் மருப்பினைப்
பொடிசெய் தோளினுன். 6

பொழிப்பு : சிவபிரான் ஆட்சி செலுத்தி வீற்றிருந்த, பெரிய, விளக்கம் பெற்ற சிறந்த கயிலை மலையை ஆணிவேரோடும் அகழ்ந்து எடுக்கும் ஆற்றல் உடையவன்; திக்குகளைத் தாங்கிய பேராற்றல் வாய்ந்த யானைகளின் போர்செய்ய வல்ல கொம்புகளைப் பொடியாக்கும் தோள்வலி கொண்டவன் (இராவணன்.)

விளக்கம் : பேர்: பெரிய. இலங்குதல்: விளங்குதல். மால்: சிறந்த. வரை: கயிலைமலை. ஊற்றம்: ஆற்றல். ஆசை: திக்கு. பூசல்: போர். (ஆரணிய. சடாயு உயிர் நீத்த படலம். மாறு வேடம் பூண்டு வந்த இராவணன் சீதையினிடம் இராவணன் பெருமையைப் பேசுதல்)

நாரிபாகன் வாளுடைக் கையான்

210 தாளுடை மலருளான்
தந்த அந்தம்இல்
நாளுடை வாழ்க்கையன் ;
நாரி பாகத்தன்
வாளுடைத் தடக்கையன் ;
வாரி வைத்தவெங்
கோளுடைச் சிறையினன் ;
குணங்கள் மேன்மையான். 7

பொழிப்பு : தண்டோடு கூடிய தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன் தந்த முடிவில்லாத வாழ்நாள் பெற்றவன் ; அம்பிகையைப் பக்கத்திலே உடைய சிவபிரான் கொடுத்த வாள் படையைக் கொண்ட பெரிய கையை உடையவன் ; ஞாயிறு, திங்கள் உள்ளிட்ட கொடிய கோள்களை எல்லாம் வாரி வைக்கப்பட்ட சிறைச்சாலையை உடையவன்; குணங்களால் மேம்பட்டவன் (இராவணன்.)

விளக்கம் : தாள்: தாமரை நாளம். அந்தம்: முடிவு. நாரி: உமையவள். இராவணன் சிறையில் தங்கும் கைதிகள் கோள்கள் என்பது அவன் ஆற்றலைக் காட்டுகின்றது. அத்துணைப் பேராற்றல் இருந்தும், தன்னைக் குணங்கள் மேன்மையான் என்று கூறிக் கொள்கின்றான். இங்கே, இராவணனுக்கு நாள் கொடுத்தவன் பிரமன் என்றும், 'மூளும் உளது' என்ற பாடலில் நாள் கொடுத்தவன் சிவன் என்றும் நவில்வது ஆராயத் தக்கது.

(ஆரணிய. சடாயு உயிர் நீத்த படலம். மாறுவேட இராவணன், மேலும் தன் மேன்மையை விளம்புவது)

விழிதரும் நெற்றியான் வெள்ளி வெற்பு

211 மொழிதரும் அளவில், " நங்கை!
கேள்இது, முரண்இல் யாக்கை
இழிதரு மனித ரோடே
யான்செரு ஏற்பல் என்றால்
விழிதரு நெற்றி யான்தன்
வெள்ளிவெற்பு எடுத்த தோட்குப்
பழிதரும்; அதனின் சாலப்
பயன்தரும் வஞ்சம்" என்றான். 8

பொழிப்பு: (சீதை அவ்வாறு) கூறிய அளவில் (இராவணன்) 'பெண்ணே! இதைக் கேள்; ஆற்றல் அற்ற உடம்பினை உடைய குறைவுபட்ட மனிதரோடு யான் போர்மேற் கொள்வதென்றால், அச்செயல் நெற்றியில் கண்படைத்த கடவுள் உறையும் வெள்ளிமலையை எடுத்த தோள்கட்குப் பழியைத்தரும்; அதனைவிட, வஞ்சகச் செயலே மிக்கபயனை நல்கும்' என்று கூறினான்.

விளக்கம்: முரண்: வலிமை. செரு: போர்.

(ஆரணிய. சடாயு உயிர்நீத்த படலம். சீதைக்கு இராவணன் கூறும் மறுமொழி)

நெடுங் கணிச்சி

212 "நேமியோ? குலிசியோ?
நெடுங்க ணிச்சியோ?
தாமரைக் கிழவனோ?
தறுகண் பல்தலைப்
பூமிதாங்கு ஒருவனோ?
பொருது முற்றுவான்
நாமமும் உருவமும்
கரந்து நண்ணினாய்! 9

பொழிப்பு : சக்கரம் தாங்கிய திருமாலோ? வச்சிரப்படை கொண்ட இந்திரனோ? நீண்ட சூலம் ஏற்ற சிவனோ? தாமரைக்குரிய பிரமனோ? கொடிய கண்களையும், பல தலைகளையும் உடைய, நிலத்தைத் தாங்குகின்ற ஒப்பற்றவனாகிய ஆதிசேடனோ? போர்செய்து அழியும் பொருட்டு, பெயரையும், வடிவத்தையும் மறைத்துக் கொண்டு வந்து சேர்ந்த (நீயார்?)

விளக்கம் : நேமி: சக்கரம்; இங்கு சக்கரத்தை உடைய திருமால். குலிசி: வச்சிரத்தை உடைய இந்திரன். கணிச்சி : மழுப்படை; இங்கு அதனைக் கைக்கொண்ட சிவனுக்கு ஆகுபெயர். பொருதல்: போர் செய்தல். கரத்தல்: மறைத்தல்.

(சுந்தர. பிணிவீட்டுபடலம். இராவணன் அனுமனை வினாதல்)

மூவரில் பெற்றம் உடையவன்

213 "தேவ ரின்பெற்ற வரத்தினது
என்பெருஞ் செருக்கேல்,
மூவ ரில்பெற்றம் உடையவன்
தன்னையும், முழுதும்
காவ லின் பெற்ற திகிரியோன்
தன்னொடும், கடந்தது
ஏவ ரின்பெற்ற வரத்தினால்
இயம்புதி; இளையோய்!" 10

பொழிப்பு : இளையவனாகிய வீடணனே! அமரர்களிடம் பெற்ற வரத்தினாலாயது என்னுடைய பெரிய செருக்கு என்பாயானால், மும்மூர்த்திகளுக்குள்ளே காளையை வாகனமாக உடைய சிவனையும், உலகம் முழுதும் காக்கும் தொழிலை மேற்கொண்டவனாகிய சக்கரம் தாங்கிய திருமாலையும் நான் வென்றது எவரிடம் பெற்ற வரத்தினால் கூறுவாயாக.' (என்று இராவணன் இயம்பினான்.)

விளக்கம் : செருக்கு : ஆணவம். மூவரில் : மும்மூர்த்திகளுக்குள்ளே. பெற்றம் . எருது. கடந்தது : வென்றது. ஏவரின் : எவரிடத்து.

(யுத்த. இராவணன் மந்திரப் படலம். இராவணன் வீடணனை மறுத்துப் பேசுதல்)

அரங்கில் ஆடுவார்

214 "அரங்கில் ஆடுவார்க்கு அன்புபூண்டு
உடைவரம் அறியேன்;
இரங்கி யான்நிற்ப, என்வலி
அவன்வயின் எய்த,
வரங்கொள் வாலிபால் தோற்றனென்!
மற்றும்வே றுள்ள
குரங்குள லாம்எனை வெல்லும்என்று
எங்ஙனம் கோடி"? 11

பொழிப்பு: அம்பலத்தில் ஆடுகின்ற சிவபெருமானிடத்து அன்பு செலுத்தி, அவரிடம் அந்தவாலி என்பவன் பெற்றுடைய வரத்தை யான் அறிந்தேன் அல்லேன்; (எனவே) அவன் முன் நான் வருந்தி நிற்ப, என் ஆற்றல் அவன் பால் எய்த, அவ்வாறு வரம் கொண்ட வாலிபால் நான் தோற்றேன்; (அது கொண்டு) வேறுள்ள ஏனைய குரங்குக ளெல்லாம் என்னை வெல்லும் என, நீ எங்ஙனம் கொள்கின்றாய்?

விளக்கம்: அரங்கு: சபை. வலி: ஆற்றல். வயின்: இடத்து. வாலிபால்: வாலியினிடம். கோடி: கொள்கின்றாய். 'கூலவான் குரங்கினால் குறுகும் கோள்அது-வாலிபால் கண்டனம்' என்ற வீடணன் பேச்சை இங்கே இராவணன் மறுக்கின்றான். 'நேர் நின்று பொருவோர் வலியில் பாதி வாலியை எய்தும்' என்பது அவன் பெற்ற வரம். "பேதையர் எதிர்குவர் எனினும் பெற்றுள ஊதிய வரங்களும் உரமும் உள்ளதில் பாதியும் என்னதால் பகைப்பது எங்ஙனம்"? என வாலி வழுத்துவது ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

(யுத்த. இராவணன் மந்திரப்படலம். அம்பலக் கூத்தன் வரமே வென்றது என இராவணன் இயம்பல்)

நீலகண்டன்

215 "நீல கண்டனும் நேமியும்
நேர்நின்று பொரினும்
ஏலும் அன்னவ ருடைவலி
அவன்வயின் எய்தும்

சால அன்னது நினைந்துஅவன்
எதிர்செலல் தவிர்ந்து,
வாலி தன்னை,அம் மனித்தனும்
மறைந்துநின்று எய்தான்" 12

பொழிப்பு: வாலியின் நேரே நின்று, நீலகண்டனாகிய சிவனும், சக்கரம் தாங்கிய திருமாலும் போர் புரியினும் எதிர்க்கின்ற அவர்களுடைய வலிமை வாலியை அடைந்துவிடும்; அதனை நன்கு அறிந்தே எதிர் நில்லாமல் நீங்கி, வாலியை அம்மனிதனும் (இராமனும்) மறைவாக நின்று அம்பைச் செலுத்தினான்.

விளக்கம்: நேர்நின்று: நேருக்கு நேர் நின்று. பொருதல்: போர் செய்தல். அவன்வயின்: அவனிடத்து. சால: நன்கு. தவிர்ந்து: நீங்கி. வாலியை எதிர்த்து நேர் நின்று பொர நீலகண்டனாலும், நேமியாலும் கூட ஆகாது என இராவணன் இயம்புதல்.

(யுத்த. இராவணன் மந்திரப் படலம்)

புவனம் மூன்றும் யான் ஆண்டுளது

216 "சிவனும், நான்முகத்து ஒருவனும்,
திருநெடு மாலாம்
அவனும் மற்றுஉள அமரரும்,
உடன்உறைந்து அடங்க,
புவனம் மூன்றும்யான் ஆண்டுளது
ஆண்டஅப் பொருஇல்
உவன்இ லாமையி னோ?வலி
ஒதுங்கியோ? உரையாய்!" 13

பொழிப்பு: சிவபெருமானும், நான்கு முகங்களை உடைய ஒப்பற்ற பிரமனும், நீண்ட திருமாலாகிய அந்தக் கடவுளும், வேறுள்ள தேவர்களும் ஒருங்கு அடங்கி ஒடுங்கி வாழுமாறு, மூன்று உலகங்களையும் யான் ஆண்டுள்ள செயல் (முன்னே) உலகத்தை ஆண்ட அந்த ஒப்பில்லாத உவன் இல்லாமையினாலா? அன்றி அந்த உவன் வலியற்றவன் ஆனமையினாலா? சொல்வாயாக!

விளக்கம்: புவனம்: உலகம். பொரு: ஒப்பு. உவன்: சுட்டு. 'உவன்' என்ற சொல் மேலே சொன்ன சிவன், பிரமன், திருமால்என்ற மூவரையும் தனித்தனி குறிக்கும். அந்த மூவரும் உயிருடன் இருக்கத்தான் செய்கிறார்கள்; எனினும் வலி ஒடுங்கிவிட்டனர் என்க.

(யுத்த. இராவணன் மந்திரப் படலம்: இராவணன் கடவுளர்களையும் ஒடுக்கி ஆளும் தன் திறத்தை உரைத்தல்)

பித்தன் ஆகிய ஈசன்

217 "பித்தன் ஆகிய ஈசனும்,
அரியும்என் பெயர்கேட்டு
எய்த்த சிந்தையர், ஏகுழி
ஏகுழி எல்லாம்
கைத்த ஏற்றினும், கடவிய
புள்ளினும், முதுகில்
தைத்த வாளிகள் இன்றுஉள,
குன்றின்வீழ் தடித்துஇன்." 14

பொழிப்பு: பித்தன் என்று பேசப்படுவனுகிய சிவனும், திருமாலும், என்பெயரைக் கேட்டு, ஓய்ந்த உள்ளம் உடையராய், செல்லுமிடந் தோறும் செலுத்திய இடபத்திலும், ஊர்ந்த கருடனிலும் முதுகில் பட்ட அம்புகள், மலையில் வீழ்ந்த இடியைப் போல இன்றைக்கும் இருக்கின்றன.

விளக்கம்: 'சிவனும், மாலும் என் பெயர் கேட்டு மனம் அழிந்து, பலமுறை ஏற்றினும், புள்ளினும் ஏறி ஓடியபோதெல்லாம் அவ்வூர்திகளின் முதுகிலே தைத்த அம்புகள் இன்றும் இருக்கின்றன' என்க. 'சிவனே' 'பித்தன்' என்று அடியார்கள் பேசுவர். 'பித்தா பிறைசூடி' என்றார் சுந்தர மூர்த்திகள். பிட்டு நேர்பட மண் சுமந்த பெருந்துறைப் பெரும்பித்தனே' என்றார் மணி வாசகரும், 'கைத்த' 'உகைத்த' என்பதன் முதற்குறை. உகைத்த: செலுத்திய; கடவிய: ஊர்ந்த. புள்: கருடன். தடித்து: இடி. இன் ஒப்புப் பொருளில் வந்தது. மலையில் இடி வீழ்ந்த இடம் என்றும் பிளவு பட்டுக் காணப்படுவது போல் ஊர்திகளின் முதுகில் தழும்புகள் உளஎன்க.

(யுத்த. இராவணன் மந்திரப்படலம். இராவணன், ஈசனும் அரியும் தனக்கு அஞ்சி ஓடியமை கூறல்)

சூலம் ஏய் தடக்கை அண்ணல்

218 'சூலம்ஏய் தடக்கை அண்ணல்
தானும்,ஓர் குரங்காய்த் தோன்றி
ஏலுமேல், இடைவது அல்லால்,
என்செய வல்லான் என்னே?

வேலைநீர் கடைந்த மேல்நாள்
உலகுஎலாம் வெருவ வந்த
ஆலமோ விழுங்க என்கை
அயில்முகப் பகழி? அம்மா!' 15

பொழிப்பு: 'சூலம் தாங்கிய பெரிய கைகளை உடைய பெருமையிற் சிறந்த சிவன் தானும் ஒரு குரங்காக வந்து, முடியுமாகுல் பின் நோக்கி ஒடுவதல்லால், என்னை என்ன செய்யமுடியும் அவனுல்? என் கையில் இருக்கின்ற கூர்மையான முகத்தை உடைய அம்பு, கடல் நீரைக் கடைந்த அந்த நாளில் உலகமெல்லாம் அஞ்சுமாறு தோன்றிய விடமா விழுங்கி விடுவதற்கு?'

விளக்கம்: ஏய்: பொருந்திய. அண்ணல்: சிவன். 'நஞ்சாக இருந்தால் சிவனுல் விழுங்க முடியும்; என் கை அம்பை அவனுல் விழுங்க முடியுமா? நஞ்சைவிடக் கொடியதல்லவா என் அம்பு?' என்று இராவணன் இயம்பினன் என்க.

(யுத்த. இலங்கை காண் படலம். மாலியவானிடம் இராவணன் தன் ஆற்றலை உரைத்தல்)

குரங்கெலாம் கூட்டிவந்தான்

219 "அரன்கொலாம்? அரிகொலாம்? மற்று
அயன்கொலாம்? என்பார் அன்றி,
குரங்குஎலாம் கூட்டி, வேலைக்,
குட்டத்தைச் சேது கட்டி,
'இரங்குவான் ஆகில், இன்னம்
அறிதி'-என்று உன்னை ஏவும்
நரன்கொலாம் உலக நாதன்?"
என்றுகொண்டு அரக்கன் நக்கான். 16

பொழிப்பு: 'சிவனு? திருமாலா? அன்றி பிரமனு? மேற்கூறிய இவர்கள் அன்றி, குரங்குகளை எல்லாம் சேர்த்துக்கொண்டு, கடல் என்ற குட்டைக்கு அணை கட்டி, (இப்போதாவது இராவணன்) இரக்கம் காட்டுவாகுகில் தெரிந்துகொண்டு வா என்று உன்னை (அங்கதனை) அனுப்பிய மனிதனு உலகத்துக்குத் தலைவன்?' என்று இயம்பி இராவணன் ஏளனமாகச் சிரித்தான்

விளக்கம்: வேலை: கடல். குட்டம்: சிறு நீர்நிலை. சேது: அணை. நரன்: மனிதன். அரக்கன்: இராவணன். 'அரன், அரி, அயன் என்பவர்கள் என்றால் சிறிது மதிக்கலாம்; இந்த நரனா உலகநாதன்?' என்று இராவணன் சிரித்தான் என்க.

(யுத்த. அங்கதன் தூதுப் படலம். இராவணன் அங்கதனிடம் இராமனை இழித்துக் கூறல்)

கங்கையும் பிறையும் சூடும் கண்ணுதல்

220 "கங்கையும் பிறையும் சூடும்
கண்ணுதல், கரத்து நேமி
சங்கமும் தரித்த மால்,மற்று
இந்நகர் தன்னைச் சாரார்;
அங்குஅவர் நிலைமை நிற்க,
மனிசனுக் காக அஞ்சாது,
இங்குவந்து இதனைச் சொன்ன
தூதன்நீ யாவன்?" என்றான். 17

பொழிப்பு: 'கங்கையையும், திங்களையும் அணிந்தவனாகிய சிவன், கையில் சக்கரம் சங்கு தாங்கிய திருமால் ஆகிய இவர்கள் கூட இந்த இலங்கை நகரத்தை அணுகமாட்டார்கள்: அந்த அரன், அரி நிலைமையே இவ்வாறாக, மனிசனுக்காக அஞ்சாமல் இங்கேவந்து, இந்தச் செய்தியை அறிவித்த தூதனாகிய நீ யார்? சொல்லுக' என்றான் இராவணன்.

விளக்கம்: மனிசன் என்பது ஏளனப் பேச்சு.

(யுத்த. அங்கதன் தூதுப்படலம். இராவணன் அங்கதனை 'நீ யார்?' எனக் கேட்டல்.)

முளைஅமை திங்கள் சூடும் முக்கணன்

221 முளைஅமை திங்கள் சூடும்
முக்கணன் முதல்வர் ஆக,
கிளைஅமை புவனம் மூன்றும்
வந்துஉடன் கிடைத்த வேனும்,

வளைஅமை வரிவில் வாளி
மெய்யுற வழங்கும் ஆயின்,
இளையவன் தனக்கும் ஆற்றுது.
என்பெரும் சேனை, நம்ப!' 18

பொழிப்பு: பெருமை மிக்கவனே! முளைத்தல் அமைந்த மதியை அணிந்த முக்கண்ணனை முதல்வனகக்கொண்ட, கிளைத்த மூன்று உலகத்தவரும் வந்து, ஒரு சேர, பக்கத்துணையாய் நின்றலும், என்னுடைய பெரிய தானையானது, வளைக்கும் தன்மை கொண்ட கட்டமைந்த தன் வில்லிலே அம்புகளைப் பொருத்தி, உடம்பில் பொருந்துமாறு செலுத்துவானால் இளையவன் ஒருவனுக்கு ஆற்றுது.

விளக்கம்: முளைஅமை திங்கள்: இளஞ்சந்திரன். வரிவில்: கட்டமைந்த வில். வாளி: அம்பு. மெய்: உடம்பு. உற: பொருந்த. இளையவன்: இலக்குவன்.

(யுத்த. கும்பகன்னன் வதைப் படலம். இலக்குவன் வில்லாற்றலை இராவணன் புகழ்தல்)

ஈசன் கை இலை மூன்று என்னும் அயில்

222 "இந்திரன் குலிச வேலும்,
ஈசன்கை இலைமூன்று என்னும்
மந்திர அயிலும் மாயோன்
வளைஎஃகின் வரவும் கண்டேன்;
அந்தரம் நீளிது; அம்மா!
தாபதன் அம்புக்கு ஆற்று
நொந்தனன் யானே என்றால்
ஆர்அவை நோக்க கிற்பார்?" 19

பொழிப்பு: இந்திரனுடைய வச்சிரப் படையும், சிவபெருமான் கையில் உள்ள மூன்று இலைவடிவான மந்திர ஆற்றல் வாய்ந்த வேலும், திருமாலின் வட்டவடிவமாகிய சக்கரப் படையும் என்மீது வரப்பார்த்தேன்; அவற்றிற்கும் (இராமன் அம்புக்கும்) வேறுபாடுமிகப் பெரிது; (வச்சிரம், சூலம், சக்கரம் ஆகியவற்றை எளிதாகக் கண்ட) யானே, இந்தத்தவக் கோலம் பூண்ட இராமன் அம்புக்கு ஆற்றமல் நொந்து போனேன் என்றால், என்னைத்தவிர வேறுயார் அவன் அம்புகளைக் கண்ணெடுத்தும் பார்க்க வல்லார்? (யாரும் இல்லை)

விளக்கம் : குலிசவேல்: வச்சிரம். இலை மூன்று என்னும் அயில்: மூவிலைச் சூலம், வளை எஃகு: சக்கரப்படை. அந்தரம்: வேறுபாடு. நீளிது : பெரிது. 'அம்மா' வியப்புத்தரும் இடைச்சொல். தாபதன் : தவம் பூண்ட இராமன்.

(யுத்த கும்பகன்னன் வதைப்படலம். இராமன் வில்லாற்றலை இராவணன் வியத்தல்)

ஏயவன் தோள்கள் எட்டு

223 "பேய்இரும் கணங்க ளோடு
சுடுகளத்து உறையும் பெற்றி
ஏயவன் தோள்கள் எட்டும்,
இந்திரன் இரண்டு தோளும்,
மாஇரு ஞாலம் முற்றும்
வயிற்றிடை வைத்த மாயன்
ஆயிரம் தோளும், அன்னான்
விரல்ஒன்றின் ஆற்றல் ஆற்று." 20

பொழிப்பு : 'பேய்களின் பெரிய கூட்டத்தோடு சுடுகாட்டிலே வாழ்கின்ற பெருமை பொருந்தியவனை சிவபெருமானின் எட்டுத் தோள் களும், இந்திரன் இரண்டு தோள்களும், சிறந்த பெரிய உலகத்தை எல்லாம் வயிற்றினிடத்தே அடக்கிவைத்த திருமாலின் ஆயிரம் தோள்களும் அந்த இராமனுடைய ஒரு விரலின் ஆற்றலுக்கு ஈடாக மாட்டா.'

விளக்கம் : கணம் : கூட்டம். சுடுகளம் : சுடுகாடு. பெற்றிஏயவன் : பெற்றி பொருந்தியவன். அன்னான் : இராமன்.

(யுத்த. கும்பகன்னன் வதைப் படலம். இராமனின் ஒரு விரலுக்கு உலகமே ஈடில்லை என்றான் இராவணன்)

முப்புரம் முருங்கச் சுட்ட சிலை

224 "முப்புரம் முருங்கச் சுட்ட
முரிவெஞ் சிலையும், வீரன்
அற்புத வில்லுக்கு ஐய!
வம்புஎனக் கொளலும் ஆகா;

ஒப்பவே றுரைக்கல் ஆவது
ஒருபொருள் இல்லை; வேதம்
தப்பின போதும் அன்னான்
தனுஉமிழ் சரங்கள் தப்பா." 21

பொழிப்பு: முப்புரத்தை அழியுமாறு எரித்த வலிமை வாய்ந்த கொடிய வில்லும், வீரனாகிய இராமனுடைய அற்புதமான வில்லுக்கு முன்னே விநோதப் பொருளாகக் கொள்ளுதற்குக்கூடப் பயன்படாது, ஐயனே! இராமன் வில்லுக்கு உவமை சொல்வதற்கு உரிய பொருள் எதுவுமே இல்லை. மறைகள் பொய்த்தாலும் இராமன் வில்லினின்றும் புறப்படும் அம்புகள் தவறமாட்டா.

விளக்கம்: முரி : வலிமை. வெம்மை : கொடுமை. வீரன் : இராமன். வம்பு : விநோதம். தனு : வில். உமிழ் : விட்ட. சரங்கள் : அம்புகள்.

(யுத்த. கும்பகன்னன் வதைப் படலம். இராமன் வில்லை
இராவணன் புகழ்தல்)

கற்பத்தின் அரன்

225 "உற்பத்தி அயனே ஒக்கும்;
ஓடும்போது அரியே ஒக்கும்;
கற்பத்தின் அரனே ஒக்கும்,
பகைஞரைக் கலந்த காலை;
சிற்பத்தின் நம்மால் பேசச்
சிறியவோ? என்னைத் தீராத்
தற்பத்தைத் துடைத்த என்றால்
பிறிதுஒரு சான்றும் உண்டோ?", 22

பொழிப்பு: (இராமனின் அம்புகள்) தோன்றும் போது நான்கு முகங்களையுடைய பிரமனை நிகர்க்கும்; பகைஞனை நோக்கி ஓடும்போது ஆயிரம் முகங்களையுடைய திருமாலை ஒக்கும்; பகைஞரிடத்துப் பொருந்தும்போது ஊழிக்காலத்து உருத்திரனை ஒத்து இருக்கும். அந்த அம்புகளின் செயல் திறமைகள் நாம் அளவிட்டுச் சொல்லக்கூடிய அவ்வளவு குறைந்தனவோ? என்னையும் நீங்காத ஆணவத்தை நீக்கிவிட்டன என்றால் அவற்றின் ஆற்றலுக்கு வேறொரு சான்று வேண்டுமா?

விளக்கம்: கற்பம் : யுகமுடிவுகாலம். சிற்பம் : செயல் திறன். தற்பம் : செருக்கு

(யுத்த. கும்பகன்னன் வதைப் படலம். இராமன் அம்பை
இராவணன் பாராட்டுதல்)

மழுவாள் அங்கை ஈசன்

226 "வாசவன், மாயன், மற்றை
மலருளோன், மழுவாள் அங்கை
ஈசன்என்று இனைய தன்மை
இளிவரும் இவரால் அன்றி
நாசம்வந்து உற்ற போது
நல்லதோர் பகையைப் பெற்றேன்;
பூசல்வண்டு உறையும் தாராய்!
இதுஇங்குப் புகுந்தது என்றான்." 23

பொழிப்பு : ஆரவாரம் செய்கின்ற வண்டுகள் தங்கியிருக்கின்ற மாலையை யுடையவனே! எனக்கு நாசம் வந்து பொருந்திய காலத்து, இந்திரன், திருமால் மற்றும் தாமரைவாழ் பிரமன், மழுப் படையை அழகிய கையில் ஏந்திய சிவன் என்று சொல்லத்தக்க குறைந்த தன்மை வாய்ந்த இவர்களால் அன்றி, சிறந்த ஓர் பகையை அடைந்தேன். இதுதான் இப் போது தோன்றிய நிலைமை என்று கூறினான் இராவணன்.

விளக்கம் : இளிவருதல் : குறைவுபடல். நல்லபகை : சிறந்த பகை. பூசல் : ஆரவாரம். தார் : மாலை. வாசவன் முதலியோர் தனக்குத் தோற்ற வராதலின் " இளிவரும் இவர் " என்றான் என்க. நல்லதோர் பகை என்ற மையால் இராவணன் தன் அழிவை இப்போது உணர்கின்றான் என்பது ஆயிற்று.

(யுத்த. கும்பகன்னன் வதைப் படலம். இராவணன் மாலியவானிடம் இரங்கிக் கூறல்)

ஈசனே முதலா மற்றை மானிடர்

227 "ஈசனே முதலா மற்றை
மானிடர் இறுதி ஆகக்
கூச,மூன்று உலகும் காக்கும்
கொற்றத்தேன்; வீரக்கோட்டி
பேசுவார் ஒருவற்கு ஆவி
தோற்றிலென்; பெண்பால் வைத்த
ஆசைநோய் கொன்றது என்றால்
ஆண்மைதான் மாசு ணுதோ?" 24

பொழிப்பு : சிவபெருமான் முதலாக மக்கள் ஈறுக உள்ள யாவரும் அஞ்ச, மூன்று உலகங்களையும் காக்கும் வெற்றியை உடையேன்; வீரர்கள் கூட்டத்தில் பேசப்படுகின்றவர் எவர் ஒருவருக்கும் நான் உயிர் தோற்றேனல்லேன். பெண் மீது கொண்ட ஆசை நோய் என்னைக்கொன்று விட்டது என்று சொன்னால் என்னுடைய வீரம் இழுக்கு அடையாதா?

விளக்கம் : கோட்டி : குழு.

(யுத்த. மாயாசனகப் படலம். இராவணன் சீதையிடம் பேசுதல்)

ஓர் ஏறு சிவற்கு உளது

228 ஓர்ஏறு சிவற்குஉளது ஒப்புஉளவாம்,
வார்ஏறு வயப்பரி ஆயிரம்,வன்
போர்ஏறிட ஏறுவ, பூண்உறுதிண்
தேர்ஏறுதி; தந்தனன்; வெந்திறலோய்! 25

பொழிப்பு : கொடிய வலிமையுடையவனே! சிவனிடத்து உள்ள ஒப்பற்ற இடபத்துக்கு இணையான, வார்கட்டிய வெற்றிக் குதிரைகள் ஆயிரம் பூட்டிய அலங்கரிக்கப்பெற்ற திண்ணிய தேரை உனக்குத் தந்தேன். வலிய போரைக் கடக்க அத்தேரில் ஏறுவாயாக!

விளக்கம் : ஏறு : விடை. ஒப்பு : சமம். வயம் : வெற்றி. பரி : குதிரை.

(யுத்த. அதிகாயன் வதைப் படலம். இராவணன் அதிகாயனுக்குத் தேர் கொடுத்துப் போருக்கு அனுப்புதல்)

கரந்தை சூடி

229 "புரந்த ரன்பகை
போயிற்றுஅன் றோஎனும்;

அரந்தை வானவர்
ஆர்த்தன ரோ!எனும்;

கரந்தை சூடியும்,
பாற்கடல் கள்வனும்,

நிரந்த ரம்பகை
நீங்கின ரோ!"எனும். 26

பொழிப்பு: இந்திரன் பகை நீங்கிவிட்டதோ? என்பான்; (இது காறும்) துன்பத்தில் உழன்ற அமரர்கள் ஆரவாரம் செய்தனரோ? என்பான்; கரந்தை சூடிய சிவனும், பாற்கடலில் ஒளிந்துகொண்ட வஞ்சகனுகிய மாலும் நிரந்தரமாகப் பகைநீக்கம் பெற்றனரோ? என்பான்.

விளக்கம்: புரந்தரன்: இந்திரன். அரந்தை; துயரம். கரந்தை: திருநீற்றுப்பச்சை. "நீரோடு கூவிளமும், நிலா மதியும், வெள்ளெருக்கும் நிறைந்த கொன்றைத் தாரோடுதண் கரந்தை சடைக்கணிந்த தத்துவனுர்" என்பார் திருஞானசம்பந்தர்.

(யுத்த. இராவணன் சோகப் படலம். இந்திரசித்தன் இறந்தமையால் தேவர்கட்கு வாழ்வு வந்துவிட்டனவே என இராவணன் வருந்துதல்)

நீறு பூசி

230 நீறு பூசியும்,
நேமியும் நீங்கினுர்,
மாறு குன்ருெடு
வேலை மறைந்துளார்;
ஊறு நீங்கின-
-ராய்உவ ணத்திஞேடு
ஏறும் ஏறி
உலாவுவர் என்னுமால். 27

பொழிப்பு: திருநீறு பூசிய சிவனும், சக்கரம் தாங்கிய திருமாலும் தத்தம் இடங்களில் நின்றும் ஆற்றல் நீங்கினவராய் மாறுபட்டு மலையினும், கடலினும் ஒளிந்துகொண்டார்கள். (அன்னுர்) இனி இடையூறு இல்லாதவர்களாய் கருடனிலும், காளையிலும் ஏறிக்கொண்டு உலாவுவார்களே! என்று இயம்புவான். (இராவணன்)

விளக்கம்: குன்று: கயிலை. வேலை: பாற்கடல். ஊறு; இடையூறு. உவணம்: கருடன். ஏறு: காளை. இந்திரசித்தனுக்குப் பயந்து சிவனும், திருமாலும் குன்றினும், கடலினும் ஒளிந்துகொண்டதாக இராவணன் கற்பனை செய்கின்ருன் என்க.

(யுத்த. இராவணன் சோகப் படலம். சிவனும், மாலும் இனி உலாவருவரே என இராவணன் ஏங்குதல்)

நீலம் காட்டிய கண்டன்

231 நீலம் காட்டிய
கண்டனும், நேமியும்
ஏலும் காட்டின்
எறிந்த படைக்குஎலாம்
தோலும் காட்டி,
துரந்தனை; மீண்டும்நின்
ஓலம் காட்டிலை-
-யோ!எனும் ஓர்தலை. 28

பொழிப்பு: (இராவணனது) ஓர் தலையானது, "நீலநிறத்தைக் கொண்ட கழுத்தையுடைய சிவனும், சக்கரக் கையனுகிய திருமாலும் பொருந்துமாறு கூட்டமாக வீசிய படைகட்கு எல்லாம் தோல்வியை உண்டாக்கி, அவர்களை ஓடச் செய்தனை; திரும்பவும் நீ உன் குரலைக் காட்டமாட்டாயா?" என்று சொல்லும்:

விளக்கம்: காட்டின் : காட்டைப் போல. தோல் : தோல்வி. ஓலம்: ஓசை.

(யுத்த. இராவணன் சோகப்படலம்: இறந்த இந்திரசித்தனை எழுந்து பேசமாட்டாயா என்று இரங்குவான் இராவணன்)

நெற்றிக் கண்ணன்

232 "நிலையின்மா திரத்து நின்ற
யானையும், நெற்றிக் கண்ணன்
மலையுமே, எளிய வோநான்
பறித்தற்கு? மறுஇல் மைந்தன்
தலையும்ஆர் உயிரும் கொண்டார்
அவர்உட லோடும் தாங்க,
புலையனேன் இன்னும் ஆவி
சுமக்கின்றேன்! போலும்! போலும்!" 29

பொழிப்பு : நிலையாகத் திக்குகளில் பொருந்திய யானைகளும், நெற்றிக்கண் பெற்றவன் கயிலைமலையுமே நான் பறித்தற்கு எளியனவோ? குற்றமற்ற என் மைந்தனின் தலையையும், அரிய உயிரையும் கொண்டவரான அந்தப் பகைவர்கள் உலலோடும் இன்னும் இருக்க, இழிதகையேனாகிய நான் இன்னமும் உயிரைச் சுமந்துகொண்டிருக்கின்றேன்.

விளக்கம் : மாதிறம்: திக்கு. மறு: குற்றம். ஆவி: உயிர். போலும் போலும் வியப்பு இடைச்சொல். திக்கு யானைகளும். கயிலைமலையும் யான் பிடுங்குதற்கு எளிதாக இருந்தன; மனிதர்களை வெல்ல எனக்கு ஆற்றல் இல்லை! என்றான் இராவணன் என்க.

"திக்கயம் வலிஇல; தேவர் மெய்லியர்;
முக்கணன் கயிலையும் முரணின்று ஆயது!
மக்களும் குரங்குமே வலிய ஆமெனில்
அக்கட! இராவணற்கு அமைந்த ஆற்றலே!"

என்ற பாடல் இங்குச் சிந்திக்கத்தக்கது.

(யுத்த. இராவணன் சோகப்படலம்: இராவணனின் மகனை இழந்த ஆறுத்துயரம்.)

சிவன்தனை அழிப்பது

233 மோக மாப்படை ஒன்றுஉளது;
அயன்முதல் வகுத்தது;
ஆகம் அற்றது; கொற்றமும்
சிவன்தனை அழிப்பது;
ஏகம் முற்றிய விஞ்சையை
இவன்வயின் ஏவி,
காகம் முற்றுஉழல் களத்தினில்
கிடத்துவென், கடிதின்.

பொழிப்பு : சிறந்த மோகப்படை ஒன்று இருக்கின்றது; பிரமதேவன் முதலிலே உண்டாக்கியது அது; வடிவம் இல்லாதது; சிவனது வெற்றியையும் அழிக்க வல்லது. அந்த ஒப்பற்ற மந்திரம் நிரம்பிய படையை இவன் மீது செலுத்தி, காகங்கள் நிரம்பித்திரிகின்ற போர்க்களத்திலே விரைவாக இவனை வீழ்த்துவேன்.

விளக்கம் : கொற்றம்: வெற்றி. ஏகம்: ஒன்று (ஒப்பற்றது) விஞ்சை: மந்திரம். வயின்: இடத்து. கடிது: விரைவு.

(யுத்த. வேலேற்றபடலம்: இராவணன் இலக்குவன்மீது மோகப் படையைவிட நினைத்தல்)

சிவனே அல்லன்

234 "சிவனோ? அல்லன்; நான்முகன்
அல்லன்; திருமாலாம்
அவனோ? அல்லன்; மெய்வரம்
எல்லாம் அடுகின்றான்;
தவனோ என்னின் செய்துமு
டிக்கும் தரன்அல்லன்;
இவனோ தான்அவ் வேதமு
தல்கா ரணன்"என்றான். 31

பொழிப்பு : உண்மையான வரங்களை எல்லாம் அழிக்கின்றவனாகிய இவன், சிவனாக இருக்கலாமோ என்றால் அல்லன்; பிரமனாக இருக்கலாமோ என்றால் அல்லன்; திருமாலோ என்றால் அவனுமல்லன்; தவமுடையானோ என்றால் தவம் செய்து முடிக்கக் கூடிய தரமுடையானாக மாட்டான் இவன்; இவன்தானோ அந்த மறைகளுக்கெல்லாம் முதற்காரணனாகிய பரம்பொருள் என்று இசைப்பான். (இராவணன்)

விளக்கம் : சிவன், நான்முகன், திருமால் இவர்கள் எல்லாரும் முன்னே இராவணனுக்குத் தோற்று ஓடியவர்கள்; ஆதலின் அவர்களல்லர் என்றும் இவனைப்பார்த்தால் இவன் தவனாக இருக்க மாட்டான் ஆதலின், தவன் அல்லன் என்றும், எனவே இராமன் வேதமுதற்காரணனாகவே இருக்க வேண்டும் என்றும் இராவணன் துணிகின்றான் என்க.

(யுத்த. இராவணன் வதைப்படலம்: இராமனது பேராற்றலை இராவணன் வியத்தல்)

4 இராமன் மொழி

4 இராமபிரான் மொழி

தன்னேரில்லாக் காப்பியத் தலைவனாகிய இராமபிரான் சிவபிரானைப் பற்றிப் பத்தொன்பது இடங்களில் பகர்வான்.

"மேலொரு பொருளும் இல்லா மெய்ப்பொருள்", "காலமும் கணக்கும் நீத்த காரணன்," "துறைகளின் முடிவும் சொல்லும் துணி பொருள்" என்பன ஆதி சொற்றொடர்களால் பாராட்டப்பெற்ற கடவுட் பிறப்பாகிய இராமன்,

"பரசுடைக் கடவுள்"
"நெற்றியின் அழலும் செங்கண் நீறு அணி கடவுள்"
"ஈசன்"
"ஈசனார்"
"சிவன்"
"முக்கணான்"
"சங்கரன்"
"தையல் பாகன்"
"ஆலம் உண்டவன்"
"கங்கை அம் தொங்கல் மோலியான்"
"மான் மறிக் கரத்தான்"
"மழவிடைப் பாகன்"
"நகை மழுவாளன்"

என, பலபடப் பகர்ந்து போற்றுவான்.

"துண்டம்கொள் பிறையான்" என ஓரிடத்து இராமன் கூறுவது 'துண்டப்பிறையான்' என்ற திருவாசகத்தை நினைப்பூட்டுகிறது.

விடணனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்கு இராமன் கூறிய காரணங்களுள் சிவன் செய்த இரண்டு செயல்களை எடுத்துக் காட்டுவது சிந்திக்கத்தக்கது. ஒன்று, தன்னை அடைந்த தேவர்கள் வாழத் தான் நஞ்சு உண்ட கதை. இன்னொன்று, தன்னை எய்திய மார்க்கண்டேயனுக்கு வாழ்நாளைப் பெருக்கிக் காலனை உதைத்த கதை. இவ்விரண்டையும் இராமன் வாயிலாகச் சுவைபடக் கூறுவான் கவிச் சக்கரவர்த்தி.

நஞ்சு உண்ட செய்தி கூறுங்கால்,

"இடைந்தவர்க்கு அபயம் யாம்"என்று
இரந்தவர்க்கு, எறிநீர் வேலே
கடைந்தவர்க்கு ஆகி, ஆலம்
உண்டவற் கண்டி லீரோ?
உடைந்தவர்க்கு உதவான் ஆயின்,
உள்ளதுஒன்று ஈயான்ஆயின்,
அடைந்தவர்க்கு அருளான் ஆயின்,
அறம்என்னும்? ஆண்மை என்னும்?"

என்று கேட்பான் காப்பியத் தலைவன். மார்க்கண்டேயன் காதையை,

"நஞ்சினை மிடற்று வைத்த
நகைமழு வாளன், 'நாளும்
தஞ்சு'என, முன்னம் தானே
தாதைபால் கொடுத்து, 'சாதல்
அஞ்சினேன்; அபயம்!" என்ற
அந்தணற்கு ஆகி, அந்நாள்
வெஞ்சினக் கூற்றை மாற்றும்
மேன்மையின் மேன்மை உண்டோ?"

என்ற பாடலால் சொல்லுவான்.

மேலும், வாலியோடு பேசும்போது இராமன், "காலன் ஆற்றல் கடிந்த கணிச்சியான்" என்று பேசுவான். "செந்தறு கண், வெள் எயிற்றுக் கரிய கோலம் சிதைந்து உருள உதைத்து அருளும் செய்ய தாள்" களைப்பற்றி, அச் சிவபெருமானிடம் வாலிபெற்ற வரத்தை இப்பாடலில் பாராட்டுவான் இராமன். இதையேதான் 'அரங்கில் ஆடு வார்க்கு அன்பு பூண்டு உடைவரம் அறியேன்' எனப் பேசினான் இராவணன்.

கிட்கிந்தையில் அநுமன் பெருமையை இலக்குவனிடம் கூறுங்கால், 'இவன் விடை வல்லானோ?' என்று கேட்பது எண்ணி இன்புறத்தக்கது. தவிர, இலங்கையின் எழிலைக் கண்டு களிக்கும் இராமனுக்கு ஒரு அழகிய மாளிகையைக் கண்டவுடன் அம்மை அப்பனின் நினைவுவருகின்றது. அதைப் பின்வரும் அரிய பாட்டால் கற்பனை செய்வான்.

"வாகைவெஞ் சிலேக்கை வீர!
 மலர்க்குழல் புலர்த்த, மாலேத்
தோகையர் இட்ட தூமத்து
 அகிற்புகை முழுதும் சுற்ற,
வேகவெங் களிற்றின் வன்தோல்
 மெய்யுறப் போர்த்த, தையல்
பாகனின் பொலிந்து தோன்றும்
 பவளமா ளிகையைப் பாராய்!"

விழிபட வெந்ததோ?

235 "சுழிபடு கங்கைஅம்
தொங்கல் மோலியான்
விழிபட வெந்ததோ?
வேறுதான் உண்டோ?
பழிபடர் மன்னவன்
பரித்த நாட்டினூங்கு
அழிவதுஎன்? காரணம்,
அறிஞ!கூறு" என்றான். 1

பொழிப்பு: 'அறிவுடையவனே! நீர்ச்சுழிகளைக்கொண்ட கங்கையையும், அழகிய மாலையையும் அணிந்த சடையை உடைய சிவபிரானது நெற்றிக்கண் பட்டமையால் (இந்நிலம்) வெந்துபோயிற்றா? அன்றி வேறு காரணம் உண்டா? பழியோடு கூடிய அரசன் காக்கும் நாட்டை விட அதிகமாக அழிவுபெறுவதற்கு என்ன காரணம்! விளம்புக' என்று வினவினான்.

விளக்கம்: பரித்த: பாதுகாத்த. நாட்டின் ஊங்கு: நாட்டைவிட.

(பால. தாடகை வதைப்படலம். பாலைவனத்தைச் சுட்டிக்காட்டி
விசுவாமித்திரனை இராமன் வினுதல்)

மான் மறிக் கரத்தான்

236 "மான்ம றிக்கரத்-
-தான்,மழு ஏந்துவான்
தான்,ம றுத்திலன்
தாதைசொல்; தாயையே
ஊன்அ றக்குறைத்-
-தான்;உர வோன்உரை
யான்ம றுப்பதுஎன்று
எண்ணுவ தோ?"என்றான். 2

பொழிப்பு : 'மான் குட்டியைக் கையில் ஏந்திய சிவபெருமானுக் குரிய மழுப்படையைக் கைக்கொண்டவனுகிய பரசுராமன் தானும், தந்தைசொல்லைத் தட்டாதவனுகி, தாயையே உடம்பு நீங்குமாறு வெட்டினுன் ; அவ்வாருக, அறிவு சான்ற தந்தையின் உரையை நான் மறுக்கவேண்டும் என்று நீங்கள் கருதுவது பொருந்துமா?' என்ருன் (இராமன்.)

விளக்கம் : தந்தை சொல்லை மதித்து, பரசுராமன் தாயையே கொன்றிருக்க, அறிவுத் தந்தை எனக்கு இட்ட கட்டளையை நான் மறுக்க இயலாது என்ருன், என்க.

(அயோத்தி. நகர் நீங்கு படலம். தந்தை சொற்கடத்தல் ஆகாது என இராமன் கோசலைக்குக் கூறல்)

மழவிடைப் பாகன்

237 நீண்ட மால்வரை மதிஉற,
நெடுமுடி நிவந்த
தூண்ட மாமணிச் சுடர்சடைக்
கற்றையின் தோன்ற,
மாண்ட வால்நிற அருவி,அம்
மழவிடைப் பாகன்
காண்த தும்சடைக் கங்கையை
நிகர்ப்பன காணுய்! 3

பொழிப்பு : ஓங்கிய பெரிய சித்திரகூட மலையில், வளர்ந்த சிகரத்தின் மீது இளந்திங்கள் தவழ, அச்சிகரத்தில் உள்ள சிறந்த தூண்டுதல் அமைந்த செம்மணியின் ஒளி, சடைக்கூட்டம் போலத் தோன்ற, (அச்சிகரத்தினின்றும் வீழ்கின்ற) மாட்சிமைப் பட்ட வெள்ளை நிறம் கொண்ட அருவியானது, இளங்காளையை ஊர்பவனுகிய சிவபெருமானின் காணத்தக்க சடையில் உள்ள கங்கை ஆற்றை ஒத்திருப்பன பாராய்.

விளக்கம் : நிவந்த : சிறந்த. கற்றை : கூட்டம். மாண்ட : மாட்சிமைப் பட்ட. வால்நிறம் : வெண்மை நிறம். பாகன் : செலுத்து கின்றவன். சித்திரகூடமலையின் சிகரத்துக்கு, சிவபிரான்முடியும், அச்சிகரத்தின் அணித்தே தோன்றும் திங்களுக்கு, சிவபிரான் சடையில் உள்ள மதியும், அச்சிகரத்தில் எழும் மாணிக்கச் சுடர்க்கற்றைக்கு, சிவபெருமான் சடைக் கற்றையும், அச்சிகரத்தில் நின்று வீழும் அருவிக்கு, சிவபெருமான் சடையினின்று பெருகும் கங்கையும் உவமம் ஆம்.

(அயோத்தி. சித்திரகூடப்படலம். மலை அருவியின் வனப்பை இராமன் சீதைக்குக் காட்டல்)

ஊர் அறுத்த ஒருவன்

238 "சூர்அ றுத்தவ-
-னும்,சுடர் நேமியும்

ஊர்அ றுத்த
ஒருவனும் ஓம்பினும்

ஆர்அ றத்திஞெடு
அன்றிநின் ருர்அவர்

வேர்அ றுப்பென்,
வெருவன்மின், நீர்!"என்ருன். 4

பொழிப்பு: 'சூரபதுமனைக் கொன்ற முருகனும், ஒளி பொருந்திய சக்கரத்தை உடைய திருமாலும், முப்புரத்தை எரித்த ஒப்பற்ற சிவனும் துணையாய் நின்று பாதுகாப்பினும், யார் அறத்திற்கு மாறுபட்டு நின்ருர்களோ அவர்களை வேரோடு தொலைப்பேன்; நீர் அஞ்சாதீர்' என்ருன் (இராமன்)

விளக்கம்: சூர்: சூரபதுமன். ஊர்: முப்புரம். ஓம்புதல்: பாதுகாத்தல். அறத்திஞேடு அன்றி நின்ருர்: அறத்தோடு மாறுபட்டவர்கள். வெருவுதல்: அஞ்சுதல்.

(ஆரணிய. அகத்தியப் படலம். முனிவர்களுக்கு இராமன் அபயம் அளித்தல்)

விடை வல்லாஞே?

239 இல்லாத உலகத்து எங்கும்
இங்குஇவன் இசைகள் கூரக்

கல்லாத கலையும் வேதக்
கடலுமே என்னும் காட்சி,

சொல்லாலே தோன்றிற்று அன்றே?
யார்கொல்இச் சொல்லின் செல்வன்?

வில்லார்தோள் இளைய வீர!
விரிஞ்சஞே? விடைவல் லாஞே? 5

பொழிப்பு: 'வில் பொருந்திய தோளை உடைய இளைய வீரனே! இங்குத் தோன்றும் இவன் (அனுமன்) புகழ் ஏற, இவன் படிக்காத நூலும் மறையாகிய கடலுமே, எல்லா உலகத்துள்ளும் இல்லாதன; என்று கூறத்தக்க காட்சி, இவன் சொல்லாலே விளங்கியது அல்லவா? இந்த, இனிய சொற்களையே செல்வமாகக் கொண்ட இவன் பிரமனா? சிவனா? யார்கொல்?

விளக்கம்: வில்லார் தோள் இளையவீர, இங்கு இவன் இசைகள் கூர, கல்லாத கலையும், வேதக்கடலுமே உலகத்து எங்கும் இல்லாத என்னும் காட்சி, சொல்லாலே தோன்றிற்றன்றே: இ, இன்சொல்செல்வன் விரிஞ்சனோ? விடைவல்லானோ? யார்கொல்! என இயைக்க. இசை: புகழ் கூர: மிக.

(கிட்கிந்தை. அனுமப்படலம். இராமன் இலக்குவனிடம் அனுமனைப் பாராட்டுதல்)

காலன் ஆற்றல் கடிந்த கணிச்சியான்

240 "காலன் ஆற்றல்
கடிந்த கணிச்சியான்
பாலின் ஆற்றிய
பத்தி பயத்தலால்,

மாலி னல்தரு
வன்பெரும் பூதங்கள்
நாலின் ஆற்றலும்
ஆற்றுழி நண்ணினாய்." 6

பொழிப்பு: எமனுடைய வலிமையை அழித்தவனான மழுப்படை ஏந்திய சிவனிடத்துச் செலுத்திய பத்தி பயன் தந்த காரணத்தால் திருமாலால் தரப்பெற்ற வலிய பெரிய பூதங்கள் நான்கிற்கும் உள்ள ஆற்றல்களை, செயல்புரியும் இடங்கள் தோறும், அடைந்தாய்.

விளக்கம்: கடிந்த: நீக்கிய. பாலின்: இடத்து. பயத்தல்: பயன் தரல். ஆற்றுழி: செய்யுங்கால்.

(கிட்கிந்தை. வாலிவதைப்படலம். வாலியைப்பார்த்து இராமன் உரைத்தல்)

ஆலம் உண்டவற் கண்டிலீரோ?

241 இடைந்தவர்க்கு "அபயம் யாம்"என்று
இரந்தவர்க்கு, எறிநீர் வேலை
கடைந்தவர்க்கு ஆகி ஆலம்
உண்டவற் கண்டி லீரோ?
"உடைந்தவர்க்கு உதவான் ஆயின்
உள்ளதுஒன்று ஈயான் ஆயின்
அடைந்தவர்க்கு அருளான் ஆயின்
அறம்என்ஆம்? ஆண்மை என்ஆம்?" 7

பொழிப்பு: அச்சம் கொண்டவர்களும், 'யாம் உமக்கு அபயம்' என்று கெஞ்சிக் கேட்டவர்களும் ஆகிய, அலைவீசுகின்ற கடலைக் கடைந்தவர்களுக்காக, அக்கடலில் தோன்றிய நஞ்சை உண்டருளிய சிவபிரானைப்பற்றி நீங்கள் அறிந்திலீரோ? மெலிந்தவர்களுக்கு ஒருவன் உதவிசெய்யவில்லை ஆனால், இரக்கின்றவர்களுக்குத் தன்னிடம் உள்ள ஒன்றைக் கொடானானால், தன்னை அடைந்தவர்களுக்கு அருள் செய்து, அவர்களை ஏற்றுக்கொள்ளானானால் அறத்தின் பயன் என்ன? ஆண்மையின் பொருள்தான் என்ன?

விளக்கம்: இடைந்தவர்: பயந்தவர். வேலை கடைந்தவர்: சுரரும் அசுரரும். காணுதல்: அறிந்துகொள்ளுதல்.

(யுத்த. வீடணன் அடைக்கலப்படலம். சிவன் நஞ்சு உண்ட செயலை இராமன் போற்றுதல்)

நஞ்சினை மிடற்று வைத்த நகை மழுவாளன்

242 நஞ்சினை மிடற்று வைத்த
நகைமழு வாளன் நாளும்
தஞ்சஎன முன்னம் தானே
தாதைபால் கொடுத்து, 'சாதல்
அஞ்சினேன்; அபயம்' என்ற
அந்தணற்கு ஆகி அந்நாள்
வெஞ்சினக் கூற்றை மாற்றும்
மேன்மையின் மேன்மை உண்டோ? 8

பொழிப்பு : நஞ்சைக் கழுத்திலே பொருத்திய, ஒளி கொண்ட மழுப்படையைத் தாங்கிய சிவனுனவன், தானே, தாதையினிடத்து எளிய வாழ்நாளை முன்னர்க் கொடுத்துவிட்டு, 'இறப்பதற்கு அஞ்சினேன் உன் அபயம்' என்று சரண் அடைந்த மார்க்கண்டனுக்காக, அந்த நாளில், கொடுங்கோபம் உடைய கூற்றை உதைத்த சிறப்பைக் காட்டிலும் வேறு சிறப்பு உண்டோ?

விளக்கம் : நகை : ஒளி. நாள் : வாழ்நாள். நஞ்சு : எளிமை. சுண்டுக் குறைந்த அளவு என்னும்பொருளது. அந்தணன்: மார்க்கண்டன். தாதை: மார்க்கண்டன் தந்தை மிருகண்டு முனிவன்.

(யுத்த. விடணன் அடைக்கலப் படலம். அபயம் அடைந்தோரை ஏற்றல் கடமை என இராமன் இயம்பல்)

துண்டம் கொள் பிறையான்

243 சண்டம்கொள் வேகம் ஆரும்
தனிவிடை உவணம் தாங்கும்
துண்டம்கொள் பிறையான், மௌலித்
துளவினு னோடும், தொல்லை
அண்டங்கள் எவையும் தாங்கிக்
காப்பினும், அறம்இ லாதாற்
கண்டங்கள் பலவும் காண்பென்
என்பதும் கழறு வீரால் 9

பொழிப்பு : பெருவேகம் பொருந்திய ஒப்பற்ற காளையால் சுமக்கப் பெற்ற, துண்டப்பிறையானுகிய சிவனும், கருடனுல் தாங்கப்பெற்ற துளாய் மாலை அணிந்த முடிபெற்ற திருமாலும், பழைய அண்டங்கள் எல்லா வற்றிலும் உள்ள அனைவரும் (இராவணனை) தாங்கிக் காப்பாற்றினுலும் அறம் இலாதானுகிய அந்த இராவணனைப் பல துண்டங்களாக, அனைவரும் காண நாம் செய்யப் போவதை அவனிடம் சொல்லுங்கள்.

விளக்கம் : சண்டம்கொள் வேகம்: பெரிய வேகம். தனிவிடை: ஒப்பற்ற காளை. உவணம் : கருடன். 'சண்டம்கொள் வேகம் ஆரும்' என்பதை உவணத்துடனும் கூட்டுக. கண்டங்கள்: துண்டங்கள்.

(யுத்த. ஒற்றுக் கேள்விப்படலம், இராமன் இராவணனின் ஒற்றர்களிடம் உரைத்தல்)

தையல் பாகன்

244 "வாகைவெஞ் சிலைக்கை வீர!
மலர்க்குழல் புலர்த்த மாலைத்
தோகையர் இட்ட தூமத்து
அகில்புகை முழுதும் சுற்ற,
வேகவெங் களிற்றின் வன்தோல்
மெய்யுறப் போர்த்த, தையல்
பாகனின் பொலிந்து தோன்றும்
பவளமா ளிகையைப் பாராய்!" 10

பொழிப்பு: வெற்றி மாலை சூடிய கொடிய வில்லைக் கொண்ட வீரனே! மாலை அணிந்த மயில் போலும் சாயல் பெற்ற மகளிர் தங்கள் மலர்க்குழலை உலர்த்த இட்ட தூபவகையைச் சேர்ந்த அகில் கட்டையின் புகையானது, முழுதும் சுற்றிக்கொண்டமையால், வேகம் உள்ள கொடிய யானையின் வலிய தோலைத் தன் உடம்பில் பொருந்துமாறு போர்த்துக் கொண்ட, உமை ஒரு கூறுடைய சிவபெருமானைப் போல விளங்கித் தோன்றும் பவளமாளிகையைக் காண்பாயாக.

விளக்கம்: பவளமாளிகை சிவபிரானின் செம்மேனியையும், அம் மாளிகையைச் சூழ்ந்த மகளிர்தம் கூந்தலை உலர்த்த இட்ட அகில் கட்டையின் கருநிறப்புகை அப்பெருமான் போர்த்துக் கொண்ட யானைத் தோலையும் ஒக்கும் என்க. மகளிர் இட்ட அகில் புகையின் சிறப்பைக் காட்டத் 'தையல் பாகன்' என்று குறித்தார் போலும்! வாகை: வெற்றிமாலை. புலர்த்த: உலர்த்த. தோகையர்: மயில் அனைய சாயல் உடையார். தூமம்: தூபம். களிறு: யானை. மெய்யுற: உடம்பு மூடுமாறு.

(யுத்த. இலங்கை காண்படலம். இராமன் இலக்குவனுக்கு இலங்கை மாளிகையின் சிறப்பைக் கூறல்)

சங்கரன் கவசம்

245 தாக்கு கின்றன நுழைகில;
தலையது தாமரைத் தடங்கண்ணன்
நோக்கி, 'இங்குஇது சங்கரன்
கவசம்'என்று உணர்வுற நுனித்துஉன்னி,

ஆக்கி அங்குஅவன் அடுபடை
தொடுத்துவிட்டு அறுத்தனன்; அதுசிந்தி
விக்குஇ ழந்தது, வீழ்ந்தது,
வரைசுழல் விரிசுடர் வீழ்ந்தென்ன 11

பொழிப்பு: (இராமன் எய்த அம்புகள்) மோதுகின்றனவாகி உள்ளே நுழைந்தில; தாமரைத் தடங்கண்ணனாகிய இராமன் மேன்மை பெற்றதான அக்கவசத்தைப் பார்த்து, இங்கே இவன் அணிந்திருக்கின்ற இந்தக்கவசம் சிவபிரான் கொடுத்தது என நுண்ணறிவு கூற, நுணுகி நினைத்து, கொல்லும் தன்மை வாய்ந்த சங்கரன் படையை அதற்குரிய மறையைச் சொல்லி, செலுத்தி (அக்கவசத்தை) அறுத்தான். கும்பகன்னன் அணிந்திருந்த அந்தக் கவசம் நிலைகுலைந்து கட்டு அவிழ்ந்ததாகி மேருமலையை வலம் வருகின்ற ஒளியை விரிக்கின்ற சூரியன் வீழ்ந்ததைப் போலக் கீழே விழ்ந்தது.

விளக்கம்: தாக்குகின்றன நுழைகில: மோதுகின்றனவே அன்றி உள்ளே நுழையவில்லை. தலைஅது நோக்கி எனப் பொருத்துக. வீக்கு: கட்டு. மலைபோன்ற கும்பகன்னன் உடலில் சுற்றியிருந்த ஒளியுள்ள கவசம் கீழே வீழ்ந்ததானது, மலையைச் சுற்றிவரும் ஒளியோடு கூடிய சூரியன் கீழே வீழ்ந்ததை ஒத்தது என்க.

(யுத்த. கும்பகன்னன் வதைப்படலம்: கும்பகன்னன் அணிந்திருந்த சங்கரன் கவசத்தைச் சங்கரன் அம்பால் இராமன் அறுத்தல்)

ஈசன் என்பது என்?

246 "வான்என்பதுஎன்? வையகம் என்பதுஎன்? மால்
தான்என்பதுஎன்? வேறு தனிச்சிலையோர்
யான்என்பதுஎன்? ஈசன்என்? வானவர்தம்
கோன்என்பதுஎன்? எம்பி கொதித்திடுமேல்!" 12

பொழிப்பு: என் தம்பி சினம் கொள்வானானால் அப்போது, விண்ணுலகத்தவர் என்று சொல்வது என்ன? மண்ணுலகத்தவர் என்று கூறுவது என்? திருமால் என்று செப்புவதுதான் என்ன? பிற ஒப்பற்ற வில்லாளிகள் என்பது என்ன? (இராமனாகிய) யான் என்று சொல்லுவது என்ன? சிவபெருமான் என்பது என்ன? தேவர்கள் தலைவனாகிய இந்திரன் என்பது என்ன?

விளக்கம் : இலக்குவன் சீற்றத்துக்கு முன் எவரும் நிற்கும் ஆற்றல் இலர் என்பது கருத்து. யான் என்பது என் என்பதிலுள்ள "என்"னைத் "தனிச்சிலையோர்" என்பதனோடும் கூட்டுக.

(யுத்த. அதிகாயன் வதைப்படலம்: இலக்குவன் சீற்றத்தை வீடணனுக்கு இராமன் இயம்பல்)

சிவன் அல்லன்

247 'சிவன்;அல்லன் எனில்,திரு
வின்பெருமான்;
அவன்அல்லன் எனில்,புவி
தந்தருளும்
தவன்;அல்லன் எனில்,தனி
யேவலியோன்
இவன்;அல்லன் எனில்,பிறர்
யார்உளரோ?' 13

பொழிப்பு : (அதிகாயனை வெல்லவல்லவன்) சிவன்; அவன் அல்லா விட்டால் திருவின் நாயகனாகிய திருமால்; அவனும் அல்லன் என்றால் உலகத்தைப் படைத்தவனாகிய பிரமன்; அவனும் அன்றேல் ஒப்பற்ற ஆற்றல் பெற்ற இந்த இலக்குவன்; இவனும் அல்லன் என்றால் வேறுயார் இருக்கின்றார்?

விளக்கம் : தவன்: தவத்தில் மேம்பட்ட பிரமன். தனியேவலியோன் இவன்: இலக்குவன்.

(யுத்த. அதிகாயன் வதைப்படலம்: இலக்குவன் ஆற்றலை வீடணனுக்கு இராமன் கூறல்)

ஒருவன் ஓர் அம்பில் சுட்ட புரம்

248 வரம்கொடுத்து இனைய பாசம்
வழங்கினன் தானே நேர்வந்து
இரங்கிடத் தக்கது உண்டேல்,
இகழ்கிலென்; இல்லை என்னின்,

உரம்கெடுத்து, உலகம் மூன்றும்,
ஒருவன்ஓர் அம்பின் சுட்ட
புரங்களின் தீய்த்துக் காண்பென்
பொடி,ஒரு கடிகைப் போழ்தின். 14

பொழிப்பு: (இந்திரசித்துக்கு) வரத்தைக் கொடுத்து இத்தகைய நாகபாசத்தைக் கொடுத்தவன் அவனாகவே என்எதிரில் வந்து, வருந்தக் கூடுமானால் அவனைஇகழமாட்டேன்; இல்லையானால் ஒப்பற்ற அந்தச் சிவன் ஈடில்லாத அம்பினால் திரிபுரங்களைச் சுட்டு அழித்தது போல, மூன்று உலகங்களையும் வலியழித்து, ஒருநாழிகைப் பொழுதில் எரித்து நீருக்கி விடுவேன்.

விளக்கம்: இனைய: இத்தகைய. வழங்கினான்: சிவபெருமான். உரம்: வலிமை. ஒருவன்: சிவபெருமான். ஓரம்பு: திருமாலாகிய கணை. தீய்த்து: எரித்து. காண்பென் பொடி: சாம்பராக்குவேன். கடிகை: நாழிகை.

(யுத்த. நாகபாசப்படலம்: இராமன் வீடணனிடம் கொதித்துக் கூறுதல்)

இறுதியும் காவலும் இயற்றும் ஈசர்

249 முறுவல்வாள் முகத்தினன்,
முளரிக் கண்ணனும்,
அறிவென்;நீ, "அடுவல்"என்று
அமைதி ஆம்எனின்,
இறுதியும் காவலும்
இயற்றும் ஈசரும்
வெறுவியர்; வேறுஇனி
விளைவது யாதுஎன்றான். 15

பொழிப்பு: தாமரைக் கண்ணனாகிய இராமபிரான், புன்சிரிப்போடு கூடிய ஒளியுள்ள முகத்தினனாய், (இலக்குவனைப் பார்த்து) நீ அழிப்பது என்று முற்பட்டு விடுவாயானால் அழித்தலும், காத்தலும் ஆகிய இரண்டு தொழில்களையும் செய்கின்ற சிவனும், திருமாலும் (உன் திறமைக்கு முன்னே) ஒன்று மில்லாதவராவர். இனி வேறு தோன்றக்கூடியது என்ன இருக்கிறது? இதை நான் அறிவேன் என்று இயம்பினான்.

விளக்கம்: முறுவல்: புன்சிரிப்பு. வாள்: ஒளி. முளரி: தாமரை. அடுவல்: ஒழிப்பேன். இறுதி: முடிவு. ஈசர்: சிவன், திருமால். இலக்குவன் அழிக்க அமைந்தானுனல், அழிக்கும் ஈசனும் அவனுக்கு நிகராகமாட்டான்; காக்கும் ஈசனும் அதைத் தடுக்கல் ஆற்ருன், என்க.

(யுத்த. பிரமாத்திரப் படலம்: இராமன் இலக்குவன் திறத்தைப் புகழ்தல்)

முக்கணுன் படை

250 முக்கணுன் படையும், ஆழி
முதலவன் படையும், முன்நின்று
ஒக்கவே விடுமே; விட்டால்
அவற்றையும் அவற்றின் ஒயத்
தக்கவாறு இயற்றி, மற்றுஉன்
சிலைவலித் தருக்கி ஞலே
புக்கவன் ஆவி கொண்டு
போதுதி, புகழின் மிக்கோய்!' 16

பொழிப்பு: புகழினுலே மேம்பட்டவனே! மூன்று கண் பெற்ற சிவ பெருமான் அம்பையும், சக்கரம் ஏந்திய முதல்வனுகிய திருமால் அம்பை யும், முன் நின்று ஒன்ருக (இந்திரசித்தன்) விடுவான்; அப்படி அவன் ஏவினுல் அக்கணைகளை அக்கணைகளாலேயே அவை வலி அழியுமாறு, ஒல்லும் வகையால் செலுத்தி, மற்றும் உன் வில்லாற்றல் திறமையால் போர்க்களம் புக்க அவ் இந்திரசித்தன் உயிரைக் குடித்து வருக.'

விளக்கம்: ஒக்க: ஒருசேர. போதுதி: வருவாயாக. அவ்வப் படையை அவ்வப் படைகொண்டே அழிக்க என்ருன்.

(யுத்த. நிகும்பலையாகப் படலம். இராமன் இலக்குவனுக்கு, அம்பு செலுத்தும் உபாயம் அறிவித்தல்)

ஈசனுர் இருக்கை

251 'கார்த்தவீ ரியன்என் பானுல்
கட்டுண்டான் என்னக் கற்கும்
வார்த்தைஉண்டு; அதனைக் கேட்டு
நாணுறு மனத்தி னேற்குப்

போர்த்தலைப் புறகிட்டு ஏற்ற
புண்ணுடைத் தழும்பும் போலாம்
நேர்த்ததும் காண லுற்ற;
ஈசனுர் இருக்கை நிற்க!' 17

பொழிப்பு : 'கார்த்தவீரியன் என்பவனுல் (இராவணன்) கட்டப்பட்டான்' என்று பேசப்படும் பேச்சு உலாவுகின்றது; அம்மொழியைக் கேட்டு, வெட்கம் கொண்ட உள்ளம் உடைய எனக்கு (அந்த இராவணன்) போரிலே முதுகுகாட்டி, முதுகிலே பெற்றுக்கொண்ட புண்ணினுடைய தழும்பும் நேராகத் தென்பட்டது; சிவபெருமானுடைய உறைவிடமாகிய கயிலை நிகழ்ச்சி ஒரு புறம் இருக்கட்டும்.

விளக்கம் : 'கார்த்தவீரியனுல் கட்டுண்ட இராவணனைக் கொன்றதில் சிறப்பில்லை; அதனினும் அவன் முதுகில் தோன்றிய புண்ணைப் பார்த்தால் புறங்காட்டிய அவனைக் கொன்றது சிறிதும் பெருமை இல்லை; ஈசனுர் கயிலையை அவன் எடுத்ததில் நசுக்குண்டு இடர்ப்பட்டானுனுலும் ஈசன் பெருமை கருதி இராவணன் சிறுமையை மன்னித்துவிடலாம்.' என இராமன் எண்ணினுன் என்க.

(யுத்த. இராவணன் வதைப் படலம். இராவணன் தழும்பு கண்டு இராமன் வருந்திக் கூறல்)

பரசுடைக் கடவுள்

252 'பரசுடைக் கடவுள், நேமிப்
பண்ணவன் பதுமத்து அண்ணல்

அரசுடைத் தேவி மாரை
இன்றியே அமைவது உண்டோ?

கரைசெயற்கு அரிய தேவர்
ஏனையோர், கலந்து காண்பான்

விரசுறின், விலக்கு வாரோ?
வேறுஉளார்க்கு என்கொல்? வீர! 18

பொழிப்பு: (இராமன் வீடணனைப் பார்த்து) 'வீரனே! மழு ஏந்திய கடவுளாகிய சிவனும், சக்கரம் ஏந்திய தேவனாகிய திருமாலும், தாமரையில் வந்த பெருமையோனாகிய பிரமனும் அரசு செலுத்துகின்ற மனைவிமாரை இல்லாமல் இருப்பதுண்டோ? (மும்மூர்த்திகள் நிலைமையே இதுவானால்) மற்றையோரைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது? அளவிடமுடியாத அமரரும், பிறரும் கூடி நம்மைக் காணுதற்கு வந்து அடைந்தால் அவர்களைத் தடுப்பார் உண்டோ? (என்று கூறினான்)

விளக்கம்: முப்பெரும் கடவுளர்களும் மனைவிமாரை உடம்பில் சுமந்ததால் 'அரசுடைத் தேவிமார்' என்று கூறப்பெற்றது.

'ஆதிசக்தி தனைஉடம்பில் அரனும் கோத்தான்;
அயன்வாணி தனைநாவில் அமர்த்திக் கொண்டான்;
சோதிமதி முகத்தினளை, செல்வம் எல்லாம்
சுரந்துஅருளும் விழியாளை, திருவை, மார்பில்
மாதவனும் ஏந்தினான்; வானோர்க்கு ஏனும்
மாதர்இன்பம் போல்பிறிதுஓர் இன்பம் உண்டோ?
காதல்செயும் மனையாளே சக்தி கண்டீர்;
கடவுள்நிலை அவளாலே எய்தல் வேண்டும்.'

என்பது மகாகவி பாரதியின் பாடல். கணவன்மாரை ஆட்சி செய்யும் மனைவிகள் ஆதலின் 'அரசுடைத் தேவிமார்' என்றார். கரை: அளவு. காண்பான்: காணும்பொருட்டு. விரசுதல். நெருங்குதல்.

(யுத்த. மீட்சிப் படலம். இராமன் வீடணனைக் கடிதல்)

நீறு அணி கடவுள்

253 "நெற்றியின் அழலும் செங்கண்
நீறுஅணி கடவுள் நீடு
கற்றைஅம் சடையின் மேவு
கங்கையும், சேது ஆகப்
பெற்றிலம் என்று கொண்டே
பெருந்தவம் புரிகின் றுளால்;
மற்றுஇதன் தூய்மை எவ்வாறு
உரைப்பது? மலர்க்கண் வந்தாய்!" 19

பொழிப்பு : செந்தாமரையில் தோன்றிய திருமகளே! நெற்றியிலே நெருப்பைக் கக்குகின்ற சிவந்த நெருப்புக் கண்ணைப் பெற்ற திருநீறு அணிந்த கடவுளாகிய சிவபெருமானின் நீண்ட தொகுதியான அழகிய சடையில் இருக்கின்ற கங்கை ஆறும், 'சேது ஆகும் பேற்றை நாம் பெறவில்லையே' என்று பெரிய தவம் செய்கின்ருள் என்ருல், இச் சேதுவின் புனிதத் தன்மையை எவ்வாறு எடுத்துக் கூறுவது?

விளக்கம் : சேது : அணை. இராமன் அணை கட்டிய கடல் பகுதி சேது என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. நெருப்புக் கண்ணை உடைய சடைக் கற்றையில் கங்கை இருப்பதை, காட்டில் நெருப்பிடை நின்று சேது ஆகத் தான் ஆக வேண்டும் என்று கங்காதேவி தவம் செய்கின்ருள் என்று கற்பித்தவாறு.

(யுத்த. மீட்சிப் படலம். சீதைக்கு இராமன் சேதுவைக் காட்டி அதன் புனிதத் தன்மையைப் புகல்தல்)

5 விசுவாமித்திரன் மொழி

5. விசுவாமித்திரன் மொழி

சிவனைப் பற்றி விசுவாமித்திர முனிவன் பதினேழு இடங்களில் செப்புவான்.

> "திங்கள் மேவும் சடைத் தேவன்"
> "அவிர்மதி அணிந்த தூயவன்"
> "வாரணத்து உரிவையான்"
> "வெள்விடையவன்"
> "தையல் பாகன்"
> "தோகை பாகன்"
> "மலைமகள் கொழுநன்"
> "தாழா முக்கணன்"
> "தழல்நிறக் கடவுள்"
> "வரைஉறை புனிதன்"
> "பொன்சடை நின்மலக் கொழுந்து"
> "வால்உணர்வு மேல்முடுகினர் அறிவு சென்று
> உற்றவானவன்"

என்பன சிவபெருமானை விசுவாமித்திர முனிவன் சிறப்பித்துக் கூறும் சொற்றொடர்கள்.

இராம காதையில் விசுவாமித்திரனைச் சந்திக்கும் இடம் பாலகாண்டம் ஒன்றில்தான். பெண்மைக்கு உயர்வு கொடுக்கும் கம்பன் வான்மீகியின் கருத்துக்கு மாறாக அகலிகையையும் கற்புடையாளாக விசுவாமித்திரன் வாயிலாகவும், இராமபிரான் வாயிலாகவும் கூறக் காண்கின்றோம்.

அகலிகையை, 'அன்னையே அனையாள்' என்றும், 'போது நீ அன்னை!' எனவும் இராமன் கூறுவது சித்திக்கத்தக்கது. கோதமனிடம் விசுவாமித்திரன், 'நெஞ்சினால் பிழைப்பிலாளை நீ அழைத்திடுக' என்று செப்புவது, அகலிகை உள்ளத்தால் தவறு இழைக்காதவள் என்பது விசுவாமித்திரனின் உள்ளக் கிடக்கை என்பதைத் தெள்ளிதின் காட்டுகின்றது.

'புக்கவளோடும்' என்ற பாடலில் விசுவாமித்திரன் கூறும் நிகழ்ச்சி சூழ்நிலையின் இயற்கையைக் காட்டுகின்றது.

> "பற்றுஅவா வேரொடும் பசைஅற, பிறவிபோய்
> முற்றவால் உணர்வுமேல் முடுகினர் அறிவுசென்று
> உற்றவா·னவன்"....

என, சிவபிரானை விசுவாமித்திர்ன் போற்றுவது சாலச் சிறப்புடைத்து 'வால்அறிவன்' என, குறளாசிரியர் உள்ளிட்ட அறவோர்கள் கடவுளைப் பற்றிக் கூறுவதை இது நினைப்பூட்டுகின்றது.

திங்கள் மேவும் சடைத் தேவன்

254 திங்கள்மே வும்சடைத்
தேவன்மேல், மாரவேள்,
இங்குநின் று எய்யவும்,
எரிதரும் நுதல்விழிப்
பொங்குகோ பம்சுட,
பூளைவீ அன்னதன்
அங்கம்வெந்து, அன் றுதொட்டு
அனங்கனே ஆயினன். 1

பொழிப்பு: சந்திரன் பொருந்திய சடையை உடைய தேவனாகிய சிவன் மீது, மன்மதனானவன் இவ்விடத்தில் நின்றும் அம்புகளைவிட நெருப்பை நல்கும் நெற்றிக்கண்ணில் பொங்கிய சினத்தீ சுட்டதனால் பூளைப்பூப் போன்ற தன் உடம்பு வெந்து, அன்று முதல் காமன் அங்கம் அற்றவனாயினான்.

விளக்கம்: மாரவேள் : மன்மதன். எரி : நெருப்பு. பூளைவீ : இலவம் பூ. அங்கம் : உடம்பு.

(பால. தாடகை வதைப் படலம். விசுவாமித்திரன் இராமனுக்கு மதன் பொருது அழிந்த இடம் காட்டுதல்)

வாரணத்து உரிவையான்

255 வாரணத்து உரிவையான்
மதனனைச் சினவுநாள்
ஈரம்அற்று அங்கம்இங்கு
உகுதலால் இவண்எலாம்
ஆரணத்து உறையுளாய்!
அங்கநாடு; இதுவும்அக்
காரணக் குறியுடைக்
காமன்ஆச் சிரமமே. 2

பொழிப்பு: மறைகளை உறைவிடமாகக் கொண்டவனே! யானைத் தோலைப் போர்த்த சிவபிரான், மன்மதனைக் காய்ந்த நாளில், அவன் உடல் பசை அற்றுச் சாம்பராகி இங்குச் சிந்தியதால் இந்த இடமெல்லாம் அங்க நாடு என்னும் பெயர் பெற்றது; இதுவும் அந்தக் காரணப் பெயரை உடைய காமன் ஆச்சிரமம் ஆகும்.

விளக்கம்: வாரணம்: யானை. உரிவை: தோல். சினவுநாள்: கோபித்த காலத்து. அங்கம்: எலும்பு.

(பால. தாடகை வதைப் படலம். இராமனுக்கு விசுவாமித்திரன்
காமன் ஆச்சிரமத்தைக் காட்டுதல்)

அறிவு சென்று உற்ற வானவன்

256 பற்றுஅவா வேரொடும்
பசைஅற, பிறவிபோய்
முற்ற,வால் உணர்வுமேல்
முடுகினர் அறிவுசென்று
உற்றவா னவன்,இருந்து
யோகுசெய் தனன்எனின்,
சொற்றவாம் அளவதோ,
மற்றுஇதன் தூய்மையே? 3

பொழிப்பு: பாசமும், ஆசையும் வேருடனே தொடர்பு நீங்கவும், பிறவி போய் ஒழியவும், மெய்யறிவு கைவரப்பெற்ற ஞானிகளின் உணர்வு சென்று பொருந்தப் பெற்ற சிவபிரான், இவ்விடத்து இருந்து யோகம் செய்தான் என்றால் இதன் புனிதத் தன்மையானது சொல்லக்கூடிய அளவினது ஆகுமா?

விளக்கம்: பற்று: யான், எனது என்ற பற்று. அவா: விருப்பம். வால்உணர்வு: மெய்யறிவு.

(பால. தாடகை வதைப் படலம். இராமனுக்கு விசுவாமித்திரன், சிவன்
யோகு செய்த இடத்தின் பெருமை கூறுதல்)

தையல் பாகன்

257 வெய்ய மாமுனி வெகுளியால்
விண்ணகம் முதலாம்
வையம் யாவையும் வறுமைநோய்
நலிதர, வானோர்,
தையல் பாகனும், சதுமுகக்
கடவுளும் கூடி,
செய்ய தாமரைத் திருஉறு
மார்பனைச் சேர்ந்தார். 4

பொழிப்பு: கொடிய சிறந்த முனியாகிய (துருவாசனின்) கோபத்தால் வானுலகம் முதலான உலகங்கள் எல்லாவற்றையும், வறுமைப் பிணி வாட்ட, (அதனால்) அமரர்களும், மாது ஒரு கூறு உடையானாகிய சிவனும், நான்முகக் கடவுளாகிய பிரமனும் ஒன்று சேர்ந்து, சிவந்த தாமரைவாழ் இலக்குமி உறைகின்ற மார்பை உடைய திருமாலை அடைந்தனர்.

விளக்கம்: வெகுளி : கோபம். நலிதர : துன்புறுத்த.

(பால. அகலிகைப் படலம். தேவர்கள் திருமாலிடம் செல்லல்)

வெள் விடையவன்

258 வெருவும் ஆலமும், பிறையும்,வெள்
விடையவற்கு ஈந்து,
தருவும் வேறுள தகைமையும்
சதமகற்கு அருளி,
மருவு தொல்பெரு வளங்களும்
வேறுற வழங்கி,
திருவும், ஆரமும் அணிந்தனன்;
சீதர மூர்த்தி. 5

பொழிப்பு: அச்சத்தைத் தரும் நஞ்சையும், மதியையும் வெள்ளிய இடபத்தை உடைய சிவனுக்குக் கொடுத்து, கற்பகம் முதலிய ஐந்தருக்களேயும், சிந்தாமணி முதலிய ஏனைய செல்வங்களேயும் நூறு யாகம் செய்தவனுகிய இந்திரனுக்கு அளித்து, பொருந்திய, பழைய, பெரிய வளங்களே எல்லாம் ஏனைய தேவர்கட்கு ஏற்றவாறு நல்கி, திருமகளேயும், கௌத்துவ மணியையும் தான் பூண்டு கொண்டான் திருமால்.

விளக்கம்: வெருவுதல்: அஞ்சுதல். தகைமை: செல்வம். சதமகன்: நூறு வேள்வி செய்த இந்திரன். வேறு: ஏனைத் தேவர். உற: பொருந்த. ஆரம்: கௌத்துவமணி. சீதரமூர்த்தி: திருமகளே அணிந்த திருமால்.

(பால. அகலிகைப் படலம். பாற்கடலில் தோன்றிய பொருள்களே, திருமால் பங்கிட்ட முறை)

அவிர்மதி அணிந்த தூயவன்

259 ஆயது இவ்விடம்; அவ்விடம்
அவிர்மதி அணிந்த
தூய வன்தனக்கு உமைவயின்
தோன்றிய, தொல்லே
வாயு வும்,புனல் கங்கையும்
பொறுக்கலா வலத்த
சேய்,வ ளர்ந்தருள் சரவணம்
என்பதும் தெரித்தான். 6

பொழிப்பு: '(இத்தகைய வரலாறு) கொண்டது இவ்விடம்; அந்த இடமானது, விளங்கித் தோன்றும் சந்திரனேத் தரித்த புனிதனுகிய சிவபிரானுக்கு உமையவளிடத்துப் பிறந்த, பழமையான காற்றுக் கடவுளும், நீர்த்தன்மை கொண்ட கங்கை மாதும் ஆற்றமுடியாத வலிமை பெற்றவனுன குமரக் கடவுள் வளர்ந்து அருளிய சரவணமாகும்' என்பதையும் (விசுவாமித்திரன்) தெரிவித்தான்.

விளக்கம்: அவிர்தல்: விளங்குதல். தொல்லே: பழைய. வலம்: வெற்றி. சேய்: முருகன். சரவணம்: நாணற்காடு.

(பால. அகலிகைப் படலம். விசுவாமித்திரன் சரவணத்தைக் காட்டுதல்)

பூளை சூடி

260 மூளும் வெஞ்சினத்து அருந்தவன்
முனிந்துஎரி விழிப்ப,
பூளை சூடிதன் நகையினில்
எயில்பொடிந் தனபோல்,
ஆளும் மைந்தர்கள் அறுபதி
னுயிரர் அவிந்தார்;
வேள்வி கண்டநல் வேந்தனுக்கு
உரைத்தனர், வேயர். 7

பொழிப்பு : பொங்கி எழும் கொடிய கோபம் கொண்டவனான அரிய (கபிலன் என்னும்) தவமுனிவன், சினந்து நெருப்பு எழ விழித்த பொழுதில், பூளைப்பூ சூடிய சிவபெருமானின் சிரிப்பில் முப்புரங்களும் பொடியாயின போல, ஆட்சிக்குரிய மக்கள் அறுபதினாயிரவரும் அழிந்தனர்; இச் செய்தியை வேள்வி தலைப்பட்ட நல்ல மன்னனுக்கு ஒற்றர் உரைத்தனர்.

விளக்கம் : முனிந்து : சினந்து. எரி : நெருப்பு. பூளை : இலவம்பூ அவிந்தார் : இறந்தார்.

(பால. அகலிகைப் படலம் கபிலன் சாபத்தால் மைந்தர்கள் அழிந்ததை ஒற்றர்கள் மன்னனுக்கு அறிவித்தல்)

கண்ணுதற்கு அன்றி அரிது

261 'மாக மாநதி புவியிடை
நடக்கின்,மற்று அவள்தன்
வேகம் ஆற்றுதல் கண்ணுதற்கு
அன்றி,வேறு அரிது;ஆல்,
தோகை பாகனை நோக்கி,நீ
அருந்தவம் தொடங்கு'என்று
ஏகி னுன்;உலகு அனைத்தும்எவ்
உயிர்களும் ஈன்றோன். 8

பொழிப்பு : 'வானத்தில் உள்ள சிறந்த கங்கையாறு, பூ உலகில் நடந்து வருமானால், அந்தக் கங்காதேவியின் வேகத்தைப் பொறுத்துத் தாங்குதல் நெற்றிக்கண் பெற்ற சிவனுக்கு அன்றி ஏனையோருக்கு அருமை உடைத்தாம்; ஆதலால், மயில் போலும் சாயல் உடையாளாய உமையவளைப் பங்கில் கொண்ட கடவுளை நோக்கி, நீ செயற்கு அரும் தவம் தொடங்குவாயாக' என்று இயம்பி, எல்லா உலகத்தையும், உயிர்கள் அனைத்தையும் பெற்றவனுகிய பிரமன் சென்றான்.

விளக்கம் : மாகம் : வானம். மாநதி : சிறந்த ஆறு.

(பால. அகலிகைப் படலம். சிவனை நோக்கித் தவம் செய்யுமாறு
பகீரதனுக்குப் பிரமன் கூறிச் செல்லுதல்)

மங்கை பாகன்

262 மங்கை பாகனை நோக்கி,முன்
மொழிந்தன வருடம்
தங்கு மாதவம் புரிதலும்,
தழல்நிறக் கடவுள்
அங்கு வந்து,"நின் கருத்தினை
முடித்தும்"என்று அகன்றான்;
கங்கை யைத்தொழ, காலம்ஐ-
யாயிரம் கழித்தான். 9

பொழிப்பு : (பகீரதன்) அம்பிகையைப் பக்கத்தில் கொண்ட சிவபெருமானைக் குறித்து, முன்னே சொன்ன (பதினாயிரம் ஆண்டு நிலைத்த பெரிய தவத்தைச் செய்த அளவில், தீவண்ணக் கடவுளாகிய சிவபெருமான் அவ்விடத்துக்கு வந்து, 'நின் எண்ணத்தை முடிப்போம்' என்று சொல்லிச் சென்றான்; (பின்னர்) கங்காதேவியை (நேரில் கண்டு தன் வேண்டுகோளைத் தெரிவித்து) வணங்க ஐயாயிரம் ஆண்டுகளைச் செலவிட்டான்.

விளக்கம் : சிவனைக் குறித்து, கங்கையைத் தாங்கும் வரத்தைப் பெற்றுக்கொண்ட உடன், பூ உலகிற்கு வர இசைதற்கு, கங்கையை நோக்கி ஐயாயிரம் ஆண்டு பகீரதன் தவம் கிடந்தான் என்க.

(பால. அகலிகைப் படலம். பகீரதன், சிவன் வரம் பெற்று, கங்கையை
நோக்கித் தவம் கிடந்தான்)

பெருகு நல்தவம் புரிக

263 ஒரும டக்கொடி ஆகிவந்து,
"உனதுமா தவம்என்?
பொருபு னல்கொடி வரின்,அவள்
வேகம்ஆர் பொறுப்பார்?
அரன்உ ரைத்தசொல் விநோதம்;மற்று
இன்னும்நீ அறிந்து
பெருகு நல்தவம் புரிக!"என
வரநதி பெயர்ந்தாள். 10

பொழிப்பு : ஆறுகளுள் எல்லாம் சிறந்த ஆறாகிய கங்கை ஒரு இளம் பெண் வடிவு எடுத்து வந்து, 'உனது பெருந் தவத்தின் கருத்து என்ன? மோதிவரும் நீரைக் கொண்ட கங்கை நங்கை வருவாளானால், அவள் வேகத்தை யாரால் தாங்க முடியும்? சிவன் கூறிய பேச்சு வேடிக்கையாக இருக்கிறதே; திரும்பவும் நீ அவன் கருத்தை அறிந்துவரப் பெரிய நல்ல தவத்தைச் செய்வாயாக' என்று இயம்பி அவ்விடத்தை விட்டு நீங்கினாள்.

விளக்கம் : பொருபுனல் கொடி : அலைமோதும் நீரைக் கொண்ட கொடி அனைய கங்கை.

(பால. அகலிகைப் படலம். பகீரதனிடம் மீண்டும் தவம் புரியுமாறு கங்கை சொல்லுதல்)

வரை உறை புனிதன்

264 கரந்தை, மத்தமோடு, எருக்குஅலர்,
கூவிளை, கடுக்கை
நிரந்த பொற்சடை நின்மலக்
கொழுந்தினை நினையா,
அரந்தை உற்றவன் இரண்டரை
ஆயிரம் ஆண்டு
புரிந்து நல்தவம் பொலிதர
வரைஉறை புனிதன். 11

பொழிப்பு : கங்கையின் சொல்லைக் கேட்டுத் துன்பம் உற்றவனான பகீரதன், திருநீற்றுப் பச்சை, ஊமத்தம் பூ, எருக்கம் பூ, வில்வ இலை, கொன்றைப் பூ ஆகிய இவற்றைக் கலந்து அணிந்த பொன் நிறமான சடையை உடைய, பழுதற்ற, ஒளிப்பிழம்பான சிவபிரானை நினைந்து, இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டு நல்ல தவம் செய்து விளங்க, (அப்பொழுது) கயிலையில் வாழ்கின்ற தூய்மையான சிவபெருமான், (முடிவு அடுத்த பாட்டில். அப்பாடலில் சிவனைக் குறித்த தொடர் இல்லையாதலின் இந்நூலில் இடம்பெறவில்லை.)

விளக்கம் : நினையா : நினைந்து. அரந்தை : துன்பம்.

(பால. அகலிகைப் படலம். பகீரதன் திரும்ப இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் தவம் செய்தல்)

மலைமகள் கொழுநன்

265 உந்தி அம்புயத்து உதித்தவன்
உறைதரும் உலகும்,
இந்தி ராதியர் உலகமும்,
நடுக்குற இரைத்து,
வந்து தோன்றினள் வரநதி;
மலைமகள் கொழுநன்
சிந்தி டாது,ஒரு சடையினில் 12
கரந்தனன் சேர.

பொழிப்பு : (திருமாலின்) உந்திக் கமலத்திலே தோன்றிய பிரமன் உறைகின்ற உலகமும், இந்திரன் முதலான அமரர்கள் வாழ்கின்ற உலகமும் அஞ்சுமாறு, பேரொலி எழுப்பி, (பூவுலகத்தில்) வந்து சேர்ந்தாள் வரநதியாகிய கங்கை மாது; சிதறாமல் தன் ஒப்பற்ற சடையிலே ஒரு சேர, (கங்கையை) மறைத்து வைத்தான் மலைமகள் கொழுநனாகிய சிவபிரான்.

விளக்கம் : உந்தி : கொப்பூழ். இரைத்து : ஓசையை உண்டாக்கி. ‘அரன் உரைத்த சொல் வினோதம்’ என்று கூறினாளாகிய, கங்கை, தன் செருக்கைப் புலப்படுத்திக் கடுவேகத்துடன் எல்லா உலகத்தையும் நடுங்கச் செய்து தோன்றினாள் எனினும் அவளை அடக்கி ஆண்டான் சிவபெருமான் என்க.

(பால. அகலிகைப் படலம். சிவபிரான் கங்கையைத் தாங்குதல்)

புனிதன் சென்னியில் வான்நதி

266 புல்நு னித்தரு பனிஎன
வான்நதி புனிதன்
சென்னி யில்கரந்து ஒளித்தலும்,
வணங்கினன், திகைத்து
மன்னன் நிற்றலும், "வருந்தல்;நம்
சடையுள்வான் நதிஇன்று"
என்ன விட்டனன் ஒருசிறிது;
அவனிபோந்து இழிந்தாள், 13

பொழிப்பு: புல்லினது நுனியில் தங்கிய பனித்துளி போல, வான் நதியான கங்கை புனிதனுகிய சிவபிரானின் சென்னியில் மறைந்து ஒளித்தனளாக, (கங்கையைக் காணுது) திகைப்படைந்து பகீரதன் வணங்கி நின்றவுடன் (அவனைப் பார்த்து) 'வருந்தற்க; நம் சடையிலே வான்நதி இப்போது இருக்கின்ருள்' என்று சொல்லிக் கங்கையில் ஒரு சிறு பகுதியை (சிவன்) விட்டான்; (உடனே அக்கங்கை) நிலத்தினில் வந்து இறங்கினுள்.

விளக்கம்: வான் நின்று இழிந்த கங்கையைக் காணவில்லையே என்று பகீரதன் வருந்த, அவன் வருத்தத்தைத் தீர்த்து, வேண்டும் அளவு நிலத்தில் வர சிவன் அருள் கூர்ந்தான் என்க.

(பால. அகலிகைப் படலம். சிவன் கங்கையை நிலத்தில் இறக்குதல்)

முக்கணன் அனைய ஆற்றல் முனிவன்

267 புக்குஅவ ளோடும் காமப்
புதுமண மதுவின் தேறல்
ஒக்கஉண்டு இருத்த லோடும்
உணர்ந்தனள்; உணர்ந்த பின்னும்
தக்கதுஅன்று என்ன ஓராள்;
தாழ்ந்தனள் இருப்ப, தாழா
முக்கணன் அனைய ஆற்றல்
முனிவனும் முடுகி வந்தான். 14

பொழிப்பு : (இந்திரன் மாறுவேடத்தோடு) சென்று அகலிகையுடனே காம இன்பம் என்னும் புதிய மணமுள்ள கள்ளின் தெளிவை ஒருசேரப் பருகியிருந்த அளவில் (தன்னை நுகர்பவன் கணவனல்லன் என்பதை) அறிந்துகொண்டாள் அகலிகை. அறிந்த பின்னும் இது தகாத செயல் என்று ஆராய்ந்து விலக்காமல் தான் தாழ்வுற்று இருப்ப, அவ்வமயம் குறைவே யில்லாத முன்றுகண் படைத்த சிவபிரானை நிகர்த்த கோதம முனிவனும் விரைந்து வந்து சேர்ந்தான்.

விளக்கம் : காமம் : ஆசை. ஓர்தல் : ஆராய்தல். முடுகி : விரைந்து கள்ளும், காமமும் ஒன்றே ஆதலின் கள் உவமமாக உரைக்கப் பெற்றது. கலத்தலின் இடையில் ஆராய்ந்து விலக்கும் ஆற்றல் அற்றவள் ஆனாள் என்க. புலர்வதற்கு நெடுநேரம் இருப்பதைக் கண்டு, இந்திரன் வஞ்சனையை அறிவுக்கண்ணால் முனிவன் அறிந்தான்; ஆதலின் முடுகி வரவேண்டுவதாயிற்று. முக்கணான் அனைய ஆற்றல் என்றமையால் கோதமனின் பெருகிய சினமும், வலிமையும் உரைக்கப்பெற்றன.

(பால. அகலிகைப் படலம். இந்திரன் அகலிகை சேர்க்கையும் கோதமன் வருகையும்.)

அழல் தரும் கடவுள்

268 "பிழைத்தது பொறுத்தல் என்றும்
பெரியவர் கடனே என்பர்;
அழல்தரும் கடவுள் அன்னாய்!
முடிவுஇதற்கு அருளுக!" என்ன,
"தழைத்துவண்டு இமிரும் தண்தார்
தயரத ராமன் என்பான்
கழல்துகள் கதுவ, இந்தக்
கல்உருத் தவிர்தி" என்றான்.

பொழிப்பு : "நெருப்பை நல்குகின்ற நெற்றிக்கண்ணைப் பெற்ற கடவுளாகிய சிவபெருமானை ஒத்த முனிவனே! செய்த பிழையைப் பொறுப்பது எப்பொழுதும் பெரியவர்க்குக் கடமை என்று அறிஞர் பேசுவர். இந்தச் சாபத்திற்கு முடிவு இன்னது என்று அருள்புரிக" என்று அகலிகை வேண்ட, செழித்து வண்டுகள் ஒலித்தற்கு இடமாகிய குளிர்ந்த மாலையை அணிந்த தயரத இராமன் என்று பாராட்டப்பெறு பவனின் திருவடிப்பொடி உன் மீது படியும் போது இந்தக் கல்வடிவம் நீங்கப்பெறுவாய்" என அருளினான் கோதமன்.

விளக்கம் : பிழைத்தல் : பிழை செய்தல். அழல் : தீ. இமிர்தல் : ஒலித்தல். தண் : குளிர்ச்சி தார் : மாலை. தயரத ராமன் : தயரதன் மைந்தன் இராமன். கழல் : திருவடி. துகள் : தூசி. கதுவ : பட.

(பால. அகலிகைப் படலம். கோதமன் அகலிகை சாப நீக்கம் சாற்றல்)

கொன்றைப்பூ நின்ற மவுலி

269 "தூ நின்ற சுடர்வேலோய்!
அனந்தனுக்கும் சொலற்குஅரிதேல்,
யான்இன்று புகழ்ந்துரைத்தற்கு
எளிதோ?ஏடு அவிழ்கொன்றைப்
பூநின்ற மவுலியையும்
புக்குஅளைந்த புனற்கங்கை
வான் நின்று கொணர்ந்தானும்
இவர்குலத்துஓர் மன்னவன்காண்!" 16

பொழிப்பு : தசையில் தோய்ந்த ஒளிகொண்ட வேலை உடையவனே! (ஆயிரம் நாவுடைய) ஆதிசேடனே சொல்லுதற்கு அருமையுடையது என்றால், (இவர் குலப் பெருமை) நான் இன்று பாராட்டிச் சொல்லுதற்கு எளிமையுடையதாகுமா? இதழ் விரிந்த கொன்றை மலர் தங்கிய சிவ பிரானின் சடைமுடியிலும் புகுந்து திளைத்த கங்கை வெள்ளத்தை வானில் நின்றும் மண்ணுலகத்துக் கொண்டுவந்தவனும், இவர் குலத்திலே தோன்றிய ஓர் அரசனாவான்.

விளக்கம் : தூ : தசை. அனந்தன் : ஆதிசேடன். ஏடு : இதழ். மவுலி : சடை. அளைதல் : திளைத்தல். கங்கையைக் கொணர்ந்தவன் : பகீரதன். அவன் இராமன் குலத்து முன்தோன்றல்.

(பால. குலமுறை கிளத்து படலம். கங்கையைக் கொணர்ந்த பகீரதன்)

உருத்திரனைச் சாய்த்தான்

270 சந்திரனை வென்றானும்,
உருத்திரனைச் சாய்த்தானும்,
துந்துஎனும் தானவனைச்
சுடுசரத்தால் துணித்தானும்,

வந்தகுலத்து இடைவந்த
ரகுஎன்பான் வரிசிலையால்
இந்திரனை வென்று,திசை
இருநான்கும் செருவென்றான். 17

பொழிப்பு : சந்திரனை வெற்றிகொண்டவனும், உருத்திர மூர்த்தியைத் தோல்விகண்டவனும், துந்து என்னும் பெயர்கொண்ட அசுரனைச் சுடவல்ல அம்பால் துண்டுபடுத்தியவனும் ஆகிய மன்னர்கள் பிறந்த இம்மரபில் வந்த இரகு என்னும் பேரரசன், கட்டமைந்த வில்லினால் இந்திரனை வென்று எட்டுத் திக்குகளிலும் போர் வெற்றிகொண்டான்.

விளக்கம் : சந்திரனை வென்றவன் திலீபன் என்னும் ஓர் சூரிய குலத்து மன்னன். உருத்திரனைச் சாய்த்தான் பகீரதன் என்னும் இரகு குலத்து முன்னோன். துந்து என்னும் அசுரனைக் கொன்றவன் துந்துமாரன் என்னும் ஓர் சூரியகுலத்து அரசன். இரகு என்பான் சூரிய குலத்தில் தோன்றிய பெரும் புகழ் படைத்த பேரரசன், இராம காதையின் தலைவனாகிய இராமபிரானை இராகவன் என்று உலகம் எக்களிப்போடு அழைக்கத் தன் பெயரை ஈந்த வள்ளல். இரகு குலத்தில் தோன்றியவன் இராகவன் என்பது பொருள்.

(பால. குலமுறைகிளத்து படலம். இரகு மன்னனின் சிறப்பு)

6 அனுமன் மொழி

6. அனுமன் மொழி

இராம காதையில் இணையற்ற பாத்திரமாகிய அனுமன் சிவனைப்பற்றிப் பதினைந்து இடங்களில் இயம்புவான்.

'வெஞ்சினக் காலன்தன் காலமும் காலால் அறுக்கும் புங்கவன்' எனக் காலனைக் காலால் செற்ற வரலாற்றை அனுமன் கூறுவது நயம் வாய்ந்தது. 'செந் தறுகண் வெள் எயிற்றுக் கரிய கோலம் சிதைந்து உருள உதைத்து அருளும் செய்ய தாளா!' எனச் சேக்கிழார் அடிகள் கூறுவர். 'வீட எடுத்தது காலனை' என்பர் அப்பர் சுவாமிகள்.

'கணிச்சியான் மகனே?' என முருகவேளைப் பாராட்டுவான், அனுமன் ஓரிடத்து. 'விடம்துடிக்கின்ற கண்டத்து அண்ணல்' என அனுமன் வாயிலாக ஆளுவது மிகப் பேரழகு உடைத்து.

"சோகத்தாள் ஆய நங்கை
கற்பினால், தொழுதற்கு ஒத்த
மாகத்தார் தேவி மாரும்
வான்சிறப்பு உற்றார்; மற்றைப்
பாகத்தாள் இப்போது ஈசன்
மகுடத்தாள்; பதுமத் தாளும்
ஆகத்தாள் அல்லள்; மாயன்
ஆயிரம் மௌலி மேலாள்"

எனச் சீதையின் கற்புக் காரணமாகப் பெண்குலத்தையே இதற்கு மேல் சிறப்பித்துச் சொல்ல முடியாது என்ற அளவிற்கு அனுமன் உயர்த்திக்காட்டும் போது, இனி உமையவள் ஈசன் தலையில் இருக்கவேண்டியவள் என்பது எண்ணிஎண்ணி இன்புறத் தக்கது.

"மூலமும், நடுவும், ஈறும்
இல்லதுஓர் மும்மைத்து ஆய
காலமும் கணக்கும் நீத்த
காரணன் கைவில் ஏந்தி,
சூலமும், திகிரி, சங்கும்,
கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும், மலரும், வெள்ளிப்
பொருப்பும்விட்டு அயோத்தி வந்தான்.

என்ற அனுமன் கூற்று, முப்பெரும் கடவுளும் ஓர்உரு எடுத்து வந்தவன் இராமன் என வலியுறுத்திக் கூறும். எனினும், அம்மும்மூர்த்திகட்கும் மேம்பட்டவன் இராமன் என்று அனுமன் கூறுவதையும் காண்கின்றோம். இராவணன்,

"நேமியோ? குலிசியோ? நெடுங் கணிச்சியோ?" என்று கேட்டபோது,

"சொல்லிய அனைவரும் அல்லன்; நீசொன்னஅ,
புல்லிய வலியினோர் ஏவல் பூண்டிலேன்"

என்று அனுமன் கூறுவான். இது இராகவன்பால் அனுமன் கொண்ட அளவற்ற காதலையும், எதிரியை மடக்கும் அனுமனின் திறனையும் காட்டுகின்றது.

பல் இறுத்தவன்

271 நல்உறுப்பு அமையும்நம்-
-பியரில்முன் னவன்நயந்து,
எல்உறுப்பு அரியபேர்
எழுசுடர்க் கடவுள்தன்
பல்இறுத் தவன்வலிக்கு
அமை,தியம் பகம்எனும்
வில்இறுத்து அருளினன்
மிதிலைபுக்க அனையநாள். 1

பொழிப்பு: நல்லஅங்கங்கள் அமையப்பெற்ற இந்நம்பியர் இருவருள் முன் பிறந்தவனை இராமன் மிதிலை நகரத்தை அடைந்த அந்த நாளில், இருளின் சுவடும் இல்லையாக்கத் தக்க பெரிய விளங்குகின்ற ஒளிக்கடவுளாகிய சூரியனின் பல்லை உடைத்தவனாகிய சிவபெருமானது வலிமைக்கு ஏற்ற, தியம்பகம் என்னும் வில்லை விரும்பி ஒடித்தருளினன்.

விளக்கம்: நல்உறுப்பு: நல்லஅவயவம். நம்பியர்: இராமஇலக்குவர் நயந்து: விரும்பி. எல்: இருள். உறுப்பு: சுவடு. தியம்பகம்: இராமன் ஒடித்த வில்லின் பெயர். 'திரியம்பகம்' 'தியம்பகம்' எனத் திரிந்து நின்றது. திரியம்பகம் முக்கண் பெற்ற சிவனுக்கு உரியது என்னும் பொருள்பெற்றது. தக்கன் வேள்வியில் சிவன், சூரியன் பல்லை உடைத்தான் என்பது புராணம். 'அந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல் தகர்த்து' என்பது திருவாசகம்.

(கிட்கி. நட்புக்கோட்படலம். அனுமன் சுக்கிரீவனுக்கு இராமன் வில்லிறுத்ததை இயம்பல்)

பரமர் ஆம் அரன்

272 கரன்முதல் கருணைஅற-
-றவர்,கடற் படையொடும்
சிரம்உகச் சிலைகுனித்து
உதவுவான்; திசைஉளார்

பரமுகப் பகைதுமித்து
அருளுவான்; பரமர்ஆம்
அரன்முதல் தலைவருக்கு
அதிசயத் திறலினன். 2

பொழிப்பு: கரன் முதலிய அருள் அற்ற அரக்கர்களைக் கடல் போன்ற சேனையோடு தலைகள் சிந்துமாறு வில்லை வளைத்து (அறத்திற்கு) துணைசெய்வான்; திக்குகளில் உள்ளவர்களுடைய பொருட்படுத்தாத பகைவர்களை அழித்து, அருள்செய்வான்; மேலான இறைவர்களாகிய சிவன் முதலிய தலைவர்களும் வியக்கத்தக்க ஆற்றலுடையான். (இராமன்)

விளக்கம்: உக: விழ. 'பரமுகம்'; பராமுகம் என்பதன் சிதைவு. துமித்து: அழித்து.

(கிட்கி. நட்புக்கோட்படலம். அனுமன் இராமனின் பேராற்றலைச் சுக்கிரீவனுக்குச் சொல்லுதல்)

சூலிதன் அருள் துறையில் முற்றினன்

273 நாலு வேதம்ஆம்
நவைஇல் சாலியின்
வேலி அன்னவன்;
மலையின் மேல்உளான்,
சூலி தன்அருள்
துறையின் முற்றினன்;
வாலி என்றுஉளான்
வரம்புஇல் ஆற்றலான். 3

பொழிப்பு: நான்கு மறைகளாகிய பழுது இல்லாத நெல் பயிருக்கு வேலியாக அமைந்தவன்; கயிலாயத்தில் வீற்றிருப்பவனை சூலம் தாங்கிய சிவபெருமானின் திருவருள் வழியிலே முதிர்ச்சியடைந்தவன்; வாலி என்ற பெயரை உடையவன்; எல்லை அற்ற வல்லமை வாய்ந்தவன்.

விளக்கம்: நவை: குற்றம். சாலி: நெற்பயிர். மலை: கயிலைமலை. மறைகள் என்ற பயிருக்கு வேலி போன்றவன்; சிவன் அருள் திறத்து முதிர்ந்தவன்; எல்லை அற்ற ஆற்றலான் வாலி என்க. வாலி சிவபூசைச் செல்வன் என்பதை,

'கோலமா மலரொடு தூபமும் சாந்தமும் கொண்டுபோற்றி,
வாலியார் வழிபடப் பொருந்தினர்'

என்றும்,

'நீலமா மணிநிறத்து அரக்கனை இருபது கரத்தொடுஒல்க,
வாலினல் கட்டிய வாலியார் வழிபட மன்னுகோயில்'

எனவும் திருஞான சம்பந்தர் கூறுவர்.

'அணங்கார் பாகனை ஆசை தோறும் உற்று,
உணங்கா ஒள்மலர் கொண்டுஉள் அன்பொடும்,
இணங்காக் காலம் இரண்டொடு ஒன்றினும்,
வணங்காது இத்துணை வைக வல்லையோ?'

என, வாலி மாண்டபோது தாரை புலம்புதலும்

'பஞ்சின்மெல் அடியாள் பங்கன் பதயுகம் அலாதுயாதும்
அஞ்சலித்து அறியாச் செங்கை ஆணையாய்'

என அங்கதன் அரற்றுதலும் வாலியின் சிவபூசைச் சிறப்பைப்புலப்படுத்தும்.

(கிட்கி. நட்புக்கோட்படலம். வாலியின் பெருமையை இராமனுக்கு அனுமன் உரைத்தல்)

காலன் காலமும் அறுக்கும் புங்கவன்

274 செறுக்கும் வன்திறல் திரிபுரம்
தீஎழச் சினவி,
கறுக்கும் வெஞ்சினக் காலன்தன்
காலமும் காலால்
அறுக்கும் புங்கவன் ஆண்டபேர்
ஆடகத் தனிவில்
இறுக்கும் தன்மை,அம் மாயவற்கு
அன்றியும் எளிதோ? 4

பொழிப்பு: (யாவரையும்) துன்புறுத்தும் வலிமிக்க முப்புரத்தைத் தீப்பட்டு எரியுமாறு கோபித்து, கொடுமைகொண்ட கடுங்கோபக் காலனின் வாழ்நாளையும் காலால் உதைத்து அழித்த, சிறந்த சிவபெருமான் கைக்கொண்ட பெரிய பொன்மயமான ஒப்பற்ற வில்லை ஒடிக்கும் ஆற்றல் அத்திருமாலுக்கே அன்றி ஏனையோர்க்கு எளிமை உடையது ஆகுமா?

விளக்கம்: சினவி: கோபித்து. 'கறுக்கும் வெஞ்சினக் காலன்' என்ற சொற்றொடர் நமனின் சினப்பெருக்கத்தைக் காட்டுகின்றது. ஆடகம்: பொன்.

(கிட்கி. நட்புக்கோட் படலம். அனுமன் சுக்கிரீவனிடம் இராமன் பெருமையை இயம்பல்)

மூவர் தம்முளும் இருவர்

275 தேவர் என்பவர் யாரும்,இத்
திருநகர்க்கு இறைவற்கு,
ஏவல் செய்பவர்; செய்கிலா-
-தவர்எவர் என்னின்,

மூவர் தம்முளும் இருவர்,என்-
-ருல்,இனி முயலின்
தாஇல் மாதவம் அல்லது
பிறிதுஒன்று தகுமோ? 5

பொழிப்பு: அமரர் என்று சொல்லப்படுகின்ற அனைவரும் இந்த இலங்கைத் திருநகரத்தின் தலைவனுகிய இராவணனுக்குப் பணிசெய்பவரேயாவர்; அப்படிப் பணிசெய்யாதவர் யாரென்று கேட்டால், மும்மூர்த்திகளுள் சிவன், திருமால் என்ற இருவரேயாவர்; அவ்வாருனுல், இனி முயன்று பெறும் குற்றமற்ற சிறந்த தவத்தைத் தவிர வேறென்று தகுதியுடையது ஆகுமா?

விளக்கம்: சிவன் திருமால் தவிர எல்லாத் தேவரையும் இராவணன் ஏவல்கொண்டது அவன் முயன்று பெற்ற தவத்தின் சிறப்பால். தவத்தை விடச் சிறந்தது வேறு இல்லை என்க.

(சுந்தர. ஊர்தேடு படலம். இராவணன் பெருமையை
அனுமன் சிந்தித்தல்)

கணிச்சியான் மகனே?

276 வளையும் வாளெயிற்று அரக்கனே?
கணிச்சியான் மகனே?
அளையில் வாள்அரி அனையவன்
யாவனே? அறியேன்!

இளைய வீரனும், ஏந்தலும்,
இருவரும், பலநாள்
உளைய உள்ளபோர் இவனெடும்
உளதுஎன உணர்ந்தான். 6

பொழிப்பு : 'குகையில் வாழ்கின்ற சிம்மத்தை ஒத்தவனுகிய இவன், வளைந்த ஒளி உள்ள கோரப் பற்களைப் பெற்ற அரக்கனு? அன்றி, மழுப்படை தாங்கிய சிவபிரான் மைந்தனு? இவன் யாரோ? தெரியவில்லையே! இளைய வீரனுகிய இலக்குவனும், ஏந்தலாகிய இராமனும், இருவரும் சேர்ந்தும் பலநாள் இவனெடும் வருந்திச் செய்ய வேண்டிய போர் இருக்கின்றது' என்று உணர்ந்தான் (அனுமன்)

விளக்கம் : அளை: குகை. அரி: சிம்மம். உளைய: வருந்த. இந்திர சித்தனின் தோற்றத்தைக் கண்டு 'இவனைவெல்ல இலக்குவன் போர் செய்தல் வேண்டும்; அவனுல் ஆகாது; இராமன் போர் செய்தல் வேண்டும்; அவனுலும் தனித்து வெல்லுதல் ஆகாது; பின்னர் இருவரும் சேர்ந்து போரிட வேண்டும்: அதுவும் ஒருநாளில் முடியாது; பல நாள் வேண்டும்; அது கடுமையான போராகவும் அமையும்' என்று முடிவுகட்டுகின்முன் அனுமன் என்க.

(சுந்தர. ஊர் தேடுபடலம். இந்திரசித்தன் ஆற்றலை அனுமன் வியத்தல்)

சிவனை-திருநெடுமாலாம் அவனை

277 'இவனை இன்துணை உடையபேர்
இராவணன் என்னே,
புவனம் மூன்றையும் வென்றதுஓர்
பொருள்எனப் புகறல்?
சிவனை, நான்முகத்து ஒருவனை,
திருநெடு மாலாம்
அவனை, அல்லது நிகர்பிறர்
என்பதும் அறிவோ? 7

பொழிப்பு : இந்த இந்திரசித்தனை இனிய துணையாகக் கொண்ட பெருமையுள்ள இராவணன், மூன்று உலகங்களையும் வென்றமையை ஓர் பொருட்டாகப் பாராட்டிச் சொல்லுதலில் என்ன சிறப்பு இருக்கிறது? சிவபெருமானை, பிரமதேவனை, திருநெடுமாலைத் தவிர, பிற எவரையும் இவனுக்கு நிகராகக் கூறுவது அறிவுடைமையாகுமா?

விளக்கம் : புகறல் என்னே? என இயைக்க.

(சுந்தர. ஊர்தேடு படலம். இராவணன் வெற்றிக்கு இந்திரசித்தனே காரணம் என அனுமன் எண்ணுதல்)

நல்மத்தம் நாகம் தலைசூடிய நம்பன்

278 கன்மத்தை, ஞாலத் தவர்யார்உள -
- ரேக டப்பார்?
பொன்மொய்த்த தோளான், மயல்கொண்டு,
புலன்கள் வேறாய்,
நல்மத்தம் நாகம் தலைசூடிய
நம்ப னேபோல்,
உன்மத்தன் ஆனான், தனைஒன்றும்
உணர்ந்தி லாதான். 8

பொழிப்பு: உலகத்தவர், வினைப் பயனைக் கடக்க வல்லார்யாரே உள்ளார்? வீர இலக்குமி பரவிய தோளை உடையானாகிய இராமன் மயக்கம் அடைந்து, ஐம்புல நுகர்ச்சியில் மாறுபட்டு, தன்னைச் சிறிதும் உணராமல் நல்ல ஊமத்தம் பூவையும், பாம்பையும் தலையில் அணிந்த சிவபெருமானைப் போலப் பித்தனாக ஆகிவிட்டான்.

விளக்கம்: கன்மம்: வினைப்பயன். பொன்: வீரஇலக்குமி. மயல்: மயக்கம். புலன்கள் வேறாய்: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐம்புல நுகர்ச்சியில் வெறுப்படைந்து. நம்பன்: சிவபெருமான். உன்மத்தன்: பித்தம் பிடித்தவன். சீதையைப் பிரிந்தமையால், இராமன் கடவுள் பிறப்பாகிய தன்சிறப்பை உணராமல் மயங்கி, புலன்களில் மாறுபட்டு, பித்தன் ஆனான் என்க.

"தேவியைப் பிரிந்தபோதே திகைத்தனை போலும் செய்கை" என்பது ஈண்டு நினைவுகூரத் தக்கது.

(சுந்தர. உருக்காட்டுபடலம். அனுமன் சீதையிடம் இராமனைப்பற்றிக் கூறல்)

ஈசன் கயிலை அம்கிரி

279 தேவரும் பிறரும் அல்லன்;
திசைக்களிறு அல்லன்; திக்கின்
காவலர் அல்லன்; ஈசன்
கயிலைஅம் கிரியும் அல்லன்;

மூவரும் அல்லன்; மற்றை
முனிவரும் அல்லன்; எல்லைப்
பூவல யத்தை ஆண்ட
புரவலன் புதல்வன் போலாம். 9

பொழிப்பு: (என்னைத் தூது அனுப்பிய அந்த வில்வீரன் யார் என்றால்) அமரரும் அல்லாதாரும் அல்லன்; திக்கு யானைகள் அல்லன்; திக்குப் பாலகர் அல்லன்; சிவனுடைய கைலை மலையும் அல்லன்; மும்மூர்த்திகளும் அல்லன்; ஏனைய இருடிகளும் அல்லன்; பூ உலகை எல்லையாகக் கொண்டு ஆண்ட மன்னன் (தயரதன்) மகன் ஆவான்.

விளக்கம்: திசைக் களிறும், ஈசன் கயிலை அம் கிரியும் இராவணன் ஆற்றலுக்கு அடையாளமாக நின்றமையின் அவையும் அல்லன் என்று கூறப் பெற்றது.

(சுந்தர. பிணிவீட்டு படலம். இராமன் பெருமையை இராவணனுக்கு அனுமன் உரைத்தல்)

காலமும் கணக்கும் நீத்த காரணன்

280 மூலமும் நடுவும் ஈறும்
இல்லதுஓர் மும்மைத்து ஆய
காலமும், கணக்கும், நீத்த
காரணன், கைவில் ஏந்தி
சூலமும், திகிரி, சங்கும்
கரகமும், துறந்து, தொல்லை,
ஆலமும், மலரும், வெள்ளிப் -
பொருப்பும்விட்டு அயோத்தி வந்தான் 10

பொழிப்பு: முதலும், இடையும், கடையும் இல்லாததான, ஒரு மூன்று எனச் சொல்லப்படும் காலத்தையும், கணக்கையும் கடந்து நின்ற, எல்லாவற்றிற்கும் காரணனான அந்த முழுமுதல் கடவுள், முத்தலைப் படையையும், சக்கரம் சங்குகளையும், கமண்டலத்தையும் நீக்கிவிட்டு (அப்பொருள்கள் இருந்த) கையில் வில்லைத் தாங்கி, பழைமையான உரிய இடங்களாக அமைந்த, ஆல் இலையையும், தாமரைப் பூவையும், வெள்ளி மலையையும் விட்டுவிட்டு அயோத்தி நகரை இடமாகக் கொண்டு வந்து பிறந்தான்.

விளக்கம் : மும்மைத்தாய காலம்: சென்ற காலம், நிகழ்காலம், வரும் காலம். சூலம் சிவனுக்கும், திகிரி, சங்கு திருமாலுக்கும், கரகம் பிரமனுக்கும் உரியபொருள்கள். அவற்றை விட்டுவிட்டு வில்லைத் தூக்கிக் கொண்டான்; ஆல் இலை திருமாலுக்கும், மலர் பிரமனுக்கும், வெள்ளிப் பொருப்பு சிவனுக்கும் உரிய இடங்கள். அவற்றை விட்டான்; அயோத்திவந்தான்; எனவே இராமன் மும்மூர்த்திகளும் ஒருங்கே வந்து தோன்றிய ஒருவன் எனக்கொள்க.

(சுந்தர. பிணிவீட்டு படலம். இராமன் கடவுள் தன்மையை அனுமன் இராவணனுக்குச் சொல்லுதல்)

புரம் தீப்புகப் பொங்கியோன்

281 புரம்பி ழைப்புஅரும்
தீப்புகப் பொங்கியோன்,
நரம்புஇ ழைத்தநின்
பாடலின் நல்கிய
வரம்பி ழைக்கும்;
மறைபிழை யாதவன்
சரம்பி ழைக்கும்என் று
எண்ணுதல் சாலுமோ? 11

பொழிப்பு : முப்புரத்தை எவரும் தப்ப முடியாதபடி தீப்பற்றி எரியுமாறு சினந்தெழுந்த சிவபெருமான், நரம்புகளைக் கொண்டு இசைத்த உன்பாடலுக்கு இரங்கி, தந்தருளிய வரம் பிழைபடும்; மறைவழியில் தவருதவனுன இராமன் விடும் அம்புகள் தவறும், என நீ எண்ணுதல் பொருந்துமா?

விளக்கம் : இராவணன் மறை பிழைத்தவன் ஆதலின் அவன்பெற்ற வரம் பிழைக்கும் என்றும், மறைபிழையாத இராமனின் சரம் பிழைக்காது என்றும் கொள்க. கைலையின் கீழ் அகப்பட்டு திணறிய இராவணன், தன் தலையில் ஒன்றைக்கிள்ளி, அதனை வீணையாகவும், தன் நரம்புகளில் சிலவற்றைப் பிடுங்கி, தந்தியாகவும் கொண்டு, இசை பாடி, சிவபெருமானை மகிழ்வித்து, சிவபெருமானிடம் வரம் பல பெற்றுன் என்பது வரலாறு.

(சுந்தர. பிணிவீட்டு படலம். இராமன் அம்பு தப்பாது என இராவணனுக்கு அனுமன் இடித்துக் கூறுதல்)

பாகத்தாள் ஈசன் மகுடத்தாள்

282 சோகத்தாள் ஆய நங்கை
கற்பினுல், தொழுதற்கு ஒத்த
மாகத்தார் தேவி மாரும்,
வான்சிறப்பு உற்ருர்; மற்றைப்
பாகத்தாள், இப்போது ஈசன்
மகுடத்தாள்; பதுமத் தாளும்
ஆகத்தாள் அல்லள், மாயன்
ஆயிரம் மௌலி மேலாள். 12

பொழிப்பு: துன்பமே வடிவெடுத்து, சிறை இருந்த செல்வியாகிய சீதையின் கற்புக் காரணமாக, (இயல்பாகவே) தொழத்தகும் சிறப்புப் பெற்ற வான்நாட்டில் வாழ்வாராகிய இந்திரன், பிரமன் உள்ளிட்ட அமரர்களின் மனைவிமார்களும் (மேலும்) பெரிய சிறப்பை அடைந்தனர்; ஈசனின் ஒரு புறத்திலே உள்ள உமையவள், இப்போது (ஈசன் பாகத்தாள் அல்லள்) அவன் மகுடத்தாள் ஆவாள்; பதுமத்தாளாய திருமகளும் (இனி) மாயன் மார்பினுள் அல்லள்; அவன் ஆயிரம் முடியின் மேல் ஏறி இருக்கும் தகையினுள்.

விளக்கம்: சோகம்: துக்கம். நங்கை: சீதை. மாகம்: வான். ஈசன்: சிவன். மகுடம்: முடி. பதுமம்: தாமரை. ஆகம்: மார்பு. மாயன்: திருமால். மௌலி: முடி. சீதையின் கற்புப் பெண் குலத்தையே உயர்த்திவிட்டது; ஈசன் உமையை இனித் தலையில் தூக்கிவைத்துக் கொண்டுதான் ஆடுதல் வேண்டும்; திருமாலும் அப்படித்தான். இன்னும் திருமால் திருவை ஆயிரம் முடிக்கும் மேலே ஏற்றிக்கொள்ளல்வேண்டும் எனக்கொள்க.

(சுந்தர. திருவடி தொழுத படலம். சீதையின் கற்புத்திறத்தை அனுமன் இராமனிடம் மொழிதல்)

பண்டை ஈசனர் படையோ?

283 பாசமோ? மலரின் மேலான்
பெரும்படைக் கலமோ? பண்டை
ஈசனர் படையோ? மாயோன்
நேமியோ? யாதோ, இன்னம்

விசநீர் விரும்பு கின்றீர்?
அதற்குநாம் வெருவி, சாலக்
கூசினேம்; போதும், போதும்;
கூற்றினர் குறுக வந்தார். 13

பொழிப்பு: நாகபாசமோ? தாமரை மேல் வாழும் பிரமதேவனின் பெரிய படைக்கலமோ? பழைமையான சிவபெருமான் வாளியோ? திருமாலின் சக்கரமோ? வேறு யாதோ? (எங்கள் மீது) நீர் எறிய நினைக்கின்றீர்; அந்தப் படைக்கு நாங்கள் அஞ்சிப் பெரிதும் பின் வாங்கினேம்; உங்கள் ஆற்றல் அமையும், அமையும்; (உங்களுக்கு) எமனர் நெருங்கி வந்து விட்டார்.

விளக்கம்: இவ்வாறு இந்திரசித்தனிடம் அனுமன் எள்ளிக் கூறினன் என்க. எல்லாவற்றையும் நிறுத்துங்கள்; உங்களுக்கு எமன் வந்துவிட்டான் என்பது கருத்து. கூற்றினர் என்று இலக்குவனையே குறிக்கப் பெற்றது என்றும் கொள்ளலாம்.

(யுத்த. நிகும்பலை யாகப் படலம். இந்திரசித்தனிடம் அனுமன் நகையாடிப் பேசுதல்)

விடம் துடிக்கின்ற கண்டத்து அண்ணல்

284 விடம்துடிக் கின்ற கண்டத்து
அண்ணலும், விரிஞ்சன் தானும்,
படம்துடிக் கின்ற நாகப்
பாற்கடல் பள்ளி யானும்,
சடம்துடிக் கிலராய் வந்து
தாங்கினும், சாதல் திண்ணம்;
இடம்துடிக் கின்றது உண்டே?
இருத்திரோ? இயம்பு வீரே? 14

பொழிப்பு : நஞ்சு பொங்குகின்ற கழுத்தை உடைய அண்ணலாம் சிவபெருமானும், பிரமனும், படம் விரித்து ஆடுகின்ற பாம்புப் படுக்கையில் பாற்கடலில் பள்ளிகொண்ட திருமாலும், உடல் நடுங்காதவராகி வந்து, (உங்களை) தாங்கினாலும் நீங்கள் அழிவது உறுதி; (உங்களுக்கு) இடப் பக்கம் துடிக்கின்றதல்லவா? இன்னும் உயிருடன் இருக்கப்போகின்றீர்களா? சொல்லுங்கள்.

விளக்கம் : சடம் : உடம்பு. இடம் துடித்தல் : வரப் போகும் தீமைக்கு அறிகுறி. மும்மூர்த்திகளும் இலக்குவனுக்கு முன்னே வந்து, உடல் நடுக்கம் இல்லாதவராய்க் காத்தாலும் சாவது நிச்சயம் என்க.

(யுத்த. நிகும்பலை யாகப் படலம். இலக்குவன் பிடியினின்றும் காக்க மும்மூர்த்திகளும் ஆற்றார் என்று அனுமன் அறைதல்)

நாரி ஓர் பாகத்து அண்ணல்

285 நான்முகன், விடையை ஊரும்
நாரிஓர் பாகத்து அண்ணல்,
மான்முகன் முதலாய் உள்ள
வானவர் தொழுது போற்ற,
ஊன்முகம் கெழுவு வேலாய்!
உம்பர்நா யகியைச் சீறி,
தேன்முகம் மலரும் தாரான்,
அரிசொல, சீற்றம் தீர்ந்தான். 15

பொழிப்பு : பிரமதேவனும், காளை ஏறும் மாதொர் பாகத்து அண்ணலாகிய சிவபெருமானும், மான்முகத்தை உடைய மயன் முதலாய தேவர்களும் வணங்கித் துதிக்க, தசையை நுனியிலே கொண்ட வேலாயுதத்தை உடைய பரதனே! மேலான தலைவியாகிய சீதையைக் கோபித்து, தேனைத் தன்னிடத்துக் கொண்ட மலர்கின்ற பூமாலை அணிந்த இராம பிரானானவன், தீக்கடவுள் சான்றுபகர, சினம் நீங்கினான்.

விளக்கம் : அரி: அக்கினிக்கடவுள். மாற்றான் சிறையில் இருந்த சீதையை இராமன் சீற, அவள் தீக்குளித்து எழுந்ததால், தீக்கடவுள் அவள் திறத்துக்குச்சான்று சொல்ல, அதனால் இராமன் சீற்றம் தீர்ந்தான் என்பது கருத்து.

(யுத்த. மீட்சிப்படலம். இராமன் சீதையைச் சீறியதை அனுமன் பரதனுக்கு உரைத்தல்)

7 இந்திரசித்தன் மொழி

7. இந்திரசித்தன் மொழி.

'முக்கணன் முதலினோரை உலகொரு மூன்றினோடும் புக்கபோர் எல்லாம் வென்று நின்ற என் புதல்வன்' என, பெற்ற தாயாகிய மண்டோதரியால் பாராட்டப்பெற்ற இந்திரசித்தன், முக்கணனாகிய சிவனைப் பற்றிப் பதின்மூன்று இடங்களில் பேசுவான்.

"ஈசன்"

"சங்கரன்"

"முக்கணன்"

"சிவன்"

"அரன்"

"பிறை சென்னி வைத்தான்"

"விடையின் பாகன்"

"செம்மை காட்டும் ஆலம்கொண்டு
இருண்ட கண்டத்து அமரர்கோன்"

என்பன சிவனைப்பற்றி இந்திரசித்தன் கூறும் சொற்றொடர்கள்.

இந்திரசித்தன், அவன் சிறிய தந்தையாகிய விடணனோடு உரையாடும் போது,

'கந்தனார் தந்தையாரைக் கயிலையோடு ஒருகைக்கொண்ட
எந்தையார்'...

எனப்பேசும் பெருமிதமான பேச்சு, இந்திரசித்தன் சிவபெருமான் பெருமையையும், கந்தக்கடவுளின் வலிமையையும் எவ்வளவு மதிக்கின்றான் என்பதைக் காட்டும்.

சங்கரன், அயன், மால்.

286 கிங்கரர், சம்பு மாலி,
கேடிலா ஐவர், என்றுஇப்
பைங்கழல் அரக்க ரோடும்
உடன்சென்ற பகுதிச் சேனே,
இங்குஒரு பேரும் மீண்டார்
இல்லேயேல், குரங்குஅது, எந்தாய்!
சங்கரன், அயன்,மால் என்பார்
தாம்எனும் தகையது ஆமே. 1

பொழிப்பு: என் தந்தையே! கிங்கரர் என்னும் போர்வீரர்களும், சம்புமாலியும், அழிவில்லாத ஐவர் என்ற இந்தப் பசுமையான வீரக்கழலணிந்த அரக்கர்களுடன், சேர்ந்து சென்ற பகுதியையுடைய, சேனேயில், ஒருவர்கூடத் திரும்பிவரவில்லே என்ருல், அந்தக் குரங்கானது அரன், அயன், அரி என்ற மும்மூர்த்திகள்தாம் என்று சொல்லக்கூடிய தகுதியையுடையது அல்லவா?

விளக்கம்: இத்துணைப் பெரிய வீரர்களேயும் தன்னந் தனியனுக நின்று அனுமன் அழித்தமையால், அனுமன் மும்மூர்த்திகளனைய ஆற்றல் வாய்ந்தவன் என இந்திரசித்தன் எண்ணுகின்ருன்.

(சுந்தர. பாசப் படலம். இந்திரசித்தன் இராவணனிடம்
அனுமன் பெருமையை உரைத்தல்)

முக்கணன் கயிலே

287 திக்கய வலியும், மேல்நாள்
திரிபுரம் தீயச் செற்ற
முக்கணன் கயிலே யோடும்,
உலகுஒரு மூன்றும் வென்ருய்!
அக்கனேக் கொன்று, நின்ற
குரங்கினே ஆற்றல் காண்டி;
புக்குஇனி வென்றும் என்ருல்,
புலம்புஅன்றி புலமைத்து ஆமோ? 2

பொழிப்பு: திக்குயானைகளின் ஆற்றலையும், அந்தநாளில் முப்புரம் வேவ அழித்த முக்கண்ணனாகிய சிவபிரான் கயிலையுடன், மூன்று உலகங்களையும் வெற்றிகொண்டாய்! அத்தகைய நீ, (அரியமகன்) அக்கனைக் கொன்றுவிட்டுத் தான் உயிரோடு நின்ற குரங்கு, தன் ஆற்றலைக்காட்டப் பார்த்துக்கொண்டிருக்கிறாய்! (இவ்வளவுக்கு விட்டுவிட்டு) இனிப்போய் அந்தக் குரங்கை நாம் வெல்லுவோம் என்று சொன்னால், அது அழுகையைத் தவிர அறிவுடைமை ஆகுமா?

விளக்கம்: திக்கு + கயம், திக்கயம் என மருவியது. தீய: எரிய. அக்கனைக் கொன்றுவிட்டுஅந்தக்குரங்கு இன்னும் உயிர்சுமந்து ஆரவாரம் செய்கின்றது. இவ்வளவையும் தாண்டி இனி வெல்வோம் என்பது அறிவுடைமையன்று என்க.

(சுந்தர. பாசப்படலம். இந்திரசித்தன் இராவணனிடம் வருந்திப் பேசுதல்)

சிவன் இவன்

288 புவனம்எத் தனைஅவை
அனைத்தும் போர்கடந்த
அவனைஉற்று, 'அரிஉரு-
-வான ஆண்தகை
சிவன்எனச் செங்கணான்
எனச்செய் சேவகன்
இவன்எனக் கூறிநின்று,
இருகை கூப்பினான். 3

பொழிப்பு: எத்தனை உலகங்கள் உண்டோ அத்தனை உலகங்களையும் போரில் வென்றவனாகிய இராவணனைப் பார்த்து, "குரங்கு வடிவு எடுத்த இந்த ஆண்தன்மையுடைய இவன் சிவபிரான் என்றும், திருமால் என்றும் சொல்லத்தக்கவாறு போர் செய்யவல்ல வீரனாவான்" என்று மொழிந்து நின்று இரண்டு கைகளையும் தூக்கி வணங்கினான் இந்திரசித்தன்.

விளக்கம்: புவனம்: உலகு. அரி: குரங்கு. சேவகன்: வீரன்

(சுந்தர. பிணிவீட்டு படலம். சிவனும் மாலுமே என்னத்தக்கான் அனுமன் என இந்திரசித்தன் இயம்பல்)

ஈசன் அருள் செய்தன

289 ஈசன்அருள் செய்தனவும்,
ஏடுஅவிழ் மலர்ப்பேர்
ஆசனம் உவந்தவன்
அளித்தனவும் ஆய
பாசம்முதல் வெம்படை
சுமந்துபலர் நின்றார்;
ஏசஉழல் வேன்ஒருவன்
யானும்உளென் அன்றே? 4

பொழிப்பு : சிவபெருமான் கருணைகூர்ந்து ஈந்தனவும், இதழ் விரிகின்ற தாமரையைப் பெரிய இருக்கையாகக்கொண்டு வாழ்பவனாகிய பிரமன் கொடுத்தவையுமான பாசம் முதலிய கொடிய படைகளைத் தாங்கிப் பலர் நிற்கின்றார்கள். (பிறர்) இகழுமாறு திரிபவனாகிய யானும் ஒருவன் இருக்கின்றேன் அல்லவா?

விளக்கம் : ஏடு : இதழ். உவந்தவன் : விரும்பி வாழ்பவன். பாசம் : நாகபாசம். இலங்கையைப் பெரிதும் அழித்த குரங்கை உயிர்சுமந்து திரும்ப விட்டமையால், "ஏச உழல்வேன்" எனத் தன்னை இழித்துக் கூறினன் என்க.

(யுத்த. இராவணன் மந்திரப் படலம். இராவணனிடம் இந்திரசித்தன் தன்னை நொந்து கூறுதல்)

தேம்பல் பிறை சென்னிவைத்தான்

290 பாம்பின்தரு வெம்படை, பாசு-
-பதத்தி னோடும்,
தேம்பல்பிறை சென்னிவைத் தான்தரு
தெய்வ ஏதி,
ஓம்பித்திரிந் தேன்;எனக்கு இன்றுஉத
வாது போமேல்
சோம்பித்துறப் பன்உயிர்; சோறும்
உவந்து வாழேன். 5

பொழிப்பு : இளம் பிறையை முடியில் வைத்த சிவபெருமான் ஈந்த, நாகத்தின் உருவில் அமைந்த கொடிய படையையும், பாசுபதத்தோடு, கடவுள் தன்மை வாய்ந்த ஏனைய படைகளையும் பாதுகாத்துத்திரிந்து காலம் கழித்த எனக்கு, அப்படைகள் இன்று பயன்படாமல் போகுமானுல், சோம்பல் அடைந்து உயிரை விட்டுவிடுவேன் ; சோறும் விரும்பி உண்டு வாழமாட்டேன்.

விளக்கம் : ஏதி : படைகளின் பொதுப் பெயர். ஓம்பி : பாதுகாத்து நாகபாசப் படையும், பாசுபதப் படையும், பிற படைகளும் இந்திரசித் தனுக்கு ஈசன் ஈந்தனன் என்க.

(யுத்த. நாகபாசப் படலம். இந்திரசித்தன் வஞ்சினம் கூறல்)

அரன், பிரமன் என்பார்ப் பேசுக

291 'அந்நரன்; அல்லன் ஆகின்,
நாரணன் அனையன்; அன்றேல்,
பின்அரன்; பிரமன், என்பார்ப்
பேசுக; பிறந்து வாழும்
மன்னர்,நம் பதியின் வந்து,
வரிசிலை வடித்த கல்வி
இந்நரன் தன்னோடு ஒப்பார்
யார்உளர், ஒருவர்?' என்றான். 6

பொழிப்பு : '(இலக்குவன்) அந்த நரனேயாவன் ; அவன் அல்லன் என்றால் நாராயணனை நிகர்ப்பான் ; அவனும் அல்லாவிட்டால், பின்னர் அரன், பிரமன் என்பவர்களை ஒப்பாகச் சொல்க ; நம் நகரத்தில் வந்து, கட்டமைந்த வில் தொழிலை வடித்துக்காட்டிய கல்வி உடைய இம்மனிதனோடு ஒப்பவர் இவ்வுலகத்துப் பிறந்து வாழும் அரசர்களுள் யார் ஒருவர் இருக்கின்றார்?' என்று சொன்னான் (இந்திரசித்தன்)

விளக்கம் : அ : பண்டறிசுட்டு. அந்நரன் : நாராயணனோடு இரட்டைப் பிறவியில் தோன்றியவன். இந்நரன் : இந்த மனிதன். (இலக்குவன்)

(யுத்த. நாகபாசப் படலம். இலக்குவன் திறத்தை
இந்திரசித்தன் இயம்பல்)

விடையின் பாகன்

292 இந்திரன் விடையின் பாகன்,
எறுழ்வலிக் கலுழன் ஏறும்
சுந்தரன், அருக்கன், என்றுஇத்
தொடக்கத்தார் தொடர்ந்த போரில்
நொந்திலென்; இனையது ஒன்றும்
நுவன்றிலென்; மனிதன் நோன்மை,
மந்தரம் அனைய தோளாய்!
வரம்புஉடைத்து அன்று மன்னோ 7

பொழிப்பு: மந்தர மலையை ஒத்த தோளை உடைய (இராவணனே!) தேவேந்திரன், விடையைச் செலுத்துகின்ற சிவபெருமான், மிக்க வலி உடைய கருடனில் ஏறும் அழகனாகிய திருமால், ஆதவன் என்ற இக் கூட்டத்தார் ஆற்றிய போரில் எல்லாம் நான் வருந்தினேன் அல்லேன்; (தளர்ச்சியுற்று) இத்தகைய பேச்சு ஒன்றும் பேசினேன் அல்லேன்; இந்த மனிதனுடைய ஆற்றல் வரம்புக்கு உட்பட்டதாக இல்லை.

விளக்கம்: எறுழ்: மிகுதிப்பொருளது. கலுழன்: கருடன். சுந்தரன்: அழகன். அருக்கன்: சூரியன். நுவலுதல்: சொல்லுதல். நோன்மை: வலிமை. மந்தரம்: மந்தரமலை. வரம்பு: எல்லை. மன்,ஓ: அசை

(யுத்த. நாகபாசப் படலம். இராவணன் வினாவிற்கு இந்திரசித்தன் அளித்த விடை)

விடையவன் விலக்கினும் கலக்குவென்

293 இலக்கு வன்எனும் பெயர்உனக்கு
இயைவதே என்ன,
இலக்கு வன்கணைக்கு ஆக்குவென்;
"இதுபுகுந்து இடையே
விலக்கு வென்!"என விடையவன்
விலக்கினும், வீரம்
கலக்கு வென்;இது காணும்,உன்
தமையனும் கண்ணால். 8

பொழிப்பு : 'இலக்குவன்' என்ற பெயர் உனக்குப் பொருந்துவதே என்று காட்ட, என்னுடைய வலிய அம்புக்கு (உன்னை) இலக்காக ஆக்குவேன் ; (என்னுடைய)' இந்தச் செயலைத் தடுப்பேன்' என்று கூறி, விடைஊரும் சிவனே நடுவே நுழைந்து தடுத்தாலும், அந்தச் சிவன் வீரத்தையும் கலக்கி அழிப்பேன் ; இந்நிகழ்ச்சியை உன் அண்ணனாகிய இராமனும் கண்ணால் காண்பான்.

விளக்கம் : இலக்குவன் என்ற பெயரை எடுத்துக்கொண்டு இலக்கு வன்கணைக்கு ஆக்குவென் என்று கூறிய கருத்து மிக்க சிறப்புடைத்து.

(யுத்த. பிரமாத்திரப் படலம். இந்திரசித்தன் இலக்குவனைப் பார்த்து வஞ்சினம் கூறல்)

நெடுமால் சிவன் எனும் மேலவர்

294 வில்இங்குஇது நெடுமால்,சிவன்
எனும்மேலவர் தனுவே
கொல்என்றுகொண்டு அயிர்த்தான்;நெடுங்
கவசத்தையும் குலையாச்
செல்லும்கொடும் கணையாவையும்
சிதையாமையும் தெரிந்தான்;
வெல்லும்தரம் இல்லாமையும்
அறிந்தான்,அகம் மெலிந்தான். 9

பொழிப்பு : 'இப்போது இந்த இலக்குவன் பிடித்துள்ள வில் திருமால், சிவன் எனும் சிறந்த கடவுளர்களின் வில்லோ' என்று ஐயுற்றான் ; தான் அணிந்த நெடிய கவசத்தையும் அழித்துச் செல்லும் கொடிய அம்புகள் யாவும் அழியாமல் இருப்பதையும் ஆராய்ந்தான் ; தான் வெல்லுந் தன்மை இல்லாதிருப்பதையும் அறிந்துகொண்டவனாய் உள்ளம் தளர்ந்தான் (இந்திரசித்தன்)

விளக்கம் : இலக்குவன் பிடித்த வில், மால் சிவன் வில் என்றும், அவன்விடும் கணைகள் அழிக்கமுடியாத தன் கவசத்தையும் சிதைத்து அவை அழியாதிருப்பதையும் ஆய்ந்து, தன் தோல்வியை உணர்ந்து தளர்ந்தான் இந்திரசித்தன் என்க.

(யுத்த. நிகும்பலை யாகப் படலம். இந்திரசித்தனின் தோல்வி மனப்பான்மை)

சிவன் நன்படை தொடுத்து முடிப்பேன்

295 அவன்அன்னது கண்டான்;இவன்
ஆரோ?என அயிர்த்தான்;
'இவன்அன்னது முதலேஉடை
இறையோன்'என வியவா,
'எவன்,என்னினும் நன்றுஆகுக!
இனிஎண்ணலன்' என்று,
'சிவன்நன்படை தொடுத்து,ஆர்உயிர்
முடிப்பேன்'எனத் தெரிந்தான். 10

பொழிப்பு : அந்த இந்திரசித்தன் அதைக் கண்டான்; 'இவன் யாரோ?' என்று ஐயுற்றான்; 'இவன் அந்தச் சக்கரப் படையை உடைய முதல்வனான திருமாலே' என வியப்பு எய்தி, இவன் எவனாயினும், என் செயல் நன்றே முடிக! இனி அதைப்பற்றி ஆராய மாட்டேன்' என்று சொல்லி, 'சிவனது நல்ல படையாகிய பாசுபதத்தைத் தொடுத்து இவனது அரிய உயிரைக் குடிப்பேன்' என எண்ணினான்.

விளக்கம் : அயிர்த்தான் : ஐயுற்றான். இவன் : இந்த இலக்குவன். அன்னது : அந்தச் சக்கரப் படை.

(யுத்த. நிகும்பலை யாகப் படலம். இந்திரசித்தன் பாசு பதத்தை விடக் கருதல்)

தானே சிவன் தரப் பெற்றது

296 'தானேசிவன் தரப்பெற்றது,
தவம்நாள்பல உழந்தே;
தானே,"பிறர் அறியாதது
தந்தேன்"எனச் சமைந்தான்;
ஆனால்,இவன் உயிர்கோடலுக்கு
ஐயம்இலை' என்று,
எல்நாளும்இது ஆனால்,எதிர்
தடைஇல்லதை எடுத்தான். 11

பொழிப்பு: தான் பல நாள் வருந்திச் செய்த தவத்தின் பயனுல் சிவபெருமான் நேரில் வந்து, தானுகவே தரப்பெற்றது; அச்சிவனே 'ஏனையோர் அறியாததான இப்படையை உனக்குத் தந்தேன்' என்று அருள் செய்துகொடுத்தான்; 'அதனுல் இவன் உயிரை இப்படை கொள் வதில் ஐயம்இலே' எனச் சொல்லி, பொருந்திய நாள் இதுவானுல், எதிர்த்து நின்று தடுக்க முடியாததை (பாசுபதத்தை) எடுத்தான்.

விளக்கம்: விட்டான் என அடுத்த பாட்டில் முடிகின்றது. அப் பாடல் இந்நூலுக்குத் தொடர்பு இல்லையாதலால் இங்கு எடுத்துக்கொள் ளப்பெறவில்லே. உழந்து: வருந்தி. ஏல்நாள்: பொருந்தும் காலம்.

(யுத்த. நிகும்பலே யாகப் படலம். இந்திரசித்தன் பாசு பதத்தைத் தொடுக்க எடுத்தல்)

கந்தனுர் தந்தையார்

297 'முந்தைநாள், உலகம் தந்த
முத்தவா னோர்கட்கு எல்லாம்
தந்தையார் தந்தை யாரைச்
செருவிடைச் சாயத் தள்ளி,
கந்தனுர் தந்தை யாரைக்
கயிலேயோடு ஒருகைக் கொண்ட
எந்தையார், அரசு செய்வது
இப்பெரும் பலம்கொண் டேயோ?' 12

பொழிப்பு: முன்நாளில் உலகங்களே உண்டாக்கிய முதிய அமரர் கட்கெல்லாம் தந்தையாராகிய பிரம தேவனது தந்தையாராம் திருமாலேப் போரிலே வீழுமாறு வீழ்த்தி, கந்தனுர் தந்தையாராகிய சிவபெருமானைக் கயிலே மலேயோடு ஒருகையினுல் தூக்கிக்கொண்ட என் தந்தையாராகிய இராவணனுர் அரசு செலுத்துவது இந்தப் (மனிதர்களின்) பெரிய ஆற்ற லேக்கொண்டா?

விளக்கம்: உலகம் தந்த தந்தையார்: பிரமதேவன். அவரைப்பெற்ற தந்தையார்: திருமால். கந்தனுர்: முருகக் கடவுள். அவர் தந்தையார்: சிவ பெருமான். எந்தையார்: இராவணனுர். இப்பெரும் பலம்: இராம இலக்குவர் வலி. இராம இலக்குவர் வலிநிழலில் ஒதுங்கி நிற்கும்வீடணனேப் பார்த்து, இந்திரசித்தன் இவ்வாறு பெருமிதத்தோடு பேசுகின்ருன்.

(யுத்த. நிகும்பலே யாகப் படலம். இந்திரசித்தன் வீடணனே ஏளனமாகப் பேசுதல்)

ஆலம் கொண்டு இருண்ட கண்டத்து அமரர் கோன்

298 காலம்கொண்டு எழுந்த மேகக்
கருமையான், 'செம்மை காட்டும்
ஆலம்கொண்டு இருண்ட கண்டத்து
அமரர்கோன் அருளின் பெற்ற
சூலம்கொண்டு எறிவல்' என்று
தோன்றினன், 'பகையின் தோற்ற
மூலம்கொண்டு உணரா நின்னை
முடித்துஅன்றி, முடியேன், என்றான். 13

பொழிப்பு: கார்காலத்தில், நீரைக்கொண்டு எழுந்த முகிலை ஒத்த கருநிறம் கொண்டவனான இந்திரசித்தன், 'நஞ்சைக்குடித்து அதனால் இருண்ட கழுத்தை உடைய செம்மை நிறம் கொண்ட சிவபெருமானின் அருளினாலே பெற்றுக்கொண்ட சூலப்படையை வீசுவேன்' என்று தோன்றி, 'பகைமையின் பிறப்பு வரலாற்றை அறியாத நின்னைத் தொலைத்தன்றி நான் முடியமாட்டேன், என இயம்பினான்.

விளக்கம்: காலம்: கார்காலம். செம்மை நிறம் சிவனுக்குரியது. 'சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான்' என உரைப்பர் அப்பர் சுவாமிகள். தோற்றமூலம்: பிறப்பு வரலாறு.

(யுத்த. இந்திரசித்தன் வதைப் படலம். இந்திரசித்தன் இலக்குவனைப் பார்த்து உன்னை முடித்தாலன்றி முடியேன் எனல்)

8 சூர்ப்பணகை மொழி

8. சூர்ப்பணகை மொழி

இராவணன் தங்கையாகிய சூர்ப்பணகை சிவனைப்பற்றிப் பன்னிரண்டு இடங்களில் பேசுவாள்.

" ஈசன் "

" கற்றைஅம் சடையவன் "

" முப்புரங்கள் செற்ற சேவலோன் "

" தழல் எடுத்தான் "

" சிவன் "

" அரன் "

என்பன அவள் கூறும் சிறப்புச் சொற்றொடர்கள்.

இராவணன் மலை எடுத்த நிகழ்ச்சியை,

'வெள்ளிமலை எடுத்து உலகம் மூன்றும் காவலோன்'

'தழல் எடுத்தான் மலைஎடுத்த தனிமலையே!'

'அரன் இருந்த மலைஎடுத்த அண்ணுவோ! அண்ணுவோ!'

என, சூர்ப்பணகை வியந்து கூறுவாள்.

'சிவன் தடக்கை வாள் கொண்டாய்' என, சூர்ப்பணகை இராவணனை விளித்துக் கூறுவது, 'நாளோடு வாள் கொடுத்த நம்பன் தன்னை' என்ற அப்பர் தேவாரத்தை நினைப்பூட்டுகின்றது.

'இருமூன்று வதனத்தோன் தன் தந்தையும் உமையைப் பெற்றுன்' என்று அறுமுகக் கடவுளைச் சூர்ப்பணகை பாராட்டுவது எண்ணி இன்புறத்தக்கது.

" இந்திரன் சசியைப் பெற்றுன்;
இருமூன்று வதனத் தோன்தன்

தந்தையும் உமையைப் பெற்றுன்;
தாமரைச் செங்க ணுனும்

செந்திரு மகளைப் பெற்றான்;
சீதையைப் பெற்றாய் நீயும்;
அந்தரம் பார்க்கின் நன்மை
அவர்க்குஇலை; உனக்கே ஐயா!"

"பாகத்தில் ஒருவன் வைத்தான்;
பங்கயத்து இருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான்;
அந்தணன் நாவில் வைத்தான்;
மேகத்தில் பிறந்த மின்னை
வென்றநுண் இடையி னாளை,
மாகத்தோள் வீர! பெற்றால்,
எங்ஙனம் வைத்து வாழ்தி!"

என்ற இரண்டு பாடலும் சூர்ப்பணகையின் அளவற்ற திறமையை எடுத்துக் காட்டுகின்றது.

'ஈசனார் கண்ணில் வெந்தான் மன்மதன் என்பது பொருந்தாது; சீதையைக் கண்டான் அவன்; கவரமுடியவில்லை; அதனால் நோய்வாய்ப் பட்டு, பேராசையால் அழிந்து தேய்ந்தான் அனங்கன்' என்ற கருத்துப்பட வரும் சூர்ப்பணகையின் பாடல் எண்ணி இன்புறத்தக்கது.

"ஈசனார் கண்ணின் வெந்தான்
என்னும்ஈது இழுதைச் சொல்;இவ்
வாசம் நாறு ஓதியாளைக்
கண்டனன்; வவ்வல் ஆற்றான்;
பேசல்ஆம் தகைமைத்து அல்லாப்
பெரும்பிணி பிணிப்ப, நீண்ட
ஆசையால் அழிந்து தேய்ந்தான்
அனங்கன்அவ் உருவம் அம்மா!"

ஈசற்கு மலர்க்கண் மூன்று

299 "சிந்தையில் உறைபவர்க்கு
உருவம் தீர்ந்ததால்;
இந்திரற்கு ஆயிரம்
நயனம்; ஈசற்கு
முந்திய மலர்க்கண்ஓர்
மூன்று; நான்குதோள்,
உந்தியில் உலகளித்-
-தாற்கு" என்று உன்னுவாள். 1

பொழிப்பு: '(எல்லோருடைய) உள்ளத்திலும் வீற்றிருப்பவனான மன்மதனுக்கு வடிவம் ஒழிந்துவிட்டது; தேவேந்திரனுக்கு ஆயிரம் கண்கள் உண்டு; சிவபிரானுக்கு, பூக்களுள் சிறந்த தாமரை போன்ற கண் மூன்று உள; தன் திரு உந்தியினின்றும் உலகத்தைத் தோற்றுவித்த திருமாலுக்குத் தோள் நான்கு உள;' என்று எண்ணுவாள் (சூர்ப்பணகை.)

விளக்கம்: இராமனைக்கண்ட சூர்ப்பணகை இவன் காமனோ என நினைத்தாள்; அவனுக்கு வடிவம் இல்லையே எனத் துணிந்து, இந்திரனாக இருக்கலாமோ என எண்ணினாள்; கண்கள் ஆயிரம் இன்மையின், இந்திரன் அல்லன் எனத் தெளிந்தாள்; சிவனாகலாமோ எனின், கண் மூன்று இல்லையே என நினைந்தாள்; திருமாலோ என்றால் தோள்கள் நான்கைக் காணோமே என்று கருதினாள் என்க.

(ஆரணிய. சூர்ப்பணகைப் படலம். இராமனது எழிலில்
சூர்ப்பணகை ஈடுபடல்)

கற்றைஅம் சடையவன்

300 'கற்றைஅம் சடையவன்
கண்ணில் காய்தலால்
இற்றவன், அன்றுதொட்டு
இன்று காறும், தான்
நற்றவம் இயற்றி, அவ்
அனங்கன், நல்உருப்
பெற்றனன் ஆம், எனப்
பெயர்த்தும் எண்ணுவாள். 2

பொழிப்பு : 'தொகுதியான அழகிய சடையை உடைய சிவபெருமான் நெற்றிக் கண்ணால் எரித்தமையால், உடல் இழந்த அந்தக் காமன், அன்று முதல் இன்று வரையும் தான் சிறந்த தவத்தைச் செய்து, இந்த நல்ல வடிவத்தைப் பெற்றுக்கொண்டனன் போலும்' என மீண்டும் நினைப்பாள்.

விளக்கம் : இற்றவன் : உடல் இழந்தவன். சிவன் கண்ணில் வெந்து பொடியான காமன் நல்ல தவம் செய்து முன்னையினும் சிறந்த வடிவத்தைப் பெற்று வந்தவனே இவன் எனப் பின்னரும் நினைக்கின்றாள் என்க.

(ஆரணிய. சூர்ப்பணகைப் படலம். காமனே இராமனாக வந்தான் எனச் சூர்ப்பணகை கருதுதல்)

முப்புரங்கள் செற்ற சேவலோன்

301 'பூவிலோன் புதல்வன் மைந்தன்
புதல்வி;முப் புரங்கள் செற்ற,
சேவலோன் துணைவன் ஆன
செங்கையோன் தங்கை; திக்கின்
மாவெலாம் தொலைத்து, வெள்ளி
மலைஎடுத்து, உலகம் மூன்றும்
காவலோன் பின்னை; காம
வல்லியாம் கன்னி' என்றாள். 3

பொழிப்பு : பூவில் பிறந்த பிரமனுக்கு மகனுடைய மகனுக்கு மகள்; முப்புரத்தை அழித்த, காளையைச் செலுத்தும் சிவபிரானின் தோழனான செவ்விய கையைப் பெற்ற குபேரனின் தங்கை; திக்கு யானைகளின் ஆற்றல்களை அழித்து, வெள்ளி மலையைக் கையால் பெயர்த்து, மூன்று உலகங்களையும் காக்கின்றவனான இராவணனுக்குப் பின்னே பிறந்தவள் ; காமவல்லி என்னும் பெயரை உடைய கன்னிப்பெண் நான்' என்று இயம்பினாள். (சூர்ப்பணகை)

விளக்கம் : பூவிலோன் : பிரமன். புதல்வன் : புலத்தியன். மகன் : விச்சிரவசு. கன்னி என்றமையால் தான் திருமணம் ஆகாதவள் என்று காட்டுகின்றாள்.

(ஆரணிய. சூர்ப்பணகைப் படலம். இராமனுக்கு, சூர்ப்பணகை தன்னை அறிமுகப்படுத்துதல்)

பொருப்பில் வாழும் அற்புடையவன்

302 பொற்புடை அரக்கி, 'பூவில்
புனலினில், பொருப்பில் வாழும்
அற்புடை உள்ளத் தாரும்,
அனங்கனும், அமரர் மற்றும்
எற்பெறத் தவம்செய் கின்ருர்;
என்னை நீ இகழ்வது என்னே?
நற்பொறை நெஞ்சில் இல்லாக்
கள்வியை நச்சி' என்ருள். 4

பொழிப்பு: அழகை மேற்கொண்டவளான சூர்ப்பணகையாகிய அரக்கி, 'தாமரை மலரிலும், பாற்கடலிலும், வெள்ளி மலையிலும் வாழ்கின்ற அன்பு உள்ளம் கொண்ட அயன், அரி, அரன் ஆகியோரும், காம தேவனும், தேவர்களும், பிறரும் என்னை அடைவதற்குத் தவம் செய்து கொண்டிருக்கிருர்கள்; (அங்ஙனமாக) பெண்களுக்குரிய நல்ல பொறுமைக் குணம் உள்ளத்தில் இல்லாத இந்தக் கள்ளியை (சீதையை) விரும்பி என்னை இகழ்ந்து ஒதுக்குவது என்ன அறிவு?' என்று கேட்டாள்.

விளக்கம்: பொற்பு: அழகு அற்பு: அன்பு. எற்பெற: என்னை அடைய.

(ஆரணிய. சூர்ப்பணகைப் படலம். தன்னை ஏற்க மறுத்த இராமனிடம் சூர்ப்பணகை கேட்டல்)

தழல் எடுத்தான் மலை எடுத்தான்

303 நிலைஎடுத்து, நெடுநிலத்து
நீஇருக்க, தாபதர்கள்
சிலைஎடுத்துத் திரியும்இது
சிறிதுஅன்ருே? தேவர்எதிர்
தலைஎடுத்து விழியாமைச்
சமைப்பதே? தழல்எடுத்தான்
மலைஎடுத்த தனிமலையே!
இவைகாண வாராயோ? 5

பொழிப்பு : அழலைத் தூக்கிய சிவபிரானின் வெள்ளி மலையை அள்ளி எடுத்த ஒப்பற்ற மலையே! நீண்ட உலகத்தில், சிறந்த நிலைபெற்று நீ இருக்கும்போது, தவ வேடம் பூண்டவர்கள் வில்லைத் தூக்கித் திரியும் இச்செயல் சிறுமை உடையது அல்லவா? அதுவுமன்றி அமரர்களுக்கு முன்னே தலைதூக்கி நிமிர்ந்து பார்க்காதபடி என்னைச் செய்வதா? இந்த இழிவைக் காண நீ வரமாட்டாயா?

விளக்கம் : தாபதர்கள் : தவக்கோலம் பூண்ட இராம இலக்குவர். சிலை : வில். சமைத்தல்: ஆக்குதல். தழல் : தீ. மூக்கை அறுத்து, நமக்குத் தோற்ற பகைவர்களாகிய தேவர்கள் முன்னே தலைநிமிர்ந்து பார்க்க முடியாமற் செய்த கொடுமையைக் காண நீ வாராயோ என்று இராவணனை அழைத்தாள் என்க.

(ஆரணிய. சூர்ப்பணகைப் படலம். மூக்கு அறுபட்ட சூர்ப்பணகையின் முறையீடு)

சிவன் தடக்கை வாள் கொண்டாய்

304 காற்றினையும் புனலினையும்
கனலினையும், கடுங்காலக்
கூற்றினையும், விண்ணினையும்,
கோளினையும், பணிகோடற்கு
ஆற்றினை நீ! ஈண்டு,இருவர்
மானுடவர்க்கு ஆற்றுது
மாற்றினையோ? உன்வலத்தை;
சிவன்தடக்கை வாள்கொண்டாய்! 6

பொழிப்பு : சிவபிரானின் பெரிய கைகளால் தரப்பெற்ற வாளைப் பெற்றுக்கொண்ட (அண்ணு!) காற்றையும், நீரையும், நெருப்பையும், கடுமையான காலம் பார்த்து உயிர் வாங்கும் எமனையும், வானையும் ஒன்பது கோள்களையும் ஏவல் கொள்ளுதற்குரிய வலி பெற்ற நீ, இங்குத் தங்கியுள்ள இரண்டு மனிதர்களுக்கு ஆற்றுமல் உன் வலிமையை மாற்றிக் கொண்டாயோ!

விளக்கம் : பணிகோடல் : ஏவல் கொள்ளுதல்.

(ஆரணிய. சூர்ப்பணகைப் படலம். சூர்ப்பணகை, பூதங்களையும் எமனையும், கோள்களையும் பணிகொண்ட உன் ஆற்றல் எங்கே என இராவணனைக் கேட்டல்)

அரனேயோ? அரியேயோ? அயனேயோ?

305 மரன்ஏயும் நெடுங்கானில்
மறைந்துஉறையும் தாபதர்கள்
உரனேயோ? அடல்அரக்கர்
ஒய்வேயோ? உற்றுஎதிர்ந்தார்
அரனேயோ? அரியேயோ?
அயனேயோ? எனும்ஆற்றல்
கரனேயோ? யான்பட்ட
கையறவு காணுயோ? 7

பொழிப்பு: பகைத்து எதிர்த்தவர்கள், சிவனோ? மாலோ? பிரமனோ? என்று ஐயுறத்தக்க, (சூலமும், சக்கரமும், மறை நூலும் தாங்கும்) வலிமை பெற்ற கரங்களை உடைய (அண்ணு!) மரங்கள் அடர்ந்த நீண்ட காட்டில் மறைந்து வாழும் தவத்தவர் வலிமையா? வன்மை வாய்ந்த அரக்கரின் ஒய்வா? நான் அடைந்த துன்பத்தை நீ வந்து காண மாட்டாயா?

விளக்கம்: மரன்: மரம். ஏயும்: பொருந்தும். கையறவு: துயரம். கரன்: கரத்தை உடையவன். இங்கு இராவணனைக் குறிக்கும் கரன் என்ற அரக்கனை விளித்ததாகக் கொள்ளலாமோ எனின், இப்பாடலுக்கு முன்னும் பின்னும் இராவணனையே விளித்திருப்பதால் இராவணன் என்று கொள்ளுதலே சிறப்புடைத்து.

(ஆரணிய. சூர்ப்பணகைப் படலம். தன் கையறவுக்குக் காரணம் தாபதர் உரனு? அரக்கர் ஒய்வா? என, சூர்ப்பணகை கேட்டல்)

அரன் இருந்த மலை எடுத்த அண்ணு!

306 உரன்நெரிந்து விழ,என்னை
உதைத்து,உருட்டி, மூக்குஅரிந்த
நரன்இருந்து தோள்பார்க்க,
நான்கிடந்து புலம்புவதோ?

கரன்இருந்த வனம்அன்றோ?
இவைபடவும் கடவேனோ?
அரன்இருந்த மலைஎடுத்த
அண்ணாவோ! அண்ணாவோ!! 8

பொழிப்பு : சிவபெருமான் வீற்றிருந்த வெள்ளி மலையை எடுத்த ஓ அண்ணா! ஓ அண்ணா!! மார்பு நொறுங்கி விழுமாறு என்னை உதைத்து உருளச் செய்து, மூக்கை அறுத்த மனிதன் உயிரோடு இருந்து தோளைப் பார்த்து மகிழ, நான் இப்படிக் கிடந்து புலம்புவது முறையாமோ? கரன் என்ற அரக்கனின் காவல் அமைந்த வனம் அல்லவா இது? இவ்இழிவை ஏற்கும் கடமை உடையவளா நான்?

விளக்கம் : உரன் : மார்பு. நரன் : இலக்குவன்.

(ஆரணிய. சூர்ப்பணகைப் படலம். 'நரன் இருந்து தோள் பார்க்க, நான் கிடந்து புலம்புவதோ' என முறையிட்டு அண்ணனை அழைத்தல்)

பூங்கணையால் உயிர்வாங்கும் அவன்

307 சிவனும்,மலர்த் திசைமுகனும்
திருமாலும், தெறுகுலிசத்து
அவனும்,அடுத்து ஒன்றாகி
நின்றன்ன உருவோனே!
புவனம்அனைத் தையும்ஒருதன்
பூங்கணையால் உயிர்வாங்கும்
அவனும்,உனக்கு இளையானோ?
இவனேபோல் அருள்இலனால் 9

பொழிப்பு : சிவபெருமானும், தாமரைக்கிழவோனாகிய பிரம தேவனும், திருமாலும், பகை அழிக்கும் வச்சிரப் படையை உடைய இந்திரனும் சேர்ந்து ஒருருவாய் நின்றாற் போன்ற வடிவழகனே! உலகம் முழுதையும் ஒப்பற்ற தன் மலர் அம்பால் உயிர் கவரும் அந்த மதனனும் உனக்கு இளையவன்தானோ? என் உறுப்புக்களை அறுத்த இந்த இளவலைப் போலவே அவனும் அருள் அற்றவனாக என்னை வருத்துகின்றானே!

விளக்கம்: தெறுதல்: அழித்தல். குலிசம்:வச்சிரம். குலிசத்துஅவன்: இந்திரன். புவனம்: உலகம். ஒரு: ஒப்பற்ற. பூங்கணை: மலர் அம்பு. பூங்கணையால் உயிர் வாங்கும் அவன்: மன்மதன். இலக்குவன்தான் பங்கப்படுத்தினன் என்றால் மன்மதன் உயிரையே வாங்கிவிடுவான் போலும் என்றவாறு.

(ஆரணிய. சூர்ப்பணகைப் படலம். மானபங்கத்தின் பிறகும் சூர்ப்பணகையின் காதல் பேச்சு)

ஈசனார் கண்ணில் வெந்தான்

308 'ஈசனார் கண்ணில் வெந்தான்
என்னும்ஈது இழுதைச் சொல்;இவ்
வாசம்நாறு ஓதி யாளைக்
கண்டனன், வவ்வல் ஆற்றான்,
பேசலாம் தகைமைத்து அல்லாப்
பெரும்பிணி பிணிப்ப, நீண்ட
ஆசையால் அழிந்து தேய்ந்தான்
அனங்கன்,அவ் உருவம் அம்மா!'

பொழிப்பு: மன்மதன், இந்த மணம் கமழும் கூந்தலை உடைய சீதையைக் கண்டனனாகிக் கவர்ந்து செல்ல முடியாதவனாய், பேசமுடியாத தன்மைகொண்ட பெரிய காமநோய் துன்புறுத்த, இவள்மீது தோன்றிய பேராசையால் தன் வடிவம் தேய்ந்து ஒழிந்தான்; (அவ்வாறாக) அந்த மன்மதன் சிவபெருமானின் நெற்றிக்கண்ணினால் வெந்து அழிந்தான் என்னும் இச்சொல் அறியாமை உடையதாம்.

விளக்கம்: இழுதை: அறியாமை. வாசம்: மணம். ஓதியாள்: கூந்தலை உடையாள். வவ்வல்: கவர்தல். 'பிணி' ஈண்டுக் காமநோய். அனங்கன்: மன்மதன். காமன், சீதையின் பேரழகில் கொண்ட பேராசை காரணமாக அவளைக் கவர எண்ணி, முடியாமல் தேய்ந்து அழிந்தானே அன்றி ஈசனார் கண்ணினால் வெந்தான் என்பது அறிவுடைமை ஆகாது என்றாள் சூர்ப்பணகை என்க.

(ஆரணிய. மாரீசன் வதைப் படலம். சீதையால் அழிந்தான் மன்மதன் என்று சூர்ப்பணகை கூறுதல்)

இருமூன்று வதனத்தோன் தந்தை

309 இந்திரன் சசியைப் பெற்றான்;
இருமூன்று வதனத் தோன்தன்

தந்தையும் உமையைப் பெற்றான்;
தாமரைச் செங்க ணானும்

செந்திரு மகளைப் பெற்றான்;
சீதையைப் பெற்றாய் நீயும்;

அந்தரம் பார்க்கின், நன்மை
அவர்க்குஇலை உனக்கே; ஐயா! 11

பொழிப்பு : ஐயனே! இந்திரன் சசி என்பவளை மனைவியாக அடைந்தான்; ஆறுமுகம் படைத்த கந்தக்கடவுளின் தந்தை உமையவளைத் துணைவியாகப் பெற்றான்; தாமரைச் செங்கண்ணனாகிய திருமால் செந்திருமகளைக் காதலியாக அடைந்தான்; சீதையை நீ பெற்றாய்; அவர்க்கும் உனக்கும் வேறுபாடு பார்த்தால் நன்மை அவர்களுக்கு இல்லை உனக்குத்தான்.

விளக்கம் : தேவமகளிரை அடைந்த தேவர்களை விடச் சீதையை அடைந்த நீயே நன்மை அடைந்தாய் என்று சூர்ப்பணகை கூறினாள் என்க. சீதையைப் பெற்றாய் என்று துணிந்து இறந்தகாலத்தால் கூறுவாள். சசி: இந்திராணி. அந்தரம்: வேறுபாடு.

(ஆரணிய. மாரீசன் வதைப்படலம். தேவமாதர்களைவிடச் சீதை சிறந்தவள் என்று சூர்ப்பணகை செப்புதல்)

பாகத்தில் ஒருவன் வைத்தான்

310 பாகத்தில் ஒருவன் வைத்தான்;
பங்கயத்து இருந்த பொன்னை

ஆகத்தில் ஒருவன் வைத்தான்;
அந்தணன் நாவில் வைத்தான்;

மேகத்தில் பிறந்த மின்னை
வென்றநுண் இடையி னளை
மாகத்தோள் வீர! பெற்றால்
எங்ஙனம் வைத்து வாழ்தி? 12

பொழிப்பு : வான் அளாவ ஓங்கிய தோள்களைப் பெற்ற வீரனே! ஒப்பற்ற சிவபிரான் உடம்பில் ஒருபாதியில் (தேவியை) வைத்துக் கொண்டான்; மற்றொருவனாகிய திருமால் தாமரை இருந்த திருமகளைத்தன் மார்பிலே அமர்த்திக் கொண்டான்; அழகிய தண்ணளி உடையானாகிய பிரமன் (கலைமகளாகிய தன் தேவியை) நாவிலே கொண்டு போற்றினான்; முகிலில் தோன்றிய மின்னலை வென்ற சிற்றிடையாளாகிய சீதையை நீ பெற்றால் எங்கே இருத்தி வாழப் போகின்றாய்?

விளக்கம் : பாகம்: பகுதி. ஒருவன்: சிவபிரான். பங்கயம்: தாமரை. பொன்: திருமகள். ஆகம்: மார்பு. மாகம்: விண்.

(ஆரணிய. மாரீசன் வதைப்படலம். சூர்ப்பணகை இராவணனிடம் சீதையை வைத்துப் போற்றும் இடத்தை வினவுதல்)

9 வசிட்டன் மொழி

9. வசிட்டன் மொழி

சிவனைப்பற்றி வசிட்டன் ஏழு இடங்களில் வழுத்துவான்.

"கண்ணுதலான்"

"புராரி"

"கங்கை சூடும் ஈசன்"

"உமைக்கு நாதன்"

என்பன போன்ற சொற்றொடர்கள் வசிட்டன் சிவனைச் சிறப்பித்துச் செப்புபவை.

"கரிய மாலினும், கண்ணுத லானினும்,
உரிய தாமரை மேல்உறை வானினும்,
விரியும் பூதம்ஓர் ஐந்தினும், மெய்யினும்
பெரியர் அந்தணர்; பேணுதி உள்ளத்தால்"

என்று வசிட்டன் வழுத்துவது, குறளாசிரியர் கூறிய எவ் உயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அறவோராகிய அந்தணர் பெருமையை என்று கொள்ளவேண்டும்.

கங்கை சூடும் ஈசன்

311 மாசுஅறு சுரர்க ளோடு
மற்றுளோர் தமையும் ஈன்ற
காசிபன் அருளும் மைந்தன்
விபண்டகன், கங்கை சூடும்
ஈசனும் புகழ்தற்கு ஒத்தோன்,
இருங்கலை பிறவும் எண்ணின்
தேசுஉடைத் தந்தை ஒப்பான்,
திருவருள் புனைந்த மைந்தன். 1

பொழிப்பு: (வசிட்டன் தயரதனைப் பார்த்து) குற்றமற்ற தேவர்களோடு ஏனையோரையும் பெற்ற காசிபன் என்னும் முனிவன் அருளினால் தந்த மைந்தன் விபண்டகன் என்னும் பெயர் பெற்றவன்; (அவன்) கங்கையை அணிந்த சிவபெருமானும் புகழத்தக்கவனும் பெரிய நூல் பயிற்சியிலும். ஏனைச் சிறப்புக்களிலும் ஆராய்ந்து பார்த்தால் புகழ்வாய்ந்த தந்தையை ஒத்தவனும் ஆவான், அவ்விபண்டகன் அருளுக்கு உரியமகன் (உருசிய சிருங்கன் என்பவனாவான்) (குளகம்)

விளக்கம்: மாசு: குற்றம். சுரர்: அமரர். மற்றுளோர்: அசுரர். இரும்: பெரிய. கலை: நூல். தேசு: ஒளி.

(பால. திரு அவதாரப்படலம். வசிட்டன் விபண்டகன் சிறப்பும் அவன் மைந்தன் உருசிய சிருங்கன் சிறப்பும் சொல்லுதல்)

புராரியும் புகழ்தற்கு ஒத்தவன்

312 பாந்தளின் மகுட கோடி
பரித்தபார் அதனில் வைகும்
மாந்தர்கள் விலங்குஎன்று உன்னும்
மனத்தன்,மா தவத்தன், எண்ணில்,
பூந்தவிசு உகந்துஉ ளோனும்,
புராரியும், புகழ்தற்கு ஒத்த
சாந்தனுல் வேள்வி முற்றின்
தனையர்கள் உளர்ஆம் என்றான். 2

பொழிப்பு: ஆதிசேடன் என்னும் பாம்பினுடைய பல முடிகளின் நுனியில் தாங்கப்பெற்ற உலகத்தில் வாழும் மனிதர்களை எல்லாம் விலங்குகள் என நினைக்கின்ற உள்ளத்தை உடையவன்; சிறந்த தவம் செய்தவன்; ஆராய்ந்து பார்த்தால், மலரை இருக்கையாகக் கொண்டு மகிழ்ந்த பிரமனும், முப்புரத்தை அழித்த சிவனும் புகழ்ந்துபேசுதற்குப் பொருந்திய சாந்தகுணம் வாய்ந்தவன்; ஆன (கலைக்கோட்டு மாமுனிவன்) அவனைக் கொண்டு வேள்விசெய்து முடித்தால் மக்கள் பிறப்பர் என்று சொன்னான்.

விளக்கம்: பாந்தள்: பாம்பு. மகுடம்: முடி. கோடி: நுனி. பரித்த: சுமந்த.

(பால. திரு அவதாரப்படலம். வசிட்டன், கலைக்கோட்டு மாமுனிவனைக் கொண்டு வேள்வி செய்வித்தால் மக்கள் தோன்றுவர் எனக்கூறல்)

களன் அமர் கடு

313 வளநகர் முனிவரன்
வருமுன், வானவன்
களன்அமர் கடுஎனக்
கருகி, வான்முகில்
சளசள எனமழைத்
தாரை கான்றன;
குளனொடு நதிகள்தம்
குறைகள் தீரவே. 3

பொழிப்பு: முனிபுங்கவன், வளம் வாய்ந்த ஊருக்குள் வரும் முன்னமேயே. வானத்து மேகங்கள், சிவபிரானின் கழுத்தில் இருக்கும் நஞ்சைப் போல் கருநிறம் அடைந்து, குளங்கள் ஆறுகள் ஆகியவை எல்லாம் (இதுவரை அவைகள் நீர்பெருது இருந்த) குறைகள் தீருமாறு, சளசள என மழைத் தாரைகளைச் சொரிந்தன.

விளக்கம்: கடு: நஞ்சு. 'சளசள': ஒலிக் குறிப்பு. தாரை: நீர்ப்பெருக்கு.

(பால. திரு அவதாரப்படலம். கலைக்கோட்டு முனிவன் வரவால் மழை பொழிதல்)

கண்ணுதலானினும் பெரியர்

314 கரிய மாலினும்,
கண்ணுத லானினும்
உரிய தாமரை
மேல்உறை வானினும்,

விரியும் பூதம்ஓர்
ஐந்தினும், மெய்யினும்,
பெரியர் அந்தணர்;
பேணுதி உள்ளத்தால். 4

பொழிப்பு: கருநிறம் வாய்ந்த திருமாலைக்காட்டிலும், நெற்றியில் கண்ணுடைய சிவனைக் காட்டிலும், தனக்குரிய தாமரையில் வாழ்கின்ற பிரமனைக் காட்டிலும், விரிந்த ஒப்பற்ற ஐந்து பூதங்களைக் காட்டிலும், உண்மையைக் காட்டிலும், அழகிய தண்ணளியை உடையார் பெரியர் ஆவர்; அவர்களை மனத்தில் இருத்திப் போற்றுவாயாக.

விளக்கம்: மும்மூர்த்திகளை விட, ஐம்பெரும் பூதத்தை விட, உண்மையைவிட மேம்பட்டவர் அந்தணர், என்று கூறியவாறு. பூதம் ஐந்து, வான், எரி, நீர், கால், மண் என்பன.

(அயோ. மந்தரை சூழ்ச்சிப்படலம். பெரியாரைப் பேணுமாறு இராமனுக்கு வசிட்டன் அறிவுரை கூறுதல்)

ஒண்கவர் எஃகம்

315 உருளும் நேமியும்
ஒண்கவர் எஃகமும்,
மருளில் வாணியும்,
வல்லவர் மூவர்க்கும்
தெருளும் நல்அற
-மும்,மனச் செம்மையும்,
அருளும், நீத்தபின்
ஆவதுஉண் டாகுமோ? 5

பொழிப்பு: உருண்டு செல்கின்ற சக்கரப்படையையும், ஒளி உள்ள மூன்று கவட்டைக் கொண்ட மழுப்படையையும், மயக்கம் இல்லாத கலைமகளையும், ஆளும் வன்மைபெற்ற முப்பெருங் கடவுளர்க்கும், தெளிவான நல்ல அறமும், செம்மையான மனமும், கருணையும், ஆகிய இவற்றைத் துறந்துவிட்ட பின்பு ஆக்கம் அடைய முடியுமா? (முடியாது)

விளக்கம்: மருள்: மயக்கம். தெருள்: தெளிவு. திருமாலுக்குச்சக்கரமும் சிவனுக்குச் சூலமும் போல, பிரமனுக்கு வாணி என்பது அருமை உடைத்து.

'சீலமும், தருமமும், சிதைவில் செய்கையாய்!
சூலமும், திகிரியும், சொல்லும் தாங்கிய
மூலம் வந்து உதவிய மூவர்....

என வேறு இடத்துக் கூறுதல் இதனோடு ஒத்தது.

(அயோ. மந்தரை சூழ்ச்சிப்படலம். அறம், செம்மை, அருள் ஆகியவற்றை நீத்தால் முப்பெரும் கடவுளரும் ஒன்றுக்கும் ஆகார் எனவசிட்டன்கூறுதல்)

உமைக்கு நாதன்

316 உமைக்கு நாதற்கும்,
ஓங்குபுள் ஊர்திக்கும்,
இமைப்பில் நாட்டம்ஓர்
எட்டுடை யானுக்கும்,
சமைத்த தோள்வலி
தாங்கினர் ஆயினும்,
அமைச்சர் சொல்வழி
ஆற்றுதல் ஆற்றலே. 6

பொழிப்பு : உமையின் கணவனுகிய சிவபிரானுக்கும், உயர்ந்த கருடனில் ஏறும் திருமாலுக்கும், மூடாத ஒப்பற்ற கண்கள் எட்டைக் கொண்ட பிரமனுக்கும், பொருந்திய தோள்வலியைப் பெற்றிருந் தாராலும், அமைச்சர்கள் சொல்லின் வழி செய்தலே ஆற்றல் உடைமையாகும்.

விளக்கம் : சமைத்த: சமைந்த என்பதன் வலித்தல் விகாரம். எதுகையின் ஓசை நோக்கித் திரிந்தது.

(அயோ. மந்தரை சூழ்ச்சிப் படலம். அமைச்சர் சொல்வழி நடத்தலே ஆற்றல் என வசிட்டன் வழுத்தல்)

சூலமும், திகிரியும். சொல்லும் தாங்கிய மூலம்

317 சீலமும், தருமமும்,
சிதைவுஇல் செய்கையாய்!
சூலமும், திகிரியும்,
சொல்லும் தாங்கிய
மூலம்வந்து உதவிய
மூவர்க்கு ஆயினும்,
காலம்என்று ஒருவலை
கடக்கல் ஆகுமோ? 7

பொழிப்பு : 'ஒழுக்கமும், அறமும், அழியாமல் செயலாற்றும் இராமா!' சூலத்தையும், சக்கரத்தையும், மறை சொல்லும் நூல்களையும் பொறுத்த, (எல்லாப் பொருள்கட்கும்) முதற்பொருளாய் வந்து அருள் செய்த மூன்று கடவுளர்களுக்கு ஆனாலும், காலம் என்று சொல்லக்கூடிய ஒரு வலையைக் கடத்தல் கூடுமா?

விளக்கம் : காலத்தை வெல்லுதல் யார்க்கும் ஆகாது என்றபடி.

(அயோ. திருவடி சூட்டு படலம். தந்தை இறந்தமைக்கு வருந்திய இராமனுக்கு வசிட்டன் தேறுதல் கூறல்)

10. சீதை மொழி

6 அனுமன் மொழி

6. அனுமன் மொழி

இராம காதையில் இணையற்ற பாத்திரமாகிய அனுமன் சிவனைப்பற்றிப் பதினைந்து இடங்களில் இயம்புவான்.

'வெஞ்சினக் காலன்தன் காலமும் காலால் அறுக்கும் புங்கவன்' எனக் காலனைக் காலால் செற்ற வரலாற்றை அனுமன் கூறுவது நயம் வாய்ந்தது. 'செந் தறுகண் வெள் எயிற்றுக் கரிய கோலம் சிதைந்து உருள உதைத்து அருளும் செய்ய தாளா!' எனச் சேக்கிழார் அடிகள் கூறுவர். 'வீட எடுத்தது காலனை' என்பர் அப்பர் சுவாமிகள்.

'கணிச்சியான் மகனே?' என முருகவேளைப் பாராட்டுவான், அனுமன் ஓரிடத்து. 'விடம்துடிக்கின்ற கண்டத்து அண்ணல்' என அனுமன் வாயிலாக ஆளுவது மிகப் பேரழகு உடைத்து.

"சோகத்தாள் ஆய நங்கை
கற்பினால், தொழுதற்கு ஒத்த
மாகத்தார் தேவி மாரும்
வான்சிறப்பு உற்றார்; மற்றைப்
பாகத்தாள் இப்போது ஈசன்
மகுடத்தாள்; பதுமத் தாளும்
ஆகத்தாள் அல்லள்; மாயன்
ஆயிரம் மௌலி மேலாள்"

எனச் சீதையின் கற்புக் காரணமாகப் பெண்குலத்தையே இதற்கு மேல் சிறப்பித்துச் சொல்ல முடியாது என்ற அளவிற்கு அனுமன் உயர்த்திக்காட்டும் போது, இனி உமையவள் ஈசன் தலையில் இருக்கவேண்டியவள் என்பது எண்ணிஎண்ணி இன்புறத் தக்கது.

"மூலமும், நடுவும், ஈறும்
இல்லதுஓர் மும்மைத்து ஆய
காலமும் கணக்கும் நீத்த
காரணன் கைவில் ஏந்தி,
சூலமும், திகிரி, சங்கும்,
கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும், மலரும், வெள்ளிப்
பொருப்பும்விட்டு அயோத்தி வந்தான்.

என்ற அனுமன் கூற்று, முப்பெரும் கடவுளும் ஓர்உரு எடுத்து வந்தவன் இராமன் என வலியுறுத்திக் கூறும். எனினும், அம்மும்மூர்த்திகட்கும் மேம்பட்டவன் இராமன் என்று அனுமன் கூறுவதையும் காண்கின்றோம். இராவணன்,

"நேமியோ? குலிசியோ? நெடுங் கணிச்சியோ?" என்று கேட்டபோது,

"சொல்லிய அனைவரும் அல்லன்; நீசொன்னஅ,
புல்லிய வலியினோர் ஏவல் பூண்டிலேன்"

என்று அனுமன் கூறுவான். இது இராகவன்பால் அனுமன் கொண்ட அளவற்ற காதலையும், எதிரியை மடக்கும் அனுமனின் திறனையும் காட்டுகின்றது.

பல் இறுத்தவன்

271 நல்உறுப்பு அமையும்நம்-
-பியரில்முன் னவன்நயந்து,
எல்உறுப்பு அரியபேர்
எழுசுடர்க் கடவுள்தன்
பல்இறுத் தவன்வலிக்கு
அமை,தியம் பகம்எனும்
வில்இறுத்து அருளினன்
மிதிலைபுக்க அனையநாள். 1

பொழிப்பு: நல்லஅங்கங்கள் அமையப்பெற்ற இந்நம்பியர் இருவருள் முன் பிறந்தவனை இராமன் மிதிலை நகரத்தை அடைந்த அந்த நாளில், இருளின் சுவடும் இல்லையாக்கத் தக்க பெரிய விளங்குகின்ற ஒளிக்கடவுளாகிய சூரியனின் பல்லை உடைத்தவனாகிய சிவபெருமானது வலிமைக்கு ஏற்ற, தியம்பகம் என்னும் வில்லை விரும்பி ஒடித்தருளினன்.

விளக்கம்: நல்உறுப்பு: நல்லஅவயவம். நம்பியர்: இராமஇலக்குவர் நயந்து: விரும்பி. எல்: இருள். உறுப்பு: சுவடு. தியம்பகம்: இராமன் ஒடித்த வில்லின் பெயர். 'திரியம்பகம்' 'தியம்பகம்' எனத் திரிந்து நின்றது. திரியம்பகம் முக்கண் பெற்ற சிவனுக்கு உரியது என்னும் பொருள்பெற்றது. தக்கன் வேள்வியில் சிவன், சூரியன் பல்லை உடைத்தான் என்பது புராணம். 'அந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல் தகர்த்து' என்பது திருவாசகம்.

(கிட்கி. நட்புக்கோட்படலம். அனுமன் சுக்கிரீவனுக்கு இராமன் வில்லிறுத்ததை இயம்பல்)

பரமர் ஆம் அரன்

272 கரன்முதல் கருணைஅற்-
-றவர்,கடற் படையொடும்
சிரம்உகச் சிலைகுனித்து
உதவுவான்; திசைஉளார்

பரமுகப் பகைதுமித்து
அருளுவான்; பரமர்ஆம்
அரன்முதல் தலைவருக்கு
அதிசயத் திறலினான். 2

பொழிப்பு: கரன் முதலிய அருள் அற்ற அரக்கர்களைக் கடல் போன்ற சேனையோடு தலைகள் சிந்துமாறு வில்லை வளைத்து (அறத்திற்கு) துணைசெய்வான்; திக்குகளில் உள்ளவர்களுடைய பொருட்படுத்தாத பகைவர்களை அழித்து, அருள்செய்வான்; மேலான இறைவர்களாகிய சிவன் முதலிய தலைவர்களும் வியக்கத்தக்க ஆற்றலுடையான். (இராமன்)

விளக்கம்: உக: விழ. 'பரமுகம்'; பராமுகம் என்பதன் சிதைவு. துமித்து: அழித்து.

(கிட்கி. நட்புக்கோட்படலம். அனுமன் இராமனின் பேராற்றலைச் சுக்கிரீவனுக்குச் சொல்லுதல்)

சூலிதன் அருள் துறையில் முற்றினான்

273 நாலு வேதம்ஆம்
நவைஇல் சாலியின்
வேலி அன்னவன்;
மலையின் மேல்உளான்,
சூலி தன்அருள்
துறையின் முற்றினான்;
வாலி என்றுஉளான்
வரம்புஇல் ஆற்றலான். 3

பொழிப்பு: நான்கு மறைகளாகிய பழுது இல்லாத நெல் பயிருக்கு வேலியாக அமைந்தவன்; கயிலாயத்தில் வீற்றிருப்பவனான சூலம் தாங்கிய சிவபெருமானின் திருவருள் வழியிலே முதிர்ச்சியடைந்தவன்; வாலி என்ற பெயரை உடையவன்; எல்லை அற்ற வல்லமை வாய்ந்தவன்.

விளக்கம்: நவை: குற்றம். சாலி: நெற்பயிர். மலை: கயிலைமலை. மறைகள் என்ற பயிருக்கு வேலி போன்றவன்; சிவன் அருள் திறத்து முதிர்ந்தவன்; எல்லை அற்ற ஆற்றலான் வாலி என்க. வாலி சிவபூசைச் செல்வன் என்பதை,

'கோலமா மலரொடு தூபமும் சாந்தமும் கொண்டுபோற்றி,
வாலியார் வழிபடப் பொருந்தினார்'

என்றும்,

'நீலமா மணிநிறத்து அரக்கனை இருபது கரத்தொடுஒல்க,
வாலினால் கட்டிய வாலியார் வழிபட மன்னுகோயில்'

எனவும் திருஞான சம்பந்தர் கூறுவர்.

'அணங்கார் பாகனை ஆசை தோறும் உற்று,
உணங்கா ஒள்மலர் கொண்டுஉள் அன்பொடும்,
இணங்காக் காலம் இரண்டொடு ஒன்றினும்,
வணங்காது இத்துணை வைக வல்லையோ?'

என, வாலி மாண்டபோது தாரை புலம்புதலும்

'பஞ்சின்மெல் அடியாள் பங்கன் பதயுகம் அலாதுயாதும்
அஞ்சலித்து அறியாச் செங்கை ஆணையாய்'

என அங்கதன் அரற்றுதலும் வாலியின் சிவபூசைச் சிறப்பைப்புலப்படுத்தும்.

(கிட்கி. நட்புக்கோட்படலம். வாலியின் பெருமையை இராமனுக்கு அனுமன் உரைத்தல்)

காலன் காலமும் அறுக்கும் புங்கவன்

274 செறுக்கும் வன்திறல் திரிபுரம்
தீஎழச் சினவி,
கறுக்கும் வெஞ்சினக் காலன்தன்
காலமும் காலால்
அறுக்கும் புங்கவன் ஆண்டபேர்
ஆடகத் தனிவில்
இறுக்கும் தன்மை,அம் மாயவற்கு
அன்றியும் எளிதோ? 4

பொழிப்பு: (யாவரையும்) துன்புறுத்தும் வலிமிக்க முப்புரத்தைத் தீப்பட்டு எரியுமாறு கோபித்து, கொடுமைகொண்ட கடுங்கோபக் காலனின் வாழ்நாளையும் காலால் உதைத்து அழித்த, சிறந்த சிவபெருமான் கைக் கொண்ட பெரிய பொன்மயமான ஒப்பற்ற வில்லை ஒடிக்கும் ஆற்றல் அத் திருமாலுக்கே அன்றி ஏனையோர்க்கு எளிமை உடையது ஆகுமா?

விளக்கம்: சினவி: கோபித்து. 'கறுக்கும் வெஞ்சினக் காலன்' என்ற சொற்றொடர் நமனின் சினப்பெருக்கத்தைக் காட்டுகின்றது. ஆடகம்: பொன்.

(கிட்கி. நட்புக்கோட் படலம். அனுமன் சுக்கிரீவனிடம் இராமன் பெருமையை இயம்பல்)

மூவர்தம்முளும் இருவர்

275 தேவர் என்பவர் யாரும்,இத்
திருநகர்க்கு இறைவற்கு,
ஏவல் செய்பவர்; செய்கிலா-
-தவர்எவர் என்னின்,

மூவர் தம்முளும் இருவர்,என்-
-ருல்,இனி முயலின்
தாஇல் மாதவம் அல்லது
பிறிதுஒன்று தகுமோ? 5

பொழிப்பு: அமரர் என்று சொல்லப்படுகின்ற அனைவரும் இந்த இலங்கைத் திருநகரத்தின் தலைவனுகிய இராவணனுக்குப் பணிசெய்பவரேயாவர்; அப்படிப் பணிசெய்யாதவர் யாரென்று கேட்டால், மும்மூர்த்திகளுள் சிவன், திருமால் என்ற இருவரேயாவர்; அவ்வாருனுல், இனி முயன்று பெறும் குற்றமற்ற சிறந்த தவத்தைத் தவிர வேறென்று தகுதியுடையது ஆகுமா?

விளக்கம்: சிவன் திருமால் தவிர எல்லாத் தேவரையும் இராவணன் ஏவல்கொண்டது அவன் முயன்று பெற்ற தவத்தின் சிறப்பால். தவத்தை விடச் சிறந்தது வேறு இல்லை என்க.

(சுந்தர. ஊர்தேடு படலம். இராவணன் பெருமையை
அனுமன் சிந்தித்தல்)

கணிச்சியான் மகனே?

276 வளையும் வாளெயிற்று அரக்கனே?
கணிச்சியான் மகனே?
அளையில் வாள்அரி அனையவன்
யாவனே? அறியேன்!
இளைய வீரனும், ஏந்தலும்,
இருவரும், பலநாள்
உளைய உள்ளபோர் இவனொடும்
உளதுஎன உணர்ந்தான். 6

பொழிப்பு : 'குகையில் வாழ்கின்ற சிம்மத்தை ஒத்தவனாகிய இவன், வளைந்த ஒளி உள்ள கோரப் பற்களைப் பெற்ற அரக்கனா? அன்றி, மழுப்படை தாங்கிய சிவபிரான் மைந்தனா? இவன் யாரோ? தெரியவில்லையே! இளைய வீரனாகிய இலக்குவனும், ஏந்தலாகிய இராமனும், இருவரும் சேர்ந்தும் பலநாள் இவனோடும் வருந்திச் செய்ய வேண்டிய போர் இருக்கின்றது' என்று உணர்ந்தான் (அனுமன்)

விளக்கம் : அளை: குகை. அரி: சிம்மம். உளைய: வருந்த. இந்திரசித்தனின் தோற்றத்தைக் கண்டு 'இவனைவெல்ல இலக்குவன் போர் செய்தல் வேண்டும்; அவனால் ஆகாது; இராமன் போர் செய்தல் வேண்டும்; அவனாலும் தனித்து வெல்லுதல் ஆகாது; பின்னர் இருவரும் சேர்ந்து போரிட வேண்டும்: அதுவும் ஒருநாளில் முடியாது; பல நாள் வேண்டும்; அது கடுமையான போராகவும் அமையும்' என்று முடிவுகட்டுகின்றான் அனுமன் என்க.

(சுந்தர. ஊர் தேடுபடலம். இந்திரசித்தன் ஆற்றலை அனுமன் வியத்தல்)

சிவனை-திருநெடுமாலாம் அவனை

277 'இவனை இன்துணை உடையபேர்
இராவணன் என்னே,
புவனம் மூன்றையும் வென்றதுஓர்
பொருள்எனப் புகறல்?
சிவனை, நான்முகத்து ஒருவனை,
திருநெடு மாலாம்
அவனை, அல்லது நிகர்பிறர்
என்பதும் அறிவோ? 7

பொழிப்பு : இந்த இந்திரசித்தனை இனிய துணையாகக் கொண்ட பெருமையுள்ள இராவணன், மூன்று உலகங்களையும் வென்றமையை ஓர் பொருட்டாகப் பாராட்டிச் சொல்லுதலில் என்ன சிறப்பு இருக்கிறது? சிவபெருமானை, பிரமதேவனை, திருநெடுமாலைத் தவிர, பிற எவரையும் இவனுக்கு நிகராகக் கூறுவது அறிவுடைமையாகுமா?

விளக்கம் : புகறல் என்னே? என இயைக்க.

(சுந்தர. ஊர்தேடு படலம். இராவணன் வெற்றிக்கு இந்திரசித்தனே காரணம் என அனுமன் எண்ணுதல்)

நல்மத்தம் நாகம் தலைசூடிய நம்பன்

278 கன்மத்தை, ஞாலத் தவர்யார்உள -
- ரேக டப்பார்?
பொன்மொய்த்த தோளான், மயல்கொண்டு,
புலன்கள் வேறாய்,
நல்மத்தம் நாகம் தலைசூடிய
நம்ப னேபோல்,
உன்மத்தன் ஆனான், தனைஒன்றும்
உணர்ந்தி லாதான். 8

பொழிப்பு: உலகத்தவர், வினைப் பயனைக் கடக்க வல்லார்யாரே உள்ளார்? வீர இலக்குமி பரவிய தோளை உடையானாகிய இராமன் மயக்கம் அடைந்து, ஐம்புல நுகர்ச்சியில் மாறுபட்டு, தன்னைச் சிறிதும் உணராமல் நல்ல ஊமத்தம் பூவையும், பாம்பையும் தலையில் அணிந்த சிவபெருமானைப் போலப் பித்தனாக ஆகிவிட்டான்.

விளக்கம்: கன்மம்: வினைப்பயன். பொன்: வீரஇலக்குமி. மயல்: மயக்கம். புலன்கள் வேறாய்: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐம்புல நுகர்ச்சியில் வெறுப்படைந்து. நம்பன்: சிவபெருமான். உன்மத்தன்: பித்தம் பிடித்தவன். சீதையைப் பிரிந்தமையால், இராமன் கடவுள் பிறப்பாகிய தன்சிறப்பை உணராமல் மயங்கி, புலன்களில் மாறுபட்டு, பித்தன் ஆனான் என்க.

"தேவியைப் பிரிந்தபோதே திகைத்தனை போலும் செய்கை" என்பது ஈண்டு நினைவுகூரத் தக்கது.

(சுந்தர. உருக்காட்டுபடலம். அனுமன்சீதையிடம் இராமனைப்பற்றிக் கூறல்)

ஈசன் கயிலை அம்கிரி

279 தேவரும் பிறரும் அல்லன்;
திசைக்களிறு அல்லன்; திக்கின்
காவலர் அல்லன்; ஈசன்
கயிலைஅம் கிரியும் அல்லன்;

மூவரும் அல்லன்; மற்றை
முனிவரும் அல்லன்; எல்லைப்
பூவல யத்தை ஆண்ட
புரவலன் புதல்வன் போலாம். 9

பொழிப்பு: (என்னைத் தூது அனுப்பிய அந்த வில்வீரன் யார் என்றால்) அமரரும் அல்லாதாரும் அல்லன்; திக்கு யானைகள் அல்லன்; திக்குப் பாலகர் அல்லன்; சிவனுடைய கைலை மலையும் அல்லன்; மும்மூர்த்திகளும் அல்லன்; ஏனைய இருடிகளும் அல்லன்; பூ உலகை எல்லையாகக் கொண்டு ஆண்ட மன்னன் (தயரதன்) மகன் ஆவான்.

விளக்கம்: திசைக் களிறும், ஈசன் கயிலை அம் கிரியும் இராவணன் ஆற்றலுக்கு அடையாளமாக நின்றமையின் அவையும் அல்லன் என்று கூறப் பெற்றது.

(சுந்தர. பிணிவீட்டு படலம். இராமன் பெருமையை இராவணனுக்கு அனுமன் உரைத்தல்)

காலமும் கணக்கும் நீத்த காரணன்

280 மூலமும் நடுவும் ஈறும்
இல்லதுஓர் மும்மைத்து ஆய
காலமும், கணக்கும், நீத்த
காரணன், கைவில் ஏந்தி
சூலமும், திகிரி, சங்கும்
கரகமும், துறந்து, தொல்லை,
ஆலமும், மலரும், வெள்ளிப் -
பொருப்பும்விட்டு அயோத்தி வந்தான் 10

பொழிப்பு: முதலும், இடையும், கடையும் இல்லாததான, ஒரு மூன்று எனச் சொல்லப்படும் காலத்தையும், கணக்கையும் கடந்து நின்ற, எல்லாவற்றிற்கும் காரணனான அந்த முழுமுதல் கடவுள், முத்தலைப் படையையும், சக்கரம் சங்குகளையும், கமண்டலத்தையும் நீக்கிவிட்டு (அப்பொருள்கள் இருந்த) கையில் வில்லைத் தாங்கி, பழைமையான உரிய இடங்களாக அமைந்த, ஆல் இலையையும், தாமரைப் பூவையும், வெள்ளி மலையையும் விட்டுவிட்டு அயோத்தி நகரை இடமாகக் கொண்டு வந்து பிறந்தான்.

விளக்கம் : மும்மைத்தாய காலம்: சென்ற காலம், நிகழ்காலம், வரும் காலம். சூலம் சிவனுக்கும், திகிரி, சங்கு திருமாலுக்கும், கரகம் பிரமனுக்கும் உரியபொருள்கள். அவற்றை விட்டுவிட்டு வில்லைத் தூக்கிக் கொண்டான்; ஆல் இலை திருமாலுக்கும், மலர் பிரமனுக்கும், வெள்ளிப் பொருப்பு சிவனுக்கும் உரிய இடங்கள். அவற்றை விட்டான்; அயோத்திவந்தான்; எனவே இராமன் மும்மூர்த்திகளும் ஒருங்கே வந்து தோன்றிய ஒருவன் எனக்கொள்க.

(சுந்தர. பிணிவிட்டு படலம். இராமன் கடவுள் தன்மையை அனுமன் இராவணனுக்குச் சொல்லுதல்)

புரம் தீப்புகப் பொங்கியோன்

281 புரம்பி ழைப்புஅரும்
தீப்புகப் பொங்கியோன்,
நரம்புஇ ழைத்தநின்
பாடலின் நல்கிய
வரம்பி ழைக்கும்;
மறைபிழை யாதவன்
சரம்பி ழைக்கும்என்று
எண்ணுதல் சாலுமோ? 11

பொழிப்பு : முப்புரத்தை எவரும் தப்ப முடியாதபடி தீப்பற்றி எரியுமாறு சினந்தெழுந்த சிவபெருமான், நரம்புகளைக் கொண்டு இசைத்த உன்பாடலுக்கு இரங்கி, தந்தருளிய வரம் பிழைபடும்; மறைவழியில் தவருதவனான இராமன் விடும் அம்புகள் தவறும், என நீ எண்ணுதல் பொருந்துமா?

விளக்கம் : இராவணன் மறை பிழைத்தவன் ஆதலின் அவன்பெற்ற வரம் பிழைக்கும் என்றும், மறைபிழையாத இராமனின் சரம் பிழைக்காது என்றும் கொள்க. கைலையின் கீழ் அகப்பட்டு திணறிய இராவணன், தன் தலையில் ஒன்றைக்கிள்ளி, அதனை வீணையாகவும், தன் நரம்புகளில் சிலவற்றைப் பிடுங்கி, தந்தியாகவும் கொண்டு, இசை பாடி, சிவபெருமானை மகிழ்வித்து, சிவபெருமானிடம் வரம் பல பெற்றான் என்பது வரலாறு.

(சுந்தர. பிணிவீட்டு படலம். இராமன் அம்பு தப்பாது என இராவணனுக்கு அனுமன் இடித்துக் கூறுதல்)

பாகத்தாள் ஈசன் மகுடத்தாள்

282 சோகத்தாள் ஆய நங்கை
கற்பினுல், தொழுதற்கு ஒத்த
மாகத்தார் தேவி மாரும்,
வான்சிறப்பு உற்ருர்; மற்றைப்
பாகத்தாள், இப்போது ஈசன்
மகுடத்தாள்; பதுமத் தாளும்
ஆகத்தாள் அல்லள், மாயன்
ஆயிரம் மௌலி மேலாள். 12

பொழிப்பு: துன்பமே வடிவெடுத்து, சிறை இருந்த செல்வியாகிய சீதையின் கற்புக் காரணமாக, (இயல்பாகவே) தொழத்தகும் சிறப்புப் பெற்ற வான்நாட்டில் வாழ்வாராகிய இந்திரன், பிரமன் உள்ளிட்ட அமரர்களின் மனைவிமார்களும் (மேலும்) பெரிய சிறப்பை அடைந்தனர்; ஈசனின் ஒரு புறத்திலே உள்ள உமையவள், இப்போது (ஈசன் பாகத்தாள் அல்லள்) அவன் மகுடத்தாள் ஆவாள்; பதுமத்தாளாய திருமகளும் (இனி) மாயன் மார்பினுள் அல்லள்; அவன் ஆயிரம் முடியின் மேல் ஏறி இருக்கும் தகையினுள்.

விளக்கம்: சோகம்: துக்கம். நங்கை: சீதை. மாகம்: வான். ஈசன்: சிவன். மகுடம்: முடி. பதுமம்: தாமரை. ஆகம்: மார்பு. மாயன்: திருமால். மௌலி: முடி. சீதையின் கற்புப் பெண் குலத்தையே உயர்த்திவிட்டது; ஈசன் உமையை இனித் தலையில் தூக்கிவைத்துக் கொண்டுதான் ஆடுதல் வேண்டும்; திருமாலும் அப்படித்தான். இன்னும் திருமால் திருவை ஆயிரம் முடிக்கும் மேலே ஏற்றிக்கொள்ளல்வேண்டும் எனக்கொள்க.

(சுந்தர. திருவடி தொழுத படலம். சீதையின் கற்புத்திறத்தை அனுமன் இராமனிடம் மொழிதல்)

பண்டை ஈசனுர் படையோ?

283 பாசமோ? மலரின் மேலான்
பெரும்படைக் கலமோ? பண்டை
ஈசனுர் படையோ? மாயோன்
நேமியோ? யாதோ, இன்னம்

விசநீர் விரும்பு கின்றீர்?
அதற்குநாம் வெருவி, சாலக்
கூசினேம்; போதும், போதும்;
கூற்றினுர் குறுக வந்தார். 13

பொழிப்பு: நாகபாசமோ? தாமரை மேல் வாழும் பிரமதேவனின் பெரிய படைக்கலமோ? பழைமையான சிவபெருமான் வாளியோ? திருமாலின் சக்கரமோ? வேறு யாதோ? (எங்கள் மீது) நீர் எறிய நினைக்கின்றீர்; அந்தப் படைக்கு நாங்கள் அஞ்சிப் பெரிதும் பின் வாங்கினேம்; உங்கள் ஆற்றல் அமையும், அமையும்; (உங்களுக்கு) எமனுர் நெருங்கி வந்து விட்டார்.

விளக்கம்: இவ்வாறு இந்திரசித்தனிடம் அனுமன் எள்ளிக் கூறினுன் என்க. எல்லாவற்றையும் நிறுத்துங்கள்; உங்களுக்கு எமன் வந்துவிட்டான் என்பது கருத்து. கூற்றினுர் என்று இலக்குவனையே குறிக்கப் பெற்றது என்றும் கொள்ளலாம்.

(யுத்த. நிகும்பலை யாகப் படலம். இந்திரசித்தனிடம் அனுமன் நகையாடிப் பேசுதல்)

விடம் துடிக்கின்ற கண்டத்து அண்ணல்

284 விடம்துடிக் கின்ற கண்டத்து
அண்ணலும், விரிஞ்சன் தானும்,
படம்துடிக் கின்ற நாகப்
பாற்கடல் பள்ளி யானும்,
சடம்துடிக் கிலராய் வந்து
தாங்கினும், சாதல் திண்ணம்;
இடம்துடிக் கின்றது உண்டே?
இருத்திரோ? இயம்பு வீரே? 14

பொழிப்பு: நஞ்சு பொங்குகின்ற கழுத்தை உடைய அண்ணலாம் சிவபெருமானும், பிரமனும், படம் விரித்து ஆடுகின்ற பாம்புப் படுக்கையில் பாற்கடலில் பள்ளிகொண்ட திருமாலும், உடல் நடுங்காதவராகி வந்து, (உங்களே) தாங்கினுலும் நீங்கள் அழிவது உறுதி; (உங்களுக்கு) இடப் பக்கம் துடிக்கின்றதல்லவா? இன்னும் உயிருடன் இருக்கப்போகின்றீர்களா? சொல்லுங்கள்.

விளக்கம்: சடம்: உடம்பு. இடம் துடித்தல்: வரப் போகும் தீமைக்கு அறிகுறி. மும்மூர்த்திகளும் இலக்குவனுக்கு முன்னே வந்து, உடல் நடுக்கம் இல்லாதவராய்க் காத்தாலும் சாவது நிச்சயம் என்க.

(யுத்த. நிகும்பலே யாகப் படலம். இலக்குவன் பிடியினின்றும் காக்க மும்மூர்த்திகளும் ஆற்ருர் என்று அனுமன் அறைதல்)

நாரி ஓர் பாகத்து அண்ணல்

285 நான்முகன், விடையை ஊரும்
நாரிஓர் பாகத்து அண்ணல்,
மான்முகன் முதலாய் உள்ள
வானவர் தொழுது போற்ற,
ஊன்முகம் கெழுவு வேலாய்!
உம்பர்நா யகியைச் சீறி,
தேன்முகம் மலரும் தாரான்,
அரிசொல, சீற்றம் தீர்ந்தான். 15

பொழிப்பு: பிரமதேவனும், காளை ஏறும் மாதொர் பாகத்து அண்ணலாகிய சிவபெருமானும், மான்முகத்தை உடைய மயன் முதலாய தேவர்களும் வணங்கித் துதிக்க, தசையை நுனியிலே கொண்ட வேலாயுதத்தை உடைய பரதனே! மேலான தலைவியாகிய சீதையைக் கோபித்து, தேனைத் தன்னிடத்துக் கொண்ட மலர்கின்ற பூமாலை அணிந்த இராம பிரானுனவன், தீக்கடவுள் சான்றுபகர, சினம் நீங்கினுன்.

விளக்கம்: அரி: அக்கினிக்கடவுள். மாற்ருன் சிறையில் இருந்த சீதையை இராமன் சீற, அவள் தீக்குளித்து எழுந்ததால், தீக்கடவுள் அவள் திறத்துக்குச்சான்று சொல்ல, அதனுல் இராமன் சீற்றம் தீர்ந்தான் என்பது கருத்து.

(யுத்த. மீட்சிப்படலம். இராமன் சீதையைச் சீறியதை அனுமன் பரதனுக்கு உரைத்தல்)

7 இந்திரசித்தன் மொழி

7. இந்திரசித்தன் மொழி.

'முக்கணன் முதலினோரை உலகொரு மூன்றினோடும் புக்கபோர் எல்லாம் வென்று நின்ற என் புதல்வன்' என, பெற்ற தாயாகிய மண்டோதரியால் பாராட்டப்பெற்ற இந்திரசித்தன், முக்கணனாகிய சிவனைப் பற்றிப் பதின்மூன்று இடங்களில் பேசுவான்.

"ஈசன்"

"சங்கரன்"

"முக்கணன்"

"சிவன்"

"அரன்"

"பிறை சென்னி வைத்தான்"

"விடையின் பாகன்"

"செம்மை காட்டும் ஆலம்கொண்டு
இருண்ட கண்டத்து அமரர்கோன்"

என்பன சிவனைப்பற்றி இந்திரசித்தன் கூறும் சொற்றொடர்கள்.

இந்திரசித்தன், அவன் சிறிய தந்தையாகிய விடணனோடு உரையாடும் போது,

'கந்தனார் தந்தையாரைக் கயிலையோடு ஒருகைக்கொண்ட
எந்தையார்'...

எனப்பேசும் பெருமிதமான பேச்சு, இந்திரசித்தன் சிவபெருமான் பெருமையையும், கந்தக்கடவுளின் வலிமையையும் எவ்வளவு மதிக்கின்றான் என்பதைக் காட்டும்.

சங்கரன், அயன், மால்.

286 கிங்கரர், சம்பு மாலி,
கேடிலா ஐவர், என்றுஇப்
பைங்கழல் அரக்க ரோடும்
உடன்சென்ற பகுதிச் சேனே,
இங்குஒரு பேரும் மீண்டார்
இல்லேயேல், குரங்குஅது, எந்தாய்!
சங்கரன், அயன்,மால் என்பார்
தாம்எனும் தகையது ஆமே. 1

பொழிப்பு: என் தந்தையே! கிங்கரர் என்னும் போர்வீரர்களும், சம்புமாலியும், அழிவில்லாத ஐவர் என்ற இந்தப் பசுமையான வீரக்கழலணிந்த அரக்கர்களுடன், சேர்ந்து சென்ற பகுதியையுடைய, சேனேயில், ஒருவர்கூடத் திரும்பிவரவில்லே என்ருல், அந்தக் குரங்கானது அரன், அயன், அரி என்ற மும்மூர்த்திகள்தாம் என்று சொல்லக்கூடிய தகுதியையுடையது அல்லவா?

விளக்கம்: இத்துணைப் பெரிய வீரர்களேயும் தன்னந் தனியனுக நின்று அனுமன் அழித்தமையால், அனுமன் மும்மூர்த்திகளனைய ஆற்றல் வாய்ந்தவன் என இந்திரசித்தன் எண்ணுகின்ருன்.

(சுந்தர. பாசப் படலம். இந்திரசித்தன் இராவணனிடம்
அனுமன் பெருமையை உரைத்தல்)

முக்கணன் கயிலே

287 திக்கய வலியும், மேல்நாள்
திரிபுரம் தீயச் செற்ற
முக்கணன் கயிலே யோடும்,
உலகுஒரு மூன்றும் வென்ருய்!
அக்கனேக் கொன்று, நின்ற
குரங்கினே ஆற்றல் காண்டி;
புக்குஇனி வென்றும் என்ருல்,
புலம்புஅன்றி புலமைத்து ஆமோ? 2

பொழிப்பு : திக்குயானைகளின் ஆற்றலையும், அந்தநாளில் முப்புரம் வேவ அழித்த முக்கண்ணனாகிய சிவபிரான் கயிலையுடன், மூன்று உலகங்களையும் வெற்றிகொண்டாய்! அத்தகைய நீ, (அரியமகன்) அக்கனைக் கொன்றுவிட்டுத் தான் உயிரோடு நின்ற குரங்கு, தன் ஆற்றலைக்காட்டப் பார்த்துக்கொண்டிருக்கிறாய்! (இவ்வளவுக்கு விட்டுவிட்டு) இனிப்போய் அந்தக் குரங்கை நாம் வெல்லுவோம் என்று சொன்னால், அது அழுகையைத் தவிர அறிவுடைமை ஆகுமா?

விளக்கம் : திக்கு + கயம், திக்கயம் என மருவியது. தீய : எரிய. அக்கனைக் கொன்றுவிட்டுஅந்தக்குரங்கு இன்னும் உயிர்சுமந்து ஆரவாரம் செய்கின்றது. இவ்வளவையும் தாண்டி இனி வெல்வோம் என்பது அறிவுடைமையன்று என்க.

(சுந்தர. பாசப்படலம். இந்திரசித்தன் இராவணனிடம் வருந்திப் பேசுதல்)

சிவன் இவன்

288 புவனம்எத் தனைஅவை
அனைத்தும் போர்கடந்த
அவனைஉற்று, 'அரிஉரு-
-வான ஆண்தகை
சிவன்எனச் செங்கணான்
எனச்செய் சேவகன்
இவன்எனக் கூறிநின்று,
இருகை கூப்பினான். 3

பொழிப்பு : எத்தனை உலகங்கள் உண்டோ அத்தனை உலகங்களையும் போரில் வென்றவனாகிய இராவணனைப் பார்த்து, "குரங்கு வடிவு எடுத்த இந்த ஆண்தன்மையுடைய இவன் சிவபிரான் என்றும், திருமால் என்றும் சொல்லத்தக்கவாறு போர் செய்யவல்ல வீரனாவான்" என்று மொழிந்து நின்று இரண்டு கைகளையும் தூக்கி வணங்கினான் இந்திரசித்தன்.

விளக்கம் : புவனம் : உலகு. அரி : குரங்கு. சேவகன் : வீரன்

(சுந்தர. பிணிவீட்டு படலம். சிவனும் மாலுமே என்னத்தக்கான் அனுமன் என இந்திரசித்தன் இயம்பல்)

ஈசன் அருள் செய்தன

289 ஈசன்அருள் செய்தனவும்,
ஏடுஅவிழ் மலர்ப்பேர்
ஆசனம் உவந்தவன்
அளித்தனவும் ஆய
பாசம்முதல் வெம்படை
சுமந்துபலர் நின்ருர்;
ஏசஉழல் வேன்ஒருவன்
யானும்உளென் அன்ருே? 4

பொழிப்பு : சிவபெருமான் கருணைகூர்ந்து ஈந்தனவும், இதழ் விரிகின்ற தாமரையைப் பெரிய இருக்கையாகக்கொண்டு வாழ்பவணுகிய பிரமன் கொடுத்தவையுமான பாசம் முதலிய கொடிய படைகளைத் தாங்கிப் பலர் நிற்கின்ருர்கள். (பிறர்) இகழுமாறு திரிபவணுகிய யானும் ஒருவன் இருக்கின்றேன் அல்லவா?

விளக்கம் : ஏடு : இதழ். உவந்தவன் : விரும்பி வாழ்பவன். பாசம் : நாகபாசம். இலங்கையைப் பெரிதும் அழித்த குரங்கை உயிர்சுமந்து திரும்ப விட்டமையால், "ஏச உழல்வேன்" எனத் தன்னை இழித்துக் கூறினன் என்க.

(யுத்த. இராவணன் மந்திரப் படலம். இராவணனிடம் இந்திரசித்தன் தன்னை நொந்து கூறுதல்)

தேம்பல் பிறை சென்னிவைத்தான்

290 பாம்பின்தரு வெம்படை, பாசு-
-பதத்தி ஞேடும்,
தேம்பல்பிறை சென்னிவைத் தான்தரு
தெய்வ ஏதி,
ஓம்பித்திரிந் தேன்;எனக்கு இன்றுஉத
வாது போமேல்
சோம்பித்துறப் பன்உயிர்; சோறும்
உவந்து வாழேன். 5

பொழிப்பு : இளம் பிறையை முடியில் வைத்த சிவபெருமான் ஈந்த, நாகத்தின் உருவில் அமைந்த கொடிய படையையும், பாசுபதத்தோடு, கடவுள் தன்மை வாய்ந்த ஏனைய படைகளையும் பாதுகாத்துத்திரிந்து காலம் கழித்த எனக்கு, அப்படைகள் இன்று பயன்படாமல் போகுமானால், சோம்பல் அடைந்து உயிரை விட்டுவிடுவேன் ; சோறும் விரும்பி உண்டு வாழமாட்டேன்.

விளக்கம் : ஏதி : படைகளின் பொதுப் பெயர். ஓம்பி : பாதுகாத்து நாகபாசப் படையும், பாசுபதப் படையும், பிற படைகளும் இந்திரசித் தனுக்கு ஈசன் ஈந்தனன் என்க.

(யுத்த. நாகபாசப் படலம். இந்திரசித்தன் வஞ்சினம் கூறல்)

அரன், பிரமன் என்பார்ப் பேசுக

291 'அந்நரன்; அல்லன் ஆகின்,
நாரணன் அனையன்; அன்றேல்,
பின்அரன்; பிரமன், என்பார்ப்
பேசுக; பிறந்து வாழும்
மன்னர்,நம் பதியின் வந்து,
வரிசிலை வடித்த கல்வி
இந்நரன் தன்னேடு ஒப்பார்
யார்உளர், ஒருவர்?' என்ருன். 6

பொழிப்பு : '(இலக்குவன்) அந்த நரனேயாவன் ; அவன் அல்லன் என்ருல் நாராயணனை நிகர்ப்பான் ; அவனும் அல்லாவிட்டால், பின்னர் அரன், பிரமன் என்பவர்களை ஒப்பாகச் சொல்க ; நம் நகரத்தில் வந்து, கட்டமைந்த வில் தொழிலை வடித்துக்காட்டிய கல்வி உடைய இம்மனித னேடு ஒப்பவர் இவ்உலகத்துப் பிறந்து வாழும் அரசர்களுள் யார் ஒருவர் இருக்கின்ருர்?' என்று சொன்னன் (இந்திரசித்தன்)

விளக்கம் : அ : பண்டறிசுட்டு. அந்நரன் : நாராயணனேடு இரட் டைப் பிறவியில் தோன்றியவன். இந்நரன் : இந்த மனிதன். (இலக்குவன்)

(யுத்த. நாகபாசப் படலம். இலக்குவன் திறத்தை
இந்திரசித்தன் இயம்பல்)

விடையின் பாகன்

292 இந்திரன் விடையின் பாகன்,
எறுழ்வலிக் கலுழன் ஏறும்
சுந்தரன், அருக்கன், என்றுஇத்
தொடக்கத்தார் தொடர்ந்த போரில்
நொந்திலென்; இனையது ஒன்றும்
நுவன்றிலென்; மனிதன் நோன்மை,
மந்தரம் அனைய தோளாய்!
வரம்புஉடைத்து அன்று மன்னே 7

பொழிப்பு: மந்தர மலையை ஒத்த தோளை உடைய (இராவணனே!) தேவேந்திரன், விடையைச் செலுத்துகின்ற சிவபெருமான், மிக்க வலி உடைய கருடனில் ஏறும் அழகனாகிய திருமால், ஆதவன் என்ற இக் கூட்டத்தார் ஆற்றிய போரில் எல்லாம் நான் வருந்தினேன் அல்லேன்; (தளர்ச்சியுற்று) இத்தகைய பேச்சு ஒன்றும் பேசினேன் அல்லேன்; இந்த மனிதனுடைய ஆற்றல் வரம்புக்கு உட்பட்டதாக இல்லை.

விளக்கம்: எறுழ்: மிகுதிப்பொருளது. கலுழன்: கருடன். சுந்தரன்: அழகன். அருக்கன்: சூரியன். நுவலுதல்: சொல்லுதல். நோன்மை: வலிமை. மந்தரம்: மந்தரமலை. வரம்பு: எல்லை. மன், ஓ: அசை.

(யுத்த. நாகபாசப் படலம். இராவணன் வினவிற்கு இந்திரசித்தன் அளித்த விடை)

விடையவன் விலக்கினும் கலக்குவென்

293 இலக்கு வன்எனும் பெயர்உனக்கு
இயைவதே என்ன,
இலக்கு வன்கணைக்கு ஆக்குவென்;
"இதுபுகுந்து இடையே
விலக்கு வென்!"என விடையவன்
விலக்கினும், வீரம்
கலக்கு வென்;இது காணும்,உன்
தமையனும் கண்ணால். 8

பொழிப்பு : 'இலக்குவன்' என்ற பெயர் உனக்குப் பொருந்துவதே என்று காட்ட, என்னுடைய வலிய அம்புக்கு (உன்னை) இலக்காக ஆக்குவேன் ; (என்னுடைய) ' இந்தச் செயலைத் தடுப்பேன் ' என்று கூறி, விடைஊரும் சிவனே நடுவே நுழைந்து தடுத்தாலும், அந்தச் சிவன் வீரத்தையும் கலக்கி அழிப்பேன் ; இந்நிகழ்ச்சியை உன் அண்ணனாகிய இராமனும் கண்ணால் காண்பான்.

விளக்கம் : இலக்குவன் என்ற பெயரை எடுத்துக்கொண்டு இலக்கு வன்கணைக்கு ஆக்குவென் என்று கூறிய கருத்து மிக்க சிறப்புடைத்து.

(யுத்த. பிரமாத்திரப் படலம். இந்திரசித்தன் இலக்குவனைப் பார்த்து வஞ்சினம் கூறல்)

நெடுமால் சிவன் எனும் மேலவர்

294 வில்இங்குஇது நெடுமால்,சிவன்
எனும்மேலவர் தனுவே
கொல்என்றுகொண்டு அயிர்த்தான்;நெடுங்
கவசத்தையும் குலையாச்
செல்லும்கொடும் கணையாவையும்
சிதையாமையும் தெரிந்தான்;
வெல்லும்தரம் இல்லாமையும்
அறிந்தான்,அகம் மெலிந்தான். 9

பொழிப்பு : ' இப்போது இந்த இலக்குவன் பிடித்துள்ள வில் திருமால், சிவன் எனும் சிறந்த கடவுளர்களின் வில்லோ ' என்று ஐயுற்றான் ; தான் அணிந்த நெடிய கவசத்தையும் அழித்துச் செல்லும் கொடிய அம்புகள் யாவும் அழியாமல் இருப்பதையும் ஆராய்ந்தான் ; தான் வெல்லுந் தன்மை இல்லாதிருப்பதையும் அறிந்துகொண்டவனாய் உள்ளம் தளர்ந்தான் (இந்திரசித்தன்)

விளக்கம் : இலக்குவன் பிடித்த வில், மால் சிவன் வில் என்றும், அவன்விடும் கணைகள் - அழிக்கமுடியாத தன் கவசத்தையும் சிதைத்து அவை அழியாதிருப்பதையும் ஆய்ந்து, தன் தோல்வியை உணர்ந்து தளர்ந்தான் இந்திரசித்தன் என்க.

(யுத்த. நிகும்பலை யாகப் படலம். இந்திரசித்தனின் தோல்வி மனப்பான்மை)

சிவன் நன்படை தொடுத்து முடிப்பேன்

295 அவன்அன்னது கண்டான்;இவன்
ஆரோ?என அயிர்த்தான்;
'இவன்அன்னது முதலேஉடை
இறையோன்'என வியவா,
'எவன்,என்னினும் நன்றுஆகுக!
இனிஎண்ணலன்' என்று,
'சிவன்நன்படை தொடுத்து,ஆர்உயிர்
முடிப்பேன்'எனத் தெரிந்தான். 10

பொழிப்பு: அந்த இந்திரசித்தன் அதைக் கண்டான்; 'இவன் யாரோ?' என்று ஐயுற்றான்; 'இவன் அந்தச் சக்கரப் படையை உடைய முதல்வனான திருமாலே' என வியப்பு எய்தி, இவன் எவனாயினும், என் செயல் நன்றே முடிக! இனி அதைப்பற்றி ஆராய மாட்டேன்' என்று சொல்லி, 'சிவனது நல்ல படையாகிய பாசுபதத்தைத் தொடுத்து' இவனது அரிய உயிரைக் குடிப்பேன்' என எண்ணினான்.

விளக்கம்: அயிர்த்தான்: ஐயுற்றான். இவன்: இந்த இலக்குவன். அன்னது: அந்தச் சக்கரப் படை.

(யுத்த. நிகும்பலை யாகப் படலம். இந்திரசித்தன்
பாசு பதத்தை விடக் கருதல்)

தானே சிவன் தரப் பெற்றது

296 'தானேசிவன் தரப்பெற்றது,
தவம்நாள்பல உழந்தே;
தானே,"பிறர் அறியாதது
தந்தேன்"எனச் சமைந்தான்;
ஆனால்,இவன் உயிர்கோடலுக்கு
ஐயம்இலை' என்று,
எல்நாளும்இது ஆனால்,எதிர்
தடைஇல்லதை எடுத்தான். 11

பொழிப்பு: தான் பல நாள் வருந்திச் செய்த தவத்தின் பயனுல் சிவபெருமான் நேரில் வந்து, தானுகவே தரப்பெற்றது; அச்சிவனே 'ஏனையோர் அறியாததான இப்படையை உனக்குத் தந்தேன்' என்று அருள் செய்துகொடுத்தான்; 'அதனுல் இவன் உயிரை இப்படை கொள்வதில் ஐயம்இலை' எனச் சொல்லி, பொருந்திய நாள் இதுவானுல், எதிர்த்து நின்று தடுக்க முடியாததை (பாசுபதத்தை) எடுத்தான்.

விளக்கம்: விட்டான் என அடுத்த பாட்டில் முடிகின்றது. அப் பாடல் இந்நூலுக்குத் தொடர்பு இல்லையாதலால் இங்கு எடுத்துக்கொள்ளப்பெறவில்லை. உழந்து: வருந்தி. ஏல்நாள்: பொருந்தும் காலம்.

(யுத்த. நிகும்பலை யாகப் படலம். இந்திரசித்தன் பாசு பதத்தைத் தொடுக்க எடுத்தல்)

கந்தனுர் தந்தையார்

297 'முந்தைநாள், உலகம் தந்த
முத்தவா னோர்கட்கு எல்லாம்
தந்தையார் தந்தை யாரைச்
செருவிடைச் சாயத் தள்ளி,
கந்தனுர் தந்தை யாரைக்
கயிலையோடு ஒருகைக் கொண்ட
எந்தையார், அரசு செய்வது
இப்பெரும் பலம்கொண் டேயோ?' 12

பொழிப்பு: முன்நாளில் உலகங்களை உண்டாக்கிய முதிய அமரர்கட்கெல்லாம் தந்தையாராகிய பிரம தேவனது தந்தையாராம் திருமாலைப் போரிலே வீழுமாறு வீழ்த்தி, கந்தனுர் தந்தையாராகிய சிவபெருமானைக் கயிலை மலையோடு ஒருகையினுல் தூக்கிக்கொண்ட என் தந்தையாராகிய இராவணனுர் அரசு செலுத்துவது இந்தப் (மனிதர்களின்) பெரிய ஆற்றலைக்கொண்டா?

விளக்கம்: உலகம் தந்த தந்தையார்: பிரமதேவன். அவரைப்பெற்ற தந்தையார்: திருமால். கந்தனுர்: முருகக் கடவுள். அவர் தந்தையார்: சிவபெருமான். எந்தையார்: இராவணனுர். இப்பெரும் பலம்: இராம இலக்குவர் வலி. இராம இலக்குவர் வலிநிழலில் ஒதுங்கி நிற்கும் வீடணனைப் பார்த்து, இந்திரசித்தன் இவ்வாறு பெருமிதத்தோடு பேசுகின்ருன்.

(யுத்த. நிகும்பலை யாகப் படலம். இந்திரசித்தன் வீடணனை ஏளனமாகப் பேசுதல்)

ஆலம் கொண்டு இருண்ட கண்டத்து அமரர் கோன்

298 காலம்கொண்டு எழுந்த மேகக்
கருமையான், 'செம்மை காட்டும்
ஆலம்கொண்டு இருண்ட கண்டத்து
அமரர்கோன் அருளின் பெற்ற
சூலம்கொண்டு எறிவல்' என்று
தோன்றினன், 'பகையின் தோற்ற
மூலம்கொண்டு உணரா நின்னை
முடித்துஅன்றி, முடியேன், என்றான். 13

பொழிப்பு: கார்காலத்தில், நீரைக்கொண்டு எழுந்த முகிலை ஒத்த கருநிறம் கொண்டவனான இந்திரசித்தன், 'நஞ்சைக்குடித்து அதனால் இருண்ட கழுத்தை உடைய செம்மை நிறம் கொண்ட சிவபெருமானின் அருளினாலே பெற்றுக்கொண்ட சூலப்படையை வீசுவேன்' என்று தோன்றி, 'பகைமையின் பிறப்பு வரலாற்றை அறியாத நின்னைத் தொலைத்தன்றி நான் முடியமாட்டேன், என இயம்பினான்.

விளக்கம்: காலம்: கார்காலம். செம்மை நிறம் சிவனுக்குரியது. 'சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான்' என உரைப்பர் அப்பர் சுவாமிகள். தோற்றமூலம்: பிறப்பு வரலாறு.

(யுத்த. இந்திரசித்தன் வதைப் படலம். இந்திரசித்தன் இலக்குவனைப் பார்த்து உன்னை முடித்தாலன்றி முடியேன் எனல்)

8 சூர்ப்பணகை மொழி

8. சூர்ப்பணகை மொழி

இராவணன் தங்கையாகிய சூர்ப்பணகை சிவனைப்பற்றிப் பன்னிரண்டு இடங்களில் பேசுவாள்.

" ஈசன் "

" கற்றைஅம் சடையவன் "

" முப்புரங்கள் செற்ற சேவலோன் "

" தழல் எடுத்தான் "

" சிவன் "

" அரன் "

என்பன அவள் கூறும் சிறப்புச் சொற்றொடர்கள்.

இராவணன் மலை எடுத்த நிகழ்ச்சியை,

'வெள்ளிமலை எடுத்து உலகம் மூன்றும் காவலோன்'

'தழல் எடுத்தான் மலைஎடுத்த தனிமலையே!'

'அரன் இருந்த மலைஎடுத்த அண்ணவோ! அண்ணவோ!'

என, சூர்ப்பணகை வியந்து கூறுவாள்.

'சிவன் தடக்கை வாள் கொண்டாய்' என, சூர்ப்பணகை இராவணனை விளித்துக் கூறுவது, 'நாளோடு வாள் கொடுத்த நம்பன் தன்னை' என்ற அப்பர் தேவாரத்தை நினைப்பூட்டுகின்றது.

'இருமூன்று வதனத்தோன் தன் தந்தையும் உமையைப் பெற்றான்' என்று அறுமுகக் கடவுளைச் சூர்ப்பணகை பாராட்டுவது எண்ணி இன்புறத்தக்கது.

" இந்திரன் சசியைப் பெற்றான்;
இருமூன்று வதனத் தோன்தன்

தந்தையும் உமையைப் பெற்றான்;
தாமரைச் செங்க ணனும்

செந்திரு மகளைப் பெற்றான்;
சீதையைப் பெற்றாய் நீயும்;
அந்தரம் பார்க்கின் நன்மை
அவர்க்குஇலை; உனக்கே ஐயா!"

"பாகத்தில் ஒருவன் வைத்தான்;
பங்கயத்து இருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான்;
அந்தணன் நாவில் வைத்தான்;
மேகத்தில் பிறந்த மின்னை
வென்றநுண் இடையி னாளை,
மாகத்தோள் வீர! பெற்றால்,
எங்ஙனம் வைத்து வாழ்தி!"

என்ற இரண்டு பாடலும் சூர்ப்பணகையின் அளவற்ற திறமையை எடுத்துக் காட்டுகின்றது.

'ஈசனார் கண்ணில் வெந்தான் மன்மதன் என்பது பொருந்தாது; சீதையைக் கண்டான் அவன்; கவரமுடியவில்லை; அதனால் நோய்வாய்ப் பட்டு, பேராசையால் அழிந்து தேய்ந்தான் அனங்கன்' என்ற கருத்துப்பட வரும் சூர்ப்பணகையின் பாடல் எண்ணி இன்புறத்தக்கது.

"ஈசனார் கண்ணின் வெந்தான்
என்னும்ஈது இழுதைச் சொல்;இவ்
வாசம் நாறு ஓதியாளைக்
கண்டனன்; வவ்வல் ஆற்றான்;
பேசல்ஆம் தகைமைத்து அல்லாப்
பெரும்பிணி பிணிப்ப, நீண்ட
ஆசையால் அழிந்து தேய்ந்தான்
அனங்கன்அவ் உருவம் அம்மா!"

ஈசற்கு மலர்க்கண் மூன்று

299 "சிந்தையில் உறைபவர்க்கு
உருவம் தீர்ந்ததால்;
இந்திரற்கு ஆயிரம்
நயனம்; ஈசற்கு
முந்திய மலர்க்கண்ஓர்
மூன்று; நான்குதோள்,
உந்தியில் உலகளித்-
-தாற்கு" என்று உன்னுவாள். 1

பொழிப்பு: '(எல்லோருடைய) உள்ளத்திலும் வீற்றிருப்பவனான மன்மதனுக்கு வடிவம் ஒழிந்துவிட்டது; தேவேந்திரனுக்கு ஆயிரம் கண்கள் உண்டு; சிவபிரானுக்கு, பூக்களுள் சிறந்த தாமரை போன்ற கண் மூன்று உள; தன் திரு உந்தியினின்றும் உலகத்தைத் தோற்றுவித்த திருமாலுக்குத் தோள் நான்கு உள;' என்று எண்ணுவாள் (சூர்ப்பணகை.)

விளக்கம்: இராமனைக்கண்ட சூர்ப்பணகை இவன் காமனோ என நினைத்தாள்; அவனுக்கு வடிவம் இல்லையே எனத் துணிந்து, இந்திரனாக இருக்கலாமோ என எண்ணினாள்; கண்கள் ஆயிரம் இன்மையின், இந்திரன் அல்லன் எனத் தெளிந்தாள்; சிவனாகலாமோ எனின், கண் மூன்று இல்லையே என நினைந்தாள்; திருமாலோ என்றால் தோள்கள் நான்கைக் காணோமே என்று கருதினாள் என்க.

(ஆரணிய. சூர்ப்பணகைப் படலம். இராமனது எழிலில் சூர்ப்பணகை ஈடுபடல்)

கற்றைஅம் சடையவன்

300 'கற்றைஅம் சடையவன்
கண்ணில் காய்தலால்
இற்றவன், அன்றுதொட்டு
இன்று காறும்,தான்
நற்றவம் இயற்றி,அவ்
அனங்கன், நல்உருப்
பெற்றனன் ஆம்,எனப்
பெயர்த்தும் எண்ணுவாள். 2

பொழிப்பு : 'தொகுதியான அழகிய சடையை உடைய சிவபெருமான் நெற்றிக் கண்ணால் எரித்தமையால், உடல் இழந்த அந்தக் காமன், அன்று முதல் இன்று வரையும் தான் சிறந்த தவத்தைச் செய்து, இந்த நல்ல வடிவத்தைப் பெற்றுக்கொண்டனன் போலும்' என மீண்டும் நினைப்பாள்.

விளக்கம் : இற்றவன் : உடல் இழந்தவன். சிவன் கண்ணில் வெந்து பொடியான காமன் நல்ல தவம் செய்து முன்னையினும் சிறந்த வடிவத்தைப் பெற்று வந்தவனே இவன் எனப் பின்னரும் நினைக்கின்றாள் என்க.

(ஆரணிய. சூர்ப்பணகைப் படலம். காமனே இராமனாக வந்தான் எனச் சூர்ப்பணகை கருதுதல்)

முப்புரங்கள் செற்ற சேவலோன்

301 'பூவிலோன் புதல்வன் மைந்தன்
புதல்வி;முப் புரங்கள் செற்ற,
சேவலோன் துணைவன் ஆன
செங்கையோன் தங்கை; திக்கின்
மாவெலாம் தொலைத்து, வெள்ளி
மலைஎடுத்து, உலகம் மூன்றும்
காவலோன் பின்னை; காம
வல்லியாம் கன்னி' என்றாள். 3

பொழிப்பு : பூவில் பிறந்த பிரமனுக்கு மகனுடைய மகனுக்கு மகள்; முப்புரத்தை அழித்த, காளையைச் செலுத்தும் சிவபிரானின் தோழனான செவ்விய கையைப் பெற்ற குபேரனின் தங்கை; திக்கு யானைகளின் ஆற்றல்களை அழித்து, வெள்ளி மலையைக் கையால் பெயர்த்து, மூன்று உலகங்களையும் காக்கின்றவனான இராவணனுக்குப் பின்னே பிறந்தவள்; காமவல்லி என்னும் பெயரை உடைய கன்னிப்பெண் நான்' என்று இயம்பினாள். (சூர்ப்பணகை)

விளக்கம் : பூவிலோன் : பிரமன். புதல்வன் : புலத்தியன். மகன் : விச்சிரவசு. கன்னி என்றமையால் தான் திருமணம் ஆகாதவள் என்று காட்டுகின்றாள்.

(ஆரணிய. சூர்ப்பணகைப் படலம். இராமனுக்கு, சூர்ப்பணகை தன்னை அறிமுகப்படுத்துதல்)

பொருப்பில் வாழும் அற்புடையவன்

302 பொற்புடை அரக்கி, 'பூவில்
புனலினில், பொருப்பில் வாழும்
அற்புடை உள்ளத் தாரும்,
அனங்கனும், அமரர் மற்றும்
எற்பெறத் தவம்செய் கின்றார்;
என்னை நீ இகழ்வது என்னே?
நற்பொறை நெஞ்சில் இல்லாக்
கள்வியை நச்சி' என்றாள். 4

பொழிப்பு: அழகை மேற்கொண்டவளான சூர்ப்பணகையாகிய அரக்கி, 'தாமரை மலரிலும், பாற்கடலிலும், வெள்ளி மலையிலும் வாழ்கின்ற அன்பு உள்ளம் கொண்ட அயன், அரி, அரன் ஆகியோரும், காமதேவனும், தேவர்களும், பிறரும் என்னை அடைவதற்குத் தவம் செய்து கொண்டிருக்கிறார்கள்; (அங்ஙனமாக) பெண்களுக்குரிய நல்ல பொறுமைக் குணம் உள்ளத்தில் இல்லாத இந்தக் கள்ளியை (சீதையை) விரும்பி என்னை இகழ்ந்து ஒதுக்குவது என்ன அறிவு?' என்று கேட்டாள்.

விளக்கம்: பொற்பு: அழகு அற்பு: அன்பு. எற்பெற: என்னை அடைய.

(ஆரணிய. சூர்ப்பணகைப் படலம். தன்னை ஏற்க மறுத்த இராமனிடம் சூர்ப்பணகை கேட்டல்)

தழல் எடுத்தான் மலை எடுத்தான்

303 நிலைஎடுத்து, நெடுநிலத்து
நீஇருக்க, தாபதர்கள்
சிலைஎடுத்துத் திரியும்இது
சிறிதுஅன்றோ? தேவர்எதிர்
தலைஎடுத்து விழியாமைச்
சமைப்பதே? தழல்எடுத்தான்
மலைஎடுத்த தனிமலையே!
இவைகாண வாராயோ? 5

பொழிப்பு : அழலைத் தூக்கிய சிவபிரானின் வெள்ளி மலையை அள்ளி எடுத்த ஒப்பற்ற மலையே! நீண்ட உலகத்தில், சிறந்த நிலைபெற்று நீ இருக்கும்போது, தவ வேடம் பூண்டவர்கள் வில்லைத் தூக்கித் திரியும் இச்செயல் சிறுமை உடையது அல்லவா? அதுவுமன்றி அமரர்களுக்கு முன்னே தலை தூக்கி நிமிர்ந்து பார்க்காதபடி என்னைச் செய்வதா? இந்த இழிவைக் காண நீ வரமாட்டாயா?

விளக்கம் : தாபதர்கள் : தவக்கோலம் பூண்ட இராம இலக்குவர். சிலை : வில். சமைத்தல்: ஆக்குதல். தழல் : தீ. மூக்கை அறுத்து, நமக்குத் தோற்ற பகைவர்களாகிய தேவர்கள் முன்னே தலைநிமிர்ந்து பார்க்க முடியாமற் செய்த கொடுமையைக் காண நீ வாராயோ என்று இராவணனை அழைத்தாள் என்க.

(ஆரணிய. சூர்ப்பணகைப் படலம். மூக்கு அறுபட்ட
சூர்ப்பணகையின் முறையீடு)

சிவன் தடக்கை வாள் கொண்டாய்

304 காற்றினையும் புனலினையும்
கனலினையும், கடுங்காலக்
கூற்றினையும், விண்ணினையும்,
கோளினையும், பணிகோடற்கு
ஆற்றினை நீ! ஈண்டு,இருவர்
மானுடவர்க்கு ஆற்றுது
மாற்றினையோ? உன்வலத்தை;
சிவன்தடக்கை வாள்கொண்டாய்! 6

பொழிப்பு : சிவபிரானின் பெரிய கைகளால் தரப்பெற்ற வாளைப் பெற்றுக்கொண்ட (அண்ணு!) காற்றையும், நீரையும், நெருப்பையும், கடுமையான காலம் பார்த்து உயிர் வாங்கும் எமனையும், வானையும் ஒன்பது கோள்களையும் ஏவல் கொள்ளுதற்குரிய வலி பெற்ற நீ, இங்குத் தங்கியுள்ள இரண்டு மனிதர்களுக்கு ஆற்ருமல் உன் வலிமையை மாற்றிக் கொண்டாயோ!

விளக்கம் : பணிகோடல் : ஏவல் கொள்ளுதல்.

(ஆரணிய. சூர்ப்பணகைப் படலம். சூர்ப்பணகை, பூதங்களையும்
எமனையும், கோள்களையும் பணிகொண்ட உன் ஆற்றல்
எங்கே என இராவணனைக் கேட்டல்)

அரனேயோ? அரியேயோ? அயனேயோ?

305 மரன்ஏயும் நெடுங்கானில்
மறைந்துஉறையும் தாபதர்கள்
உரனேயோ? அடல்அரக்கர்
ஒய்வேயோ? உற்றுஎதிர்ந்தார்
அரனேயோ? அரியேயோ?
அயனேயோ? எனும்ஆற்றல்
கரனேயோ? யான்பட்ட
கையறவு காணுயோ? 7

பொழிப்பு: பகைத்து எதிர்த்தவர்கள், சிவனே? மாலோ? பிரமனே? என்று ஐயுறத்தக்க, (சூலமும், சக்கரமும், மறை நூலும் தாங்கும்) வலிமை பெற்ற கரங்களை உடைய (அண்ணு!) மரங்கள் அடர்ந்த நீண்ட காட்டில் மறைந்து வாழும் தவத்தவர் வலிமையா? வன்மை வாய்ந்த அரக்கரின் ஒய்வா? நான் அடைந்த துன்பத்தை நீ வந்து காண மாட்டாயா?

விளக்கம்: மரன்: மரம். ஏயும்: பொருந்தும். கையறவு: துயரம். கரன்: கரத்தை உடையவன். இங்கு இராவணனைக் குறிக்கும் கரன் என்ற அரக்கனை விளித்ததாகக் கொள்ளலாமோ எனின், இப்பாடலுக்கு முன்னும் பின்னும் இராவணனையே விளித்திருப்பதால் இராவணன் என்று கொள்ளுதலே சிறப்புடைத்து.

(ஆரணிய. சூர்ப்பணகைப் படலம். தன் கையறவுக்குக் காரணம் தாபதர் உரனு? அரக்கர் ஒய்வா? என, சூர்ப்பணகை கேட்டல்)

அரன் இருந்த மலை எடுத்த அண்ணு!

306 உரன்நெரிந்து விழ,என்னை
உதைத்து,உருட்டி, மூக்குஅரிந்த
நரன்இருந்து தோள்பார்க்க,
நான்கிடந்து புலம்புவதோ?

கரன்இருந்த வனம்அன்றோ?
இவைபடவும் கடவேனோ?
அரன்இருந்த மலைஎடுத்த
அண்ணாவோ! அண்ணாவோ!! 8

பொழிப்பு: சிவபெருமான் வீற்றிருந்த வெள்ளி மலையை எடுத்த ஓ அண்ணா! ஓ அண்ணா!! மார்பு நொறுங்கி விழுமாறு என்னை உதைத்து உருளச் செய்து, மூக்கை அறுத்த மனிதன் உயிரோடு இருந்து தோளைப் பார்த்து மகிழ, நான் இப்படிக் கிடந்து புலம்புவது முறையாமோ? கரன் என்ற அரக்கனின் காவல் அமைந்த வனம் அல்லவா இது? இவ்இழிவை ஏற்கும் கடமை உடையவளா நான்?

விளக்கம்: உரன் : மார்பு. நரன் : இலக்குவன்.

(ஆரணிய. சூர்ப்பணகைப் படலம். 'நரன் இருந்து தோள் பார்க்க, நான் கிடந்து புலம்புவதோ' என முறையிட்டு அண்ணனை அழைத்தல்)

பூங்கணையால் உயிர்வாங்கும் அவன்

307 சிவனும்,மலர்த் திசைமுகனும்
திருமாலும், தெறுகுலிசத்து
அவனும்,அடுத்து ஒன்றாகி
நின்றன்ன உருவோனே!
புவனம்அனைத் தையும்ஒருதன்
பூங்கணையால் உயிர்வாங்கும்
அவனும்,உனக்கு இளையானோ?
இவனேபோல் அருள்இலனால் 9

பொழிப்பு: சிவபெருமானும், தாமரைக்கிழவோனாகிய பிரமதேவனும், திருமாலும், பகை அழிக்கும் வச்சிரப் படையை உடைய இந்திரனும் சேர்ந்து ஒருருவாய் நின்றாற் போன்ற வடிவழகனே! உலகம் முழுதையும் ஒப்பற்ற தன் மலர் அம்பால் உயிர் கவரும் அந்த மதனனும் உனக்கு இளையவன்தானோ? என் உறுப்புக்களை அறுத்த இந்த இளவலைப் போலவே அவனும் அருள் அற்றவனாக என்னை வருத்துகின்றானே!

விளக்கம்: தெறுதல்: அழித்தல். குலிசம்: வச்சிரம். குலிசத்து அவன்: இந்திரன். புவனம்: உலகம். ஒரு: ஒப்பற்ற. பூங்கணை: மலர் அம்பு. பூங்கணையால் உயிர் வாங்கும் அவன்: மன்மதன். இலக்குவன் தான் பங்கப்படுத்தினன் என்றால் மன்மதன் உயிரையே வாங்கிவிடுவான் போலும் என்றவாறு.

(ஆரணிய. சூர்ப்பணகைப் படலம். மானபங்கத்தின் பிறகும் சூர்ப்பணகையின் காதல் பேச்சு)

ஈசனார் கண்ணில் வெந்தான்

308 'ஈசனார் கண்ணில் வெந்தான்
என்னும்ஈது இழுதைச் சொல்;இவ்
வாசம்நாறு ஓதி யாளைக்
கண்டனன், வவ்வல் ஆற்றான்,
பேசலாம் தகைமைத்து அல்லாப்
பெரும்பிணி பிணிப்ப, நீண்ட
ஆசையால் அழிந்து தேய்ந்தான்
அனங்கன்,அவ் உருவம் அம்மா!'

பொழிப்பு: மன்மதன், இந்த மணம் கமழும் கூந்தலை உடைய சீதையைக் கண்டனனாகிக் கவர்ந்து செல்ல முடியாதவனாய், பேசமுடியாத தன்மைகொண்ட பெரிய காமநோய் துன்புறுத்த, இவள்மீது தோன்றிய பேராசையால் தன் வடிவம் தேய்ந்து ஒழிந்தான்; (அவ்வாறாக) அந்த மன்மதன் சிவபெருமானின் நெற்றிக்கண்ணினால் வெந்து அழிந்தான் என்னும் இச்சொல் அறியாமை உடையதாம்.

விளக்கம்: இழுதை: அறியாமை. வாசம்: மணம். ஓதியாள்: கூந்தலை உடையாள். வவ்வல்: கவர்தல். 'பிணி' ஈண்டுக் காமநோய். அனங்கன்: மன்மதன். காமன், சீதையின் பேரழகில் கொண்ட பேராசை காரணமாக அவளைக் கவர எண்ணி, முடியாமல் தேய்ந்து அழிந்தானே அன்றி ஈசனார் கண்ணினால் வெந்தான் என்பது அறிவுடைமை ஆகாது என்றாள் சூர்ப்பணகை என்க.

(ஆரணிய. மாரீசன் வதைப் படலம். சீதையால் அழிந்தான் மன்மதன் என்று சூர்ப்பணகை கூறுதல்)

இருமூன்று வதனத்தோன் தந்தை

309 இந்திரன் சசியைப் பெற்றான்;
இருமூன்று வதனத் தோன்தன்

தந்தையும் உமையைப் பெற்றான்;
தாமரைச் செங்க ணானும்

செந்திரு மகளைப் பெற்றான்;
சீதையைப் பெற்றாய் நீயும்;

அந்தரம் பார்க்கின், நன்மை
அவர்க்குஇலை உனக்கே; ஐயா! 11

பொழிப்பு : ஐயனே! இந்திரன் சசி என்பவளை மனைவியாக அடைந்தான்; ஆறுமுகம் படைத்த கந்தக்கடவுளின் தந்தை உமையவளைத் துணைவியாகப் பெற்றான்; தாமரைச் செங்கண்ணனாகிய திருமால் செந்திருமகளைக் காதலியாக அடைந்தான்; சீதையை நீ பெற்றாய்; அவர்க்கும் உனக்கும் வேறுபாடு பார்த்தால் நன்மை அவர்களுக்கு இல்லை உனக்குத்தான்.

விளக்கம் : தேவமகளிரை அடைந்த தேவர்களை விடச் சீதையை அடைந்த நீயே நன்மை அடைந்தாய் என்று சூர்ப்பணகை கூறினாள் என்க. சீதையைப் பெற்றாய் என்று துணிந்து இறந்தகாலத்தால் கூறுவாள். சசி: இந்திராணி. அந்தரம்: வேறுபாடு.

(ஆரணிய. மாரீசன் வதைப்படலம். தேவமாதர்களைவிடச் சீதை சிறந்தவள் என்று சூர்ப்பணகை செப்புதல்)

பாகத்தில் ஒருவன் வைத்தான்

310 பாகத்தில் ஒருவன் வைத்தான்;
பங்கயத்து இருந்த பொன்னை

ஆகத்தில் ஒருவன் வைத்தான்;
அந்தணன் நாவில் வைத்தான்;

மேகத்தில் பிறந்த மின்னை
வென்றநுண் இடையி னாளை
மாகத்தோள் வீர! பெற்றால்
எங்ஙனம் வைத்து வாழ்தி? 12

பொழிப்பு : வான் அளாவ ஓங்கிய தோள்களைப் பெற்ற வீரனே! ஒப்பற்ற சிவபிரான் உடம்பில் ஒருபாதியில் (தேவியை) வைத்துக் கொண்டான்; மற்றொருவனாகிய திருமால் தாமரை இருந்த திருமகளைத்தன் மார்பிலே அமர்த்திக் கொண்டான்; அழகிய தண்ணளி உடையானாகிய பிரமன் (கலைமகளாகிய தன் தேவியை) நாவிலே கொண்டு போற்றினான்; முகிலில் தோன்றிய மின்னலை வென்ற சிற்றிடையாளாகிய சீதையை நீ பெற்றால் எங்கே இருத்தி வாழப் போகின்றாய்?

விளக்கம் : பாகம்: பகுதி. ஒருவன்: சிவபிரான். பங்கயம்: தாமரை. பொன்: திருமகள். ஆகம்: மார்பு. மாகம்: விண்.

(ஆரணிய. மாரீசன் வதைப்படலம். சூர்ப்பணகை இராவணனிடம் சீதையை வைத்துப் போற்றும் இடத்தை வினவுதல்)

9 வசிட்டன் மொழி

9. வசிட்டன் மொழி

சிவனைப்பற்றி வசிட்டன் ஏழு இடங்களில் வழுத்துவான்.

"கண்ணுதலான்"

"புராரி"

"கங்கை சூடும் ஈசன்"

"உமைக்கு நாதன்"

என்பன போன்ற சொற்றொடர்கள் வசிட்டன் சிவனைச் சிறப்பித்துச் செப்புபவை.

"கரிய மாலினும், கண்ணுத லானினும்,
உரிய தாமரை மேல்உறை வானினும்,
விரியும் பூதம்ஓர் ஐந்தினும், மெய்யினும்
பெரியர் அந்தணர்; பேணுதி உள்ளத்தால்"

என்று வசிட்டன் வழுத்துவது, குறளாசிரியர் கூறிய எவ் உயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அறவோராகிய அந்தணர் பெருமையை என்று கொள்ளவேண்டும்.

கங்கை சூடும் ஈசன்

311 மாசுஅறு சுரர்க ளோடு
மற்றுளோர் தமையும் ஈன்ற
காசிபன் அருளும் மைந்தன்
விபண்டகன், கங்கை சூடும்
ஈசனும் புகழ்தற்கு ஒத்தோன்,
இருங்கலை பிறவும் எண்ணின்
தேசுஉடைத் தந்தை ஒப்பான்,
திருவருள் புனைந்த மைந்தன். 1

பொழிப்பு: (வசிட்டன் தயரதனைப் பார்த்து) குற்றமற்ற தேவர்களோடு ஏனையோரையும் பெற்ற காசிபன் என்னும் முனிவன் அருளினால் தந்த மைந்தன் விபண்டகன் என்னும் பெயர் பெற்றவன்; (அவன்) கங்கையை அணிந்த சிவபெருமானும் புகழத்தக்கவனும் பெரிய நூல் பயிற்சியிலும். ஏனைச் சிறப்புக்களிலும் ஆராய்ந்து பார்த்தால் புகழ்வாய்ந்த தந்தையை ஒத்தவனும் ஆவான், அவ்விபண்டகன் அருளுக்கு உரியமகன் (உருசிய சிருங்கன் என்பவனாவான்) (குளகம்)

விளக்கம் : மாசு : குற்றம். சுரர் : அமரர். மற்றுளோர் : அசுரர். இரும் : பெரிய. கலை : நூல். தேசு : ஒளி.

(பால. திரு அவதாரப்படலம். வசிட்டன் விபண்டகன் சிறப்பும் அவன் மைந்தன் உருசிய சிருங்கன் சிறப்பும் சொல்லுதல்)

புராரியும் புகழ்தற்கு ஒத்தவன்

312 பாந்தளின் மகுட கோடி
பரித்தபார் அதனில் வைகும்
மாந்தர்கள் விலங்குஎன்று உன்னும்
மனத்தன்,மா தவத்தன், எண்ணில்,
பூந்தவிசு உகந்துஉ ளோனும்,
புராரியும், புகழ்தற்கு ஒத்த
சாந்தனல் வேள்வி முற்றின்
தனையர்கள் உளர்ஆம் என்றான். 2

பொழிப்பு : ஆதிசேடன் என்னும் பாம்பினுடைய பல முடிகளின் நுனியில் தாங்கப்பெற்ற உலகத்தில் வாழும் மனிதர்களை எல்லாம் விலங்குகள் என நினைக்கின்ற உள்ளத்தை உடையவன்; சிறந்த தவம் செய்தவன்; ஆராய்ந்து பார்த்தால், மலரை இருக்கையாகக் கொண்டு மகிழ்ந்த பிரமனும், முப்புரத்தை அழித்த சிவனும் புகழ்ந்துபேசுதற்குப் பொருந்திய சாந்தகுணம் வாய்ந்தவன்; ஆன (கலைக்கோட்டு மாமுனிவன்) அவனைக் கொண்டு வேள்விசெய்து முடித்தால் மக்கள் பிறப்பர் என்று சொன்னான்.

விளக்கம் : பாந்தள் : பாம்பு. மகுடம் : முடி. கோடி : நுனி. பரித்த : சுமந்த.

(பால. திரு அவதாரப்படலம். வசிட்டன், கலைக்கோட்டு மாமுனிவனைக் கொண்டு வேள்வி செய்வித்தால் மக்கள் தோன்றுவர் எனக்கூறல்)

களன் அமர் கடு

313 வளநகர் முனிவரன்
வருமுன், வானவன்
களன்அமர் கடுஎனக்
கருகி, வான்முகில்
சளசள எனமழைத்
தாரை கான்றன;
குளனொடு நதிகள்தம்
குறைகள் தீரவே. 3

பொழிப்பு : முனிபுங்கவன், வளம் வாய்ந்த ஊருக்குள் வரும் முன்னமேயே. வானத்து மேகங்கள், சிவபிரானின் கழுத்தில் இருக்கும் நஞ்சைப் போல் கருநிறம் அடைந்து, குளங்கள் ஆறுகள் ஆகியவை எல்லாம் (இதுவரை அவைகள் நீர்பெருது இருந்த) குறைகள் தீருமாறு, சளசள என மழைத் தாரைகளைச் சொரிந்தன.

விளக்கம் : கடு : நஞ்சு. 'சளசள' : ஒலிக் குறிப்பு. தாரை : நீர்ப்பெருக்கு.

(பால. திரு அவதாரப்படலம். கலைக்கோட்டு முனிவன் வரவால் மழை பொழிதல்)

கண்ணுதலானினும் பெரியர்

314 கரிய மாலினும்,
கண்ணுத லானினும்
உரிய தாமரை
மேல்உறை வானினும்,

விரியும் பூதம்ஓர்
ஐந்தினும், மெய்யினும்,
பெரியர் அந்தணர்;
பேணுதி உள்ளத்தால். 4

பொழிப்பு: கருநிறம் வாய்ந்த திருமாலைக்காட்டிலும், நெற்றியில் கண்ணுடைய சிவனைக் காட்டிலும், தனக்குரிய தாமரையில் வாழ்கின்ற பிரமனைக் காட்டிலும், விரிந்த ஒப்பற்ற ஐந்து பூதங்களைக் காட்டிலும், உண்மையைக் காட்டிலும், அழகிய தண்ணளியை உடையார் பெரியர் ஆவர்; அவர்களை மனத்தில் இருத்திப் போற்றுவாயாக.

விளக்கம்: மும்மூர்த்திகளை விட, ஐம்பெரும் பூதத்தை விட, உண்மையைவிட மேம்பட்டவர் அந்தணர், என்று கூறியவாறு. பூதம் ஐந்து, வான், எரி, நீர், கால், மண் என்பன.

(அயோ. மந்தரை சூழ்ச்சிப்படலம். பெரியாரைப் பேணுமாறு இராமனுக்கு வசிட்டன் அறிவுரை கூறுதல்)

ஒண்கவர் எஃகம்

315 உருளும் நேமியும்
ஒண்கவர் எஃகமும்,
மருளில் வாணியும்,
வல்லவர் மூவர்க்கும்
தெருளும் நல்அற
-மும்,மனச் செம்மையும்,
அருளும், நீத்தபின்
ஆவதுஉண் டாகுமோ? 5

பொழிப்பு: உருண்டு செல்கின்ற சக்கரப்படையையும், ஒளி உள்ள மூன்று கவட்டைக் கொண்ட மழுப்படையையும், மயக்கம் இல்லாத கலைமகளையும், ஆளும் வன்மைபெற்ற முப்பெருங் கடவுளர்க்கும், தெளிவான நல்ல அறமும், செம்மையான மனமும், கருணையும், ஆகிய இவற்றைத் துறந்துவிட்ட பின்பு ஆக்கம் அடைய முடியுமா? (முடியாது)

விளக்கம்: மருள்: மயக்கம். தெருள்: தெளிவு. திருமாலுக்குச்சக்கரமும் சிவனுக்குச் சூலமும் போல, பிரமனுக்கு வாணி என்பது அருமை உடைத்து.

'சீலமும், தருமமும், சிதைவில் செய்கையாய்!
சூலமும், திகிரியும், சொல்லும் தாங்கிய
மூலம் வந்து உதவிய மூவர்....

என வேறு இடத்துக் கூறுதல் இதனோடு ஒத்தது.

(அயோ. மந்தரை சூழ்ச்சிப்படலம். அறம், செம்மை, அருள் ஆகியவற்றை நீத்தால் முப்பெரும் கடவுளரும் ஒன்றுக்கும் ஆகார் எனவசிட்டன்கூறுதல்)

உமைக்கு நாதன்

316 உமைக்கு நாதற்கும்,
ஓங்குபுள் ஊர்திக்கும்,
இமைப்பில் நாட்டம்ஓர்
எட்டுடை யானுக்கும்,
சமைத்த தோள்வலி
தாங்கினர் ஆயினும்,
அமைச்சர் சொல்வழி
ஆற்றுதல் ஆற்றலே. 6

பொழிப்பு: உமையின் கணவனுகிய சிவபிரானுக்கும், உயர்ந்த கருடனில் ஏறும் திருமாலுக்கும், மூடாத ஒப்பற்ற கண்கள் எட்டைக் கொண்ட பிரமனுக்கும், பொருந்திய தோள்வலியைப் பெற்றிருந் தாராலுலும், அமைச்சர்கள் சொல்லின் வழி செய்தலே ஆற்றல் உடைமையாகும்.

விளக்கம்: சமைத்த: சமைந்த என்பதன் வலித்தல் விகாரம். எதுகையின் ஓசை நோக்கித் திரிந்தது.

(அயோ. மந்தரை சூழ்ச்சிப் படலம். அமைச்சர் சொல்வழி நடத்தலே ஆற்றல் என வசிட்டன் வழுத்தல்)

சூலமும், திகிரியும். சொல்லும் தாங்கிய மூலம்

317 சீலமும், தருமமும்,
சிதைவுஇல் செய்கையாய்!
சூலமும், திகிரியும்,
சொல்லும் தாங்கிய
மூலம்வந்து உதவிய
மூவர்க்கு ஆயினும்,
காலம்என்று ஒருவலை
கடக்கல் ஆகுமோ? 7

பொழிப்பு: 'ஒழுக்கமும், அறமும், அழியாமல் செயலாற்றும் இராமா!' சூலத்தையும், சக்கரத்தையும், மறை சொல்லும் நூல்களையும் பொறுத்த, (எல்லாப் பொருள்கட்கும்) முதற்பொருளாய் வந்து அருள் செய்த மூன்று கடவுளர்களுக்கு ஆனுலும், காலம் என்று சொல்லக்கூடிய ஒரு வலையைக் கடத்தல் கூடுமா?

விளக்கம்: காலத்தை வெல்லுதல் யார்க்கும் ஆகாது என்றபடி.

(அயோ. திருவடி சூட்டு படலம். தந்தை இறந்தமைக்கு வருந்திய இராமனுக்கு வசிட்டன் தேறுதல் கூறல்)

10. சீதை மொழி

10. சீதை மொழி

'போதினை வெறுத்து அரசர் பொன்மனை புகுந்த' கதைத்தலைவி சீதை, சிவனைப்பற்றி ஆறு இடங்களில் குறிப்பிடுவாள்.

"துள்ளுநீர் வெள்ளம் சென்னி ஏற்றவன்"

"பேர் ஈசன்"

"விடையின் பாகன்"

என்பன சீதை கூறும் சொற்றொடர்கள்.

"நீ அடைந்த பெருமிதமான செல்வத்தை எல்லாம் உனக்கு ஈந்தவன் சிவபெருமானல்லவா?" 'இப்பெரும் செல்வம் நின்கண் ஈந்த பேரீசன்' என, சீதை கூறுவது சிந்தித்து மகிழத்தக்கது.

'குன்று நீ எடுத்த நாள் தன் சேவடிக் கொழுந்தால் உன்னை வென்றவன்' என்று இராவணனைப் பார்த்துச் சீதை கூறுவாள். "நெறித்து ஒரு விரலால் ஊன்ற நெடுவரை போல வீழ்ந்தான்" என்பர் அப்பர் சுவாமிகள். இங்கு, சேவடிக் கொழுந்தால் என்பது மிக்க நயமுடைத்து.

"வாசவன், மலரின் மேலான்,
மழுவலான் மைந்தன், மற்றைக்
கேசவன், சிவன்என்று இந்தத்
தன்மையோர் தன்மை கேளாய்!
'பூசலின் எதிர்ந்தேன்' என்றாய்;
போர்க்களம் புக்க போது,என்
ஆசையின் கனியைக் கண்ணின்
கண்டிலை போலும், அஞ்சி."

என, இராவணனைப் பார்த்துச் சீதை கேட்பது, சிவன் முதலானோரைவிடத் தன் நாயகன் சிறந்தவன் என்ற கற்புத்திறத்தை வலியுறுத்துவதாகும். இதே கருத்தை இன்னும் வலியுறுத்தும்,

"செங்கண்மால் நான்முகன் சிவன்என் றேகொலாம்
எங்கள்நா யகனையும் நினைந்தது ஏழைநீ?"

என்ற சீதையின் பேச்சுப் பெருமிதமானது.

வெள்ளம் சென்னி ஏற்றவன்

318 'தோற்றனை பறவைக்கு அன்று;
துள்ளுநீர் வெள்ளம் சென்னி
ஏற்றவன் வாளால் வென்றாய்;
இன்றுஎனின் இறத்தி அன்றே?
நோற்றநோன்பு உடைய வாள்,நாள்,
வரம்இவை நுனித்த எல்லாம்,
கூற்றினுக்கு அன்றே? வீரன்
சரத்திற்கும் குறித்தது உண்டோ?' 1

பொழிப்பு: அந்நாளில் (சடாயு என்னும்) பறவைக்குத் தோற்றாய்; (எனினும்) பொங்கிப்பாய்கின்ற கங்கை வெள்ளத்தைத் தலையில் தாங்கிய சிவபெருமான் தந்த வாளினால் (அந்தச் சடாயுவை வெட்டிக் கொன்று) வெற்றிகண்டாய்; (அந்த வாள் உன்னிடம்) இல்லையானால், நீ செத்துப் போயிருப்பாய் அல்லவா? நீ தவம் செய்து பெற்ற வாள், நாள், வரம் இவைகளும், மேலும், உனக்குக் காப்பாக நீ ஆய்ந்து தேடிக்கொண்ட அனைத்தும், காலன் உன்னை அணுகாதிருக்கும் பொருட்டு அல்லவா? வீரனாகிய இராமபிரானின் அம்பு, உன்னை அணுகாமைக்கும் குறித்துப் பெற்றாயா? (இல்லை என்பது கருத்து)

விளக்கம்: நுனித்த: ஆராய்ந்த. நீ பெற்ற தவப்பயனாகிய வாளும், நாளும், வரமும், பிறவும் கூற்றுவனைத் தடுக்கலாம்: வீரன் அம்பைத் தடுக்கலாற்றா என்று கூறியவாறு.

(சுந்தர. நிந்தனைப்படலம். உன் வரம் இராமன் அம்பைத் தடுக்காது என இராவணனிடம் சீதை செப்புதல்)

சேவடிக் கொழுந்தால் வென்றவன்

319 'குன்றுநீ எடுத்த நாள்,தன்
சேவடிக் கொழுந்தால் உன்னை
வென்றவன் புரங்கள் வேவத்
தனிச்சரம் துரந்த மேரு,

என்துணைக் கணவன் ஆற்றற்கு
உரன்இலாது இற்று வீழ்ந்த,
அன்றுஎழுந்து உயர்ந்த ஓசை
கேட்டிலை போலும் அம்மா!' 2

பொழிப்பு: நீ கயிலை மலையைத் தூக்கிய அந்த நாளில், தன் செவ்விய திருவடியின் கொழுந்தனைய விரலால், உன்னை வென்றவனாகிய சிவபெருமான், முப்புரங்கள் தீ எழ ஒப்பற்ற அம்பைத் தொடுக்கக் கைக் கொண்ட மேரு எனும் வில், எனக்கு வாழ்க்கைத்துணையாக அமைந்த நாயகனது வலிமையைத் தாங்காது ஒடிந்து வீழ்ந்தபோது, அன்றைக்குத் தோன்றிப் பரவிய பேரொலியை நீ கேட்டாய் இல்லை போலும்!

விளக்கம்: குன்று: கயிலை. கொழுந்து என்பதை நுனிவிரல் என்று கூறல் பொருந்தும். வேவ: தீப்பற்றி எரிய. தனிச்சரம்: ஒப்பற்ற அம்பு. உரன்: வலிமை. 'அம்மா' வியப்பைக் குறிக்கும் இடைச்சொல். (சுந்தர. நிந்தனைப் படலம். இற்ற வில்லின் பேரோசை கேளாப் பெருஞ் செவிடனோ நீ என இராவணனைச் சீதை கேட்டல்)

எங்கள் நாயகனையும் நினைந்தது

320 'அங்கண்மா ஞாலமும்,
விசும்பும், அஞ்சவாழ்
வெங்கணாய்! புன்தொழில்
விலக்க மேற்கொளாய்;
செங்கண்மால், நான்முகன்,
சிவன்என் றேகொலாம்,
எங்கள்நா யகனையும்
நினைந்தது ஏழை! நீ' 3

பொழிப்பு: அழகிய அகன்ற சிறந்த மண்ணுலகமும் விண்ணுலகமும் அஞ்சுமாறு வாழ்கின்ற கொடுமை உடையவனே! அறிவற்றவனாகிய நீ, இழிந்த செயலை விலக்கும் முயற்சியை மேற்கொள்ளமாட்டாய்; சிவந்த கண்களை உடைய திருமால், நான்கு முகங்களை உடைய பிரமன், சிவன் என்ற இவர்களைப் போல் (எளிமையானவன்) என்று, எங்கள் நாயகனாகிய இராமபிரானையும் நினைத்துக் கொண்டாய்? (இல்லை என அறிக)

விளக்கம் : வெங்கண்: கொடுமை. புன்தொழில்: இழிந்த செயல். ஏழை : அறிவில்லாதவன். முப்பெருங்கடவுளர்க்கும் மேற்பட்டவன் இராமன் என்க.

(சுந்தர. நிந்தனைப் படலம். தன் நாயகன் பெருமையை இராவணனிடம் சீதை வாயார வழுத்துதல்)

இப்பெரும் செல்வம் ஈந்த பேரீசன்

321 'இப்பெரும் செல்வம் நின்கண்
ஈந்தபேர் ஈசன், யாண்டும்
அப்பெரும் செல்வம் துய்ப்பான்,
நின்றுமா தவத்தின் அன்றே?
ஒப்புஅரும் திருவும் நீங்கி,
உறவொடும் உலக்க உன்னி,
தப்புதி அறத்தை, ஏழாய்!
தருமத்தைக் காமி யாயோ?' 4

பொழிப்பு : இந்தப் பெரிய செல்வத்தை நினக்குக் கொடுத்த பெருங்கடவுளாகிய சிவபெருமான், சிறந்த தவத்தின் வழிநின்று எப்பொழுதும் அந்தப் பெரிய செல்வத்தை நீ நுகரும் பொருட்டு அல்லவா தந்தான்? (அப்படிச் செய்யாமல்) ஒப்பில்லாத பெரிய செல்வமும் ஒழிந்து, சுற்றத்தோடு கெடுமாறு நினைத்து, அறத்துக்கு மாறாக நடக்கின்றாய்; அறிவற்றவனே! அறத்தை நீ விரும்பமாட்டாயா?

விளக்கம் : நின்கண் : நின்னிடத்து. பேர்ஈசன்: சிவபெருமான். துய்த்தல்: நுகர்தல். ஒப்பு அரும்: ஈடில்லாத. உறவு: சுற்றம். உலக்க: கெட. உன்னி: நினைத்து. தப்புதி அறத்தை: அறத்தைக் கடக்கின்றாய். ஏழாய்; அறிவற்றவனே. காமித்தல்; விரும்புதல்.

(சுந்தர. நிந்தனைப்படலம். உனக்குச் செல்வம் ஈந்தது அறத்தொடு நிற்றற்கு அல்லவா? எனச் சீதை இராவணனைக் கேட்டல்)

என் ஆசையின் கனி

322 'வாசவன், மலரின் மேலான்,
மழுவலான் மைந்தன், மற்றைக்
கேசவன், சிவன், என்று இந்தத்
தன்மையோர் தன்மை கேளாய்,

'பூசலின் எதிர்ந்தேன்' என்ருய்;
போர்க்களம் புக்க போது,என்
ஆசையின் கனியைக் கண்ணில்
கண்டிலே போலும், அஞ்சி.' 5

பொழிப்பு : தேவேந்திரன், மலரின் மேல் உள்ள பிரமன், மழுப்படை தாங்கிய சிவனின் மைந்தனுகிய முருகன், மற்றும் திருமால், சிவன் என்று சொல்லப்பட்ட பெருமை பெற்ருேரின் நிலையைக் கேளாமல் (பொருட் படுத்தாமல்) 'போரிலே எதிர்த்தேன்' என்று பெருமை பேசுகின்ருய்; நீ போர்க்களத்துக்குச் சென்றபோது, என் ஆசைக்கு இனிய பழத்தைக் கண்ணுல் பார்க்கவும் அஞ்சிக் கூசிவிட்டாய் போலும்.

விளக்கம் : பூசல் : போர். புக்கபோது : புகுந்தபோது. ஆசை இன் கனி: ஆசைக்குரிய இனிய பழமாகிய இராமன். அவன் மனைவியைக் கவர்ந்த கொடுஞ்செயலால் அவன்முன் தலைஎடுத்துப்பார்க்க மாட்டாமை கருதிக் கண்டிலே போலும் என்றும், போர்க்களத்துக்கு அவன் எதிரில் சென்றுவந்த பிறகும் அவனைக் கண்ணுல்கண்டோர், எவரும் அறிவு பெறுவது உறுதியாய் இருக்க, நீ, இன்னும் நல்லறிவு பெறவில்லை ஆதலின் கண்டிலே போலும் என்றும் கூறியவாறு.

(யுத்த. மாயாசனகப்படலம். சீதை இராவணனை இடித்துக் கூறல்)

விடையின் பாகன்

323 'பங்கயத்து ஒருவனும்,
விடையின் பாகனும்,
சங்கு,கைத் தாங்கிய
தரும மூர்த்தியும்,
அங்கையின் நெல்லிபோல்
அனைத்தும் நோக்கினும்,
மங்கையர் மனநிலை
உணர வல்லரோ?' 6

பொழிப்பு : தாமரை வாழும் பிரமனும், விடைஏறும் சிவனும், சங்கைக் கையில் ஏந்திய அறத்தின் வடிவான திருமாலும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எல்லாவற்றையும் காணும் ஆற்றல் உடையாரேனும், பெண்களது மனநிலையை அறிய வல்லவர் ஆவாரா? (அறிய மாட்டார் என்பது கருத்து)

விளக்கம் : 'உள்ளங்கை நெல்லிக்கனி' என்பது பலரும் எடுத்தாளும் பழமொழி.

(யுத்த. மீட்சிப் படலம். இராமன் தீக்குளிக்கச் சொன்ன போது சீதை சொல்லுவது)

ஐந்து இடங்களில் மூவர் மொழி

11-சதானந்தர் மொழி

12-பரசுராமன் மொழி

13-சுக்கிரீவன் மொழி

11. சதானந்தன் 12. பரசுராமன்

13. சுக்கிரீவன் மொழி.

இம்மூவரும் சிவனைப்பற்றி ஐந்து, ஐந்து இடங்களில் பேசி இருக்கின்றனர்.

"முக்கண் எண் தோளவன்"

"வார்சடை அரன்"

"களிற்று உரிவைப் போர்வையான்"

"இமையவில் வாங்கிய ஈசன்"

என்பன சதானந்தன் சிவனைப்பற்றிக் கூறும் சொற்றொடர்கள்.

'இமையவில் வாங்கிய ஈர்ஞ் சடை அந்தணன்' என்ற கலித்தொகை அடியை நினைப்பூட்டுவதாகும்.

திருமாலின் பத்து அவதாரங்களில் ஒருவன் என்று கருதப் பெறுகின்ற பரசுராமன்,

"உமை அண்ணல்"

"உமையாள் கேள்வன்"

"திரிபுரம் எரித்த தேவன்"

"நெற்றியில் கண்ணன்"

"வெண்மதிப் பாதியான்"

என்று சிவனைப் போற்றுவான்.

இராமபிரானால் ஏற்றுக்கொள்ளப்பெற்ற தம்பிகளுள் ஒருவனாகிய சுக்கிரீவன்,

"ஆறுகொள் சடிலத்தான்"

"கங்கையின் கணவன்"

"கறைமிடற்று இறைவன்"

"முருகன் தந்த அத் தளிரியல் பாகத்தான்"

என்று போற்றுவான். 'கங்கையின் கணவன்' எனச் சிவனை அவன் பாராட்டுவது, 'ஏலவார் குழலிமார் இருவர் தங்கள் நாயகனே!' என்ற திருவாசகத்தையும்,

"தனக்கே அடியனுய்த் தன்னடைந்து வாழும்
எனக்கே அருளாவாறு என்கொல்?—மனக்குஇனிய
சீராளன், கங்கை மணவாளன், செம்மேனிப்
பேராளன், வானோர் பிரான்"

என்ற காரைக்கால் அம்மையார் பாடலையும் நினைப்பூட்டுகின்றது.

"தேறினன் அமரர்க்கு எல்லாம்
தேவர்ஆம் தேவர் அன்றே,
மாறிஇப் பிறப்பில் வந்தார்
மானிடர் ஆகி மன்னோ;
ஆறுகொள் சடிலத் தானும்,
அயனும்என்று இவர்கள் ஆதி
வேறுஉள குழுவை எல்லாம்
மானுடம் வென்றது அன்றே!"

என்ற பாடல் இராமனிடம் சுக்கிரீவன் கொண்ட மெய்ப் பாட்டு உணர்ச்சியைக் கண்கொள்ளாக் காட்சியாகச் சித்தரிக்கின்றது.

"அரன்அதிகன், உலகளந்த அரிஅதிகன்
என்றுஉரைக்கும் அறிவி லோர்க்குப்
பரகதிசென்று அடைவரிய பரிசேபோல்
புகலரிய பண்பிற்று ஆமால்"

என, சுக்கிரீவன் வாயிலாக, சிவன் பெரியவன் அல்லது திருமால் பெரியவன் என்று உரைக்கின்றவர்கள் அறிவற்றவர்கள் என்றும், அவர்கள் வீடு அடைய மாட்டார்கள் என்றும் விளம்புவது கடவுட் சண்டை போடுவோர்க்குச் சிறந்த எச்சரிக்கையாகும்.

11. சதானந்தர் மொழி

இமையவில் வாங்கிய ஈசன்

324 இமையவில் வாங்கிய
ஈசன், "பங்குஉறை
உமையினை இகழ்ந்தனன்
என்ன" ஓங்கிய
கமைஅறு சினத்தன், இக்
கார்மு கம்கொளா,
சமைஉறு தக்கனர்
வேள்வி சாரவே. 1

பொழிப்பு: இமையமலையை வில்லாக வளைத்த சிவபெருமான், தன் பக்கத்திலே தங்கியிருக்கின்ற உமையவளைத் தக்கன் இகழ்ந்து கூறினன் என்பதற்காக, மேல் எழுந்த பொறுமை அற்ற வெகுளி கொண்டவனாய், இந்தவில்லைக் கையில் கொண்டு, தக்கனர் வேள்விக்குப் பொருந்திய யாகசாலையை அடைய.

விளக்கம்: வாங்கிய: வளைத்த. கமை: பொறுமை. கார்முகம்: வில். கொளா: கொண்டு. சமை உறுதல்: உண்டாக்கப்படுதல்.

(பால. கார்முகப்படலம். சிவன் தக்கன் வேள்விக்குச் சென்றதைச் சதானந்தன் உரைத்தல்)

முக்கண் எண் தோளவன்

325 உக்கன பல்லொடு,
கரங்கள் விழ்ந்தன;
புக்கனர், வானவர்
புகாத சூழல்கள்;
தக்கன் நல் வேள்வியில்
தழலும் ஆறின;
முக்கண்எண் தோளவன்
முனிவும் ஆறினன். 2

பொழிப்பு: (தக்கன் வேள்விக்கு வந்திருந்த) தேவர்கள் பற்கள் உடைக்கப் பெற்று, கைகள் துண்டிக்கப்பெற்று, தாங்கள் இதுகாறும் அறியப் பெறுத இடங்களுள் எல்லாம் ஓடி ஒளிந்தனர்; தக்கனுடைய நல்ல வேள்விக்குழியில் எழுந்த தீயும் அமர்ந்துவிட்டன: மூன்று கண்களையும், எட்டுத்தோள்களையும் உடைய சிவபெருமானும் கோபம் தணிந்தான்.

விளக்கம்: உக்கன: உடைந்தன. புக்கனர்: நுழைந்தனர். சூழல்: இடம். தழல்: நெருப்பு. முனிவு: சினம் பல்லுடைந்தவன் ஆதவன் எனவும், கரங்கள் இழந்தவன் திக்கடவுள் என்றும் கூறுப. வேறு சில தேவர்கள் வேறு அங்கங்களை இழந்தனர் எனவும் கூறப்பெறுவர்.

'சந்திரனைத் தேய்த்துஅருளி, தக்கன்தன் வேள்வியினில்
இந்திரனைத் தோள்நெரித்திட்டு, எச்சன் தலைஅரிந்து,
அந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல்தகர்த்துச்
சிந்தத் திசைதிசையே தேவர்களை ஒட்டுகந்த
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதும்காண் அம்மானாய்'

என்பது திருவாசகம்.

(பால. கார்முகப்படலம். தக்கன் வேள்வியில் அமரர்களின் நிலை குலைவு)

வாள் உடை உழவன்

326 தாளுடை வரிசிலை,
சம்பு, உம்பர்தம்
நாள்உடைமையின்,அவர்
நடுக்கம் நோக்கி,இக்
கோள்உடை விடைஅனுன்
குலத்துள் தோன்றிய
வாள்உடை உழவன்ஓர்
மன்னன்பால் வைத்தான். 3

பொழிப்பு: சிவபெருமான், தேவர்கள் தன் வில்லைக் கண்டு அஞ்சி தலை அறிந்து, அவர்கட்கு வாழ்நாள் நீண்டு இருந்தமையின், நல்ல அடித்தண்டை உடைய கட்டமைந்த வில்லை, இந்த (ஆற்றல்) கொண்ட காளையை ஒத்தவனை சனகன் குலத்தில் முன்னே தோன்றிய, போர்க் களத்தில் வாளாகிய ஏர்கொண்டு உழுபவனை ஓர் அரசனிடத்திலே கொடுத்துவைத்தான்.

விளக்கம்: தாள்: வில்லின் அடிப்பகுதி. அது வலிமைபெற்றிருத்தல் வேண்டும். 'வன்தாள் சிலை ஏந்தி' என்றார் பிறிது ஓரிடத்தில். சம்பு: சிவபெருமான். நாள்: வாழ் நாள். கோள் உடை: கொண்ட வாள் உடை உழவன்: வாளை ஏராகக்கொண்டு போர்க்களத்தில் உழுபவன். 'வாள்ஏர் உழவ' என்று புறநானூற்றிலும், 'வில்லேர் உழவர்' என்று திருக்குறளிலும் வருவன காண்க. சிவபிரானால் வில் தரப்பெற்றவன் தேவராதன் என்னும் மன்னன் என்ப.

(பால. கார்முகப்படலம். சிவன்வில்லை, சனகனின் முன்னோன் பெற்றமை)

வார்சடை அரன்

327 கார்முக வலியையான்
கழறல் வேண்டுமோ?
வார்சடை அரன்நிகர்
வரத! நீஅலால்
யார்உளர் அறிபவர்?
இவற்குத் தோன்றிய
தேர்முக அல்குலாள்
செவ்வி கேள்எனா. 4

பொழிப்பு: இந்த வில்லின் ஆற்றலை நான் எடுத்துச் சொல்லவும் வேண்டுமா? நீண்ட சடை முடியை உடைய சிவபெருமான் அணைய முனிவனே! உன்னைத்தவிர, இந்த வில்லின் சிறப்பை அறியக் கூடியவர் யார் இருக்கின்றார்? இந்தச் சனகனுக்குப் பிறந்த தேர்த்தட்டுப் போன்ற மறைவிடத்தை உடையாளாகிய சீதையின் தன்மையைக் கேட்பாயாக, என்று

விளக்கம்: கார்முகம்: வில். கழறுதல்: சொல்லுதல். அரன்: சிவன் செவ்வி: தன்மை.

(பால. கார்முகப்படலம். வில்லின் வலிமையைச் சதானந்தன் விளம்பல்)

களிற்று உரிவைப் போர்வையான்

328 கலித்தானைக் கடலோடும்
கைத்தானக் களிற்றுஅரசர்,
ஒலித்துஆழி என்வந்து,
மணம்மொழிந்தார்க்கு, எதிர்,"உடுத்த

புலித்தானைக் களிற்றுஉரிவைப்
போர்வையான் போர்வில்லை
வலித்தானே மங்கைதிரு -
- மணத்தான்'' என்று யாம்வலித்தேம். 5

பொழிப்பு: துதிக்கையையுடைய மதம் பொழியும் யானைகளை ஆளும் மன்னர்கள், ஒலிக்கின்ற சேனைக் கடலோடு, ஆழிபோல் பேராரவாரத்துடன் வந்து, திருமணம் பேசினவர்க்கு, மறுமொழியாக, 'புலித்தோலை அரைக்கு அசைத்து யானைத் தோலை மேலே போர்த்துக் கொண்ட சிவபெருமானின் போர்செயற்குரிய வில்லை எடுத்து வளைத்தவனே, இம்மங்கையைத் திருமணம் செய்துகொள்ள உரியவன்' என நாங்கள் உறுதி சொன்னேம்.

விளக்கம்: கலித்தல்: ஓசை எழுப்புதல். தானை: சேனை. தானம்: மதநீர். களிறு: யானை. ஆழி: கடல். வலித்தல்: வளைத்தல். மங்கை: சீதை.

(பால. கார்முகப் படலம். சிவன் வில்லை வளைத்தார்க்குச் சீதை உரியவள்.)

12 பரசுராமன் மொழி

உமை அண்ணல்

329 மானம்மணி முடிமன்னவன்,
நிலைசோர்வுறல் மதியான்,
தான்அந்நிலை உறுவான்உறு
வினைஉண்டது தவிரான்,
'ஆனம்உடை உமைஅண்ணலை,
அந்நாள்உறு சிலைதான்
ஊனம்உளது; அதன்மெய்ந்நெறி
கேள்'என்றுஉரை புரிவான். 1

பொழிப்பு: (பரசுராமன்) மானத்தை உடைய மணிமுடி தரித்த தயரதனின் தளர்ச்சியுற்ற நிலையை மதியாதவனாகி, தானும் அந்த நிலையை அடையப்போகின்ற ஊழ் இருப்பதால் அதனினின்றும் விலகமாட்டாதவனாய், விடையை உடைய உமை அண்ணலாம் 'சிவபெருமானின் அந்த நாள் வில்லானது ஊனம் பொருந்தியது; (அதனால் நீ அதை முறித்து விட்டாய்) அந்த வில்லின் உண்மை வரலாற்றைக் கேட்பாயாக' என்று சொல்லத் தொடங்கினான்.

விளக்கம் : மணிமுடி : அரதனங்கள் அழுத்திய கிரீடம். மன்னவன் : தயரதன். ஆனம் : விடை. ஆன் என்ற சொல் அம் சாரியை பெற்று வந்தது. ஊனம் : குற்றம். 'ஊனவில் இறுத்து' என்று இராவணன் பின்னே கூற இருப்பதைப் பரசுராமன் முன்னே கூறினான் போலும்.

(பால. பரசுராமப் படலம். பரசுராமன் இராமன் முறித்த வில்லைக் குறை சொல்லுதல்)

உமையாள் கேள்வன்

330 ஒன்றினை உமையாள் கேள்வன்
உவந்தனன்; மற்றை ஒன்றை,
நின்றுஉலகு அளந்த நேமி
நெடியமால் நெறியின் கொண்டான்;
என்றுஇது உணர்ந்த விண்ணோர்,
"இரண்டினும் வன்மை எய்தும்
வென்றியது யாவது?" என்று
விரிஞ்சனை வினவ, அந்நாள். 2

பொழிப்பு : (அந்த இரண்டு விற்களுள்) ஒருவில்லை உமையாள் கொழுநனான சிவபிரான் விரும்பி ஏற்றுக் கொண்டான்; இன்னொன்றை, ஓங்கி உலகளந்த சக்கரப் படையை உடைய திருமால் முறைப்படி கைக்கொண்டான்; என இதனை அறிந்த தேவர்கள், 'இரண்டு வில்லினும் வலிமை பொருந்திய வெற்றியைத் தருவது எது' என்று பிரமனைக் கேட்க, அந்த நாளிலே. (முடிவு பின்னர்)

விளக்கம் : விரிஞ்சன்: பிரமன்.

(பால. பரசுராமப் படலம். பரசுராமன் வில்லின் வரலாறு இயம்பல்)

திரிபுரம் எரித்த தேவன்

331 இருவரும், இரண்டு வில்லும்
ஏற்றினர்; உலகம் ஏழும்
வெருவர, திசைகள் பேர,
வெங்கனல் பொங்க, மேன்மேல்

செருமலே கின்ற போழ்தில்,
திரிபுரம் எரித்த தேவன்,
வரிசிலே இற்றது ஆக,
மற்றவன் முனிந்து மன்னோ. 3

பொழிப்பு : சிவன் திருமால் ஆகிய இருவரும், இரண்டு விற்களேயும் நாண் ஏற்றினர்; ஏழு உலகங்களும் நடுங்க, திக்குகள் நிலே குலேய, கோபத்தீ எழ, மேலும் மேலும் போர்புரியும் போது, முப்புரத்தை எரித்த சிவபெருமானின் கட்டமைந்த வில் ஒடிந்துவிட, அந்தச் சிவன் கோபித்து (குளகம்)

விளக்கம் : வெருவர்: அஞ்ச. பேர: நிலேகுலேய. செரு: போர்.

(பால. பரசுராமப் படலம். சிவனுக்கும் திருமாலுக்கும் போர்)

நெற்றியில் கண்ணன்

332 மீட்டும்போர் தொடங்கும் வேலே,
விண்ணவர் விலக்க, வல்வில்
நீட்டினன் தேவர் கோன்கை,
நெற்றியில் கண்ணன்; வெற்றி
காட்டிய கரிய மாலும்,
கார்முகம் தன்னே, பாரில்
ஈட்டிய தவத்தின் மிக்க
இரிசிகற்கு ஈந்து போனன். 4

பொழிப்பு : திரும்பவும், அவ்விருவரும் போர் தொடங்கும் போது, அமரர்கள் அதனைத் தடுக்க, தன்னுடைய வலிய வில்லே நெற்றிக் கண்ணனுகிய சிவன், இந்திரனுடைய கையிலே கொடுத்தான்; வெற்றி கொண்ட கருநிறம் வாய்ந்த திருமாலும், தன்னுடைய வில்லே உலகத்திலே தவத்தை மிகுதியும் திரட்டிக் கொண்டவனை இரிசிகன் என்னும் முனிவனுக்குக் கொடுத்துவிட்டுச் சென்றன்.

விளக்கம் : கார்முகம்: வில். ஈட்டிய: சேகரித்த.

(பால. பரசுராமப்படலம். தன்வெற்றி வில்லேப் பரசுராமன் பாராட்டுதல்)

வெண்மதிப் பாதியான்

333 ‘நீதியாய்! முனிந்திடேல்;
நீஇங்கு யாவர்க்கும்
ஆதி;யான் அறிந்தனென்;
அலங்கல் நேமியாய்!
வேதியா! இறுவதே
அன்றி, வெண்மதிப்
பாதியான் பிடித்தவில்
பற்றப் போதுமோ?’ 5

பொழிப்பு : நெறி உடையானே! வெகுளற்க ; நீ இவ்வுலகில் உள்ள எல்லோர்க்கும் முதல்வன் ; (அவ்வுண்மையை) நான் அறிந்து கொண்டேன் ; மாலை அணிந்த சக்கரம் தாங்கியவனே ! மறையோனே ! வெள்ளிய மதித்துண்டத்தை அணிந்த சிவபெருமான் கையில் பிடித்த வில் இற்று விழுவது அன்றி, உன் கையில் பிடிப்பதற்கும் பொருந்துமா?

விளக்கம் : அலங்கல் : மாலை. இராமனை ‘வேதியா’ என்று இங்குக் கூறுவது போல், கும்பகன்னன் ‘அரசர்உருக் கொண்டமைந்த வேதியா!’ எனப் பின்னர் கூறுதலும் சிந்திக்கத்தக்கது. சிவன்வில் நீ ஒடித்தற்குத் தகுதியுடையதன்றி, பிடித்ததற்குத் தகுதியுடையதல்ல என்றபடி. (பால. பரசுராமப் படலம். பரசுராமன் இராமனைப் பெரிதும் பாராட்டுதல்)

13 சுக்கிரீவன் மொழி

ஆறுகொள் சடிலத்தான்

334 தேறினன், ‘அமரர்க்கு எல்லாம்
தேவர்ஆம் தேவர் அன்றே,
மாறி,இப் பிறப்பில் வந்தார்
மானிடர் ஆகி மன்னோ?
ஆறுகொள் சடிலத் தானும்,
அயனும்,என்று இவர்கள் ஆதி
வேறுஉள குழுவை எல்லாம்,
மானுடம் வென்றது’ அன்றே!’ 1

பொழிப்பு : 'தேவர்கள் அனைவர்க்கும் இறைவராகிய கடவுளே, தேவப் பிறவியினின்றும் மாறி, மனித உடல் பெற்று, இந்தப் பிறவி எடுத்து வந்தார்; ஆதலால், கங்கையைச் சடையில் தரித்த கடவுளும், பிரமனும் என்று சொல்லத்தக்க இவர்களை உள்ளிட்ட பிற எல்லாக் கூட்டத்தையும், மானுடப் பிறவி வெற்றி கொண்டது' என்றே தெளிந்தான் (சுக்கிரீவன்.)

விளக்கம் : தேறுதல்: தெளிதல். மானுடப் பிறவி தேவப் பிறவியை வென்றது என்க. மன், ஓ: அசை. இராமபிரானைப் பார்த்த சுக்கிரீவனின் நிலைமையை மூன்று பாடல்களில் சொல்லுவார் கவிச்சக்கரவர்த்தி. 'கண்டனன், நோக்கினன், தேறினன்' என்ற வினை முற்றுக்களை முதலில் கொண்டு மூன்று பாடல்களும் தொடங்குகின்றன. காணுதல்: பொதுவாகக் காண்டல்; நோக்குதல்: கூர்ந்து பார்த்தல்; தேறுதல்: தெளிதல். முன் இரண்டு பாடல்களிலும் சிவசம்பந்தம் இன்மையால் இங்கு கொள்ளப் பெறவில்லை.

(கிட்கிந்தை. நட்புக் கோட்படலம். இராமன் கடவுள் தன்மையைச் சுக்கிரீவன் தெளிதல்)

கங்கையின் கணவன்

335 'அங்குவந்து அரிஎதிர்ந்து
"அமைதிஎன்?" என்றலும்,
"பொங்குவெஞ் செருவினில்
பொருதி"என்று உரைசெயக்
"கங்கையின் கணவன்,அக்
கறைமிடற்று இறைவனே
உங்கள்வெங் கதவலிக்கு
ஒருவன்"என்று உரைசெய்தான்' 2

பொழிப்பு : திருமால், அவ்விடத்துக்குவந்து, (துந்துபியின்) எதிர்ப் பட்டு, 'நீ இங்குவரக்காரணம் என்ன?' என்று கேட்க, (துந்துபிஎன் பான்) 'பொங்கி எழும் இக்கொடும் போரிலே போர்புரிவாயாக' என்று (திருமாலைப்பார்த்து) சொல்ல, 'கங்கையின் நாயகனாகிய அந்தக்கண்டங் கறுத்த கடவுளே, உங்களுடைய கொடிய சினப்பெருக்கிற்கு ஏற்ற ஒருவனாவான்' என (திருமால்) சொன்னான்.

விளக்கம் : அரி : திருமால். அமைதி என் : வந்து பொருந்திய காரணம் என்ன? கங்கையின் கணவனும், கறை மிடற்று இறைவனும் சிவபெருமான். கதம் : கோபம்.

(கிட்கிந்தை. துந்துபிப்படலம். துந்துபியைச் சிவனிடம் திருமால் அனுப்புதல்)

கடவுள் தன் கயிலை

336 கடிதுசென்று, அவனும்,அக்
கடவுள்தன் கயிலையை,
கொடியகொம் பினின்மடுத்து
எழுதலும், குறுகிமுன்,
''நொடிதி;நின் குறைஎன்?''என் -
- றலும்,நுவன் றனன்அரோ,
''முடிவில்வெஞ் செரு,எனக்கு
அருள்செய்வான் முயல்க''என! 3

பொழிப்பு : அந்தத் துந்துபி என்ற அசுரனும் விரைந்து சென்று, அந்தச் சிவபெருமானின் கயிலை மலையைத் தன்னுடைய கொடிய கொம் பினாலே குத்திக்கொண்டு எழுந்த அளவில், அச்சிவபிரான் எதிரில் வந்து, 'உன் குறை என்ன சொல்வாயாக' என்று கேட்டவுடன், 'ஈறு இல்லாத கொடிய போரை எனக்கு அருள்செய்யும் பொருட்டு முயல் வாயாக' என்று சொன்னான்.

விளக்கம் : கடிது : விரைந்து. குறுகிமுன் : எதிர்வந்து. நொடிதி : சொல்க. நுவன்றனன் : சொன்னான். அரோ : அசை. செய்வான் : செய்யும் பொருட்டு.

(கிட்கிந்தை. துந்துபிப்படலம். துந்துபி சிவனிடம் போர்வேண்டல்)

முருகன் தந்த தளிரியல் பாகத்தான்

337 முளரிமேல் வைகுவான்,
முருகன் தந்தஅத்
தளிரியல் பாகத்தான்,
தடக்கை ஆழியான்,
அளவிஒன்று ஆவரே
அன்றி; ஐயம்இல்
கிளவியாய்! தனித்தனிக்
கிடைப்ப ரோதுணே? 4

பொழிப்பு : சந்தேகத்துக்கு இடம் இல்லாமல் பேசும் திறன்வாய்ந் தவனே ; (இராமபிரானே!) திருமாலின் கொப்பூழில் தோன்றியவனுகிய பிரமனும், முருகக்கடவுளேப் பெற்ற அந்தத் தளிர் போலும் மென்மை கொண்ட உமையவளேப் பகுதியிலே உடைய, சிவபெருமானும் பெரிய கையிலே சக்கரம் ஏந்திய திருமாலும் ஒன்றுகூடி உனக்கு நிகர்ஆவரே அன்றி, அம் முப்பெருங்கடவுளர்களும் தனித்தனியாக உனக்கு ஈடு ஆவாரா ? (மாட்டார்)

விளக்கம் : சுக்கிரீவன் வாய்மொழியாகிய இப்பாடல் ' மூலமும் நடுவும் ஈறும் ' என அனுமன் மொழிந்த பாடலின் கருத்தை அரண் செய்கிறது. இராமன் பேச்சை ' ஐயம் இல்கிளவி ' என்பது பெருஞ் சிறப்புடையது.

(கிட்கிந்தை, கலன்காண்படலம், மும்மூர்த்திகளும் தனித்தனி இராமனுக்கு ஈடாகார் எனச் சுக்கிரீவன் சொல்லுதல்)

அரன் அதிகன் அரி அதிகன்

338 "அரன்அதிகன், உலகுஅளந்த அரிஅதிகன்,"
என்றுஉரைக்கும் அறிவி லோர்க்குப்
பரகதிசென்று அடைவுஅரிய பரிசேபோல்,
புகல்அரிய பண்பிற்று ஆமால்;
சுரநதியின் அயலது,வான் தோய்குடுமிச்
சுடர்த்தொகைய, தொழுதோர்க்கு எல்லாம்
வரன்அதிகம் தரும்தகைய, அருந்ததிஆம்
நெடுமலேயை வணங்கி, அப்பால், 5

பொழிப்பு : சிவபெருமானே சிறந்தவன், (அன்றி) உலகத்தை அளந்த திருமாலே சிறந்தவன் என்று சொல்லுகின்ற அறிவற்றவர் களுக்கு, மேலான நிலைமையை (வீட்டு உலகத்தை)ப் போய் அடைவது அருமையான தன்மை போல, நுழைவதற்கு அருமையான தன்மை உள்ளதாம் தேவகங்கையின் அணித்தே உள்ளதும், வானத்தைத் தொடும் சிகரங்களிலே, சந்திர சூரிய ராகிய இரு சுடரும் பொருந்துதலே உடையதும், வணங்குவோர்க்கெல்லாம் அதிகமான வரங்களேக் கொடுக்கும் தகுதியுள்ளதுமான, அருந்ததி என்னும் பெயரை உடைய நீண்ட மலேயைக் கும்பிட்டு, அதன்பிறகு,

விளக்கம் : ' சிவன் பெரியவன் திருமால் பெரியவன் என்று போரிடுதல் அறிவீனம் ' என்பது கவியின் கருத்து. இப்பாடலினின்றே சில புலவர் சண்டை இடுவது பெரிதும் வெறுக்கத்தக்கது. பரகதி : வீடு பேறு. பரிசு : தன்மை. புகல் அரிய : செல்ல முடியாத. சுரநதி : தேவகங்கை. குடுமி : சிகரம். சுடர்த்தொகை : மதி. இரவி ஆகிய இரண்டு.

(கிட்கிந்தை. நாடவிட்ட படலம். சுக்கிரீவன் அருந்ததிமலேயின் பெருமையை உரைத்தல்)

நான்கு இடங்களில் மூவர் மொழி

14-தயரதன் மொழி

15-இலக்குவன் மொழி

16-சடாயு மொழி

14. தயரதன், 15. இலக்குவன், 16. சடாயு மொழி

இராமனைப் பெற்ற தயரதனும், இளையபெருமாளாகிய இலக்குவனும், இராமபிரான் தந்தையருள் ஒருவனுகிய சடாயுவும் நன்ஞன்கு இடங்களில் சிவனை நவில்வர்.

" பனிநீர்க் கங்கை புடையூற்றும் சடையான் "

" கற்றைவார் சடைக் கணிச்சி வானவன் "

" புரம் மூன்று எரித்த போர்வில்லோன் "

எனத் தயரதன் சாற்றுவான்.

" முப்புரம் சுடும் ஒருவன் "

" வன்திரிபுரம் எரித்த புங்கவன் "

" கண்ணுடை நுதலினன், கணிச்சிவானவன் "

" ஐம்முகம் உடையான் "

என்பன இலக்குவன் கூறுவன.

" மழுவலாளன் "

" புரம் பற்றிய போர் விடையோன் "

" முப்புரங்களை எய்தவில்லி "

என்பன சடாயு சாற்றுவன.

" வடுக்கண்வார் கூந்த லாளை,
இராவணன் மண்ணி னேடும்
எடுத்தனன், ஏகு வானை
எதிர்ந்துஎனது ஆற்றல் கொண்டு
தடுத்தனென், ஆவது எல்லாம்;
தவத்துஅரன் தந்த வாளால்
படுத்தனன்; இங்கு வீழ்ந்தேன்;
இதுஇன்று பட்டது" என்ருன்.

என்று சங்கரன் கொடுத்த வாளின் சிறப்பைச் சடாயுபாரட்டுகின்ருன்.

14. தயரதன் மொழி.
கங்கை புடையூற்றும் சடையான்

339 தொடைஊற்றின் தேன்துளிக்கும் நறுந்தாரான்
ஒருவண்ணம் துயரம் நீங்கி,
'படைஊற்றம் இலன்;சிறியன் இவன்;பெரியோய்!
பணிஇதுவேல், பனிநீர்க் கங்கை
புடைஊற்றும் சடையானும், நான்முகனும்,
புரந்தரனும் புகுந்து செய்யும்
இடையூற்றுக்கு இடையூருய் யான்காப்பென்;
பெருவேள்விக்கு எழுக' என்ருன். 1

பொழிப்பு: தொடையாக (இடையீடின்றி) ஊற்றைப் போல, தேனைச் சொரியும் நல்ல மாலையை அணிந்த தயரதன், ஒருவாருகத் துன்பம் நீங்கியவனுய், 'பெரியோனுகிய விசுவாமித்திர முனிவனே! இராமனுகிய இவன் படைப் பயிற்சி இல்லாதவன்; சிறு பருவம் உடையவன்; (ஆதலால் இவன் வேண்டாம்) உன் கட்டளை இதுவானுல், குளிர்ந்த நீர் கொண்ட கங்கையைப் புறத்தே ஒழுகவிடும் சடையை உடையானுகிய சிவனும், பிரமனும், இந்திரனும் தோன்றி, செய்கின்ற தடைகளுக்குத் தடையாக யானே (நின் வேள்வியை நின்று) காப்பாற்றுவேன்; பெரிய வேள்வியைத் தொடங்குதற்குப் புறப்படுக' என்று இயம்பினுன்.

விளக்கம்: தொடை: தொடர்ந்துவருதல். நறும்: நல்ல. பணி: ஏவல். பனி: குளிர்ந்த. புடை: பக்கம். இடையூறு: நடுவே புகுந்து ஊறு செய்தல்.

பால. கையடைப் படலம். தயரதன் விசுவாமித்திரனிடம் வேள்வியை யானே காப்பல் என்று கூறல்)

கற்றைவார் சடைமுடிக் கணிச்சி வானவன்.

340 வெற்றிவேல் மன்னவன்,
'தக்கன் வேள்வியில்,
கற்றைவார் சடைமுடிக்
கணிச்சி வானவன்,
முற்றஏழ் உலகையும்
வென்ற முரிவில்
இற்றபேர் ஒலிகொல்அன்று
இடித்தது, ஈங்கு'என்ருன். 2

பொழிப்பு : வெற்றிக்குரிய வேல் தாங்கிய மன்னனும் தயரதன், தொகுதியான நீண்ட சடை முடியை உடைய, மழுஏந்திய வானவனுகிய சிவபிரான், தக்கன்செய்த வேள்வியின்போது, ஏழு உலகத்தையும் ஒரு சேர முழுதும் வென்ற வன்மை வாய்ந்த வில் ஒடிந்ததனுல் உண்டான பேரோசைதானே அன்று இங்கு முழங்கியது? என்று (வியந்து) கூறினுன்.

விளக்கம் : மன்னவன் : தயரதன். முற்ற: முழுதும். முரி: வலிமை. இற்ற ஒடிந்த.

(பால. எழுச்சிப்படலம். தயரதன், அன்று கேட்ட பேரோசை மைந்தன்வில் ஒடித்தமையால் எழுந்தது என அறிந்து மகிழ்ந்தது)

சிவனும் அயன் அரியும் அலர்.

341 அவன்அன்னது பகரும்அள-
-வையின்,மன்னவன் அயர்வான்,
'புவனம்முழு வதும்வென்றுஒரு
முனிவற்குஅருள் புரிவாய்!
சிவனும்,அயன் அரியும்அலர்;
சிறுமானிடர் பொருளோ?
இவனும்,எனது உயிரும்,உனது
அபயம்இனி' என்றுன். 3

பொழிப்பு : அந்தப் பரசுராமன் அவ்வாறு சொல்லும் அளவில், தயரத மன்னன் மனம் தளர்ந்தவனுய் (பரசுராமனைப் பார்த்து) 'உலகம் முழுதையும் வெற்றிகொண்டு, ஒப்பற்ற காசிப முனிவனுக்கு அருள்செய்து கொடுத்தவனே! அரனும், அயனும், அரியும் (உனக்கு ஒரு பொருட்டு) அல்லர்; இந்தச் சிறிய மனிதர்களைப் பொருட்டாக எண்ணலாமா? இனி இந்த இராமனும் என்னுடைய உயிரும் உன்னுல் காப்பாற்றப்பட வேண்டும்' என்றுன்.

விளக்கம் : அயர்தல் : தளர்ச்சி அடைதல். புவனம் : உலகம். அபயம் : காக்கத்தக்க பொருள். இவனும், எனது உயிரும் என்றமை, இவன் இன்றேல் எனது உயிர் இல்லை என்றபடி, 'மைந்தனலாது உயிர் வேறு இலாத மன்னன்' என்றார் பிறிதோரிடத்தில்.

(பால. பரசுராமப் படலம் சினந்த பரசுராமனிடம் தயரதன் அபயம் வேண்டல்)

இறைவன் போர்வில்

342 'கறுத்தாய் உருவம்! மனமும்
கண்ணும் கையும் செய்யாய்!
பொறுத்தாய் பொறையே! இறைவன்
புரம்மூன்று எரித்த போர்வில்
இறுத்தாய்! "தமியேன்" என்றுஎது.
என்னை இம்முப் பிடையே
வெறுத்தாய்; இனிநான் வாழ்நாள்
வேண்டேன்! வேண்டேன்!' என்றான். 4

பொழிப்பு: 'உடம்பு கறுத்து இருப்பவனே! உள்ளமும் கண்களும், கைகளும் செம்மையானவனே! பொறுமை என்னும் குணத்தையே தாங்கியவனே! முப்புரத்தைக் கொளுத்திய இறைவனுடைய போர் வல்ல வில்லை ஒடித்தவனே! யான் தனியாக உள்ளேன் என்று எண்ணுமல் என்னை இம் முதுமைப் பருவத்தினிடையே ஒதுக்கி விட்டாய்; இனிநான் உயிரோடுவாழும் நாளை விரும்பேன்! விரும்பேன்! என விளம்பினன் (தயரதன்.)

விளக்கம்: உடல் கரியவன் ஆனாலும், பிறபல அங்கங்களில் செய்யவன் என்பதை 'கண்ணும்' திருவடியும், கையும், திருவாயும் செய்ய கரியவனே' என்றார் இளங்கோவடிகள். ஆழ்வார் பாசுரங்களில் பல இவற்றை வலியுறுத்தும்.

(அயோத்தி. நகர்நீங்கு படலம். இராமனைப் பிரிந்த தயரதன் புலம்பல்)

15. இலக்குவன் மொழி.

புரம் சுடும் ஒருவன்

343 'அரம்சுட அழல்நிமிர்
அலங்கல் வேலினய்!
விரைஞ்சுஒரு நொடியில்இவ்
அனிக வேலையை
உரம்சுடு வடிக்கணை
ஒன்றில் வென்று,முப்
புரம்சுடும் ஒருவனின்
பொலிவென் யான்,என்றான். 1

பொழிப்பு : (இராமனைப் பார்த்து) 'அரத்தால் அராவி வருத்துவதால் நெருப்பைக் கக்குகின்ற, மாலை அணிந்த வேலை உடையவனே! விரைந்து, ஒரு மாத்திரை அளவில் இந்தச் சேனைக் கடலை, (பகைவரது) ஆற்றலைச் சுட்டு அழிக்கும் கூர்கொண்ட ஒரு அம்பினால் வெற்றிகொண்டு, முப்புரத்தை எரித்த ஒப்பற்றவனைப் போல, பொலிந்து தோன்றுவன் யான்' என்றான் (இலக்குவன்.)

விளக்கம் : சுட : வருத்த. அலங்கல் : மாலை. விரைஞ்சு : விரைந்து என்பதன் திரிபு. அனிகம் : படை. வேலை : கடல். உரம் : ஆற்றல். வடிக்கணை : கூரிய அம்பு.

(அயோத்தி. திருவடிசூட்டு படலம். பரதனுடன் வந்த படையை அழிப்பதாக இலக்குவன் இராமனிடம் இயம்பல்)

திரிபுரம் எரித்த புங்கவன்

344 மாற்றம்என் பகர்வது?
மண்ணும், வானமும்
போற்ற,வன் திரிபுரம்
எரித்த புங்கவன்,
ஏற்றிநின்று எய்தவில்
இற்றது; எம்பிரான்
ஆற்றலின் அமைவதுஓர்
ஆற்றல் உண்மையோ?'' 2

பொழிப்பு : சொல்லுவதற்குச் சொல் எங்கே இருக்கின்றது? மண்ணுலகமும், விண்ணுலகமும் போற்றி ஏற்ற, வலிய முப்புரத்தைத் தழல் கொளுத்திய புங்கவனாகிய சிவபிரான், நாணஏற்றி நின்று அம்பு தொடுத்த வில் ஒடிந்து வீழ்ந்தது ; (எனவே) எம்பிரானாகிய இராமனின் வலிமையை விட, பொருந்தத்தக்க ஓர் ஆற்றல் வேறு எங்கும் உண்டா? (இல்லை)

விளக்கம் : மாற்றம் : சொல். வன் : வலிய.

(ஆரணிய. சடாயு உயிர் நீத்த படலம். இராமன் ஆற்றலை இலக்குவன் சீதைக்குச் செப்புதல்)

கண்ணுடை நுதலினன்

345 கண்ணுடை நுதலினன்,
கணிச்சி வானவன்,
விண்ணிடைப் புரம்சுட
வெகுண்ட மேலைநாள்,

எண்ணிய சூழ்ச்சியும்
ஈட்டிக் கொண்டவும்,
அண்ணலே! ஒருவரால்
அறியற் பாலதோ? 3

பொழிப்பு: பெருமையிற் சிறந்த இராமனே! நுதல்விழி நாட்டத்து இமையவனும் மழு ஏந்திய சிவபிரான், வானில் திரிந்த முப்புரத்தை எரிக்கச் சினந்த அந்தநாளில், ஆராய்ந்துகொண்ட ஆலோசனைகளும், சேர்த்துக்கொண்ட கருவிகளும், ஒருவரால் அறியத்தக்கன ஆமோ?

விளக்கம்: கண்ணுடை நுதலினனும் கணிச்சி வானவன் கூட முப்புரத்தை எரிப்பதற்கு, எவ்வளவோ ஆராய்ந்து, பல துணைப்பொருள் களையும் சேர்த்துக்கொண்டுதானே செய்தான். எனவே எல்லாம் சேகரித்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்பது கருத்து.

(கிட்கிந்தை. கார்காலப் படலம். இலக்குவன் இராமனுக்குத் தேறுதல் கூறல்)

சிவன் ஐம்முகம் உடையான் படை

346 'அவயம்!உனக்கு அவயம்!'எனும்
அனைவோரையும், 'அஞ்சல்!
அவயம்உமக்கு அளித்தோம்'என,
தன்கைத்தலத்து அமைத்தான்;
'உவயம்உறும் உலகின்பயம்
உணர்ந்தேன்,இனி ஒழியேன்;
சிவன்,ஐம்முகம் உடையான்,படை
தொடுப்பேன்'எனத் தெளிந்தான். 4

பொழிப்பு: 'அடைக்கலம்! உனக்கு அடைக்கலம்!' என்று மொழிந்த எல்லோரையும் பார்த்து, (இலக்குவன்) அஞ்சாதீர். 'உமக்கு அபயம் அளித்தோம்;' என்று சொல்லி, தன் கையினால் அமர்த்தினான்; இரண்டாக (மண் விண்) அமைந்த உலகங்களின் அச்சத்தை அறிந்தேன்; இனி ஓயமாட்டேன்; ஐந்து முகங்களை உடைய சிவபெருமானின் படையாகிய பாசுபதத்தைத் தொடுத்துவிடுவேன்' என முடிவு செய்தான்.

விளக்கம்: அவயம்: அடைக்கலம் புகுந்தோர் கூறல். இது அபயத்தின் திரிபு. உவயம்: இரண்டு உவயம் உறும் உலகு: மண் விண் என்ற இரண்டு உலகம்.

(யுத்த. நிகும்பலை யாகப் படலம். இலக்குவன் சிவன் படைவிடத் தெளிதல்)

16. சடாயு மொழி.

மழுவலானும் கரந்திலர் என்னை

347 புரந்தரன் முதலிய
புலவர் யாரையும்
நிரந்தரம் நோக்குவென்;
நேமி யானும்,அவ்
வரந்தரும் இறைவனும்,
மழுவ லாளனும்,
கரந்திலர் என்னை;யான்
என்றும் காண்பெறல். 1

பொழிப்பு: இந்திரன் முதலிய தேவர்கள் யாவரையும், யான், எப்பொழுதும் பார்க்கின்றேன் ; சக்கரம் கொண்ட திருமாலும், வரத்தைத் தருகின்ற அந்த இறைவனாகிய பிரமனும், மழுப்படையோனாகிய சிவனும் எனக்கு மறையமாட்டார்கள் ; அவர்களை என்றைக்கும் பார்ப்பேன்.

விளக்கம்: புரந்தரன் : இந்திரன். புலவர் : தேவர். நிரந்தரம் : எப்பொழுதும். கரத்தல் : மறைத்தல். இந்திரன் உள்ளிட்ட தேவர்களையும், அரி, அயன், அரன் ஆகிய முப்பெருங் கடவுளர்களையும் நான் நேரில் கண்டிருக்கின்றேன் ; இந்த இரு சிறுவர்களும், அவர்களில் எவரும் அலர் ; யார் என்று அறியேன், என வியந்தவாறு.

(ஆரணிய. சடாயு காண் படலம். இராம இலக்குவர்களைச்
சடாயு கண்டு வியப்பில் மூழ்குதல்)

புரம் பற்றிய போர் விடையோன்

348 "புரம்பற் றியபோர்
விடையோன் அருளால்,
வரம்பெற் றவும்,மற்
றுளவிஞ் சைகளும்,

உரம்பெற் றனஆ-
வன,உண் மையினேன்
சரம்பற் றியசா
பம்விடுந் தனையே. 2

பொழிப்பு: முப்புரம் தீப்பற்றி எரியுமாறு போர் செய்த விடை ஏறும் சிவபிரான் கருணையால், (நீ) பெற்றுக்கொண்ட வரங்களும், மற்றைய வித்தைகளும், உண்மைக்கு உறையுளாகிய இராமபிரான் வில்லில் அம்பைத் தொடுத்து விடுகின்ற வரையில்தான் வலிமை பெற்றனவாம்.

விளக்கம்: பற்றுதல்: தீப்பற்றுதல். விஞ்சை: வித்தை. உரம்: வலிமை. சரம்: அம்பு. சாபம்: வில். தனை: அளவு.
(ஆரணிய. சடாயு உயிர் நீத்த படலம். 'இராமன் அம்பு உன் வரத்தையும் மாயையையும் அழித்துவிடும்' எனச் சடாயு இராவணனுக்குச் சாற்றல்)

முப்புரங்களை எய்த வில்லியார்

349 'அலக்கணும் இன்பமும்
அணுகு நாள்,அவை
விலக்குவம் என்பது
மெய்யிற்று ஆகுமோ?
இலக்குமுப் புரங்களை
எய்த வில்லியார்,
தலைக்கலத்து இரந்தது
தவத்தின் பாலதோ?' 3

பொழிப்பு: துன்பமும், இன்பமும் வருங்காலத்தில், அவற்றைத் தடுத்துவிடுவோம் என்று கருதுவது உண்மை உடையது ஆகுமா? முப்புரங்களை இலக்காகக்கொண்டு அம்பு விட்ட வில்வல்ல சிவபெருமான், தலையோட்டில் பிச்சை வாங்கியது தவத்தின்பாற்பட்டது ஆகுமா?

விளக்கம்: அலக்கண்: துன்பம் தலைக்கலம்: பிரமனது தலையோடு சிவன் பலி ஏற்றது தவத்தொடு பொருந்திய செயல் ஆகுமா? என்பது ஆகாது என்றபடி. ஊழ்: சிவனையே பிச்சை எடுக்கச் செய்தது என்றால் நின் மனைவியைப் பிரித்தல் அந்த ஊழுக்கு அரிய செயலா? என்றான் என்க.

(ஆரணிய. சடாயு உயிர் நீத்த படலம். சடாயு இராமனுக்குத் தேறுதல் கூறல்)

அரன் தந்த வாளால் படுத்தனன்

350 'வடுக்கண்,வார் கூந்தலாளை,
இராவணன் மண்ணி னோடும்
எடுத்தனன் ஏகு வானை,
எதிர்ந்துஎனது ஆற்றல் கொண்டு
தடுத்தனென், ஆவது எல்லாம்;
தவத்து,அரன் தந்த வாளால்
படுத்தனன்; இங்கு வீழ்ந்தேன்;
இதுஇன்று பட்டது' என்றான். 4

பொழிப்பு : 'மாவடுவின் பிளவை ஒத்த கண்களையும், நீண்ட குழலையும் உடைய சீதையை, அவள் இருந்த நிலத்தொடும் பெயர்த்தெடுத்துச் சென்ற இராவணனை, எதிர்த்து, என்னால் முடிந்த அளவும் என் வலிமையைக் காட்டித்தடுத்து நிறுத்தினேன்; தவத்துக்கு இரங்கி, சிவன் அவனுக்குக் கொடுத்த வாளினால், என்னை வெட்டி வீழ்த்தினான்; இங்கு வீழ்ந்துகிடக்கின்றேன்; இது இன்று நிகழ்ந்த நிகழ்ச்சி' என்று கூறினான் (சடாயு.)

விளக்கம் : விடுக்கண் : மாவடுவின் வகிர் போன்ற கண். "வடுப் பிளவு அனைய கண்ணாள்" என்று சிந்தாமணியும், "மாவடு வகிர் அன்ன கண்ணிபங்கா" என்று திருவாசகமும் கூறுதல் காண்க. வார் : நீண்ட. 'இராவணன் சீதையை அவள் இருந்த தரையோடு தோண்டி எடுத்துச் சென்றான்' என்பதைக் கம்பர் பல இடத்தும் கூறுவர். இது ஆதி காவியத்தில் இல்லாத செய்தி. தொட்டு எடுத்தல் கற்புக்குக் குறைவு என்பது கம்பர் கருத்து. எனவே தான் செய்த மாற்றத்தைப் பல இடத்தும் வலியுறுத்துவர். அது பற்றியே இங்கும் 'மண்ணினோடும்' என்றார். இதற்கு முத்தாய்ப்பு வைத்தாற் போல் "நும்பி புல்லினால் தொடுத்த தூய சாலையுள் இருந்தாள் ஐய! தவம் செய்த தவமாம் தையல்?" என்று அனுமன் வாயிலாக. இந்திய மண்ணில், இலக்குவன் கட்டிய குடிசையிலேயே இலங்கையில் சீதை இருப்பதாகக் கவிச்சக்கரவர்த்தி கூறுவது சாலச் சிறப்புடைத்து.

(ஆரணிய. சடாயு உயிர்நீத்த படலம். சீதையை இராவணன்எடுத்துச் சென்றசெய்தியை இராமனுக்கு, சடாயு செப்புதல்)

மூன்று இடங்களில் நால்வர் மொழி

17-சாம்பன் மொழி

18-மகோதரன் மொழி

19-அதிகாயன் மொழி

20-அரக்கர் மொழி

17. சாம்பன். 18. மகோதரன். 19. அதிகாயன். 20. அரக்கர் மொழி.

இந்நால்வரும் மும்மூன்று இடங்களில் சிவனைப் பற்றிச் செப்புவர்.

"ஆலம் நுகர்ந்தான்"
"கறை மிடற்றவன்"

என்பன சிவனைப்பற்றிச் சாம்பன் சொல்லுவன.

சிவனைப் பற்றி மகோதரன் கூறும் பாடல்கள் மூன்றும் இராவணனை விளித்துக் கூறும் பாடல்கள்.

"வெள்ளிஅம் கிரியினை விடையின் பாகனோடு
அள்ளிவிண் தொடஎடுத்து, ஆர்த்த ஆற்றலாய்!"

என்பது ஒன்று.

"திரிபுரம் எரிய ஆங்குஓர்
தனிச்சரம் துரந்த செல்வன்,
ஒருவன்இப் புவனம் மூன்றும்
ஓர்அடி ஒடுக்கிக் கொண்டோன்,
பொருது உனக்கு உடைந்துபோனர்
மானிடர் பொருத போர்க்கு
வெருவுதி போலும் மன்ன!
கயிலையை வெருவல் கண்டாய்!"

என்பது இன்னென்று.

மங்கையை, குலத்து ளானை,
தவத்தியை முனிந்து, வாளால்
சங்கைஒன்று இன்றிக் கொன்ருல்,
குலத்துக்கே தக்கான் என்று,

கங்கைஅம் சென்னி யானும்,
கண்ணனும் கமலத் தோனும்,
செங்கையும் கொட்டி, உன்னைச்
சிரிப்பரால், 'சிறியன்' என்று.

என்பது மூன்றாவது பாட்டு. இப் பாடல்கள் மூன்றும் சிறப்புடையன. அதினும் மூன்றாவது பாடல் பெருஞ்சிறப்புடைத்து.

"அஞ்சு முகத்தவன்"
"உமையொரு பாகன்"
"உமை ஒரு கூறன்"

என்பன அதிகாயன் கூறுவன. அதிகாயன் இலக்குவனோடு போருக்கு எழுந்த போது அவன் கூறும் பின் வரும் பாடல் சிறப்புடையது.

"உமையனே காக்க; மற்றுஅங்கு
உமைஒரு கூறன் காக்க;
இமையவர் எல்லாம் காக்க;
உலகம்ஓர் ஏழும் காக்க;
சமையும்உன் வாழ்க்கை, இன்றோடு
என்றுதன் சங்கம் ஊதி,
அமைஉருக் கொண்ட கூற்றை
நாணஎறிந்து உருமின் ஆர்த்தான்"

சிவனுக்கு அரக்கர் கூறும் சிறப்புச் சொல் தொடர்:

"புரங்கள் எய்த புங்கவன்"
"புரம்சுடும் கடவுள்"
"குண்டையின் பாகன்"

என்பன.

17. சாம்பன் மொழி

ஆலம் நுகர்ந்தான்

351 'மேலை விரிஞ்சன் வீயினும்
வீயா மிகைநாளீர்;
நூலை நயந்து, நுண்ணிது
உணர்ந்தீர்; நுவல்தக்கீர்;
காலனும் அஞ்சும் காய்சின
மொய்ம்பீர்; கடன் நின்றீர்;
ஆலம் நுகர்ந்தான் என்ன
வயப்போர் அடர்கிற்பீர்;' 1

பொழிப்பு: (சாம்பன் அனுமனை நோக்கி) 'சிறந்தவனான பிரமன் அழிந்தாலும், அழியாத நீண்ட நாட்களை உடையீர்; நூல்களை எல்லாம் விரும்பி நுணுகி ஆராய்ந்துஇருக்கின்றீர்; தக்கவாறு உரைக்கும் திறன் உடையீர்; எமனும் பயப்படத்தக்க, கடுங்கோபமும், ஆற்றலும் உடையீர்; கடமையை ஆற்றுவதில் தலைசிறந்தீர்; நஞ்சை அருந்திய சிவபிரான் போல வெற்றி நல்குமாறு போர்புரிய வல்லீர்!' (என்று மொழிந்தான்)

விளக்கம்: விரிஞ்சன்: பிரமன். வீதல்: சாதல். மிகைநாள்: பெரிய வாழ்நாள். நயந்து: விரும்பி. நுவல்தல்: சொல்லுதல். நுவல் தக்கீர்: சொல்லின் செல்வரே. மொய்ம்பு: வலிமை. வயம்: வெற்றி.

(கிட்கிந்தை. மயேந்திரப் படலம். அனுமனைச் சாம்பன் பாராட்டல்)

சிவன் அலால்

352 யான்அலால், எந்தையாய்
உலகை ஈன்றுளான்
தான்அலால், சிவன்அலால்,
நேமி தாங்கிய
கோன்அலால், எனைவரும்
உணரும் கோள்இலர்,
வேனிலான் மேனியாய்!
மருந்தை மெய்உற. 2

பொழிப்பு : (சாம்பன் இராமனைப் பார்த்து) 'மன்மதனைப் போன்ற அழகு உடையவனே! என்னைத் தவிர, என் தந்தையாகி உலகத்தைப் படைத்த பிரமனைத் தவிர, சிவனைத் தவிர, சக்கரம் ஏந்திய தலைவன் திருமாலைத் தவிர, வேறு எவரும் மருந்தின் உண்மையைப் பொருந்துமாறு அறியமாட்டார்கள் (என்று சொன்னான்.)

விளக்கம் : மருந்தின் மேன்மையை மும்மூர்த்திகளையும் என்னையும் தவிரப் பிற எவரும் அறியமாட்டார்கள் என்றபடி.

(யுத்த. மருத்துமலைப் படலம். அனுமன் கொணரும் மருந்தின் சிறப்பை இராமனிடம் சாம்பன் கூறல்)

கறை மிடற்றவற்கும் ஆமே?

353 நாணத்தால் சிறிது போது
நலங்கினன் இருந்து, பின்னர்,
'தூண்ஒத்த திரள்தோள் வீர!
தோன்றிய அரக்கர் தோற்றம்
காணத்தான், நிற்கத் தான்,அக்
கறைமிடற் றவற்கும் ஆமே?
கோணல்பூ உண்ணும் வாழ்க்கைக்
குரங்கின்மேல் குற்றம் உண்டோ?' 3

பொழிப்பு : (சாம்பன்) நாணத்தினாலே சிறிது நேரம் மனம் வாடி இருந்து, பிறகு (அங்கதனைப் பார்த்துக் கூறுவான்) 'தூணை ஒத்த திரண்ட தோளை உடைய வீரனே! இங்கு வந்து நிற்கும் அரக்கர்கள் கூட்டத்தைக் காணவாவது, கண்டபின்னர் அஞ்சி ஓடாது நிற்கவாவது அந்த நீலகண்டனாலும் முடியுமா? பூவைப் பறித்துத் தின்று வாழும் வாழ்க்கையை உடைய கோணிய உடல்கொண்ட குரங்குகளின் மேல் குற்றம் உண்டா?

விளக்கம் : நாணம் : வெட்கம். நலங்குதல் : வாட்டம் அடைதல். கறை மிடற்றவன் : சிவபெருமான். அரக்கர்களின் அச்சுறுத்தும் தோற்றத்தைக் கண்டால் நீலகண்டனும் ஓட்டம் பிடிப்பானே! குரங்குகளைச் சொல்வதில் என்ன பயன் என்க. கோணல் என்பதை, குரங்கின் மேல் என்பதோடு கூட்டுக.

(யுத்த. மூலபல வதைப் படலம். சாம்பன் அங்கதனைப் பார்த்துச் சொல்லுதல்)

18. மகோதரன் மொழி

வெள்ளியங் கிரியினை அள்ளிய ஆற்றல்

354 'வெள்ளிஅம் கிரியினை
விடையின் பாகனோடு
அள்ளி,விண் தொடஎடுத்து,
ஆர்த்த ஆற்றலாய்!
சுள்ளியில் இருந்துஉறை
குரங்கின் தோள்வலிக்கு,
எள்ளுதி போலும்,நின்
புயத்தை எம்மொடும்?' 1

பொழிப்பு: அழகிய வெள்ளி மலையை விடை ஏறும் பெருமானாகிய சிவனோடு, வானைத் தொடுமாறு அள்ளி எடுத்து ஆரவாரம் செய்த ஆற்றல் வாய்ந்தவனே! மரக்கொம்பில் இருந்து வாழும் வாழ்க்கை உடைய குரங்குகளின் தோளாற்றலுக்கு உன் தோள் வலிமையை எங்களிடம் குறைத்துச் சொல்கிறாய் போலும்.

விளக்கம்: ஆர்த்த: பேரொலி எழுப்பிய. சுள்ளி: மரத்தின் சிறு குச்சி.

(யுத்த. இராவணன் மந்திரப் படலம். மகோதரன் இராவணனைப் பார்த்துப் பேசுதல்)

தனிச்சரம் துரந்த செல்வன்

355 'திரிபுரம் எரிய, ஆங்குஓர்
தனிச்சரம் துரந்த செல்வன்,
ஒருவன்இப் புவனம் மூன்றும்
ஓர்அடி ஒடுக்கிக் கொண்டோன்,
பொருது,உனக்கு உடைந்து போனார்;
மானிடர் பொருத போர்க்கு
வெருவுதி போலும்; மன்ன!
கயிலையை வெருவல் கண்டாய்.' 2

பொழிப்பு : முப்புரம் தீப்பற்றி எரியுமாறு அங்கே ஒப்பற்ற தனி அம்பைச் செலுத்திய செல்வனாகிய சிவபெருமானும், தன்னந்தனியனாய் மூன்றுலகத்தையும் ஓர் அடியிலே அடங்கச் செய்த திருமாலும் போர் புரிந்து உனக்குத் தோற்று ஓடினர் ; (அங்ஙனமாக) மனிதர்கள் செய்கின்ற சண்டைக்கு நீ அஞ்சுவாய் போலும் ; அரசனே! கயிலை மலையை அஞ்சுமாறு செய்தவன் அல்லவா நீ.

விளக்கம் : வெருவுதி : அஞ்சுவாய்.

(யுத்த. கும்பகன்னன் வதைப் படலம். மகோதரன் இராவணனைப் புகழ்தல்)

கங்கை அம் சென்னியான்

356 மங்கையை, குலத்து ளாளை,
தவத்தியை, முனிந்து வாளால்
சங்கைஒன் றும் இன்றிக் கொன்றால்,
"குலத்துக்கே தக்கான்" என்று,
கங்கைஅம் சென்னி யானும்,
கண்ணனும், கமலத் தோனும்
செங்கையும் கொட்டி, உன்னைச்
சிரிப்பரால் "சிறியன்" என்று. 3

பொழிப்பு : பெண்ணை, நல்ல குலத்தில் தோன்றியவளை, தவக் கோலம் பூண்டவளை, சினந்து, வாள்கொண்டு கூச்சம் இன்றிக் கொல்வாயானால், கங்கையை அழகிய சடையில் கொண்டவனான சிவனும், திருமாலும், தாமரை வாழ் பிரமனும் 'அரக்கர் குலத்துக்கு ஏற்ற தகுதியுடையவன் தான் இவன்' என்று கூறி, தங்கள் சிவந்த கைகளைக்கொட்டி உன்னைப் பாாத்துச் சிறியன் என்று சொல்லி ஏளனச் சிரிப்புச்சிரிப்பர் அல்லவா?

விளக்கம் : 'சங்கை' ஈண்டுக் கூச்சம்.

(யுத்த. இராவணன் சோகப் படலம். சீதையை வாளால் வெட்ட முனைந்த இராவணனை மகோதரன் தடுத்துக் கூறுதல்)

19. அதிகாயன் மொழி

அஞ்சு முகத்தவன்

357 வான்அஞ்சுக; வையகம் அஞ்சுக;மா-
லான்,அஞ்சு முகத்தவன், அஞ்சுக;"மேல்,
நான்அஞ்சினன்" என்று,உனை நாணுக;போர்
யான்அஞ்சினென் என்றும் இயம்புவதோ? 1

பொழிப்பு: விண்ணகத்தில் உள்ளோர் அஞ்சட்டும்; மண்ணுலகில் வாழ்வார் அஞ்சட்டும்; திருமாலும், அஞ்சுமுகம் கொண்ட சிவனும் அஞ்சட்டும்; 'மேலும், நான் போருக்குப் பயந்தேன்' என்று உன்னைப் பற்றி நீயே நாணம் கொள்க; போருக்கு நான் பயந்துவிட்டேன் என்று கூறுவது தகுதியுடையதா?

விளக்கம்: மாலான்: 'மால்' ஆன் விகுதி பெற்று வந்தது.

(யுத்த. அதிகாயன் வதைப்படலம். அதிகாயன் வீரத்தை அறைதல்)

உமை ஒரு பாகன்

358 இமையிடை யாகச் சென்றான்;
இகல்அதி காயன் நின்றான்,
அமைவதுஒன்று ஆற்றல் தேற்றான்,
அருவியோடு அழல்கால் கண்ணான்,
'உமையொரு பாக னேனும்,
இவன்முனிந்து உருத்தபோது,
கமையிலன் ஆற்றல்' என்னா,
கதத்தொடும் குலைக்கும் கையான். 2

பொழிப்பு: கண் இமைப்பதன் முன்னே (எதிர் நின்ற அனுமன் மேல் திசை நோக்கி) சென்றுவிட்டான்; ஆற்றல் வாய்ந்த அதிகாயன் என்ன செய்வது என்று விளங்காமல், நீர் அருவியோடு நெருப்பையும் கக்குகின்ற கண்களை உடையவனாய் நின்று, உமையவளைப் பங்கிலே கொண்ட, சிவன் கூட இவன் (அனுமன்) சினந்து எழும்போது அச்சினத்தைப் பொறுக்கலாற்றான்' என்று கூறி, கோபத்தோடு நடுங்குகின்ற கையை உடையானானான்.

விளக்கம்: இமையிடை: கண்மூடித் திறப்பதற்குள்ளே. அழல் கால்: தீயைக் கக்கும். கமை: பொறுத்தல். கதம்: கோபம்.

(யுத்த. அதிகாயன் வதைப் படலம். அனுமன் ஆற்றலை அதிகாயன் பாராட்டுதல்)

உமை ஒரு கூறன் காக்க

359 'உமையனே காக்க; மற்றுஅங்கு
உமைஒரு கூறன் காக்க;

இமையவர் எல்லாம் காக்க;
உலகம்ஓர் ஏழும் காக்க;

சமையும்உன் வாழ்க்கை, இன்றோடு
என்று,தன் சங்கம் ஊதி,

அமைஉருக் கொண்ட கூற்றை
நாண்எறிந்து, உருமின் ஆர்த்தான். 3

பொழிப்பு : 'உம் ஐயனே (இராமனே) காக்கட்டும் ; அன்றி உமை ஒரு கூறுடைய சிவன் காக்கட்டும் ; தேவர்கள் எல்லோரும் ஒன்றுகூடிக் காக்கட்டும் ; ஏழு உலகமும் சேர்ந்து காக்கட்டும் ; உன் வாழ்நாள் இன்றோடு முடிவுறும்' என்று கூறி, தன் சங்கத்தை முழக்கி, மூங்கில் உருவெடுத்து வந்த எமனாகிய வில்லை நாணை இழுத்துவிட்டு இடியைப் போல ஆரவாரம் செய்தான்.

விளக்கம் : உமையன் : உம் ஐயனாகிய இராமன். சமையும் : முடிவுறும். அமை : மூங்கில். எமனே மூங்கில் உருக்கொண்டு அதிகாயனுக்கு வில்லாக அமைந்தனன் என்க. 'உமையன், உமை ஒரு கூறன்' என்ற அடுக்குச் சிறப்பாக அமைந்துள்ளது.

(யுத்த. அதிகாயன் வதைப் படலம். இலக்குவனைப் பார்த்து அதிகாயன் கூறும் வஞ்சினம்)

20. அரக்கர் மொழி

புரங்கள் எய்த புங்கவன்

360 புரங்கள் எய்த புங்க வற்கும்
உண்டு தேர்'பொ ருந்தினர்,

பரந்த தேவர்; மாயன் நம்மை
வேர்அ றுத்த பண்டைநாள்,

விரைந்து புள்ளின் மீது விண்ணு-
-ளோர்க ளோடு மேவினன்;

கரந்தி லன்த னித்துஒ ருத்தன்
நேரும், வந்து, காலினன். 1

பொழிப்பு : முப்புரத்தை எரித்த சிவபெருமானுக்கும் தேர் இருந்தது; பரவிய அமரர்கள் துணையாக அமைந்தனர்; திருமால் நம்மை வேரோடு கல்லிய பழைய நாளில், விரைந்து வருகின்ற கருடன் மீது ஏறி, தேவர்கள் துணேயோடு வந்து பொருந்திஞன்; (இப்போது) ஒளியாமல் தன்னந் தனியனுய் ஒரு மனிதன் காலிஞல் வந்து எதிர்க்கின்ருன்.

விளக்கம் : சிவன் முப்புரத்தை எரித்த நாளில் நிலத்தை நோக்கி அமரர்களின் துணைகொண்டுதான் வென்ருன்; திருமாலும் கருடன் மீது வந்துதான் நம்மைக் கருவறுத்தான்; இந்த மனிதனே காலால் வந்து கடும் போர் செய்கின்ருன் என்க.

(யுத்த. மூலபல வதைப் படலம். இராமனின் தனிப்போர் கண்டு அரக்கர் வியத்தல்)

புரம் சுடு கடவுள்

361 "புரம்சுடு கடவுளும்,
புள்ளின் பாகனும்,
அரம்சுடு குலிசவேல்
அமரர் வேந்தனும்
உரம்சுடு கிற்கிலர்,
ஒருவன் நாமுடை
வரம்சுடும்; வலிசுடும்;
வாழும் நாள்சுடும். 2

பொழிப்பு : முப்புரத்தை எரித்த சிவபெருமானும், கருடனைச் செலுத்தும் திருமாலும், அரத்திஞல் அராவப்பெற்ற வச்சிரப் படையை உடைய தேவர்கோனும், நம்முடைய ஆற்றலை அழிக்கமாட்டாதவராயினர்; (அங்ஙனமாக) ஒரு மனிதன் நம்முடைய வரத்தை அழிப்பான்; ஆற்றலைக் கெடுப்பான்; வாழ்நாளையும் போக்குவான்! (என்னே வியப்பு)

விளக்கம் : உரம் : வலிமை. ஒருவன் : இராமன்.
(யுத்த. மூலபல வதைப் படலம். இராமனின் போராற்றலை அரக்கர் பாராட்டுதல்)

குண்டையின் பாகன்

362 பண்டுஉலகு உய்த்தவ
னேடும், பண்அமை
குண்டையின் பாகனும்,
பிறரும் கூடினர்;

அண்டர்கள் விசும்பினின்று
ஆர்க்கின் றார்;உழைக்
கண்டிலம்; இவன்நெடு
மாயக் கள்வனால். 3

பொழிப்பு: முன்னம் உலகத்தைப் படைத்தவனாகிய பிரமனும், இசைக்கு ஏற்ப (காலெடுத்து வைக்கும்) விடையைச் செலுத்துகின்ற சிவபெருமானும் தேவர்களாகிய ஏனையோரும், ஒருங்கு திரண்டு வானுலகத்தில் நின்று ஆரவாரம் செய்கின்றனர்; அவர்களுள்ளே இவனை (திருமாலை) காணவில்லை; எனவே இவன்தான் அந்த நீண்ட மாயக்கள்வன் ஆவான்.

விளக்கம்: உய்த்தவன்: படைத்தவன். குண்டை: காளை. பண் அமை குண்டை: இசைக்குப் பொருந்த நடைபோடும் விடை. 'பண்ணுக்கு வாம் பரித்தேர் ஆதவன்' என்றார் வில்லிபுத்தூர் ஆழ்வார். உழை: இடத்து. கண்டிலம்: காணவில்லை. இங்கே நடக்கும் இராமனின் போர்ச் சிறப்புக் கண்டு அங்கே களிக்கின்ற தேவர்களுள் திருமாலைக் காணவில்லை; ஆதலின் இந்த இராமனே திருமால் என அரக்கர் கருதினர் என்க.

(யுத்த. மூலபல வதைப் படலம். இராமன் போர்த்திறனைக் கண்டு வானோர் மகிழ்தல் பற்றி அரக்கர் வியத்தல்)

21-மண்டோதரி மொழி

21. மண்டோதரி மொழி

இராவணன் மனைவியாகிய மண்டோதரி, சிவபத்தியிற் சிறந்தவளாகிய மண்டோதரி, திருவாசகத்தில் பாராட்டப் பெற்ற மண்டோதரி சிவபெருமானைப் பற்றி மூன்று இடங்களில் மொழிவாள்.

மண்டோதரியின் சிறப்பை இராமகாதையில் நாம் காணும் இடங்கள் இரண்டு. ஒன்று, சிறு பருவத்தில் கோளரி இரண்டு பற்றிக் கொணர்ந்து விளையாடிய இணையற்ற மைந்தன் இந்திரசித்தன் இறந்தபோது இரங்கிக் கூறும் இடம்.

மற்றொன்று, 'வாரணம் பொருத மார்பும், வரையினை எடுத்த தோளும் வாய்ந்த பேராற்றல் கொண்ட கணவன் இராவணன் மாண்ட போது மாழ்கிக் கூறியது

மைந்தன் இறந்த போது ஓர் இடத்தும் கணவன் இறந்த போது இரண்டு இடத்தும் மண்டோதரி சிவனைக் குறிப்பிடுவாள். மூன்று பாடல்களும் இணையற்ற பாடல்கள்.

"முக்கணான் முதலி னோரை
உலகொரு மூன்றி னோடும்,
புக்கபோர் எல்லாம் வென்று
நின்றஎன் புதல்வன் போலாம்
மக்களில் ஒருவன் கொல்ல
மாள்பவன்? வான மேரு
உக்கிட, அணுஒன்று ஓடி
உதைத்தது போலும் அம்மா!"

இது மைந்தன் இறந்த போது மண்டோதரி புலம்பியது. 'முக்கணான் முதலினோர்' என்பது சிவபெருமான் முழு முதல் தன்மையை அவள் உணர்ந்தமையைக் காட்டுகின்றது. எல்லாப் போரிலும் வென்று நின்ற இந்திரசித்தன் மனிதனால் கொல்லப்பட்டு இறந்தான் என்பதை நம்ப மறுக்கின்றது அவள் உள்ளம். மேருமலை நொறுங்குமாறு ஒரு அணு உதைத்த செய்தியை ஒக்கும் இது என்று வியக்கின்றாள் மண்டோதரி. தன் மைந்தன் பேராற்றலில் அவள் வைத்த நம்பிக்கைக்கு இதற்குமேல் சான்று காட்ட முடியாது.

இராவணன் வீழ்ந்த போது சிவனைக்குறித்து அவள் பாடிய பாடல் இரண்டு.

"தேவர்க்கும், திசைக்கரிக்கும், சிவனுர்க்கும்,
அயனுர்க்கும், செங்கண் மாற்கும்,
ஏவர்க்கும், வலியானுக்கு என்றுஉண்டாம்
இறுதி?என ஏமாப்பு உற்றேன்;"

என்றுகூறுங்கால், 'இவ்வளவு வலியுடையானுக்கு முடிவே இல்லை என்று பெருமிதம் கொண்டிருந்தேனே' என ஏங்குவதைக் காண்கின்றோம். சிவன் இருந்த கைலைமலையை வேரொடும் பெயர்க்கும் தோளாற்றலும் தவறு செய்துழி அழியும் என உணர்ந்தவள் போல் புலம்புவாள் மண்டோதரி. இராமனின் அம்பு இராவணனைக் கொன்றதோடு விடாமல் உடலுக்குள் நுழைந்து நுழைந்தல்லவா அங்கு ஒளிந்திருக்கும் காதலைத் தேடுகின்றது எனப் புலம்பும் அருமைப்பாடு அமைந்த பாடலை இங்கே பார்ப்போம்.

"வெள்எருக்கம் சடைமுடியான் வெற்புஎடுத்த
திருமேனி, மேலும் கீழும்,
எள்இருக்கும் இடம்இன்றி, உயிர்இருக்கும்
இடம்நாடி, இழைத்த வாறே?
கள்இருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்இருக்கும் எனக்கருதி, உடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி?"

சீதையைக் கவர்வதற்கு முன்னமேயே இராவணன், சூர்ப்பணகையால் சீதையின் பேரழகை அறிந்தவுடன், தன் மனச்சிறையில் அவளை வைத்துவிட்டான்.

"மயிலுடைச் சாய லாளை
வஞ்சியா முன்னம், நீண்ட
எயிலுடை இலங்கை நாதன்
இதயமாம் சிறையில் வைத்தான்"

என்பார் கவிச் சக்கரவர்த்தி. எனவே. 'கள்ளிருக்கும் மலர்க் கூந்தல் சானகியைக் கரந்த காதல் உள்ளிருக்கும்' எனக் கருதி இராமன் வாளி தடவியதாக மண்டோதரி கூறுவாள்.

21. மண்டோதரி மொழி

முக்கணன் முதலினோர்

363 முக்கணன் முதலி னோரை,
உலகுஒரு மூன்றினோடும்,
புக்கபோர் எல்லாம் வென்று
நின்றஎன் புதல்வன் போலாம்,
மக்களில் ஒருவன் கொல்ல,
மாள்பவன்! வான மேரு
உக்கிட, அணுஒன்று ஓடி
உதைத்தது போலும் அம்மா! 1

பொழிப்பு: மூன்று கண் படைத்த சிவபெருமான் உள்ளிட்ட கடவுளரை எல்லாம், மூன்று உலகமும் ஒரு சேர, நிகழ்ந்த போர் அனைத்தினும் வென்று, நிலைபெற்று நின்ற என் மைந்தனை, மனிதர்களுக்குள்ளே ஒருவன் கொல்ல இறப்பவன்! (இச் செயல்) விண்ணைத் தொடுமாறு வளர்ந்த மேருமலையானது நொறுங்கிப் போமாறு ஓர் அணு ஓடிச்சென்று உதைத்தது போன்றல்லவா இருக்கின்றது!

விளக்கம்: உக்குதல்: நொறுங்குதல். சிவன் முதலியோரை நிகழ்ந்த போர் அனைத்தினும் வென்று, தோள் பார்த்து நின்ற என் மகனை மனிதரிலே ஒருவன் கொன்றான் என்று சொல்வது, வானமேரு நொறுங்கிப் போமாறு ஓர் அணு உதைத்தாற் போன்ற செய்தி என்று மண்டோதரி வியந்தாள் என்க. அம்மா: வியப்பிடைச் சொல்.

(யுத்த. இராவணன் சோகப் படலம். இந்திரசித்தன் அழிவுக்கு மண்டோதரி புலம்பல்)

வெள் எருக்கம் சடை முடியான்

364 வெள்எருக்கம் சடைமுடியான் வெற்புஎடுத்த
திருமேனி, மேலும், கீழும்,
எள்இருக்கும் இடம்இன்றி, உயிர்இருக்கும்
இடம்நாடி, இழைத்த வாறோ?
"கள்இருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்இருக்கும்" எனக்கருதி, உடல்புகுந்து,
தடவியதோ ஒருவன் வாளி, 2

பொழிப்பு : வெள் எருக்கம் மலரை அணிந்த சடைமுடியுடையா ஞகிய சிவபெருமானின் கயிலே மலையைத் தூக்கிய (இராவணனுடைய) அழகிய உடம்பில், மேலும் கீழுமாக எள் தங்குதற்குரிய இடம் கூட இல்லாமல், உயிர் தங்கி இருக்கின்ற இடத்தைத் தேடிச் சென்றபடியோ? 'தேன் பொருந்திய பூச்சூடிய குழலை உடைய சீதையை உள்ளம் என்னும் சிறைச்சாலையிலே ஒளித்துவைத்த காதலானது, உடம்பினுள்ளே எங்கேனும் மறைந்திருக்குமோ' என்று எண்ணி (இராவணனுடைய) உடல் முழுதும் நுழைந்து தேடிப்பார்த்ததோ ஒப்பற்றவனுகிய (இராமபிரானின்) அம்பு?

விளக்கம் : நாடி : தேடி. கள் : தேன். காதல் : (ஈண்டு) ஆசை.

(யுத்த. இராவணன் வதைப் படலம். மண்டோதரி இராவணன் இறந்தமைக்கு வருந்துதல்)

சிவனுர்க்கும் வலியான்

365 "தேவர்க்கும், திசைக்கரிக்கும், சிவனுர்க்கும்,
அயனுர்க்கும், செங்கண் மாற்கும்,
ஏவர்க்கும் வலியானுக்கு என்றுஉண்டாம்
இறுதி?"என ஏமாப்பு உற்றேன்;
ஆவற்கண் நீஉழந்த அருந்தவத்தின்
பெருங்கடற்கும், வரம்என்று ஆன்ற
காவற்கும், வலியான்ஓர் மானுடவன்
உளன்என்னக் கருதி னேனே?' 3

பொழிப்பு : 'அமரர்கட்கும், திக்கு யானைகட்கும், அரனுர்க்கும், அயனுர்க்கும், அரியானுர்க்கும், எல்லோர்க்கும் மேம்பட்ட ஆற்றல் உள்ளவனுன (இராவணனுக்கு) என்றைக்கு முடிவு உண்டாகும்? (ஒரு நாளும் உண்டாகாது)' எனச் செருக்கி இருந்தேன்; 'ஆவலோடு நீ வருந்திச் செய்த பெருங்கடல் போல் பரந்த தவத்தையும், அத்தவத்தின் பயனுக நீ பெற்ற, உன்னைக் காக்கவல்ல நிறைந்த வரத்தையும் (அழிக்க வல்ல) வலிமை பெற்றவனுன ஒரு மனிதன் இருக்கின்ருன்' என நான் எண்ணினேனு?

விளக்கம் : ஏமாப்பு : எக்களிப்பு. உழந்த : வருந்திச் செய்த. ஆன்ற : நிறைந்த.

(யுத்த. இராவணன் வதைப் படலம். இறந்த இராவணனின் ஆற்றலை, அவன் மனைவி மண்டோதரி இறுதியாகப் போற்றி அழுதல்)

இரண்டு இடங்களில் ஒன்பதின்மர் மொழி.

22 மாரீசன்

23 வாலி

24 இலங்கைமாதேவி

25 அக்ககுமரன்

26 சாரன்

27 கும்பகன்னன்

28 மாலியவான்

29 வானரப் படைத் தலைவர்

30 மாதலி

ஒன்பதின்மர் மொழி

சிவனைப்பற்றி இரண்டு இரண்டு இடங்களில் கூறுபவர்கள், மாரீசன், வாலி, இலங்கைமாதேவி, அக்ககுமரன், சாரன், கும்பகன்னன், மாலியவான், வானரப் படைத் தலைவர், மாதலி ஆகிய ஒன்பதின்மர்.

1. மாரீசன் இரண்டு இடங்களிலும் ‘ ஈசன் ’ என்றே கூறுவான்.

2. வாலி, ‘ நீலகண்டன்,’ ‘ புரம்எலாம் எரிசெய்தோன் ’ எனப் பேசுவான். அவ்விரண்டு இடங்களிலும், தன் மார்பில் பாய்ந்த இராம பிரான் அம்பின் ஆற்றலை வாலி வியக்கின்றான்.

“புரம்எலாம் எரிசெய்தோன்
முதலினோர் பொருஇலா

வரம்எலாம் உருவிஎன்
வசைஇலா வலிமைசால்

உரம்எலாம் உருவிஎன்
உயிரெலாம் நுகரும்நின்

சரம்.........”

என இராமன் வாளியைப் பாராட்டுவான்.

நேமி தான்கொலோ? நீலகண்-
-டன்நெடும் சூலம்

ஆம்இது ஆம்கொலோ? அன்றுஎனில்
குன்றுஉருவு அயிலும்

நாம இந்திரன் வச்சிரப்
படையும்என் நடுவண்

போம்என னும்துணை போதுமோ
யாது?எனப் புழுங்கும்

என அம்பால் அடிபட்ட வாலி புழுங்குகின்றான்.

3. இலங்கைமாதேவி, 'தொல்புரம் அட்டான்' எனவும், 'நஞ்சம் கொண்ட கண்ணுதல்' எனவும் நவில்வான்.

4. அக்ககுமரன் 'முக்கணன்,' இமையாமுக்கண் ஈசன்' என இயம்புவான்.

5. சாரன், 'சிவன்,' 'மூன்று எயில் எரித்தோன்' எனச் சாற்றுவான்.

6: கும்பகன்னன், 'திரிபுரம் செற்ற தேவன்; 'பிணை ஒன்று கண்ணுள் பங்கன்' எனக் கூறுவான்.

"அணை இன்றி அயர்ந்த வென்றி
அஞ்சினர் நகைசெய்து ஆர்க்க,
பிணைஒன்று கண்ணுள் பங்கன்
பெருங்கிரி நெருங்கப் பேர்த்த
பணைஒன்று திரள்தோள் கால
பாசத்தால் பிணிப்ப, கூசி,
துணை இன்றிச் சேரல் நன்றே!
தோற்றுள கூற்றின் சூழல்?"

என, போராற்றலில் வல்ல கும்பகன்னன், 'பிணைஒன்று கண்ணுள் பங்கன்' பெருங்கிரி எடுத்த அண்ணனின் தோளாற்றலை வியப்பான்.

7. மாலியவான், 'சூலி' என்றும், 'கங்கைசூடி' என்றும் வழுத்துவான்.

8. வானரப் படைத் தலைவர், 'புரம்சுடந்த அப்புனிதன்' எனப் போற்றுவார்.

9. மாதலி, 'முப்புரம் எரித்தவன்,' 'சிவன்' என மொழிவான்.

22. மாரீசன் மொழி

ஈசன் இகல் வில்லாய் வடித்தமலை

366 'எடுத்தமலை யேநினையின்,
"ஈசன்இகல் வில்லாய்
வடித்தமலை யேஇது,
வலித்தி"யென வாரிப்
பிடித்தமலை, நாண் இடை
பிணித்துஒருவன் மேல்நாள்
ஒடித்தமலை, உம்பர்முகடு
உற்றமலை அன்றோ?' 1

பொழிப்பு: வெள்ளி மலையைப் பெயர்த்து எடுத்ததையே நீ பெருமையாக எண்ணினால், சிவபெருமான் வளைத்த வலிய வில்லாகிய மலையே இது; இதனை வளைப்பாயாக என்று சனகன் சொல்ல, ஒப்பற்றவனான இராமன் அந்த நாளில் (எளிதாகக் கையால்) அள்ளி எடுத்த மலை. நாணை நடுவிலே பிடித்து ஒடித்த மலை. வானத்தை அளாவி நிற்கின்ற மேருமலையே அல்லவா?

விளக்கம்: எடுத்தமலை: இராவணன் எடுத்த வெள்ளி மலை. வடித்த மலை: சிவன் வளைத்த மேருமலை. வலித்தி: வளைப்பாயாக.

"கங்கைசடை வைத்தவனொ டும்கயிலை வெற்புஓர்
அங்கையில் எடுத்தனது ஆடுஎழில் மணித்தோள்,
இங்கொர்மனி தற்குஎளிய என்றனை!"......

என்று வெகுண்டு கூறிய இராவணனைப் பார்த்து, "நீ எடுத்த கயிலை மலையை விடப் பெரிதான மேருமலையாகிய வில்லை ஒடித்தவனல்லவா, நீ எதிர்க்கவேண்டிய இராமன்?" என்று மாரீசன் எடுத்துக்காட்டினான் என்க.

(ஆரணிய. மாரீசன் வதைப் படலம்: இராவணனுக்கு இராமன் ஆற்றலை மாரீசன் எடுத்துக் காட்டல்)

ஈசன் முதல் இமையோர்

367 'ஈசன்முதல் மற்றும்இமை
யோர்உலகும், மற்றைத்
தேசம்முதல் முற்றும்,ஓர்
இமைப்பின்உயிர் தின்ப,
கோசிகன் அளித்தகட-
-வுட்படை கொதிப்போடு
ஆசில, கணிப்புஇல.
இராமன்அருள் நிற்ப!' 2

பொழிப்பு: சிவபெருமான் உலகம் முதலாக மற்றுமுள்ள அமரர் உலகங்களும், பிற நாடுகளும் முதலிய எல்லாவற்றையும் ஒரு கணத்தில் அழிக்கத்தக்க குற்றமற்றனவும், கணக்கற்றனவுமான கடுமை கொண்ட கோசிக முனிவன் கொடுத்த தெய்வத் தன்மை வாய்ந்த படைக்கலங்கள் இராமன் ஏவலை எதிர்பார்த்து நிற்கின்றன.

விளக்கம்: கோசிகன்: விசுவாமித்திரன். கொதிப்பு: கடுமை. ஆசு: குற்றம். கணிப்பு: எண்ணிக்கை.

(ஆரணிய. மாரீசன் வதைப் படலம். கோசிகன் கொடுத்த படைகள் இராமன் கட்டளைக்குக் காத்து நிற்கின்றன என மாரீசன் வழுத்தல்)

23. வாலி மொழி

நீலகண்டன் நெடுஞ்சூலம்

368 'நேமி தான்கொலோ? நீலகண்-
-டன்நெடுஞ் சூலம்
ஆம்இது, ஆம்கொலோ? அன்றுமானின்,
குன்றுஉருவு அயிலும்,
நாம இந்திரன் வச்சிரப்
படையும்,என் நடுவண்
போம்என னும்துணை போதுமோ?
யாது?'எனப் புழுங்கும். 1

பொழிப்பு: (என் மார்பில் தைத்த) இப்படைக்கலம் "திருமாலின் சக்கரமோ? சிவபிரானின் நீண்ட சூலப் படையோ? அன்றேல் மலையை ஊடுருவிச் சென்ற முருகக் கடவுளின் வேலும், தேவேந்திரனது அச்சுறுத்துகின்ற வச்சிரப் படையும் என் மார்பினுள் நுழைந்து செல்லத்தக்க வலிமையுடைத்தாமோ? வேறு எது?" என்று அயர்ச்சியடைவான். (வாலி)

விளக்கம்: நேமியும், நிலகண்டன் சூலமும் ஒருகால் மார்பில் பாயலாம்; முருகன் வேலும், இந்திரன் வச்சிரமும் என் நடுவுட்போம் ஆற்றல் பெரு; இது யாதோ? எனப் புழுங்கும் என்க. குன்று: கிரௌஞ்ச மலை. உருவுதல்: தொளைத்தல். அயில்: வேல். நாமம்: அச்சுறுத்தல். போதுமோ: அமையுமோ.

(கிட்கிந்தை. வாலி வதைப் படலம். மார்பில் தைத்த படையைப் பற்றி வாலி சிந்தித்தல்)

புரம்எலாம் எரிசெய்தோன்

369 'புரம்எலாம் எரிசெய்தோன்
முதலினோர் பொருஇலா
வரம்எலாம் உருவி,என்
வசைஇலா வலிமைசால்
உரம்எலாம் உருவி,என்
உயிரெலாம் நுகரும்நின்
சரம்அலால், பிறிதுவேறு
உளதுஅரோ, தருமமே?' 2

பொழிப்பு: முப்புரத்தை முழுதும் எரித்தவனுன சிவபெருமான் முதலிய தேவர்கள், (எனக்கு அளித்த) ஈடு இல்லாத வரங்கள் எல்லாவற்றையும் கடந்து, எனது பழுதற்ற ஆற்றல் மிக்க மார்பு முழுதையும் நுழைந்து, துளைத்து, என் உயிர் முழுதையும் குடிக்கும் உனது அம்பைத் தவிர வேறொரு அறம் தனியாக இருக்கின்றதா?

விளக்கம்: பொரு: ஒப்பு. உருவி: கடந்து; அழித்து. உரம்: மார்பு. சரம்: அம்பு. பிறிது,வேறு: ஒரு பொருள் குறிக்கும் இரு சொல். அரோ!: அசை. இராமன் அம்பு அறம் கடந்தவர்களை அழிக்கும் இயல்புடையது என்பதை அறிந்துகொண்ட பின் வாலி இராமனை நோக்கி உன் அம்பைத் தவிர அறம் வேறு இல்லை என அறுதியிட்டு உரைப்பான் ஆயினன்.

(கிட்கிந்தை. வாலி வதைப் படலம். இராமன் அம்பை வாலி பாராட்டுதல்)

24. இலங்கை மாதேவி மொழி

புரம் அட்டானே நீ?

370 என்ன முன்னம், "ஏகு" என,
ஏகாது, எதிர்மாற்றம்
சொன்னாயே? நீ யாவன்
அடா? தொல் புரம்அட்டான்
அன்னாரேனும் அஞ்சுவர்,
எய்தற்கு; அளிஉற்றால்,
உன்னால் எய்தும் ஊர்கொல்இவ்
ஊர்?' என்று உறநக்காள். 1

பொழிப்பு: என்று சொல்லும் முன்னே, (இலங்காதேவி அனுமனைப் பார்த்து) 'நீ போ,' என்று நான் சொல்கின்றேன். நீ போகாமல் எதிர்த்துப் பேசுகின்றாயா? யாரடா நீ? பழமையான முப்புரத்தை எரித்த சிவனை ஒத்தவர்கள் கூட, இவ்வூருக்குள் நுழைவதற்கு அஞ்சுவர்; நீ ஊரைப் பார்க்க ஆசைப்பட்டால், நீ அடையக்கூடிய ஊரா இந்த ஊர்?' என்று சொல்லி நன்றாகச் சிரித்தாள். (இலங்காதேவி)

விளக்கம்: மாற்றம்: பேச்சு. அட்டான்: கொளுத்தியவன். அளி: ஆசை.

(சுந்தர. ஊர் தேடு படலம். இலங்காதேவி அனுமனை அச்சுறுத்திப் பேசுதல்)

நஞ்சம் கொண்ட கண்ணுதல்

371 'வஞ்சம் கொண்டான்; வானரம்
அல்லன்; வருகாலன்
துஞ்சும், கண்டால் என்னை;
இவன்சூழ் திரைஆழி
நஞ்சம் கொண்ட கண்ணுத-
-லைப்போல் நகுகின்றான்'
நெஞ்சம் கொண்டே, கல்என
நின்றே நினைகின்றாள். 2

பொழிப்பு : '(இவன்) குரங்கு அல்லன் ; வஞ்சகமாகக் குரங்கின் வடிவத்தைக் கொண்டவன் ; வருகின்ற எமன் கூட என்னைப் பார்த்தால் செயல் இழந்து விடுவான் ; இவன், அலை சூழ்ந்த கடலில் எழுந்த விடத்தை உட்கொண்ட நெற்றிக் கண்ணைப் பெற்ற கடவுளைப் போலச் சிரிக்கின்ருன் ' என உள்ளத்தில் கொண்டு, கல்லைப் போல அசைவற்று நின்று சிந்திக்கலானுள் (இலங்காதேவி)

விளக்கம் : வருகாலன் : உயிர்களைக் கவரவருகின்ற எமன். நகுதல் : சிரித்தல். 'ஏ' இரண்டு இடத்தும் அசை.

(சுந்தர. ஊர் தேடு படலம். அனுமனைக் கண்ட இலங்காதேவியின் சிந்தனை)

25. அக்க குமரன் மொழி

முக்கணுன் ஊர்தி.

372 'முக்கணுன் ஊர்தி அன்றேல்,
மூன்றுஉலகு அடியில் தாயோன்
ஒக்கஊர் பறவை அன்றேல்,
அவன்துயில் உரகம் அன்றேல்
திக்கயம் அல்ல தேல்,புன்
குரங்கின்மேல் சேறி போலாம்!
இக்கடன் அடியேற்கு ஈதி;
இருத்திஈண்டு இனிதின்; எந்தாய்!' 1

பொழிப்பு : ' என் தந்தையே! (நம்மோடு பொருவது மூன்று கண் படைத்த கடவுளின் ஊர்தியான விடை அன்று ஆனுல், மூன்று உலகங் களையும் தனது திருவடியால் தாவிய திருமால் பொருந்த ஊர்ந்து செல்லு கின்ற கருடப் பறவை அன்று ஆனுல், அந்தத் திருமால் பள்ளிகொண் டுள்ள பாம்பு அல்ல ஆனுல், திக்கு யானைகள் அல்ல ஆனுல், அற்பக் குரங்கின் மீது போருக்குச் செல்வாய் போலும்! (உன் ஆற்றலுக்கு இது தகாது) இந்தக் கடமையை அடியேனுக்குத் தா ; நீ இங்கே நலமாக இருப்பாயாக; ' (என்று இயம்பினன் அக்ககுமாரன்.)

விளக்கம் : ஊர்தி : விடை. பறவை : கருடன். உரகம் : ஆதிசேடன் என்னும் பாம்பு. திக்கயம் : திக்கு யானைகள். புன்குரங்கு : அற்பக்குரங்கு. சேறல் : செல்லுதல். ஊர்தி : பறவை, உரகம், திக்கயம் இவைகளோடு போர்புரிதல் உனக்கு ஏற்கும் ; இந்த எளிய குரங்கினிடம் என்னை விட்டு விடு என்றான் அக்ககுமரன்.

(சுந்தர. அக்ககுமரன் வதைப் படலம். அக்ககுமரன் குரங்குப் போருக்குத் தன்னை அனுப்புமாறு வேண்டுதல்)

இமையா முக்கண் ஈசன்

373 ‘கொய்தளிர் கோதும் வாழ்க்கைக்
கோடரத்து உருவு கொண்டு,
கைதவம் கண்ணி, ஈண்டுஓர்
சிறுபழி இழைக்கும் கற்பான்,
எய்தினன் இமையா முக்கண்
ஈசனே என்ற போதும்,
நொய்தினின் வென்று, பற்றித்
தருகுவென், நொடியின் நும்பால். 2

பொழிப்பு : ‘ மூடாத மூன்று கண் படைத்த சிவபெருமானே, வஞ்சனை செய்து, இங்கே ஒரு சிறிய இழிவை, நமக்கு விளைவிக்க வேண்டும் என்ற எண்ணத்தால், இலைகளைக் கொய்து கொத்தித் தின்கின்ற குரங்கின் வடிவு கொண்டு, இங்கே வந்தனன் என்றாலும், எளிதாக வெற்றி கொண்டு, கணப்பொழுதில் அவனைப் பிடித்து உன்னிடத்தில் கொண்டு வந்து தருவேன் ’ என்று கூறினான் அக்ககுமரன்)

விளக்கம் : கோதுதல் : கொத்துதல். கோடரம் : குரங்கு. கைதவம்: வஞ்சனை. கண்ணி : எண்ணி. கற்பு : நினைப்பு. நொய்து : எளிமை. நொடியின் : கை நொடிக்கின்ற அளவில். உன்பால் : உன்னிடம்.

(சுந்தர. அக்ககுமரன் வதைப் படலம். இராவணனிடம் அக்ககுமரன் குரங்கைப் பிடித்து வருவேன் என்றல்)

26. சாரன் மொழி

சிவன்காண்

374 ‘உவன்காண் குமுதன்; குமுதாக்கனும்
ஊங்குஅ வன்காண்;
இவன்காண் கவயன்; கவயாக்கனும்
ஈங்குஇ வன்காண்!

சிவன்காண் அயன்காண் எனும்தூதனைப்
பெற்ற செல்வன்
அவன்காண், நெடுங்கேசரி என்பவன்,
ஆற்றல் மிக்கான்.' 1

பொழிப்பு: நடுவில் காணப்படுகின்றவன், குமுதன் என்பவன்; அங்கே நிற்பவன் குமுதாக்கன் என்பவன்; இங்கே நிற்பவன் கவயன் என்பவன்; இந்தப் பக்கம் நிற்கின்ற இவன் கவயாக்கன்; சிவன் என்றும் பிரமன் என்றும் சொல்லத் தக்க தூதுவனைப் பெற்ற செல்வனாகிய அவன், ஆற்றல் மிகுந்த நீண்ட கேசரி எனச் சொல்லப்படுபவன்.

விளக்கம்: உவன்: அவனுக்கும் இவனுக்கும் இடைப்பட்டவன் அவன்: சேய்மைச் சுட்டு. இவன்: அண்மைச் சுட்டு. உவன்: இடைப் பட்ட சுட்டு. தூதன்: அனுமன். அவனைப் பெற்ற செல்வன், அஞ்சனு தேவியின் கணவனான கேசரி என்னும் பெயரை உடைய குரங்கினத்தைச் சேர்ந்தவன் என்ப.

(யுத்த. இராவணன் வானரத்தானை காண் படலம். சாரன் என்பான் இராவணனுக்கு வானரப் படை வீரர்களைப் பற்றிச் சொல்லுதல்)

மூன்று எயில் எரித்தோன்.

375 'மூன்று கண்இலன் ஆயினும்,
மூன்றுஎயில் எரித்தோன்
போன்று நின்றவன் பனசன்! இப்
போர்க்குஎலாம் தானே
ஏன்று நின்றவன் இடபன்; மற்று
இவன்தனக்கு எதிரே
தோன்று கின்றவன் சுடேணன், மு-
-தறிவொடு தொடர்ந்தோன்.' 2

பொழிப்பு: முக்கண் பெற்றிலனேனும், முப்புரத்தைத் தழலுக்கு இரையாக்கிய சிவபெருமானைப் போன்று நிற்பவன் பனசன் என்பவன்; இந்தப் போரை எல்லாம் நடத்துகின்றவன், தானே என, பொறுப்பு ஏற்று நின்றவன் இடபனாவான்; இவனுக்கு எதிரே காணப்படுகின்றவன், பேரறிவு பெற்றவனாகிய சுடேணன் என்பவன்.

விளக்கம்: ஏன்று: ஏற்று.

(யுத்த. இராவணன் வானரத்தானை காண் படலம். சாரன் இராவணனுக்கு மேலும் சில படை வீரர்களைப் பற்றிச் சொல்லுதல்)

27. கும்பகன்னன் மொழி

பிணை ஒன்று கண்ணுள் பங்கன்

376 'அணை இன்றி அயர்ந்த வென்றி
அஞ்சினர் நகைசெய்து ஆர்க்க,
பிணைஒன்று கண்ணுள் பங்கன்
பெருங்கிரி நெருங்கிப் பேர்த்த
பணைஒன்று திரள்தோள் கால
பாசத்தால் பிணிப்ப, கூசி,
துணை இன்றிச் சேரல் நன்றோ,
தோற்றுள கூற்றின் சூழல்? 1

பொழிப்பு : பெண் மானின் கண் போன்ற கண்ணை உடைய, உமைய வளைப் பக்கத்திலே இருத்திக்கொண்ட சிவபெருமானின் வெள்ளி மலையை அணுகிப் பெயர்த்துத் தூக்கிய பெருமை பொருந்திய திரண்ட தோள்கள், எமனுடைய பாசக் கயிற்றால் கட்டப்படுகையில், தடை இல்லாமல் நாம் வென்ற காலத்து, சோர்ந்து அஞ்சிச் சென்ற பகைவர்கள் எல்லாம் ஆர வார நகைசெய்ய, நடுக்கம் கொண்டு ஒரு துணையும் இல்லாமல், முன்னே தனக்குத் தோற்றுப்போன எமனிடத்து, (இராவணன்) போய்ச் சேருதல் நலமாகுமா?

விளக்கம் : அணை : தடை. அயர்ச்சி : சோர்வு. பிணை : பெண் மான். ஒன்றுதல் : பொருந்துதல். கண்ணுள் : உமையவள். பணை ஒன்று : பெருமை பொருந்திய. கூசி : நடுங்கி.

(யுத்த. கும்பகன்னன் வதைப் படலம். இராவணனோடு சேர்ந்து உயிர் விடுதலே எனக்குச் சிறப்பு என கும்பகன்னன் வீடணனிடம் சொல்லுதல்)

திரிபுரம் செற்ற தேவன்

377 செருவில் மாண்டவர் பெருமையும்,
இலக்குவன் செய்த
வரிவில் ஆண்மையும், நோக்கிய
புலத்தியன் மருமான்,

'திரிபு ரம்செற்ற தேவனும்
இவனுமே செருவின்
ஒருவி லாளர்'என்று ஆயிரம்
கால்எடுத்து உரைத்தான். 2

பொழிப்பு: போரில் இறந்தவரின் பெருக்கத்தையும், இலக்குவன் புரிந்த கட்டமைந்த வில் தொழில் ஆண்மையையும் கண்ட புலத்தியன் வழி வந்த கும்பகன்னன், 'திரிபுரத்தை எரித்த தேவனாகிய சிவனும், இந்த இலக்குவனுமே போரில் ஒப்பற்ற வில்லாளர் ஆவார்' என ஆயிரம் முறை எடுத்துச் சொன்னான்.

விளக்கம்: செரு: போர். 'பெருமை' ஈண்டு எண்ணிக்கையின் பெருக்கம். மருமான்: வழிவந்தவனாகிய கும்பகன்னன். சிவனும் இலக்குவனுமே ஒப்புஎன, கும்பகன்னன் ஆயிரம் முறை கூறினான் என்க.

(யுத்த. கும்பகன்னன் வதைப்படலம். இலக்குவன் திறத்தைக் கும்ப
கன்னன் பெரிதும் வியத்தல்)

28. மாலியவான் மொழி
சூலியைத் தூக்கிய தோள்

378 'வாலியை வாளி ஒன்றால்
வானிடை வைத்து, வாரி
வேலையை வென்று, கும்ப
கன்னனை வீட்டி னானை,
ஆலியின் மொக்குள் அன்ன
அரக்கரோ, அமரின் வெல்வார்?
சூலியைப் பொருப்பி னோடும்
தூக்கிய விசயத் தோளாய்!' 1

பொழிப்பு: சூலம் தாங்கிய சிவபெருமானை வெள்ளிமலையுடன் அள்ளி எடுத்த வெற்றித் தோள் பெற்ற இராவணா! வாலியை ஓர் அம்பினால் வானுலகத்தில் வைத்து, வாரியாகிய கடலை வெற்றிகொண்டு, கும்பகன்னனைக் கொன்றவனாகிய இராமனை, நீரில் தோன்றும் குமிழியை ஒத்த அரக்கர்களா போரில் வெல்லக் கூடியவர்கள்?

விளக்கம்: வாளி: அம்பு. வாரி, வேலை: கடல் என்னும் ஒரே பொருளன. வீட்டுதல்: அழித்தல். ஆலி: நீர். மொக்குள்: குமிழி. சூலி: சிவன். வருணனைப் பணிய வைத்துக் கடலில் அணைகட்டியதால், 'வாரி வேலையை வென்று' என்று கூறப்பட்டது என்க.

(யுத்த. மாயாசீதைப்படலம். மாலியவான் இராமன் ஆற்றலை
இராவணனுக்குக் கூறல்)

கங்கை சூடிதன் கடுஞ்சிலை ஒடித்த ஓதை

379 இங்கு வந்துநீர் வினயதுஎன்?
 எறிதிரைப் பரவை
அங்கு வெந்திலதோ?சிறிது
 அறிந்ததும் இலிரோ?
கங்கை சூடிதன் கடுஞ்சிலை
 ஒடித்தஅக் காலம்,
உங்கள் வான்செவி புகுந்தில-
 -தோ,முழங்கு ஓதை? 2

பொழிப்பு: நீவிர் இங்கு வந்து கேட்டது என்ன? அலை வீசுகின்ற கடல் அந்த இடத்து வேவ இல்லையோ? அதை நீங்கள் சிறிதும் அறிந்து கொண்டீர் இலிரோ? கங்கையை அணிந்த சிவபெருமானின் வலிய வில்லை இறுத்த அந்த நாள் எழுந்த வில் இற்ற பேரோசை உங்கள் பெரிய காது களில் நுழைய வில்லையோ?

விளக்கம்: எறி: வீசுதல். திரை: அலை. பரவை: கடல். அரக்கரின் பெரிய காதுகள், வான் செவி என்று சொல்லப்பட்டது. ஓதை: ஒலி. கடல் நீரை இராமன் நெருப்புக் கணையால் எரித்த போதும், சிவன் வில்லை அவன் ஒடித்தபோதும் அவன் ஆற்றல் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே என்றான் என்க.

(யுத்த. படைக் காட்சிப் படலம். மாலியவான் இராமன் ஆற்றலை எடுத்துரைத்தல்)

29. வானரப் படைத்தலைவர் மொழி
புரம் கடந்த அப்புனிதன்

380 'புரம்க டந்தஅப் புனிதனே
 முதலிய புலவோர்
வரங்கள் தந்து,உலகு அளிப்பவர்
 யாவரும், மாட்டார்,
கரந்து அடங்கினர்; இனி,மற்றுஅவ்
 அரக்கரைக் கடப்பார்,
குரங்கு கொண்டுவந்து, அமர்செயும்
 மானுடர் கொல்லாம்?' 1

பொழிப்பு : முப்புரத்தை வென்ற அந்த, தூய்மையான சிவபெருமான் முதலிய தேவர்களாகிய, வரங்களை நல்கி உலகத்தைக் காக்கின்ற அனைவரும், (அரக்கர்களை) வெல்லமாட்டாராகி ஒளிந்து ஒடுங்கி விட்டனர்; இனி, அந்த அரக்கரைக் குரங்குகளைக் கூட்டிக் கொண்டு வந்து போர்செய்யும் மனிதர்களா வெல்லப் போகின்றார்கள்?

விளக்கம் : புலவோர் : தேவர். கரந்து : மறைந்து. கடத்தல் வெல்லுதல்.

(யுத்த. மூலபல வதைப்படலம். மூலபலப்படையைக் கண்டு அஞ்சி ஓடிய வானரப் படைத்தலைவர்கள் அங்கதனிடம் கூறல்)

உருத்திரனோடு ஆழியானும் ஓடினர்

381 'ஊழி ஆயிர கோடிநின்று
உருத்திர னோடும்
ஆழி யானும்,மற்று அயனொடு
புரந்தரன் அவனும்,
சூழ ஓடினர்; ஒருவனைக்
கொன்று,தம் தோளால்
வீழ மாசெய்ய வல்லரேல்
வென்றியின் நன்றே!' 2

பொழிப்பு : சிவபிரானோடு, திருமாலும், ஏனைய பிரமனோடு இந்திரனும், ஆயிரம் கோடி ஊழிக் காலம் நின்று போர்செய்து (வெல்லமாட்டாது) ஒரு சேர ஓடிவிட்டனர் ; (அவர்கள்) ஒருவனையேனும் கொன்று தம் தோள் ஆற்றலால் வீழுமாறு செய்யும் ஆற்றல் உடையரேல் அச் செயல் வெற்றியினும் நலம் பயப்பதாகும்.

விளக்கம் : ஓர் அரக்கனையாவது அந்தத் தேவர்கள் கொன்றிருந்தால் முழுதும் வெல்லாது போயினும் வெற்றியை விட அது நன்று, என்க.

(யுத்த. மூலபல வதைப் படலம். அங்கதன் கேள்விக்கு வானரப் படைத் தலைவர் விடை)

30. மாதலி மொழி

முப்புரம் எரித்தவன்

382 'முப்புரம் எரித்தவனும்,
நான்முகனும், முன்நாள்,
அப்பகல் இயற்றிஉளது;
ஆயிரம் அருக்கர்க்கு

ஒப்புஉடையது; ஊழிதிரி
நாளும்உலைவு இல்லா
இப்பொருஇல் தேர்வருவது
இந்திரனது; எந்தாய்!' 1

பொழிப்பு: என்தந்தையே! (இராமனே!) முப்புரத்தை எரித்த சிவபிரானும், நான்குமுகங்களை உடைய பிரமனும், உலகத்தைப் படைத்த நாளாகிய அந்த நாளில் செய்தது; ஆயிரம் ஆதவர்களுக்குச் சமமானது; ஊழிபெயர்கின்ற காலத்தும் அழிவில்லாதது; இங்கு வந்திருக்கின்ற ஒப்பற்ற தேர்; இது இந்திரனுடையது.

விளக்கம்: உலைதல்: கெடுதல். பொருவு: ஒப்பு.

(யுத்த. இராமன் தேர் ஏறுபடலம். தான்கொணர்ந்த தேரைப்பற்றி, சாரதியாகிய மாதலி இராமனுக்குச் சொல்லுதல்)

சுரர்க்கிறைவன் ஈந்துளது

383 'தேவரும், முனித்தலைவ-
-ரும்,சிவனும், மேல்நாள்,
மூவுலகு அளித்தஅவ-
-னும்,முதல்வ! முன்நின்று
ஏவினர்; சுரர்க்குஇறைவன்
ஈந்துளஇது' என்றான்;
மாவின்மனம் ஒப்பஉணர்
மாதலி, வலித்தான். 2

பொழிப்பு: 'முதல்வனே! அமரர்களும், இருடிகளின் தலைவர்களும், சிவனும், முன் நாள் மூன்று உலகத்தையும் படைத்த பிரமனும், முன்வந்து கட்டளை இட்டனர்; (அதன்படி) தேவர்களுக்கு இறைவனாகிய இந்திரன், இத்தேரை அனுப்பினான்' என்று குதிரைகளின் மனத்தை நன்கு அறிய வல்லவனாகிய மாதலி என்னும் தேர்ப்பாகன் திடமாகச் சொன்னான்.

விளக்கம்: தேவர்களும், இருடிகளும், சிவனும், பிரமனும் சொன்னபடி இந்திரன் ஈந்த தேர்இது என, மாதலிவலித்துச் சொன்னான் என்க. வலித்துச் சொல்லுதல்: உறுதியாகச் சொல்லுதல். மா: குதிரை. குதிரைகளின் மனம் தெரிந்து தேர் செலுத்துதல் சாரதிக்கு இன்றியமையாதது ஆதலின் 'மாவின் மனம் ஒப்ப உணர் மாதலி' எனச் சொல்லப்பெற்றது.

(யுத்த. இராமன் தேர்ஏறுபடலம். இத்தேர்,சிவன் முதலியோர் கட்டளைப் படி கொணரப் பெற்றது என மாதலி கூறுதல்)

ஒவ்வோர் இடத்தில்
பன்னிருவர் மொழி

31 நீலமாலை
32 பரதன்
33 கவந்தன்
34 சவரி
35 அங்கதன்
36 தாரை
37 சம்பாதி
38 துன்முகன்
39 சேனைத் தலைவன்
40 புகைநிறக் கண்ணன்
41 அகம்பன்
42 பிரமன்

பன்னிருவர் மொழி

நிலமாலை, பரதன், கவந்தன், சவரி, அங்கதன், தாரை, சம்பாதி துன்முகன், சேனைத்தலைவன், புகைநிறக்கண்ணன், அகம்பன், பிரமன் ஆகிய பன்னிருவரும் சிவனைப்பற்றி ஒவ்வோர் இடத்துக் கூறுவர்.

1. நிலமாலை, 'புனிதன்' என்று புகல்வாள்.
2. பரதன், 'கண்ணுடைநுதலான்' எனக் கூறுவான்.
3. கவந்தன், 'அழிப்பதற்கு ஒருவனுன அண்ணல்' என அறைவான்
4. சவரி, 'ஈசன்' என இயம்புவாள்.
5. வாலியின் மகன் அங்கதன் தந்தையின் சிவபூசையை

எங்ஙனம் போற்றுகின்ருன் என்று பார்ப்போம்.

"பஞ்சின்மெல் அடியாள் பங்கன்
பதயுகம் அலாது, யாதும்
அஞ்சலித்து அறியாச் செங்கை
ஆணையாய்! அமரர் யாரும்
எஞ்சலர் இருந்தார் உன்னுல்;
இன்அமுது ஈந்த நீயோ,
துஞ்சினை! வள்ளி யோர்கள்
நின்னின்யார் சொல்லற் பாலார்?"

"பஞ்சைவிட மென்மையான திருவடியை உடைய உமையவளைப் பக்கத்திலே கொண்ட சிவபிரானது திருவடிகளைத் தவிர வேறு எதையும் வணங்கி அறியாத கைகளை உடைய எந்தாய்! உன்னுல் அமரர்கள் எல்லாம் அமுதுண்டு உயிர் பிழைத்தார்கள்; அவர்களுக்கு இன்னமுது அளித்த நீயா மாண்டுவிட்டாய்? உன்னை விட வள்ளல்கள் இவ்வுலகத்தில் யார் உள்ளார்?" என அறிவிற் சிறந்த அங்கதன் பேசும் உரை எண்ணி எண்ணி இன்புறத் தக்கது.

6. தாரை வாலியின் சிவபூசையைப்பற்றி இணையற்ற முறையில் பெருமிதத்தோடு பேசுவாள். இறந்து கிடக்கின்ற வாலியைப் பார்த்து, "உமைஒரு கூறுடைய சிவபெருமானை எட்டுத் திக்குகளுக்கும் சென்று வாடா மலர் கொண்டுவந்து, நெக்கு நெக்குருகி, கைப்போது மலர் தூவி. முப்போதும் முடிசாய்த்துத் தொழுகின்ற நீ, இவ்வளவு நேரமாக, சிவபூசை இல்லாது எவ்வாறு இருக்கின்ருய்" என்று கேட்கின்ருள்.

இறந்துகிடக்கின்ற தன் நாயகனைப் பார்த்து, தாரை பேசும் பேச்சு இது:

"அணங்குஆர் பாகனை
ஆசை தோறும்உற்று,
உணங்கா ஒள்மலர்
கொண்டுஉள் அன்பொடும்
இணங்காக் காலம்
இரண்டொடு ஒன்றினும்
வணங்காது, இத்துணை
வைக வல்லையோ?"

வாலியின் சிவபூசைச் சிறப்பைத் தாரை எங்ஙனம் மதித்தாள் என்பதை இதனின்றும் அறிகின்றோம்.

7. சம்பாதி, "நாரியோர் பாகத்து அண்ணல்" என நவில்வான்.

8. துன்முகன், 'முக்கணன்' எனமொழிவான்.

"திக்கயம் வலிஇல;
தேவர் மெல்லியர்;
முக்கணன் கயிலையும்
முரண்இன் றுயது;
மக்களும் குரங்குமே
வலியர் ஆம்எனின்,
அக்கட! இராவணற்கு
அமைந்த ஆற்றலே!"

எனத் துன்முகன் சொல்வது நகைச்சுவை வாய்ந்ததாகும். 'திக்கு யானைகள் வலியிழந்தன; தேவர்கள் மெலிந்தார்கள்; முக்கணன் கயிலை முரண் அழிந்தது; மக்களும், வானரர்களும் வலிமை பெற்றுர்கள், இராவணன் ஆற்றலுக்கு முன்பு' என்பது வியத்தற்கு ஒன்றல்லவா? மேலும், 'அக்கட' என்ற சொல் இங்கு பெய்யப் பெற்றிருப்பது நயம் வாய்ந்தது.

9. சேனைத் தலைவன்,

"ஊசி வேரொடும் ஓங்கலை ஓங்கிட
ஈச னோடும் எடுத்ததும் இல்லையோ?

எனச் செப்புவான்.

10. புகைநிறக் கண்ணன், சிவனை, 'சிகைநிறச்சூலி' எனச் செப்புவான்.

11. அகம்பன், 'மூன்றுபுரங்கள் பண்டு எரித்துளோன்' என முழங்குவான்.

12. பிரமன், 'உமைகோன்' எனப் பேசுவான்.

31. நீலமாலை மொழி

புனிதன் எய்த வில்

384 "பூண்இயல் மொய்ம்பினன்,
புனிதன் எய்தவில்
காணிய வந்தனன்"
என்னக் காவலன்
ஆணையின், அடைந்தவில்
அதனை, ஆண்தகை,
நாண்இனிது ஏற்றினான்;
நடுங்கிற்று உம்பரே!

பொழிப்பு: "வாகு வளையங்கள் அணிந்த தோள்களை உடைய இராமன், தூயவனான சிவபெருமான் எய்த வில்லைக் காணவந்துள்ளான்" என்று விசுவாமித்திரன் சொல்ல, சனகனுடைய கட்டளைப்படி, அங்கு கொணரப் பெற்ற வில்லை, ஆண் தன்மை வாய்ந்த இராமன் எளிதாக, நாண் ஏற்றினான்; அதனால் விண் உலகமும் நடுங்கிற்று.

விளக்கம்: மொய்ம்பு: தோள். காணிய: காணும் பொருட்டு. உம்பர்: மேல் உலகம். வில்லை எடுத்த உடனேயே இற்றுவிட்டது என்பது வரலாறு ஆதலால், ஏற்றினான் என்பதற்கு ஏற்ற முயன்றான் எனக் கொள்ளல் வேண்டும்.

(பால. கார்முகப் படலம். இராமன் வில் ஒடித்ததை, நீலமாலை சீதையிடம் சொல்லல்)

32. பரதன் மொழி

நுதலவன் சிலை வில்

385 முதலவன் முதலிய
முந்தை யோர்பழங்
கதையையும் புதுக்கிய
தலைவன், கண்ணுடை

நுதலவன் சிலேவிலின்
நோன்மை நூறிய
புதல்வனே, எங்ஙனம்
பிரிந்து போயினுய்?

பொழிப்பு: ஆதவன் முதலிய முந்தையோரின் பழைய வரலாறுகளே எல்லாம் புதிப்பித்த தலேவனும், நுதல் விழிநாட்டத்து இறையவனின் மேரு வில்லின் ஆற்றலே அழித்த மகனுமாகிய இராமனே நீ எவ்வாறு பிரிந்து சென்றுய்?

விளக்கம்: சிலே : மலேயாகிய வில். நோன்மை : வலிமை. நூறிய : அழித்த.

(அயோத்தி. பள்ளியடைப் படலம். தயரதன் பிரிவுக்குப் பரதன் வருந்துதல்)

33. கவந்தன் மொழி
அழிப்பதற்கு ஒருவன் ஆன அண்ணல்

386 பழிப்புஅறு நிலேமை ஆண்மை
பகர்வதுஎன்? பதும பீடத்து,
உழிப்பெருந் தகைமை சான்ற
அந்தணன் உயிர்த்த எல்லாம்
அழிப்பதற்கு ஒருவன் ஆன
அண்ணலும், அறிதிர் அன்றே,
ஒழிப்பஅருந் திறல்பல் பூத
கணத்தொடும் உறையும் உண்மை?

பொழிப்பு: குற்றமற்ற தன்மையையுடைய (சிவபெருமானின்) ஆண்மையைப் பற்றிச் சொல்வதற்கு என்ன இருக்கிறது? தாமரை இருக்கையிலே இருந்து, மிகப் பெரிய தகுதிவாய்ந்த பிரமன் உண்டாக்கிய எல்லாவற்றையும் அழிப்பதற்கு என்று அமைந்த ஒப்பற்ற சிவபெருமானும், நீக்க முடியாத வலிகொண்ட பல பூதகணத்தொடு கூடி வாழும் உண்மையை (நீங்கள்) அறிவீர்கள் அல்லவா?

விளக்கம்: உழி : மிக. அந்தணன் : பிரமன். உயிர்த்த : உண்டாக்கிய. எவ்வளவு சிறந்தவர்க்கும் துணேவலி இன்றியமையாதது.

(ஆரணிய. கவந்தன் வதைப் படலம். கவந்தன் இராமனிடம் சுக்கிரீவனின் நட்பைப் பெறுமாறு வேண்டல்)

34. சவரி மொழி

ஆசுஅறு தவத்திற்கு எல்லை அணுகியது

387 ஈசனும், கமலத் தோனும்,
இமையவர் யாரும், எந்தை!
வாசவன் தானும், ஈண்டு
வந்தனர் மகிழ்ந்து நோக்கி,
"ஆசுஅறு தவத்திற்கு எல்லை
அணுகியது; இராமற்கு ஆய
பூசனை விரும்பி, எம்பால்
போதுதி" என்று போனர்.

பொழிப்பு: என் தந்தையே! சிவபிரானும், தாமரையோனும், தேவர்கள் எல்லோரும், இந்திரனும் இங்கு வந்தனராகி, களிப்புடன் என்னைப் பார்த்து, 'குற்றமற்ற நின் தவத்திற்குப் பயன் பெறும் நாள் நெருங்கி விட்டது; இராம பிரானுக்கு ஏற்ற வழிபாட்டை உவந்து செய்து விட்டு எம்மிடம் வருவாயாக' என்று இயம்பிச் சென்றுர்.

விளக்கம்: ஆசு: குற்றம். போதுதி: வருவாயாக.

(ஆரணிய. சவரி பிறப்பு நீங்கு படலம். இராமனுக்கு வழிபாடு செய்து விட்டு விட்டுலகத்திற்கு வருமாறு ஈசன் முதலியோர் சொன்னதாக, சவரி இராமனிடம் சாற்றல்)

35. அங்கதன் மொழி

பஞ்சின் மெல்அடியாள் பங்கன்

388 'பஞ்சின்மெல் அடியாள் பங்கன்
பதயுகம் அலாது யாதும்,
அஞ்சலித்து அறியாச் செங்கை
ஆணையாய்! அமரர் யாரும்,
எஞ்சலர் இருந்தார் உன்னல்;
இன்அமுது ஈந்த நீயோ,
துஞ்சினை; வள்ளி யோர்கள்,
நின்னின்யார் சொல்லற் பாலார்'

பொழிப்பு: பஞ்சைவிட மென்மை வாய்ந்த உமையவளை உடம்பின் ஒரு கூறிலே கொண்ட சிவபெருமானின் திருவடித் தாமரை அல்லது, வேறு எதையும் கும்பிட்டு அறியாத செம்மையான கைகளை உடைய ஆணை செலுத்தும் ஆற்றல் வாய்ந்தவனே! தேவர் அனைவரும், உன்னால் சாகாமல் இருந்தார்; (அவர்களுக்கு) இனிய அமுதத்தை வழங்கிய நீயோ மாண்டனை; உன்னைப் போல வள்ளியோர் என்று சொல்லத்தக்கவர் யார் இருக்கின்றார்? (உலகத்தில்)

விளக்கம்: பஞ்சின் என்பதில் உள்ள இன் உருபு உயர்வுப் பொருளில் வந்தது. நின்னின் என்பதில் உள்ள இன் உருபு ஒப்புப் பொருளில் வந்தது. பஞ்சை விட என்று முன்னதற்கும், நின்னைப் போல என்று பின்னதற்கும் பொருள். பதயுகம்: இரண்டு திருவடி. துஞ்சுதல்: இறத்தல். வள்ளியோர்: வழங்கும் செயலுடையார்.

(கிட்கிந்தை. வாலி வதைப் படலம். உயிர்விடும் தறுவாயில் உள்ள வாலியைப் பார்த்து மகன் அங்கதன் புலம்புதல்)

36. தாரை மொழி

அணங்குஆர் பாகன்

389 அணங்குஆர் பாகனை,
ஆசை தோறும்உற்று,
உணங்கா ஒள்மலர்
கொண்டுஉள் அன்பொடும்
இணங்கா, காலம்
இரண்டொடு ஒன்றினும்
வணங்காது, இத்துணை
வைக வல்லையோ?

பொழிப்பு: அம்பிகை பொருந்திய உடம்பின் பகுதியை உடையவனான சிவபெருமானை, திக்குகள் தோறும் சென்று, வாடாத ஒளி உள்ள பூக்களைக் கொண்டு வந்து, உள்ளன்பொடு பொருந்தி மூன்று பொழுதும் வழிபடாமல் இத்துணைப்போது வாளா இருக்க உன்னால் முடியுமா?

விளக்கம்: அணங்கு: உமை. ஆர்: தங்கிய. ஆசை: திக்கு. உணங்கா: வாடாத. இணங்கா: பொருந்திய. காலம் இரண்டொடு ஒன்று. முப்போது.

(கிட்கிந்தை. தாரை புலம்புறுபடலம். மாண்டு கிடக்கின்ற வாலியைப் பார்த்து, தாரைபுலம்பல்)

37. சம்பாதி மொழி

நாரி ஓர் பாகத்து அண்ணல்

390 'நான்முகத்து ஒருவன், மற்றை
நாரிஓர் பாகத்து அண்ணல்,
பால்முகப் பரவைப் பள்ளிப்
பாம்புஅணைப் பரன்என் றுலும்,

காலனுக் கேயும், சேறல்
அரிது;இது காவல் தன்மை;

மேல்உமக்கு உறுவது எண்ணிச்
செல்லுமின்; விளிவுஇல் நாளீர்!'

பொழிப்பு: நான்முகத்தோடு கூடிய பிரமனும், மற்றை அம்பிகையைப் பக்கத்திலே உடைய சிவபெருமானும், பாற்கடலிலே பாம்பு அணையிலே பள்ளிகொண்ட பரமனும், காலனும் கூடச் செல்லுதற்கு அருமை வாய்ந்தது; இது (இலங்கையின்) காவல் தன்மையாகும். இனி, உங்கட்கு நேரக்கூடியவற்றை ஆராய்ந்து செல்லுங்கள்; அழிவு இல்லாத வாழ்நாள்களை உடையவர்களே!

விளக்கம்: பால்முகப்பரவை: பாற்கடல். காலனுக்கேயும்: எமனுக்குக் கூட. சேறல்: செல்லுதல்.

(கிட்கிந்தை சம்பாதிப் படலம். சம்பாதி இலங்கையின் தன்மையை வானரர்களுக்குச் சொல்லுதல்)

38. துன்முகன் மொழி

முக்கணன் கயிலையும் முரண் இன்று ஆயது.

391 திக்கயம் வலிஇல;
தேவர் மெல்லியர்;

முக்கணன் கயிலையும்
முரண்இன் றுயது;

மக்களும் குரங்குமே
வலிய ராம்எனின்
அக்கட! இராவணற்கு
அமைந்த ஆற்றலே!

பொழிப்பு: (உன் ஆற்றலுக்கு முன்னே) திக்கு யானைகள் வலி இல்லாத ஆயின; அமரரும் ஆற்றல் ஒடுங்கியவரானுர்; மூன்று கண் பெற்ற சிவபெருமானின் வெள்ளிமலையும் வலி இழந்து விட்டது; மனிதர்களும், குரங்குகளும் மட்டுமே வலியுடையவர் என்று இருக்குமானுல், அடடா! இராவணனுக்குப் பொருந்திய வலிமையைப் பற்றி, (என்ன சொல்லுவது.)

விளக்கம்: கயம்: யானை. முரண்: வலிமை. அக்கட: வியப் பிடைச் சொல்.

(யுத்த. இராவணன் மந்திரப்படலம். துன்முகன் கூறுதல்)

39. சேனைத்தலைவன் மொழி
ஈசனேடும் எடுத்ததும் இல்லையோ?

392 "கூசும் வானரர்
குன்றுகொடு இக்கடல்
வீசி ஞர்"எனும்
வீரம் விளம்பினுய்;
ஊசி வேரொடும்
ஓங்கலை ஓங்கிய
ஈச ஞேடும்
எடுத்ததும் இல்லையோ?

பொழிப்பு: 'நடுங்கும் வானரர் மலைகளை எடுத்து, இந்தக் கடலில் வீசினுர்' என்று அவர்கள் வீரத்தை நீ சொன்னுய்; வெள்ளி மலையை அதன் உச்சியில் வீற்றிருக்கின்ற சிவபெருமானையும் சேர்த்து ஊசி வேரோடும் பெயர்த்து எடுத்ததும் பொய்யோ?

விளக்கம்: குன்றுகொடு இக்கடல் வீசினுர் என்றது அணைகட்டியதை. ஓங்கல்: மலை.

(யுத்த. ஒற்றுக் கேள்விப் படலம். சேனைத் தலைவன் மாலியவானிடம் இராவணன் ஆற்றலைப் பாராட்டிக் கூறுதல்)

40. புகைநிறக் கண்ணன் மொழி

சிகைநிறச் சூலி

393 ‘தொகைநிலைக் குரங்குடை
மனிதர்ச் சொல்லிஎன்?
சிகைநிறச் சூலிதன்
திறத்தின் செல்லினும்,
நகைஉடைத் தாம்;அமர்
செய்தல் நன்று’என,
புகைநிறக் கண்ணனும்
புகன்று பொங்கினன்.

பொழிப்பு : ‘நெருப்பைக் கக்குகின்ற சூலம் தாங்கிய சிவ பெருமானோடு நாம் போர் செய்யப்புகுந்தாலும் அது நகைப்பிற்குரியதாகும். (அங்ஙனமாக) கூட்டமாக நிற்கின்ற குரங்குகளைப் படையாகக் கொண்ட மனிதர்களோடு படைஎடுத்துச் செல்லுதலைப்பற்றி நகைப்பிற்கு இடம் என்று சொல்ல என்ன இருக்கிறது? அவர் நம்மிடத்து வரின் அமர் செய்வது நலமாக இருக்கலாம்’ என்று புகைநிறக் கண்ணன் என்ற பெயரை உடையவன் வெகுண்டு சொன்னன்.

விளக்கம் : தொகை: கூட்டம். சிகை: தீக்கொழுந்து.

(யுத்த. இராவணன் மந்திரப் படலம். புகைநிறக் கண்ணன் புகல்தல்)

41. அகம்பன் மொழி

மூன்று புரங்கள் எரித்துளோன்

394 ‘பாகசா தனனும், மற்றைப்
பகைஅடும் திகிரி பற்றும்
ஏகசா தனனும், மூன்று
புரங்கள்பண்டு எரித்து ளோனும்
போக;தாம் ஒருவர் மற்றுஇக்
குரங்கொடு பொரக்கற் றுரே,
ஆக;கூற்று ஆவி உண்பது
இதனின்மேற்று ஆகும்’ என்ருன்.

பொழிப்பு ; 'இந்திரனும், மற்றும், பகைவர்களை அழிக்கின்ற சக்கரத்தை உடைய ஒப்பற்ற திறன் வல்லவனான திருமாலும், அந்த நாளில் முப்புரத்தை எரித்தவனான சிவனும் போர் புரியப் போகட்டும்; வேறு எவரும் இந்தக் குரங்கொடு போர் செய்யக் கற்றிருந்தால் செய்யட்டும்; எமனைக் கொண்டு, எதிர்த்தோர் உயிரை உண்ணச் செய்வது இந்தக் குரங்கினிடம் பொருந்தி நின்ற செயலாகும்' என்று சொன்னான்.

விளக்கம் : அடும் : அழிக்கும். ஏகசாதனன் : ஒப்பற்ற திறன் வாய்ந்தவன். பொர : போர் செய்ய. கூற்று : எமன். மேற்று : மேலது.

(யுத்த. பிரமாத்திரப் படலம். அகம்பன் அனுமனின் திறத்தை வியத்தல்)

42. பிரமன் மொழி

உமைகோன் உருக்கொடு துடைத்தி

395 'என்உ ருக்கொடுஇவ் உலகினை
ஈனுதி; இடையே
உன்உ ருக்கொடு புகுந்துநின்று
ஓம்புதி; உமைகோன்
தன்உ ருக்கொடு துடைத்தி;மற்று
இது,தனி அருக்கன்
முன்உ ருக்கொடு பகல்செயும்
தரத்தது முதலோய்!'

பொழிப்பு : (பிரமன் இராமனைப் பார்த்து) (எல்லாவற்றிற்கும்) 'முதலானவனே! (பிரமனாகிய) என் வடிவத்தைப் பெற்று, இவ்வுலகத்தினை உண்டாக்குகின்றாய்; நடுவிலே (திருமாலாகிய) உன் வடிவத்தைப் பெற்று இங்கே வந்து நின்று காப்பாற்றுகின்றாய்; உமையவள் தலைவனான சிவபெருமான் வடிவத்தைக்கொண்டு அழிக்கின்றாய்; இச்செயலானது, ஒப்பற்ற சூரிய பகவான் தன் வடிவத்தைக்கொண்டு எதிரில் நின்று பகலை உண்டாக்குகின்ற தன்மையை உடையதாகும்.' (என்று கூறினான்.)

விளக்கம் : ஈனுதல் : பிறப்பித்தல். ஓம்புதல்: காத்தல். துடைத்தல் : அழித்தல். அருக்கன்: சூரியன். தரத்தது: தன்மைகொண்டது. மற்று அசை.

(யுத்த. மீட்சிப் படலம். பிரமன் இராமன் சிறப்பை உணர்தல்)

கம்பன் காவியத்தில் சிவனைப்பற்றி வந்த இடங்கள்.

1.	பால காண்டம்	55
2.	அயோத்திக் காண்டம்	19
3.	ஆரணிய காண்டம்	50
4.	கிட்கிந்தா காண்டம்	24
5.	சுந்தர காண்டம்	49
6.	யுத்த காண்டம்	198
	மொத்த இடங்கள்	395

சிவனைக்குறித்த சொல்தொடர் அகராதி

எண், பாடல் எண்.

1 அகன் கயிலையில் தொலைவிலோன் 60
2 அஞ்சு முகத்தவன் 357
3 அணங்கார் பாகன் 389
4 அரங்கில் ஆடுவார் 214
5 அரன் 43, 44, 91, 152 160, 219, 263, 291, 305, 306, 338, 350, (ஆக 12)
6 அவிர்மதி அணிந்த தூயவன் 259
7 அழல் தரும் கடவுள் 268
8 அழிப்பதற்கு ஒருவனான அண்ணல் 386
9 அறிவு முற்றிய பித்தன் 98

10 ஆலம் உண்ட முக்கணான் 133
11 ஆலம் உண்டவன் 52, 82, 193, 241, (ஆக 4)
12 ஆலம் கொண்டு இருண்ட கண்டத்து அமரர் கோன் 298
13 ஆலம் நுகர்ந்தான் 351
14 ஆலம் பார்த்து உண்டவன் 65
15 ஆலம் மிடற்றான் 47
16 ஆலவிடம் அன்று வர நின்ற சிவன் 88
17 ஆலாலம் உண்டவன் 101
18 ஆறுகொள் சடிலத்தான் 334
19 ஆனையின் உரி போர்த்தவன் 155

20 இடபம் உந்தும் எழில் இரு நான்கு தோள் கடவுள் 97
21 இந்து மோலி 30
22 இமையவில் வாங்கிய ஈசன் 324
23 இமையா முக்கண் இறைவன் 150
24 இமையா முக்கண் ஈசன் 373
25 இருமூன்று வதனத்தோன் தன் தந்தை 309
26 இருள் இடைச் சுடலை ஆடும் எண் புயத்து அண்ணல் 112
27 இளம் சந்திரமௌலி 1
28 இறுதி இயற்றும் ஈசன் 249
29 இறைவன் 56, 342 (ஆக2)

30 ஈசனார் 251, 283, 308 (ஆக 3)
31 ஈசன் 3, 7, 28, 32, 67, 69, 72, 102, 109, 118, 134, 150, 153, 158, 171, 198, 201, 209, 222, 227, 246, 279, 282, 289, 299, 366, 367, 387, 392. (ஆக 29)

32 ஈறிலான் 14

33 உடை புலித்தடக்கை அண்ணல் 108
34 உண்ணும் காலத்து அவ் உருத்திரன் 93
35 உமை அண்ணல் 329
36 உமை ஒரு கூறன் 359
37 உமை ஒரு பாகன் 119, 358 (ஆக 2)
38 உமை கோன் 395
39 உமைக்கு ஒருபாகத்து ஒருவன் 2
40 உமைக்கு ஒரு பாகன் 111
41 உமைக்கு நாதன் 316
42 உமையாள் கேள்வன் 330
43 உருத்திரன் 71, 106, 270, 381 (ஆக 4)

44 ஊர் அறுத்த ஒருவன் 238
45 ஊழிக் கடை முடிவில் தனி உமை கேள்வன் 20
46 ஊழி நெருப்பின் உருத்தன் 49
47 ஊழியின் இறுதிக்காலத்து உருத்திரமூர்த்தி 68
48 ஊழியின் உருத்திரன் 90

49 எயில் கணத்து அன்று எரித்தவன் 89
50 எழுசுடர்க் கடவுள் தன்பல் இறுத்தவன் 271

51 ஏழை பங்கத்தன் 110
52 ஏறு அமர் கடவுள் 165

53 ஐம்முகம் உடையான் 346
54 ஐம்முகன் 175, 179 (ஆக 2)

55 ஒண்கவர் எஃகம் வல்லவன் 315
56 ஒருவன் 74, 207, 248, 310 (ஆக 4)

57 ஓங்கல் உரிக்குள் உருத்திரன் 50
58 ஓங்கு முக்கணன் 85
59 ஓதவிடம் உண்டவன் 204

60	கங்கை அம் சென்னியான்	356
61	கங்கை சடை வைத்தவன்	208
62	கங்கை சூடி	379
63	கங்கை சூடு ஈசன்	164
64	கங்கை சூடும் ஈசன்	311
65	கங்கைத் திருமுடிச் செங்கணான்	66
66	கங்கையின் கணவன்	335
67	கங்கையும் பிறையும் சூடும் கண்ணுதல்	220
68	கங்கைவார் சடையோன்	13
69	கடவுள்	8, 336 (ஆக 2)
70	கடுவைத் தன் மிடற்றில் ஒளித்த தக்கோன்	205
71	கணிச்சியான்	276
72	கணிச்சி வானவன்	345
73	கண் இமையா ஆலங்கொள் மிடற்றவன்	196
74	கண்டத்திடைக் கறையுடைக் கடவுள்	59
75	கண்ணுர் நுதல் பெருமான்	130
76	கண்ணுடை நுதலவன்	385
77	கண்ணுடை நுதலினன்	345
78	கண்ணுதலான்	55, 314 (ஆக 2)
79	கண்ணுதல்	11, 58, 73, 138, 151, 194, 195, 197, 261 (ஆக 9)
80	கண்ணுதல் ஒருவன்	156
81	கண்ணுதல் பரமன்	148
82	கண்ணுதல் பெருங் கடவுள்	100
83	கண்ணுதல் வானவன்	9
84	கந்தனுர் தந்தையார்	297
85	கயிலை ஈசன்	92
86	கயிலையான்	126
87	கயிலையில் இருந்த தேவு	57
88	கயிலையின் ஒருதனிக் கணிச்சி வானவன்	76
89	கரந்தை சூடி	229
90	கரித்தமூன்று எயில் உடைக் கணிச்சிவானவன்	61
91	கருமணி கண்டத்தான்	190
92	கறுத்த மணி கண்டர்	39
93	கறை மிடற்றவன்	353
94	கறை மிடற்று இறைவன்	149, 335 (ஆக 2)
95	கற்பத்தின் அரன்	225
96	கற்புடைய மங்கை காண நின்று ஆடுகின்றான்	26
97	கற்றை அம் சடைக்கடவுள்	174
98	கற்றை அம் சடையவன்	300

99 கற்றைவார் சடைமுடிக் கணிச்சி வானவன் 340
100 கற்றை வார் சடையினன் 16

101 காதும் கண்ணுதல் 173
102 கார்விடக் களன் உடைக் கணிச்சி வானவன் 18
103 காலமும் கணக்கும் நீத்த காரணன் 280
104 காலன் ஆற்றல் கடிந்த கணிச்சியான் 240
105 காலன் தன் காலமும் காலால் அறுக்கும் புங்கவன் 274

106 குண்டையின்பாகன் 362
107 குலேயாத் தேவ தேவன் 94
108 குழந்தை வெண்மதிக் குடுமியன் 63
109 குன்று எடுத்த நாள் சேவடிக் கொழுந்தால் வென்றவன் 319

110 கொன்றை அலங்கலான் 115

111 சங்கரன் 87, 95, 154, 188, 245, 286 (ஆக 6)
112 சந்திர மௌலி 41
113 சம்பு 326

114 சிகை நிறச் சூலி 393
115 சிவனர் 365
116 சிவன் 29, 140, 141, 146, 153, 162, 178, 184, 191, 192
216, 228, 233, 234, 247, 277, 288, 294, 295, 296,,
304, 307, 320, 322, 341, 346, 352, 374, 383 (ஆக 29)

117 சீற்றம் ஆகிய ஐம்முகன் 139

118 சுடுகளத்து உறையும் பெற்றி ஏயவன் 223
119 சுடு தொழில் தொலேயோன் 79
120 சுழிபடு கங்கை அம்தொங்கல் மோலியான் 235

121 சூலத்து அந்தணன் 200
122 சூலம் ஏய்தடக்கை அண்ணல் 218
123 சூலம் தாங்கிய மூலம் 317
124 சூலி 199, 273. 378 (ஆக 3)

125 செங்கண் ஏற்றவன் 6
126 செஞ்சடை முதலோன் 131
127 சென்னித் துண்டமதி வைத்தவன் 34

128 சேயிழை பாகத்து எண்தோள் ஒருவன் 121

129 தவள்மதி புனை அரன் 4
130 தழலையே அனையவன் 15
131 தழல் எடுத்தான் 303
132 தழல் நிறக்கடவுள் 262
133 தழல் நிற வண்ணன் 48
134 தழல் வண்ணன் 46
135 தன் இல் முக்கணன் 77
136 தனிச்சரம் துரந்த செல்வன் 355

137 தாணு 123
138 தார்கொன்றையினன் 103
139 தாழ்சடைக்கடவுள் 51, 182 (ஆக 2)

140 திங்கள் மேவும் சடைத்தேவன் 254
141 திரிபுரம் எரித்த தேவன் 331
142 திரிபுரம் எரித்த புங்கவன் 344
143 திரிபுரம் செற்ற தேவன் 377

144 துண்டங்கொள் பிறையான் 243
145 துப்புறழ்மேனி அண்ணல் 80
146 துள்ளுநீர் வெள்ளம் சென்னி ஏற்றவன் 318

147 தேம்பல் பிறை சென்னி வைத்தவன் 290
148 தேவதேவர் 23
149 தேவதேவன் 27
150 தேவன் 86

151 தையல் பாகன் 244, 257 (ஆக 2)

152 தோகை பாகன் 261

153 நஞ்சம் கொண்ட கண்ணுதல் 371
154 நஞ்சம் நுங்கிய கண்ணுதல் 53
155 நஞ்சினை மிடற்று வைத்த நகை மழுவாளன் 242
156 நஞ்சு அடை கண்டன் 142
157 நல்மத்தம் நாகம் தலைசூடிய நம்பன் 278

158 நாகத்தனி ஒரு வில்லி 37
159 நாரி ஓர் பாகத்து அண்ணல் 285, 390 (ஆக 2)
160 நாரி பாகத்தன் 210
161 நாள்மதிச் செஞ்சடைக் கடவுள் 5

162 நிரந்த பொற்சடை நின்மலக் கொழுந்து 264
163 நிலவைச் செஞ்சடை வைத்தவன் 137
164 நிழல்பொலி கணிச்சிமணி நெற்றிஉமிழ் செங்கண் தழற்புரை
சுடர்க் கடவுள் 33

165 நிலகண்டன் 215, 368 (ஆக 2)
166 நீலம் காட்டிய கண்டன் 231
167 நீலம் கொண்ட ஆர் கண்டன் 159
168 நீறணி கடவுள் 253
169 நீறணிந்த கடவுள் 1
170 நீறுபூசி 230

171 நெடுங் கணிச்சி 212
172 நெருப்பினுன் 42
173 நெற்றிக் கண்ணன் 232
174 நெற்றியில் கண்ணன் 332
175 நெற்றியின் நெருப்புக் கண்ணுன் 135
176 நெற்றி விழியினன் 168

177 பஞ்சின் மெல் அடியாள் பங்கன் 388
178 பரசுடைக் கடவுள் 252
179 பரஞ்சுடர்ப் பண்ணவன் 54
180 பரமராம் அரன் 272
181 பரமன் 120, 145 (ஆக 2)
182 பனிநீர்க்கங்கை புடை ஊற்றும் சடையான் 339
183 பாகத் திங்களின் மோலி அண்ணல் 124

184 பிஞ்ஞகன் 21
185 பிணை ஒன்று கண்ணுள் பங்கன் 376
186 பித்தனுகிய ஈசன் 217
187 பிறை சூடும் பிஞ்ஞகன் 203

188 புரம் அட்டான் 370
189 புரங்கள் எய்த புங்கவன் 360
190 புரம் எலாம் எரி செய்தோன் 369
191 புரம் கடந்த அப்புனிதன் 380
192 புரம் சுடு கடவுள் 361
193 புரம் சுடும் ஒருவன் 147
194 புரம் பற்றிய போர்விடையோன் 348
195 புரம் பிழைப்பரும் தீப்புகப் பொங்கியோன் 281

196	புராரி	312
197	புலித்தானைக் களிற்று உரிவைப் போர்வையான்	328
198	புலியின் அதள் உடையான்	40
199	புள்ளிமான் உரி ஆடையன்	187
200	புனிதன்	266, 384 (ஆக 2)
201	பூளை சூடி	260
202	பூளையே சூடுவான்	168
203	பேரீசன்	321
204	பொருப்பில் வாழும் அற்புடையவன்	302
205	பொருப்பினன்	96
206	பொன்மலை வில்லினன்	113
207	பொன்மான் உரியான்	25
208	பொன்மௌலி வானவன்	122
209	போற்றும் ஈசன்	157
210	மங்கை பாகன்	262
211	மணிமிடற்று இறைவன்	143
212	மலைமகள் கொழுநன்	12, 265 (ஆக 2)
213	மலையின் மேல் உளான்	273
214	மழ விடைப்பாகன்	237
215	மழ விடையோன்	117
216	மழுவலாளன்	347
217	மழுவலான்	120, 166, 167, 322 (ஆக 4)
218	மழுவாளன்	104
219	மழுவாளி	129, 132 (ஆக 2)
220	மழுவாள் அங்கை ஈசன்	226
221	மான் இடன்	176
222	மான் மறிக் கரத்தான்	236
223	மான் மறிக் கரத்து வள்ளல்	136
224	முக்கணன்	144, 287 (ஆக 2)
225	முக்கணன்	38, 114, 116, 161, 180, 186, 250, 267, 363, 372, 391 (ஆக 11)
226	முக்கண் எண் தோளவன்	325
227	முக்கண் தேவன்	177

228 முக்கண் நோக்கினன் 62
229 முக்கண் புனிதன் 118
230 முச்சிரத்து அயில் தலைவன் 185
231 முதல் தேவர் 64
232 முத்தலை எஃகன் 169
233 முத்தலை எஃகினான் 83
234 முப்புரங்களை எய்த வில்லியார் 349
235 முப்புரங்கள் செற்ற சேவலோன் 301
236 முப்புரம் எரித்தவன் 382
237 முப்புரம் சுட முடுகும் ஈசன் 75
238 முப்புரம் சுடும் ஒருவன் 343
239 முப்புரம் முருங்கச் சுட்ட கொற்றவன் 78
240 முருகன் தந்த அத்தளிர் இயல் பாகத்தான் 337
241 முருகன் தாதை 73
242 முழு முதல் 73
243 முளையமை திங்கள் சூடும் முக்கணன் 221
244 முற்று மதியம் மிலைந்தான் 24

245 மூசு அரவு சூடு முதலோன் 32
246 மூலம் வந்து உலகை உண்ணும் உருத்திர மூர்த்தி 105
247 மூவரில் பெற்றம் உடையவன் 213
248 மூவர் தம்முள் ஒருவர் 275
249 மூவா முதல் ஈசன் 125
250 மூன்று எயில் எரித்தோன் 375
251 மூன்று புரங்கள் பண்டு எரித்துளோன் 394

252 யாவர்க்கும் அறிவு அரும் அரன் 99

253 வகிர்த்திங்கள் சூடிய செல்வன் 26
254 வடி மழுவாள் படையோன் 202
255 வரிசிலைப் பொருப்பு வாங்கிய பரம்சுடர் 74
256 வரை உறை புனிதன் 264
257 வனிதை ஓர் கூறினன் 22
258 வன் தாள் மழுவோன் 181

259 வாரணத்து உரிவையான் 255
260 வார்சடை அரன் 327
261 வால் உணர்வு மேல் முடுகினார் அறிவுசென்று உற்ற வானவன் 256
262 வானக மணிநீர்க் கங்கை தாங்கினான் 107
263 வானவன் 313

264	விடம் உண்ட ஒருத்தன்	206
265	விடம் துடிக்கின்ற கண்டத்து அண்ணல்	284
266	விடைச் சங்கரன்	36
267	விடை மேலவன்	127
268	விடை மேல்வரு விமலன்	128
269	விடையவன்	293
270	விடையில் தோன்றும் ஒருவர்	84
271	விடையின் பாகன்	292, 323, 354 (ஆக 3)
272	விடை வரு பாகன்	183
273	விடை வலோன்	189
274	விடை வல்லான்	239
275	விரி வெள்ளி விளங்கு அம்மாமலை அண்ணல்	31
276	விழிதரு நெற்றியான்	211
277	வெங்கண் நாகக் கரத்தினன்	26
278	வெண்நிறக் கங்கைவார் சடைக் கற்றையன்	26
279	வெண்மதிப் பாதியான்	333
280	வெப்பு உருவு பெற்ற அரன்	35
281	வெள் எருக்கம் சடைமுடியான்	364
282	வெள்ளத்தின் சடிலத்தான்	17
283	வெள்ளம் அணைத்தவன்	10
284	வெள்ளிக் கயிலைப் பொருப்பு ஈசன்	45
285	வெள்விடையவன்	258

சிவ சம்பந்தமான சொல் தொடர்

எண், பாடல் எண்.

1	கொன்றைப் பூ நின்ற மவுலியையும் புக்கு அணைந்த புனல் கங்கை	269
2	சிகைக் கொழும் கனலை வீசும் செயல்	81
3	புரம் சுடப் பண்டு அமைத்தது	163
4	முப்புரம் நெருப்பு உற உருத்து எய்த அம்பு	172
5	முப்புரம் முருங்கச் சுட்ட முரிவெஞ்சிலை	224
6	மேல் உயர் கயிலை	170
7	விண் தோய் கயிலையின் மலை	70

தொடர் எண்.	பாட்டு முதற் குறிப்பு	பாட்டு எண்.	தொடர் எண்.	பாட்டு முதற் குறிப்பு	பாட்டு எண்.
1	அக்கணை அசனி	133	44	ஆலம்பார்த்து	65
2	அக்கணையை	144	45	ஆவி	94
3	அங்கண்மா	320	46	ஆழிஅம் செல்வ	198
4	அங்கு அரக்கர்	36	47	ஆழிவறக்க	49
5	அங்கு அவர்	13	48	ஆறு எலாம்	14
6	அங்கு நின்று	6			
7	அங்கு வந்து	335	49	இங்கு வந்து	379
8	அங்கையின்	43	50	இடைந்தவர்க்கு	241
9	அணங்கு ஆர்	389	51	இந்திரன் குலிச	222
10	அணை இன்றி	376	52	இந்திரன் சசியை	309
11	அண்ட மூலத்து	86	53	இந்திரன் சசியொடும்	19
12	அண்ணல் அஞ்சன	93	54	இந்திரன் மேலதோ	41
13	அண்ணல் வில்	100	55	இந்திரன் விடையின்	292
14	அத்தலை	38	56	இப்புவனம்	35
15	அத்தொழில்	102	57	இப்பெரும்	321
16	அந்நரன்	291	58	இமைப்பதன்	111
17	அப்பு உறழ்	80	59	இமையமால்	119
18	அரங்கில் ஆடுவார்	214	60	இமையிடை	358
19	அரம் சுட	343	61	இமையவில்	324
20	அரம் சுடர்	74	62	இருவரும்	331
21	அரன் அதிகன்	338	63	இலக்குவன்	293
22	அரன் கொலாம்	219	64	இலங்கையர்	115
23	அருவரை முழை	69	65	இலங்கையின்	184
24	அருளுடை	112	66	இலவத்தீவினின்	137
25	அலக்கணும்	349	67	இல்லாத உலகத்து	239
26	அவயம் உனக்கு	346	68	இவனை இன்துணை	277
27	அவன் அன்னதுகண்	295	69	இணைய தன்மையர்	186
28	அவன் அன்னது பகரும்	341	70	இன்னவாறு	15
29	அவ் இடத்து	51	71	ஈசற்கு ஆயினும்	67
30	அவ்வடு	201	72	ஈசனுர் கண்ணில்	308
31	அனைய குன்று	99	73	ஈசனும்	387
32	அன்னது	113	74	ஈசனே முதலா	227
33	அன்னுன் தனை	25	75	ஈசனை	150
			76	ஈசன் அருள்	289
34	ஆங்கு அவள்	50	77	ஈசன் ஆண்டு	209
35	ஆசி	92	78	ஈசன்இவ்	28
36	ஆசை எங்கணும்	106	79	ஈசன் முதல்	367
37	ஆணி இவ்	123	80	ஈண்டு இவை	75
38	ஆயதன்	121			
39	ஆயது இவ்விடம்	259	81	உகக்கடை	81
40	ஆயிரம் பெரு	158	82	உக்கன பல்லொடு	325
41	ஆர்அழி	200	83	உச்சிரத்து	185
42	ஆர்கொன்றவர்	103	84	உந்தி அம்புயத்து	265
43	ஆர்த்தார்கள்	60	85	உமைக்கு ஒரு	2

தொடர் எண்.	பாட்டு முதற் குறிப்பு	பாட்டு எண்.	தொடர் எண்.	பாட்டு முதற் குறிப்பு	பாட்டு எண்.
86	உமைக்கு நாதற்கும்	316	127	கயிலையின்	76
87	உமையனே காக்க	359	128	கரந்தை	264
88	உரன் நெரிந்து	306	129	கரன் முதல்	272
89	உருளும் நேமியும்	315	130	கரனையும்	44
90	உவன் காண்	374	131	கரித்த மூன்று	61
91	உழக்கும் மறை	33	132	கரியமாலினும்	314
92	உள்ளி	91	133	கருடனில்	84
93	உற்பத்தி அயனே	225	134	கருமணி கண்டத்தான்	190
94	ஊதினன்	126	135	கலித்தானை	328
95	ஊழி ஆயிர	381	136	கறுத்தாய்	342
96	ஊழியின்	90	137	கறுத்து எழு	71
97	எடுத்த மலை	366	138	கற்றான் மறை	197
98	எண்ணரிய	9	139	கற்றை அம்	300
99	எண்ணின்	55	140	கற்றைவார் சடை	16
100	எம் குலத்தவர்	188	141	கன்மத்தை	278
101	எல்லிட்ட	45	142	கார்த்த வீரியன்	251
102	எவ்வகை உரகமும்	160	143	கார்முக வலியை	327
103	எள்இல் ஐம்பெரும்	187	144	கார்விட	18
104	எறுழ்வலி	172	145	காலஇருள்	88
105	எற்றை நாளினும்	174	146	காலங்கள்	196
106	என்உருக்கொடு	395	147	காலம் கொண்டு	298
107	என்று ஆங்கு	181	148	காலன் ஆற்றல்	240
108	என்று இறைஞ்சலும்	143	149	காலன் மார்புழை	140
109	என்று பரமன்	145	150	காளியை	138
110	என்னு முன்னம்	370	151	காற்றினையும்	304
111	என்னும் மாத்திரத்து	165	152	கிங்கரர்	286
112	ஏத்து ஆடினர்	132	153	குழந்தை	63
113	ஒக்க நின்று	161	154	குன்றுநீ	319
114	ஒருமடக்கொடி	263	155	கூசும் வானரர்	392
115	ஒன்றினை உமையாள்	330	156	கொய்தளிர்	373
116	ஓர் ஏறு	228	157	கோசிக	171
117	கங்கை சடை	208	158	சங்கத்தின்	110
118	கங்கையும்	220	159	சண்டம் கொள்	243
119	கடம் ஏய்	195	160	சந்திரனை	270
120	கடிது சென்று	136	161	சவுளமொடு	4
121	கண்ட சங்கரன்	154	162	சாலிவண்	199
122	கண்ணன்	151	163	சித்திர வனமுலை	98
123	கண்ணுடை நுதலினன்	345	164	சிந்துராக	56
124	கண்ணுதல் ஒருவனது	156	165	சிந்தையில்	299
125	கண்ணுதல் தீமை	194			
126	கண்ணுதல் பரமன்	148			

தொடர் எண்.	பாட்டு முதற் குறிப்பு	பாட்டு எண்.	தொடர் எண்.	பாட்டு முதற் குறிப்பு	பாட்டு எண்.
166	சிவனும் அயனும்	146	204	துள்ளி	48
167	சிவனும் நான்முகத்து	216	205	துறக்கும்	166
168	சிவனும் மலர்	307	206	துனிஅறு	22
169	சிவனே	234	207	துன்னலர்	79
170	சிவன் அல்லன்	247	208	தூநின்ற	269
171	சிலமும்	317	209	தேங்கு கங்கை	66
172	சிற்றம்	139	210	தேவதேவன்	27
173	சுழிபடு கங்கை	235	211	தேவரின்	213
			212	தேவரும் பிறரும்	279
174	சூர் அறுத்தவனும்	238	213	தேவரும்முனித்தலைவரும்	383
175	சூலமும்	105	214	தேவர் ஆயினர்	176
176	சூலம் உண்டு	193	215	தேவர் என்பவர்	275
177	சூலம் எய் தடக்கை	218	216	தேவர்க்கும்	365
178	சூலம் வாங்கி	141	217	தேவாசுரரும்	125
			218	தேறினன்	334
179	செம்மாமலராள்	31	219	தொகைநிலை	393
180	செய்த மாதவம்	178	220	தொடிமணி	191
181	செருவில்	377	221	தொடை ஊற்றின்	339
182	செறுக்கும்	274	222	தோற்றனை	318
183	செறுத்து	39			
184	சோகத்தாள் ஆய	282	223	நஞ்சினை மிடற்று	242
185	ஞாலம்	47	224	நஞ்சு அட	5
			225	நடுங்கி	142
186	தண்டக வனத்து	34	226	நண்ணுதல்	53
187	ததையும் மலர்	8	227	நல்உறுப்பு	271
188	தவன் நுணங்கிய	192	228	நல்தாதையும்	24
189	தழுவா நின்ற	64	229	நன்றென	29
190	தாக்குகின்ற	245	230	நாகத்தனி	37
191	தாதுஉண்	205	231	நாணத்தால்	353
192	தாழ்இரும்	68	232	நாலுவேதம்	273
193	தாள்உடை மலருளான்	210	233	நாளை நீ	168
194	தாள் உடைவரிசிலை	326	234	நான்முகத்து	390
195	தானே சிவன்	296	235	நான்முகன்	285
196	திக்கயம் வலியில	391	236	நிலமகட்கு	12
197	திக்கய வலியும்	287	237	நிலை எடுத்து	303
198	திங்கள் மேவும்	254	238	நிலையின்மாதிரத்து	232
199	திரித்தவன்	89	239	நீண்டமால்வரை	237
200	திரிபுரம் எரிய	355	240	நீதியாய்	333
201	தீமொய்த்த	149	241	நீர் ஒத்தன	127
202	துண்டப்பிறை	59	242	நீலகண்டனும்	215
203	துவனி வில்லின்	153	243	நீலம் காட்டிய	231

தொடர் எண்.	பாட்டு முதற் குறிப்பு	பாட்டு எண்.	தொடர் எண்.	பாட்டு முதற் குறிப்பு	பாட்டு எண்.
244	நிலம் கொண்ட	159	285	புல்நுனித்தரு	266
245	நிலநிற	82	286	புவனம் எத்தனை	288
246	நீறு அணிந்த	1	287	புள் உயர்த்தவன்	77
247	நீறு பூசியும்	230	288	பூசனைத் தொழில்	157
248	நெடும்பாற் கடல்	131	289	பூணியல் மொய்ம்பினன்	384
249	நெற்றியின்	253	290	பூவிலோன்	301
250	நேமிதான்	368	291	பேயிரும்	323
251	நேமியும்	135	292	பொற்புடை	302
252	நேமியோ	212	293	பொன் சென்று	104
253	பங்கயத்து	323	294	போர் இலான்	42
254	பஞ்சின்மெல்லடியாள்	388	295	மங்கலம் தேவர்	124
255	பஞ்சுஎன	182	296	மங்கை அழலும்	117
256	படைஉறு	108	297	மங்கை பாகனை	262
257	படைக்கல	134	298	மங்கையை	356
258	பண்டு உலகு	362	299	மண் உற	11
259	பதைத்தான்	128	300	மரன் ஏயும்	305
260	பரசுடைக் கடவுள்	252	301	மருக்கொள்	175
261	பரஞ்சுடர்	54	302	மற்று அவன்	21
262	பழிப்பு அறு	109	303	மற்று இனி	78
263	பழிப்பு அறுநிலைமை	386	304	மன்றல்மா	202
264	பற்றுஅவா	256	305	மாகமாநதி	261
265	பாகசாதனனும்	394	306	மாசு அறு	311
266	பாகத்தில் ஒருவன்	310	307	மாமரத்து	162
267	பாசமோ	283	308	மாற்றம் என்	344
268	பாந்தளின்	312	309	மானம் மணி	329
269	பாம்பின்தரு	290	310	மான்மறி	236
270	பாரகம் சுமந்த	189	311	மீட்டும் போர்	332
271	பாழிப்புயம்	20	312	மீளாநிறத்து	46
272	பித்தனுகிய	217	313	முகையின்	116
273	பிழைத்தது	268	314	முக்கணன் ஊர்தி	372
274	புக்கு அவளோடும்	267	315	முக்கணன்எண்கணனும்	180
275	புரங்கள் எய்த	360	316	முக்கணன் படையும்	250
276	புரந்தரன் பகை	229	317	முக்கணன் படையை	114
277	புரந்தரன் முதலிய	347	318	முக்கணன் முதலி	353
278	புரம் எலாம்	369	319	முக்கண் தேவனும்	177
279	புரம் கடந்த	380	320	முக்கண் நோக்கினன்	62
280	புரம் சுடப் பண்டு	163	321	முதலவன் முதலிய	385
281	புரம் சுடு	361	322	முத்தலை எஃகன்	169
282	புரம் பற்றிய	348	323	முத்தலை எஃகினு	83
283	புரம் பிழைப்பு	281	324	முந்தை நாள்	297
284	புலியின் அதள்	40			

தொடர் எண்.	பாட்டு முதற் குறிப்பு	பாட்டு எண்.
325	முப்புரம் எரித்த	382
326	முப்புரம் முருங்க	224
327	முழுமுதல்	73
328	முளரிமேல்	337
329	மூளை அமை	221
330	முறுவல் வாள்	249
331	மூசு அரவு	32
332	மூண்ட செரு	152
333	மூலமும் நடுவும்	280
334	மூவகை	96
335	மூவர் ஆய்	23
336	மூளும் உளது	204
337	மூளும் வெஞ்சினத்து	260
338	மூன்றுகண் அமை	147
339	மூன்றுகண் இலன்	375
340	மேலவன்	52
341	மேலை விரிஞ்சன்	351
342	மேல் உயர்	170
343	மேவ அரும்	3
344	மொழிதரும்	211
345	மோகமாப்படை	233
346	யான் அலால்	352
347	வஞ்சம் கொண்டான்	371
348	வடகுண	120
349	வடதிசை	183
350	வடுக்கண்	350
351	வந்த மாதவ	30
352	வயிர் ஒலி	70
353	வரம் கொடுத்து	248
354	வரம்தருமுதல்மழுவலான்	167
355	வரம்தரு முதல்வன்	136
356	வருநான்முகன்	179
357	வளநகர்	313
358	வளையும் வாள்எயிற்று	276
359	வள்ளல் [illegible]	10
360	வன்னி நாட்டிய	122
361	வாகை வெஞ்சிலை	244
362	வாங்கி வெஞ்சிலை	85
363	வாங்கினன்	107
364	வாசநாள்	164
365	வாசவன் மலரின்	322
366	வாசவன் மாயன்	226
367	வாசவன் வய	72
368	வாரணத்து	255
369	வாரணம்	95
370	வாலால்	101
371	வாலியை	378
372	வானநாட்டு	118
373	வானின் தலை	129
374	வான் அஞ்சுக	357
375	வான் என்பது	246
376	விடம் எழுந்தது	97
377	விடம் துடிக்கின்ற	284
378	விண்ணவர்	58
379	விண்ணோர் அது	130
380	விண் போர்த்தன	155
381	வில் இங்கு	294
382	விள்ளாது	206
383	வீரநாடு	203
384	வெங்கண் நாக	26
385	வெங்கரத்தர்	87
386	வெஞ்சுடர்	7
387	வெயில் இயல்	57
388	வெய்யமாமுனி	257
389	வெருவும் ஆலமும்	258
390	வெள் எருக்கம்	364
391	வெள்ளத்தின்	17
392	வெள்ளியங்கிரியினை	354
393	வெற்றி வேல்	340
394	வேதம்	173
395	வேலைத் தலை	207

திருமகள் அச்சகம்
காரைக்குடி